T. 4277

# அறிவனார்

இயற்றிய

# பஞ்ச மரபு

மூலமும் உரையும்

## இசைத்தமிழ் நூல்

அடிக்குறிப்புகளுடன்

பதிப்பாசிரியர்

**வித்துவான் வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர்**

88 – வேலம்பாளையம், எழுமாத்தூர் (வழி)

ஈரோடு வட்டம்

© சக்தி அறநிலையம் – கோவை

முதல் பதிப்பு : 1973 (1000) முதற்பகுதி மட்டும்.

© இரண்டாம் பதிப்பு : (இரண்டாம் பகுதி சேர்ந்தது)
1975 (1000)

பொள்ளாச்சி :

திரு. நா. மகாலிங்கம் B. SC., M. I. E. அவர்கள்

*வெளிநாடு சென்று வந்தது குறித்து நினைவு வெளியீடு*

சக்தி அறநிலைய வெளியீடு
இசைத் தமிழ் நூல் – க – உ

ஜெமினி அச்சகம்
27, மடத்துத் தெரு
கும்பகோணம் – 612001
தொலை பேசி : 835

விலை ரூ. 120

# அணிந்துரை

ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே
உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலாம் ஆனாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலாம் ஆனாய் நீயே
திருவையாறு அகலாத செம்பொற் சோதீ —அப்பர்

உலகில் இந்திய இசை, தனிப்பெருமையுடன் திகழ்வது என்பர். வட இந்திய இசையை இந்துஸ்தானி சங்கீதம் என்றும், தென்னிந்திய இசையைக் கருநாடகச் சங்கீதம் எனவும் அழைப்பர். தென்னிந்திய இசை பழமையும் பெருமையும் வாய்ந்ததோடு கலப்பில்லாது தகுதியும் உடையதாயிருந்தது. இக்கருநாடக இசைக்குத் தாயாக விளங்கிய இசைக் கலைதான், பழந்தமிழகத்து இசையாகும். சங்கத் தமிழை இயல், இசை, நாடகம் என மூன்று வகையாகக் கூறுவார்கள். ஒரு மொழியை இவ்வாறு பாகுபடுத்திக் கூறுவது வேறெங்குமில்லாத புதுமையாகும். இசைக் கலைஞர்களாகிய பாணர், விறலியர் முதலியோரைத் தமிழ்நாட்டு அரசர்கள் ஆதரித்துப் பாராட்டிப் போற்றியதை இலக்கியங்களில் காணலாம். இசை 'ஏழு' என்று எல்லோரும் கூறுவர். இசைகள் ஏழும் தனித்திருந்தாலும், தொகுதிப் படுத்தித் தொழில் முறையில் கலைஞர்கள் அவைகளைப் பண்ணாக இசைத்து வழங்குகிறார்கள், பண் என்பது இராகமாகும். பண்களுக்குத் தனியான அமைதியும் சிறப்பும் உண்டு.

'பண் களிக்கப் பாடுகின்ற பாட்டில் விளைசுகமே',
'பண்ணுற நின்றனையே பாடியுறல் வேண்டும்'

என்றெல்லாம் வள்ளற்பெருமான் கூறுவன நினைக்கத் தக்கன.

பண்களுக்கான இலக்கணம் கூறி அவைகளின் தோற்றம், வழி வகைகள், பயன் முதலிய செய்திகளை வரையறுத்துக் கூறுவன இசைத்தமிழ் நூல்களாகும். அவற்றுள் ஒன்று, பஞ்சமரபு என்னும் இந்நூலாகும். காலத்தால் பழமையும், செய்திகளால் பெருமையும் நிறைந்த இந்த நூல், இசைக்கலையின் மரபினை இசை மரபு, வாச்சிய மரபு, நிருத்த மரபு அபிநய மரபு, தாள மரபு என்று ஐந்தாகக்கொண்டு பஞ்சமரபு எனக் குறித்ததாகத் தெரிகிறது.

இரண்டாம் பதிப்பாக வெளியிடப்பட்டுள்ள முதற் பகுதியாகிய இந்நூலில் நூற்றுக்கு மேற்பட்ட வெண்பாக்கள் உரையுடன் இடம் பெற்றுள்ளன. கிடைத்தமட்டும் எஞ்சிய வெண்பாக்கள் இரண்டாம் பகுதியாக இந்நூலிற் சேர்த்து வெளியிடப்பட்டுளது. இரண்டாம் பகுதியில் சிற்சில பிற்சேர்க்கைப் பாடல்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

இவ்வரிய நூல் நமக்குக் கிடைத்தது நாம் செய்த பெரும் பேருகும். இந்த நூலின் ஏட்டுச் சுவடியைத் தேடிப் பாதுகாத்துவைத்து, தமிழகத்திற்கு வழங்கிய பெருமை, நண்பர் எழுமாத்தூர் 88–வேலம்பாளையம் உயர்திரு. வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்களுக்கே உரியது. அவர்களே இந்நூலின் பதிப்பாசிரியர். மேலும் அவர்கள், தமிழகத்தின் கலைக் கருவூலங்களான பழைய ஏட்டுச்சுவடிகள் பலவற்றை,

கண்ணுங்கருத்துமாகப் பாதுகாத்து வருவது குறிப்பிடத் தக்க பெருஞ்செயல் ஆகும். இந்நூல், முன்னுரை பாயிரம், அடிக்குறிப்பு பலவற்றோடும் அரும்பதப் பொருள், அகர நிரல் என்ற பகுதிகளுடனும் சிறப்பாகப் பதிப்பிக்கப் பட்டுள்ளது. இவ்வாறு உதவி புரிந்த திரு. கவுண்டர் அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றி உரியதாகும்.

என் நண்பரும், உடன் பயின்றவருமான மஞ்சக்கொல்லை திரு. இராம. திருநாவுக்கரசு பி.ஏ. அவர்களும், இந்நூல் வெளியீட்டுக்காகப் பெரிதும் உழைத்தார்கள். அவர்களுக்கும், ஏடு, காகிதப்பிரதி இவைகளை ஒப்பு நோக்கியதோடு புதிய படி எடுத்து ஆராய்ந்து, அச்சுக்கேற்ற வண்ணம் அழகுறச் செப்பம் செய்த பண்ணாராய்ச்சி வித்தகர், ஏழிசைத் தலைமகன் திருமுறைக் கலாநிதி குடந்தை திரு. ப. சுந்தரேசனார் அவர்களின் முயற்சியே இந்நூலை இவ்வடிவிற்குக் கொண்டு வந்திருக்கிறது. அவர்களுக்கும் என் நன்றி.

பதிப்பாசிரியர் வழியாக இந்நூல் கிடைப்பதற்குத் துணைபுரிந்தவரும், நிழற்படம் எடுத்து உதவி செய்தவருமான என் அருமை நண்பர் ஈரோடு திரு. வி. எம். கைலாச கவுண்டர் அவர்களுக்கும் என் நன்றி உரியதாகும். இவ்வினிய இசை நூலை நல்ல முறையில் அச்சிட்டுத்தந்த குடந்தை, மடத்துத்தெரு, ஜெமினி அச்சகத்தார் பாராட்டுக்கு உரியவராவார். பண்டைய தமிழிசைப் பெருமையினை விளக்கும் இந்நூலை தமிழ் மக்கள் அனைவரும் ஏற்றுப் பயன்பெறுவார்கள் என்று நம்புகிறேன்.

2—10—75. நா. மகாலிங்கம்.

# பஞ்சமரபு – முதற் பகுதி

## உள்ளுரை


| | | | | வெண்பாத் தொகை |
|---|---|---|---|---|
| பாயிரம் | | | ... | 5 |
| 1. பெரும் பிரிவு : இசை மரபு | | | | |
| சிறு பிரிவு : | 1 | யாழ் மரபு (நரம்புக்கருவி) | ... | 17 |
| | 2 | வங்கிய மரபு | ... | 6 |
| | 3 | கண்ட மரபு | ... | 17 |
| | 4 | திருத்த மரபு (நிறத்தமரபு) | ... | 17 |
| | 5 | வகையொழிபு மரபு | ... | 32 |
| | | (இரண்டு வெண்பா முழுதுமில்லை) | | |
| 2. பெரும் பிரிவு : வாச்சிய மரபு (முழவு) | | | | |
| சிறு பிரிவு : | 1 | முழவு மரபு | ... | 6 |
| | 2 | பிண்ட மரபு | ... | 16 |
| | 3 | எழுத்து மரபு | ... | 9 |

# இரண்டாம் பகுதி


| | | | | வெண்பாத் தொகை |
|---|---|---|---|---|
| 3. பெரும் பிரிவு : | | நிருத்த மரபு | | |
| சிறு பிரிவு : | 1 | நிருத்த வகை மரபு | ... | 3 |
| | 2 | தாண்டவ மரபு (தாண்டவத் தாள மரபு) | ... | 19 |
| | 3 | அகமார்க்கப் பொருள் சதி வரலாறு மரபு | | |
| | 4 | அகமார்க்கப் பொருள் தரு வரலாறு மரபு பாடல்கள் 17. வெண்பா | ... | 1 |
| | 5 | கூத்திலக்கண மரபு | ... | 8 |
| 4. பெரும் பிரிவு : | | அவிநய மரபு | | |
| சிறு பிரிவு : | 1 | ஒற்றைக்கை மரபு | ... | 6 |
| | 2 | இரட்டைக்கை மரபு பாடல் – 1. | | |
| | 3 | அங்கக்கிரியை மரபு | | |
| | 4 | காற்றொழில் மரபு | | |
| | 5 | அரங்கவிலக்கண மரபு பாடல்கள் – 15. | | |
| | 6 | பிரம்பிலக்கண மரபு | ... | 8 |
| 5. பெரும் பிரிவு : | | தாள மரபு | | |
| சிறு பிரிவு ; | 1 | தாள மரபு வரலாறு | ... | 24 |
| | 2 | அட்டகண மரபு | ... | 6 |
| | 3 | தாள நூற்பா மரபு | | |
| பிற்சேர்க்கை : | 4 | தாண்டவப் பொதுவியல் ஒழிபு மரபு | ... | 33 |

# முதற் பகுதி – வெண்பா அமைதி முறை

## முதனினைப்புக் குறிப்பு


| பாடல்கள் | பக்க எண்கள் |
|---|---|
| **பாயிரம்** | |
| கார்மேனி | 1 |
| **அவையடக்கம்** | |
| மால்பாடும் | 6 |
| நூலின் | 7 |
| நல்ல நரம்பு | 7 |
| மன்னுபொதி | 8 |
| **இசை மரபு, நரம்புக் கருவி, யாழ்** | |
| பேரியாழ் | 9 |
| ஒன்றுமிருபதும் | 10 |
| சொல்லிய | 11 |
| வன்மைபட | 14 |
| பன்னிய | 15 |
| ஆயஞ்சதுரம் | 16 |
| ஈரேழுக் கோரேழாம் | 17 |
| சாணளவு | 18 |
| எதிராகு | 20 |
| சொல்லியகோல் | 21 |
| தாரத்துட் | 23 |
| சங்கு | 24 |
| குரல் துத்த | 26 |
| குன்றுக் குரற்றுரம் | 28 |
| குரலிளியிற் | 29 |
| தாரத்து உழை | 30 |
| ஏத்துமிடப | 31 |
| பண்ணோர் பதினேழாம் | 37 |

| பாடல்கள் | பக்க எண்கள் |
|---|---|
| ஓங்கியமூங்கில் | 65 |
| உயர்ந்த சம நிலத்தில் | 66 |
| சொல்லுமிதற்களவு | 67 |
| இருவிரல்கணிக்கி | 67 |
| வளைவாய் | 68 |
| சரிகமபதநி | 68 |

## கண்ட மரபு

| | |
|---|---|
| பூதமுதற் | 70 |
| மண்ணுடநீர் | 70 |
| செப்பிய | 71 |
| மெய்வாய்கண் | 71 |
| நல்ல நரம்பிறைச்சி | 72 |
| பசிசோம்பு | 73 |
| ஓங்கும் வெகுளி | 73 |
| ஒப்பாம் பிராணன் | 73 |
| இடைபிங்கலை | 74 |
| பூதங்களைந்தாய் | 75 |
| ஓசையுமீசனும் | 78 |
| துய்யவுடம்பு | 78 |
| ஆதாரம் | 79 |
| ஐவகைப்பூதம் | 79 |
| மகரத்தினொற்றல் | 80 |
| குன்றக் குறிலைந்தும் | 81 |
| மாத்திரைகள் ஒன்பானும் | 82 |

## திருத்த மரபு (நிறத்த மரபு—நிற மரபு)

| | |
|---|---|
| ஆதியுடன் | 86 |
| மூன்று நிறமு | 87 |

| பாடல்கள் | பக்க எண்கள் |
| --- | --- |
| வங்கியமே | 89 |
| பண்பாற் | 90 |
| பாவோடிணைத்த | 91 |
| இடையீடு | 92 |
| ஓரிசை | 94 |
| நெய்தன் முகத்த | 95 |
| ஒருக்கணிசை | 95 |
| மிக்க குடிப்பிறந்தோன் | 96 |
| துய்யமொழி | 96 |
| பெருக்குரல் | 96 |
| சிக்சிலி பூணை | 98 |
| ஓட்டுதலுங் | 98 |
| தூய சுருதியுட | 99 |
| திப்பிலி | 99 |
| நகைபுகை | 100 |


## வகையொழிபு மரபு


| | |
| --- | --- |
| ஆதியயன் | 101 |
| சொல்லிய நற்றேல் | 101 |
| குன்று வெளியே | 104 |
| காலங்களெட்டிற்கும் | 111 |
| காலையிளவுச்சி | 112 |
| பீரமன் | 112 |
| புறநீர்மை | 112 |
| தோடிநட்டராகஞ் | 113 |
| குறண்டி | 113 |
| அந்தாளி | 114 |
| குச்சரி | 115 |
| கவ்வாணம் | 115 |

| பாடல்கள் | பக்க எண்கள் |
| --- | --- |
| வராடி | 116 |
| அனுத்திர பஞ்சமம் | 117 |
| தன்னொளிசேர் | 117 |
| தக்கேசி | 118 |
| அந்தாளி பாடை | 118 |
| சீரார் திருமகளும் | 119 |
| செப்புங் | 120 |
| பாலன் | 120 |
| குன்றுக் குழலன் | 121 |
| சுத்த மறையோர்க்காம் | 121 |
| செப்பிய சிந்து | 122 |
| சான்றோர் | 129 |
| தோன்று | 131 |
| இருதலையாய் | 132 |
| காலை | 133 |
| பத்தியமுஞ் | 134 |
| எடுத்தவரையாலே | 135 |
| பன்னிய பாத்தாளம் | 135 |
| இசையன்றி | 136 |
| தோன்றிய | 136 |


## வாச்சிய மரபு (முழவு மரபு)


| | |
| --- | --- |
| ஓதியகீத | 137 |
| மன்னியசீர் | 144 |
| தண்ணுமை | 145 |
| நான்முகனர் | 149 |
| முதலுமிடையுங் | 150 |
| மூன்றுமுதற் கடவுள் | 151 |

| பாடல்கள் | பக்க எண்கள் |
|---|---|
| **பிண்ட மரபு** | |
| கருங்காலி | 153 |
| ஏன்ற | 154 |
| கையிற் பெருவிரலால் | 155 |
| மத்தியங்குட்ட | 155 |
| அன்னம்படகத்தளவு | 155 |
| நல்லகரடிகைக்கு | 156 |
| பிண்டின் பருமை | 156 |
| பிண்டியளவு | 156 |
| வளையின் பருமை | 157 |
| நாற்ப தறுபத்தெட் | 157 |
| வன்றேல் | 158 |
| நீளமுகஞ் சுற்று | 158 |
| முகமிரண்டு | 159 |
| கார்மேதி | 159 |
| கொன்றை | 160 |
| கன்னி யிளம்பசுவின் | 160 |
| **எழுத்து மரபு** | |
| திருநெடுமாலே | 161 |
| முந்திப்பரதன் | 161 |
| அகரமுதல் | 161 |
| குற்றெழுத்தும் | 162 |
| ஆய்ந்த வழகம் | 162 |
| நாலஞ்சேழ் | 163 |
| தத்தித்தோ | 166 |
| ஒத்துக் கவுத்துவமே | 169 |
| வைத்த மலேப்பு | 170 |

இரண்டாம் பகுதிப் பாடல்களின் முதனினைப்பு அதன் முகவுரைக்கு முன் குறிக்கப்பெற்றுள்ளன.



# பஞ்சமரபு

ஏடு தேடிக் காத்துப் படியெடுத்தும் பரிசோதித்தும்
உதவிய பெருந்தகையாளர்

**வித்துவான் திரு. வே. ரா. தெய்வசிகாமணிக்கவுண்டர்**
(இந்நூல் பதிப்பாசிரியர்)

நிழற்படம் உதவியவர் :
திரு. **V. M.** கயிலாசக்கவுண்டர்
ஈரோடு.

எழுமாத்தூர் வேலம்பாளையம், வித்துவான்

# வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர்

## அவர்கள் தாமாகவும், பிரதிகொடுத்துப் பிறர் மூலமாகவும் பதிப்பித்து வெளிவந்த தமிழ் நூல்கள்

1. சிவகிரி வேலாயுதசுவாமி இரட்டைமணிமாலை
2. சிவகிரிச் சண்முகமாலை
3. கண்ணப்பரம்மானை
4. எழுமாத்தூர்ச் சத்திநாதர் சிவக்கொழுந்துமாலை
5. சர்வலோக நாயகி ஒருபா ஒருபஃது
6. கனககிரி வெண்பா
7. திருப்பாண்டிக் கொடுமுடித்தலபுராணம் உரைநடை
8. நட்டாற்றீசுவரன் கோயில் தலபுராணச் சுருக்கம்
9. வடிவுள்ள நாயகி பஞ்சரத்நம்
10. ஈரோடு தொண்டீசுரர் ஐமணிமாலை
11. வாரணியம்மன் வருகைப்பதிகம்
12. மாணிக்கவாசகர் நிலைமண்டிலவாசிரியப்பா (குறிப்புரையுடன்)
13. கோனேரியப்ப முதலியார் (வரலாறு, பாடல்கள்)
14. ஈரோடை ஐயனரப்பன் பள்ளு நாடகம்
15. திங்களூர் நொண்டி (காலச்சக்கரம்)
16. சித்திரமடல்
17. கொன்றை வேந்தன் வெண்பா
18. சென்னிமலைப் பிள்ளைத்தமிழ் பத்து (குறிப்புரையுடன்)
19. சிவன்மலைப் பிள்ளைத் தமிழ் பத்து ,,
20. திருச்செங்கோட்டுப் பிள்ளைத் தமிழ் ,,
21. தாயுமானவர் மடல் குறிப்புரை முதலியவற்றுடன் (உரைவளம்) தருமபுரவாதீனம்

22. அறச்சலூர் நாகமலையாண்டவர் குமார பஞ்சகம்
23. பரத சங்கிரகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
24. தேவிமான்மியம் விரிவுரையுடன் (ஞானசம்பந்தம்) தருமபுர ஆதீனம்
25. திருக்குறள் காளிங்கருரை பரிதியுரை தருமபுர ஆதீனம்
26. திருமுருகாற்றுப்படை கவிப்பெருமாளுரை, பரிதி உரை (திருமுருகாற்றுப்படை உரைக்கொத்து)
27. தேவிமான்மிய மூலம் குறிப்புரையுடன்
28. சிவஞானபோதத் திருவிருத்தம் பழைய உரையுடனும் முன்னுரையுடனும் கூடியது (செந்தமிழ்ச்செல்வி) சைவசித்தாந்தக் கழகம், சென்னை
29. கம்பராமாயண ஏட்டுச் சுவடிகள் 5. அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆராய்ச்சிப்பதிப்புக்காக
30. மேழி விளக்கம்
31. புலவராற்றுப்படை
32. பஞ்சமரபு முதற்பகுதி
33. முனிமொழி முப்பது
34. திருத்தணிகை வெண்பாவுரை
35. கபிலமலைக்கோவை
36. மல்லைக் கோவை யுரை
37. கருணையந்தாதி குறிப்புரை
38. திருவேரகம், திருச்செங்கோடு என்னும் ஆராய்ச்சிக் கட்டுரை.
39. கடவுள் வாழ்த்து அறுமுறை வாழ்த்து என்னும் ஆராய்ச்சிக் கட்டுரை
40. சென்னிமலைப் புராணம் உரையுடன்
41. கொங்குமண்டல சதகம் குறிப்புரையுடன்
42. கொங்குநாட்டு வரலாறு (சுருக்கம்)
43. கொங்குப் புலவர் பட்டையம்
44. பஞ்சமரபு இரண்டாம் பகுதி

# முன்னுரை

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

பண்ணேர் மொழியா ளையோர்பங் குடையாய்
படுகாட் டகத்தென் றுமோர்பற் றொழியாய்
தண்ணா ரகிலும் நற்சா மரையும்
அலைத்தெற் றுசிற்றா றதன்கீழ்க் கரைமேல்
மண்ணார் முழவுங் குழலு மியம்ப
மடவார் நடமா டும்மணி யரங்கில்
விண்ணார் மதிதோய் வெஞ்சமாக் கூடல்
விகிர்தா வடியே னையும்வேண் டுதியே.

### தமிழ்

தமிழ் மொழி மிகவும் தொன்மையான மொழி. அது முதல்,இடை,கடை என்னும் முச்சங்கங்களிலும் வளர்க்கப் பெற்ற மொழி. சங்கம் வைத்துத் தமிழ் வளர்ச்சி செய்தவர்கள் பாண்டிய மன்னர்கள் ஆவார்கள்.

### பாண்டியர்களும், சங்கமும்

முதற்சங்கம், காய்சின வழுதியால், கடல்கோட்பட்ட தென்மதுரையிலும், இடைச்சங்கம், வெண்டேர்ச் செழியனால், கடல் கோட்பட்ட கபாடபுரத்திலும், கடைச் சங்கம், முடத்திருமாறனால், கூடலென்னும் தற்பொழுதுள்ள மதுரையிலும் ஏற்படுத்தப் பெற்றன,

## முத்தமிழ் நூல்கள்

அவற்றில் இயல், இசை, நாடகமென்னும் முத்தமிழும் வளர்க்கப்பெற்றன. முத்தமிழுக்கும் இலக்கிய இலக்கண நூல்கள் பல இருந்தன. அவற்றுட் பெரும்பாலன, கடல்கோள் முதலியவற்ருல் அழிந்து பட்டன. அழியாது எஞ்சிய நூல்கள் சிலவே. இடைச்சங்க நூல்களில் தொல்காப்பியமும் கடைச்சங்க நூல்களில் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் பதினெண் கீழ்க் கணக்கும் நமக்குக் கிடைத்துள்ளன.

சங்ககால இலக்கண நூல்களாக பழைய உரையாசிரியர்கள் காட்டிய மேற்கோள்களினுலும் அவர்கள் எழுதியுள்ள குறிப்புகளினுலும் அறியப்படும் நூல்கள் சிலவாம். அவை, அகத்தியம், தொல்காப்பியம், மாபுராணம், பூதபுராணம், பனம்பாரம், அவிநயம், பன்னிருபடலம், காக்கைபாடினியம், சிறுகாக்கைபாடினியம், சங்கயாப்பு, நற்றத்தம், பல்காயம், மயேச்சுரம், வாய்ப்பியம், அணியியல், இசைநுணுக்கம், பஞ்சபாரதீயம், பரதம், முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம், பெருங்கலம், நூல், இந்திரகாளியம், பஞ்சமரபு, பரதசேனபதீயம், மதிவாணர் நாடகத்தமிழ்நூல், கூத்தநூல் என்பனவும் பிறவுமாம்.

மேற்குறித்த சங்கால இசை நாடகவிலக்கணங்கூறும் நூல்களுள் ஒன்று பஞ்சமரபு என்னும் இந்நூலாகும். இந்நூலையும், நூலாசிரியரையும் நமக்கு அறிமுகம் செய்து வைத்தவர் அடியார்க்கு நல்லார் என்னும் அருந்தமிழ்ப் புலவராவார்.

அடியார்க்கு நல்லார், தாம் எழுதிய சிலப்பதிகார உரைப்பாயிரத்தில் முத்தமிழ்க் காப்பியமாகிய, சிலப் பதிகாரத்திற்குத் தாம் உரையெழுதுவதற்கு உதவியாகக் கிடைத்த இசை நாடக இலக்கண நூல்களைக் கூறுமிடத்து, "சாரகுமரனென அப்பெயர் பெற்ற குமரன் இசை அறிதற்குச் செய்த இசை நுணுக்கமும், பாரசவ முனிவரில் யாமளேந்திரர் செய்த இந்திர காளியமும், அறிவனார் செய்த பஞ்சமரபும், ஆதிவாயிலார் செய்த பரதசேனாபதீயமும். கடைச்சங்கமிரீஇய பாண்டியருள் கவியரங்கேறிய பாண்டியன் மதிவாணனார் செய்த, முதல் நூல்களிலுள்ள வசைக்கூத்திற்கு மறுதலை ஆகிய புகழ்க்கூத்தியன்ற மதிவாணனார் நாடகத் தமிழ் நூலுமென, இவ்வைந்தும் இந்நாடகக் காப்பியக் கருத்தறிந்த நூல்களன்றேனும் ஒரு புடையொப்புமை கொண்டு முடித்தலைக் கருதிற்று இவ்வுரையென்க." எனக் கூறியுள்ளார்.

அவ்வடியார்க்கு நல்லாரே சிலப்பதிகாரம் கடலாடு காதையுரையில், இந்நூலின் (பஞ்சமரபு) வகையொழிபு மரபு கூறும் பகுதியிலுள்ள, "செப்பரிய சிந்து (செப்பிய சிந்து)" என்னும் வெண்பாவை எடுத்துக்காட்டி, என்றார் பஞ்சமரபுடைய அறிவனார் என்னும் ஆசிரியரென்க, எனக் கூறினர்.

## பஞ்சமரபாசிரியர்

இனி இப்பஞ்சமரபு எனும் நூலிலிருந்தே ஆசிரியர் பற்றியும், பஞ்சமரபு பற்றியும் கூறியுள்ளவற்றை ஆராய்வோம்.

இந்நூலின் பாயிரம் ஐந்தாவது வெண்பாவில் வரும் "சேறையறிவனார், செய்தமைத்த ஐந்து தொகை" என்பதும் அதனுரையில், இந்நூல் யாராற்செய்யப் பட்டதோவெனின், ஐந்தியலுமுணர்ந்த அறிவனாராற் செய்யப்பட்டது என்பதும் பஞ்சமரபு ஆசிரியரைக் குறிக்கின்றன.

சேறையறிவனார் என்பதனால், இந்நூலாசிரியராகிய அறிவனார், சேறை என்னும் ஊரினர் எனத் தெரிகின்றது. சேறையென்பது பாண்டிநாட்டுச் சேற்றூர் என்பதன் மரூஉ மொழியாம். சேற்றூர் என்பது சேறை. அன்றியும் சோழ நாட்டிலும் சேறை என்ற ஊர் இக்காலத்துமுளது. அவ்வூர் திருச்சேறை என வழங்கி வருகிறது. இவ்வூர்களில் ஆசிரியர் எந்நாட்டினைச் சேர்ந்த எவ்வூரினர் என்பது ஆராய்தற்குரியது.

ஆசிரியர் அறிவனார், நூலின் முதற் காப்பு வெண்பாவில் "கார்மேனிச் செங்கட் கடவுளை" எனத் தொடங்கித் திருமாலுக்கு வணக்கமும், நூலில் நிருத்த மரபு கூறும் முதற்காப்புச் செய்யுளில், "நிருத்த முதலேழினையும் நேர்தமிழாற் கூறக் கருத்துடைய ஐங்கரனே காப்பு" என மூத்த பிள்ளையார்க்கு வணக்கமுங் கூறுகின்றார். "கார்மேனிக் கண்ணனை முன் வைத்துக் காப்புரைக்க" (வகையொழிபு மரபு) என்பது இசைநூல் மரபாதலின் இசையிலக்கணங்கூறு முகத்துத் திருமாலுக்குக் காப்புக் கூறினார். விநாயகன் பதம் தொடங்கி நாட்டியம் இயற்றுதல் மரபாகலின் நிருத்த மரபில் மூத்த பிள்ளையாருக்குக் காப்புக் கூறினார் என எண்ணுதல் வேண்டும்.

## நூலாசிரியர் காலம்

இந்நூலாசிரியர் (அறிவனர்) பனுவற்றொகை, ஐந்தொகை என இரு நூல்கள் செய்தனரெனவும் அவற்றின் சாரமாக இந்நூல் செய்தனரெனவும் தெரிகின்றது.

இந்நூல் யாழ்மரபின் முதல் வெண்பாவில், மன்ன திருமாற, என்று திருமாறனை விளித்ததால், ஆசிரியர், திருமாறன் என்னும் பாண்டியன் காலத்தவராவர் என்பது விளங்கும். திருமாறன், முடத்திருமாறன் என்னும் பாண்டியன் ஆவான். இவன் இடைச்சங்கத்து இறுதிக்காலத்தில் நிகழ்ந்த இரண்டாம் கடல்கோளால் கபாடபுரத்தைவிட்டு இப்பொழுதுள்ள கூடலென்னும் மதுரைக்கு வந்து கடைச்சங்கம் நிறுவித் தமிழ் வளர்த்த பாண்டியன் ஆவான் என்பதில் ஐயமில்லை.

கடல்கோளின்பொழுது இவன் கால்முடமுற்றமையால் முடம் என்னும் அடைமொழி சேர்த்து முடத்திருமாறன் என வழங்கப் பெற்றனனென்பர்.

'வண்கூடற் கோமானே, என்பதால் இவன் கூடலாகிய மதுரையில் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பொழுது ஆசிரியர் அறிவனர் பஞ்சமரபு எனும் இந்நூல் செய்தாரெனத் தெரிகிறது. ஆதலின் இந்நூல் கடைச்சங்க காலத்து நூலாம் என்பதில் ஐயமில்லை. திருமாறன், இடைச்சங்கத்து இறுதிக்காலத்தில் கபாட புரத்தில் வாழ்ந்தமை நோக்கி அவன் காலத்திற் செய்த இந்நூலை இடைச்சங்க காலத்து நூலாகக் கருதினோரும் உளர். முச்சங்க வரலாறு கூறும் பழமையாகிய ஆசிரியப்பாவில் வரும் கடைச்சங்க வரலாறு பகரும் பகுதியில் கூறப்படுகின்ற "அறிவுடையரனர்" என்பவர் பஞ்சமரபு நூலாசிரியராகிய அறிவனராகலாம் எனக் கருதப்படுகின்றது.

## பஞ்சமரபு

"அருங்கடைச் சங்கமிருந்தோர் யாரெனில், சிறு மேதாவியர் சேந்தம் பூதனுர், அறிவுடையரனுர் பெருங் குன்றூர்க்கிழார், பாடல் சான்ற இளந்திருமாறன்" என்பர்.

பஞ்சமரபு என்னும் பெயர்க்காரணம்; இந்நூலின் பாயிரம் மூன்ரும் வெண்பாவுரையில் இஞ்சி சூழ் மதுரைக் கோன் முன் அஞ்சுறுப்பாகச் சொல்லப்பட்டமையால் பஞ்சமரபு எனும் பெயர்த்து எனவும், அஞ்சுறுப்பாவன.

"இசையு முழவுந் தாளமுங் கூத்து
மசைவி லவிநய மஞ்சுறுப் பாகும்"

எனவும் கூறுதலின், மேற்குறித்த இசை முதலிய ஐந்தினையும் கூறுவது பஞ்சமரபு எனத் தெரிகிறது.

மேலும் இந்நூலில், வகையொழிபு மரபுகூறும் முதலிரண்டு வெண்பாக்களிலும் தோல், துளை, நரம்பு, கஞ்சம், மிடறு என்னும் ஐந்திடங்களிற்ரேன்றுமிசை பஞ்சமாசத்தம் எனப் பெறுமெனக் கூறுதலின் அவற்றைப்பற்றிக் கூறுவது பஞ்சமரபு என்றும் பெயர் பெறும் எனத் தெரிகிறது.

குழலும் தோலும் நரம்பும் கண்டமும் என்பதனேடு ஆடலும் எனச் சேர்த்தறியும் இடத்தும் பஞ்சமரபு என்ற பெயர் இந்நூலுக்கு உண்டாயிற்று எனவும் தெரிய வருகிறது.

## நூலினமைப்பு

இந்நூலில் இசைமரபு, வாச்சியமரபு, நிருத்தமரபு, அபிநயமரபு, தாளமரபு என மரபுமுறை கூறப்பெறுவதால் பஞ்சமரபு என்னும் பெயர் முறை தெரிகிறது. இசைமரபில் யாழ்மரபு வங்கியமரபு கண்டமரபு பற்றி நன்கு கூறப்பெறுகிறது.

> " ஆதி யயன்படைத்த வாழி யுலகத்து
> ளோதிய கீதவழி யெல்லாம் — நீதியினு
> லேந்து திறனும் விரவி வருதலாற்
> பஞ்சமரபென்று பார். (வகையொழிமரபு-க)

நூல், மரபு எனும் பெரும் பிரிவாலும், சிறு பிரிவாலும், இயன்றது. இந்நூல் எவ்வளவைத்தோவெனின்? இருநூற்று நாற்பது வெண்பாவாலே முற்றுப்பெற்றது எனப் பாயிரவுரை கூறுகின்றது. நூல் ஆடூஉ முன்னிலை யாகவும் மகடூஉ முன்னிலையாகவும் பாடப்பெற்றுளது. ஆடூஉ முன்னிலைப் பாடல்களில் எல்லாம் பாண்டிய மன்னனையே முன்னிலைப்படுத்திக் கூறுகின்றார் ஆசிரியர். அவை

'மன்ன திருமாற! வண்கூடற்கோமானே!
(யாழ்மரபு-க)

'மணிமாட மோங்கும் மதுரையார் கோவே!'
(வகையொழிப்பு மரபு-ச)

'பொதியமலைத் தென்னன் புயல் தணித்த தீரா!'

'திருமடந்தை மன்ன!' (தாளமரபு-உக)

'இந்து வழிவந்த மாற! வழுதியார் கோவே!'
(வகையொழிபு மரபு-யஎ)

நண்ணிய மன்னர்க்கு மண் கொடுத்து மாற்றார்க்கு
விண் கொடுத்த தென்னர் கோமானே!
(கண்டமரபு-க.)

என்பனவாம்.

## இந்நூலின், பெரும்பிரிவும் சிறுபிரிவும்

நூலுட் பெரும்பிரிவுகள், பாயிரம், இசைமரபு, வாச்சிய மரபு, நிருத்தமரபு (கூத்து) அபிநயமரபு, தாளமரபு என்பனவாம்.

பாயிரமும், பெரும்பிரிவான இசைமரபின் சிறு பிரிவுகளாகிய யாழ்மரபு, வங்கியமரபு, கண்டமரபு, திருத்தமரபு அதாவது நிறத்தமரபு, வகையொழிபு மரபு என்பனவும், பெரும்பிரிவான வாச்சிய மரபில் (முழவு) முழவு மரபு, பிண்ட மரபு, எழுத்து மரபு என்ற சிறு பிரிவுகளும் கூறப்பட்டுள்ளன. இம் முதற்பகுதியில் எழுத்துமரபு வரையிலும் முதற் பதிப்பில் அச்சிற் பதிப்பிக்கப் பெற்று அடுத்த நிருத்தமரபு, அபிநயமரபு, தாளமரபு என்ற மரபுகள் இரண்டாம் பகுதியாக இந் நூலில் சேர்க்கப் பெற்றுள்ளது.

பாயிரப் பகுதியில் காப்புச் செய்யுள், அவையடக்கம், நூற்பெயர்க்காரணம், நூலாசிரியர், நூலினளவு பயன் ஆகிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.

இசை மரபில், நரம்புக்கருவிகளாகிய யாழ் மரபும் அவற்றின் பெயரும், அவற்றிற்கு வேண்டிய மரங்களும் உறுப்புக்களும், நரம்புகளின் எண்ணிக்கைகளும், இயக்குகின்ற தொழில் முறைமைகளும், பாலைகளும்கூறப் பட்டுள்ளன. இப்பகுதியில் பண்கள் பற்றிய செய்திகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

நூற்றுமூன்று பண்களைப் பற்றிய விவரங்களான பண் பண்ணியற்றிறம் திறம் திறத்திறம் என்னுமிவற்றோடு அகநிலை புறநிலை அருகியல் பெருகியல் ஆகியவைபற்றி நன்கு கூறப்பட்டுள்ளன. அவையாவும் பலவாறாகக் கொண்டு உணரக் கிடக்கின்றன. அவற்றை ஆங்காங்கு யான் காட்டும் அடிக்குறிப்பினாலும் நன்கு அறிந்து கொள்ளலாம்.

வங்கிய மரபில், வங்கியத் (குழற்கருவிகள்) திற்கு வேண்டிய மரங்கள், வங்கியத்தினளவு எழும் இசைகள் தன்மை முதலியவைகள் கூறப்படுகின்றன.

கண்ட மரபில் புற்கலமாய உடம்பு பற்றியும் கண்டத்தின் வழியெழுகின்ற நாதமுறைபற்றியும் நன்கு தெளிவுறக் கூறப்பட்டுள்ளன. திருத்த மரபென்னும் நிறத்தமரபில், பாடற் பகுதிக்குரிய பலநிறங்களும், பாடப்பெருதார்களும், பெறுபவர்களும், பாடற்குற்றங்களும் தொழிற்கிரியைகளும் பாடுவார்க்கு வேண்டுவனவும் கூடாதனவும் கூறப்பட்டுள்ளன.

வகையொழிபு மரபில், தோல், துளை, நரம்பு, கஞ்சம், மிடறு இவற்றில் வெளிப்படும் பண்களின் வகையும் காலங்களும், காலத்ததிதெய்வங்களும், ஓசைகளும் இசைக்குரிய தமிழ்ப்பாவினங்களும் வண்ணங்கள்பற்றிய குறிப்புக்களும் கூறப்பட்டுள்ளன.

வாச்சிய மரபின், உட்பிரிவான முழவு மரபில் தோற் கருவிகளின் இலக்கணம் பலவும் பெயர்களும் அமைதிகளும் அவற்றிற்குரிய கடவுளர் பெயர்களும் கூறப்பட்டுள்ளன.

எழுத்து மரபில் தோற் கருவிகளில் வாசிக்கப்பெறும் சொற்கட்டுகளின் முறையும், எழுத்துக்களும், அவ்வவற்றின் பெயர்களும் தெளிவுறக் கூறப் பெற்றுள்ளன.

நிருத்தமரபு, அபிநயமரபு, தாளமரபு பற்றிய குறிப்புக்களை இரண்டாம் பகுதியில் குறித்திருக்கிறேன்.

## இந் நூலுரையாசிரியர்

நூலில் வகையொழிபு மரபு கூறும் பாடலுரையில் பாணர் புணர்த்த வண்ணத்திற்கு, இராசராசன் பெயர் அமைந்த பாடலொன்றினை, மேற்கோள் காட்டுவதால் இந்நூல் உரையாசிரியர் இராசராசசோழன் காலத்திற்கு பிற்பட்டவர் எனத் தெரிகிறது. "செப்பிய சிந்து" என்னுந் தலைப்புப் பாடலுரையில், பெருவண்ணத்திற்குச் செய்யுள் வருமாறு,

"எஃமே லிலங்கு கொய்சுவற் புரவி"
... ... ... னின் குடனுற்றே

எனப் பதிற்றுப்பத்தினுள் பத்துச் சொற்களைச் சான்றோர் பாடின வண்ணங்கள் நூறுங்கண்டு கொள்க, எனக் கூறுதலால், இவ்வுரையாசிரியர் காலத்தில், கொய்சுவற் புரவி எனுந் தலைப்புடைய பதிற்றுப்பத்துச் செய்யுளும் அழிந்துபடாமல் விளங்கியதாகத் தெரிகிறது. இந்த உரையாசிரியரைப் பற்றிய அவரது பெயர் முதலிய செய்திகளில் வேறு யாதொன்றும் இந்நூலால் இப்பொழுது தெரிந்து கோடற்கியலவில்லை.

ஆயினும் பஞ்சமரபின் இவரது உரைப்போக்கால், இவர் இயலிசை நாடக, இலக்கண நூல்களை நன்கு பயின்று தேர்ச்சிபெற்ற வல்லுநர் என்பது தெள்ளிதின் புலனுகின்றது. நல்ல பழைய உரை என்பதும் விளங்குகிறது.

பஞ்சமரபு வெண்பாக்களிற் பல, அடியார்க்கு நல்லாரால் சிலப்பதிகார உரையில் ஆசிரியர் அறிவனார் பெயர் குறித்தும், குறியாமலும் பல இடங்களில் மேற் கோள் காட்டப்பெற்றுள்ளன.

கி. பி. பதினேழாம் நூற்றாண்டில் கொங்கு நாட்டில் வாழ்ந்த அறம் வளர்த்தான் என்னும் நாட்டியப் புலவர் தம் காலத்தில் கிடைத்த பழமையும் புதுமையுமான பல

இசை, நாடக நூல்களிலிளிருந்து பல பாடல்களைத் தொகுத்துப் பரத சங்கிரகம் என்னும் நூலை இயற்றி உள்ளார். அவர் அந்நூலில் பஞ்சமரபு கூறும் சில வெண்பாக்களையும் மரபுகளையும் தொகுத்துப் பாவ, ராக தாளங்களைப் பற்றிய பல செய்திகளைப் புலப் படுத்துகின்றார்.

என்னிடமிருந்த அந்நூலின் ஏட்டுச்சுவடி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாரால் நன்கு பரிசோதித்து கி. பி. 1954 ஆம் ஆண்டில் அச்சுவாகனம் ஏற்றி வெளியிடப் பெற்றுள்ளது.

சுமார் முப்பது ஆண்டுகளின் முன்பு பஞ்சமரபு என்னும் ஏட்டுச்சுவடியின் பிரதியொன்று கிடைக்கப் பெற்றேன். அதனிறுதியில், "மடவளாகம் வெள்ளச்சி மகன், தம்பான் புலவன் பிலவங்க வருஷம் ஐப்பசி—மீ ஏழாங்தேதி எழுதி முடிந்தது சிவாசலபதி சகாயம்" என்று எழுதப்பட்டிருந்தது. அதனையே உளத்திற்கொண்டு எம் கோவை மாவட்டம் காங்கேயத்திற்கடுத்துள்ள மட வளாகத்திற்குச் சென்று பஞ்சமரபுபற்றி விசாரித்தேன். அப்பொழுது ஆங்குள்ள பச்சோடநாதர் கோவில் அருச்சகர்களில் ஒருவர் என்னை அக்கோவிலுக்கு அழைத்துச்சென்று, அக்கோயிலில் சில ஆண்டுகளின் முன்பு நிலவறையிலிருந்து வெளியே எடுத்துவைக்கப் பெற்ற ஒரு நடராசர் சிலையைக்காட்டி, இந்நடராசர் சிலையின் திருமுன்பு பஞ்சமரபு என்னும் ஏட்டுச்சுவடி ஒன்று இருந்தது. அதனை அண்மையிலுள்ள ஒருவர் வாங்கிச் சென்றார் என்று கூறினார்.

அது இப்போது பலருடைய கைகளுக்கு மாறி கிடைப்பதற்கு இயலாத நிலையில் உள்ளதென்றும் கூறினார். அதனைக் கேட்டறிந்த யான் அப்பிரதியும் கிடைத்தால் நம்மிடத்திலுள்ள பிரதியோடு ஒப்பு நோக்கலாம் என எண்ணினேன்.

இந்நாள் வரை பலவிடங்களில் தேடியும் அப்பிரதி கிடைக்கவில்லை. எனக்கு கிடைத்த ஒரு பிரதியையேனும் பரிசோதித்து வெளியிடலாம் என்றெண்ணி ஏட்டுச் சுவடியைக் காகிதப் பிரதி செய்தேன். காகிதப்பிரதி செய்ய உதவியாயிருந்த நண்பர்கள் திருச்செங்கோடு சிவஸ்ரீ கணபதி குருக்கள் அவர்களும், ஸ்ரீ வில்லிப்புத்தூர் வித்துவான் கோவிந்த மூப்பனார் அவர்களும் ஆவார்கள்.

அக்காகிதப் பிரதிகளை நன்கு படித்துப் படித்து ஏட்டுப்பிரதியுடன் வைத்து ஒப்புநோக்கிப் பரிசோதனை செய்து பற்பல அடிக்குறிப்புகளும் அவ்வப்போது தெரிந்தவரை குறித்து வைத்தேன். அவற்றை இறையருளால் வெளியிடுங்காலம் வந்தது குறித்து மிகவும் மகிழ்கின்றேன்.

பண்டைய இசை நூலான பஞ்சமரபு என்ற இப்பழைய இசை நூற்பிரதி என்னிடம் இருப்பதை அறிந்து அதனை நன் முறையில் வெளியிடுவதற்குப் பெரிதும் முயன்றவர் எம்மதிப்பிற்குரிய உழுவலன்பரான பொள்ளாச்சி, பெருங்கொடை வள்ளல் திருவாளர் நா. மகாலிங்கம் B Sc., M. I. E. அவர்கள் ஆவார்கள். இந்நூலினை அச்சேற்றத்தக்க முறையில் எல்லாம் ஒப்புநோக்கி எழுதவேண்டி, திரு. நா. மகாலிங்கம் அவர்களே, தஞ்சைமாவட்டம் மஞ்சக்கொல்லை இராமசாமி முதலியார் குமாரருள் ஒருவராகிய குடந்தைவாழ் திரு. இராம. திருநாவுக்கரசு முதலியார், B. A., அவர்கள் மூலம் குடந்தை பண்ணாராய்ச்சி வித்தகர் ஏழிசைத் தலைமகன் திரு. ப. சுந்தரேசனார் அவர்களைத் தேர்ந்து அனுப்பி வைத்தார்கள். அவரும் எனது இல்லம் வந்து தங்கி யாவும் என்னிடம் நன்கு கேட்டறிந்து பிரதி முழுதும் எழுதி உதவினார்கள். பண்ணாராய்ச்சி வித்தகரிடம் பல பொறுப்புக்களை ஒப்படைத்தேன்.

மிகவும் பழமையாகிய இசைத்தமிழ் நூலாம் இந்நூலினைச் சிறந்த முறையில் அச்சிட்டு வெளிக்கொணர்ந்த திருவாளர் நா. மகாலிங்கம் B. Sc., M. I. E. அவர்களுக்கும், அவர்கள் குடும்பத்தார்களுக்கும் நீண்ட வாழ்நாளும் நிறைவுறு செல்வமும் மற்றும் இம்மை மறுமைக்குரிய எல்லா வகையான வலிமையும் அருளும்படி எல்லாம் நிறைந்தவளும் கருணை உருவினளுமான அன்னை துர்க்காம்பிகையின் திருவடித் தாமரை மலர்களைச் சிந்தித்து வந்திக்கின்றேன்.

குடந்தை இராம. திருநாவுக்கரசு முதலியார் B. A., அவர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றி. குடந்தை பண்ணுராய்ச்சி வித்தகர் இந்நூல் வெளியீட்டிற்குச் செய்த பேருதவி இசைத் தமிழன்னையின் பண்டைய நல்லூழே என்பதை எனதுளமார உணர்கின்றேன்.

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு"

என்பது குறள்.

இந்நூலினைச் செப்பமுற அச்சிட்ட குடந்தை ஜெமினி அச்சகத்தாருக்கும் எனது நன்றி.

வேலம்பாளையம்,
எழுமாத்தூர்—வழி
ஈரோடு வட்டம்.
2—10—1975

இங்ஙனம்,

வித்துவான் **வே. ரா. தெய்வசிகாமணி.**

“ மன்னுபொதி யத்திருந்த மாதவத்தோன் றாள்வாழ்த்திப்
பன்னு பனுவற் றொகையினுடன் — றுன்னருஞ்சீர்ச்
சேறை யறிவனூர் செய்தமைத்த வைந்துதொகை
கூறுத லிந்நூற் குணம் ”

" நல்ல நரம்பு குழல் கண்டம் தோல் கூத்து "



தோலும்



குழலும்



நரம்பும்



கண்டமும்



ஆடலும்

எனச் சேர்த்தறியுமிடத்தும் **பஞ்சமரபு** என்ற பெயர் தெரிகிறது.

பதிப்பாசிரியர்

குழல், யாழ், முழவு, கண்டம், ஆடல் ஓவியம் வரைந்து உதவியவர், பந்தணைநல்லூர் அரசு உயர்நிலைப்பள்ளி ஓவிய ஆசிரியன் **திரு. மு. சந்திரசேகரன்**, ஆடுதுறை.

# பஞ்சமரபு

## பாயிரம்

### காப்பு

1. " கார்மேனிச் செங்கட் கடவுளை யான்பணிந்து
பார்மேல் மிகவிளங்கப் பல்விதத்தால் — சீர்மேவு
மூவிசையுந் தோலு முயர்கூத்துந் தாளமும்
பாவிசைய வோதுவனிப் பண்பு."

என்பது சூத்திரம், இச்சூத்திரம் என்னுதலிற்றோ எனின்? கீத வாச்சிய நிருத்த தாளங்களை உணர்த்துதல் நுதலிற்று.

கார்போன்ற மேனியையும் செந்தாமரை மலர் போன்ற கண்ணினையுமுடைய திருமால் சேவடியை வணங்கிப் பாரிடத்துமிகவும் விளங்கப் பலவிதங்களாலும் கீத வாச்சிய நிருத்ததாளங்களை இயற்பாக்களாலே விளங்கச் செய்திவற்றின் பண்புகளை அறிவிப்பது என்றவாறு.

---

குறிப்புரை :—பாயிரமென்பது முகவுரை.

1. "நேய முடனே நிருமிக்கும் பொரு
ளாய வனைத்து மடக்கிக் காட்டுதல்
பாயிர மெனவே பகரப் பெறுமே"

என்றுராகலின், நூலிற் செய்யவல்ல பொருளுமடக்கிக் காட்டினர்.

(குவலயானந்த மேற்கோள் அகத்தியச் சூத்திரம்)

"ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனே டாயெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே"

சீர்மேவு மூவிசையு மென்பது, எழுத்து முதற் சீர்களாற் சேர்க்கப்பட்ட மூவிசையுமென்றவாறு.

அவையாவன :—

''நரம்பொடு குழலே மிடற்றின திசையே
இரங்கிய மூவிசை யாகு மென்ப''

தோலுமென்றவதனுல் தோலாற் செய்யப்பட்ட முழவுகளையும் சொல்லுது மென்றவாறு. அவையாவன நான்குவகைப்படும்.

"பெயரொடு முறையே பிண்ட மெழுத்தாம்
வாரணி முலையாய் தோலின் வகையே"

என்ருராகலின், உயர்கூத்துமென்று சிறப்பித்தவதனுல் உயர்ந்த தேவர்களாலாடப்பட்ட கூத்தினையும் சொல்லுதும் என்றவாறு.

''தாண்டவ நிருத்த நாட்டியங் குரவை
வரியே கோலம் கூத்துட் பட்டன
வரிமலர்க் கண்ணுய் வன்ருெழிற் கூத்தே''

என்ருராகலின் எழுவகைப் படுமெனக் கொள்க.

அவை மூன்று வகைப்படும் ; சாந்தி விநோதம் வகைக் கூத்து எனக் கொள்க.

---

2. பாயிரம் :— "வழிபடு தெய்வ வணக்கஞ் செய்து மங்கல மொழிமுதல் வழூவறவமைப்பின் எடுத்துக்கொண்ட விலக்கண இலக்கிய இடுக்கணின்றினிது முடியுமே" என்ருராகலின், முதலிற் கடவுள் வணக்கங் கூறினுர். திருமால் காப்புக் கடவுள் ஆதலின், அவரை முன்வைத்துக் காப்புக் கூறினுர்.

3. "கார்மேனிக் கண்ணனை முன்வைத்துக் காப்புரைக்கக்
கற்றுணர்ந்தோர் வண்ணம் புணர்க்கும் வகை"
(இப் பஞ்சமரபு வகையொழிபு)

4. இதனுள் இறைவனை முற்கூருது மாயோனை முற்கூறியது என்னையோவெனின்? மாயோன் காவற் கடவுளாய் அருளை அருத்தலா னென்க. என்பது அடியார்க்கு நல்லாருரை. (சிலம்பு கடலாடு காதை)

" சாந்தி விநோதம் வகைக்கூத் தென்ன
முந்திய வெல்லா மூவகைப் படுமே "

என்றாராகலின், அவற்றுள் சாந்தியாவது,

க. தாண்டவம்

உ. நிருத்தம்

ங. நாட்டியம் - எனவரு மூவகைத் கூத்தும் சாந்திக் கூத்தெனக் கொள்க.

தாண்டவமாவது, சொக்க தாண்டவம், ஆனந்தத் தாண்டவம் என இரண்டு வகையாகிய நூற்றெட்டுக் கரணக் கூத்துமெனக் கொள்க.

நிருத்தமாவது, தேசி வடுகு சிங்களமென்னும் மூவகைக் கூத்துமெனக் கொள்கவென்றவாறு.

நாட்டியமென்பது இயலுமிசையும் தழுவிய நாடகங்கள்.

---

5. இந்நூலின் இசைமரபு முதற் செய்யுளில் இறைவனை முன்வைத்துத் திருமாலை யடுத்துக் கூறுகின்றார்.

" தெய்வ வணக்கமுஞ் செயப்படு பொருளு
மெய்த வுரைப்பது தற்சிறப் பாகும் "

என்பதிலக்கணமாதலின் இச் செய்யுள் பாயிரமாயிற்று.

பிங்கலந்தை, காப்புக்குரிய கடவுள்,

" காப்பு முதலிசைக்குங் கடவுள் தானே
பூக்கமழ் தண்டுழாய் புனைந்தவ னுமவன்
காவற் கிழமைய னாத லானும்
பூவின் கிழத்தியைப் பொருந்துத லானும்
முடியுங் கடக மொய்பூந் தாரும்
குழையு நூலு குருமணிப் பூணும்
அணியுஞ் செம்ம லாத லானும்
மன்னுறும் பிரமனைத் தருத லானும்
முன்னுறு மொழிதற் குரிய னுமெனப்
பன்னி யுரைத்தனர் பாவலர் தாமே. "

விநோதமாவது,

"குரவை வரியே கோல மூன்றும்
விரவிய விநோத மாகு மென்ப"

இவற்றுட் குரவையாவது, கோபிகைகளை நடு நிறுத்தித் தம்முடைய கைகளைக் கோத்தவன் வீரமுமழகும் பாடி ஆடியதெனக் கொள்க.

வரியாவது, "கொம்பு துருத்தி கொடியம்மானை பந்துவில் பத்திரம்" முதலாயினவற்றால் ஆடப்படும் பெண்கோலமெனக் கொள்க.

கோலமாவது, "ஈழம் அராளம் மறம் சித்து சோனகம்" இவை முதலிய பல கோலமாக ஆடப்படும். ஆண் கோலமெனக் கொள்க.

வகைக்கூத்தாவது,

"பதினோ ராடலின் பகுதி யெல்லாம்
அதிரா வகைக்கூத் தாகு மென்ப"

---

6. சாந்திக் கூத்து, நாயகன் சாந்தமாக ஆடிய கூத்து. சொக்கமென்பது சுத்த நிருத்தம் அது நூற்றெட்டுக் கரணம் உடைத்து என்பர்.

சாந்திக் கூத்தாடுவோர், கண்ணுளர் எனவும் படுவர். இவர்கள் நலம்பெறு கண்ணுளர் எனக் கூறப்படுவர், தாம் தாம் கொண்ட கோலத்தானும் கூத்தானும் நலம்பெறும் சாந்திக் கூத்தர்.

இருவகைக் கூத்து. சாந்தியும் விநோதமும்

"சாந்திக் கூத்தும் விநோதக் கூத்துமென்
றாய்ந்துற வகுத்தன னகத்தியன் றானே"

சாந்திக் கூத்தே பரவிய சாந்தி

தலைவ னின்பம் ஏந்திநின் றாடிய
வீரிரு நடமவை.

"சொக்க மெய்யே யவிநய நாடகம்
என்றிப் பாற்படூஉ மென்மனார் புலவர்"

அவையாவன :-

க. அல்லியக்கூத்து
உ. குடைக்கூத்து
ங. குடக்கூத்து
ச. பாண்டரங்கம்
ரு. மறக்கூத்து
சு. கொடு கொட்டி
எ. பாவைக்கூத்து
அ. கடையம்
கூ. பேடு
ய. துடி
யக. மரக்கால் எனவிவை.

இவற்றுள் நின்ருடல் ஆறு,

**" அல்லியங் கொட்டி குடை குடம் பாண்டரங்கம்**
**மல்லுட னின்ருட லாறு "**

வீழ்ந்தாடல் ஐந்து,

**" துடிகடையம் பேடு மரக்காலே பாவை**
**வடிவுடன் வீழ்ந்தாட லைந்து "**

இனித் தாளமென்றவதனல் வடதாளமும், தமிழ்த் தாளமும் என இரண்டு வகைப்படும். அவையெல்லாம் சொல்லுதுமென்றவாறு. க.

---

எல்லாக் கூத்தும் இருவகையிலடக்கிக் கூறுவது மரபு. இருவகைக் கூத்து மார்க்கம் தேசிகம். அதாவது அகம், புறம்.

7. சிவபிரான் திருக்கூத்தில் திருமால் பாடுதலும், பிரமன் தாளங்கொட்டுதலும் செய்வராகலின், மால்பாடும் பாணியையும் என்ருர். தில்லையுட் கூத்தனே என்பது திருவாசகம். சிவபிரானது திருக்கூத்து நூற்றெட்டாம்.

' நூற்றெட் டாட்டம் நுதல் விழியோர்க்கே ' (கூத்தநூல்)

' சிவபிரானியற்றிய கூத்தே கூத்திற் சிறந்தது.' (கூத்தநூல்)

' கூத்திற் சிறந்தது கூத்தன் கூத்தே,' (தொகைநூல்)

' முக்கண்ணன் முன்ஞெருநாள்
மூவகைக் கூத்தாக்கிஞன்.' (அரனரங்கத்தொகை)

# அவையடக்கம்

2. " மால்பாடும் பாட்டினையும் வார்சடையோன் கூத்தினையும்
மேலாய நான்முகன்செய் பாணியையும்—சாலவென்
புன்கவியுஞ் சான்றோர்பாற் பொற்புடைத்தா மென்றுரைத்தேன்
மென்கொடியே மேதையான் மிக்கு " (பேதையான்)

என்னுதலிற்றோவெனின்? நூற்சிறப்பு அவையடக்கம் உணர்த்துதல் நுதலிற்று.

திருமால் பாடிய பாட்டினையும் பரமேசுவரனாடிய கூத்தினையும் நான்முகன் கொண்ட தாளத்தினையும் ஓராதே யானுமொரு நூலாகச் செய்ய வேண்டியது என்னையோ எனின்? யாரேனுமொருவர் செய்த புன்கவியும் சான்றோரால் இகழப்படாதென்பது. அன்றியென் *மேதையாற் பாடினதா மென்றவாறு. உ.

---

* பேதையான். மேதையாற் பாடினதாம் அன்றென்றவாறு

8. பதினோராடலாவன :—

" கடைய மயிராணி மரக்கால் விந்தைகந்தன்
குடைதுடிமா லல்லியமல் கும்பஞ் — சுடர்விழியாற்
பட்டமதன் பேடுதிருப் பாவையரன் பாண்டரங்கங்
கொட்டியதிவை காண்பதினோர் கூத்து. "

இவை தெய்வ விருத்தி. இவை இரண்டு கூறுபடும். என்னை? நின்றாடலாறென்றும் வீழ்ந்தாடலைந் தென்றும் இவை. அசுரரைக் கொல்ல அமரராடின. (அடியார்க்குநல்லார்)

9. ' ஆரியந் தமிழை யறியார், கூத்தின்
வீரிய மறியா வெறுமைக் கூத்தர்.'

என்றும் தாளநூல் கூறுதலின், வடதாளமும் தமிழ்த்தாளமும் என இருவகையாகக் கூறினர்.

3. " நூலின் றிகழ்பெயருங் காரணத் தின்விரிவும்
பால்வகையாற் பாடினோன் றன்பெயரும் — நூலின்
அளவும் பயனு மெடுத்துரைக்க வென்றே
தளவ முறுவலாய் சாற்று "

என்னுதலிற்றோவெனின்? பாயிரமுணர்த்திற்று. யாதானுமொருநூல் செய்யும் இடத்து நூற்பெயரும் காரணமும் ஆக்கியோன் பெயரும் அளவும் பயனும் உரைத்துரைக்கற்பாற்று.

இந்த நூல் என்னபெயர்த்தோவெனின்? இஞ்சிசூழ் மதுரைக்கோன் முன்னஞ்சுறுப்பாகச் (ஐஞ்சுறுப்பு) சொல்லப்பட்டமையாற் **பஞ்சமரபு** எனும் பெயர்த்து.

அஞ்சுறுப்பாவன.

" இசையு முழவுந் தாளமுங் கூத்து
மசைவி லவிநய மஞ்சுறுப் பாகும் "

எனக்கொள்க. ௩

4. " நல்ல நரம்பு குழல்கண்டந் தோல்கூத்து
பல்லபொருட் கூடுகின்ற பாணியுடன்–சொல்லிமலர்க்
கையா லவிநயமுங் காட்டுதல்காண் காரிகையாய்
பொய்யாத நூலின் பொருள் "

என்னுதலிற்றோவெனின்? அஞ்சுறுப்புமுணர்த்திற்று. இந்நூல் யாது காரணமாக யாக்கப்பட்டதோவெனின்? நூற்பொருளையும் அதன் பகுதியையும் ஓதா மாக்கள் உணர்தல் வேண்டியும் மிகு பொருளுணர்ந்த மெய்த் தவத்தோரை நகுதல் காரணமாகவுஞ் செய்யப்பட்டது. ௪

10. கூத்துள்வரும் அவிநயம் (வினையம்) கதை தழுவாது வரும் பாடல்களின் பொருள்தோன்றக் கைகாட்டுவது அதாவது சைகையாம்.

5. "மன்னுபொதியத்திருந்த மாதவத்தோன் ருள்வாழ்த்திப்
பன்னு பனுவற் ரெகையினுடன் — றுன்னருஞ்சீர்ச்
சேறை யறிவனுர் செய்தமைத்த வைந்துதொகை
கூறுத லிந்நூற் குணம்"

இந்நூலாரால் செய்யப் பட்டதோவெனின்? ஐந்தியலும் உணர்ந்த அறிவனுராற் செய்யப்பட்டது. இந்நூல் எவ்வளவைத்தோவெனின்? இருநூற்று நாற்பது வெண்பாவாலே முற்றுப்பெற்றது.

இந்த நூலாற்பயன் யாதோவெனின்? இசையும் முழவமும் கூத்தும் தாளமும் அவிநயமும் என்னும் அஞ்சுறுப்பறிதல் பயன். இவையறியவே, அறம் பொருளின்பம் வீடென்னும் நான்குமெய்தும். எவ்வாறு எய்துமோ எனின்? தேவர்களுவப்பன கீத வாச்சிய நிருத்த தாளங்களாதலால் மிக்கோர் இவ்வைந்தினையும் அறிதல் கருமமெனக் கொள்க.

இவ்வைந்தினையும் மன்னர்க்கியற்றப் பொருள் சேரும், அப்பொருளால் நினைத்த இன்பங் கைகூடும் நினைத்தது முடியவே வீடுபெறுமெனக் கொள்க. ரு.

பாயிரம் முற்றிற்று.

---

அவிநயக் கூத்தாவது, கதை தழுவாது பாட்டினது பொருளுக்குக் கைகாட்டி வல்லபம் செய்யும் பலவகைக் கூத்து.
(அடியார்க்குநல்லார்)

11. பொதிய மாதவராகிய அகத்தியரே தலைச்சங்கப் புலவராய் அமர்ந்து, முதன்முதல் தமிழ் மொழிக்கு அகத்தியம் என்னும் முத்தமிழிலக்கண நூல் செய்தவர் என்பது மரபு.

12. சேறைவாழ் சேதிபனுர் (வேறுபாடம்)

# இசை மரபு — க.

## நூல்

6. ஏற்றான்புள் ளூர்ந்தா னெயிலெரித்தான் மார்பிடந்தான்
நீற்றான் நிழல்மணி வண்ணத்தான் — கூற்றொருபான்
மங்கையான் பூமகளான் வார்சடையா னீண்முடியான்
கங்கையா னீள்கழலான் காப்பு.

நரம்புக்கருவி (உட்பிரிவு) யாழ்மரபு

7. பேரியாழ் பின்னு மகரஞ் சகோடமுடன்
சீர்பொலி செங்கோடு செப்பினராற் — றார்பொலிந்த
மன்ன திருமாற வண்கூடற் கோமானே
யின்ன முளவே சில.

என்னுதலிற்றோவெனின்? இசைக்குப் பிறப்பிடமாய யாழ்க்கருவிகளை உணர்த்துதல் நுதலிற்று. அவை,

---

13. அறம் பொருளின்பம் வீடென நான்கும்
திறம்பட நாட்டியச் செயலின் பயனே.
கூத்தையேயன்பின் கோப்பாக்கொண்டு
கூத்துடையானைக் கூடலுமாமே. (கூத்தநூல்)

14. இவ்வெண்பா சிலம்பு அரங்கேற்று காதையில் அடியார்க்கு நல்லாரால் மேற்கோள் காட்டப்பெற்றது. இன்ன முளவே சில (பிற) வென்றதனால் வில்யாழ், சீறியாழ், நாரதயாழ், கீசகயாழ், ஆயிரப் பேரியாழ் முதலியனவும் கொள்க.

பேரியாழ் பின்னு மகரஞ் சகோடமுடன்
சீர்பொலியுஞ் செங்கோடு செப்பினார் — தார்பொலிந்து
மன்னுந் திருமார்ப வண்கூடற் கோமானே
பின்னு முளவே பிற.

க. பேரியாழ்

உ. மகரயாழ்

ங. சகோடயாழ்

ச. செங்கோட்டியாழ்

எனப் பெரும்பான்மை நான்கு வகைப்படும். சிறுபான்மை யாழ், (சிறுபான்மையால்) வருவனவும் உளவென்றவாறு. பண்களின் தோற்றத்திற்குக் காரணமாக உள்ளது யாழாதலின், முதலில் யாழும் யாழினிலக்கணமும் கூறினர். க.

8 **ஒன்று மிருபதும் ஒன்பதும் பத்துடனே**
**நின்ற பதினன்கும் பின்னேழுங் — குன்றாத**
**நால்வகை யாழிற்கு நன்னரம்பு சொன்முறையே**
**மேல்வகைநூ லோதும் விதி.**

என்னுதலிற்றேவெனின்? நால்வகை யாழுக்கும் நரம்பு கொள்ளுமிடத்துப் பேரியாழிற்கு இருபத்தொன்றும், மகரயாழிற்குப் பத்தொன்பதும், சகோடயாழிற்குப் பதினன்கும், செங்கோட்டியாழினுக்கு ஏழுங்கொள்க. உ.

---

"ஒன்று மிருபது மொன்பதும் பத்துடனே
நின்றபதி னன்கும் பின்னேழுங் — குன்றாத
நால்வகை யாழிற்கு நன்னரம்பு சொன்முறையே
மேல்வகை நூலோர் விதி."

"ஒன்று மிருபது மோரேழ்மேற் பத்துடனே
நின்றபதி னறேழ் நேடுங்காற் — குன்றாத
நால்வகை யாழிற்கு நன்னரம்பு சொன்முறையே
மேல்வகை நூலோர் விதி"

9. சொல்லிய கொன்றை கருங்காலி மென்முருக்கு
நல்ல குமிழே தணக்குடனே — மெல்லியலாய்
உத்தம மான மரங்க ளிவையென்றுர்
வித்தகமா மானே விதி.

என்னுதலிற்றேவெனின்? யாழுக்குரிய மரங்களை உணர்த்திற்று. இவற்றுள் கோட்டுக்குமரம், கருங்காலியும், கொன்றையும், பத்தர்க்குமரம், குமிழ், தணக்கு, முருக்கும் ஆமெனக்கொள்க.

இனிப்பேரியாழுக்கிலக்கணம் வருமாறு,

" கோட்டத் தளவே பதிெருரு சாணே
பத்த ளளவே யேழுசா ணுகும்
புட்டி ளளவே முச்சா ணுகும்
பொதிகை யெருத்தந் தலையே முகனே
டேகு மின்றி இயைந்த வகைகொளல்
தந்திரி தானும் பதின்முச் சாணே
யவ்வுறு திவவே யான்றே ரதற்குக்
கவ்வரி முண்டகங் கட்டுதல் மரபே. "

திவவாவது, நரம்புகள் தோறும் பிணிக்கப்பட்டு கோட்டிடை விசிக்கும் வாரனெக் கொள்க. கவ்வரி முண்டகமென்பது அத்திவவின் கடைக்கண் முடிந்த மணிமுடியென்னை ?

---

15. " வில்யாழிசைக்கும் விரலெறி குறிஞ்சிப்
பல்காற் பறவை கிளைசெத் தோர்க்கும் "
(பெரும்பாணுற்றுப்படை)

" ஆரியப் பதங்கொள் நாரதப் பேரியாழ் " — கல்லாடம்

" கீசகப் பேரியாழ் கிளையுடன் முரல " — கல்லாடம்

" புலமக ளாளர் புரிநரப் பாயிரம்
வலிபெறத் தொடுத்த வாக்கமை பேரியாழ் "
— கொங்குவேண் மாக்கதை,

" அவ்விசித் திவவின் கடைக் ... ...
கணிபெற வகுத்த மணி முடியாகும் "

என்றாராகலின், புட்டிலென்பது வறுவாய்.

இனி மகரயாழுக் கிலக்கணம் வருமாறு,

" கோடே பத்த லாணி நரம்பே
மாடக மெனப்படும் வகையின தாமே "

அவற்றுள்

" கோட்டத் தளவே யேழு சாணும்
பத்த லளவு நாற்சா ணரையே "

எனக்கொள்க. அல்லாத உறுப்புக்களுக்கெல்லாம் பேரியாழ்ப் போல அமைக்கப்படுமெனக்கொள்க.

இனிச் சகோடயாழுக் கிலக்கணம் வருமாறு,

" கோட்டத் தளவே நாற்சா ணுரும்
பத்த லளவு மதுவெனக் கொள்க "

அதுதான்,

" பதுமஞ் சதுரம் வட்டணை குடனே (குவடே)
விதிமாண் டாடிப் புள்ளி மூலங்
தண்டே குவடே குடுமி யென்றுங்
கெண்டகு சிறப்பி னெட்டிதி னுறுப்பே "

---

16 ஆயிரப் பேரியாழ் ஆதியாழெனப் பெயர்பெறும்.
" ஆயிர நரம்பிற் றுதியாழாகும் " என்பது பிங்கலந்தை.

இவ்வெண்பாவிற் கூறிய நால்வகை யாழ்களும்,

" பெருங்களிறடக்கிய பெறற் கரும் பேரியாழ் "
" மகரயாழின் வான்கோடு தழீஇ " (மணிமேகலை)
" ஈரேழ் சகடமும் மிடை நிலைப் பாலையும் " (சகோடம்)

" கோட்டின தமைதியுங் கொளுவிய வாணியும்
ஆட்டிய பத்தரின் வகையு மாடகமும்
தந்திரி யமைதியுஞ் சாற்றிய பிறவும்
முந்திய நூலின் முடிந்த வகையே "

அவற்றுள் வட்டணையென்பது,

" திரன்வட் டுப்போ லாக்கப் பத்தல்
முகத்தி னகல மைவிர லாகும்
தலையி னகலம் பதின்விர லாகும்
தந்திரி தானே பூணில ஞெழிய
வந்த விருசா ணுல்விர லாகும்
அந்தமில் *பெருமை பெருவிர லாகும்
வந்துநிலஞ் சுருக்கும் பூணின் தானே
* பருமை (பூணிலத்தானே) "

" மாடக மென்பது வகுக்குங் காலை
கருவிளங் கோட்டினை நால்விரல் கொண்டு
திருவியல் பாலிகை வடிவாய்க் கடைந்து
சதுர மூன்றாகத் துளையிடற் குரித்தே "

" குடுப்பிக் கொட்கு முலத்தன மொழிப
வழக்கொடு பிறவும் வருவன கொளலே. "

" மூத்துடம் புவிட்ட சேதா வின்சீரை
யார்த்த கவுண்டிய னமைத்த பின்கை
கோத்தில் மொழியாளைக் கோல மேற்றி
யோடு பரிக்க ஞோளீ ( யாழைக் ) ருபாருற்
றட்டுக் கொண்ட காலை ரட்டித்த
இரட்டித்த குரலாய்த் தேனும் ... ... ... ...
வட்டினும் தீம்பாலை முடிப்பனுன் யாழே "

---

17. (செந்நிறம்) " செந்திறம் புரிந்த செங்கோட்டி யாழில் "

என் முறையே கொங்குவேள் மாக்கதை, மணிமேகலை சிலப்பதிகாரம் என்னும் பழைய விலக்கியங்களுள் வழங்குதல் காண்க. பெருங்கலமாவது பேரியாழ். வனப்புடைத்தம்ம வள்ளுயிர்ப் பேரியாழ். பண்மகிழ் பேரியாழ் என்பனவும் இடனுடைப் பேரியாழ், தனக்குக் கூறுகின்ற இலக்கணங்களைத் தன்னிடத்தே உடைய பெரியயாழை என்பனவும் பிறவும் அறியத்தக்கது.

இனிச் செங்கோட்டியாழிற் கிலக்கணம் வருமாறு,

"செங்கோட்டி யாழே செவ்விதிற் கிளப்பின்
அறுவகை யுறுப்பிற் ருகுமென்ப".

அவைதாம்,

"கோடே திவவே யாணிப் பத்தல்
தந்திரி கரமே நரம்போ டாறே"

எனக் கொள்க.

அவற்றுள் தந்திரிகரமென்பது நரம்பு துவக்குதற்குத் தகைப்பொழிய இரு சாணுல் விரல் நீளமாகக் குறுக்கு இடத்திற் சேர்க்குமமைப்ப தோருறுப்பாம் என்னை ?

"தந்திரி கரமே தகைப்பற விலகி
வந்த விருசா ணுல்விர லாகும்"

என்ருராகலின். ௩.

இனியிவ்யாழிற்குரித்தாகிய தொழிற்கை வறுமாறு,

10. வன்மை படவார்தல் வடித்த லுடனுந்தல்
தன்னி லுறழ்த லுருட்டலே — யெண்ணித்
தெருட்டலே யள்ளல் திரள்பட் டடையும்
மருட்டாது வைத்துக் கொளல்.

என்னுதலிற்ருேவெனின் ? தொழிற்கையெட்டினையும் உணர்த்துதல் நுதலிற்று.

---

18. செங்கோட்டியாழ் — அம்பணவர் யாழ் ஒற்றென்னும் உறுப்பை உடையது.

"செங்கோட்டி யாழே செவ்விதிற் றெரியின்
அறுவகை யுறுப்பிற் ருகுமென்ப."
அவைதாம் கோடே திவவே யொற்றே.....
தந்திரி கரமே நரம்போ டாறே.

க. " ஐந்தாங் கோலுமெட் டெழுவா யளவும்
வந்துற வார்தல் வளர்த்த லாகும் " (வளர்தல்)

உ. " எழுவாய் தொடங்கி யீறு காறும்
வழுவா தெறிதல் வடித்த லாகும் "

ங. " தடவுத றள்ள லுந்த லாகும் "

ச. " இரண்டோ டிரண்டு நரம்பு தொட்டவை
உரம்பெற வெறித லுறழ்த லாகும் "

ரு. " மிக்க வடிமுன் முடியவோர் நரம்பை
யொக்க வுருட்ட லுருட்ட ( முடிய ) லாகும் "

சா. " அருகிய நரம்பை யமைவுறத் தொட்டுத்
திருகி விடுதல் தெருட்ட லாகும் "

எ. " வள்ளிய சுட்டுஞ் சேடனும் வகுத்தெடுத்து
தள்ளுத ருனே யள்ள லாகும் "

அ. " முற்றிய யிளிதனை முறைமையி னமையப்
பற்றி யெழுப்புதல் பட்டடை யாகும் "

எனத் தொழிற்கை யெட்டினையுங் கண்டு கொள்க. ச.

இனியிவ்யாழிற் குரித்தாகிய கைகளெட்டும் வருமாறு.

11. பன்னிய பண்ணல் பரிவட் டணைதன்னோ
டன்னியா ராய்த லதைவரன் — மன்னும்
விளையாட்டுக் கையுள் செலவு குறும்போக்கு
வளையூட்டுக் கைமடவாய் வைப்பு.

என்னுதலிற்றோவெனின்? யாழிற் குரித்தாகிய கைகளெட்டினையுமுணர்த்துதல் நுதலிற்று.

---

19. " பண்ணல், பரிவட்டணை யாராய்தல் தைவரல்
கண்ணிய செலவு விளையாட்டுக் கையூழ்
நண்ணிய குறும்போக்கு" என நாட்டிய எண்வகை.

அவை வருமாறு,

க. "எண்ணிய தான மினிதுற நரம்பைப்
பண்ணுதல் தானே பண்ண லாகும்"

உ. "ஓங்கிய நரம்பை யொத்த வகையாற்
பாங்குற விடுத்தல் (விருத்தல்) பரிவட் டணையே"

ங. "சேரா நரம்பைச் செவிக்குற வேவைத்
தாராய்ந் தெறித லாராய் தல்லே"

ச. "தடவு நீதியிற் றடவல் தைவரலே"

ரு. "இசையெழு முறைமையா விசைய வகுத்தல்
விளையாட் டென்று வேண்டுவர் புலவோர்"

சு. "கையுள் ளென்பது நரம்பிடை விட்டாங்
கெய்த லெறித லென்றிசி னோரே"

எ. "செலவெனப் படுவது செலவறிந் தொற்றெனப்
புலவர் யாவரும் புகன்றிசி னோரே"

அ. "எற்றிய நரம்புக ளெல்லா மிசைவாக்
குற்றமின் றியற்றுதல் குறும்போக் கென்ப"

எனக் கண்டுகொள்க. ரு

12. ஆயஞ் சதுரந் திரிகோணம் வட்டமுடன்
பாய விவைநான்கும் பாலையாம் — காயந்தான்
பண்ணு முறையே பரிந்துரைப்பன் பாரிடத்து
விண்ணவர்தான் சொன்ன வீதி.

என்னுதலிற்றோவெனின்? பாலை (பாலையாழ்) நான்கினையுமுணர்த்திற்று.

---

"ஆயர் சதுரந் திரிகோணம் வட்டமெனப்
பாய நான்கும் பாலை யாகும்"

அவையாவையோவெனின்?

க. ஆயப்பாலை உ. சதுரப்பாலை ௩. திரிகோணப்பாலை ச. வட்டப்பாலை யெனவிவை நான்குமாம். சூ.

13. ஈரேழுக் கோரேழா மாயம் சதுரந்தான்
பாரேழுக் கேழாகப் பார்க்கவே — யோராகும்
கோணமே லொன்றுமுத லேழாகும் வட்டந்தான்
காணுமே லோரேழின் கண்.

என்னுதலிற்றோவெனின்? முன்சொன்ன பாலை நான்கினையும் மட்டடை (பட்டடை) இட்டுறழ்ந்து அறியுமாறு உணர்த்திற்று.

"ஆயமீ ரேழறை கொண்டால் சதுரம்
வித்தார மேழறை கொள்க ... ... ...வென்றவாறு" எ.

---

20. ஆயப்பாலை என்பது வலமுறையாக (எடுத்தல்) அறியப் பட்டு பின்னர் இடமுறையாக அலகுகள் ஈற்றினின்று எண்ணப் பட்டு அறியப்பெறுவது, ஆயப்பாலை என்பது பதினாற்கோவை. ஒரு பண்ணிற்குரிய நரம்புகள் (அலகுகள்) ஒழுங்குபட்டு இரு நிரலாய் வலமுறை இடமுறையாய் இணைந்துநின்றிசைப்பதாம்.

ஆயம் நிரை, நிரநிறை, எதிர்நிர நிறை, வலமுறைப்பாலை கிளைமுறையலகுகள், இடமுறைப்பாலை நட்புமுறையலகுகள்.

சதுரப்பாலை என்பது இசையலகுகளை நாற்கட்டத்துள் அமைத்து நட்புமுறை அதாவது நான்காமிசைமுறையில் கணித்தறிந்துவரும் முறைமையில் இசைத்து நிறுவுவது, சதுரப் பாலை என்பது நான்கு நிரல்களாக ஒத்திசைப்பதாம்.

திரிகோணப்பாலை என்பது இசையலகுகளை முக்கோணக் கட்டத்துள் அமைத்து பகைமுறை அதாவது மூன்றாமிசை முறையில் கணித்தறிந்து வரும் முறைமையில் இசைத்து நிறுவுவது. திரிகோணப்பாலையென்பது ஒரு பண்ணிற்குரிய நரம்புகள் மாத்திரை வேறுபட்டு மூன்று நிரல்களாக ஒத்து இசைப்பதாம்.

14. **சாணளவு கொண்டதொரு வட்டத்தின் மேலே
பேணியிரு நாலு பெருந்திசையில் — கோணத்
தொருகயிறு மேலோட்டி யொன்பானு மூன்றும்
வருமுறையே மண்டலத்தை வை.**

என்னுதலிற்றோவெனின்? வட்டப்பாலை மண்டலமாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

சாணுக்குச் சாணகவொரு வட்டங் கீறிப் பெருந் திசைகளிலே இதன்மேலே இரண்டு வரம்பு கீறிக் கோணங்களின் மேலொரு வரம்புகீறி மண்டலஞ்செய்து பன்னிரண்டு கோணமாய் வருவது வட்டப்பாலை மண்டலமெனக்கொள்க.

வட்டப்பாலையாவது, பன்னிரண்டு கோணஞ்செய்து இக்கோணங்களுள்ளேழு கோணத்தையுடன் கொண்டு உறழப்படும். இவ்வாறு கண்டு கொள்க, அ

---

21. வட்டப்பாலை

வட்ட மென்பது வகுக்குங் காலை
ஓரேழ் தொடுத்த மண்டல மாகும்

வட்டக்கோடிட்டு ஏழுமண்டலமாக அறையிட்டு ஏழிசைகளையும் அமைத்து ஐந்து வெற்றிடத்தில் அந்தரம் ஐந்தமைத்துக்கணித்து அறிவது. வட்டப்பாலையென்பது இறுதி நரம்பினிசை முதலில் நின்ற பாலையில் முதலில் தொடங்கிய இசை நரம்போடு அணைந்து ஒன்றும்படி வந்து வட்டமாய் முடிய வாசிக்கப்படுவதாம்.

ஏழிசையும் ஐந்தந்தரமுங்கொண்டு அவற்றை இரு நிரல்படக்கொண்டு இருபத்திநான்காய்க்கொண்டு ஈரேழுக் கோரேழாகவும் இட்டுறழ்ந்து கண்டுகொள்கவென்றவாறு

"சாணளவு கொண்டதொரு வட்டந் தன்மீது
பேணியிரு நாலு பெருந்திசைக் — கோணத்
திருகயிறு மேலோட்டி யொன்பானு மூன்றும்
வருமுறையே மண்டலத்தை வை".

இம்மண்டலத்தில் இராசிகள் நிற்குமாறெவ்வாறு எனின்?




இவ்வாறு கண்டுகொள்க.

---

வட்டப்பாலை மண்டலம் வருமிடத்துச் சானுக்குச் சானாக ஒரு வட்டங்கீறிப் பெருந்திசைகளின்மேலே இரண்டு வரம்பு கீறி மண்டலம் செய்து பன்னிரண்டு கோணமாக வகுப்பது நுதலிற்று.

15. எதிராகு மிராசி வலமேட மாக
எதிரா விடமீன மாக — முதிராத
வீரா றிராசிகளை யிட்டடைவே சேர்க்கவே
யோராரு மண்டலமென் றேது.

எதிருமிராசி வலமிடமாக யோராரு மண்டலமென்றண்
(வேறுபாடம்)

என்னுதலிற்றோவெனின்? மண்டலத்தின் மேல் இராசிகள் நிற்குமாறுணர்த்துதல் நுதலிற்று. முன் சொன்ன படிகளிலே, பன்னிரண்டு கோணமாக மண்டலத்தையிட்டுக் கிழக்குப் பெருந்திசைக் கோணம் இரண்டில் வடக்குக்கோணம் முதலாகவும் அதற்கு வடக்கிற்கோணம் ஈருகவும் பன்னிரண்டு இராசிகளை நிறுத்தி மேடமுதல் பன்னிரண்டு இராசிகளை இட்டுக் கண்டுகொள்க. கூ.

| | | | |
|---|---|---|---|
| மீனம் | மேடம் | இடபம் | மிதுனம் |
| கும்பம் | | | கடகம் |
| மகரம் | | | சிங்கம் |
| தனு | விருச்சிகம் | துலாம் | கன்னி |

16. சொல்லிய கோல்குரல் துத்தந் தனுவாகும்
மெல்லியல் கும்பங் கிளையென்றூர் — நல்ல
உழையாகு மீன மிளியிடபம் நண்டு
விளரிதா ரஞ்சிய மாம்.

என்னுதலிற்றோவெனின்? இராசிகளும் நரம்புகளும் (இசைகளும்) காட்டுமாறுணத்திற்று. இவற்றுள் நரம்புகளுடன் இசைவன ஏழு. அவைதாம்

| | |
|---|---|
| குரல் | துலாத்தில் நிற்கும் |
| துத்தம் | தனுவில் நிற்கும் |
| கைக்கிளை | கும்பத்தில் நிற்கும் |
| உழை | மீனத்தில் நிற்கும் |
| இளி | இடபத்தில் நிற்கும் |
| விளரி | (நண்டு) கற்கடகத்துள் நிற்கும் |
| தாரம் | சிங்கத்தில் நிற்கும் |

---

22. எதிரு மிராசி வலமிட மாக
எதிரா விடமீன மாக — முதிராத
ஈரா றிராசிகளை யிட்டடைவே நோக்கவே
ஏரார்ந்த மண்டலமென் றெண்.

என்னுதலிற்றோவெனின்? இட்ட பன்னிரண்டு கோணத்திற் பன்னிரண்டு ராசிகளை நிறுத்தினல் இவற்றுள் நரம்புடன் இயல்வன ஏழென்பது உணர்த்துதல் நுதலிற்று.

குடமுதல்—மேற்றிசை முதலாக வட்டப்பாலை வருமாறு.

ஆழியு மாரும்போற் கீறிச் சிறுதிகைக்கண்
ஊழி ஞேரோவொன் றுடன்கீறிச்—சூழ
எருதாதி கீழ்த்திசைக்கொண் டீராறு மெண்ணிக்
கருதி நிலக்கயிற்றைக் காண்.

—சினேந்திரமாலை

இவ்வாறு கண்டு கொள்க. ம

| | | | |
|---|---|---|---|
| மீனம் உழை | மேடம் | இடபம் இளி | மிதுனம் |
| கும்பம் கைக்கிளை | | | கடகம் விளரி |
| மகரம் | | | சிங்கம் தாரம் |
| தனு துத்தம் | விருச்சிகம் | துலாம் குரல் | கன்னி |

---

23. துலைநிலைக் குரலும் தனு நிலைத் துத்தமும்
நிலைபெறு கும்பத்து நேர்கைக் கிளையும்
மீனத் துழையும் விடைநிலத் திளியும்
மானக் கடகத்து மன்னிய விளரியும்
அரியிடைத் தாரமு மணைவுறக் கொளலே

— ஆய்ச்சியர் குரவையுரை

இளியிடபங் கற்கடக மாம்விளரி சிங்கம்
தளராத தார மதுவாம் — தளராக்
குரல்கோற் றனுத்துத்தங் கும்பங் கிளையாம்
வரலா லுழைமீன மாம்.

குரறுலை விற்றுத்தங் கைக்கிளையே கும்பங்
பரிய வுழைமீனம் பாவாய் — அரிதாரம்
கொல்லே றிளிவிளரி கற்கடகங் கோப்பமைந்த
தொல்லே ழிசைநரம்பிற் காம்.

—சினேந்திரமாலை
ஆரூடச்சக்கரம்

17. **தாரத்துட் டோன்று முழையுழை யுட்டோன்றும்**
**ஒருங் குரல்குரலி னுட்டோன்றிச்—சேருமிளி**
**யுட்டோன்றும் துத்தத்துட் டோன்றும் விளரியுட்**
**கைக்கிளை தோன்றும் பிறப்பு.**

என்னுதலிற்றோவெனின்? ஏழிசையின் பிறப்புமுறை உணர்த்துதல் நுதலிற்று.

> "**தாரத் துழையு முழையிற் குரலும்**
> **குரலி லிளியு மிளியிற் றுத்தமும்**
> **துத்தத்து விளரியும் விளரியிற் கைக்கிளையுங்**
> **கைக்கிளை யுட்டாரமும் பிறக்கு மென்ன**
> **மிக்க நூலோர் விரித்துரைத் தனரே**"

என்றாராகலின்,

| | |
|---|---|
| தாரத்துள் | உழையும் |
| உழையுள் | குரலும் |
| குரலுள் | இளியும் |
| இளியுள் | துத்தமும் |
| துத்தத்துள் | விளரியும் |
| விளரியுள் | கைக்கிளையுமென |

கிளைமுறையிற்றோன்றி ஏழிசையும் பிறக்குமாறு கண்டு கொள்க.

இவற்றுள் தாரம் முற்றோன்றியதெனப்படும். மிக

---

24. தாரத்து உழை பிறக்கும் உழையிற் குரல் பிறக்கும்
குரலுள் இளிபிறக்கும் இளியுள் துத்தம் பிறக்கும்
துத்தத்துள் விளரிபிறக்கும் விளரியுட் கைக்கிளை
பிறக்குமெனக்கொள்க. இவற்றுள் முதலில் தோன்றிய நரம்பு **தாரம்.** இவை விரிப்பிற் பெருகும் வந்தவழிக் கண்டுகொள்க.

இசைநூன் முறையில் ஒருவகையான் நான்கு பாலைகளின் அமைப்பு முறையும் அறியப்படும். பாலை நான்கு வகைப்படும்

18. **சங்கு குயிலோடி யானைமயில் வாம்புரவிப்**
**பொங்குபுன லன்னம் புகைக்காடை — துங்கமாம்**
**யாழிசையி னுட்பொருளைச் சொன்னா ரிசைப்புல**
**ஏழிசையு மென்றா ரிவை. [வோர்**

என்னுதலிற்றோவெனின்? நரம்புகளோசை பிறக்கு மாறும், ஒற்றுமையறியுமாறும் உணர்த்திற்று.

| | | |
|---|---|---|
| குரல் | — | சங்கு |
| துத்தம் | — | குயில் |
| கைக்கிளை | — | யானை |
| உழை | — | மயில் |
| இளி | — | புரவி (குதிரை) |
| விளரி | — | அன்னம் |
| தாரம் | — | காடை |

எனவிவ்வாறும் பிறக்குமெனக்கொள்க.

**" குரலது தெய்வம் பிரமன் புனரதீர்**
**துத்தத்துக் கிழவ னெத்த வாதிரையன்**
**கைக்கிளைக் கிழவன் பாரத்து வாசன்**
**உழைக்குத் தெய்வ மயில்தாங் கியனே**
**இளியின் றெய்வ மொளியங் காரகன்**
**விளரிக் கிழவ னொளிமிகு பாற்கரன்**
**தாரக் கிழவன் காசிப னென்ப "**

---

25. பாலை என்பது யாழ்க்கருவிகளில் நரம்புகளை அளவறிந்து கட்டப்பெற்று இசைநிலைகளையும் அவற்றின் அலகு முறைகளையும் அமைத்தறிந்து உணர்ந்து தெரிந்து வாசித்தற்குரிய இசை நிரல்களாம் அதாவது சுரவரிசைகளாம்.

பாலையென்பது யாழில் நரம்புகளையமைத்து வாசித்தற்குரிய முறை. பாலையாழ் குறிஞ்சியாழ் மருதயாழ் செவ்வழியாழ்.

**பால் – பகுதி** பகுதிப்படுத்தியறியும் சுரவரிசைகள். அதாவது இசை நிரல்களை ஒன்றுமுதல் முறையே இசைத்திசைத்து வெவ்வேறு பண்களை உணர்வதற்கேற்ப பகுதிப்படுத்தல்.

என்றாராகலின் இவற்றிற்கிவ்வாறும் தெய்வமெனக் கொள்க.

"உழையே தலையில் இளியே நெஞ்சில்
விளரி நெற்றியில் குரலே மிடற்றில்
துத்தம் நாக்கில் கைக்கிளை யண்ணத்தில்
தாரம் மூக்கிற் றலைப்படு மென்ப"

என்றாராகலின், உடம்பில் இசைகள் தலைப்பிடுமிடங்கள் (தலைப்படுமிடங்கள்) உணர்த்தியவாறும் கண்டுகொள்க.

இவற்றுள் தாரம் முற்றோன்றியதெனப்படும்.

இனி இதற்கெழுத்துக்கள் வருமாறும் உணர்த்திற்று.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ எனவிவை நிரநிறையே கொள்க.

இசைபுணர் குறிநிலையும் அறியுமாறுணர்த்திற்று.

ஏழாம், நரம்புகளுக்கு நாலாம் நரம்பு நட்பு
ஐந்தாம் நரம்பு கிளை
ஆறும் நரம்பும் மூன்றும் நரம்பும் பகை
இரண்டாம் ஏழாம் நரம்புகள் இணை

இணையெனப்படுவ கீழும் மேலும் அணையத்தோன்றுமளவின வென்ப.

---

26. வேண்டிய வண்டும் மாண்டகு கிளியும்
குதிரையும் யானையும் குயிலும் தேநுவும்
ஆடும் என்றிவை ஏழிசை யோசை. பிங்கலந்தை.

வண்டு கிள்ளை வாசிமத யானை,
தவளை தேநுவா டேழிசை யோசை சே. திவாகரம்
வண்டொடு கிள்ளை வாசி மதயானை தவளை தேநு
ஒண்டிற லாடென் றேழு மோதுமே ழிசையி லோசை
சூடாமணி நிகண்டு.

"ஏழாம் நரம்பிணை நாலு நட்பாகும்
ஐந்துகிளை யாறு மூன்றும் பகையே

என்றாராகலின், ஐந்துகிளை யாறுநரம்பு மூன்றுநரம்பு பகையென்றாராகலின் இவ்வாறு கொள்க.

குரலுந் தாரமுங் கைக்கிளையு மாண்
இளியுந் துத்தமும் விளரியும் பெண்
உழையலி

எனக்கொள்க.

இளியுந் துத்தமும் கைக்கிளையும் பெண் எனவுங்கொள்க. ௰௨

---

## நரம்புகளின் மாத்திரை

19. குரறுத்த நான்கு கிளைமூன் றிரண்டு
வரையா வுழையிளி நாலாம் — விரையா
விளரியே மூன்றிரண்டு தார மெனச்சொன்னார்
களரிசேர் கண்ணுற் றவர்.

என்னுதலிற்றோவெனின்? இந்த நரம்புகளது மாத்திரை உணர்த்துதல் நுதலிற்று. குரல், துத்தம், இளி, நான்கு நான்கு மாத்திரை. கைக்கிளையும் விளரியும் மும்மூன்று மாத்திரை. தாரமும் உழையும் இரண்டிரண்டு மாத்திரை எனக் கொள்க.

---

27. ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ வெனும்
இவ்வேழெழுத்தும் ஏழிசைக்குரிய. (திவாகரம்)

ஆ, ஈ, ஊ! ஏ, ஐ, ஓ, ஔ என்றேழும்
ஏழிசைக்கெய்தும் அக்கரங்கள். (பிங்கலம்)

| முதல் | இணை | பகை | நட்பு | கிளை | பகை | இணை |
|---|---|---|---|---|---|---|

| குரல் | துத்தம் | கைக்கிளை | உழை | இளி | விளரி | தாரம் |
|---|---|---|---|---|---|---|
| ௪ | ௪ | ௩ | ௨ | ௪ | ௩ | ௨ |

| | | | |
|---|---|---|---|
| மீனம் உழை ௨ | மேடம் | இடபம் இளி ௪ | மிதுனம் |
| கும்பம் கைக்கிளை ௩ | | | கடகம் விளரி ௩ |
| மகரம் | | | சிங்கம் தாரம் ௨ |
| தனு துத்தம் ௪ | விருச்சிகம் | துலாம் குரல் ௪ | கன்னி |

28\. குரறுத்த நான்கு கிளைமூன் றிரண்டாங்
குரையா வுழையிளி நான்கு — விரையா
விளரியெனின் மூன்றிரண்டு தாரமெனச் சொன்னார்
களரிசேர் கண்ணுற் றவர்.

மாத்திரை, அலகு. சுருதி என்பன ஒரு பொருளில் வழங்கும்.

குரலே துத்த மிளியிவை நான்கும்
விளரி கைக்கிளை மும் மூன்றாகித்
தளராத் தார முழையிவை யீரிரண்
டௌவெழு மென்ப வறிந்திசி னோரே.

20. குன்ருக் குரற்ருரம் பாதி நடுவணைய
நின்றே கிளேயாகும் நேரிழையே — யொன்ருத
தாரத்தி லொன்றும் விளரிமே லொன்றிடுமே
நேரத் துழைகுரலே யாம்.

நேரத்தது குரலா நின்று (வேறுபாடம்)

என்னுதலிற்ருேவெனின்? எழு பாலேயும் பிறக்குமாறு உணர்த்திற்று. குரலினலகிலே பாதியும் தாரத்தின் அலகிலே பாதியும் நடுவிற் கோணமான கைக்கிளேத் தானத்தே நிறுத்தப் பாலேதிரியும்.

*இவ்வாறு திரியுமிடத்து,

| | | |
|---|---|---|
| க. | உழை குரலாயது செம்பாலே | எ |
| உ. | கைக்கிளே குரலாயது படுமலேப்பாலே | சு |
| ந. | துத்தங் குரலாயது செவ்வழிப்பாலே | ரு |
| ச. | குரல் குரலாயது அரும்பாலே | ச |
| ரு. | தாரங் குரலாயது கோடிப்பாலே | ந |
| சு. | விளரி குரலாயது விளரிப்பாலே | உ |
| எ. | இளி குரலாயது மேற்செம்பாலே | க |

இவ்வாறு கண்டு கொள்க.

---

29. *இம்முறை குரற்கிரமத்து எதிர்நிர நிறை எனப்படும்.

படுமலே செவ்வழி பகரரும்பாலேயெனக்
குரல் குரலாகத் தற்கிழமை திரிந்தபின். —இளங்கோவடிகள்

கைக்கிளே குரலாய்ப் படுமலேப்பாலேயும், துத்தங்குரலாய்ச் செவ்வழிப்பாலேயும் குரல்குரலாய் அரும்பாலேயும் தற்கிழமை திரிந்தபின்,

முன்பிற்படியே தாரங்குரலாகக் கோடிப்பாலேயும், விளரி குரலாக விளரிப்பாலேயும் இளி குரலாக மேற்செம்பாலேயும் ஆயின.

அரும்பதவுரை

இவ்வேழுபாலேமுறை இளிமுதலாக உழையீருக கீழிருந்து மேனேக்கிச் செல்லும் முறைமை பற்றியதாகும்.

## இனி வலமுறைப்பாலை திரியுமாறு

21. குரலிளியிற் பாகத்தை வாங்கியோ ரொன்று
வரையாது தாரத் துழைக்கும் — வீரைவின்றி
(ஏத்தும்) எத்தும் விளரிக் கிளைக்கீக்க வேந்திழாய்
துத்தங் குரலாகுஞ் சொல்.

என்னுதலிற்றோவெனின்? வலமுறைப்பாலை ஏழினையும் உணர்த்துதல் நுதலிற்று. அவையாவன

க. குரல் குரலாயொத்து நின்றது செம்பாலை.
உ. துத்தங் குரலாயது படுமலைப்பாலை.
ங. கைக்கிளை குரலாயது செவ்வழிப்பாலை.
ச. உழை குரலாயது அரும்பாலை.
ரு. இளி குரலாயது கோடிப்பாலை.
சா. விளரி குரலாயது விளரிப்பாலை.
எ. தாரம் குரலாயது மேற்செம்பாலை.

இவ்வாறுணர்ந்து ஏழு பெரும்பாலையும் பிறப்பித்துக் கண்டுகொள்க. இவ்வேழினையும் முதலெடுத்து நூற்று மூன்று பண்களமைக்கும்.

(முதலடுத்து — வேறுபாடம்) மரு.

---

30. இந்நரம்பிற் பாலை பிறக்குமிடத்துக் குரலும் துத்தமும் இளியும் நான்குமாத்திரைபெறும். கைக்கிளையும் விளரியும் மூன்று மாத்திரைபெறும். உழையும் தாரமும் இரண்டுமாத்திரைபெறும். இவற்றுள் குரல் குரலாய் ஒத்துநின்றது செம்பாலை. இதனிலே குரற்பாகத்தையும் இளியிற் பாகத்தையும் வாங்கிக் கைக்கிளை உழை விளரி தாரத்திற்கு ஓரோவொன்றைக் கொண்டு சேர்க்கத் துத்தங் குரலாய்ப் படுமலைப்பாலையாம். இவ்வாறே திரிக்க இவ்வேழு பெறும் பாலைகளும் பிறக்குங்கால் திரிந்த குரல் முதலாக ஏழும் பிறக்கும். அவைபிறக்குமாறு குரல் குரலாயது செம்பாலை. துத்தங் குரலாயது படுமலைப்பாலை கைக்கிளை குரலாயது செவ்வழிப்பாலை. உழைகுரலாயது அரும்பாலை. இளிகுரலாயது கோடிப்பாலை. விளரி குரலாயது விளரிப்பாலை. தாரங்குரலாயது மேற்செம்பாலையென வலமுறையே ஏழுபாலையும் கண்டுகொள்க.

தாரக்கிரமத்து நிரனிறை. ஆய்ச்சியர் குரவையுரை.

## வட்டப்பாலையிலே நான்கு பெரும் பண்ணும் பிறக்கும் முறை

22. தாரத் துழைதோன்றப் பாலையாழ் தண்குரலில்
கூரத் துழையே குறிஞ்சியாழ் – நேரே
இளிகுரலிற் றோன்ற மருதயாழ் துத்தம்
இளிபிறத்தல் செவ்வழியா ழாம்

என்னுதலிற்றோவெனின்? பெரும்பண்ணான்கும் (யாழ்வழி) பிறக்குமாறு உணர்த்திற்று. நாற்பெரும் பண்ணாவன.

| | | | |
|---|---|---|---|
| க. | பாலையாழ் | ங. | மருதயாழ் |
| உ. | குறிஞ்சியாழ் | ச. | செவ்வழியாழ்* |

எனவிவை பிறக்குமிடத்து இந்நான்கு பெரும் பண்கள் உள்ளும் பாலையாழினுள்ளே ஏழுபாலையும் பிறக்கும்.

| | | | |
|---|---|---|---|
| பாலையாழ் : | அரும்பாலை | க. | கைக்கிளை‡ |
| | கோடிப்பாலை | உ. | உழை |
| | விளரிப்பாலை | ங. | இளி |
| | மேற்செம்பாலை | ச. | விளரி |
| | செம்பாலை | ரு. | தாரம் |
| | படுமலைப்பாலை | சு. | குரல் |
| | †செவ்வழிப்பாலை | எ. | துத்தம் |

எனக் கண்டுகொள்க. ½சு.

---

31. தாரத் துழைதோன்றப் பாலையாழ் தண்குரல்
ஒருமுழை தோன்றக் குறிஞ்சியாழ் – நேரே
இளிகுரலிற் றோன்ற மருதயாழ் – துத்தம்
இளியிற்பிறக் கநெய்த லியாழ்

இவற்றுள் பாலையாழுள்ளே ஏழு பாலையிசை பிறக்கும்.

— அடியார்க்கு நல்லார்

* செவ்வழியாழ் - முல்லையாழ்.

† செவ்வழிப்பாலை – நெய்தலியாழ்.

‡ இம்முறை இளிக்கிரமம் அரங்கேற்று காதையினுள்ளே இறுதியாதியாக என இளங்கோவடிகள் குறிப்பிட்டது இவ்வுண்மையினையே யாம். (யாழ் நூல்)

வலமுறை

குரல் குரலாயொத்த செம்பாலை

23. ஏத்து மிடப மலவனுடன் சிங்கம்
கோற்றனுக் கும்பமொடு மீனமிவை — பார்த்துக்
குரன்முதற் ரூரம் இறுவாய்க் கிடந்த
நிர்லேழுஞ் செம்பாலை நேர்.

என்னுதலிற்ருேவெனின்? முன்சொன்ன இராசிகள் பன்னிரண்டில் இதற்குரியன (செம்பாலை) ஏழும் உணர்த்துதல் நுதலிற்று.

க. இடபம்
உ. கற்கடகம்
ந. சிங்கம்
ச. துலாம்
ரு. தனுசு
சா. கும்பம்
எ. மீனம் எனவிவை.

குரல் முதலாய்த் தாரமீருகக் கிடந்த வென்றதனுல்,

க. குரல்
உ. துத்தம்
ந. கைக்கிளை
ச. உழை
ரு. இளி
சா. விளரி
எ. தாரம்

என்கின்ற ஏழிசையும் முறையானே சொன்ன இராசிகள் ஏழினும் கிடக்க நேர் செம்பாலை பிறக்கும். இவ்வாறு கண்டுகொள்க. மஎ.

| | | | |
|---|---|---|---|
| மீனம்<br>தாரம்<br>உழை | | இடபம்<br>குரல்<br>இளி | மிதுனம் |
| கும்பம்<br>விளரி<br>கைக்கிளை | | | கடகம்<br>துத்தம்<br>விளரி |
| மகரம் | | | சிங்கம்<br>கைக்கிளை<br>தாரம் |
| தனுசு<br>இளி<br>துத்தம் | விருச்சிகம் | துலாம்<br>உழை<br>குரல் | கன்னி |

அவற்றுட் செம்பாலையிற் பிறக்கும் பண்கள் வருமாறு:—

க. பாலையாழ்
உ. நாகராகம்
௩. ஆகிரி (ஆகரி)
௪. தோடி
௫. கௌடி
௬. காந்தாரம்
௭. செந்துருத்தி
௮. உதயகிரி

எனவிவை எட்டும் செம்பாலையிற் பிறக்கும் பண்களென்றவாறு.

---

32. ஏத்து மிடப மலவ னுடன்சீயம்
கோற்றனுக் கும்பமொடு மீனமிவை — பார்த்துக்
குரன்முதற் றார மிறுவாய்க் கிடந்த
நிரலேழுஞ் செம்பாலை நேர்.

இவ்வேழும் இடபம், கற்கடகம், சிங்கம், துலாம், தனு, கும்பம் மீனமென இவற்றுள் நிற்கும்.

உ. படுமலைப் பாலையிற் பிறக்கும் பண்கள் வருமாறு.

க சுகதி
உ பெருந்தொகை (பெருந்தகை)
ங. நாகத்தொனி
ச. சீவணி
ரு. முல்லைசாதாரி
சு. நளுத்தை (இந்தளம்)
எ. மேகாஞ்சி (காஞ்சி)
அ. வியந்தம்
கூ. தனுக்காஞ்சி
ம. குறண்டி (நோதிறம்)
மக. படுமலை
மஉ. படுமலைக்கவ்வாணம்
மங. யாமை
மச. சாளரபாணி
மரு. நாட்டம்
மசு. தாணு
மஎ. வயிரவம்
மஅ. ஆரியவேளர்கொல்லி
மகூ. ஆரியக்குச்சரி
உம. கவுசிகம்
உக. மாளுவகிரி (அருட்புரி)
உஉ. தராவணி

இவை இருபத்திரண்டும் படுமலைப் பாலையிற் பிறக்கும் பண்களென்றவாறு.

---

33. தாரத்துழைதோன்றப் பாலையாழென்றலின் தாரம் எனுமிசையே முதலிசையென்பது போதரும். தாரம், குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி என நிற்பது முதலேழிசையாம் இவற்றுள் ஐந்தாமிசை உழையாதலின், தாரத்துழை தோன்றவென்றூர் தோன்றுமிசை கிளையிசையே.

பாலை குறிஞ்சி மருதஞ் செவ்வழியென
நால்வகை யாழா னாற்பெரும் பண்ணே.

(பிங்கலந்தை)

௩. செவ்வழிப்பாலையிற் பிறக்கும் வண்ணப் பண்கள் வருமாறு.

க. நட்டராகம்
உ. வேடராமக்கிரி (இராமக்கிரி)
௩. நனிடை (சிகண்டி)
௪. கொண்டற்கிரி (கொண்டி)
௫. நாணுப்பஞ்சமம்
௬. பெயர்திறம்
எ. சாவகக்குறிஞ்சி
அ. நேர்திறம் (புறநீர்மை)
௯. புங்காளி (காளி)
௰. சாரல்
௰க. விபஞ்சி
௰உ. சீகாமரம்

இவை பன்னிரண்டும் செவ்வழிப் பாலையிற் பிறக்கும் பண்களென்றவாறு.

௪. அரும்பாலையிற் பிறக்கும் பண்கள் வருமாறு.

க. தக்கராகம்
உ. அந்தாளிபாடை
௩. மருள்
௪. முதிர்ந்தவிந்தளம்
௫. மேகராகக்குறிஞ்சி
௬. கொல்லி

---

**செவ்வழியாழ் — முல்லையாழ், செவ்வழியாழ்ப் பெயர், முல்லையாழும். (திவாகரம்)**

**நெய்தல்யாழ் திறனில்யாழாதலின் அதனைப் பெரும்பண்ணிற் கூறிற்றிலர். 'திறனில் விளரி' நெய்தனிலஞ் சிவனும். (திவாகரம்)**

எ. மன்றல்
அ. பஞ்சுரம்
கூ. பழம்பஞ்சுரம்
௰. வியாழக்குறிஞ்சி
௰க. கொல்லிவராடி
௰உ. பழந்தக்கராகம்
௰ங. வட்டி (துக்கராகம்)
௰ச. காந்தாரபஞ்சமம்
௰ரு. நட்டபாடை (நைவளம்)
௰சா. சோமராகம்
௰எ. சித்திரவேளர்கொல்லி (சாதாளி)
௰அ. குறிஞ்சி
௰கூ. மலகரி
உ௰. அந்தாளிக்குறிஞ்சி
உக. கேதாளிக்குறிஞ்சி
உஉ. மல்லாரி
உங. அத்தராட்டம்
உச. சாழங்கநாட்டை (தேசாக்கிரி)
உரு. சுத்தகாந்தாரம் (சுருதிகாந்தாரம்)
உசா. மேகராகம்

எனவிவை இருபத்தாறும் அரும்பாலையிற் பிறக்கும் பண்கள் என்றவாறு.

---

34. தாரமுதலாய ஏழிசை, ஏழுபாலையுள் முதற்பாலையான மேற்செம்பாலையாகும். இப்பாலையுள் உழை முதலாய ஏழிசை அரும்பாலை எனப்படும். இப்பாலை, பாலையாழ் என்றதொரு கருவிக்குரியதாகலின் கருவிப்பெயர் கொண்டே அரும்பாலை, பாலையாழ் எனப்பெறுவதாயிற்று.

"தாரங்குரலாயது மேற்செம்பாலையென
வலமுறையே ஏழு பாலையினையும் கண்டுகொள்க."

(அடியார்க்கு நல்லார்)

௫. கோடிப்பாலையிற் பிறக்கும் பண்கள் வருமாறு.

க. மருதள்ளு
உ. சாயை (அரளி)
ங. சாங்கிமம்
ச. மார்துங்கராகம்
௫. தக்கேசி
௬. அருத்திரபஞ்சமம்
எ. தத்தளம்
அ. தனுசி
௯. பாக்கழி
௰. கூர்ந்தபஞ்சமம் (பஞ்சமம்)
௰க. வேளர்கொல்லி (தமிழ்வேளர்கொல்லி)
௰உ. தமிழ்க்குச்சரி

எனவிவை பன்னிரண்டும் கோடிப் பாலையிற் பிறக்கும் பண்களென்றவாறு.

௬. விளரிப்பாலையிற் பிறக்கும் பண்கள் வருமாறு.

க. இனுநிறம்
உ. சானுகி (சாயரி)
ங. தமிழ்வராடி (வராடி)
ச. பெரிய வராடி
௫. சோக வராடி

இவை ஐந்தும் விளரிப்பாலையிற் பிறக்கும் பண்கள் என்றவாறு.

---

35. "பரவுசெம்பா லையிற்பிறக்கும் பண்ணே ரெட்டும்
படுமலைப்பா லையிலிருபத் திரண்டு பண்ணும்
வரவுறுசெவ் வழிப்பாலை வயங்கீ ராறே
வருமரும்பா லையிலிருபத் தாறு பண்ணும்
விரவுகோடிப் பாலையிற்பன் னிரண்டா மென்றும்
விளரிப்பாலைப் பண்ணைஞ்சு மேற்செம் பாலை
தரவிலகு பதினெட்டு மாகப் பேரியாழ்
தலைவல்லோர் நூற்றுமூன்று பண்ணெனச் சாற்றினரே"
(அரனரங்கத்தொகை)

எ. மேற்செம்பாலையிற் பிறக்கும் பண்கள் வருமாறு

க. தாரப்பண் (காந்தாரம்)
உ. நாகயாந்தி (நாகம்)
ங. திவ்வியவராடி
ச. சூர்துங்கராகம்
ரு. முதிர்ந்த குறிஞ்சி
சா சாந்தி
எ. அழுங்கு
அ. தேசி
கூ. அந்தி
ய. வருணம் (தக்கணாதி)
யக. ஆநந்தை
யஉ. மவுளி
யங. செருந்தி
யச. பாடை
யரு. நள்ளி
யசா. கூடதாளி
யஎ. மாங்கள்ளி
யஅ. பையுள்காஞ்சி

எனவிவை பதினெட்டும் மேற்செம்பாலையிற் பிறக்கும் பண்கள் என்றவாறு.

இவ்வாறும் முறையே நூற்று மூன்று பண்ணும் கண்டுகொள்க. கசா.

24
(22.) பண்ணோர் பதினே ழாம் பண்ணியல் பத்தேழாம்
எண்ணுந் திறமிரண்டும் பத்தென்ப — நண்ணிய
நாலாந் திறத்திறமோர் நான்கு முளப்படப்
பாலாய பண்ணூற்று மூன்று.

என்னுதலிற்றோவெனின் ? முன் சொன்ன பண்கள் நூற்று மூன்றும் நாலு வகைப்படுவது நுதலிற்று.

அவை,

க. பண்
உ. பண்ணியற்றிறம்
ங. திறம்
ச. திறத்திறம், எனவிவை

என்றிவை, வடமொழிப் பெயரால்,

க. சம்பூரணம்
உ. சாடவம் (சாட்பளம்)
ங. ஔடுவம் (அடுவிகம்)
ச. சதுர்த்தம் (சவாத்தம்)

எனவும் வழங்கும். இவற்றுள் ஏழு நரம்பினும முதலெடுத்துச் சம்பூரணமாகிய பண்கள் பதினேழாம்.

அவையாவன,

க. பாலையாழ்
உ. தேசாளி
ங. நிருபதுங்கராகம்
ச. கொடிநாகராகம்
ரு. குறிஞ்சியாழ்
சா. செந்து
எ. மண்டலியாழ்
அ. மவுரி
கூ. மருதயாழ்
ம. யாசரி (ஆகரி) ஆசாரி
மக சாயவேளர்கொல்லி
மஉ. கின்னராகம் (கின்னரம்)
மங. செவ்வழியாழ்
மச. மவுராழி
மரு. சீராகமரம்
மசா. சந்தி
மஎ. தாரப்பணம்

எனவிவை, பண்ணோர் பதினேழெனக் கண்டுகொள்க.

ஆறு நரம்பின் முதலெடுத்துச் சாடவமான (சாடபமான) பண்ணியற்றிறம் எழுபதும் வருமாறு.

க. தக்கராகம்
உ. அந்தாளிபாடை
ங. அந்தி
ச. மன்றல்
ரு நோதிறம் (குறண்டி)
சு. வராடி (தமிழ் வராடி)
எ. பெரியவராடி
அ. சாயரி (சாஞகி)
கூ. காந்தாரபஞ்சமம்
ய. அத்தராட்டம் (திராடம்)
யக அழுங்கு
யஉ. கொல்லி
யங. தாணு
யச. காஞ்சி (மேகாஞ்சி)
யரு. சிகண்டி (நனிடை)
யசு. சாழங்கநாட்டை (தேசாக்கிரி)
யஎ. சுருதிகாந்தாரம்
யஅ. சோகவராடி
யகூ. நட்டபாடை (நைவளம்)
உய. அந்தாளி (அந்தாளிக்குறிஞ்சி)
உக. மலகரி
உஉ. விபஞ்சி
உங. செருந்தி
உச. கௌடி
உரு. உதயகிரி
உசு. பஞ்சுரம் (பழம்பஞ்சுரம்)
உஎ. மேகராகக்குறிஞ்சி
உஅ. கேதாளிக்குறிஞ்சி
உகூ. கவ்வாணம் (படுமலைக்கவ்வாணம்)
நய. சாயை (அரசி)
நக. மருள்

௩௨ பழந்தக்கராகம்
௩௩ தீபவராடி (திவ்வியவராடி)
௩௪ முதிர்ந்தவிந்தளம்
௩௫ அநுத்திரபஞ்சமம் (அயிர்ப்பு)
௩௬. தமிழ்க்குச்சரி (குச்சரி)
௩௭. மாளுவகிரி (அருட்புரி)
௩௮. தராவணி (நாராயணி) (காரவணி)
௩௯ முதிர்ந்த குறிஞ்சி (குறிஞ்சி)
௪0 நட்டராகம்
௪௧. வேடராமக்கிரி (இராமக்கிரி)
௪௨. வியாழக்குறிஞ்சி
௪௩ தக்கணாதி (வருணம்)
௪௪ சாவகக் குறிஞ்சி
௪௫ ஆநந்தை (அரந்தை)
௪௬. தக்கேசி
௪௭ பையுள் காஞ்சி
௪௮ ஆரியக்குச்சரி
௪௯ நாகதொனி
௫0. வேளர்கொல்லி(தமிழ்வேளர்கொல்லி)
௫௧ பஞ்சமம் (கூர்ந்த பஞ்சமம்)
௫௨. பாக்கழி
௫௩. தத்தளம் (தத்தள பஞ்சமம்)
௫௪. பின்னபஞ்சமம் (நாணுப்பஞ்சமம்)
௫௫ மாதுங்கராகம்
௫௬ கவுசிகம் (செய்திறம்)
௫௭. சீகாமரம் (காமரம்)
௫௮ சாரல்
௫௯ சதாங்கியம் (சாங்கிமம்)
௬0 ஆரியவேளர்கொல்லி
௬௧ தணுக்காஞ்சி
௬௨. முல்லை, சாதாரி
௬௩. வியந்தம்
௬௪. பெயர்திறம் (பியந்தை)
௬௫. நாட்டம்

சாசா புங்காளி (காளி) (தாளி)
சாஎ கொண்டற்கிரி (கொண்டி) (குந்தளம்)
சாஅ சீவணி
சாசா யாமை
எய. சாளரபாணி

எனவிவை எழுபதும் கண்டுகொள்க.

ஐந்து நரம்பின் முதலெடுத்து ஔடுவமான (அடுவிகமான) திறம் பன்னிரண்டும் வருமாறு.

க. காந்தாரம் (தாரப்பண்டிறம்)
உ. ஒலிப்பஞ்சமம் (செந்துருத்தி) (செந்திறம்)
ங. நளுத்தை (இந்தளம்)
ச. சித்திரவேளர்கொல்லி (சாதாளி)
ரு. தஞசி
சா. புறநீர்மை (நேர்திறம்)
எ. பாடை
அ. வயிரவம்
கூ. நாகயாந்தி (நாகம்)
ய. சூர்தூங்கராகம்
யக. மல்லாரி (நாட்டை)
யஉ. படுமலை

எனவிவை பன்னிரண்டும் கண்டுகொள்க.

இனி, நாலு நரம்பை முதலெடுத்துச் சதுர்த்தமாகிய (சவாத்தம்) திறத்திறம் நான்கும் வருமாறு.

க துக்கராகம் (வட்டி)
உ கொல்லிவராடி
ங சோமராகம் (குறுங்கலி)
ச மேகராகம்

எனவிவை நாலும் கண்டுகொள்க.

எனவிவ்வாறும் நூற்று மூன்று பண்ணினைக் கண்டு கொள்க என்றவாறு

இனி இவற்றுள் அகம், புறம், அருகு, பெருகு என வகைக்கூறுபாடு வருமாறுங் காண்க.

முன்சொன்ன பண்ணை,

க. பாலையாழ்
உ. குறிஞ்சியாழ்
ங. மருதயாழ்
ச செவ்வழியாழ் (முல்லையாழ்)
ரு. தாரப்பணம் என்னும் இவற்றுள்,

பாலை
பாலைக்குப் புறம் தேவாழி (தேவாளி) (தேவதாளி)
அருகு சீர்கோடிகம் (கோடிகம்) (திருபதுங்கராகம்)
பெருகு நாகராகம் (நாகாரம்) (கொடிநாகரர்கம்)

குறிஞ்சி,
குறிஞ்சிக்குப் புறம் செந்து
அருகு மண்டலம் (மண்டலியாழ்)
பெருகு மவுரி (அரி)

மருதம்,
மருதத்திற்குப் புறம் யாசரி (ஆகரி) (ஆசாரி)
அருகு சாயவேளர் கொல்லி
பெருகு கின்னராகம் (கின்னரம்)

செவ்வழி,
செவ்வழிக்குப்புறம், மவுராழி (வேளாவளி) (மௌசாளி)
அருகு சீராகமரம் (சீராகம்)
பெருகு சந்தி,

என இவற்றோடு முன்சொன்னதாரப்பணமுங் கொள்ள பண்ணோர் பதினேழாம் எனத்தெரிந்து கண்டு கொள்க.

**36. நாற்பெரும்பண்ணும் சாதிமுன் னன்கும்
பாற்படு தாரமும் பண்ணெனப் படுமே.**

| அகம் | புறம் | அருகு | பெருகு |
|---|---|---|---|
| க பாலை | உ தேவதாளி தேவாளி | ங சீர்கோடிகம் நிருபதுங்கராகம் | ச கொடி நாகராகம் |
| ரு குறிஞ்சி | சா செந்து | எ மண்டலம் மண்டலியாழ் | அ மவுரி பவுரி அரி |
| கூ மருதம் | ௰ ஆசாரி ஆகரி யாசரி | ௰க சாயவேளர்கொல்லி | ௰உ கின்னராகம் கின்னரம் |
| ௰ங செவ்வழி முல்லை | ௰ச வேளாவளி மௌசாளி | ௰ரு சீராகமரம் சீராகம் | ௰சா சந்தி |
| தாரம், தாரப்பணம் ௰எ | | | |

**பாலையாழ்த்திறம் வருமாறு :—**

" அராகம் நேர்திறம் உறழ்ப்புக் குறுங்கலி
யாசா னைந்தும் பாலையாழ்த் திறனே "

(உறுப்பு - வேறுபாடப்)

| | | | |
|---|---|---|---|
| க. | அராகத்திற்கு | அகம் | தக்கராகம் |
| | ,, | புறம் | அந்தாளிபாடை |
| | ,, | அருகு | அந்தி |
| | ,, | பெருகு | மன்றல் |
| உ. | நேர்திறத்திற்கு | அகம் | நேர்திறம் (புறநீர்மை) |
| | ,, | புறம் | தமிழ்வராடி (வராடி) |
| | ,, | அருகு | பெரியவராடி |
| | ,, | பெருகு | சாயரி |
| ௩. | உறுப்பினுக்கு | அகம் | காந்தார பஞ்சமம் |
| | ,, | புறம் | அத்தராட்டம் (திராடம்) |
| | ,, | அருகு | அயூங்கு |
| | ,, | பெருகு | தஞசி |
| ச. | குறுங்கலிக்கு | அகம் | சோமராகம் |
| | ,, | புறம் | மேகராகம் |
| | ,, | அருகு | துக்கராகம் |
| | ,, | பெருகு | கொல்லி |
| ரு. | ஆசானுக்கு | அகம் | காந்தாரம் (தாரப்பண்டிறம்) |
| | ,, | புறம் | சிகண்டி |
| | ,, | அருகு | தசாக்கிரி (தேசாக்கிரி) |
| | ,, | பெருகு | சுத்தகாந்தாரம் (சுருதி காந்தாரம்) |

எனவிவை இருபதும் பாலைக்குத் திறம்.

குறிஞ்சியாழ்த்திறம் வருமாறு :—

" நைவளங் காந்தாரம் படுமலை மருளொடு
அயிர்ப்பு பஞ்சுர மராற்றுச் செந்திறம்
இவ்வகை யெட்டுங் குறிஞ்சியாழ்த் திறனே "

(ஆற்றுச்செந்திறம்) (மெய்ப்படுமலையாழ்)

| | | | |
|---|---|---|---|
| க. | நைவளத்திற்கு | அகம் | நட்டபாடை |
| | ,, | புறம் | அந்தாழி (அந்தாளி) |
| | ,, | அருகு | மலகரி |
| | ,, | பெருகு | விபஞ்சி |
| உ. | காந்தாரத்திற்கு | அகம் | விபஞ்சிகாந்தாரம் |
| | ,, | புறம் | செருந்தி (செந்தி) |
| | ,, | அருகு | கௌடி |
| | ,, | பெருகு | உதயகிரி |
| ங. | பஞ்சுரத்திற்கு | அகம் | பஞ்சுரம் |
| | ,, | புறம் | பழம்பஞ்சுரம் |
| | ,, | அருகு | மேகராகக் குறிஞ்சி |
| | ,, | பெருகு | கூதளி (கூதாளி) கேதாளிக்குறிஞ்சி (கேதாளி) |
| ச. | படுமலைக்கு | அகம் | படுமலைக்கவ்வாணம் |
| | ,, | புறம் | பாடை |
| | ,, | அருகு | சூர்துங்கராகம் |
| | ,, | பெருகு | நாகம் (நாகயாந்தி) |
| ரு. | மருளுக்கு | அகம் | மருள் |
| | ,, | புறம் | பழந்தக்கராகம் |
| | ,, | அருகு | தீபவராடி (திவ்விய வராடி) |
| | ,, | பெருகு | முதிர்ந்தவிந்தளம் |

| | | | |
|---|---|---|---|
| சு. | அயிர்ப்புக்கு | அகம் | அநுத்திரபஞ்சமம் |
| | ,, | புறம் | குச்சரி (தமிழ்க்குச்சரி) |
| | ,, | அருகு | மாளுவகிரி (அருட்புரி) |
| | ,, | பெருகு | காரவணி (நாராயணி) (தராவணி) |

| | | | |
|---|---|---|---|
| எ. | அரற்றிற்கு | அகம் | முதிர்ந்த குறிஞ்சி |
| | ,, | புறம் | நட்டராகம் |
| | ,, | அருகு | இராமக்கிரி |
| | ,, | பெருகு | வியாழக்குறிஞ்சி |

| | | | |
|---|---|---|---|
| அ. | செந்திறத்திற்கு | அகம் | ஒலிப்பஞ்சமம் (செந்துருத்தி) |
| | ,, | புறம் | தக்கணாதி |
| | ,, | அருகு | சாவகன்குறிஞ்சி (சாவகக்குறிஞ்சி) |
| | ,, | பெருகு | அரந்தை(ஆநந்தை) |

எனவிவை முப்பத்திரண்டும் குறிஞ்சிக்குத்திறம்

**மருதயாழ்த்திறம் வருமாறு :—**

“ நவிர்வடுகு வஞ்சி செய்திற நான்கும்
மருத யாழ்க்கு வருந்திற னாகும் ”

| | | | |
|---|---|---|---|
| க. | நவிருக்கு | அகம் | தக்கேசி |
| | ,, | புறம் | கொல்லி வராடி |
| | ,, | அருகு | ஆரியக்குச்சரி |
| | ,, | பெருகு | நாகதொனி |

| | | | |
|---|---|---|---|
| உ. | வடுகிற்கு | அகம் | இந்தளம் (வடுகு) (நளுத்தை) |
| | ,, | புறம் | சித்திரவேளர்கொல்லி (சாதாளி) |
| | ,, | அருகு | தமிழ்வேளர்கொல்லி |
| | ,, | பெருகு | பஞ்சமம் (கூர்ந்த பஞ்சமம்) |

| | | | |
|---|---|---|---|
| ௩. | வஞ்சிக்கு | அகம் | பாக்கழி |
| | ,, | புறம் | அக்காளம் (தத்தள பஞ்சமம்) |
| | ,, | அருகு | பின்னபஞ்சமம் |
| | ,, | பெருகு | மாதுங்கராகம் |
| ௪. | செய்திறத்திற்கு | அகம் | கௌசிகம் |
| | ,, | புறம் | சீகாமரம் |
| | ,, | அருகு | சாரல் |
| | ,, | பெருகு | சாதாக்கியம் (சதாங்கியம்) சாங்கிமம் |

எனவிவை பதினாறும் மருதத்திற்குத்திறம்.

செவ்வழியாழ்த்திறம் வருமாறு :—

"நோதிறம் பெயர்திறம் யாமை முல்லையென (சாதாரி)
நாலும் செவ்வழி நல்யாழ்த் திறனே"
(முல்லையாழ்த்திறனே)

| | | | |
|---|---|---|---|
| க. | நோதிறத்திற்கு | அகம் | குறண்டி |
| | ,, | புறம் | ஆரியவேளர் கொல்லி |
| | ,, | அருகு | தனுக்காஞ்சி (தனு) |
| | ,, | பெருகு | வியந்தம் |
| உ. | பெயர்திறத்திற்கு | அகம் | பியந்தை (யாழ்பதம்) |
| | ,, | புறம் | புங்காளி (காளி) (தாளி) |
| | ,, | அருகு | கொண்டற்கிரி (கொண்டைக்கிரி) |
| | ,, | பெருகு | சீவணி (சீவனி) |
| ௩. | யாமைக்கு | அகம் | யாமை |
| | ,, | புறம் | சாளரபாணி |
| | ,, | அருகு | நாட்டம் |
| | ,, | பெருகு | தாணு |

| | | | |
|---|---|---|---|
| ச. | முல்லைக்கு | அகம் | முல்லை |
| | ,, | புறம் | முல்லைசாதாரி |
| | ,, | அருகு | வயிரவம் (பைரவம்) |
| | ,, | பெருகு | மேகாஞ்சி (காஞ்சி) |

எனவிவை பதினாறும் செவ்வழிக்குத்திறம்.

என இவை அகமும் புறமும் அருகும் பெருகும் என்னும் நான்கு பகுதிப்பட்ட பண்கள் நூற்றொன்று ஆயின. பையுள்காஞ்சி படுமலை இரண்டும் சேர பண்கள் நூற்று மூன்றாதல் கண்டு கொள்க. ம்எ:

நரம்புக் கருவி முற்றும்
குரு வாழ்க
சிவாசலபதி சகாயர்.

---

| | | |
|---|---|---|
| 36. | பெருபண்கள் | 16 |
| | தாரப்பணம் | 1 |
| | பாலைத்திறம் | 20 |
| | குறிஞ்சித்திறம் | 32 |
| | மருதத்திறம் | 16 |
| | (செவ்வழி) முல்லைத்திறம்) | 16 |
| | பையுள்காஞ்சி | 1 |
| | படுமலை | 1 |
| | ஆக பண்கள் | 103 |

குறிப்புரை 37

பாலையாழ்த்திறம் இருபது

| அகம் | புறம் | அருகு | பெருகு |
|---|---|---|---|
| அராகம், தக்கராகம் | அந்தாளிபாடை | அந்தி | மன்றல் |
| நேர்திறம், புறநீர்மை | வராடி | பெரியவராடி | சாயரி |
| உறுப்பு, காந்தாரபஞ்சமம் | திராடம் | அழுங்கு | தஞ்சி |
| குறுங்கலி, சோமராகம் | மேகராகம் | துக்கராகம் | கொல்லி |
| ஆசான், காந்தாரம் | சிகண்டி | தசாக்கிரி | சுத்தகாந்தாரம் |

குறிஞ்சியாழ்த்திறம் முப்பத்திரண்டு

| அகம் | புறம் | அருகு | பெருகு |
|---|---|---|---|
| நைவளம்,<br>நட்டபாடை | அந்தாளி | மலகரி | விபஞ்சி |
| காந்தாரம்,<br>விபஞ்சிகாந்தாரம் | செருந்தி | கௌடி | உதயகிரி |
| பஞ்சுரம் | பழம்பஞ்சுரம் | மேகராகக்குறிஞ்சி | கேதாளிக்குறிஞ்சி |
| படுமலை,<br>படுமலைக்கவ்வாணம் | பாடை | சூர்துங்கராகம் | நாகம் |
| மருள் | பழந்தக்கராகம் | திவ்வியவராடி | முதிர்ந்தவிந்தளம் |
| அயிர்ப்பு,<br>அநுத்திரபஞ்சமம் | தமிழ்க்குச்சரி | மாளுவகிரி | காரவணி |
| அரற்று,<br>முதிர்ந்தகுறிஞ்சி | நட்டராகம் | இராமக்கிரி | வியாழக்குறிஞ்சி |
| செந்திறம்,<br>செந்துருத்தி | தக்கணாதி | சாவகக்குறிஞ்சி | ஆநந்தை |

மருதயாழ்த்திறம் பதினாறு

| அகம் | புறம் | அருகு | பெருகு |
|---|---|---|---|
| நவிர்,<br>தக்கேசி | கொல்லிவராடி | ஆரியக்குச்சரி | நாகதொனி |
| வடுகு,<br>இந்தளம் | சாதாளி<br>சித்திரவேளர்கொல்லி | தமிழ்வேளர்கொல்லி | பஞ்சமம்<br>கூடாந்தபஞ்சமம் |
| வஞ்சி,<br>பாக்கழி | தத்தளபஞ்சமம் | பின்னபஞ்சமம் | மாதுங்கராகம் |
| செய்திறம்,<br>கௌசிகம் | சீகாமரம் | சாரல் | சாங்கிமம் |

முல்லையாழ்த்திறம் பதினறு

| அகம் | புறம் | அருகு | பெருகு |
|---|---|---|---|
| நோதிறம், குறண்டி | ஆரியவேளர்கொல்லி | தனுக்காஞ்சி | வியந்தம் |
| பெயர்திறம், பியந்தை | தாளி (புங்காளி) | கொண்டற்கிரி | சீவனி |
| யாமை | சாளரபாணி | நாட்டம் | தாணு |
| முல்லை | முல்லைச்சாதாரி | வயிரவம் | மேகாஞ்சி |

38. இந்நூலின் உரைகாரர், ஏழு பாலைகளின் வழி பிறக்கும் பண்களையும், அவ்வவற்றின் அகம், புறம், அருகு, பெருகு வகைகளிலும் நூற்று மூன்று பண்களையே பல்வேறு பரியாயப் பெயர்களோடு ஆங்காங்கு கூறிப் போந்துளதால் நூற்று மூன்று பண்களின் பெயர் முறைகளையும், அவ்வவற்றின் பரியாயப் பெயர் முறைகளையும், அதாவது ஒரு பண்ணிற்கே அமைந்த வெவ்வேறு பெயர் வகைகளையும், பண் பண்ணியற்றிறம் திறம் திறத்திறம் எனும் கூறுபாட்டினையும் இக்குறிப்புரை அட்டவணையில் நன்கு கண்டு அறிந்து தெறிந்துணர்ந்து கொள்க. செம்பாலை முதலாகவே அறிந்துகொள்க.

| எண்கள் | பண்களின் பெயர் | பரியாயப் பெயர் வகைகள் | இசைகள் |
|---|---|---|---|
| க. | செம்பாலை | குறிஞ்சியாழ். யாழ்க்குறிஞ்சி. யாமயாழ். குறிஞ்சி. | ஏழிசைகள் |
| உ. | படுமலைப்பாலை | செவ்வழியாழ், முல்லையாழ், சுகதி. சுகதீ. | ,, |
| | | செவ்வழியாழினை ஒரு சாரர் செவ்வழிப்பாலை எனவும் கூறுவது வழக்குபோலும், செவ்வழி யாழ், முல்லையாழ், எனப்படுவது, படுமலைப் பாலையேயாம். இம்முறையே தாரமுறை எனப் படும். செவ்வழிப்பாலை என்பது பண்கண்டு திறனெய்தாப்பண் எனப்படும். | ,, |
| ௩. | செவ்வழிப்பாலை | விளரியாழ். நெய்தல் யாழ், திறனில்யாழ்' | ,, |

| எண்கள் | பண்களின் பெயர் | பரியாயப் பெயர் வகைகள் | இசைகள் |
|---|---|---|---|
| ௩. | அரும்பாலை | பாலையாழ். | ஏழிசைகள் |
| ௪. | கோடிப்பாலை | மருதயாழ், கொடிப்பாலை, மருதள்ளு. | ,, |
| ௫. | விளரிப்பாலை | திருபதுங்கராகம், சீர்கோடிகம், கோடிகம், கோடி, தோடி, | ,, |
| ௬. | மேற்செம்பாலை | தாரப்பணம், தாரப்பண், ஆசான், தாரம். | ,, |
| ௭. | தேசாளி | தேசாழி, தேவாழி, தேவாளி, தேவதாளி, தேசி. | ,, |
| ௮. | நாகராகம் | கொடி நாகராகம். | ,, |
| ௯. | செந்து | பெருந்தொகை, பெருந்தகை. | ,, |
| ௰. | மண்டலியாழ் | மண்டலயாழ், மண்டலம், இளுநிறம், மண்டலி. | ,, |
| ௰௧. | மவுரி | பவுரி, அரி, அரியநாட்டம், மாங்கள்ளி, யாழரி. | ,, |

| | | | |
|---|---|---|---|
| ௰௨. | யாசரி | ஆகரி, ஆகிரி, யாசாரி, ஆசாரி. | ஏழிசைகள் |
| ௰௩. | சாயவேளர்கொல்லி | பெரியநாட்டம். | ,, |
| ௰௪. | கின்னரராகம் | கின்னரம். | ,, |
| ௰௫. | மவுராழி | மவுராளி, மௌசாளி, மவுளி, வேளாவளி. | ,, |
| ௰௬. | சீராகமரம் | சீராகம், நள்ளி | ,, |
| ௰௭. | சந்தி | சாந்தி, சிந்தி. | ,, |
| | | இதுவரை பண்ணோர் பதினேழு | |

| எண்கள் | பண்களின் பெயர் | பரியாயப் பெயர் வகைகள் | இசைகள் |
|---|---|---|---|
| | | பண்ணியற்றிறங்கள் வருமாறு | |
| க. | தக்கராகம் | அராகம் | ஆறிசைகள் |
| உ. | அந்தாளிபாடை | அந்தாழிபாடை | ,, |
| ங. | அந்தி | ஆந்தி | ,, |
| ச. | மன்றல் | மன்றில் | ,, |

| எண்கள் | பண்களின் பெயர் | பரியாயப் பெயர் வகைகள் | இசைகள் |
| --- | --- | --- | --- |
| ரு. | நோதிறம் | குறண்டி (தேவகிரி) | ஆறிசைகள் |
| சா. | தமிழ்வராடி | வராடி (வசந்தன்கொல்லி) | ,, |
| எ. | பெரியவராடி | | ,, |
| அ. | சாயரி | சாஞகி | ,, |
| கூ. | காந்தாரபஞ்சமம் | உறுப்பு உறழ்ப்பு உறுப்புப்பஞ்சமம் உறழ்ப்புக் காந்தார பஞ்சமம் | ,, |
| ய. | அந்தராட்டம் | திராடம் | ,, |
| யக. | அழுங்கு | | ,, |
| யஉ. | குறிஞ்சி | நவிர்கொல்லி | ,, |
| யங. | தாஞ | | ,, |

| | | | |
|---|---|---|---|
| ௰௪. | காஞ்சி | மேகாஞ்சி | ஆறிசைகள் |
| ௰௫. | சிகண்டி | நனிடை | ,, |
| ௰௬. | சாழங்கநாட்டை | தேசாக்கிரி, தேசக்கிரி, சாரங்கநாட்டை. | ,, |
| ௰௭. | சுத்தகாந்தாரம் | சுருதிகாந்தாரம் | ,, |
| ௰௮. | சோகவராடி | . | ,, |
| ௰௯. | நட்டபாடை | நைவளம் | ,, |
| ௨௰ | அந்தாளி | அந்தாளிர், அந்தாளிக்குறிஞ்சி, அந்தாழி | ,, |
| ௨௧. | மலகரி | மல்லகரி | ,, |
| ௨௨. | விபஞ்சி | | ,, |
| ௨௩. | செருந்தி | செருத்தி செந்தி | ,, |
| ௨௪. | கௌடி | கவுடி கவுரி (தேசிகம்) | ,, |
| ௨௫. | உதயகிரி | உதையகிரி | ,, |

| எண்கள் | பண்களின் பெயர் | பரியாயப் பெயர் வகைகள் | இசைகள் |
|---|---|---|---|
| ௨௬. | பஞ்சுரம்<br>பழம்பஞ்சுரம் | பஞ்சுரம் பழம் பஞ்சுரமாகும்மே | ஆறிசைகள்<br>,, |
| ௨௭. | மேகராகக்குறிஞ்சி | | ,, |
| ௨௮ | கேதாளிக்குறிஞ்சி | கேதாளி, கூதாளி, கூதளி | ,, |
| ௨௯ | கவ்வாணம் | கௌவாணம், படுமலைக்கவ்வாணம் | ,, |
| ௩௰. | சாயை | அரளி, அலரி | ,, |
| ௩௧. | மருள் | | ,, |
| ௩௨. | பழந்தக்கராகம் | | ,, |
| ௩௩. | தீபவராடி | திவ்வியவராடி | ,, |
| ௩௪. | முதிர்ந்த விந்தளம் | | ,, |

| | | | |
|---|---|---|---|
| ௩௫ | அநுத்திர பஞ்சமம் | அயிர்ப்பு (உருத்திர பஞ்சமம்) | ஆறிசைகள் |
| ௩௬. | தமிழ்க்குச்சரி | குச்சரி | ,, |
| ௩௭. | மாளுவகிரி | அருட்புரி | ,, |
| ௩௮. | தராவணி | காரவணி, நாராயணி, தாராவணி | ,, |
| ௩௯. | முதிர்ந்த குறிஞ்சி | அரற்றுக் குறிஞ்சி, குறிஞ்சி | ,, |
| ௪௰ | நட்டராகம் | | |
| ௪௧. | வேடராமக்கிரி | இராமக்கிரி | ,, |
| ௪௨. | வியாழக்குறிஞ்சி | | |
| ௪௩. | வருணம் | தக்கணாதி, தக்கணாத்தி, தக்கணம் | ,, |
| ௪௪. | சாவகக்குறிஞ்சி | சாவகன், சாவகன்குறிஞ்சி | ,, |
| ௪௫ | அரந்தை | ஆநந்தை | ,, |
| ௪௬. | தக்கேசி | நவிர் | ,, |

| எண்கள் | பண்களின் பெயர் | பரியாயப் பெயர் வகைகள் | இசைகள் |
|---|---|---|---|
| சஎ. | கொல்லி | கொல்லிக்குறிஞ்சி | ஆறிசைகள் |
| சஅ. | ஆரியக்குச்சரி | | ,, |
| சகூ. | நாகதொனி | | ,, |
| ரும. | வேளர்கொல்லி | தமிழ்வேளர் கொல்லி, கொல்லிகாந்தாரம் | ,, |
| ருக. | பஞ்சமம் | கூர்ந்த பஞ்சமம் | ,, |
| ருஉ. | அக்காழம் | அக்காளம், தத்தளம், தத்தள பஞ்சமம் | ,, |
| ருங. | பாக்கழி | வஞ்சி. வஞ்சிப்பாக்கழி | ,, |
| ருச. | நாணுப்பஞ்சமம் | பின்ன பஞ்சமம் | ,, |
| ருரு | மாதுங்கராகம் | | |
| ருசா. | கவுசிகம் | கௌசிகம், செய்திறம் | ,, |

| | | | |
|---|---|---|---|
| ருஎ. | சீகாமரம் | காமரம் | ஆறிசைகள் |
| ருஅ. | சாரல் | | ,, |
| ருகூ. | சதாங்கியம் | சாதங்கியம், சாதாக்கியம், சாங்கிமம் | ,, |
| சூ௰. | ஆரியவேளர்கொல்லி | | ,, |
| சூக. | தனுக்காஞ்சி | தணுக்காஞ்சி, தன்னி | ,, |
| சூஉ | முல்லை, சாதாரி | முல்லைச்சாதாரி | ,, |
| சூங. | வியந்தம் | | ,, |
| சூச. | பெயர்திறம் | பியந்தை, பெயர்திறப்பியந்தை, யாழ்பதம் | ,, |
| சூரு. | நாட்டம் | | ,, |
| சூசூ. | புங்காளி | காளி, தாளி | ,, |
| சூஎ. | கொண்டற்கிரி | கொண்டைக்கிரி, கொண்டி (குந்தளம்) | ,, |
| சூஅ. | சீவனி | சீவணி | ,, |

| எண்கள் | பண்களின் பெயர் | பரியாயப் பெயர் வகைகள் | இசைகள் |
|---|---|---|---|
| சுசு. | யாமை | | ஆறிசைகள் |
| எம. | சாளரபாணி | | ,, |
| | | இதுவரை பண்ணியல் பத்தேழு, அதாவது எழுபது | |

| எண்கள் | பண்களின் பெயர் | பரியாயப் பெயர் வகைகள் | இசைகள் |
|---|---|---|---|
| | | திறப்பண்கள் வருமாறு | |
| க. | காந்தாரம் | தாரப்பண்டிறம், தாரம், தாரப்பண், ஆசான்திறம் | ஐந்திசைகள் |
| உ. | ஒலிப்பஞ்சமம் | செந்துருத்தி, செந்திறம், மத்தியமாரி | ,, |
| ங. | நளுத்தை | இந்தளம் வடுகு | ,, |
| ச | சித்திரவேளர்கொல்லி | சாதாளி | ,, |

| | | | |
|---|---|---|---|
| ரு. | தனுசி | | ஐந்திசைகள் |
| சா. | புறநீர்மை | நேர்திறம் | ,, |
| எ. | பாடை | | ,, |
| அ. | வயிரவம் | பயிரவம், பைரவம் | ,, |
| கூ, | நாகயாந்தி | நாகம் | ,, |
| ω. | சூர்துங்கராகம் | | ,, |
| ωக. | மல்லாரி | நாட்டை | ,, |
| ωஉ. | படுமலே | | |
| | | இதுவரை எண்ணும் திறம் இரண்டும் பத்தும் அதாவது பன்னிரண்டு. | |

| எண்கள் | பண்களின் பெயர் | பரியாயப் பெயர் வகைகள் | இசைகள் |
|---|---|---|---|
| | | திறத்திறப்பண்கள் வருமாறு | |
| க. | துக்கராகம் | வட்டி | நான்கிசைகள் |
| உ. | கொல்லிவராடி | | ,, |
| ங. | சோமராகம் | குறுங்கலி | ,, |
| ச. | மேகராகம் | | ,, |
| | | இதுவரை திறத்திறமோர் நான்கு. | |

இவை ஒரு முறையாக
பண்கள் 17 பண்ணியற்றிறங்கள் 70
திறங்கள் 12 திறத்திறங்கள் 4
ஆக 103 பண்கள்.

இவற்றிற்காணாத கொல்லிக்கவ்வாணம் பியந்தைக்காந்தாரம் யாழ்முரி என்றபண்கள் தேவாரத்திற் காணப்படுவது அறியத்தக்கது.

# இசை மரபு — உ

## ( உட்பிரிவு )

### வங்கிய மரபு

23. ஓங்கிய மூங்கி லுயர்சந்து வெண்கலமே
பாங்குடைச்செங் காலி கருங்காலி — பூங்குழலாய்
கண்ண னுவந்த கழைக்கிவை யாமென்றார்
மண்முழுது நூலுணர்ந்தோர் வைப்பு.

என்னுதலிற்றோவெனின்? வங்கியம் செய்தற்குரிய மரங்களை உணர்த்திற்று.

க. மூங்கில்
உ. சந்தனம்
ங. வெண்கலம்
ச. செங்காலி
ரு. கருங்காலி

எனவிவை ஐந்துமாம்.

இவற்றுள் மூங்கிலாற் செய்வது உத்தமம்
,, வெண்கலத்தாற் செய்வது மத்திமம்
ஏனைய அதமம் (அதமமாம்)
மூங்கில் பொழுது செய்யும்
வெண்கலம் வலிதாயிருக்கும்.
மரம் வேண்டிய காலந்தோறும் ஒத்துநிற்கும்.

---

39. வங்கியம், இசைக்குழல். "வாரி வங்கியம் மற்றிவை இசைக்குழல்" புறத்தில் மாத்திரம் வயிரமுடையது. மூங்கில், அது புல்லென்னும் பெயர் பெறும். புறக்காழுடையன புல் எனப்படுமே". மூங்கிற்புல்லால் குழல் செய்தலின் புல்லாங் குழலென்றும், வேய்குழலென்றும் பெயர் பெறும். "புழையுங் குழலும் துளையுடைப் பொருளே." (வேய்ங்குழல்)

இக்காலத்து மரத்தாற் செய்யப்படும் கருங்காலியாலே கொள்ளவேண்டும் என்னுமிது பெருவழக்கெனக் கொள்க.

செந்தாமரைக் கண்ணனாகிய திருமாலுக்குகந்த குழலுக்குமாம் எனச்சொல்லப்பட்ட இவ்வைந்தும் என்றவாறு.

'மண்முழுது நூலுணர்ந்தோர் வைப்பு' என்றது பல பாடைகளையுமுணர்ந்து பல நூல்களையும் உணர்ந்தோரால் செய்யப்பட்டன என்றவாறு. க.

24. உயர்ந்த சமநிலத்தி லோங்கி யதனுன்
இயங்காதே நின்ற மரத்தை — மயங்காதே
முற்றிய மாமரந் தன்னை முதறடிந்து
குற்றமிலோ ராண்டிற் கொளல்

சமநிலத்தே.... ....... மரத்தின் (வேறு பாடம்)

என்னுதலிற்றோவெனின்? முன் சொன்ன மரத்தினுடைய இலக்கணமாமாறுணர்த்திற்று.

உயர்ந்த நிலமாயதென்பது, அதாவது உயர்ந்த சமநிலத்தே ..........மரத்தின் என்பது, தாமொத்த நிலமுமாய் இருந்தவிடத்தில் பெருக வளர்ந்து நாலு காற்றும் இயங்காமல் நின்ற மாமரம் என்றவாறு. மயங்காதே, என்பது, இவை மயங்கினால் நாதமில்லை என்றவாறு.

முற்றிய மாமரந்தன்னை முதறடிந்து, என்பது இளமை, முதுமை அன்றியே நடுவயதான நூற்றாண்டு புக்க மரத்தை வெட்டியிட்டு வைக்க என்றவாறு.

குற்றமிலோராண்டிற் கொளல், என்பது வெட்டி இட்டுவைத்த மரத்தையோர் ஆளின் பருமையாகச் செதுக்கி நிழலிலேயிட்டு வைத்து, (ஆறஇட்டுவைத்து)

க. திருகுதல்

உ. பிளத்தல்

ங. கண்படுதல்

ச. பொத்துப்படுதல்

ரு. செய்யாத செய்கை, என் வின்மையை ஓராண்டை நாட்கழித்தவாறே அறிந்து இலக்கண வகையே வங்கியஞ் செய்தல் மரபு என்றவாறு. உ.

25. சொல்லு மிதற்களவு நாலைந்தாஞ் சுற்றளவு
நல்விரல்க ளுலரையா நன்னுதலாய் — மெல்லத்
துளையளவு நெல்லரிசி தூரம்பிடமாம்(மாய) நல்ல
வளைவல வேல்வங்கி யம்.

என்னுதலிற்றோவெனின்? வங்கியத்திற்குப் பிண்ட இலக்கணம் உணர்த்திற்று. (பிண்டம் — முழுவடிவம்)

வங்கியத்திற்கு நீளம் இருபதுவிரல்
சுற்றளவு, விரல் நாலரை
துளையினளவு, நெல்லரிசி. (நெல்லரிசியில் ஒருபாதி)

இத்துளையிடுமிடத்து இடது முகத்தை அணைசு பண்ணி (வெண்கலத்தாலே) அடைக்க வலமும் (வலமுகம்) வெளியாய்க் கிடக்க என்றவாறு. ங.

26. இருவிரல்க ணீக்கி முதல்வாயேழ் நீக்கி
மருவு துளையெட்டின் மன்னும் — பெருவிரல்கள்
நாலைந்து கொள்ளப் பரப்பென்ன நன்னுதலாய்
கோலஞ்செய் வங்கியத்தின் கூறு.

என்னுதலிற்றோவெனின்? வங்கியத்தின் துளையளவு இலக்கணம் உணர்த்திற்று.

அளவு, இருபது (பெரு)விரலெனக் கொள்க. இதனில் தூம்பு முகத்திலே இரண்டு விரல் நீக்கி முதல்வாய்விட்டு இம்முதல்வாய்க்கு ஏழங்குலம் விட்டு வளைவாயினும் இரண்டு நீக்கி நடுவினின்ற ஒன்பது விரலினும் எட்டுத் துளையிட்டு அவற்றுளொன்று முகத்தினளவென்று கழித்து ஒரு விரல் எனக்கொள்க. நின்ற ஏழினும் விரல்வைத்து ஊதுக என்றவாறு. (முகத்தினளவு–முத்திரை) ச.

27. வளைவா யருகொன்று முத்திரையாய் நீக்கித்
துளையேழி னின்ற விரல்கள் — விளையாட்
டிடமூன்று நான்குவல மென்றூர்கா ணேகா
வடனூன்ற மென்முலையாய் வைப்பு. (வைத்து)

என்னுதலிற்றோவெனின்? வங்கியம் ஊதுமிடத்து (வளைவாய்ச்) வளையாற் சேர்ந்த துளையை முத்திரை என்றொன்று நீக்கி முன்னின்ற ஏழினையும் ஏழுவிரல் பற்றி வாசிக்க.

ஏழு விரலாவன, இடக்கையிற் சுட்டு விரலும், நடு விரலும், மணிவிரலும், (அணிவிரலும்) வலக்கையிற் பெருவிரல் ஒழிந்த நான்கு விரலுமாக ஏழு விரலும்பற்றி வாசிக்கவென்றவாறு. ரு.

28. சரிக மபதநியெனுஞ் சத்த வெழுத்தால்
வரிபரந்த கண்மடவாய் வைக்கத் — தெரிவரிய
ஏழிசையுந் தோன்று மிதனுள்ளே பண்பிறக்குஞ்
சூழ்முதலாய்ச் சுத்தத் துளை.

என்னுதலிற்றோவெனின்? வங்கியத்தில் இசை பிறக்குமாறுணர்த்திற்று.

வங்கியத்தினிசை பிறக்குமிடத்து எழுத்தாற் பிறக்கும் அவையாவன, ச, ரி, க, ம, ப, த, நி, இளி, விளரி, தாரம், குரல், துத்தம், கைக்கிளை, உழை. அவை சட்சம், ரிடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடதம் (நிடாதம்) எனவிவையாம். துளையான் எழுத்து நிகழுமென்ப என்றவாறு. ௬௯.

வங்கிய மரபு முற்றும்.

குரு வாழ்க

சிவாசலபதி சகாயம்

---

40. இவ்வங்கியத்து ஏழு துளைகளில் இசை பிறக்குமாறு அஃது எழுத்தாற் பிறக்கும். எழுத்து சரிகமபதநி என்பன இவ்வேழு எழுத்தினையும் மாத்திரைப்படுத்தித் தொழில் செய்ய இவற்றுள்ளே ஏழிசையும் பிறக்கும்.

ஏழிசையாவன சட்சம், ரிடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாதம் என்பன. இவை பிறந்து இவற்றுள்ளே பண் பிறக்கும், என்பதாம்.

சரிக மபதநியென் றேழெழுத்தாற் றானம்
வரிபரந்த கண்ணினாய் வைத்துத் — தெரிவரிய
ஏழிசையுந் தோன்று மிவற்றுள்ளே பண்பிறக்கும்
சூழ்முதலாஞ் சுத்தத் துளை.

# இசை மரபு — ௫
## (உட்பிரிவு)
### கண்ட மரபு

29. பூதமுதற் சாதனத்தாம் புற்கலத்தின் மத்திமத்து
நாதமுத லாமெழுத்து நாலாகி — வீதி
வருவரத்தாற் றனத்தால் வந்து வெளிப்பட்
டிருவரத்தாற் றேற்ற மிசைக்கு.

30. மண்ணுட னீர்நெருப்புக் கால்வான மென்றிவைதாம்,
எண்ணிய பூதங்க ளென்றறிக — நண்ணிய
மன்னர்க்கு மண்கொடுத்து மாற்றார்க்கு விண்கொடுத்த
தென்னர்கோ மானே தெரி.

என்னுதலிற்றோவெனின்? இசைக்குப் பிறப்பிடமாகாயம் ஆதலின் ஆகாய முதலாகிய பூதங்களையுணர்த்திற்று.

மண்ணீர் நெருப்புக் காற்று வானென்கிற மகா பூதங்களைந்தானும் புற்கலமாமென்றவாறு.

புற்கலம் — உடம்பு

பூதங்கள் தாம் ஒன்றோடொன்று கூடுவனவல்லாத பலவிகற்பமாய்,

மண் செறிதல் குணமாக வுடைத்து
நீர் நெகிழ்தல் குணமாகவுடைத்து
தீத் தெறிதல் குணமாகவுடைத்து
காற்று ஓரிடத்தினிலை பெற்றதன்று
(நிலைபெற்று நிற்பதன்று
ஆகாய மென்பது உருவமன்று

31. செப்பிய பூதங்கள் சேர்ந்தோர் குறியன்றே
அப்பரிசு மண்ணைந்து நீர்நாலாம் — ஒப்பரிய
தீயாகின் மூன்றிரண்டு காற்றம் பரமொன்று
வேயாருந் தோளி விளம்பு.

என்னுதலிற்றோவெனின்? பூதங்களின் குணம் உணர்த்துதல் நுதலிற்று.

மண் ஐந்து குணமுடைத்து
நீர் நாலு குணமுடைத்து
தீ மூன்று குணமுடைத்து
காற்று இரண்டு குணமுடைத்து
(வான்) ஆகாயம் ஒரு குணமுடைத்து
(பயனுடைத்து)

இவையொன்றோடொன்று கூடுவனவல்ல.

இவை ஐந்தின் கூட்டமும் உடம்பு என்றீராதலால் இவை ஐந்தின் கூட்டமுடம்பாவது எங்ஙனமோ எனில்?

32. மெய்வாய்கண் மூக்குச் செவியென்று பேர்பெற்ற
வைவாயு மாயவற்றின் மீதெடுக்கத் — துய்ய
சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தாம்
அவைமுதற் புற்கல மாம்.

மீதடுத்து (வேறுபாடம்)

என்னுதலிற்றோவெனின்? முன்சொன்ன பூதங்கள் பரிணமிக்கும் இடத்து உடம்பாமாறுணர்த்திற்று.

அன்னமயமாகிய சுக்கில சுரோணிதங்களாலே பூதங்களைந்தும் தத்தந்தன்மை நீங்கி மண்ணுடம்பாயும், நீர்வாக்காயும், (வாயாயும்) தீக்கண்ணாயும், காற்றுமூக்காயும், ஆகாயஞ் செவியாயும் நின்றுடம்பாம்.

உடம்புகள் தோறும் (பொறிகள் தோறும்) வினியோகப்பட்டு,

க. சுவை
உ. ஒளி
ங. ஊறு
ச. ஓசை
ரு. நாற்றம்

என்றைந்து வகைப்பட்டு இவ்வைந்தும் ஐந்துட்பொறி ஐந்தினுமேறி

மண்ணால் உடம்பு ஊருயும்
நீரான் வாய் சுவையாயும்
தீயாற் கண் ஒளியாயும்
காற்ருல் மூக்கு நாற்றமாயும்
வாணற் செவி ஓசையாயும்

வந்து தேவவர்க்கத்தால் உடம்பாகும். இத்தன்மையும் அன்றிப் பின்னுஞ் சொல்லுதும். (சொல்லுவர்) உ.

33. நல்ல நரம்பிறைச்சி யென்புமயிர் தோலுஞ்
சொல்லிய மண்ணின் குணமாகும் — மெல்லியலாய்
நீர்மூளை சுக்கிலம் நெய்யார் நிணமுதிரம்
பார்மீதி னீரதனின் பண்பு.

என்னுதலிற்ருேவெனின்? பிருதிவி அப்புக்குணங்களை உணர்த்திற்று.

மண்ணின் கூறு, (பகுதி) நரம்பு, இறைச்சி, எலும்பு, மயிர், தோலென இவை ஐந்து, நீரின்கூறு, நீர், மூளை, சுக்கிலம், நிணம், உதிரம் எனவிவை ஐந்து. ங.

34. **பசிசோம்பு மைதுனங் காட்சிநீர் வேட்கை**
**தெசிகின்ற தீக்குணமோ ரைந்து — மொசிகின்ற**
**போக்கு வரவுநோய் கும்பித்தன் மெய்ப்பரிசம்**
**வாக்குடைய காற்றின் வகை.**

என்னுதலிற்றோவெனின்? தீயின்கூறும் காற்றின்கூறும் உணர்த்திற்று. (தீயின் குணமும் காற்றின் குணமும்)

தீயின் கூறுவன, பசி, சோம்பு, மைதுனம், காட்சி, நீர்வேட்கை எனவிவை. காற்றின் குணமாவன போக்கு, வரவு, நோய், கும்பித்தல், மெய்ப்பரிசம் எனவிவை. ச.

35. **ஓங்கும் வெகுளி மதமான மாங்காரம்**
**நீங்கா வுலோபம் முடனைந்தும் — பாங்காய**
**வண்ண முலேமடவாய் வானத்தின் கூறென்றே**
**எண்ணுமிக நாலுணர்ந்தோ ரெண்.**

என்னுதலிற்றோவெனின்? ஆகாயத்தின் கூறுமாறுணர்த்திற்று.

வெகுளி, மதம், மானம், ஆங்காரம், உலோபம் என இவை. ஆக இவ்விருபத்தைந்தினையும் அகக்கூறுகக் கொண்டதுடம்பாம். ரு.

36. **ஒப்பாம் பிராண னபானன் வியானனுடன்**
**தப்பாச் சமானன் கிருகரனு — மிப்பாலுங்**
**கோதி லுதானன்றனஞ் சயனுகன் கூர்மன்**
**தீதிலாத் தேவதத்த னும்.**

என்னுதலிற்றோவெனின் ? தசவாயுக்களையுணர்த்திற்று. தசவாயுக்களாவன ;

---

41. ஒப்பார் பிராண னபான னுதானனுடன்
தப்பா வியானன் சமானனே — இப்பாலும்
நாகன் றனஞ்சயன் கூர்மன் கிருகரன்
தீதிலாத் தேவதத்த னே.

க. பிராணன்
உ. அபானன்
ந. வியானன்
ச. சமானன்
ரு. கிருகரன்
சா. உதானன்
எ. தனஞ்சயன்
அ. நாகன்
கூ. கூர்மன்
ய. தேவதத்தன் (தெய்வதத்தன்)

என்கின்ற இவ்வாயுக்களாதாரமாக உடையது. சா.

37. இடைபிங் கலைசுழுனை காந்தாரி யத்தி
புடைநின்ற சிங்குவை சங்கினி — பூடாவோ
டங்குகு கன்னி யலம்புடை யென்றுரைத்தார்
தங்குதச நாடிக டாம்.

என்னுதலிற்றோவெனின்? தசநாடிகளையுமுணர்த்திற்று.

க. இடை
உ. பிங்கலை
ந. சுழுமுனை (சுழுனை) (சுழிமுனை)
ச. காந்தாரி
ரு. அத்தி
சா. சிங்குவை
எ. சங்கினி
அ. பூடா
கூ. குகு
ய. கன்னியலம்புடை

என இவற்றாலே நிலைபெற்றுடம்பாம். இவை பலவுங் கூடிச் சரீர பரிணாமமாறெவ்வாறெனின்? கூறுவர். எ.

38. **பூதங்க ளைந்தாய்ப் பொறியைந்தாய் மெய்யைந்தாய்**
**வாதனை யையைந்தாய் மாருதமு — மேதகுசீர்ப்**
**பத்தாகும் நாடிகளும் பத்தென்பர் பாரிடத்தே**
**முத்திக்கு வித்தா முடம்பு.**

என்னுதலிற்றோவெனின்? பூதபரிணாமமாறுணர்த்திற்று.

பூதங்களைந்தாவன, ஆகாயமாதி பூதங்களெனக் கொள்க.

பொறியைந்தாவன, சத்த முதலாகிய ஐந்தும்
மெய்யைந்தாவன, மெய் முதலாகிய ஐந்தும்

வாதனை, ஐயைந்தாவன, நரம்பு, இறைச்சி, எலும்பு. மயிர், தோல் என்னுமைந்தும், நீர், மூளை, சுக்கிலம், நிணம், உதிர மென்னுமைந்தும், பசி, சோம்பல், மைதுனம், காட்சி, நீர்வேட்கை, என்னுமைந்தும், போக்கு, வரவு, நோய், கும்பித்தல், பரிசம், என்னும் ஐந்தும் வெகுளி, மதம், மானம், ஆங்காரம், லோபம் என்னும் ஐந்தும் ஆகிய இருபத்தைந்துமாம்.

தச வாயுக்களாவன பிராணன் முதலிய பத்தும்
தச நாடிகளாவன, இடைபிங்கலை முதலிய பத்தும்

மூலாதாரத்தெழுபத்தீராயிர நரம்பு நாடிகளும், பீர்க்கங்கூடு போன்றிருக்கும். அப்பீர்க்கங் கூட்டின் மூன்று கண்ணும்போல இடைகலை, பிங்கலை, சுழுமுனை என்னும் மூன்று நாடிகளுமாய் நடுவு நின்ற சுழுமுனை ஒழிய இரண்டாலும் மேனோக்கியேறி இரண்டு மூக்கானும் ஒரோர் பாரிசத்து, ஐந்து நாழிகையாகக்கொண்டு, ஒரு மாத்திரையுள் நூற்றிருபத்தைந்து சுவாசமாய் ஒரு

---

பூத வைகைளோ ரைந்தாய்ப் பொறியைந்தாய்
வாதனையோ ரையைந்தாய் மாருதமும் — மேதகுசீர்ப்
பத்தாகு நாடிகளும் பத்தாகும் பாரிடத்தே
முத்திக்கு வித்தா முடம்பு.

சுவாசத்திலே பன்னிரண்டங்குலம் (அங்குலி) வாயு மூலாதாரத்தினின்றும் புறப்பட்டு நால்விரற் பெயர்ந்து (நாலங்குலி தேய்ந்து) எண்விரல் அடங்குகின்றது பிராணவாயுவெனக் கொள்க.

மல மூத்திராதிகளைப் போக்குகின்றது அபானவாயு.

வியானனுவது, நாடிகள் எல்லாவற்றினும் கலந்து வியாபித்து போக்குவரவு செய்தும் இயங்கப் பண்ணும்.

சமானனுவது, நால்வகையன்னவிதங்களையும் அறுவகைச் சுவைகளையும் மூன்று கூறுபடுத்தி எழுவகைத் தாதுவின் கண்ணும் சேர்த்து நிற்பது. (கலப்பிக்கும்)

கிருகரனுவது கோபத்தை விளைக்கின்றது (விளைவிக்கின்றது) (பண்ணுவிக்கும்)

---

42. பூதங்கள் ஐந்தாவன மண் முதலாயின
பொறியைந்தாவன செவி முதலாயின
புலனைந்தாவன சத்த முதலாயின
வாதனை ஐயைந்தாவன. நரம்பு முதலிய ஐந்தும்
நீர் முதலிய ஐந்தும் பசி முதலிய ஐந்தும்
போக்கு முதலிய ஐந்தும் வெகுளி முதலிய ஐந்தும்
தச வாயுக்களாவன பிராணன் முதலிய பத்தும்
தச நாடிகளாவன இடைபிங்கலை முதலிய பத்தும்

மூலாதாரத்து எழுபத்தீராயிர நாடிகளும் பீர்க்கங் கூட்டின் மூன்று கண்ணும் போல இடை பிங்கலை சுழுமுனை யென்னும் மூன்று நாடிகளுமாய் நடுவு நின்ற சுழுமுனையொழிய இரண்டானும் மேனோக்கியேறி இரண்டு முக்காலும் ஓரோர் பாரிசத்து ஐந்து நாழிகையாகக்கொண்டு ஒரு மாத்திரையில் நூற்றிருபத்தைந்து சுவாதமாய் ஒரு சுவாதத்திலே பன்னிரண்டங்குலியளவு புறப்பட்டு நாலங்குலி தேய்ந்து எண்விரல் அடங்குகின்றது பிராண வாயுவெனக் கொள்க.

ஈண்டு மாத்திரையாவது, இரண்டரை நாழிகையை எட்டுக் கூறு இட்டு ஒரு கூறென்றறிக.

அடியார்க்கு நல்லார்.

உதானனுவது, மூலாதாரத்தினின்று நால்விரல்விட்டு நாபியா தாரமாகவெழுந்து நெஞ்சு, தலை, கண்டம், மூக்கு என்னும் இவற்றினிடங்களைப் பொருந்திய வகையானும் பல் நா அண்ணம் இதழ் என்னுமுறுப்பினை உடைய முயற்சி வகையானும் எழுத்துக்களைப் புலப்படுவிப்பது. (கண்டத்தானத்தில் நிற்கும்)

தனஞ்சயனுவது, பிராணன் போன பின்பு உடம்பை விடாதே நின்று மூன்ருநாள் உதிப்பித்து உச்சந் தலையிற் பிற்கூற்றிலே மூன்று நெற்கிடையிலே வெடித்துப் போவது. (தனஞ்செயன்)

நாகனுவது விக்கல் இடுவிப்பது.

கூர்மனுவது, இமைப்பும், விழிப்பும், உறக்கமும், உணர்ச்சியும் பண்ணுவிப்பது.

தேவதத்தனுவது (தெய்வதத்தனுவது) உடம்பு எரிப்பைப் பண்ணுவிக்கும். நாடிகள் எழுபத்தீராயிரத்திலும் தசநாடிகள் பிரதானமெனக் கொள்க.

முன் சொன்னவைகளானும், வாயுக்களானும், நாடிகளானும், பரிணமித்துச் சுக்கில சுரோணிதங்கள் உடம்பாகக் கொண்டு இருவினையும் தன்னகத் தடக்கி உயிர் பிறக்கும். பாரிடத்துப் பிறப்புக்கும், முத்திக்கும், வித்தாம் உடம்பென்றவாறு.

முத்திக்கு வித்தாம் உடம்பெனக் கொள்க.

---

43. " இடைபிங் கலையிரண்டு மேலும் பிராணன்
புடைநின் றபானன்மலம் போக்கும் — தடையின்றி
உண்டனகீ ழாக்கு முதானன் சமானனெங்கும்
கொண்டேறியு மாறிரதக் கூறு. "

(இசை நுணுக்கம்)

இசையும் முத்திக்குத் துணையாதலால் இவ்வுடம்பில் இசை பிறக்குமாறு சொல்லுவர்.

இசை முத்திக்குத் துணையாவதெவ்வாறெனின்? அ;

39. ஓசையு மிசையு மொக்கு மெனவுலகில்
வாசகப் பட்டு வருவதல்லால் — ஓசையை
மெய்யகத்தா லன்றி வினவவொண்ணு தென்னுமிவை
வையகத்தார் சொல்லும் வழக்கு.

என்னுதலிற்றோவெனின்? இப்படிக் கண்டுகொள்க என்றவாறு. கூ.

40. துய்ய வுடம்பளவு தொண்ணூற்று றங்குலியா
மெய்யெழுத்து நின்றியங்கு மெல்லத்தான்—வையத்
திருபாலு நாற்பதோ டேழ்பாதி நீக்கிக்
கருவாகு மாதாரங் காண்.

என்னுதலிற்றோவெனின்? இவ்வுடம்பில் இசைக்குற்ற சரீரத்தளவு, எவ்வளவோ வென்னின்? தன்னங்குலியால் தொண்ணூற்றுறங்குலி.

இதனுள், மேலே நாற்பத்தேழரையங்குலியும்விட்டு கீழே நாற்பத்தேழரையங்குலியும் விட்டு நடுவில் நின்ற ஓரங்குலம் மூலாதாரமாம் என்றவாறு. இசைக்குப் பிறப்பிடமாயுள்ள ஆதாரம். இதன் மேலே நால்விரல் விட்டுப் பின்னுதாரம் நின்றியங்குமெனக் கொள்க. ம.

---

“ஒழிந்த தனஞ்சயன்பே ரோதி லுயிர்போய்க்
கழிந்தாலும் பின்னுடலைக் கட்டி — அழிந்தழிய
முந்நா ளுதிப்பித்து முன்னியவான் மாவின்றிப்
பின்னு வெடித்துவிடும் பேர்ந்து”.

(இசை நுணுக்கம்)

41. ஆதாரம் பற்றி யசைவ முதலெழுத்தாம்
மூதார்ந்த மெய்யெழுத்தை முன்கொண்டு — போதாரு
முந்தி யிடைவளியா யோங்குமிடை பிங்கலையால்
வந்திடுமே லோசையாம் வைப்பு.

என்னுதலிற்றோவெனின்? நமது சரீரத்திலோசை பிறக்குமாறுணர்த்திற்று.

ஆதாரம்பற்றியென்றது மூலாதாரத்தைப்பற்றி என்றவாறு. அசைவ (அசவை) முதலெழுத்தென்பது. உபதேச வித்தாய இரண்டெழுத்துமென்றவாறு.

மூதார்ந்த மெய்யெழுத்தை முன்கொண்டென்பது அசவை முதலாகிய உயிரெழுத்துக்கண் மூலாதாரம் தம் மெய்யெழுத்துக்களை முற்கொண்டு என்றவாறு.

உந்தியிடை வழியாய் ... ... ... ... வைப்பு என்பது உந்தி, இடை பிங்கலையினுதாரத்தாலும் வந்து, மேலோசையாம் என்றவாறு. ௰௧.

(உந்தி முதலாய் நின்றோங்கி என்றவாறு)

42. ஐவகைப் பூதமு மாய சரீரத்தின்
மெய்பட னின்றியங்கு மெய்யெழுத்தால் — துய்ய
பொருள்நாடி நின்றியங்கிப் புந்தியா லோங்கி
வருமா மெழுத்துடன்பின் வந்து.

(ஒரு நாடி நின்றியங்கி உந்திமேலோங்கி வருமா மெழுத்துடம்பின் வந்து). ௰௨.

---

"கூர்ம னிமைப்புவிழி கோணுகன் விக்கலாம்
பேர்வில் வியானன் பெரிதியக்கும் — போர்மலியும்
கோபங் கிருகரனுங் கோப்பி னுடம்பெரிப்புத்
தேவதத்த னுமென்று தேர்"

(இசை நுணுக்கம்)

என்னுதலிற்ரோவெனின்? ... ... ... ... ... ... ...

43. மகரத்தி ஞெற்ருற் சுருதி விரவும்
பகரிற் குறினெடிலாற் பார்த்து — நிகரில்லாத்
தென்ன தெனவென்று பாடுவரே லாளத்தி
மன்னுவிச் சொல்லின் வகை.

என்னுதலிற்ரோவெனின்? முன்சொன்ன சரீரத்தில் ஓசை ஆளத்தியமாறு உணர்த்திற்று.

மகரத்திஞெற்ருற் சுருதி விரவுமென்பது, மகரத்தின் ஒற்றிஞலேநா தத்தைஉச்சரித்துக்கொள்கவென்றவாறு. பகரிற் குறினெடிலாற் பார்த்து என்பது, முன்சொன்ன நாதத்தினைத் தொழில் செய்யுமிடத்துக் குற்றெழுத்தாலும், நெட்டெழுத்தாலும் செய்யப்படும். அவை அச்சு பாரணை என்று பெயராம். அச்சுக்கெழுவாய் குற்றெழுத்து. பாரணைக் கெழுவாய் நெட்டெழுத்து, அச்சு தாளத்துடனிகழும், யாரணை கூத்துடனிகழும் நிகரிலாத் தென்னதென வென்று பாடுவரேல் ஆளத்தி என்பது, ஆளத்தி செய்யுமிடத்து, தென்னவென்றும் தெனவென்றும், தென்னதெனவென்றும் பாடப்படும் என்றவாறு. அவைதாம்

க. காட்டாளத்தி
உ. நிறவாளத்தி
ங. பண்ணுளத்தி

என மூவகைப்படும்.

---

ஆளத்தி - ஆலாபனம்.

32. முதலிற்பாடுமிடத்து மகரத்திஞெற்ருலே நாதத்தை உச்சரிக்கு மரபு, பகரிற் பாரித்து முற்கூறிய நாதத்தினைத் தொழில் செய்யுமிடத்துக் குற்றெழுத்தாலும், நெட்டெழுத்தாலும் செய்யப்படும்

(அடியார்க்கு நல்லார்)

அவற்றுட் காட்டாளத்தியாவது, அச்சுடனிகழும் நிற ஆளத்தியாவது நிறங்குலையாமற் பாரணையுடனிகழும் பண்ணாளத்தியாவது பண்ணையே கருதி வைக்கப்படும்.

மங.

**44. குன்றாக் குறிலைந்தும் கோடா நெடிலைந்தும்**
**நின்றூர்ந்த மந்நகரந் தவ்வோடு — நன்றாக**
**நீளத்தா லெட்டு நிதானத்தா னின்றியங்க**
**வாளத்தி யாமென் றறி**

நீளத்தாலேழு—(வேறுபாடம்)

என்னுதலிற்றோவெனின்? ஆளத்திக்கு வருவதோரிலக்கணமுணர்த்திற்று.

குன்றாக்குறிலைந்தும் கோடா நெடிலைந்தும் என்பது, குற்றெழுத்தைந்தினாலும், நெட்டெழுத்தைந்தினாலும் ஆளத்தி செய்யப்படும்.

குற்றெழுத்தைந்தாவன, அ, இ, உ, எ, ஒ எனவைந்துமாம்.

நெட்டெழுத்தைந்தாவன, ஆ, ஈ, ஊ, ஏ, ஓ, எனவைந்துமாம்.

நின்றூர்ந்த மந்நகரந் தவ்வோடு என்பது, மெய் எழுத்துப் பதினெட்டனுள் மவ்வினமும், நவ்வினமும், தவ்வினமுமாக இம்மூன்றெழுத்தினமுமாம், அல்லன மற்றையெழுத்துக்கள் ஆளத்திக்கு வரப்பெறா என்றவாறு.

மமம, மமம, மமம, மமமமா, எனவும் நன, நன, நனா, நனன, நனா, எனவும் த, தா, தி, தீ, தெ, தே, தன, தன, தனா, தனா, தென, தெனா, தென்னா, தென, எனவும் வருமிடத்தும் பண்ணாளத்தி பண்மேற்றொழிலாதலாம். குற்றெழுத்தும் நெட்டெழுத்தும் (மவ்வினம், நவ்வினம், தவ்வினம் என்னும்) மூன்று திறவினமும் வரப்பெறும்.

நன்ருக நீளத்தாலெட்டும் நிதானத்தால் நின்று இயங்க ஆளத்தியாமென்றறி என்பது, அழகுபட முன் சொன்ன எழுத்துக்களாலே நீளவைத்து எட்டுத் தானங்களிலும் வன்மை, மென்மை, சமன்பட நின்று தொழிற்படுத்த ஆளத்தியாமென்றவாறு.

"தானவளவே நாசியளவே"

என்ருராகலின் தாடையையொட்டாது முதற்ருனம் என்றவாறு. ௪௪.

45. **மாத்திரைக ளொன்பானுந் தானங்க ளெட்டானு**
**மேத்துங் கிரிகையொன் றீரைந்துங் — கோத்துப்**
**பதின்மூன் றெழுத்தாற் ருெழிலைந்தும் பண்ண**
**மதியோர்க ளைந்துநிற மாம்.**

கிரியை (வேறுபாடம்)

என்னுதலிற்ருேவெனின் ? ஐந்து நிறமும் வருமாறு உணர்த்திற்று,

மாத்திரைகளொன்பானுமென்பது,

க. கணம்
உ. லவம்
௩. காட்டை
௪. நிமிடம்
௫. துடி

---

தானம் – மத்திமகாலம் எனைப்படும்.

45. இம்மூவகை மெய்யினுள்ளும்
மவ்வினம் சுத்தத்திற்குரித்து
நவ்வினம் சாளரத்திற்குரித்து (சாளவத்திற்குரித்து)
தவ்வினம் தமிழ்க்குரித்து விரவவும்பெறும்
(அடியார்க்கு நல்லார்)

சா. துருதம்

எ. லகு

அ. குரு

கூ. புலுதம் (புலிதம்) எனவிவை.

தானங்களெட்டாவன, (பெருந்தானம்)

க. நெஞ்சு

உ. மிடறு

ந. நாக்கு

ச. தலை

ரு. மூக்கு

சா. அண்ணம் (அண்ணுக்கு)

எ. பல்

அ. அதரம் (உதடு) எனவிவை.

கிரிகைகள் ஈரைந்தொன்ருவன, (கிரியைகள்)

க உள்ளாளம்

உ. விந்து

ந. நாதம்

---

46. மாத்திரை ஈண்டுக் காலம் எனப்படும். தாமரை இதழ் நூறடுக்கி அதிலோரிதழில் ஊசி செலுத்தும் நேரம், கணமெனப் படும். கணம் எட்டுகொண்டது லவம். லவம் எட்டுகொண்டது காட்டை. (காட்டம்) காட்டை எட்டு கொண்டது நிமிடம். நிமிடம் எட்டுக்கொண்டது துடி. துடி இரண்டு கொண்டது துருதம் (த்ருதம்) துருதம் இரண்டு கொண்டது லகு. லகு இரண்டு கொண்டது குரு. லகு மூன்று கொண்டது புலுதம். துடி - ஒரெண். திருதம் - இரண்டெண். லகு - நான்கெண் குரு - எட்டெண். புலுதம் - பன்னிரண்டெண். (புலுதம்-மூன்று)

௪. ஒலி

௫. உருட்டு

௬. தாக்கு (தூக்கு)

௭. எடுத்தல்

௮. படுத்தல்

௯. நலிதல்

௰. கம்பித்தல்

௰௧ குடிலம் எனவிவை.

பதின்மூன்றெழுத்தாவன :-

முன்சொன்ன குற்றெழுத்தைந்தும், நெட்டெழுத்து ஐந்தும் மவ்வும், நவ்வும், தவ்வும் எனவிவை.

தொழிலைந்தாவன,

௧. சுருதி

௨. டாயம் (ஏடாயகம்)

௩. வருணி (வருணை)

௪. கெதி (கதி)

௫. வியாத்தி (வியர்த்தி) எனவிவை.

---

47. உள்ளாளம் விந்துவுட னாத மொலியுருட்டு
தள்ளாத தாக்கெடுத்தல் தான்படுத்தல் — மெள்ளக்
கருதி நலிதல் கம்பித்தல் குடிலம்
ஒருபதின்மே லொன்றென் றுரை.

கண்ணிமையா கண்டந் துடியா கொடிறசையா
பண்ணளவும் வாய்தோன்று பற்றெரியா — எண்ணிலிவை
கள்ளார் நறுந்தெரியற் கைதவனே கந்தருவர்
உள்ளாளப் பாட லுணர்.

(நச்சினார்க்கினியர் மேற்கோள்)

மதியோர்களைந்து நிறமாமென்பது, முன்சொன்ன யாத்திரைகளானும், தானங்களானும், கிரிகைகளானும், பதின்மூன்றெழுத்தானும், தொழிலைந்தானும் மிகுத்திக் குறைகள் படாமல் முதனிலை வாரம் கூடை திறள் (திறழ்) என்னும் நான்கிடனும்பட மதியோர்களால் அறுதியிடப் பட்ட நிறமைந்தாமென்றவாறு. ௫ரு.

(நான்கினுடனும்பட)

கண்டமரபு முற்றும்

குரு வாழ்க

சிவாசலபதி சகாயம்.

---

48. இங்ஙனம் பிறந்து பண்ணப்படும் பண்ணும்
இசையுமாகிய இவற்றைப் பயக்குமிடறு
ஆகுபெயரான் மிடற்றுப் பாடற்காயிற்று.

(அடியார்க்கு நல்லார்)

கண்டம் - குரல். அதாவது, மிடறு
மிடற்றுத் தொழில் சரீரவினை - குரல்வினை. கண்டமரபு
மிடறு, சாரீரவீணை, அல்லது
சரீரவீணை எனப்படும்.

சுருதி டாயம் முதலிய ஐந்தும் தேசாள சுத்தக் கிரியையெனப் பெயர் பெறும்.

ஐந்து நிறம் க. சுத்தம்
உ. சாளவம்
ங. சங்கீரணம்
௪. தமிழ்
ரு. கேத்திராங்கம் ஆதி - பூருவம்

# இசை மரபு — ச

## ( நிறத்த மரபு )

## (உட்பிரிவு)

## திருத்த மரபு

46. **ஆதி யுடன்சுத்தஞ் சாளவஞ்சங் கீரணம்**
**ஏதமில்சீர்ச் செந்தமிழோ டிவ்வைந்தும் — பேதமே**
**பாடற் பகுதி பலநிறம் பேசினர்**
**கோடிமொழி நாலோர் குறித்து.**

என்னுதலிற்றோவெனின்? ஐந்து நிறமுணர்த்திற்று.

க. கேத்திராங்கம் (ஆதி) (பூருவம்)
உ. சுத்தம்
ந. சாளவம்
ச. சங்கீரணம்
ரு. தமிழ் (செந்தமிழ்)

என ஐந்து நிறமுங் கண்டுகொள்க.

இவ்வைந்தும் மூன்று பகுதியாம்.

பூருவம் (ஆதி) சுத்தத்துடனே சிவணும், பூருவம் எனினும் கேத்திராங்கம். கேத்திராரங்கமெனினும் ஒக்கும். சங்கீரணம் சாளவத்துடனே சிவணும். (சிவணும்–பொருந்தும்)

தமிழ், தமிழ்களி எனவரும் என்ற ஐந்து நிறமும் மூன்று பகுதியாமாறு கண்டுகொள்க.

க. பூருவம் (ஆதி) (சுத்தம்)
உ. சங்கீரணம் (சாளவம்)
ந. தமிழ் (தமிழ்களி)

பேதமே, பாடற்பகுதி பலநிறம் பேசினர். கோடி மொழி நூலோர் குறித்து என்னுதலிற்றேவெனின்? முன்சொன்ன நிறங்களுடைய பேதமே உலகத்துட் பாடல் பலவற்றிற்குரிய பல நிறங்களுமென்றவாறு.

பல நிறங்களாவன :-

ஒரு பண்ணுயிருக்க உருவண்ணம், தேவபாணி இவற்றுடன் பொருந்திய நிறமாய் வருவன. (பொருந்தி அகமாய் வருவனவும்) (வருவனவுமுள) இவை அகமாய் வருவன.

கவிகளுடனும் சிந்துகளுடனும் பொருந்தி அகப்புறமாய் வருவனவும் உள.

க. வேடு
உ. மறம்
ங. குறம்
ச. சித்து (சிந்து)
ரு. சோனகம் என

இவற்றுடன் பொருந்திப் புறமாய் வருவனவும் உள.

க. சாத்தன்
உ. வயிரவன்
ங. காடுகாள்

இவர்களைப் பாடும் புறப்புறமாய் வருவனவும் உள. முன் சொன்ன நிறங்களுடைய பேதமே பாடற்பகுதியெனக் கரைகாணாத மொழியை உடைய நாப்புலவராற்றுணியப் பட்டதென்றவாறு. க.

47. மூன்று நிறமு நிறமொன்றே முன்சொன்ன
வான்றெழி லால்வேற்று மையாகும் — ஏன்றுலகில்
வங்கியமே வீணையாழ் மன்னுஞ் சுருதியெனத்
துங்கமிடற் றுற்பிறக்குஞ் சொல்.

என்னுதலிற்ருேவெனின் ? மூன்று நிறமுமொன்றே என்பது.

முன்சொன்ன சுத்தம், சாளவம், தமிழ் என்னும் மூன்று நிறமும் உண்மைத் தன்மை பார்க்கில் நிறமொன்றே. வேற்றுமை ஆயதெவ்வாருேவெனின் ? முன்சொன்ன தொழிலாலே வேற்றுமையாம்.

ஓரோசையாய் நின்ற காலத்து நிறம் வேற்றுமை இல்லே. அத்தகைய மூவகை நிறமும் வேற்றுமை ஆயதெவ்வாருேவெனின் ? முற்கூறிய தானங்களானும் தொழில்களானும் வேற்றுமையாம்.

மூவகைத் திறமும் (மூவகை நிறமும்) நிற வேற்றுமைகளும் வருமாறு :-

சுத்தமாவது, ஓசையையுச்சரித்து நாசியிலே ஒட்டிச் சிரத்தையும், நாபியையும், கம்பித்துத் தூங்கிசையாகப் பாடுவது.

சாளவமாவது, ஓசையையுச்சரித்து நாசி தட்டாமை ஆகாச கம்பிதமாக்கி, ஏந்திசையாகப் பாடுவது.

தமிழாவது, ஓசையையுச்சரித்து நாபியைக் கம்பித்துக் குடிலமாக்கி மயங்கிசையாகப் பாடுவது.

"சொல்லிய விசைவகைப் பகுதி யென்பவை
வில்லோர் நுதலாய் வீணையாற் காண்க."

(வினையாற் காண்க)

என்பவாகலின், மூவகைப்பகுதியும் ஆசான் கண்ணகத்து அடுத்து மின்னின வீணை, யாழ் முதலா வினை முதலாக (வினை-தொழில்) (கருவி வழியாக) அல்லது தோன்ருது என்றவாறு ... ... ... ... ... இசையே கண்டத்திற் பிறக்கும் என்றவாறு. உ.

48. **வங்கியமே வீணையாழ் சுத்தமே சாயைதமிழ்த்**
**துங்கவெழுத் தேழ்நரம்பு மேழோசை —**
**பொங்கொளிசேர்**
**தென்சொல் வடமொழியா லிட்ட திறனுன்கும்**
**பின்புமோர் நால்வகையும் பேசு.**

(வடசொல்லால்)

என்னுதலிற்றேவெனின்? கலன்களிசையுடன் பிறக்குமாறுணர்த்திற்று.

(கலன் - யாழ் - கருவி)

வங்கியமே வீணையாழ் சுத்தமே சாயை தமிழ் என்பது நிரநிரை.

சுத்தத்திற்குரித்து வங்கியம்
சாளவத்திற்குரித்து வீணை
தமிழ்க்குரித்து யாழ் எனக்கொள்க.

(தமிழிற்கு உரித்து)

துங்கவெழுத் தேழ்நரம்பும் ஏழோசை என்பது, வங்கியத்திற்கும், வீணைக்கும், யாழுக்கும் எழுத்துள்ளவை (எடுத்து உள்ளவை) ச ரி க ம ப த நி என்றிவை.

தமிழுக்கு நரம்பேழுள, அவை,

குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனவிவை. ம ப த நி ச ரி க என்றிவை.

(தாரம்முற்றேன்றியது)

"தென் சொல் ……… நால்வகையும் பேசு" என்பது, தமிழ்ச் சொல்லும் (சொல்லானும்) ஆரியச் சொல்லும் (சொல்லானும்) நூற்று மூன்று பண்ணும். (பெயர் பெற்று விளங்கும்) அவை, நாலு கூறு பெயர் பெறும். அவைதாம் பண், பண்ணியற்றிறம், திறம்,

---

49. **"நிலம், சலம், கண்டம் என்னும் நெறி மூன்றினும், கண்டமல்லது நிரம்புக் காட்டக் கருவிக்கின்பம் கொடுப்பதுமது"**

திறத்திறம் எனத் தமிழ்ப்பெயர் பெற்றன. சம்பூரணம், சாடவம் (சாடபம்) ஔடுவம், (அடுவிகம்) (அடுவிதம்) சதுர்த்தம் என வடமொழிப்பெயர் பெற்றன.

'பின்புமோர் நால்வகையும் பேசு, என்பது இன்னம் இவற்றிற்குப் பெயர் நாலுள, அவையாவன அகநிலை, புறநிலை, அருகியல், பெருகியல் எனவிவை. ந.

49. **பண்பாற் கிரியையாற் பாவா னிலத்தாலும்**
**முன்பாக நின்றிலங்கு மோசையினை — விண்பாய்**
**மணிமாட மோங்கு மதுரையார் கோவே**
**அணிமா மரபிவற்ரு லாம்.**

என்னுதலிற்றோவெனின்? பண்கள் பெயர்பெறுமிடத்துப் பண்பாலுங் கிரியையாலும், பாவினுலும், நிலத்தினுலும் இந்நாலு வகையினுலும் பெயர் பெறும்.

இவற்றுள்,

பண்பாற் பெயர் பெற்றது, கொல்லி, துக்காராம்
கிரியையாற் பெயர் பெற்றது பண்
பாவாற் பெயர் பெற்றது இசை
நிலத்தாற் பெயர் பெற்றது, பாலையாழ்

குறிஞ்சியாழ், மருதயாழ், செவ்வழியாழ் (முல்லையாழ்) (நெய்தல் யாழெனினும் ஒக்கும்,) திறனில்யாழ் நெய்தல் யாழ்.

செவ்வழியாழ் என்பது முல்லையாழ். தாரப்பண் என்பது முல்லையாழின்மேற்செம்பாலை. (தாரப்பணம்)

---

50. "செவ்வழியாழென்பது முல்லையாழென்றும், நெய்தல் யாழென்பது திறனில் யாழென்றும், யாமயாழ்ப்பெயர் குறிஞ்சியாழும், செவ்வழி யாழ்ப்பெயர் முல்லையாழும், திறனில் யாழே நெய்தல் யாழாகும். திறனில்யாழ் விளரி நெய்தனிலஞ் சிவணும்" என்பது மரபு.

"இடம் பற்றிய தைந்திணையியல் ராகம்"
"இடம் பாகுணம் பொழுதியன்றெழுமிராகம்"

என்பன குறிப்பு.

பாலே, குறிஞ்சி, மருதஞ் செவ்வழி தாரத்திற்கினம். இதனே நாற்பெரும் பண்ணென்றும் வழங்கும் என்றவாறு.

'அணிமா மரபிவற்ருலாம்' என்பது முன்சொல்லப் பட்ட பண்ணூற்று மூன்றினேயும் இவ்வாருராய்ந்து அறுதியிடுகவென்றவாறு. ச.

50 பாவோ டிணேத்த லிசையென்ருர் பண்ணென்ற
தோவாப் பெருந்தான மெட்டானும் — பாவா
யெடுத்தல் முதலா விருநான்கும் பண்ணிற்
படுத்தமையாற் பண்ணென்று பார்.

என்னுதலிற்ருேவெனின்? பண்ணென்றதற்கும் இசை என்றதற்கும் காரணமுணர்த்திற்று. இசை என்பதற்குப் பல இயற்பாக்களுடனே நிறத்தை இசைத்தலால் (காரணம்) இசை என்று பெயராயிற்று. பண்ணென்றதற்குக் காரணம், தானங்கள் எட்டானும் கிரியைகளெட்டானும் ஓசைப்படுத்தலாற் பண்ணென்று பெயராயிற்று.

பெருந்தானங்களெட்டாவன, (தானம்-இடம்)

க. தலே
உ. மிடறு
ந. நெஞ்சு
ச. மூக்கு

---

51. பாவோ டணேத லிசையென்ருர் பண்ணென்ருர்
மேவார் பெருந்தான மெட்டானும் — பாவாய்
எடுத்தல் முதலா விருநான்கும் பண்ணிப்
படுத்தமையாற் பண்ணென்று பார்.

இங்ஙனம் மூலதாரந் தொடங்கி எழுத்தின் நாதம் ஆளத்தியாய்ப் பின் இசையென்றும் பண்ணென்றும் பெயராம்.

(அடியார்க்கு நல்லார்)

ரு. இதழ் (உதடு)
சா. பல்
எ. நா
அ. அண்ணம் (அண்ணுக்கு)

கிரியைகளெட்டாவன :-

க. எடுத்தல்
உ. படுத்தல்
ங. நலிதல்
ச. கம்பித்தல்
ரு. குடிலம்
சா. ஒலி
எ. உருட்டு
அ. தாக்கு

எனவிவை, இவற்ருல் பிறப்பித்து ஓசை பண்ணப் படுதலானும் பண்ணென்று பெயராயிற்று. ரு.

51. இடையீடு தொட்டுக்கோள் வேறுபா டேனைப்
புடையூ றிரட்டை புகலும் — படையார்ந்த
கூர்வேல் விழிமடவாய் கூட்டிசையுங் காட்டினுர்
பார்மே லிசையதனின் பண்பு.

என்னுதலிற்றேவெனின்? இசைப்புணர்ப்பைந்தினையும் உணர்த்திற்று.

அவை, க. இடையீடு
உ. தொட்டுக்கோள்

---

52. புணர்ப்போன் பண்பு, பாடலாசிரியனை ஒத்த அறிவு. புணர்ப்பு, குழற்கருவியில், சித்திரப்புணர்ப்பு என்றும் வஞ்சனைப்புணர்ப்பு என்றும் இருவகைப்படுமாம். மிடற்றுப் பாடலில் ஐந்தும் எட்டுமாகவும் கூறப்பெறுவது வழக்கு போலும்.

௩. வேறுபாடு
௪. இரட்டை
௫. கூட்டிசை எனவிவை.

இவற்றைப்பாக்களுடன் புணர்க்குமிடத்து

இடையீடாவது

"எழுவா யடிமாற் றடியே யொத்து
வழுவி லிரண்டு மிடையீ டாகும்"

தொட்டுக்கோளாவது,

"முதலடி தன்னொடு மூன்று மடியொத்
தயலடி தன்னுட னீற்றடி யொத்துத்
தோன்றில் தொட்டுக் கோளென மொழிப.

வேறுபாடாவது,

"ஊறிய விசைக ளொருநான் கடியும்
வேறுபட வருவது வேறுபா டாகும்"

இரட்டையாவது,

"முன்னிரண் டடியு மோரிசை யாகிப்
பின்னிரண் டடியும் பிரிவில வாகித்
துன்னி நிற்ப திரட்டை யாகும்"

கூட்டிசையாவது,

"நாலடி யிசையு மோரிசை யாகிச்
சேரவ ரினது கூட்டிசை யாகும்"

இவை ஐந்தும் நாலடியான் வருவன.

52. **ஓரிசை முன்னிசை சுத்தம்பீர் கண்டமிசை
நேர்புரி கண்ட நெறிமுறையே — சார்பொலிந்த
வெட்டு வகையு மிசையின் புணர்ப்பென்றார்
மட்டலநுங் கூந்தலாய் வந்து.**

என்னுதலிற்றோவெனின்? ஓரடியானும், இரண்டடியானும், மூன்றடியானும், வருஞ் சிந்துகள் இசைபுணர்க்குமிடத்து எட்டுவகையானும் புணர்க்குதல் உணர்த்திற்று.

அவை, க. ஓரிசை
உ. முன்னிசை
ங. சுத்தம்
ச. பீர்கண்டம்
ரு. இசைகண்டம்
சா. நிறைநிலை
எ. நெறிநிலை
அ. முறைகண்டம் எனவிவை.

இவற்றுள்,

க. **" ஓரடி யிசையே ஓரிசை யாகும் "**

உ. **" இரண்டடி யிசையே வேறு படவரின்
முரண்ட புலவர் முன்னிசை யென்ப "**

ங. **" மூன்றடி யோரிசை முறைவே றுமெனிற்
றோன்றிச் சுத்த மாகு மென்ப "**

ச. **" முன்னிரண் டடியு மோரிசை யாகிப்
பின்னிசை வேறுறிற் பீர்கண் டம்மே "**

ரு. **" முதலடி தன்னுடன் மூன்று மடியொத்
திரண்டடி வேறுறி னிசைகண் டம்மே "**

சா. **" இரண்டடி யோரிசை நிறைநிலை யாகும் "**

எ. "முதலடி வேருய் முதலீ ரடியும்
நேர்படு மோரிசை நெறிநிலை யாகும்"

அ. "மூன்றடி யோரிசை முறைகண் டம்மே"

எனவிவ்வாறு எட்டுவகைப் புணர்ப்புங்கண்டு கொள்க.
எ.

53. நெய்தன் முகத்த னெறிவிலங்கப் பாய்தலே
கொய்து நுளைதலெனக் கூறினர் — மொய்குழலாய்
வன்மையே மென்மை சமமென்ப வையத்து
நுண்மையி னுற்கலக்க லாம்.

என்னுதலிற்றோவெனின்? இசை நுளைபு உணர்த்திற்று.

அவை, க. நெய்தல்
உ. முகத்தல்
ங. பாய்தல்
ச. நுளைதல் எனவிவை.

க, "நாலு மியலுடன் புணர்க்கு மிடத்து
நெய்தல் வல்வினைக் கெழுவா யாகும்"

உ, "முகத்தல் மெல்வினைக் கெழுவா யாகும்"

ங, "பாய்தல் சமநிலைக் கெழுவா யாகும்"

ச. "நுளைத லென்பது புன்மைத் தொழிலே"
(நுளைபு வென்பது)

எனச் சொன்னார்களெனக் கொள்க. அ

54. ஒருக்க ணிசைநூல்கண் ஞேசையி லாதான்
பெருக்குரலன் பேழ்வாய் பிரிந்தோன் — கருப்பிரிந்
தாணிற் குறைந்தோ னெழுக்கமிலி யோடாறுந்
தானத் திசைக்க லாதார்.

என்னுதலிற்றோவெனின்? இத்தன்மையார் அரங்கத்துப் பாடப்பெருர் என்றவாறு. கூ.

55. மிக்க குடிப்பிறந்தோன் மெய்யான வோசையான்
துக்க மிலாதான் சுகமுடையான் — ஒக்கவே
ஊனப் படாதா னுறுப்பில்மறு வில்லாதான்
ரூனத் திசையியற்று வான். (தானம் - அரங்கம்)

என்னுதலிற்றோவெனின்? இத்தன்மையார் அரங்கத்துப் பாடப்பெறுவர் என்றவாறு. ரு.

56. துய்யமொழி மென்குயிலுஞ் சோலைவரி வண்டினமும்
வைய முழங்கும் வலம்புரியும் — கைவைத்துத்
தும்புரு நாரதர் பாடியமூ வோசையென
நம்புநீ நால்வேதத் துள்.

என்னுதலிற்றோவெனின்? உத்தமவோசை வருமாறு உணர்த்திற்று.

மூவோசையாவன :-

க. குயில் கூவலும்
உ. வண்டின முரற்சியும்
௩. வலம்புரியோசையும் போல,

ஒழுகின வோசை, தும்புரு நாரதர் பாடிய மூவோசை என்று விளங்கும் வேதத்துள்ளென்றவாறு. ருக.

57. பெருக்குரல் கட்டை நழுவல் விலங்கல்
ஒருக்கி யொதுங்கல் புரைத்தல் — விருப்பில்லாக்
காகுளி காக சுரமென்னு மிவ்வெட்டு
மாகா வெனச்சொன்ன ராய்ந்து.

என்னுதலிற்றோவெனின்? பாடுதற்கல்லாத இசைகளை (ஒலிகளை) உணர்த்திற்று.

அவை க. பெருக்குரல் (பெருங்குரல்)
உ. கட்டை
ந. நழுவல்
ச. விலங்கல்
ரு. ஒதுங்கல்
சு. புரைத்தல்
எ. காகுளி
* அ. காகசுரம் எனவிவை.

இவற்றுள்,

பெருக்குரலாவது, நிறமில்லாதவோசை.

கட்டையாவது நிறமுந்தானமும் குறைவாவது.

நழுவலாவது, ஒரு தானத்தில் பாட ஒருதானத்தில் நழுவுவது.

விலங்கலாவது, ஒரு பண்பாட வேறொரு பண்ணிலே விலங்குவது. (விலகுவது)

ஒதுங்கலாவது, பாடுகிற நிறத்தையொதுக்கிப் பாடுவது.

புரைத்தலாவது, ஓரோசையான தன்மை நீங்கிப் (நீக்கிப்) பலவோசையாய் வருவது.

காகுளியாவது, பேய் கத்திறாற்போலப்பாடுவது

காகசுரமாவது, காக்கையின் குரலாவது போலும்

இவையெட்டுஞ் சிறப்பில்லை யென்றவாறு. ௫௨.

---

53. * 'சினக்காக்கை வாயினுறுங் குரற்சொல் லொக்கும்'
(மறைசையந்தாதி)

'வெள்ளை காகுளி கீழோசை வெடிகுர ஞசியின்ன
வெள்ளி யவெழா லின்குற்றம்.................'

(திருவிளையாடல்)

58. **சிச்சிலி பூனை குடமுழக்கஞ் செம்மைசேர்**
**உச்சி மலைநீர் விழுக்காடு — பச்சைநிற**
**வேயினிலை வீட்சியுடன் வேய்ந்த நிறப்பறவை**
**யேயுங்கா லோசை யியல்பு.**

என்னுதலிற்றோவெனின்? பாடுவான் தொழிற்கிரியை கருவியால் வருமாறுணர்த்திற்று.

இசையோடு தொழிற்படுமிடத்துச் சிச்சிலியாகிய நீர்மேற் பறவை போலவும், பூனையதுறுமல் போலவும், முழவின் முழக்கம் போலவும் அருவியோசை போலவும், மூங்கிலிலை விழுகிற தொழில் போலவும், வானம்பாடி என்கிற பறவை போலவும் செல்லுகிற தொழிற்கிரியை இயல்புடைத்தென்றவாறு. இவை காணுமிடத்து (கருவியாற்) யாழான் வீணையாற் காணப்படும். (வினையாற் காணப்படும்.) ருஅ.

59. **ஒட்டுதலுங் கட்டுதலும் விட்டோசை யாகுதலும்**
**பட்டமரு நல்லொழுக்கம் பாரணையுங் —**
**கொட்டவணிந்**
**தாடுவா ராடு மரங்கத் திருந்தசையப்**
**பாடுவார் பாடும் பரிசு.**

என்னுதலிற்றோவெனின்? பாடுவான் தொழிற்கிரியை கண்டத்தால் வருமாறுணர்த்திற்று.

(ஆடலரங்கத்துப்பாடும் மரபு)

க. ஒட்டுதல்
உ. கட்டுதல்
ங. விட்டோசையாகுதல்
ச. நல்லொழுக்கப்பாரணை

என்று சொல்லப்பட்ட நான்கும் (கொண்டு) பாடுவான், சிறப்புடையன் என்றவாறு. ருக.

60. தூய சுருதியுட னேடா யகம்வகுணை
ஏய கெதிவியர்த்தி யிவ்வைந்தும் — சேயிழையாய்
தேசாள சுத்தக் கிரியையெனச் செப்பென்று
பேசினர் நூலோர் பெயர். (பெரிது)

என்னுதலிற்றோவெனின்? தேசாள சுத்தக்கிரியை வருமாறுணர்த்திற்று.

அவையாவன :-

* சுருதியாவது, குற்றப்படாதவோசை (அலகு)
ஏடாயகமாவது, தூக்கித்தாக்குதல்
வகுணையாவது, இசைத்திரட்சி
கெதியாவது, தாளச்சதி
வியர்த்தியாவது, வழிகாண்டல் — எனவிவை.

தேசாள சுத்தக்கிரியையெனச் சொல்லப் பேசினர் நூலோர் பெயரென்றவாறு. (பெரிதென்றவாறு) ௬௰.

பெயர் என்பது பெரிது.

61. திப்பிலி தேன்மிளகு சுக்கிஞ் டிம்பூரல்
துப்பில்லா வான்பால் தலைக்காடை — யொப்பில்லா
வெந்நீரும் வெண்ணெயு மெய்ச்சாந்தும் பூசவிவை
மன்னூழி வாழும் மகிழ்ந்து.

என்னுதலிற்றோவெனின்? மிடறு, பாடற்குரிய (மிடற்றுக்கு) மருந்துகளையும் உணர்த்திற்று. (மிடற்றுக்காவன)

க. திப்பிலி
உ. தேன்
௩. மிளகு
௪. சுக்கு

54. *சுருதி முதலிய ஐந்தும் தொழிலைந்து எனவும் படும்.

௫. இம்பூறல் (ஓர் வேர்) (இராமேச்சுரவேர்)
௬. பசுவின்பால்
௭. காடைச்சாறு, எனவிவை புசிப்பன கொளல்.

குளிப்பது வெந்நீர், பூசுவது வெண்ணெய், நறு நாற்றங்கள் இப்படிச் செய்யில் மிடற்றிசை குற்றப் படாது என்றவாறு,

(வெந்நீரில் வெண்ணெயிட்டுப் பருகல்)

62. நகைபுகை யெட்காடி காமம் நறவு
பகையெனச் சொன்னார்கள் பார்மேல் — முகைமலரும்
கூந்தலிளம் பிடியே கோல விசைகூறு
மாந்தனையுங் காப்ப தறிவு.

என்னுதலிற்றோவெனின்? மிடற்றுக்காகாதனவும் உணர்த்திற்று.

௧. நகை
௨. புகை
௩. எள்
௪. காடி
௫. காமம்
௬. கள்

இவை பகையெனச் சொன்னார்கள் பாரிடத்து என்றவாறு.

இவற்றையறிந்து கொளத்தகுமவற்றைக்கொண்டு விடத்தகுமவற்றை விடுத்துப் பாடுகவென்றவாறு, ஃஎ.

திருத்தமரபு முற்றும்.

(நிறத்தமரபு)

குரு வாழ்க

சிவாசலபதி சகாயம்

## இசை மரபு — ரு

### (உட்பிரிவு)

### வகையொழிபு மரபு (வகையொழிபு)

63. **ஆதி யயன்படைத்த வாழி யுலகத்து**
**ளோதிய கீத வழியெல்லாம் — நீதியினு**
**லைந்து திறனும் வீரவி வருதலால்**
**பஞ்ப மரபென்று பார்.**

என்னுதலிற்றோ வெனின்? பஞ்சமரபென்பதற்குக் காரணமுணர்த்திற்று.

பிரமனுற் படைக்கப்பட்ட சமுத்திரஞ் சூழ்ந்த உலகத்துள் பாடப்பட்ட கீதங்களின் திறமைந்தும் விரவி வருதலாற் பஞ்சமரபென்றும் வழங்கப்படுமென்றவாறு.

க.

64. **சொல்லிய நற்றேல் துளைதுய்ய மென்னரம்பு**
**கல்வி மிகுகஞ்ச மிடறெனவே — வெல்லுமதன்**
**அஞ்சப் படும்விழியா யாயுங்கா லிவ்வைந்தும்**
**பஞ்சமா சத்தமாய்ப் பார்.**

என்னுதலிற்றோவெனின்? பஞ்ச மாசத்தமுணர்த்திற்று.

---

55. பஞ்சமரபு, என்பதற்குக் காரணம் **இசையும்**, முழவமும், கூத்தும், தாளமும், **அவிநயமும்** என்னும் ஐந்துசொல்கை என்ற உரை (அஞ்சுறுப்பாகும்) இந்நூல் பாயிரத்து அவையடக்கம் உரையிலும் கூறப்பட்டுள்ளதறிக.

தோற்கருவிகளான,

"பேரிகை படக மிடக்கை யுடுக்கை
சீர்மிகு மத்தளஞ் சல்லிகை கரடிகை
திமிலை குடமுழாத் தக்கை கணப்பறை
தமருகந் தண்ணுமை தாவி றடாரி
அந்தரி முழவொடு சந்திர வளையம்

க. தோல்

உ. துளை

ங. நரம்பு

ச. கஞ்சம்

ரு. மிடறு

என்று சொல்லப்பட்ட ஐந்துமென்றவாறு.

அவற்றின்பகுதி யாவையோவெனின்?

தோற்கருவியாவன, (தோல்) பேரிகை, படகம், இடுக்கை, உடுக்கை

மத்தளம்

சல்லி

கரடி

முதலாயின முப்பதும் நாழிகைப்பறையும் எனக்கொள்க.

---

மொற்தை முரசே கண்விடு தூம்பு
நிசாளந் துடுமை சிறுபறை யடக்க
மாசி றகுணிச்சம் விரலேறு பாகம்
தொக்க வுபாங்கந் துடிபெறும் பறையென
மிக்க நூலோர் விரித்துரைத் தனரே"

5(6. "தோல்துளை கஞ்சம் நரம்பு மிடறு
தொழில்வகை முதலிய சாற்றினர் புலவர்"
"கைமணி தாளம் கஞ்ச தாளம்
கொண்டி யென்னக் கொண்டனர் புலவர்"
"தோல்துளை நரம்பு கஞ்சப் பாடல்"
பல்பேத பஞ்ச சத்தமு மாகும்"

ஐந்து கருவிகளும் ஒக்க இயற்றுவது பஞ்சமாசத்தம் என்பது, (மிடறு) ஒரு வாய்ப்பாடகருக்கு, அவர் அரங்கில் அமர்ந்து பாடுங்கால் துணைக்கருவிகளாக (பக்கவாத்தியம்) நரம்புக்கருவி ஒன்றும் (யாழ் அல்லது வீணை) துளைக் கருவியொன்றும் (குழல்) தோற்கருவிகள் (தோல்) சிலவும், தாளக்கருவி (கஞ்சம்) ஒன்றும் அமைத்துக்கொண்டு இசை விநிகை செய்வது எனப்படும், அது பஞ்சமாசத்தமாம்.

துளைக்கருவியாவன, (துளை)

க. வங்கியம்

உ. கொம்பு

ந. தாரை

ச. குழல் (குறுங்குழல், நெடுங்குழல்)

ரு. காளம்

சு. சங்கு

எனக்கொள்க.

நரம்புக்கருவியாவன, (நரம்பு)

க. யாழ்

உ. வீணை

ந. கின்னரி (கின்னரம்)

இவை முதலியவேயெனக் கொள்க.

கஞ்சக்கருவியாவன, (கஞ்சம்)

க. கைமணி

உ. தாளம்

ந. கஞ்சதாளம்

ச. கொண்டி (கொடி)

எனக்கொள்க. காளம், தாளம் என்பது கஞ்சக்கருவிக்கும், துளைக்கருவிக்கும் பொது ஆதலின் ஈண்டுக் கூறினர்.

மிடற்றுக்கருவியாவன, (மிடறு) கண்டப்பாடல்.

பண்ணுமிசையுமென்று சொல்லப்பட்ட பலவகைப் பாடல்களாம். இவ்வஞ்சு கருவிகளுமொக்க இயற்றுவது பஞ்சமாசத்தமென்றவாறு.

65. **குன்ரு வெளியே யடக்க மொலிவண்ணம்**
**நின்ற வலியே மெலிவுடனே — நன்ருக**
**வாரியமு மின்றமிழுக் காவனவு மாங்கிருபால்**
**வாரிப் பொழியுமாம் வைப்பு.**

என்னுதலிற்ரேவெனின்? பண்ணூற்றுமூன்றினையும் பண்பின் (பண்பால்) பல வகையாக்கிப் (பலவகையாகப்) பாடுமாறு உணர்த்திற்று.

எவ்வாரேவெனில்? அப்பண்களை (அவற்றை)

க. வெளிப்படுவனவும்
உ. வெளிப்படாதனவும்
ங. ஒலிக்குரியனவும்
ச. வண்ணத்திற்குரியனவும்
ரு. வன்மைக்குரியனவும்
சா. மென்மைக்குரியனவும்
எ. இருவயனமும் ஆரியப்பெயர் நெறிக்குரியனவும்
அ. தமிழ்நெறிக்குரியனவும் (தமிழ்ப்பெயர்)
கூ. போலி நிறத்தனவும்

எனப்பலவகைப் படுவதறிந்து பாடுதல். அவையும் பெயர் வகையிலும், பாடும் முறையிலும் பலவகைப்படும்.

அவற்றுள் வெளிப்படும் பண்களாவன.

க. தக்கேசி (நவிர்)
உ. சாதாரி (முல்லை)
ங. துக்கராகம் (வட்டி)
ச. காஞ்சி (மேகாஞ்சி)
ரு. நாட்டை (மல்லாரி)
சா. நட்டராகம்
எ. சீகாமரம்
அ. சிகண்டி (நனிடை)

கூ. கொல்லவராடி (கொல்லிவராடி)
ய. குறண்டி (தேவகிரி) (நோதிறம்)
யக. தக்கராகம் (அராகம்)
யஉ. கவுசிகம் (கௌசிகம்) (செய்திறம்)
யங. செந்துருத்தி (செந்திறம்)
யச. தேவாளி (தேவாழி)
யரு. அந்தாளி (அந்தாழி) அந்தாளிக்குறிஞ்சி)
யகா. அந்தாளி பாடை (அந்தாழிபாடை)
யஎ. இந்தளம் (நளுத்தை) (வடுகு)
யஅ. குந்தளம் (கொண்டி) (கொண்டற்கிரி)
யகூ. பழந்தக்கராகம், எனவிவை.

---

**57. வெளிப்படும் பண்கள் என்பது வெளிப்படையாக எல்லாரானும் பாராட்டப்பெற்று பாடப்பெற்று கருவிகளில் இசைக்கப்பெற்று எப்பொழுதும் வழக்கில் இருப்பவையாம்.**

---

வெளிப்படாத பண்கள் வருமாறு :

க. தன்னி (தனு) (தனுக்காஞ்சி) (தணுக்காஞ்சி)
உ. நள்ளி (சீராகம்) (சீராகமரம்)
ங. தாணு
ச. கின்னரம் (கின்னராகம்)
ரு. பையுள் (பையுள்காஞ்சி)
கா. அரளி (சாயை) (அலரி)
எ. அத்தராட்டம் (திராடம்)
அ. தக்கணம் (வருணம்) (தக்கணுதி)
கூ. அந்தி (ஆந்தி)
ய. அழுங்கு
யக. சாரல்
யஉ. மவுரி (பவுரி) (அரி) (அரியநாட்டம்)
(மாங்கள்ளி)
யங. மன்றல் (மன்றில்)

யச. சாயரி (சாளுகி)

யரு. ஆனந்தை (அரந்தை)

யசா. சிந்தி (சந்தி) (சாந்தி)

யஎ. கூதளி (கூதாளி) (கேதாளி)
(கேதாளிக்குறிஞ்சி) எனவிவை.

---

58. வெளிப்படாத பண்கள் என்பது இசை வல்லுனரால் ஏதோ ஒரு சமயம் மட்டும் இசைக்கப்பெற்று எப்பொழுதும் செவிகளில் படுவதற்கு வாய்ப்பு இன்றி இருப்பவை இதனை **அபூர்வம்** என்பது வழக்கு.

---

ஒலிக்குரியனவாய பண்களாவன

க. பஞ்சுரம் (பழம்பஞ்சுரம்)

உ. சாதாரி (முல்லை)

ங. கவ்வாணம் (படுமலைக்கவ்வாணம்)

ச. குந்தளம் (கொண்டற்கிரி)
(கொண்டைக்கிரி) (கொண்டி)

ரு. ஒலிப்பஞ்சமம் (செந்திறம்)
(செந்துருத்தி) (மத்தியமாரி

சா. வியாழக்குறிஞ்சி எனவிவை.

இவையெல்லாப் பண்களும் வண்ணத்திற்குரியனவாம் எனக்கொள்க.

---

69. ஒலிக்குரியனவாய பண்கள் என்பது அவற்றின் இசைகள் அலகு நிறைந்தது. மிக்க கம்பீரமாகவே பாடுதற் குரியனவாய பண்கள் என்பவையாம்.

---

வன்மைக்குரியனவாய பண்களாவன (வலிமைப்பண்கள்)

க. பாலை (பாலையாழ்) அரும்பாலை

உ. குறிஞ்சி (செம்பாலை) குறிஞ்சியாழ்)
(யாமயாழ்) (யாழ்க்குறிஞ்சி)

௩. மருதம் (மருதயாழ்) (மருதள்ளு)
(கோடிப்பாலை)

௪. செவ்வழி (செவ்வழியாழ்) (முல்லையாழ்)
(சுகதி)

௫. மேகராகக்குறிஞ்சி

௬. அந்தாளி (அந்தாழி) (அந்தாளிர்)

௭. அனுத்திரபஞ்சமம் (அயிர்ப்பு)
(உருத்திரபஞ்சமம்)

௮. செந்துருத்தி (செந்திறம்)
(ஒலிப்பஞ்சமம்) (மத்தியமாரி)

௯. குறிஞ்சி (நவிர்கொல்லி)

௰. சிகண்டி (நனிடை)

௧௧. பழம்பஞ்சுரம் (பஞ்சுரம்)

௧௨. கவுசிகம் (செய்திறம்) (கைசிகம்)

௧௩. இந்தளம் (வடுகு) (நளுத்தை)

௧௪. தக்கராகம் (அராகம்)

௧௫. சாதாரி (முல்லை)

௧௬. வேளர்கொல்லி (வேளாகொல்லி)

௧௭. கொல்லிவராடி (கொல்லவராடி)

௧௮. கவ்வாணம் (படுமலைக்கவ்வாணம்)

௧௯. சீகாமரம் (காமரம்)

௨௰. நட்டபாடை (நைவளம்) எனவிவை.

---

60. சாதாரியும், குந்தளமும் வெளிப்படும் பண்களாகவும் ஒலிக்குரியனவாகவும் உள்ளன அந்தாளியும். செந்துருத்தியும், வன்மைக்குரியனவாகவும் வெளிப்படும் பண்களாகவும் உள்ளன, செந்துருத்தி வன்மையாகவும் வெளிப்படுதலாகவும் எல்லாமாய் உளது.

பெரிய இசைகளே அமைத்த வன்மைக்குரியனவாய பண்கள் என்பது, சிறப்பாக ஏழிசையும் கொண்ட பெருப்பாலைகளும், அவற்றை எவ்வாறு கருவிகளில் அழுத்தம்பெற வாசிப்பதுமான தன்மையோ அதுபோன்றே ஒருசில ஆறிசைப் பண்களும் ஒரு சில ஐந்திசைப் பண்களுமாம். இவை, கருவியிலும் அழுத்தமாக நரம்புகளை இழுத்து வாசிப்பதும் கண்டத்தால் இடையீடின்றி தொடர்பு நிலையில் அழுத்தம்பெறப் பாடப்பெறுவதுமாகும்,

மென்மைக்குரியனவாய பண்களாவன
(மென்மைப் பண்கள்)

க. துக்கராகம் (வட்டி)

உ. பியந்தை (பெயர்திறம்) (யாழ்பதம்)

ங. காஞ்சி (மேகாஞ்சி)

ச. புறநீர்மை (நேர்திறம்)

ரு. மேகராகம்

சு. பஞ்சமம் (கூர்ந்த பஞ்சமம்) எனவிவை.

---

61. மென்மைக்குரியனவாய பண்கள் என்பது சிறிய இசைகளாக அமைந்தும் அவற்றை மிகவும் மென்மையாகவே இசைத்தும் பாடுதற்கும் உரியனவாம்.

துக்கராகம் வெளிப்படும் பண்ணுகவு'ம் மென்மைக்குரியது மாகவும் உளது. காஞ்சியும் அவ்வாறே, சிகண்டி வெளிப்படும் பண்ணுகவும் வன்மைக்குரியதுமாகவும் உளது. கொல்லிவராடியும் அவ்வாறே. தக்கராகமும், அவ்வாறே. கவுசிகமும் அவ்வாறே. அந்தாளியும், இந்தளமும் அவ்வாறே.

---

இருவயனமும் (இருபாற்குமுரியன) ஆரியப்பெயர், தமிழ்ப்பெயர் நெறிக்குரியனவாய பண்களாவன,

க. காந்தார பஞ்சமம்

உ. மேகராகக்குறிஞ்சி

ங. தக்கேசி (நவிர்)

ச. கொல்லி

ரு, காந்தாரம் (தாரப்பண்டிறம்)

சு. சாயவேளர்கொல்லி எனவிவை.

மற்றிவை ஒரோவழி மயங்கினுலும் வரையார் எனவும் கொள்க.

ஆரியப்பெயர் நெறிக்குரியனவாய பண்களாவன்

க. தோடி (விளரிப்பாலை) (கோடிகம்)
உ. கவுரி (கவுடி) (தேசிகம்)
ங. மத்தியமாரி (செந்துருத்தி) (செந்திறம்)
ச. நாட்டம்
ரு. சுத்தகாந்தாரம்
சா. இராமகிரி (இராமக்கிரி) (வேடராமக்கிரி)
எ. தேசற்கிரி (தேசாக்கிரி)
அ. நளுத்தை (இந்தோளம்)
கூ வங்காளம்
ய. வராடி
யக. வயிரவம் (பயிரவம்) (பைரவம்) எனவிவை.

---

62. **மேகராகக்குறிஞ்சி,** வன்மைக்குரியதுமாகவும் இருபாற்குரியதுமாகவும் உளது.

**தக்கேசி,** வெளிப்படும் பண்ணாகவும் இருபாற்குமுரியதாகவும் உளது.

---

தமிழ்ப்பெயர் நெறிக்குரியனவாய பண்களாவன்

க. தக்கராகம் (அராகம்)
உ. பழந்தக்கராகம்
ங. துக்கராகம் (வட்டி)
ச. தக்கேசி
ரு. கொல்லி
சா. இந்தளம் (வடுகு) (நளுத்தை)
எ. அந்தாளி (அந்தாளிக்குறிஞ்சி)
அ. நட்டராகம்
கூ. பஞ்சமம்
ய. காந்தாரம் (தாரப்பண்டிறம்)

௰க. புறநீர்மை (நேர்திறம்)

௰உ. குறிஞ்சி எனவித்திறத்தனயாவும் என்றவாறு.

மேலும், இவ்விரண்டிற்கும் உரியன.

க. இராமக்கிரி (வேடராமக்கிரி)

உ. கொண்டற்கிரி (கொண்டி) (குந்தளம்)

ங. தேசற்கிரி (தேசாக்கிரி)

ச. குச்சரி (தமிழ்க்குச்சரி)

ரு. ஆரியக்குச்சரி

சு. மேகராகம் எனவிவை.

இனி போலி நிறமாவன, வருமாறு

**"வராடி யொப்பது வசந்தன் கொல்லி"**
**(வராடி, தமிழ்வராடி)**

**"தேசி (தேசாளி) யொப்பது, சீகாமரமாமே."**

**"நளுத்தை என்பது இந்தளம்"**

**"குறிஞ்சி ஒப்பது அந்தாளியே (அந்தாளிக்குறிஞ்சி)"**

**"பஞ்சமம் ஒப்பது பழந்தக்கராகம்"**

என, இத்திறத்தனவெனக் கொள்க.

---

63. தேசியென்ற தேசாளி ஏழிசைப்பெரும்பண், சீகாமரம் ஆறிசைப்பண்.

---

ஒப்பதான என்பதான பெயர் வேறுபாடுகள் சிற்சில வருமாறு :

**"தோடி என்பது நிருபதுங்கராகம்"**

**"மாளவகிரி என்பது அருட்புரி"**

**ஒப்பது கவுசிகம்**

**"தேசிகம் என்பது கவுடி"**

" சாளர பாணியொப்பது நாட்டம் "

" தக்கேசியொப்பது காம்போதி "

" செந்துருத்தி யென்பது செந்திறம் "

" சாதாரி ஒப்பது வராடி "

" குறண்டி என்பது தேவகிரி "

நட்டராக முதலிய பிறவுமன்ன. ௩.

---

64. ஒப்பது என்பதும், என்பது என்பதும், வெவ்வேறு பொருளினைத்தரும். ஒப்பது என்பது ஒருப்பண்ணைப் போன்றே. வேறொரு பண் எனப்படும். ஆயினும் இரண்டும் வெவ்வேறு பண்களேயாம். என்பது, என்பது, ஒரு பண்ணிற்கே அமைந்த வேறொரு பெயரேயாம் அதாவது பரியாயப் பெயர்.

---

௬௬

64. காலங்க ளெட்டிற்குங் காலத் ததிதெய்வம்
மேலா மிருநான்கு மென்றூர்கள் — பாலாய
பண்ணு மறுபத்து நான்கென்றூர் பாரிடத்
தெண்ணிய காலத் தியல்பு.

என்னுதலிற்றோவெனின்? காலங்களையும், காலத்ததி தெய்வங்களையும் காலப்பண்களையும் உணர்த்திற்று. ச.

---

65. காலங்கள் எட்டாவன, சிறுகாலை காலை நண்பகல் ஏற்பாடு மாலை அரையிருள்யாமம் யாமம் வைகுறு (வைகறை) இவை ஒவ்வொரு காலத்திற்கும் ஏழரை நாழிகை கொள்ளப்படும். ஒவ்வோர் ஏழரை நாழிகைக்கும் எட்டு, எட்டுப்பண்கள் பாடுதல் வழக்கு போலும். புறநீர்மைப் பண் முதலாக வழக்கு கூறப் பெறுதலால். சிறுகாலைப் போதிருந்து பாடுதல் மரபென அறிக. அதி தெய்வங்கள் எட்டாவன, பிரமன், திருமால், உருத்திரன், ஈசன், சதாசிவன், சூரியன், சந்திரன், இட்ட தெய்வம்.

67. காலை யிளவுச்சி சாயங்கா லையென்றே
மாலை நடுநாள் வைகறையின் — சீலமா
வெண்ணுந்தே சம்முறக் காலமா வெட்டெட்டுப்
பண்ணுங்கோர்த் தாருலகிற் பாத்து (பகுத்து)

என்னுதலிற்ருேவெனின்? காலங்களுணர்த்திற்று. ரு.

68. பிரமன் திருமா லுருத்திரன் பெட்பார்
தரமன்னு மீசன் சதாசிவன் — ருரணிக்தக்
கண்ணுல் பகல்மதியம் காயவா னென்றெண்மர்
விண்ணேர்க்குப் பண்வகுப்பார் வேறு.

என்னுதலிற்ருேவெனின்? காலத்ததி தெய்வங்களை உணர்த்திற்று. சு.

(காயவான், ஆகாயமாகிய வானம்)

69. புறநீர்மை காந்தாரங் கௌசிகந் தக்கேசி
மறநீர்மை யில்லா வராடியாம் — உறுநீர்மை
இந்தளஞ்சா ளரபாணி யுடன் செந்துருத்தி
வந்த முதற்கால வைப்பு.

என்னுதலிற்ருேவெனின்? காலப்பண்களையுணர்திற்று.

க. புறநீர்மை
உ. காந்தாரம் (சுத்தகாந்தாரம்)
ங. கௌசிகம்
௪. தக்கேசி
ரு. வராடி
சு. இந்தளம்
எ. சாளரபாணி
அ. செந்துருத்தி

எனவிவை, முதற்காலத்துப் பண். ஆதலான் பிரமனைப் பாடப்படுமென்பது, உணர்த்திற்று. எ.

70. தோடிநட்ட ராகஞ் சுரங்கௌடி தொன்மாலைப்
பாடு பழந்தக்க ராகமே — மூடித்
திரண்ட சாதளியே காமரஞ் செம்பாலை
இரண்டாய சாமத் தியல்பு. (சுரந்தாளி)

என்னுதலிற்றோவெனின்? இரண்டாம் சாமத்திற்குரிய பண்களை உணர்த்திற்று.

க. தோடி (நிருபதுங்கராகம்)
உ. நட்டராகம்
ந. பஞ்சுரம் (சுரம்)
ச. தாளி (புங்காளி) அல்லது கௌடி
ரு. பழந்தக்கராகம்
சு. சாதாளி
எ. காமரம் (சீகாமரம்)
அ. செம்பாலை

எனவிவை. இரண்டாஞ்சாமத்துப்பண். ஆதலால் திருமாலைப் பாடப்படுமென்பதுணர்த்திற்று. அ.

71. குறண்டி வயிரவம் பஞ்சமங் கோடாத்
திறங்கிளர் கொல்லியாந் தேசி — நிறந்திகழுஞ்
சான்றோர் புகனுட்டந் தக்கரா கஞ்சிகண்டி
மூன்றுஞ்சா மத்தின் முறை. (கொல்லியந்தேசி)

என்னுதலிற்றோவெனின்? மூன்றும் சாமத்திற்குரிய பண்களை உணர்த்திற்று.

---

66. திருமால் காப்புக்கடவுள். திருமால் திருவடி நிலை பிறவித் துன்பத்தைக் கெடுக்கும், எனக் கூறப்பெறும்.

"அவன் துணைமலர்த்தாளிணை ஏன்று
துயர்கெடுக்கு மின்பமெய்தி" (சிலம்பு)

க. குறண்டி

உ. வயிரவம்

௩. பஞ்சமம்

௪. கொல்லி

௫. தேசி (தேசாளி)

௬. நாட்டம்

௭. தக்கராகம்

௮. சிகண்டி

எனவிவை. மூன்றாஞ்சாமத்துப் பண் ஆதலான் உருத்திரனைப் பாடப்படுமென்பதுணர்த்திற்று. ௬.

72. அந்தாளி சாவகன் மேகரா கக்குறிஞ்சி
கந்தாரந் துக்கரா கத்துடனே — சிந்தைசேர்
நெய்தல் குறிஞ்சிசுர நேரிசைக ளாமெட்டும்
பைதல்நா லாஞ்சாமப் பண்.
(எட்டுமமைதல்) (கந்தாரம்—காந்தாரம்)

என்னுதலிற்றோவெனின்? நாலாம் சாமத்திற்குரிய பண்களை உணர்த்திற்று.

க. அந்தாளி (அந்தாளிக்குறிஞ்சி)

உ. சாவகக்குறிஞ்சி (சாவகன்)

௩. மேகராகக்குறிஞ்சி

௪. காந்தாரம் (தாரப்பண்டிறம்)

௫. துக்கராகம்

௬. நெய்தல் (செவ்வழி)

௭. குறிஞ்சி

௮. அரும்பாலை (நேரிசை) அல்லது கொல்லி

எனவிவை. நாலாஞ்சாமத்துப்பண் ஆதலான் ஈசனைப் (ஈசுவரனைப்) பாடப்படுமென்பதுணர்த்திற்று. ௭.

73. குச்சரி மல்லாரி மேகரா கங்குறிஞ்சி
மிக்க கிரிநாலு மென்றுரைத்தார் — தொக்கசீர்
மஞ்சார் மலைச்சிலம்பா மான்றேர் வழுதியிவை
அஞ்சாஞ்சா மத்திற் கடை.

என்னுதலிற்றோவெனின்? ஐந்தாம் சாமத்திற்குரிய பண்களை உணர்த்திற்று.

க. குச்சரி (தமிழ்க்குச்சரி)
உ. மல்லாரி (நாட்டை)
ங. மேகராகம்
ச. குறிஞ்சி (முதிர்ந்த குறிஞ்சி)
ரு. மாளுவகிரி
சா. தேசற்கிரி
எ. இராமகிரி
அ. கொண்டற்கிரி

(ரு–அ: மிக்க கிரிநாலு)

எனவிவை, ஐந்தாஞ்சாமத்துப்பண் ஆதலான் சதாசிவனைப் பாடப்படுமென்பதுணர்த்திற்று. ருக.

74. கவ்வாணம் பஞ்சமங் காஞ்சிமருள் கந்தருவம்
எவ்வாய பாவியா ழக்குறிஞ்சி — செவ்வேசெந்
தீருய் மதுரமா யந்திமுதி ரிந்தளமே
ஆருஞ்சா மத்திற் கடை.

என்னுதலிற்றோவெனின்? ஆறும் சாமத்திற்குரிய பண்களை உணர்த்திற்று.

க. கவ்வாணம்
உ. பஞ்சமம் (பின்னபஞ்சமம்)
ங. காஞ்சி (மேகாஞ்சி)
ச. மருள்
ரு. வியாழக்குறிஞ்சி

௬. செந்து

எ. அந்தி

அ. முதிர்ந்தவிந்தளம்

எனவிவை ஆருஞ்சாமத்துப் பண் ஆதலின் சூரியனைப் பாடப்படுமென்பதுணர்த்திற்று. ௬௨.

75. வராடி யிரண்டும் வடகெவுடி நாட்ட
மிரண்டுமியல் காந்தார பஞ்சமந் — தராதலஞ்
சூழுவே ளாகொல்லி தற்பியந்தை யிவ்வெட்டு
மேழாஞ்சா மத்திலே யெண். (அராகமியல்)

என்னுதலிற்றோவெனின்? ஏழாம் சாமத்திற்குரிய பண்களை உணர்த்திற்று.

க. பெரியவராடி } வராடியிரண்டு
உ. தீபவராடி }

ந. கௌடி (வடகெவுடி)

ச. அரியநாட்டம் (மவுரி)

ரு. பெரியநாட்டம் (சாயவேளர்கொல்லி)
(நாட்டம் இரண்டு)

௬. காந்தாரபஞ்சமம்

எ. வேளா கொல்லி (தமிழ்வேளர்கொல்லி)

அ. பியந்தை (பெயர்திறம்)

எனவிவை. ஏழாஞ்சாமத்துப் பண் ஆதலான் சந்திரனைப் பாடப்படுமென்பதுணர்த்திற்று. ௬ந.

---

67. உலகிற்குக் கண்ணாகிய ஆதித்தன், சூரியன், பகல்வாயில் உச்சிக்கிழான் கோட்டம் அவனது கோயில்;

உலகு தொழத் தோன்றிய மலர்கதிர் மதியம், சந்திரன் அவனது கோயில் நிலாக்கோட்டம். (சிலம்பு)

76. அனுத்திர பஞ்சம மந்தாளி பாடை
மனுப்புல முல்லை மருதம் — தனித்தனியே
நட்டார் புகழ்நளினி! நள்ளியோ டியாமைதனு
வெட்டாஞ்சா மத்திலே யெண். (மனுக்கொடி)

என்னுதலிற்றோவெனின்? எட்டாம் சாமத்திற்குரிய பண்களை உணர்த்திற்று.

க. அநுத்திரபஞ்சமம்
உ. அந்தாளிபாடை
ந. மனுக்கொடி (கொடி நாகராகம்)
ச. முல்லை (முல்லையாழ்) (படுமலைப்பாலை)
ரு. மருதம் (மருதயாழ்–கோடிப்பாலை)
சா. நள்ளி (சீராகம்)
எ. யாமை
அ. தனு (தனுக்காஞ்சி)

எனவிவை, எட்டாஞ்சாமத்துப்பண் ஆதலான் இட்ட தேவதையாகிய (வானமன் - வாறமன்) தேவதைகட்குப் பாடப்படுமென்பது உணர்த்திற்று. இவ்வாறு சொல்லப் பட்ட பண்கள் அறுபத்துநான்கும் அவ்வக்காலங்களிலே அந்தந்தத்தேவதைகள் மகிழ்வெய்த அவர்கள் படைத்த பண்களைப்பாடுதல் மரபென்றவாறு. மச.

77. தன்னெனிசேர் தக்கேசி தன்ம முதலாகவே
யெண்ணில் வயிரவ மீருக — வண்ண
வாணுதலாய்! வல்லோர் வகுத்த பதினறும்
மாணுறும் மங்கலமாம் பண்.

என்னுதலிற்றோவெனின்? தக்கேசி முதலாய் வயிரவம் ஈருக வல்லோர் வகுத்த மங்கலப் பண்கள் பதினறும் உணர்த்திற்று. அவையாவையோவெனின்? மரு.

78. தக்கேசி காந்தாரங் கௌசிகஞ் சாதாளி (சாதாரி)
திக்கார் புறநீர்மை செந்துருத்தி — தொக்கவியற்
செங்கயற்கட் பூங்கொடியே! சீகாமரஞ் சீகண்டி
மங்கலப் பண்ணுமென்னு மெட்டு. (மாறு)

என்னுதலிற்றோவெனின்? மங்கலப் பண்களின் முன்னெட்டுப் பண்களையுணர்த்திற்று.

அவை க. தக்கேசி
உ. காந்தாரம் (தாரப்பண்டிறம்)
ந. கௌசிகம்
ச. சாதாளி அல்லது சாதாரி
ரு. புறநீர்மை
சு. செந்துருத்தி
எ. சீகாமரம்
அ. சிகண்டி

எனவிவை, முதலெட்டு மங்கலப் பண்கள் என்றவாறு,
மசு.

79. அந்தாளி பாடை யராக மிரண்டெழுத்
தைந்தனுட் டங்கெவுடி பஞ்சமமு — மிந்து
வழிவந்த மாறு! வழுதியார் கோவே
மொழிவந்த மங்கலமா மெண். (மங்கலமாமுன்)
(வைரவமாமெண்) (வைரவமா முன்)

என்னுதலிற்றோவெனின்? பின்னெட்டு மங்கலப் பண்களை உணர்த்திற்று.

அவை க. அந்தாளிபாடை
உ. மேகராகம் } அராகமிரண்டு
ந. தக்கராகம் }
ச. அரும்பாலை (பாலைப்பண்)

---

68. மங்கலப் பண்ணாய் நரப்படைவுமுடைத்தாயிருக்கின்ற பாலைப்பண். (சிலம்பு உரை) எழுத்தைந்து. அரும்பாலை.

ரு. நாட்டம்

சா. கௌடி

எ. பஞ்சமம்

அ. வயிரவம்

எனவிவை பின்னெட்டு மங்கலப் பண்களாம். ஆகவிவை பதினாறும் மங்கலப்பண்ணுமென்றவாறு, யஎ.

80. சீரார் திருமகளுஞ் செந்தா மரைமலரும்
ஏரார் பரிதிமதி யிந்நான்கும் — கார்மேனிக்
கண்ணனை முன்வைத்துக் காப்புரைக்கக் கற்றுணர்ந்தோர்
வண்ணம் புணர்க்கும் வகை.

என்னுதலிற்றோவெனின்? இவ்வாருன இசை வகைகள் (பாடலுடன்) புணர்க்குமிடத்து மொழிக்கு முதலாகிய மங்கலச் சொற்களை உணர்த்திற்று. அவை, யாவையோவெனின்?

க. திருமகள்

உ. செந்தாமரைமலர்

ந. சந்திரன்

ச. சூரியன்

என இந்த நாலும் மொழிக்கு முதலாக, புணர்க்குக என்றவாறு. வண்ணம் புணர்க்குமிடத்துத் திருமாலைக் காப்பாக வைத்துச் செய்கவென்றவாறு. யஅ.

---

69. காப்பு முதலிசைக்குங் கடவுள் தானே
பூக்கமழ் தண்டுழாய் புனைந்தவ னுமவன்
முன்னுற மொழிதற் சூரிய னுமெனப்
பன்னி யுரைத்தனர் பாவலர் தாமே.

81. **செப்புங் குறிலைந்துந் தேவர்க்காம் செப்பியபின்**
**அப்படியே யந்தணரோ டைவர்க்காம்** ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

செப்புங்குறிலைந்தும் தேவர்க்காமென்றது, தேவர்களைத் தேவபாணி பாரித்துப் பாட்டுப் புணர்க்குமிடத்துக் குற்றெழுத்தைந்தினலும் புணர்க்கப்படுமாமென்றவாறு.

செப்பியபின் அப்படியே அந்தணரோடைவர்க்காம் என்பது அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் ஒழிந்த சாதிகளென்னுமிவர்களுக்கு முன்சொன்ன குற்றெழுத்து ஐந்தினையும் நிரல் நிரையே பாக்களுக்கு முன்வைத்துப் புணர்க்கவென்றவாறு. ௰௬

82. **பாலன் குமார னரசன் விருத்தனுடன்**
**கோலு மரணமெனக் கூறினர் — ஞாலத்தோர்**
**பேர்முதலா மூன்றெழுத்தும் பேணிக்கொள்**
**பின்னிரண்டுஞ்**
**சீர்மையிலை யென்றும் சிதை.**

என்னுதலிற்றோவெனின்? இசை புணர்க்குமிடத்து யாவனெருத்தன் பேர் முதலெழுத்துப் பாலன்.

இரண்டாமெழுத்துக் குமாரன்.
மூன்றாமெழுத்து அரசன்.
நாலாமெழுத்து விருத்தன்.
அஞ்சாமெழுத்து மரணம்.

இவனது பெயர் முதலெழுத்தறிந்து மொழிக்கு முதல் கொண்டு இசை புணர்க்கவென்றவாறு. ௨௰

---

70. தன்னெழுத்துப் பாலன் குமர னிரண்டாகு
மன்னவர்க்கு மூன்றும் வகுக்குங்கால் — றுன்னிய
நஞ்சார் விருத்தமா நான்கா கிலைந்தாகி
லெஞ்சா மரணத் தியல்பு.

83\. குன்றுக் குழலன் மங்கதன் கவுண்டியனும்
நன்றாகப் பண்பாடும் பாணரைச் — சென்றே
யடிவணங்கிப் பொன்கொடுப்ப ரந்தணர் முன்னேயோர்
துடியே ரிடைமடவாய் சொல்.

என்னுதலிற்றோவெனின்? இசைக்குரியவர்களை உணர்த்திற்று

குன்று இசையுடைய குழலன், மதங்கன், கவுண்டியன் என்ற இவர்களில் நன்றாகப் பண் பாடுதற்குரிய பாணனை அடிவணங்கிப் பொன்கொடுப்பர் என்றவாறு.

பண்ணென்பது இசைக்குப் பெயர். இசைகளால் ஆயது பண். இசை பாணுக்கு உரித்தாதலான் (பண், பாண், பாட்டு) பாணனென்று பெயராயிற்று. பாணனாய இவனை அடிவணங்கிப் பொன்கொடுப்பர் என்றவாறு.

இம்மூன்று திறத்துப் பாணரிலும்
சுத்தத்திற்குரியவன் குழலன்
தமிழ்க்குரியவன் மதங்கன்
சாளவத்திற்குரியவன் கவுண்டியன்

இம்மூவரிடத்தும், முன்சொன்ன நான்கு வருணத்தாரும் ஏனையோரும் சென்று பொன்கொடுத்து, தம்மை பாடச் செய்தல் மரபென்றவாறு. உங.

84\. சுத்த மறையோர்க்காஞ் சாளவஞ் சோர்வில்லா
மத்தக் களிற்றானை மன்னர்க்காம் — வித்தகனார்
செய்ய தமிழ்வணிகர் வேளாளர்க் கென்றுரைத்தார்
பொய்யிலுரை நரலோர் பொதிந்து. (சாளகம்)

என்னுதலிற்றோவெனின்? சுத்தம் சாளவம் தமிழெனும் சாதியோசை மூன்றினும் பரப்பிரம சாமவேதம் பாடும் இடத்துச் சுத்தம் மறையோர்க்குப் பாடுவர்.

---

71\. சுத்தம், சாளகம், தமிழ் என்னும் சாதியோசைகள் மூன்று. (சிலம்பு உரை)

அரசர்க்குத் தாமமென்கிற நிறத்திற் சாளவம் பாடுவர், வணிகர்க்கும், வேளாளர்க்கும் தமிழ்நிறம் பாடப்படும் எனக்கொள்க.

தமிழோசை (பலவோசைத் தமிழ்)
சுத்தம் சாத்துவித வோசை
சாளவம் இராசத வோசை

85. செப்பிய சிந்து திரிபாதஞ் சீர்ச்சவலை
தப்பொன்று மில்லாச் சமபாத — மெய்ப்படியுஞ்
செந்துறை வெண்டுறையே தேவபாணி
வண்ணமெனப்
பைந்தொடியா யின்னிசையின் பா.

என்னுதலிற்றோவெனின்? முன் சொன்ன ஓசைகளுடனும் இசைப்பாக்களுடனும் கிரியையுடனும் பொருந்தும் இசைப்பாக்கள் வருமாறு உணர்த்திற்று.

அவை, க. சிந்து
உ. திரிபாதம் (திரிபதை)
ங. சவலை (சீர்ச்சவலை)
ச. சமபாதம்
ரு. செந்துறை
சு. வெண்டுறை
எ. தேவபாணி (பெருந்தேவபாணி, சிறுதேவபாணி)
அ. வண்ணம். சிறுவண்ணம், பெருவண்ணம்

எனப்பல. இப்பாக்களாம். என்றவாறு. இவற்றிற்குச் செய்யுள் வருமாறு.

---

72. மாயோன் - திருமால். பாணி - தேவபாணி. பாணி யென்றது - பாட்டு. அது தேவர்ப்பராவுதலாயிற்று; என்னை? "ஏனை யொன்றே, தேவர்ப்பராவுதன் முன்னிலைக் கண்ணே" (தொல். செய் 138) என்றாராகலின். அது முத்தமிழ்க்கும் பொது.

(௬) சிந்துக்குச் செய்யுள் வருமாறு :

"மாணுருவா யன்று மண்ணே முளந்தானை
பூணுருவந் திகழ்மார்ப னென்றியாங் – கோடுவாங்
கன்றால் விளவின் கனியுதிர்த்த கார்முகிலை
மன்றாடி யென்று மதி"

"பேயின் முலையுண்டு பின்னையாய் நின்றானை
ஆய னிவனென் றறிந்தா ரறிந்திலரே"

இவை, இரண்டடியாய்த் தம்மிலொத்து வந்த சிந்து கண்டுகொள்க.

---

அஃது இயற்றமிழில் வருங்காற் கொச்சகவொரு போகாய் வரும். வரும்வழியும் பெருந்தேவபாணி, சிறுதேவபாணியென இரு வகைத்தாய் வரும். என்னை? "கூறிய வுறுப்பிற் குறைபாடின்றித், தேறிய விரண்டு தேவ பாணியும்" என்றாராகலின். அங்ஙனம் வரும் தரவினை நிலையெனவடக்கி முகத்திற்படுந் தரவினை முகநிலையெனவும், இடைநிற்பனவற்றை இடைநிலையெனவும், இறுதியினிற்பனவற்றை முரி நிலையெனவும், பரவுதற் பொருண்மையாற் பெயர் கொடுத்தார். செய்யுளியலின் கண்ணும் எனக் கொள்க.

இனி, இசைத் தமிழில் வருங்கால், முகநிலைகொச்சம் முரி யென்ப ஒரு சாராசிரியர். அன்றி இசைப்பா, இசை யளவுபா வென்னும் இரு பகுதியுள் இஃது இசைப்பாவின் பகுதியென்ப. அது பத்துவகைப்படும் : செந்துறை, வெண்டுறை, பெருந்தேவ பாணி, முத்தகம், பெருவண்ணம், ஆற்றுவரி, கானல்வரி, விரி முரண், தலைபோகுமண்டிலமென. என்னை? "செந்துறை வேண்டுறை தேவபா ணிய்யிரண்டும், வந்தன முத்தகமே வண்ணமே – கந்தருவத், தாற்றுவரி கானல் விரி முரன் மண்டிலமாத், தோற்று மிசையிசைப்பாச் சுட்டு" என்றார் இசைநுணுக்கமுடைய சிகண்டியாரென்க.

இன்னும் சுத்தம் சாளகம் தமிழென்னும் சாதியோசைகள் மூன்றினுடனும் கிரியைகளுடனும் பொருந்தும் இசைப்பாக்கள் ஒன்பது வகையென்ப; அவை : சிந்து, திரிபதை, சவலை, சமபாத விருத்தம், செந்துறை, வெண்டுறை, பெருந்தேவபாணி,

(உ) திரிபாதத்திற்குச் செய்யுள் வருமாறு:
(திரிபாதம், மூவடிச்செய்யுள்)

"பாம்பு கயிறாக் கடல் கடைந்த மாயவ
னீங்குநம் மானுள் வருமே லவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ"

"கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவ
னின்றுநம் மானுள் வருமே லவன்வாயில்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ"

"கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்
எல்லைநம் மானுள் வருமே லவன்வாயின்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ"

என மூன்றடியாய்த் தம்மிலொத்து வந்த திரிபாதம் கண்டுகொள்க.

(ஊ) சவலைக்குச் செய்யுள் வருமாறு:

"அலைகட லடைத்தனை யமரினை யுயர்த்தனை
சிலையினை யிறுத்தனை திருவமர் மார்பினை
மலையினை எடுத்தனை மாலே!
நிலையினை யறிபவ ரியாவரு மில்லை."

"திரிபுர மெரித்தனை செந்தழ லேந்தினை
கரியினை உரித்தனை காளம துண்டனை
பெருவரை வளைத்த பிஞ்ஞக!
வொருவகை யமரரு முணர்வது சின்னே"

என ஈற்றயலடி, யொரு சீர்குறைந்து வந்த சவலை எனக் கண்டுகொள்க.

---

சிறுதேவபாணி, வண்ணமெனவிவை. என்னை? "செப்பரிய சிந்து திரிபதை சீர்ச்சவலை, தப்பொன்று மில்லாச் சமபாதம்-மெய்ப்படியும், செந்துறை வெண்டுறை தேவபாணி வண்ண மென்ப, பைந்தொடியா யின்னிசையின் பா" என்றார் பஞ்சமரபுடைய அறிவனா ரென்னுமாசிரியரென்க. (சிலம்பு உரை.)

௪. சமபாதத்திற்குச் செய்யுள் வறுமாறு

"காரார் தோகைக் கண்ணார் சாயற்
றேரா ரல்குல் தேனூர் தீஞ்சொல்
போரார் வேற்கட் பொன்னே யின்னே
வாரா ரல்லர் போனார் தாமே"

இக்கலி விருத்தம், நான்கடியினும் சீரொத்து முற்றக் குருவே வந்தமையான் சமபாதம் எனப் பெறுவது கண்டுகொள்க.

௫. செந்துறைக்குச் செய்யுள் வருமாறு

"கொன்றை வேய்ந்த செல்வ னடியிணை
யென்று மேத்தித் தொழுவோம் யாமே"

"நீரின் கடவுட் சேவடி யிணையைப்
பேரின் பஞ்சேர்ந் தெய்துத லிடமே"

"ஆதி பகவ னம்மலர்ச் சேவடி
நீதியா லேத்தி நினைவோம் யாமே"

என்பது செந்துறைச் செய்யுள் வந்தவாறு கண்டுகொள்க

௬. வெண்டுறைச் செய்யுள் வருமாறு :

"தாளாள ரல்லாதார் தாம்பல ராயக்கா லென்னா மென்னும்
யாளியைக் கண்டஞ்சி யானைதன் கோடிரண்டும்
பீலிபோற் சாய்த்து விடும்பிலிற் றியாங்கே"

---

73. கிரியைகள், தாளக்கிரியை எனவும் எடுத்தல் முதலாயினவும் எனக் கூறப்பெறுதும். வண்ணம் ஒரு வகையான் மூன்று வகைப்படும் பெருவண்ணம் இடைவண்ணம் வனப்பு வண்ணமென அவற்றுள் பெருவண்ணம் ஆறாய்வரும் இடைவண்ணம் இருபத்தொன்றாய் வரும் வனப்புவண்ணம் நாற்பத்தொன்றாய் (நாற்பத்தொன்பதாய்) வரும்.

(சிலம்பு உரை)

"பாலா ரரவணையிற் பண்டொருநாட் டுயின்றானைப்
பாரீர் பாரீர்
கோல வரிவில் லிருத்தானைக் குலமறைகள்
மாயவனே யென்று வாழ்த்துமா லாங்கே"
(மாலவனே) (வழுத்து மாலாங்கே)

இவை மூன்றடியாய் வந்த வெண்டுறை எனக் கண்டு கொள்க.

எ. தேவபாணிக்குச் செய்யுள் வருமாறு :

* "மலர்மிசைத் திருவினை வலத்தினில் வைத்தனை
மறிதிரைக் கடலினை மதித்திட வடைத்தனை
இலகொளித் தடவரை கரத்தினி லெடுத்தனை
இனநிரைத் தொகைகளை யிசைத்தலி லழைத்தனை
முலையுணத் தருமவள் நலத்தினை முடித்தனை
முடிகள்பத் துடையவ னுரத்தினை யறுத்தனை
உலகனைத் தையுமொரு பதத்தினி லொடுக்கினை
ஒளிமலர்க் கழறரு வதற்கினி யலழத்துமே"

இது எண் சீரான்வந்த ஆசிரிய விருத்தப் பெருந்தேவபாணி கண்டுகொள்க. பண், கவுசிகம், தாளம்—இரண்டு ஒத்துடைத் தடாரம்.

---

74. *மாயோன்பாணி இஃது எண் சீரான் வந்த கொச்சக ஒரு போகு. இனம் பட்டு வருதலிற் சிறு தேவபாணி கூறல் வேண்டுவதாயிற்று. இதனுள் இறைவனை முற்கூறாது மாயோனை முற்கூறியது என்னையோவெனின்? மாயோன் காவற்கடவுளாய் அருளை அருந்தலானென்க.

(சிலம்பு உரை)

பெருந்தேவபாணி, சிறுதேவபாணி என்பவையாவும் பாவினங்களேயன்றி, பெரியதேவர், சிறியதேவர் என்பதன்று சிறுதெய்வத்திற்குப் பெருந்தேவபாணிப் பாடலும், பெருந் தெய்வத்திற்குச் சிறுதேவபாணிப் பாடலும் பாடப்பெறும்.

சிறுதேவபாணிக்குச் செய்யுள் வருமாறு :

"வண்ணமலர்ச் சரங்கோத்து மதனவேள் மிகவெய்யக்
கண்ணனவோர் புலனுகக் கனல்விழியா
லெரித்தனையால் (விழித்தனையால்)
எண்ணிறந்த தேவர்களு மிருடிகளு மெழுந்தோட
ஒண்ணுதலாள் பாகங்கொண் டொருதனியே
யிருந்தனையே"

இது நாற்சீரடியாய் வந்த கலி விருத்தச் சிறுதேவபாணி கண்டுகொள்க. இதற்குப் பண்–அத்தராட்டம். (திராடம்)

இனிப் பிள்ளையார் பாணிக்குச் செய்யுள் வருமாறு கண்டுகொள்க.

"படைக்கும் புவிப்பந்த மலற்கும் புலந்துங்க
னுடைச்சங், கைவிட்டின்பத் தொழுக்கம்
பெருத்தொன்றுங்
கடத்தின் கடக்கம்ப மதத்திற்செம் புதற்கொம்பும்
படற்கு மனுக்கன்புற் றிருக்குங் கருத்துண்டே"

இதற்குப்பண் வியாழக்குறிஞ்சி.

---

75. * இப்பாடலடிகள் பதிற்றுப்பத்தின் முதற்பத்தில் உள்ளன போலும்

"குறைகடன் மதிக்கு மதலையை
குறுமுய லொளிக்கு மரணினை
இரவிரு ளகற்று நிலவினை
இறையவன் முடித்த வணியினை
கரியவன் மனத்தி னுதித்தனை
கயிரவ மலர்த்து மவுணனை
பரவுவர் தமக்கு நினதிரு
பதமலர் தபுக்க வினையையே.
இது சந்திரனைப் பாடும் தேவபாணி. (சிலம்பு உரை)

வண்ணத்திற்குச் செய்யுள் வருமாறு :

"செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த
சினவாழி
முல்லைத்தார் மறுமன்னர் முடித்தலையை முருக்கிப்போய்
எல்லைத்தீர் வியன்கொண்மூ விடைநுழையு மதியம்போன்
மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந் தொளித்ததே"

இது நாற்சீரான்வந்த கொச்சகக் கலிப்பா சிறுவண்ணம் கண்டுகொள்க.

பெருவண்ணத்திற்குச் செய்யுள் வருமாறு :

* "எஃகுமே விலங்கு கொய்சுவற் புரவி ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... னின்குடனுற்றே.

எனப் பதிற்றுப்பத்தினுள் பத்துச் சொற்களை சான்றோர் பாடின வண்ணங்கள் நூறுங் கண்டுகொள்க.

இனிப் பாணர் புணர்த்த வண்ணம் வருமாறு :

"தாரபட்டங் கட்டியமன் மதனைத்தண் ருடைநிழற்கீழ்
ஈரபட்டங் கட்டினன்கா ணிராச ராசன்
வீரபட்டங் கட்டிவிட்ட னன்மெய்யடி யாரையன்று
சேரபட்டங் கட்டினன் கெட்டனன் சேனையோடே"

இதற்குப்பண் வியாழக்குறிஞ்சி, தாளமேகம். (ஏகதாளம்)

இனிப் பாணர் புணர்த்த தேவபாணி வருமாறு :

* "கரியா மிடற்கரி கால காலா
கிரியத ரியினுரி யாவரி கொள்சிலையா
கிரியத ரியினுரி யாவரி கொள்சிலையா
வரியா வா வரிகொள் புலியா ரதளா"

---

76. * இப்பாடல்களின் தூய உருவம் புலப்படவில்லை. முகநிலை, கொச்சகம், முரி, இசைப்பா, இசையளவுபா என்பன அவற்றுள் ஏதேனும் ஒரு பகுதியில் இருத்தல் கூடும்.

"நீறு புனைந்தா ரெரிகொள் சடைமுடியர்
எரியி னுருவா ரரியம்பிகை
கரிவரி யவடிகள் எலான வாயினவே"

இதற்குப் பண் தக்கேசி, தாளம் தூசிமட்டம்

எனவிப்பாக்களாலே, செய்திசை புணர்க்குமிடத்துக் கொள்க. உந.

86. சான்றோர் சதுராட்டி சரவட் டணைமுகண்டி
ஏன்ற பிரவந்தந் தலைக்கண்டி — தோன்றலே
உக்கிர சந்துருவை யாபோக மாந்திரிபின்
தொக்கவியல் சூழ்சுத்தப் பா. (மாந்திரியம்)

என்னுதலிற்றோவெனின்? சுத்தப்பாக்களையுணர்த்திற்று

க. சதுராட்டி
உ. சாவட்டணை
ந. முகண்டி
ச. பிரவந்தம்
ரு. தலைக்கண்டி

எனவிவை ஐந்தும் ஆரிய வடசொல்லாற் புணர்ப்பது.

அவற்றுள் சதுராட்டியாவது,

க. உக்கிரகம் (உக்கிரசம்)
உ. துருவை
ந. யாபோகம்

என்னும் மூன்றடியானும் புணர்ப்பதெனக் கொள்க.

---

77. "செந்துறை வெண்டுறை தேவபா ணியிரண்டும்
வந்தன முத்தகமே வண்ணமே — கந்தருவத்
தாற்றுவரி கானல்வரி முரண் மண்டிலமாத்
தோற்று மிசையிசைப்பாச் சுட்டு" (இசை நுணுக்கம்)

சாவட்டணையாவது ... ... ... ... ... ... ...

முகண்டி (முதலடி) யாவது,

மூன்றடியாய் அடி முகங்கடோறும் கண்டத்தைக் கம்பித்துப் பாடிப் புணர்ப்பது.

பிரவந்தமாவது,

அடிவரையிலே பொருள்வர ஒருதாளத்திற் புணர்ப்பதன்றிப் பலதாளத்தாலும் புணர்ப்பது.

தலைக்கண்டியென்பது,

முதலடி தொடங்கி ஈற்றடியளவுமாய்த் தூணியாக்கிப் புணர்ப்பது.

க. உக்கிரசம் என்பது முதலடி (உக்கிரம்)

உ. துருவை என்பது இரண்டாமடி

ங. ஆபோகம் என்பது மூன்றாமடி

ச. ஆந்திரியமென்பது நாலாமடி. இவ்வாறு கண்டுகொள்க.

இவை புணர்க்குமிடத்து ஏழு கீதமும் ஏழு தாளத்துடனே புணர்ப்பது. கீதங்கள் தாளப்பெயரானும் வழங்கப்படும். உச.

---

78. உக்கிரம், துருவை, ஆபோகம், பிரகலை என்பன ஈண்டு நாலுறுப்புக்களும் குறைபாடில்லாதபடி உருவென வேண்டியது. மூன்றுறுப்பாகவே வருவனவுமுளது ஆதலின் அவை இரண்டாமடியே ஈற்றடியாகப்பாடி முடிவன. அவை மங்கலத்துக்குப் பொருந்தா எனக் கொள்க. (சிலம்பு உரை)

(துருவை, துருமை) (ஆலோகம் - ஆயோகம்)
(வேறுபாடம்)

87. தோன்று துவைந்தி சந்தி சதுராங்கி
ஏன்ற பெருஞ்சுரத்தோ டின்நான்கும் — தோன்ற
உகமதிநி தேசாய முயர்சந் தியென்று
தகவைத்த சாளவத்தின் பா.

என்னுதலிற்றோவெனின்? தேசாளப்பாக்கள் வருமாறு உணர்த்திற்று.

க. துவைந்தி (துவையந்தி)

உ. சந்தி

ங. சதுராங்கி

ச. பெருஞ்சுரம்

எனத் தேசாளப்பா, நான்கும் கண்டுகொள்க.

க. துவைந்தியாவது,

வடசொல்லாலே ஓரடி எண் சீராக இரண்டு அடியாலே புணர்ப்பது.

உ. சந்தியாவது,

நாற்சீரோரடி மூன்றடியாகப் புணர்ப்பது.

ங. சதுராங்கியாவது,

ஓரடி எண் சீரால் நாலடியாற் புணர்ப்பது.

ச. பெருஞ்சுரமென்பது,

அடிவரையறையின்றிப் புணர்ப்போன் பெரு அளவாக, பல தாளத்தாலும் புணர்ப்பதெனக் கொள்க.

உகமதிநி தேசாயமுயர்சந்தியென்று தகவைத்த சாளவத்தின்பா என்பது அடிநான்கின் பெயர்.

இவற்றை நிரை நிரையாக்க,

உகமென்பது முதலடி (மதி)
நிதேயென்பது இரண்டாமடி
சாயமென்பது மூன்ருமடி
சந்தியென்பது நாலாமடி

தேசாள கீதங்கள் புணர்க்குமிடத்து சக்கு, சூழாதியாகப் புணர்க்குமாம்.

தேசாள நிறம் தமிழ்ப்பாவினுக்கும் பொருந்தும் ஆதலின் சூழாவது, தேசி வடுகு சிங்களம் என்னும் மூன்று வகைக் கூத்துமாடி முற்றுப்பெறுதல் என்னை ?

"மூவகை யாடலு முற்றிய வதன்பெயர்
சூழென மொழிப துணிந்திசி னோரே"

என்ருராகலின்.

தேசாள கீதங்களுந் தாளப்பெயரால் வழங்குமெனக் கொள்க. உடு.

88. இருதலையாய் நான்கா யெழுவா யடியின்
வருதலையை யொருவிகற்பான் மாறிப்–பொருதலைகள்
பிற்கூறிப் பாப்பின் னிருவிகற்பம் பேசில்
உற்ற தமிழ்விகற்ப மாம்.

(பொருவிகற்பான் — முகமறப்பான்)
(னிருவிகற்பம் — இரண்டும்) (வேறுபாடம்)

என்னுதலிற்ருேவெனின் ? தமிழ்ப்பா விகற்பநடை உணர்த்திற்று.

---

79. **பிரவந்தமாவது,** அடிவரையறையின்றிப் பல தாளத்தால் புணர்ப்பது. (சிலம்பு உரை)

விகற்ப நடையாவது,

நாலடியாய் இரண்டு தளையாய்ப் பின்னிரண்டடியும் பிரிவிலவாகி வருவனவும் அடிவிகற்பமாகி வருவனவும் என்றவாறு.

இவற்றுக்குச் செய்யுள் வருமாறு,

**"பஞ்சவர்க்குத் தூதாகிப் பாரதப்போர் வென்றானைக்**
**கஞ்சனுக்கு மாமருக னென்றியாங் கருதுவதோ சான்றோர்**
**விண்ணவர்க்கு மேலாகி மெய்ப்பொருளா முட்பொருளை**
**மண்ணவர்க்கு மாசறுக்கு மறையன்ன பொருளினையே"**

என இரண்டடி விகற்பம் கண்டுகொள்க.

எழுத்தாலசையினாற் (இசையினாற்) சீராகவென்றவாறு
உசு.

89. **காலை ... ... ... ... யாழெழுத்திற் பாவாற் புணர்க்க**
**... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...**
**பண்ணுமி யாழ்வண்ணம் பாடிடச் சிந்தென்றார்**
**எண்ணத்தான் மிக்காய்ந்தோ ரெண்.**

என்னுதலிற் றோவெனின்? இசைப்பாக்களில் தாளத்துடனே பொருந்தும் பாக்கள் வருமாறு உணர்த்திற்று,

எழுத்து அசை சீர் தளை என இந்நான்குவகையானும் இசை புணர்க்குமிடத்து யாழெழுத்தாற் புணர்க்கப்படும்,

க. வண்ணம்
உ. தேவபாணி
ங. உருத்தளி

இவை அசையிற் புணர்க்கப்படும்.

மூர்த்திகளைப் பார்த்தருளிச் செய்த நாடகப்பாக்கள்,

சிந்துகள்
திருப்பாட்டு
நிறம்

எனவிவை, தலையினாலும் புணர்க்கப்படும். இவ்வாறிசை புணர்ப்பது கண்டுகொள்க. உஎ.

90. பத்தியமுஞ் சித்திரமு மாம்பலும் பாத்திபமு
மொத்த குவளையோ டிவ்வைந்துஞ் — சுத்தமாம்
வெற்றித்த வண்ணம் புணர்க்கவென் றேதினார்
முற்றுணர்ந்த மெய்த்தமிழோர் முன்.

என்னுதலிற்றோவெனின்? வண்ண வகைப்பாடு உணர்த்திற்று.

க. பத்திய வண்ணம்
உ. சித்திர வண்ணம்
ங. ஆம்பல் வண்ணம்
ச. பாத்திப வண்ணம்
ரு. குவளை வண்ணம் என ஐந்து

வகைப்பாட்டும் உணர்த்திற்று. (வகைப்பாடு) அவற்றுள்,

க. பத்திய வண்ணமாவது,

தலைப்பாவே இரண்டடியாலும் நாலடியாலும் முதன்மொழி கடைமொழியுடன் மண்டிலம் கொண்டு வரப்பாடுவது.

உ. சித்திர வண்ணமாவது,

ஐந்தாய் அந்தாதி எழுவாயடியும் ஈற்றடியும் மூண்டிலங்கொள்ளப் பாடிப் புணர்ப்பது.

௩. ஆம்பல் வண்ணமாவது,

எழுவாய் வடித்த முட்டொடர்பு பட்டு முதலடி மண்டிலங்கொண்டு வரப்புணர்ப்பது. பிறவுமன்ன.

௪. பாத்திப வண்ணம் ... ... ... ... ... ... ...

௫. குவளை வண்ணம் ... ... ... ... ... ... ...

இவ்வாறல்லது வேறு வண்ணம் புணர்க்க விரகில்லையென்று மறுக்கப்பட்டது. (விரகு — சூழ்ச்சி, வகை) ௨அ.

91. எடுத்த வரையாலே யெவ்வரவும் போக்கி
யடுத்த கிரியை வரினு — முடிப்பித்து
முன்செய்த மரத்திரையான் முற்றுவித்து மூளுவிக்கை
தன்செய்கை யாகத் தகும்.

என்னுதலிற்றோவெனின்? யாதானுமொரு கட்டளையினாலே தன்னாற்பெருக்கலாமளவும்கிரியைகளைச் சேர்த்திக்கிரியைகளை முடிப்பித்து முன்பு எடுத்த கட்டளைகளிலே முடிக்கை கடனென்றவாறு. ௨௯.

92. பன்னிய பாத்தானம் புணர்ப்புப் பொருணிறங்கள்
மன்னிய பண்ணோ டிராகங்கள் — நன்னுதலாய்
சொல்லிய கால முரைப்போ ரிடமறிதல்
நல்லிசையோர் கண்ட நெறி.

என்னுதலிற்றோவெனின்? யாதானுமொருவன் இசை புணர்க்கும் இடத்து இவ்வகையாற் புணர்க்கப்படும் என்றவாறு என உணர்த்திற்று.

அவையாவன,

௧. பாவறிதல்

௨. தாளமறிதல்

௩. புணர்ப்பறிதல்

ச. பொருளறிதல்
ரு. நிறமறிதல்
சா. பண்ணறிதல்
எ. இராகமறிதல்
அ. காலமறிதல்
கூ. உரைப்போரையறிதல்
ம. தானமறிதல்

எனவிவ்வாறும் கண்டுகொள்க. நய

93. இசையன்றி முற்றேன்று தவ்வி சையினுள்ளே
யசைவறு கொட்டுப் பிறக்கும் — வசையற்ற
கொட்டதனுள் ளேமுற்றக் கூத்தாகுங் கூத்தினுள்
மட்டுற்ற தாளம் வரும்.

என்னுதலிற்றேவெனின்? தாள முதலாயினும் கொட்டும் கூத்தும் இசையும் முழவும் தாளமுமெனவரும் என்பது உணர்த்திற்று. நக.

94. தோன்றிய தாளமுத லோசையா மோசை
யான்ற தொழிற்கண் முழவமா — மேன்று
நடத்தை நிருத்தமாய் நாட்டினர் நூலின்
மடக்கொடியா யிந்த மரபு.

என்னுதலிற்றேவெனின்? தாளம், முதல் தோன்றியது எனக்கொள்க என்றவாறு. அதற்கேற்ப தோற் கருவிகளும் முற்றேன்றியதென்றவாறு என உணர்த்திற்று. நஉ.

வகையொழிபு.
வகையொழிபு மரபு முற்றும்.
குரு வாழ்க.
சிவாசலபதி சகாயம்.

இசை மரபு முற்றும்.

( மரபு உ. )

# வாச்சியமரபு

## (உட்பிரிவு) முழவு மரபு — க.

### தோற்கருவி

95. ஓதிய கீத நிருத்த வழியிசையாய்ச்
சோதியாய் நின்றியங்கு மம்முழவை — நீதியாய்ப்
பேரும் முறையும் பிண்டமும் பேரெழுத்தும்
பாரு ளறிவிப்பேன் பார்த்து.

என்னுதலிற்றோவெனின்? தோற்கருவி இலக்கணம் உணர்த்திற்று. முன்சொன்ன கீதங்களுடனும் நிருத்தங்களுடனும், இசைகளுடனும், பொருந்தி இயைபு பட்டு ஆதியாய் நின்று தொழிற்படுகின்ற முழவை முறையானே பெயரும் முறைமையும் பிண்டமும் பேரெழுத்தும் பாருள்ளார்க்கு வெளிப்பட அறிவிப்பேன் என்றவாறு.

க. பெயராவது,

தோற்கருவிகளாற் செய்யப்பட்ட முழவினை வரையறுக்குமது.

உ. முறைமையாவது,

க. வன்மை
உ. மென்மை
ங. சமம்

௪. முதல்
௫. இடை
௬. கடை
௭. உத்தமம்
௮. மத்திமம்
௯. அதமம்
௰. நாள்
௰௧. காலம்
௰௨. வீரம்
௰௩. அகம்
௰௪. அகப்புறம்
௰௫. புறம்
௰௬. புறப்புறம்
௧௭. பன்மை, என்கிற

முறைமைகளும் இவற்றது அதிதேவதைகளையும் அறிவிக்குமது.

௩. பிண்டமாவது,

முழவுகளுடைய அளவும், நீளமும், உறுப்பும் இவற்றைச் சொல்லுவது

---

80. வாச்சிய மரபு. வாச்சியம் – வாத்தியம். கொட்டு எனப் பெயர் பெறும். கொட்டுமென்றது கூத்து விகற்பங்களுக்கு அமைந்த வாச்சியக் கூறுகளுமென்றவாறு, அவை கீதாங்கம் நிருத்தாங்கம் உபயாங்க மென்ப. கீதாங்கம் – கீதத்துக்கு வாசிப்பது. நிருத்தாங்கம் – நிருத்தத்துக்கு வாசிப்பது. உபயாங்கம் – இரண்டிற்கும் வாசிப்பது. சிலம்பு – அரங். அடியார்க்கு நல்லாருரை.

முழவு என்னும் தோற்கருவியின் பெயர் உபலக்கணத்தால் ஏனைய தோற்கருவிகளையும் தழுவிற்று.

தோற்கருவியின் இலக்கணம் நால்வகையாய்க் கூறப்படும்,

ச. பேரெழுத்தாவது,

முழவுகளின் பெயர் வகைகளையும் முழவுகளின் முறைகளையும் ஓசையூட்டாநின்ற பாடலெழுத்துக்களையும் சோடணைகளையும் மற்றும் வழங்குவன சொல்வது என நான்கு வகைப்படும். அவற்றுள் முழவுகளுடைய பெயர்கள் வருமாறு.

"பேரிகை படகம் இடக்கை யுடுக்கை
சீர்மிகு மத்தளஞ் சல்லிகை கரடிகை
திமிலை குடமுழாத் தக்கை கணப்பறை
தமருகந் தண்ணுமை தாவில் தடாரி
யந்தரி முழவொடு சந்திர வளையம்
மொந்தை முரசே கண்விடு தூம்பு
நிசாளந் துடுமை சிறுபறை யடக்கம்
ஆசில் தகுணிச்சம் விரலேறு பாகம்
தொக்க வுபாங்கி துடிபெரும் பறையென
மிக்க நூலோர் விரித்துரைத் தனரே."

என்றாராகலின், முழவுகளுடையபெயர்களையுணர்த்திற்று.

க. பேரிகை
உ. படகம்
ங. இடக்கை
ச. உடுக்கை
ரு. மத்தளம்
சா. சல்லிகை
எ. கரடிகை
அ. திமிலை
கூ. குடமுழா
ய. தக்கை

---

அவை—

"பேரொடு முறையே பிண்ட மெழுத்தே
வாரணி முலையாய் தோலின் வகையே"

அரன் அரங்கத்தொகை!

௰க. கணப்பறை

௰உ. தமருகம்

௰ங. தண்ணுமை

௰ச. தாவில் தடாரி (தவில்)

௰ரு. அந்தரி

௰சா. முழவு

௰எ. சந்திரவளையம்

௰அ மொந்தை

௰கூ. முரசே (முரசு)

உ௰. கண்விடு தூம்பு

உக. நிசாளம்

உஉ. துடுமை

உங. சிறுபறை

உச. அடக்கம் (அடக்கப்பறை)

உரு. (மாசில்) தகுணிச்சம்

உசா. விரலேறு

உஎ. பாகம்

உஅ. தொக்கு உபாங்கி (தொக்கவுபாங்கம்)

உகூ. துடி

ங௰. பெரும்பறை எனக் கண்டுகொள்க.

இவையெனத் தோலாற் செய்யப்பட்ட கருவிகள் முப்பதும் கண்டு கொள்க.

அவையாதிக் கருவியெனக் கொள்க. மற்றும் வழங்குவனவுமுள. அவை தோற்கருவியெனக் கூடச் சொல்லாதது. என்னேயோவெனின்? அகத்தியன் கருக்கள் எனக் கொள்க.

---

81. இவை அகமுழவு, அகப்புறமுழவு, புறமுழவு, புறப்புற முழவு, பண்ணமைமுழவு, நாண்முழவு, காலை முழவென ஏழு வகைப்படும். (சிலம்பு உரை)

அவை,

இனி, க. வன்மை
உ. மென்மை
ங. சமம்
ச. தலை
ரு. இடை
சா. கடை
எ. வீரம் என ஏழு வகைப்படும்.

க, அவற்றுள் வன்மைக் கருவி வருமாறு,

"நிசாளந் துடுமை முரசே பேரிகை
பறையே யடக்கம் சிறுபறை மொந்தை
முறையே பெரும்பறை நாழிகைப் பறையொடு
துடியென வைத்துத் தொகுத்தனர் புலவர்"
வன்மைக் கருவியாக வைத்தே.

என்னுதலிற்றோவெனின்? வன்மைக் கருவியாமாறு உணர்த்திற்று.

க. நிசாளம்
உ. துடுமை
ங. முரசு
சா. பேரிகை
ரு. தேசி
சா. திமிலை
எ. குடமுழா
அ. பாகம் (தப்பு)

---

82. கூத்தநூலார், முழவை, அகம், புறம், அகப்புறம், புறப்புறம், பன்மை, நாள், என ஆறாக வகுத்துக் கூறுவர்.

"அகமே புறமே யகப்புறம் புறப்புறம்
பன்மை நாளெனப் படுமறு வகையே"

க. கணப்பறை
ம. அடக்கப்பறை
மக. சிறுபறை
மஉ. மொந்தை
மங. பெரும்பறை
மச. நரழிகைப்பறை
மரு. துடி எனவிவை

பதினைந்தும் வன்மைக் கருவியெனக் கொள்க.

உ. மென்மைக் கருவி வருமாறு.

"தக்கை குடுக்கை தகுணிச்சந் தண்ணுமை
மிக்க உடுக்கை விரலேறு பாங்கி
அந்தரி முழவொடு சந்திர வளையம்
மொந்தை மொழிந்த பைந்தொழிற் றடாரி
கண்விடு தும்பே தமருக மென்றிவை
மண்மிசை மென்மைக் கருவியாய் வைத்தே."

என்னுதலிற்றோவெனின்? மென்மைக் கருவியாமாறு உணர்த்திற்று.

---

83. பேரிகை முதல் பெரும்பறை இறுதியான தோற்கருவிளின் இயல்புரைத்தவனும், அவற்றைச் செய்தவனும் நந்தி என்பது கூத்தநூல்.

" நந்தியே முழவினய முரைத்தானே
இவையெலா நந்தி யியற்றின னென்ப."

முழவம் ஒருமுக முதல் ஒன்பது முக ஈருக ஒன்பது வகைப் பட்டிருக்கும் என்பர்.

ஒருமுக மிருமுக மும்முக நான்முகம்
ஐம்முக மறுமுக மெழுமுக் மெண்முகம்
ஒன்பான் முகமென் றொன்பான் முழவே. கூத்தநூல்

க. தக்கை

உ. குடுக்கை

௩. தகுணிச்சம்

௪. தண்ணுமை

௫. உடுக்கை

௬. பாங்கி (விரலேறு பாங்கி)

எ. முழவு (அந்தரி முழவு)

அ. சந்திரவளையம்

௯. மொந்தை

௰. தடாரி (பைந்தொழிற்றடாரி)

௰க. தூம்பு (கண்விடுதூம்பு)

௰உ. தமருகம்

இவை பன்னிரண்டும் மென்மைக் கருவியெனக் கொள்க.

௩. சமக்கருவி வருமாறு.

"மத்தளஞ் சல்லி படகங் கரடி
இத்திற நான்குஞ் சமமென மொழிப"

என்னுதலிற்றோவெனின்? சமக்கருவியாமாறு உணர்த்திற்று.

க. மத்தளம்

உ. சல்லி

௩. படகம்

௪. கரடி

இவை நான்கும் சமக்கருவியெனக் கொள்க.

---

84. மத்தளம்-மத்து ஓசைப் பெயர். இசையிடனாகிய கருவிகட்கு எல்லாம் தளமாதலான் மத்தளமென்று பெயராயிற்று. இக்கருவி பல கூத்துக்களுக்குரித்தாகலானும் பாடலெழுத்தான் உள்ளே பிறத்தலானும் முழவுகளெல்லாம் இதனுள்ளே பிறத்தலானும் இதனை நான்முகனென்பர். (சிலம்பு-உரை)

சு. தலைக்கருவி வருமாறு, கூ.

96. மன்னியசீர் மத்தளஞ் சல்லி யிடக்கையுடன்
பின்னுங் கரடிகைநற் பேரிகையுஞ் — சொன்ன
படகங் குடமுழவம் பாங்காயிவ் வேழும்
அடைவே முதற்கருவி யாம்.

என்னுதலிற்றோவெனின்? தலைக்கருவியாய், முதற் கருவியாமாறு உணர்த்திற்று. (உத்தமக் கருவிகள்)

க. மத்தளம்
உ. சல்லி
ங. இடக்கை
ச. கரடிகை
ரு. பேரிகை
சா. படகம்
எ. குடமுழவம்.

இவையேழும் உத்தமமான கருவிகள் என்றவாறு. தலைக்கருவியெனக் கொள்க. உ.

---

சல்லிகை என்பது சல்லென்ற ஓசையை உடைத்தாதலாற் பெற்ற பெயர். கரடி கத்தினாற்போலும் ஓசையை உடைத்தாதலாற் கரடிகை என்று பெயராயிற்று, பிறவற்றையும் இங்ஙனம் உய்த்து உணர்ந்து கொள்க. (சிலம்பு உரை)

85. "தரித்த மதங்கமொடு மத்தளஞ் சல்லி
பெருத்த கரடிகையே பேரி — உரத்த
படகங் குடமுழவம் பாங்காய வேழும்
அடைவே முதற்கருவி யாம்"

அகமுழவாவன, முன்சொன்ன உத்தமமான மத்தளம் சல்லிகை, இடக்கை, கரடிகை, பேரிகை, படகம் குடமுழாவென இவை. (சிலப்பு உரை)

ரு. இடைக்கருவி வருமாறு.

97. தண்ணுமை தக்கை யுடுக்கை தகுணிச்சம்
கண்விடு தூம்பு விரலேறு — வண்ணத்
தமருகந் தடாரி சார்துடியு பாங்கி
அமுதகுண் டலியந் தரி.

(அமுதகுண்டி யந்தரி யென்) (வேறுபாடம்)

என்னுதலிற்றோவெனின்? இடைக்கருவியாமாறு உணர்த்திற்று.

க. தண்ணுமை
உ. தக்கை
ங. உடுக்கை
ச. தகுணிச்சம்
ரு. கண்விடுதூம்பு
சு. விரலேறு
எ. தமருகம்
அ. தடாரி
கூ. துடி
ய. உபாங்கி
யக. அமுதகுண்டலி
யஉ. அந்தரிமுழவு

எனப் பன்னிரண்டும் மத்திமமான கருவிகளென்றவாறு. இவை இடைக்கருவியெனக் கொள்க.

சு. கடைக்கருவி வருமாறு.

"பறையே பாகஞ் சிறுபறை யடக்கம்
கறைவேற் கண்ணய் கடையாங் கருவி"

என்னுதலிற்றோவெனின்? அதமமான கடைக் கருவியாமாறு உணர்த்திற்று.

க. பறை

உ. பாகம்

ங. சிறுபறை

ச. அடக்கம்

இவை நான்கும் அதமமான கடைக்கருவியென்றவாறு.

இவற்றில் பறையென்பது கணப்பறை
பாகமென்பது தப்பு
சிறுபறையென்பது நெமுகுபறை
அடக்கமென்பது ஆனைப்பறை

இவை கடைக்கருவியெனக் கொள்க.

எ. வீரக்கருவி வருமாறு.

**"முரசே நிசாளந் திமிலை துடுமை
யரசர்க் கெய்தும் பிறர்க்கல வென்ப"**

என்னுதலிற்றோவெனின்? வீரக்கருவியாமாறு உணர்த்திற்று.

க. முரசு

உ. நிசாளம்

ங. திமிலை

ச. துடுமை

இவை நான்கும் வீரமுழவென்றவாறு. இவை வீரக் கருவியெனக் கொள்க. (பண்ணமை முழவு)

---

86. அகப்புறமுழவாவன முன்சொன்ன மத்திமமான தண்ணுமை, தக்கை தகுணிச்சம் முதலாயின.

புறமுழவாவன, முன்சொன்ன அதமக்கருவியான கணப்பறை முதலாயின.

இடைக்கருவி சல்லி, கடைக்கருவி உடுக்கை, (சிலம்பு உரை).

" அகமே புறமே புறப்புறம் பன்மை
நாளே காலமென் றாறும் வகுத்து
வாள்போல் விழியாய் வைத்தனர் முன்னோர் "

என்னுதலிற்றோவெனின்? முன்சொன்ன வேற்றுமைப் பகுதியாமாறுணர்த்திற்று.

அவை, க. அக முழவு
உ. புற முழவு
௩. புறப்புற முழவு
௪. பன்மை முழவு
௫. நாள் முழவு
௬. காலை முழவு

என அறுவகைப்படும்.

அவற்றுள், அகமுழவாவன,

முன்சொன்ன உத்தமமான கருவிகள்

அவை, க. மத்தளம்
உ. சல்லி
௩. இடக்கை
௪. கரடிகை
௫. பேரிகை
௬. படகம்
௭. குடமுழவம்.

இவையேழுமெனக் கொள்க

---

87. பண்ணமை முழவாவன, முன்சொன்ன வீரமுழவு நான்கும். அவையாவன முரசு, நிசாளம், துடுமை, திமிலை எனவிவை. புறப்புற முழவாவன முற்கூறப்படாத நெய்தற்பறை முதலாயின. (சிலம்பு உரை)

புறமுழவாவன, மத்திமமான தண்ணுமை முதலான பன்னிரண்டுமெனக் கொள்க.

அவை க. தண்ணுமை
உ. தக்கை
ந. உடுக்கை
ச. தகுணிச்சம்
ரு. கண்விடுதூம்பு
சு. விரலேறு
எ. தமருகம்
அ. தடாரி
கூ. துடி
ய. உபாங்கி
யக. அமுதகுண்டலீ
யஉ. அந்தரிமுழவு

புறப்புறமுழவாவன,

அதமமான பறை முதலிய நான்குமெனக் கொள்க.

அவை க. பறை
உ. பாகம்
ந. சிறுபறை
ச. அடக்கம்

பன்மை முழவாவன (பண்ணமை முழவு)

அவை க. முரசு
உ. நிசாளம்
ந. துடுவையெனக் கொள்க (துடுமை)

நாள்முழவாவது, நாழிகைப்பறை (ஆவதுநாட்பறை)

காலைமுழவாவது, துடியென்றவாறு.

இவ்வாறு அறுவகையுங் கண்டுகொள்க. ந:

98. நான்முகனுர் மத்தளஞ் சல்லி திருமாலாம்
ஆன்விடை யேறுரர்தி யாவஞ்சி — மானக்
கறைவெழுவேற் கண்மடவாய் காதலுடன் மூன்றின்
முறைமையீ தென்று மொழி.

என்னுதலிற்ருேவெனின்? முதன் முழவு மூன்றிற்கும் அதிதேவதைகளை உணர்த்திற்று.

மத்தளத்திற்கு நான்முகன் தெய்வம் (அதிதேவதை.)

இதற்கு, மெல்லன்பது, ஓசை ஆதலால் மத்தளம் என்று பெயராயிற்று. இக்கருவி, பல கூத்துக்கும் உரித்தாதலானும் பாடலெழுத்துக்கள் இதனுள்ளே பிறத்தலானும் முழவுகள் எல்லாம் இதனுள்ளே பிறத்தலானும் இது நான்முகன் என்று பெயராயிற்று.

சல்லி யென்ற முழவுக்கு நாராயணன் தெய்வம்.

இது சல்லென்கிற ஓசையை உடைத்து ஆதலான் சல்லி என்று பெயராயிற்று. இது வன்மையை உடைத்தாதலால் நாராயணனென்று பெயராயிற்று.

(சல்லி – சல்லிகை)

ஆவஞ்சி, இதற்குத் தெய்வம் உருத்திரன். ஆவினுடைய வஞ்சித்தோலைப் போர்த்தலால் ஆவஞ்சி என்றும் பெயராயிற்று.

குடுக்கை, குடுப்பைக்கையாக உடைத்தாதலால் குடுக்கையென்று பெயராயிற்று.

---

98. ஆவஞ்சி எனினும் குடுக்கை எனினும் இடக்கை எனினும் ஒக்கும் அதற்கு ஆவினுடைய வஞ்சித்தோலைப் போர்த்தலால் ஆவஞ்சி என்று பெயராயிற்று. குடுக்கையாக அடைத்தலால் குடுக்கை என்று பெயராயிற்று. வீணைக்கிரியைகள் இடக்கையாற் செய்தலின் இடக்கை என்று பெயராயிற்று.

(சிலம்பு உரை)

இ ட க் கை, இவ்வினைக்கிரியை இடக்கையினாலே செய்தலால் இடக்கையென்று பெயராயிற்று என்பது இவற்றின் முறைமை இவ்வாறு கண்டுகொள்க என்றவாறு. ச.

99. முதலு மிடையுங் கடையுமெனச் சொன்னார்
உதய மதிய முபயம் — பதமுகத்தாற்
பாங்காய கீத நிறுத்த வழக்கிசைய
நீங்காம லாடப் படும்.

என்னுதலிற்றோவெனின் ? முன்சொன்ன முழவுகள் மூன்று பெயர் பெற்றனவென உணர்த்திற்று.

அவை க. முதல்
உ. இடை (இடைக்கோள்)
ங. கடை என்பன.

முதற்கருவியாவது,

மத்தளமானது, முதற்றாளம் கொள்ளுமிடத்துத் தகாரங் கொள்ளுதலால் இதற்கு முதற்கருவியென்று பெயராயிற்று.

இடைக்கோளாவது, (இடைக்கருவியாவது) சமக்கருவி சல்லியாதலால் இடைக்கருவியென்று பெயராயிற்று. குடுக்கை கடைக்கருவிக்குரித்தாதலால் இதனைக் கடைக் கருவியென்றும் வழங்கப்படும் எனக் கொள்க. இவ்வாறு முன்சொன்ன முழவுகள் மூன்று பெயர் பெற்றனவெனக் கொள்க.

உதயம் மதியம் உபய மென்பவற்றுள்,

உதயமென்பது சூரியன்
மதியமென்பது சந்திரன்

முன்சொன்ன மூன்று முழவினையும்,

சூரியாங்கமென்றும்
சந்திராங்கமென்றும்
உபயாங்கமென்றும்

சொல்லவுமமையும். (உபயாங்கமென்பது இரண்டிற்கும் உரியது.)

பத முகத்தால் என்பது பதங்கள் பாடுவதற்கேற்ப, ஆடப்படுமென்பது, அதாவது, மேற்கூறிய வாச்சியங்களினாலே கீத நிருத்த வழக்கிசையைப் பாடப் படும் என்றவாறு. (வாசிக்கப் பெறும்)

(ஆடப்படும் - என்பதற்குப் பாடப்படும் என்ற வேறுபாடமுளது)
௫.

100. மூன்று முதற்கடவுள் மூன்று மிடைக்கடவுள்
ஆன்ற கடையு மஃதென்ப — ஏன்றுலகில்
மன்னவரும் மூவரே வாணெடுங்கண் மாமாதே
துன்னும் கருவிக்குச் சூட்டு.

என்னுதலிற்றோவெனின்? அதிதேவதைக்குரிய (தெய்வம்) எல்லாக்கருவிகளையும் உணர்த்துதல் நுதலிற்று.

மூன்று முதற்கடவுளென்பது

க. பிரமன் (பிரமா)
உ. விட்டுணு
ங. உருத்திரன்

இவர்கள் மூவருக்குமியற்றப்படுவன, முன்சொன்ன முதற்கருவிகளேழும் என்றவாறு.

---

89. முதற்கருவிகள் ஏழும் மத்தளம், சல்லி, இடக்கை, கரடிகை, பேரிகை, படகம், குடமுழவம் எனப்படுவ,

மூன்றுமிடைக்கடவுளென்பது,

க. வயிரவன்

உ. முருகன்

ங. துர்க்கை

என இவர்கள் மூவர்க்கும் இயற்றப்படுவன, முன் சொன்ன இடைக்கருவிகள் பன்னிரெண்டுமென்றவாறு,

ஆன்றகடையுமஃதென்ப என்பது. கடையான கடவுள் மூவரென்பது

க. காளி

உ. சாத்தன்

ங. காடுகாள்

இவர்கள் மூவர்க்குமியற்றப்படுவன, முன்சொன்ன கடைக்கருவிகள் நான்குமென்றவாறு.

மன்னவரும் மூவரென்பது,

க. சேரன்

உ. சோழன்

ங. பாண்டியன்

இவர்களுக்குரிய முன்சொன்ன வீரமுழவுகள் நான்கும் என்றவாறு.

துன்னும் கருவிக்குச் சூட்டு என்பது இவையிற்றுக்கு இதுவே முறையென்றவாறு. சூ:

முழவுமரபு முற்றும் (தோற்கருவி)

குருவாழ்க

சிவாசலபதி சகாயம்

---

90. இடைக்கருவிகள் பன்னிரண்டு தண்ணுமை, தக்கை, உடுக்கை, தகுணிச்சம், கண்விடுதூம்பு, விரலேறு, தமருகம், தடாரி, துடி, உபாங்கி, அமுதகுண்டலி, அந்தரிமுழவு.

கடைக்கருவிகள் நான்கு பறை, பாகம், சிறுபறை, அடக்கம், வீரக்கருவி நான்கு முரசு, நிசாளம், திமிலை, துடுமை;

# வாச்சிய மரபு—உ

## (உட்பிரிவு)

## பிண்ட மரபு

(பிண்டம், முழவு வாச்சியத்தின் முழுவுருவம்)

101. **கருங்காலி செங்காலி வேம்பு பலாக்கஞ்சம்**
**நெருங்கியசீர்த் தண்குரவ மண்ணும் — பொருந்திய**
**ஊனமில் லாம லுயர்நிலத்திற் ரேன்றியவாம்**
**மானின் விழிமடவாய் வைப்பு.**

(ஆனமில் லாம லயர் நிலத்துத் தோன்றியவாம்) (வேறுபாடம்)

என்னுதலிற்றோவெனின்? முழவுகளுக்குப் பிண்டமாகிய மரங்களிவை என்பதுணர்த்திற்று.

அவை க. கருங்காலி
உ. செங்காலி
ங. வேம்பு
ச. பலா
ரு. கஞ்சம்
சா. குரவம்
எ. மண் எனவிவை.

இவற்றுள், கஞ்சத்தாற் செய்வது உத்தமம்
மரத்தாற் செய்வது மத்திமம்
மண்ணாற் செய்வது அதமம்

இம்மரங்களில் க. வடுப்படாதே
உ. பொதுப்படாதே
ங. சாவாதே
ச. மூவாதே

இளமையின்றியே நடுவயதாய் உயர்ந்த சமதலமான நிலத்துளவான மரங்கள் முழவுகளுக்காமென்றவாறு.

இவைகளுள்,

கஞ்சத்தாற் செய்வது குடமுழவம்.
கருங்காலியாற் செய்வது இடக்கை.
செங்காலியாற் செய்வது சல்லி.
வேம்பாற் செய்வது மத்தளம்.
பலாவாற் செய்வது கரடிகை.
குரவாற் செய்வது பேரிகை.

(குராமரம்—குரவு)

சல்லி, இடக்கை ஒழிந்தனவெல்லாம் இவை ஒன்றும் பெறுதகாலத்து மண்ணுற் செய்வதும் உத்தமம்.

இவையொழிய, இவற்றிற்கு வேறொருமரம் பெறுவெனக் கொள்க.

"எத்திற முழவு மித்திற மாமே" (அத்திறமாமே)

என்பதனுல் மற்றுமெல்லா முழவுகட்கும் இவையல்லது மரமில்லையெனக் கொள்க. ஏனையவற்றிற்கு, வரையறை இல்லையெனக் கொள்க. இனியிவற்றின் அளவுகளைச் சொல்லுதும். ௧.

102. ஏன்றநீ ளம்மாகி லொட்டோடு நாற்பதாம்
ஆன்றவிர லெட்டெட்டே சுற்றளவு — தோன்ற
முகவளவு பன்னிரண்டா மொய்குழ லாய்குண்டி
ணகவளவு தான்பதினு றும்.

என்னுதலிற்றேவெனின்? பேரிகைக்குரிய அளவு உணர்த்திற்று. பேரிகைக்கு நீளம், விரல் நாற்பத்தெட்டு இதன் சுற்றளவு அறுபத்துநாலு விரல், இதன் முகவளவு பன்னிரண்டு விரல். குண்டளவு பதினுறு விரலென்றவாறு. ௨.

103. கையிற் பெருவிரலாற் காண வலக்குண்டு
மெய்பட்ட பிண்டிடமு மேலிரட்டி — வையார்
அயில்போலு முண்கண் ணுயிழை மாதே
இயல்பினுல் வார்த்துளையு மெட்டு. ௩.

104. மத்தியங் குட்ட மதன்பெருமை யின்னளவு
பத்தினுட னுறுவிரல் பைந்தொடியே — யுத்தமமாம்
ஆன்ருே லிருமுகமும் போர்த்து வளையிட்டுத்
தான்ருேலே யூட்டத் தகும்.

என்னுதலிற்ருேவெனின்? பேரிகைக்கு எய்திய சில இலக்கணமுணர்த்திற்று.

வலக்குண்டினளவு, பெருவிரல்.

இடக்குண்டினளவு, பெருவிரலிரட்டி.

வார்த்துளை யெட்டுக்கடிப்பு, நடுவிரலினுல் பருமையாய்ப் பதினுறுவிரல் நீளமாகக் கொள்க.

உத்தமமான ஆவின்தோலை இரண்டு முகத்திலும் போர்த்து வலமுகத்திலே துளையிட்டுப் போர்த்துத் தோலின் வாராலேயெடுக்கை மரபென்றவாறு. ௪.

பேரிகை முற்றும்.

105. அன்னம் படகத் தளவுநாற் பஃதாகும்
சொன்ன வதன்சுற் றறுபதாம் — மன்னு
முகவள வெண்விரலா மொய்குழலாய் குண்டின்
தகவள விரைந்தாய்ச் சாற்று.

என்னுதலிற்ருேவெனின்? படகத்துக்குரிய அளவு உணர்த்திற்று.

பட‌கத்துக்கு நீளம் நாற்பது விரல்.
அதன் சுற்றளவு அறுபது விரல்.
முகவளவு எண் விரல்.
குண்டினளவு பத்துவிரல் என்றவாறு,

இனிக் குண்டின் பருமையும் கடிப்பும் துளையும் தோலும் எல்லாம் பேரிகைக்குச் சொன்ன அளவுகளிலே கொள்கவென்றவாறு. ௫.

படகம் முற்றும்

106. நல்ல கரடிகைக்கு நாலெட்டா மங்குலியு
மெல்ல வதன்சுற்று நாற்பதாஞ் — சொல்லிய
குண்டளவு மீரேழாங் கோல முகத்தளவு
மெண்படியே யீராறு மெண். எனவும் ௬.

பிண்டின் பருமை யணிவிரலாங் கோலளவு
பண்டுபதி னாறும் பருமை — கண்டி
சிறுவிரலாஞ் செய்தொழிற் கைகள்கம் பித்த
முறுநரம்பு மேயதுளை யெட்டு.

என்னுதலிற்றோவெனின்? கனக்கரடிகை இவ்வாறு கண்டுகொள்க என்றவாறு. ௭.

கரடிகை முற்றும்.

## மத்தளவகை

107. பிண்டி யளவுவிரல் நாற்பதா மத்தளத்தின்
பண்டி யளவு பத்தெட்டாங் — குண்டளவு
சொன்ன விருபதாஞ் சொல்லின் முகத்தளவு
மன்னுபதி னெட்டாகும் வைப்பு.

என்னுதலிற்றோவெனின்? மத்தளத்திற்குரிய அளவு உணர்த்திற்று.

மத்தளத்திற்கு நீளம் நாற்பதுவிரல்.
சுற்றளவு விரல் எண்பது.
குண்டினளவு விரல் இருபது.
முகவளவு விரல் பதினெட்டு என்றவாறு. அ.

108. **வளையின் பருமை சிறுவிரலாம் வாரின்**
**றுளையும் பதினாருஞ் சொல்லின் — விளையும்**
**வலமுகமும் பத்துவிரல் மற்றை முகமாறு**
**நிலவுதொடிக் கைபிறக்கை நேர்.**

என்னுதலிற்றோவெனின்? மத்தளத்திற்குக் குண்டின் பருமை சிறுவிரல், வார்த்துளை பதினாறு என்பது உணர்த்திற்று.

வலமுக மாச்சினைக் களவு பத்துவிரல்.
இடமுக மாச்சினைக் களவு ஆறுவிரல்.

இதற்குத் தொடிக்கையும் பிறக்கையுமெனக் கொள்க என்றவாறு. கூ.

**மத்தளவகை முற்றும்**

## சல்லிவகை

109. **நாற்ப தறுபத்தெட் டாறுமேற் பன்னிரண்டு**
**மார்த்த விரநாலு பத்தென்றார் — சீர்ச்சல்லி**
**நீள முயர முகங்குண் டதன்பெருமை (பருமை)**
**வாள்விழியாய் வார்த்துளையு மெண்.**

என்னுதலிற்றோவெனின்? சல்லிகைக்குரிய அளவு உணர்த்திற்று. சல்லிகைக்கு நீளம் விரல் நாற்பது.

உயரம் அறுபத்தெட்டு விரல்.
முகம் ஆறுவிரல்.

குண்டளவு பன்னிரண்டு விரல்.
குண்டின் பருமை நால்விரல்.

வார்த்துளை பத்தென்றவாறு. நிரநிறை காண்க. ௰.

110. வன்றோல் வலமுகமா மென்றோ லிடமுகமாங்
கந்த வலமுகத்தைக் கோசமா — மந்த
இடமுகத்தை வாராள மாகமேற் கட்டி
யடர்முகத்தி லாருணி யாம்.

என்னுதலிற்றோவெனின்? சல்லிக்கு வலமுகத்தை வன்றோலாகப் போர்த்து, இடமுகத்தை மென்றோலாகப் போர்த்து வலமுகத்தைக் கொச்சகமாகவும் இடமுகத்தை வராளமாகவும் கட்டி அதனில் ஆருணி தைத்து அதனிலோடுகைமரபென்றவாறு என்பது உணர்த்திற்று. ௰க.

சல்லிகை முற்றும்

இனி, இடக்கையின் பகுதி வருமாறு,

111. நீள முகஞ்சுற்றுக் குண்டு முகத்தோடு
பாளப் பருமை துளையென்றார் — நீளம்
பதினா றதனிரட்டி பத்தாறு பத்தின்
மதமெனமூன் றாருமா வஞ்சி.

என்னுதலிற்றோவெனின்? இடக்கைக்குரிய அளவு உணர்த்திற்று. இடக்கைக்கு

க. நீளம்
உ. முகம்
ந. சுற்றுக்குண்டு
ச. முகக்கொண்டின் (குண்டின்) பருமை

இவற்றில் (ன்) நீளம் பதினாறுவிரல்.

முகம் முப்பத்திரண்டு
சுற்றுக்குண்டு பதினறு
முகம் பத்துக் குண்டின் பருமை.

துளை மூன்ருருமென நிரநிறையாகக் கொள்க என்றவாறு. (வார்த்துளை, பதினெட்டு)

ஆவஞ்சியென்பது இடக்கையின் பரியாயப் பெயர்.
ம௨.

**112.** **முகமிரண்டு மென்ருேலான் மூடி வலமால்**
**நிகரி லிடம்பிறையால் நின்று — தகவே**
**யிரண்டு முகமயிர் வீக்கியெண் கோது**
**திரண்ட விருபுறமுஞ் சேர்.**

என்னுதலிற்ருேவெனின்? இடக்கைக்கு இரண்டு முகமும் மென்ருேலாற்போர்த்தப்படும். பிறைக்கையாக நின்று தகவீக்கி என்றவாறு, ஓரோர் கயிறும் மூன்று புரியிலே திரித்திப்படி நாலுகயிரிட்டு ஒரு முகத்திலே, இரண்டிரண்டு வயிரிட்டொடுக்க என்றவாறு என்பது, உணர்த்திற்று. ம௩.

( வயிர் – மயிர் )

**113.** **கார்மேதிக் கொம்பாற் குடுப்பா மதன்பெருமை**
**யோர்ந்தே ருருளின் பருமையாம் — பாரோது**
**மெண்ணிரண்டு நீள் மிதனுக்கென் றேமொழிந்தார்**
**மண்முழுதும் நரலோர்தம் வாக்கு.**

என்னுதலிற்ருேவெனின்? இடக்கைக் குடுப்புக் கொள்ளுமிடத்து எருமைக் கொம்பாலே தேருருளின் பருமையிலே பதினறுவிரல் நீளத்திலே, கொள்கை எல்லா நூலினுள்ளும் விளங்கும், என்றவாறு என்பது உணர்த்திற்று. ம௪.

( தேருள் — தெருள் வேறுபாடம். )
( தேருருளின் பருமையிலே என்பன )

**இடக்கை முற்றும்.**

**114. கொன்றை குருக்கத்தி வேம்புபுளி நன்றென்னச்
சொன்னூர்கண் மேலோர்கண் டுன்றுங் — கரிய
விரும்பு மிதற்குரித் தென்ருர் பெரிய
முழவு வளைவாயின் பேர்.**

என்னுதலிற்ரோவெனின்? முழவுக்கு வளையம் கொள்ளும் மரங்களை உணர்த்திற்று. இரும்புகொண்டு வளையங்கொள்வதாம் ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ௰௫.

**115. கன்னி யிளம்பசுவின் காயரப் புறந்தோலாம்
பின்னு மதனு ளுரிதகையாம் — பன்னிய
பக்கத்தோல் வார்கொள்ளப் பார்க்கி லதன்கொம்பு
மிக்க குடுப்பாகு மென்.**

என்னுதலிற்ரோவெனின்? முழவுகளுக்குத் தோல் கொள்ளுமாறுணர்த்திற்று. ஈனுத நாகான வயதிலே சூடு படாதே செத்த பசுவின் தோலைச் சீவியேறிடுவது. இது வன்மை முழவினுக்கு.

இதன் உதரத்தைப் போர்த்துக் கிடந்த தோலை வாங்கி மென்முழவுக்குப் போர்த்தப்படும். இதன் பக்கத்துத் தோலை வாராகக் கொள்க வென்றவாறு.

கொம்பாலே குடுப்புக் கொள்கவென்றவாறு. இனிப் பல முழவங்களுக்கும் பெருநூல் வந்தவழிக் கண்டு கொள்க. ௰௬.

(காமப்புறந்தோல்)

(உத்தரிகை) (வேறுபாடம்)

பிண்டமரபு முற்றும்.

குரு வாழ்க

சிவாசலபதி சகாயம்

# வாச்சிய மரபு — ரு

## (உட்பிரிவு)

## எழுத்து மரபு

116. திருநெடுமா லைப்பணிந்து செப்புவேன் செப்ப
வருசவுத ரத்ன வலிதான் — கருது
நடனூல் நெறியுணர்ந்த நாவலோ ராராய்ந்த
வடநூல் நெறியே வகுத்து. க.

117. முந்திப் பரதன் முதலோர் மொழிவடநூற்
பந்திச் செழுஞ்சதவுப் பத்தினைப் — புந்தியுறத்
தண்டமிழாற் பாடத் தருவாய் பெருவாக்கு
வண்டுளபத் தார்மா தவா. உ.

118. அகரமுதல் ஔகார மீருய வாரா
நிகரிலா வன்மெல் லினமும் — பகரு
மிடையினத்தில் ரவ்வும் எழிற்புள்ளி கூட
வடிவுடைய வாச்சியத்திற் காம்.

என்னுதலிற்றோவெனின்? வாச்சியத்திற்குரித்தாகிய பாட எழுத்துக்களை உணர்த்திற்று.

---

91. வாளோ ரெடுத்த நாளணி முழவமும்,
வேந்தன் சிறப்புடையராய் வாளோரெடுத்த முழவு;
வீரர்க்கு அரசன் வரிசையாகக் கொடுத்த முழவு.
மத்தளக் கருவியின் பின்வழியே குடமுழா நின்றது.
முழவொடு கூடிநின்று வாச்சியக் கூறுகளை அமைத்தது.
ஆமந்திரிகை என்னுங்கருவி. ஆமந்திரிகை-இடக்கை.
கிணை – தடாரி – புட்பறை.
மார்ச்சனையையுடைய திரண்ட முழவு (சிலம்பு உரை)

உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும் வரப்பெருவெனக் கொள்க. என்னுதலிற்ரேவெனின் ?

"வருக்கங் கோட்டிற் குமுயிர் வாரா"

என்ருராகலின் வல்லினமாகிய க ச ட த ப ற வும், மெல்லினமாகிய ங ஞ ண ந ம ன வும், இடையினத்தில் ர வ்வென்னுமெழுத்தும் புள்ளியாகிய ஆய்தமும் கூடப் பதினுலெழுத்துங்கூட்டி வாச்சியங்களைப் புணர்க்கப்படும் என்றவாறு.

(வாச்சியங்களை—வாச்சியச் செ.ற்களை) ௩.

119. குற்றெழுத்தும் நெட்டெழுத்து மொற்று
மளபெடையும்
பற்றியவாய் தம்மென்னப் பல்விதத்தால் — உற்ற
விதிசே ரெழுத்தொழிந்த மேவாவாம் கூறியச்
சதிசேரும் வாச்சியமாய்ச் சாற்று.

என்னுதலீற்ரேவெனின் ? இவ்வாறு சொன்ன எழுத்துக்களொழிய நீக்கி உள்ளவெழுத்துக்கள் ஒற்ருயும் உயிராயும் வரப்பெருவென்றவாறு. ௪.

120. ஆய்ந்த வழகம் அருங்காத் திரஞ்சிவிரே
டேந்து மடைசுகைநே ரேறென்று – பூந்தொடியாய்
பாடகத்தே தொக்கிவற்றின் பண்மொழிந்து மாறிவர
வாடற்கும் பாப்புணர்க்க லாம்.

என்னுதலிற்ரேவெனின் ? முன் சொன்ன எழுத்துக்களாலே வாச்சியம் புணர்க்குமாறுணர்த்திற்று, அவை புணர்க்குமிடத்து அறுவகையோசைகளாற் புணர்க்கப்படும்.

---

92. எழுத்து, முழவுவாச்சியங்களில் பாட எழுத்தாக வாயினுற்கூறி கருவியில் வாசித்தற்குரிய எழுத்துக்கள்.

(சவுதாரத்துவலி — சவுதாரத்துகரம்)

(சவுதப்பத்து — சவுதம்பற்றிய பத்துச் செய்யுட்களையுடைய நூல்)

அறுவகையோசைகளாவன,

க. அழகம்
உ. காத்திரம்
ட. சிவிறுகை
ச. அடைசுகை
ரு. நேர்கை
சு. ஏறுகை என அறுவகை யோசைகளையும், பிறப்பித்தவாறே பாடகத்தே தொக்கும் இவற்றின், பண்பொழிந்து (மொழிந்து) மாறிவறினும் வாச்சியங்கள் புணர்க்கலாமென்றவாறு. இனி முன்சொன்ன எழுத்துக்களாலே அறுவகையோசைகளையும் பிறக்குமாறு (பிறப்பிக்குமாறு) கண்டுகொள்க. ரு.

121. **நாலஞ்சேழ் பத்தரையி னுலெட் டிரண்டெழுத்தைக்**
**கோலஞ்செய் சக்கரத்தைக் கொண்டுறழ - மேலைந்து**
**மென்றி னுடனேசை யூட்ட விதிப்பிறக்கும்**
**மன்ருடுங் கூத்தின் வகை.**

என்னுதலிற்றோவெனின்? முன்சொன்ன அறுவகை ஓசைகளும் பிறக்குமாறுணர்த்திற்று.

நாலஞ்சேழ் பத்தரையிலென்பது.

பத்து வரம்புகீறி அதன்மீது ஏழு வரம்பு கீறினல் நாலஞ்சாகிய ஒன்பதிற் (கு) றுறையும் பத்து நான்கு அறையாய், .. ... .... ... ... ... ... ... ... ... ... ... ...

நாலெட்டிரண்டெழுத்தையென்பது, முன்சொன்ன பதினலெழுத்தையும் என்றவாறு. 4+8+2=14

| அவை | ௪. | | ௮. | | ௨. | |
|---|---|---|---|---|---|---|
| | ௧ | க | ௧ | ட | ௧ | ர |
| | ௨ | ச | ௨ | ற | ௨ | ஃ |
| | ௩ | த | ௩ | ங | | |
| | ௪ | ப | ௪ | ஞ | | |
| | | | ௫ | ண | | |
| | | | ௬ | ந | | |
| | | | ௭ | ம | | |
| | | | ௮ | ன | | |

ஆக பதினாலெழுத்து.

---

| | | | | |
|---|---|---|---|---|
| அவற்றில் | க | வில் | நான்கு | ௧ |
| | ச | ,, | இரண்டு | ௨ |
| | ட | ,, | நான்கு | ௩ |
| | த | ,, | பத்து | ௪ |
| | ப | ,, | இரண்டு | ௫ |
| | ற | ,, | ஐந்து | ௬ |
| | ங | ,, | மூன்று | ௭ |
| | ஞ | ,, | மூன்று | ௮ |
| | ண | ,, | இரண்டு | ௯ |
| | ந | ,, | நான்கு | ௰ |
| | ம | ,, | நான்கு | ௰௧ |
| | ன | ,, | நான்கு | ௰௨ |
| | ர | ,, | நான்கு | ௧௩ |
| புள்ளியாகிய | (ஃ) | ஆய்தம் | ஒன்று | ௧௪ |

ஆக பதினான்கு எழுத்துக்களை ஐம்பத்திரண்டு எழுத்துக்களாகக் கொள்ளப்பெறும்.

---

93. **நாலஞ்சேழ் பத்தரை**, என்பது. 4, 5, 7, 10 இவற்றைக் **கூட்டினால்** 26 இதனை அரையாகக் கொண்டால் இரு **மடங்காக்கி ஒன்றாகக்காண இரண்டு இருபத்தியாறு** (52) **ஐம்பத்திரண்டு ஆதல் காண்க.**

அவை வருமாறு :—

| | | |
|---|---|---|
| கவ்வினத்தில், | க. கி. கு. கெ. | — 4 |
| சவ்வினத்தில், | ச. செ. | — 2 |
| டவ்வினத்தில், | ட. டி. டு. டெ. | — 4 |
| தவ்வினத்தில், | த. தா. தி. தீ. து. தூ. தெ. தே. தொ. தோ. | — 10 |
| பவ்வினத்தில், | ப. பெ. | — 2 |
| றவ்வினத்தில், | ற. றி. று. றெ. றை. | — 5 |
| ஙவ்வினத்தில், | ங. ஙி. ஙொ. | — 3 |
| ஞவ்வினத்தில். | ஞ. ஞீ. ஞொ. | — 3 |
| ணவ்வினத்தில், | ண. ணு. | — 2 |
| நவ்வினத்தில், | ந. நி. நு. நெ. | — 4 |
| மவ்வினத்தில், | ம. மி. மு. மெ. | — 4 |
| னவ்வினத்தில், | ன. னி. னு. னெ. | — 4 |
| ரவ்வினத்தில், | ர. ரா. ரி. ரு. | — 4 |

என்கிற இவற்றோடே புள்ளியாகிய (ஃ) ஆய்தமும் கூட்டிப் பதினுலெழுத்துங் கண்டு ஐம்பத்திரண்டும் கண்டு கொள்க.

சக்கரத்துள்ளே வைத்த முறைமையானே நிறுத்தி உறழ ஆரோசையும் பிறக்கும். எவ்வாறு பிறக்குமோவெனில்?

௰௨ ௨௮ ௰௨ ௨ என இவற்றுள் அழகம் பிறக்கும்.

௰௪ ௫௰ ௰௬ ௫௰ ௰௯ ௨ என இவற்றுள் காத்திரம் பிறக்கும்.

௨ ௨௰௪ ௨ ௨௰௪ ௨ ௨௰௪ ௮ என இவற்றுள் சிவீறுகை பிறக்கும்.

௰௨ ௧ ௰௨ ௧ ௰௪ ௧ என இவற்றுள் அடைசுகை பிறக்கும்.

௨௰௨ ௰௪ ௧ இன இவற்றுள் நேர்கை பிறக்கும்.

௨௰ ௩௭ ௪௩ என இவற்றுள் ஏறுகை பிறக்கும்.

சல்லி இடக்கை இவற்றிற் பிறக்குமிடத்து டகார முதலாகப் பிறக்குமெனக் கொள்க. ௬.

122. தத்தித்தோ டெவ்வென்று சத்தம் பிறக்குமென
முத்தமிழோ ரெல்லா மொழிந்தார்கள் — எத்திறமுந்
தன்வழி யொன்றித் தனித்தனியே வாராவாம்
பின்னு மடைசொல்லாம் பேசு.

என்னுதலிற்றோவெனின்? முன்சொன்ன ஓசைகள் ஆகுமாறும் அவை பல மொழி தழுவுமாறும் உணர்த்திற்று.

அவை வருமாறு:—

தத்தித்தோடெவ்வென்று சத்தம் பிறக்கும் என்பது, தத் தித் தொ டெவ்வென்னும் இவற்றை முன்னாகக் கொண்டு சத்தம் பிறக்கும்.

அவை, தக்கிட திக்கிட
கிடதக கிடதிகி
தொங்கிட கிடதொம்
கிடதகி என

அழகம் இவ்வாறு வேற்றுமைப்படும்.

திர துர தர எனக் காத்திரம் வரும்.

கிற கிற கிறட என்பது சிவிறுகை.

தகதக திகிதிகி டகடக டிகிடிகி என்பது அடைசுகை.

தகத திகிதி டிடிடி என்பது நேர்கை.

தொம், தொகும், நிகும் என்பன ஏறுகை.

அவை வருமாறு :—

தக்கி திக்கி யென முதலே தக்கெடுத்து இதிலே டவ்வேற்றித் தக்கிட திக்கிட என வைத்து இதன் மேலே கிடதகி என்று வைத்து தக்கிட திக்கிட கிடதகி என அழகம் இவ்வாறு கொடுத்துப் பாடம் படிக்கப்படும். (படிப்பிக்கப்படும்)

ஏனையவும், திர துர தர எனவும், கிற கிறட எனவும்,

தக தகத தித்தி தித்திகிட கடதடகடிகி எனவும், தத்தத் தித்திதி டிடிடிடி எனவும் நஂ நஂ நஂ கிண நஂகி நஂகி எனவும் இவ்வாறு தொடர்ச்சிப்படும்.

அச்சுடன் சேர்த்தும் விகற்பமாக்கிப் பாடம் படிப்பிவிக்க அமையும்.

இனி இப்பாடங்கள் விரவி வருமாறு :—

அழகம் தக்கிட கிடதகி

௧. தக்கிட கிடதகி திர துர தர என முன்னே அழகமும் பின்னே காத்திரமும் கூடி வந்தது.

௨. தக்கிட கிடதகி கிற கிற கிறட என முன்னே அழகமும் பின்னே சிவிறுகையும் கூடி வந்தது.

௩. தக்கிட கிடதகி தகதக திகிதிகி டகடக டிகிடிகி என முன்னே அழகமும் பின்னே அடைசுகையும் கூடி வந்தது.

௪. தக்கிடக் கிடதகித் தகத திகிதி டிடிடி என முன்னே அழகமும், பின்னே நேர்கையும் கூடிவந்தது.

௫. தக்கிடக் கி தகித் தொம் தொகும் நிகும் என முன்னே அழகமும் பின்னே ஏறுகையும் கூடிவந்தது.

௬. திர துர தர தக்கிட கிடதகி என முன்னே காத்திரமும், பின்னே அழகமும் கூடி வந்தது.

எ. கிற கிற கிறட தக்கிட கிடதகி என முன்னே சிவிறுகையும் பின்னே அழகமும் கூடிவந்தது.

அ. தகதக திகிதிகி டகடக டிகிடிகி தக்கிட கிடதகி என முன்னே அடைசுகையும் பின்னே அழகமும் கூடி வந்தது.

கூ. தகத திகிதி டிடிடி தக்கிட கிடதகி என முன்னே நேர்கையும் பின்னே அழகமும் கூடிவந்தது.

ம். தொம் தொகும் நிகும் தக்கிட கிடதகி என முன்னே ஏறுகையும் பின்னே அழகமும் கூடிவந்தது.

இவ்வாறு முன்னும் பின்னுமாய் வருவன, முதலும் இடையும் கடையுமாய் வருமுறைமை பற்பலவும் கண்டு கொள்க.

அழகம், தக்கிட கிடதக துக்கிட
தொங்கிட கிடதகி தக்கிட

என வேற்றுமைப்படுவது போன்று

திர துர தர என்ற காத்திரம் தக தக தக
திக திக திக
துகு துகு துகு

எனவும் பிறவுமாய் வேற்றுமைப்படும்.

தகத திகிதி டிடிடி என்ற நேர்கை, தகக
தகத
திகிகி
திகிதி
டிடிடி
திதிதி

எனவும் வேற்றுமைப்படும்.

பிறவும் வரும் வழிக் கண்டு உணர்ந்து கொள்க.

இனி, "தங்கிண தாங்கிண திங்கிணத் தாங்தோம்
தகதகதிகி தொகத் தகுதி திககு
தகத தகத தக்கிட கிடதகி திர துர தர
தக்கிடத் ததிகிற செகிணுத"

எனப் பல ஓசையுடனுங் கொடுத்து வந்த அச்சுப் பாடங்கள் கண்டுகொள்க.

'தாளஞ் செம்படை' இவ்வாறு தாளம் வேண்டின தாளங்களாலே பலவோசைகளாலே விரவிக் கோர்வை கோர்த்துப் பாடப்படும். (சொல்லப்படும்) எ.

123. **ஒத்துக் கவுத்துவமே யொண்டாள வாச்சியமே
பத்துப் பயில்கின்ற வாச்சியமே — முத்தமிழோர்
பாங்கான வோசையும் பற்று மெனவுரைத்தார்
பூங்கா வகத்தியனுர் போந்து.**

என்னுதலிற்றோவெனின்? வாச்சியப்பாக்களை உணர்த்திற்று.

வாச்சியப்பாக்கள் வருமாறு:— (வரலாறு)

அவை க. ஒத்து
உ. கவுத்துவம்
ங. தாளம்
ச. வாச்சியம்
ரு. ஓசை
சு. பற்று எனக் கூறப்பெறும்.

இவற்றுள்;

க. ஒத்து வருமாறு, (வரலாறு)

க தேசி உ. வடுகு ங. சிங்களம்

என்னும் மூன்று கூத்திற்கும் உரித்தாகியவோசை ஒத்து எனப்படும்.

உ. கவுத்துவமாவது, பல தாளங்களிலே கட்டுண்டு அந்தந்தத் தாளத்தோசையாலே, பெயர்பெற்று அடிகளெல்லாம் தம்மிலொத்த பல கருவிகளது கால வேற்றுமை, காலந்தோறும் புகக்கோர்த்தடுதே அவற்றின் திரிபு, காலத்து வேற்றுமைப்படாத உலகங்களைப் பற்றுகிட்டு விளக்கிறுற்போல ஒழிந்த கருவிகளுங்கூட நின்றிசைத்துத் தீர்வது. (பற்றுசிட்டு) (காலம் - தூக்கு)

ங. தாளமாவது, வடசொல் விரவி நாலடியாய் முப்பத்து இரண்டு அறிவர்த்தனைகளாலே முற்றவருவது.

ச. வாச்சியமாவது, முன்சொன்னவாறு சத்தத்தையும் தொடுத்துத் தமிழுரையாய் ஒரு கருவியாய்த் தொடராதே பல கூறுகளையுமுடைத்தாய் நாலடியாலே எட்டுப் பரிவர்த்தனை பெற்றுச் சந்தியும் தாளமும் பொருந்தப் புணர்ப்பது.

ரு. ஓசையாவது, ஒலியளவுடைத்தாய், அளபெடை ஏழு முதலெடுத்திரண்டடியாய்ப் புணர்ப்பது.

சு பற்றுவது, இதற்குப் பொருந்த இரண்டடியாக்கிக் காலத்தைப்பற்றி வேற்றுமை தோன்றப் புணர்ப்பது. இப்பாக்கள் ஆசான் கண்ணகத்தொற்றியறிந்து கண்டு கொள்க. (பாக்கள் – பாடங்கள்) அ.

124. வைத்த மலைப்பு முரிப்புத் துடுக்கமுடன்
இத்த குளந்தரியோ டிந்நான்கு — மைத்தடங்கண்
மாதே வழுவாமல் வாச்சியத்தைக் கொண்டியற்றி
லீதேயிக் கூத்துக் கியல்பு.

என்னுதலிற்றேவெனின்? வாச்சியப் பகுதிகள் வருமாறுணர்த்திற்று.

அவை க. மலைப்பு
உ. முரிப்பு
ந. துடுக்கம்
ச. அந்தரி எனவிவை ... ... ... ...

இவற்றுள் மலைப்பாவது,

அடிகள் முறிவது, முறித்துப்பாடினது, தாளக் கிரியைபற்றி மண்டிலமாக வருவது.

முரிப்பாவது,

ஒரு வரித்தடையினை அளவிற் செய்கையாலே முரிப்பது.

துடுக்கமாவது,

வேறுபட்ட இரண்டடியாய் முதலடி வாரத்தைப்பற்றி நிகழ்ந்து பின்பிலடித்திறளைப்பற்றி நிகழ்வது.

அந்தரியாவது,

ஓரடியையே மூன்று காலமும் பற்றிப் பாடியும் அதனையிரட்டித்தும் அந்தக் காலங்களிலே பாடியும் முடிப்பது.

**"அந்தரி யடுக்க மலைப்பு முரிப்பு"**

என்றாராகலின், (துடுக்க) (வேறுபாடம்)

**"முரிப்புத் துடுக்க மந்தரியும் கீதாங்கம் ஒத்து,**
**மலைப்புங் கவுத்துவமும் நிருத்த மலைப்பு மந்தரியுமே**
**ஒரோ வகையாலு பயமாம்"**

என்றலும் முதலும் இடையும் கடையுமெல்லாம் மூன்று வகைப்படும்.

அவற்றிற்கு முதலாவது தகாரங்கொள்ளுதல்.

இடையாவது இடைகொள்ளுதல்.

கடைக்கொட்டு — என்னை ?

"ஆதிக் கொட்டுத் தகார மாகும்"

"காவி குதியிடை வருமென"

அந்தம் வருமோ "கண்டனை யென்ப —
துருவமாகும்"

என்றாராகலின் இவ்வாறு கண்டுகொள்க. ௬.

எழுத்துமரபு முற்றும்

வாச்சியமரபு முற்றும்

குரு வாழ்க

சிவாசலபதி சகாயம்

வெண்பாத்தொகை 124

பஞ்சமரபு முதற்பகுதி

முற்றும்.

## குறிப்புரை : 94

" நாற்பெரும் பண்ணும் எழுவகைப் பாலையும்
மூவேழ் திறத்தொடு முற்றக் காட்டி"
(கொங்குவேள் மாக்கதை)

**நாற்பெரும் பண்கள் :**

" பாலை குறிஞ்சி மருதஞ் செவ்வழி
நால்வகை யாழா நாற்பெரும் பண்ணே"

**எழுவகைப் பாலை :**

செம்பாலை
படுமலைப்பாலை
செவ்வழிப்பாலை
அரும்பாலை
கோடிப்பாலை
விளரிப்பாலை
மேற்செம்பாலை

**மூவேழ்திறன் : (இருபத்தொரு திறன்)**

1. அராகம்
2. நேர்திறம்
3. உறுப்பு
4. குறுங்கலி
5. ஆசான்
6. நைவளம்
7. காந்தாரம்
8. பஞ்சுரம்
9. படுமலை
10. மருள்
11. அயிர்ப்பு
12. அரற்று
13. செந்திறம்
14. நவிர்
15. வடுகு
16. வஞ்சி
17. செய்திறம்
18. நோதிறம்
19. பெயர்திறம்
20. யாமை
21. முல்லை

இப்பண்களே அகமாய் நின்று இசைகளின் அலகு முறை மாறுபாடுற்றுப் புறமாய்த் திரிந்தும், அருகு திரிபடையாது அருகாயும், பெருகு திரிபடையாது பெருகாயும் நிலைவகை கொண்டு நூற்றுமூன்று பண்ணென ஒருவகையில் பிரிவு

பெறுகின்றன எனப்படும். பண்கள் நூற்றுமூன்றும் ஒரு பிரிவிற்குள் அடங்கி இருப்பினும் ஒவ்வொன்றும் அவ்வவற்றிற்கு உரிய இசையமைதிகளால் வெவ்வேறாகும் என்பதனை நன்கு உணர்தல் வேண்டும்.

அவற்றின் பெயர்வகை, முறைமைகளும் தனித்த சொற்களால் ஒருபுடையொப்புமைபற்றியும் வழங்குதல் அறியலாம். அவ்வாறு பெயரளவில் ஒப்புமையுடைய பண்களின் பெயர்களை அறிவதும் இசைக்கலை வழக்கே. ஆயினும் அவை வெவ்வேறு பண்களே என்பதையும் நன்கே உணர்தல் வேண்டும். பரியாயப் பெயர் வகைகளையும் நன்கு சிந்தித்தல் வேண்டும். எந்தப் பண்களாயினும் அந்தந்தப் பண்களின் இசை நிலை (சுரத்தானம்) அறிந்தே பாடப்பெறுதல் இன்றியமையாததாகும். இங்கு பெயர் ஒப்புமையளவில் மட்டுமே நூற்றுமூன்று பண்களை அறிஞர்கள் அறியும் பொருட்டு ஈண்டும் குறித்துள்ளோம்.

**காஞ்சி வகை :**

1. மேகாஞ்சி (காஞ்சி)
2. தனுக்காஞ்சி
3. பையுள் காஞ்சி

**காந்தார வகை**

4. காந்தாரம்
5. சுத்த காந்தாரம்
6. விபஞ்சி காந்தாரம்

**கிரிவகை**

7. ஆகிரி
8. உதயகிரி
9. கொண்டற்கிரி
10. தேசாக்கிரி
11. மாளவகிரி
12. வேடராமக் கிரி

**குச்சரி வகை**

13. தமிழ்க் குச்சரி
14. ஆரியக் குச்சரி

**குறிஞ்சிவகை**

15. குறிஞ்சி
16. அந்தாளிக்குறிஞ்சி
17. கேதாளிக் குறிஞ்சி
18. சாவகக் குறிஞ்சி
19. முதிர்ந்த குறிஞ்சி
20. மேகராகக் குறிஞ்சி
21. வியாழக் குறிஞ்சி

**கொல்லிவகை**

22. கொல்லி
23. தமிழ்வேளர்கொல்லி (வேளர் கொல்லி)
24. ஆரியவேளர் கொல்லி
25. சாயவேளர் கொல்லி
26. சித்திரவேளர் கொல்லி

**திறம் வகை**

27. செய்திறம்
28. நேர் திறம்
29. நோ திறம்
30. பெயர் திறம்

**பஞ்சமவகை**

31. கூர்ந்த பஞ்சமம் (பஞ்சமம்)
32. அநுத்திர பஞ்சமம்
33. ஒலிப்பஞ்சமம்
34. காந்தார பஞ்சமம்
35. தத்தள பஞ்சமம்
36 நாணுப் பஞ்சமம்

**பாடை வகை**

37. பாடை
38. அந்தாளி பாடை
39. நட்ட பாடை

**பாலை வகை**

40. அரும் பாலை
41. கோடிப் பாலை
42. விளரிப்பாலை
43. மேற்செம் பாலை
44. செம்பாலை
45. படுமலைப் பாலை
* செவ்வழிப் பாலை

**ராகம் வகை**

46. கின்ன ராகம்
47. கொடிநாக ராகம்
48. சீ ராகம்
49. சூர்துங்க ராகம்
50. சோமராகம்
51. தக்கராகம்
52. பழந்தக்க ராகம்
53. துக்க ராகம்
55. மாதுங்க ராகம்
56. மேகராகம்

**வராடி வகை :**

57. தமிழ் வராடி (வராடி)
58. கொல்லி வராடி
59. சோக வராடி
60. தீப வராடி
61. பெரிய வராடி

**தனிப்பெயர் வகை :**

62. அத்தராட்டம்
63. அந்தி
64. அரந்தை
65. அழுங்கு
66. கவ்வாணம்
67. கௌடி
68. சந்தி
69. சாங்கிமம்
70. சாயரி
71. சாயை
72. சாரல்
73. சாளரபாணி
74. சிகண்டி
75. சீகாமரம்
76. சீவனி
77. செந்து
78. செருந்தி
79. தக்கேசி
80. தனுசி
81. தாணு
82. தேசாளி

83. நாகம்
84. நாகதொனி
85. நாட்டம்
86. நாராயணி
87. பஞ்சுரம் (பழம் பஞ்சுரம்)
88. படுமலை
89. பாக்கழி
90. புங்காளி
91. மண்டலியாழ்
92. மருள்
93. மலகரி
94 மல்லாரி
95. மவுராழி
96. மவுரி
97. மன்றல்
98. முல்லை (சாதாரி)
99. யாமை
100. வயிரவம்
101. வருணம்
102. விபஞ்சி
103. வியந்தம்.

# அரும்பதப் பொருள்

## அகர நிரல்.

### " அ "

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 42, 47 | அகம் | பண்களின் முதலமைப்பு, அகநிலை |
| 73 | அகக்கூறு | பூதபரிணாமத்தால் உடம்பு ஆகுந்தன்மை |
| 8 | அகத்தியம் | அகத்தியர் செய்த முத்தமிழ் நூல் |
| 1 | அகத்தியச் சூத்திரம் | குவலயாநந்தம் எனும் நூலின் மேற்கோளாகக் கூறப்பெறுவது |
| 87 | அகமாய் | ஒரு பண்ணாயிருக்க உருவண்ணம் தேவபாணி இவற்றுடன் பொருந்திய நிறமாய் வருவனவற்றுள் ஒன்று அதாவது பாடலின் வகை |
| 87 | அகப்புறமாய்— | கவிகளுடனும் சிந்துகளுடனும் பொருந்தி வருவன |
| 42 | அகநிலை | இயல்பாகவே அமைந்த இசைகளைத் தன்னகத்தே கொண்டு நிற்பது. கூத்திற்கும் முதல்வகை. |
| 147 | அகமுழவு | மத்தளம் சல்லி முதலியன உத்தமமான கருவிகள். |
| 36, 60 | அக்காளம்— | அக்காழம், தத்தளம், தத்தள பஞ்சமம், ஆறிசைப்பண்களில் ஒன்று. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 79 | அசவை | முதலெழுத்து, உயிரெழுத்து |
| 133 | அசை | யாழெழுத்தாற் புணர்ச்சிப் பெறுதல் |
| 81 | அச்சு— | குற்றெழுத்து அ, இ, உ, எ, ஒ. தாளத்துடனிகழும், காட்டாளத்தி சொற்கட்டுப் பாடம், வாச்சியச் சொற்களின் முறை, தங்கிண தாங்கிண ததிகிற செகிணுத எனவிவை. |
| 7 | அஞ்சுறுப்பு— | இசை, முழவு, தாளம், கூத்து, அவிநயம் |
| 122 | அடக்கம்— | ஒருவகைப்பறை |
| 123, 146 | அடக்கப்பறை | ஆனைப்பறை |
| 163, 166 | அடைசுகை— | தததக திகிதிகி டகடக எனும் சொற்கட்டுகள் |
| 90 | அணிமாமரபு— | ஆராய்ந்து அறுதியிடுதல் |
| 67 | அணைசு— | குழற்கருவியின் அடிப்பாகத்தில் பொருத்துவதோர் உறுப்பு. வெங்கலத்தால் செய்யப் பெறுவது. குமுதவடிவாகச் செய்யப்பெறுவது. மரத்தாலும் செய்யப்பெறும். |
| 77 | அண்ணம்— | அண்ணுக்கு, ஒலிதாக்கும் இடம். உதானன் தன்மை |
| 35, 56 | அத்தராட்டம்— | திராடம், ஆறிசைப் பண்களில் ஒன்று. |
| 74 | அத்தி— | பத்து நாடிகளில் ஒன்று. |

| பக்க எண்கள் | அருஞ்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 171 | அந்தரி | வாச்சியப் பகுதிகளில் ஒன்று ஓரடியையே மூன்று காலமும் பற்றிப் பாடியும் இதனை இரட்டித்தும் இந்தக் காலங்களில் பாடிமுடிப்பது |
| 140, 148 | அந்தரி முழவு— | தோற்கருவிகளில் ஒன்று. |
| 35, 57 | அந்தாளி— | அந்தாழி, அந்தாளிக்குறிஞ்சி ஆறிசைப்பண்களில் ஒன்று. |
| 34, 55 | அந்தாளிபாடை— | ஆறிசைப் பண்களில் ஒன்று |
| 37, 55 | அந்தி | ஆந்தி, ஆறிசைப்பண்களில் ஒன்று |
| 72 | அப்பு— | நீர், இதன் பரிணமம் மூளை. சுக்கிலம், நிணம், உதிரம். |
| 74 | அபாநன் | பத்து வாயுக்களில் ஒன்று. மல மூத்திரம் முதலியவற்றைக் கழிக்கும். நீரான் வாய்ச்சுவை. |
| 148 | அமுதகுண்டலி— | ஒருவகை முழவு |
| 36, 59 | அயிர்ப்பு | அருத்திர பஞ்சமம் உருத்திர பஞ்சமம் ஆறிசைப் பண்களில் ஒன்று. |
| 96 | அரங்கம் | இசையரங்கம், நாடகவரங்கம் முதலியன. |
| 59 | அரந்தை— | ஆநந்தை, ஆறிசைப் பண்களில் ஒன்று. |
| 58 | அரளி— | சாயை என்ற பண்ணின் பரியாயப் பெயர். அலரி. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 59 | அரற்று— | அரற்றுக் குறிஞ்சி முதிர்ந்த குறிஞ்சியுமாம் ஆறிசைப் பண்களில் ஒன்று. |
| 36 | அரனரங்கத் தொகை— | ஒரு தமிழ் நூல். |
| 55 | அராகம்— | தக்கராகம், ஆறிசைப் பண்களில் ஒன்று. |
| 4 | அராளம்— | ஆடப்படும் ஆண் கோலங்களில் ஒன்று. கை வகைகளிலும் ஒன்று. |
| 54 | அரி— | மவுரி, பவுரி, அரியநாட்டம் மாங்கள்ளி, ஏழிசைப்பண். சிம்மராசி. |
| 42 | அருகு— | அருகியல், ஒரு பண்ணின் முற்பகுதிக்குரிய இயல்பு. |
| 33, 59 | அருட்புரி— | மாளுவகிரி, ஆறிசைப் பண்களில் ஒன்று. |
| 54 | அரும்பாலை— | பாலையாழ் ஏழ்பெரும் பாலைகளில் ஒன்று. |
| 98 | அருவியோசை— | பாடுகின்ற தொழின் முறைமைகளில் ஒன்று. |
| 26 | அலகு— | சுருதி, மாத்திரை குற்றப்படாத ஓசை. |
| 5 | அல்லியம்— | கூத்தின் வகைகளில் ஒன்று நின்றாடல் வகையில் ஒன்று அஞ்சனவண்ணன் ஆடிய ஆடல். |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 7 | அவிநயம்— | வினையம், கைகாட்டி வல்லபம் செய்தல். |
| 163, 166 | அழகம் | தக்கிட, திக்கிட என்ற சொற்கட்டு, கிடதக, தொங்கிட என வேற்றுமைப் படுவது. |
| 37, 56 | அழுங்கு— | ஆறிசைப் பண்களில் ஒன்று. |
| 8 | அறம்— | நாட்டியச் செயலின் பயன். |
| 92 | அறிவு— | பாடலாசிரியனை ஒத்த அறிவு. |
| 8 | அறிவனார் | இப்பஞ்சமரபு நூலாசிரியர். ஐந்தியலும் உணர்ந்த அறிவனார் |
| 151 | அறிவர்த்தனை | தாள வகைகளில் வடசொல் விரவி நாலடி ஆகி முப்பத்திரண்டாக வருவது. |
| 14 | அறுவகையுறுப்பு | செங்கோட்டியாழிற்கு உரிய, கோடு, திவவு ஆணி, பத்தல், தந்திரிகரம் நரம்பு என விவை. |
| 138 | அளவு— | முழவுகளின் அளவு வகை. |
| 21, 24, 71 | அன்னம்— | ஒருவகை நீர்வாழ் பறவை இதன் ஒலி விளரி இசையை ஒத்தது. அன்னமயமாகிய சுக்கில சுரோணிதம். |
| 155 | அன்னம்படகம் | படகம் என்ற தோற்கருவி, |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
| --- | --- | --- |
| | **"ஆ"** | |
| 25 | ஆ | முதலிசையின் உயிர்க்குறியீட்டெழுத்து. |
| 88 | ஆசாச கம்பிதம் சாளவம் | ஏந்திசையாகப்பாடுவது. |
| 71 | ஆகாயம்— | வான், உருவமன்று. ஒரு குணமுடைத்து, செவியாயும் செவியோசையாயும், திகழ்வது, பரிணமத்தில் ஒன்று. இதன் கூறு. வெகுளி, மதம், மானம் ஆங்காரம், உலோபம். |
| 55 | ஆகிரி— | ஆகரி, யாசரி, யாசாரி ஏழிசைப் பண்களில் ஒன்று. |
| 62 | ஆசான்—திறம் | காந்தாரம், தாரப்பண்டிறம் ஐத்திசைப் பண்களில் ஒன்று. |
| 98 | ஆடுவாராடும் அரங்கம்— | ஆடுகின்றவர் ஆடும் அரங்கம் |
| 26 | ஆண் | சில இசைகளை ஆண் என்பது வழக்கு. அவை தாரமும் குரலும் கைக்கிளையுமாம். |
| 14 | ஆணி— | யாழ்க்கருவியிலமைந்த ஆணி. |
| 79 | ஆதாரம்— | மூலாதாரம், ஆ, எனும் குறியீட்டு எழுத்தினையுடைய தாரம், ஆதாரம். |
| 86 | ஆதி— | முதல், சுத்தம், பூருவம் கேத்திராங்கம் இது சுத்தத்துடனே சிவனும். |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 139, 140 | ஆதிக்கருவிகள்— | முப்பது வகையான தோற்கருவிகள். |
| 137 | ஆதியாய்— | முதன்மையாய், ஆதியாய் நின்று தொழிற்படுகின்ற முழவு. |
| 172 | ஆதிக்கொட்டு— | கருவிக்குரிய, கொட்டுச் சொல்லாகத் தகாரத்தையே முதலிற் கொள்ளப் பெறுதல் |
| 12 | ஆதியாழ்— | முதன்மையான யாழ் ஆயிரப் பேரியாழ் எனவும் பெயர் பெறும். |
| 37, 59 | ஆநந்தை— | அரந்தை, ஆறிசைப் பண்களில் ஒன்று. |
| 55 | ஆந்தி— | அந்தி என்ற பண்ணின் பரியாயப்பெயர். ஆறிசைப் பண்களில் ஒன்று. |
| 130 | ஆந்திரியம்— | நாலாமடி. பாடல்களின் அடிமுறைமை. |
| 129, 130 | ஆபோகம்— | ஆயோகம், ஆலோகம், யாபோகம் நாலுறுப்புக்களும் குறைபாடு இல்லாத உருக்கள் அதாவது பாடல்கள். |
| 134 | ஆம்பல்வண்ணம்- | எழுவாய் வடித்த முட்டொடர்பு பட்டு முதலடி மண்டிலம் கொண்டு வரப்புணப்பது வண்ணப் பாடல்களில் ஒருவகை. |
| 17 | ஆயம்— | இசைத் தொகுதிக் கூட்டம் இசைத் தொகுதிகளின் நான்கு வகைகளில் ஒன்று. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 17 | ஆயமீரேழரை- | சதுரம், அதாவது ஆயம் ஈரேழரை கொள்ளச் சதுரம். |
| 16, 17 | ஆயப்பாலை— | பதின்ற்கோவை. அதாவது பதினன்கு நரம்புகள் கட்டும் முறைமை. |
| 12 | ஆயிரம்— | ஆயிரம் நரம்புகளைக் கொண்ட ஆதியாழ். |
| 11 | ஆரியப்பதம்— | ஆரியச்சொல். ஆரியச் சொற்களால் சில தமிழ்ப் பண்களின் பெயர் முறை கூறல் சில கருவிகளையும் கூறப்பெறுவது. ஆரியப் பதங்கொள் நாரதப் பேரியாழ். |
| 33, 61 | ஆரியவேளார்கொல்லி— | ஆறிசைப் பண்களில் ஒன்று. |
| 33, 60 | ஆரியக்குச்சரி— | ஆறிசைப் பண்களில் ஒன்று. |
| 149 | ஆவஞ்சி— | ஒரு தோற் கருவி இடக்கையின் பரியாயப்பெயர் குடுக்கை எனினும் ஒக்கும் இதற்குத் தெய்வம் உருத்திரன். |
| 80 | ஆளத்திமூன்று- | காட்டாளத்தி, நிறவாளத்தி, பண்ணளத்தி. |
| 81, 82 | ஆளத்தி— | ஆலாபனம், ஆலாபம் தென்னவென்றும், தெனவென்றும், தென்னதெனவென்றும் பாடப்பெறும். இதற்குத் தவ்வினம், நவ்வினம், மவ்வினம் இம்மூன்று எழுத்தினம் மட்டுமே வரும் மற்றயவை வரப்பெரு. இது நீளத்தால் எட்டும் நிதானத்தால் நின்றியங்கும், |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 25 | ஆரும் நரம்பு- | பகை நரம்பு. நின்ற நரம்புக்கு ஆரும் நரம்பு. |
| 115 | ஆருஞ் சாமத்துப் பண்— | கவ்வாணம், பின்னபஞ்சமம், மேகாஞ்சி மருள் வியாழக்குறிஞ்சி செந்து, அந்தி முதிர்ந்த இந்தளம் என்ற எட்டுபண்கள். இவை சூரியனைப் பாடப்படும் பண்கள். |
| 163 | ஆறுசத்தம்— | அறுவகையோசை, அவை அழகம், காத்திரம், சிவிறுகை அடைசுகை, நேர்கை, ஏறுகை எனப்படும். தோற்கருவி ஓசைகளே இவை. கொட்டோசைகள். |
| 39 | ஆறுநரம்பின்— | ஆறுநரம்பினை முதல் எடுத்தல் வகை, சாடவம். |
| 3 | ஆனந்தத் தாண்டவம்— | ஆடவல்லான் உருவில், ஆடும் தாண்டவம். |
| 155 | ஆன்றோல்— | ஆவின் ( பசுவின் தோல் ) தோல் பேரிகை என்னும் தோற்கருவிக்கு போர்த்தப்படும் தோல்: |

“ இ ”

| | | |
|---|---|---|
| 90 | இசை— | பாவாற் பெற்றதும் இசை. |
| 91 | இசை— | ஆகுபெயரான் மிடற்றுப் ( கண்டத்திற் பிறக்கும் ) பாடற்காயிற்று. பல இயற்பாக்களுடன் நிறத்தை இசைத்தலால் இசை. |
| 94 | இசைகண்டம்— | சிந்துகள், இசைபுணர்ப்பு ஐந்தாவது வகை. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 49 | இசைக்குழல்— | வங்கியம், இசை, குழற்கருவி வகைகள். |
| 70 | இசைக்குப் பிறப்பிடம்— | ஆகாயம். |
| 21 | இசை இராசிகள்- | பன்னிரண்டில் நிற்கும் நிலை. |
| 121 | இசைக்குரியவன்- | குழலன், மதங்கள். (பாணன்) கவுண்டியன் இசை பாணுக்குரித்தாதல் (பாட்டிற்கு) |
| 62 | இந்தளம்— | நளுத்தை. ஐந்திசைப்பண்களில் ஒன்று. |
| 99 | இசைத்திரட்சி- | வருணை, தேசாளசுத்தக் கிரியைகளில் ஒன்று (வகுணை) |
| 77 | இசை நுணுக்கம்- | பழங்காலத்திய இசைத் தமிழ் நூல்களில் ஒன்று |
| 95 | இசை நுளைபு— | நெய்தல், முகத்தல், பாய்தல், நுளைதல் என நான்கு. |
| 23, 25 | இசைப் பிறப்பு- | கிளைமுறை, உடலுறுப்பு. |
| 115 | இசை புணர்க்குமிடம்— | எழுத்து, அசை, சீர், தளை என நான்கு. |
| 25 | இசைபுணர்குறிநிலை— | நட்பு கிளை பகை இணை. |
| 92, 93 | இசைப்புணர்ப்பு- | இடையீடு, தொட்டுக்கோள் வேறுபாடு, இரட்டை, கூட்டிசை என ஐந்து. |
| 120 | இசை புணர்க்க- | முதலெழுத்தறிந்து புணர்க்கும் முறை. |
| 26 | இசைப்புலவோர்- | இசைத்தமிழ் வல்லோர், களரிசேர் கண்ணுற்றவர் மிக்க நூலோர் |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 9 | இசை மரபு— | இந்நூலின் (பஞ்சமரபு) முதல் மரபு. |
| 75 | இசையும் முத்திக்குத்துணையே— | முத்திக்குவித்தாமுடம்பு. |
| 122 | இசையிசையப்பா- | இசையும், இசைப்பாவும் இசை நுணுக்கம் கூறியது. இசைப்பா வகை |
| 16 | இசையெழு முறைமை— | விளையாட்டு எனுந்தொழில் முறைமை யாழின் நரம்புகளை ஆராயும் முறைமை. |
| 88 | இசைவகைப் பகுதி— | வீணையாற் காணப்பெறுவது விளையால், தொழிலால் காணப்பெறுவது. |
| 150, 154 | இடக்கை— | ஆவஞ்சி என்ற குடுக்கை, இடக்கை என்ற தோற்கருவியுமாம் கருங்காலியாற் செய்வது |
| 67 | இடது முகம்— | குழலின் இடப்பாகம் அடிப்பாகம். |
| 157 | இடமுகமார்ச்சினை- | மத்தளத்தின் இடமுகவமைப்பு. அளவு ஆறுவிரல் |
| 22 | இடபம்— | பன்னிரண்டு இராசிகளில் ஒன்று இளிநரம்பு நிறுத்துமிடம். |
| 125 | இடைவண்ணம்- | வண்ண வகைளிகல் ஒன்று இருபத்தொன்ருய் வரும். |
| 120 | இடை— | தோற்கருவிகளின் முறைமை பதினேழில் இதுவுமொன்று. |
| 150 | இடை— | இடைக்கருவி எழுவகை முறைமைகளில் ஒன்று. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 145 | இடைக்கருவி— | தோற்கருவிகளில் தண்ணுமை முதல் அந்தரி முழவு வரை |
| 145 | இடைக்கருவிகள் பன்னிரண்டு— | இவை வயிரவன், முருகன், துர்க்கை, இம்மூவர்க்கும் இயற்றப்படுவன. (வாசிக்கப்படுவன) |
| 92 | இடையீடு— | இசைப்புணர்வு வகையில் ஒன்று |
| 77 | இமைப்பு— | கூர்மனது செயல், இமைப்பு, விழிப்பு, ஊக்கம், உணர்ச்சி. |
| 142 | இயல்புரைத்தவன்— | தோற்கருவிகளின் இயல்புரைத்தவன் நந்தி என்பது கூத்தநூல். |
| 66 | இயங்காமல்— | குழல் செய்யப்படும் மரம் நாலுகாற்றும் இயங்காமல். |
| 3 | இயலுமிசையும்- | நாடகங்களையும் தழுவி வருவது. |
| 2 | இரங்கியமூவிசை- | எழுத்து முதற்சீர்களாற் சேர்க்கப்படுவது. |
| 5 | இரண்டுவகைத் தாளம்— | தமிழ்த்தாளம், வடதாளம். |
| 13 | இரட்டித்த குரலாய்— | முதலும் இறுதியும் குரல்நரம்பு வர அமைத்தல். |
| 93 | இரட்டை— | இசைப்புணர்ப்பு ஐந்தனுள் ஒன்று |
| 15 | இரண்டோடிரண்டு— | நரம்பு, நரம்புகளை நான்காம் நரம்பு முறையில் அதாவது நட்பு முறையில் உறழ்தல், |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 113 | இரண்டாஞ்சாமத்துப்பண்— | திருமாலைப் பாடப்படும் பண். நிருபதுங்கராகம், நட்டராகம் பஞ்சுரம், தாளி, பழந்தக்கராகம், சாதாளி, காமரம், செம்பாலை என்ற எட்டுப்பண்கள். |
| 136 | இராகமறிதல்— | இசை புணர்க்குமிடத்து இதனையறிந்துகொள்ள வேண்டுமென்பது. |
| 100 | இராமேச்சுரவேர்- | இம்பூறல் ஒருவகை வேர். இசைப்புலவர் குரல் வளத்திற்காகப் பயன்படுத்தும் வேர் வகை. |
| 108 | இருவயனப்— | ஆரியம், தமிழ்ப் பெயர் நெறிக்குறியனவாய பண்கள் |
| 4 | இருவகைக் கூத்து— | மார்க்கம், தேசிகம், அகம், புறம், நின்றூடல், வீழ்ந்தாடல். |
| 10, 137 | இலக்கணம்— | யாழின் இலக்கணம் தோற்கருவியின் இலக்கணம். |
| 21 | இளி— | ஏழிசைகளில் ஒன்று. பட்டடை பெண்ணிசை, நெஞ்சிற் பிறப்பது. இடபராசியில் நிறுத்தும் இசை. அங்காரகனுக்குரிய இசை. |
| 28, 29 | இளி குரலாயது— | குரற்கிரமத்து எதிர்நிர நிறையிலும் அமையும் அமைப்பு, வலமுறைப் பாலையிலும் அமையும் அமைப்பு. |
| 36, 54 | இறுநிறம்— | மண்டலியாழ் ஏழிசைப் பண்களில் ஒன்று. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 122 | இன்னிசையின்பா— | சிந்து, திரிபாதம் சவலை சமபாதம் செந்துறை வேண்டுறை தேவபாணி வண்ணம் என விவை. |

"ஈ"

| | | |
|---|---|---|
| 81 | ஈ— | இரண்டாம் இசைக்குரிய உயிர்க் குறியீட்டு எழுத்து. |
| 4 | ஈழம்— | ஒருவகைக் கூத்து பலகோலமாக ஆடப்படும் ஆண் கோலங்களில் ஒன்று. |
| 17 | ஈரேழுக் கோரேழு— | ஆயப்பாலைமுறை நரம்புகளை ஒருவகைப்படுத்தியறிந்து நிறுத்தும் முறை. |

"உ"

| | | |
|---|---|---|
| 81 | உ— | ஆளத்திக்குரிய குற்றெழுத்தில் ஒன்று. |
| 132 | உகம்— | இசைப்பா வகைகளில் பாடலின் முதலடி. |
| 129, 130 | உக்கிரம் உக்கிரகம்— | உக்கிரசம் ஒரு இசைப்பாட்டின் முதல் அடியும், நாலுறுப்புக்களும் குறைபாடில்லாத உருவென நிற்பது. |
| 80 | உச்சரித்து— | நாதத்தை உச்சரிக்கும் மரபு |
| 116 | உச்சிக்கிழான்— | சூரியன் |
| 116 | கோட்டம்— | அவனது கோயில் |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
| --- | --- | --- |
| 75 | உடம்பு— | புற்கலம், மண் உடம்பாயும் முத்திக்குவித்தாம் உடம்பு என்பது, |
| 148 | உடுக்கை | ஒரு தோற்கருவி புற முழவுகளில் ஒன்று மென்மைக் கருவிகளில் ஒன்று. இடைக்கருவிகளிலும் ஒன்று. |
| 150 | உதயம்— | சூரியன். தோற்கருவி முறைமைகளில் சூரியாங்கம். |
| 160 | உதரத்தைப் போர்த்துக்கிடந்ததோல்— | மென்முழவுக்குப் போர்த்தப்படும் தோல். |
| 57 | உதயகிரி— | உதையகிரி ஆறிசைப் பண்களில் ஒன்று. |
| 74, 77 | உதானன்— | பத்து வாயுக்களில் ஒன்று மூலாதாரத்தினின்று நால்விரல் விட்டு நாபியாதாரமாக எழுந்து நெஞ்சு, தலை, கண்டம், மூக்கு என்னும் இவற்றின் இடங்களில் பொருந்திய வகையானும் பல், நா அண்ணம் இதழ் என்னும் உறுப்பினை உடைய முயற்சி வகையானும் எழுத்துக்களைப் புலப்படுத்துவது. |
| 65 | உத்தமம்— | மூங்கிலாற் செய்யப்பெறும் குழற்கருவி. |
| 66 | | குழற்கருவி வகைகள். |
| 96 | உத்தம ஓசை— | குயில் கூவல், வண்டின் முரற்சி, வலம்புரியோசை. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 144 | உத்தமமான கருவிகள்— | தோற்கருவிகளில் மத்தளம், சல்லி, இடக்கை, கரடிகை, பேரிகை, படகம், குடமுழவம். |
| 15 | உந்தல்— | நரம்புகளைத் தெறித்து அறியும் முறைகளில் ஒரு தொழில் தடவு தள்ளல் உந்தலாகும். |
| 79 | உந்தி— | மூலாதார நாதம் எழுவது எழுமிடம். |
| 151 | உபயம்— | சூரியாங்கம், சந்திராங்கம் எனப் பிரிவு படுத்தப்படும் தோற்கருவி வகைப்பெயர் முறைமையில் இரண்டிற்கும் உரியது. அதிதெய்வங்களுக்கு வாசிக்கும் முறைமையின் பெயர். |
| 157 | உயரம்— | சல்லிகை என்னும் தோற்கருவி உயர அளவு பெற்றது அறுபத்தெட்டுவிரல் தோற்கருவிகளின் உயரம். |
| 2 | உயர் கூத்து— | உயர்ந்த தேவர்களால் ஆடப்படும் கூத்து. |
| 65 | உயர் சந்து— | உயர்ந்த சந்தனமரம். வங்கியம் செய்யும் மரவகை. |
| 66 | உயர்ந்த சம நிலம்— | குழல் செய்யும் மூங்கில், செங்காலி, கருங்காலி போன்ற மரவகைகள் விளையும் நிலப்பகுதி. |
| 15, 16 | உரித்தாகியகை— | எட்டுவகைக் கையியக்கம். |
| 105 | உரித்தாதல்— | பாணுக்கு இசை உரித்தாதல் பாண்—பாட்டு. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 10 | உரிய நரம்புகள்- | ஒரு பண்ணிற்குரிய நரம்புகள் |
| 133 | உருத்தளி— | இது அசையிற் புணர்க்கப்படுவது. |
| 114 | உருத்திரன்— | மூன்றுஞ் சாமத்துப் பண்களால் பாடப்படும் இறைவன் முதற் கடவுள். |
| 15 | உருட்டல்— | உருட்டல் என்ற இசைத் தொழின்முறை, தொழிற்கை எட்டினுள் ஒன்று. |
| 92 | உருட்டு— | மிடற்றுத் தொழில் பத்துவகை அசைவுகளில் ஒன்று. |
| 21 | உழை— | ஏழிசைகளில் ஒன்று மீனராசியில் நிற்பது தெய்வம் மயில்தாங்கியன் உழைதலையில் எனப்படுவதும் அலியிசை எனப்படுவதும் வழக்கு. |
| 136 | உரைப்போரையறிதல்— | இசை புணர்க்கும் வகையில் அறியப்படுவது. |
| 29 | உழை குரலாயது அரும்பாலை— | வலமுறை ஏழ்பெரும்பாலையில் ஒன்று. |
| 28 | உழை குரலாயது செம்பாலை— | குரற்கிரமத்து எதிர் நிரநிறைப் பாலைகளில் ஒன்று. |
| 83 | உள்ளாளம்— | இசைபாடும் தொழில்களில் ஒன்று முதலொலியை எழுப்புதல் |
| 15 | உறழ்தல்— | நரம்புகளை ஆராயும் முறைமைகளில் தெறித்து அறிதலில் உறழ்தல். |
| 138 | உறுப்பு— | பிண்டவகையில் ஒன்று. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| | | " ஊ " |
| 25, 81 | ஊ — | மூன்றும் இசைக்குரிய நெடில் உயிர்க் குறியீட்டெழுத்து ஆளத்திக்குரிய மூன்றும் நெட்டெழுத்து. |
| 72 | ஊறு— | மண்ணால் உடம்பு ஊறுய்ப் பரிணமித்தல். |
| 93 | ஊறிய இசை — | இசைப் புணர்ப்பு ஐந்தனுள் வேறுபாட்டின் பாற்பட்டது வேறுபாடு. |
| 96 | ஊனம் இல்லாதான்— | உடம்பின் குறைபாடு இல்லாதவன். நல்லுடம்பு உடையவன் பாடுதற்குரியவன். |
| | | " எ " |
| 92 | எடுத்தல்— | இசைக்கிரியை எட்டனுள் முதலாவது. |
| 126 | எண்சீரான் — வந்தபாடல் | தேவபாணிப் பாடல்களில் பெருந்தேவபாணி. |
| 16 | எண்ணியதானம்— | பண்ணாற்ருெழில் |
| 161 | எழுத்து— | முழவு வாச்சியங்களில் பாட எழுத்தாக வாசித்தற்குரிய எழுத்துக்கள் சொற்கட்டெழுத்து. |
| 161 | எழுத்து மரபு— | இந்நூல் வாச்சியமரபின் உட்பிரிவு. |
| 133 | எழுத்தால்— | யாழெழுத்துக்களால் எழுத்து, அசை, சீர், தளை. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 15 | எழுப்புதல்— | பட்டடை முற்றிய இளிதனை எழுப்புதல் |
| | **" ஏ "** | |
| 25 | ஏ— | நான்காமிசைக்குரிய உயிர்க் குறியீட்டெழுத்து. |
| 99 | ஏடாயகம்— | டாயம் தூக்கித்தாக்குதல் தொழிலெந்துள் ஒன்று. |
| 31 | ஏழு இராசிகள்— | இசை நிறுத்தும் இராசிகளில் ஏழு. இடபம், கற்கடகம் சிங்கம், துலாம், தனுசு, கும்பம், மீனம். தமிழுக்கு ஏழ்நரம்புள. |
| 89 | ஏழிசை, | ஏழ்நரம்பு, ஏழோசை வங்கியத்து இன்னிசை எழுத்தாற் பிறக்குங்கால் சரிகமபதநி: என்றும் பிறக்கும். |
| 116 | ஏழாஞ்சாமத்திற்குரிய பண்— | சந்திரனைப் பாடுவது. பெரியவராடி, தீபவராடி, கௌடி அரியநாட்டம், பெரிய நாட்டம், காந்தார பஞ்சமம், தமிழ்வேளர்கொல்லி பியந்தை என்ற எட்டுப்பண்கள். |
| 163, 166 | ஏறுகை— | தோற்கருவிகளில் கொட்டும் அறுவகை ஓசைகளில் தொகும் தொகும் நிகும் என்பன. |
| | **" ஐ "** | |
| 25 | ஐ— | ஐந்தாமிசைக்குரிய குறியீட்டெழுத்து. |
| 15 | ஐந்தாங்கோல்— | வார்தல், தொழிற்கை எட்டனுள் ஒன்று. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 115 | ஐந்தாஞ்சாமத்திற்குரிய பண்கள் : | சதாசிவனைப் பாடுவது. குச்சரி, மல்லாரி மேகராகம், குறிஞ்சி, மாளுவகிரி, தேசற்கிரி, இராமகிரி, கொண்டற்கிரி என்ற எட்டுப்பண்கள். |
| 8 | ஐந்தியல்— | இசை, முழவு, கூத்து தாளம் அவிநயம். (வினையம்) |
| 101 | ஐந்துதொகை— | அஞ்சுறுப்பு, பஞ்சமரபு. |
| 85 | ஐந்துநிறம்— | சேத்திராங்கம், சுத்தம், சாளவம், சங்கீரணம் தமிழ். |
| 79 | ஐவகைப்பூதம்— | ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், நிலம். |

"ஒ"

| | | |
|---|---|---|
| 81 | ஒ— | ஆளத்திக்குரிய உயிர் எழுத்து ஐந்தனுள் ஒன்று. |
| 98 | ஒட்டுதல்— | பாடுவானது தொழிற்கிரியை நான்கனுள் முதலாவது, கண்டத்தொழில். |
| 97 | ஒதுக்கல்— | ஒருக்கியொதுங்கல் பாடுதற்கு அல்லாத ஒலி வகைகளில் ஐந்தாவது பாடுகிற நிறத்தை ஒதுக்கிப்பாடுவது. |
| 169 | ஒத்து— | வாக்கியப் பாக்களில் ஒன்று தேசி வடுகு சிங்களம் மூன்று கூத்திற்கு உரித்தாகிய ஓசை. |
| 92 | ஒலி— | இசைக்கிரியைகள் எட்டனுள் ஆறுவது. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 46 | ஓலிப்பஞ்சமம்— | செந்திறம் செந்துருத்தி மத்தியமாரி ஐந்திசைப்பண்களில் ஒன்று. |
| 72 | ஒளி— | ஒளியாயும், தீயாற்கண் ஒளியாதல். |
| 80 | ஒற்று— | மகரத்தின் ஒற்று (ம்) சரீரத்தில் ஒசை ஆளத்தியாமாறு உணர்த்தல். |

"ஓ"

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 81 | ஓ— | ஆறுமிசைக்குரிய குறியீட்டெழுத்து, நெட்டெழுத்து, ஐந்தனுள் ஒன்று ஆளத்திற்குரிய எழுத்து. |
| 65 | ஓங்கிய மூங்கில்— | குழல் செய்ய உத்தமமானது, அது பொழுது செய்யும். |
| 169 | ஓசை— | சரீரத்தில் ஓசை, வாறுற் செவியோசை ஓசையும் ஈசனும் ஓக்கும். வாச்சியப் பாக்களுள் ஒன்று. |
| 96 | ஓசையான்— | மெய்யான ஓசையான் அரங்கத்துப் பாடப்பெறுபவர் பெறுபவர்களில் ஒருவன். |
| 92 | ஓசைப்படுத்தல்— | தானங்கள் எட்டானும் கிரியைகள் எட்டானும் ஓசைப் படுத்தல் அவ்வாறு படுத்த, பண்ணுகும். |
| 95 | ஓசையிலாதான்— | அரங்கத்துப் பாடப் பெறுதவர் |
| 101 | ஓதியகீதம்— | பாடப்பட்ட கீதங்கள். |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 94 | ஓரிசை— | ஓரடியான் வரும் சிந்துகளிசை புணர்க்குமிடத்துள்ள எட்டு வகைப் புணர்ப்புள் முதலாவது. |
| 88 | ஓரோசையாய்— | இது நின்ற காலத்து நிறம் வேற்றுமையில்லை. |

" ஔ "

| | | |
|---|---|---|
| 81 | ஔ— | ஏழாமிசைக்குரிய நெட்டெழுத்து. |
| 38 | ஔடுவம்— | அடுவிகம், ஐந்து ஐந்திசைகொண்டது. |

" க "

| | | |
|---|---|---|
| 153 | கஞ்சம்— | கருவி செய்யப்பெறும் ஒருவகை உலோகம் முழவும் செய்யப்பெறும் குடமுழா. |
| 103 | கஞ்சக்கருவி— | கஞ்சதாளம், கைம்மணிதாளம், கொண்டி முதலியன. கஞ்சத்தாற் செய்வது முழவம். |
| 21 | கடகம்— | கற்கடகம், பன்னிரண்டு இராசி களில் ஒன்று விளரி இசை நிற்கும் இராசி. |
| 155 | கடிப்பு— | பேரிகைக்குரிய எட்டு வார்த்துளை. |
| 150 | கடை— | முழவு வகைகளின் ஏழு பெயர் வகை முறைமைகளில் ஒன்று |
| 146 | கடைக்கருவி— | பறை, பாகம், உடுக்கை, சிறுபறை, அடக்கம். |
| 5 | கடையம்— | ஒருவகைக் கூத்து, பதினொரு ஆடல்களில் ஒன்று, வீழ்ந்தாடல், இந்திராணியாடியது. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 98 | கட்டுதல்— | சிறப்புடையனாய் இருந்து பாடுவானது தொழிற்செய்கை. கண்டத்தால் வருவது. |
| 97 | கட்டை— | பாடுதற்கல்லாத இசை, நிறமுந்தானமுங் குறைவது |
| 146 | கணப்பறை— | வன்மைக்கருவி, பறை வகை. |
| 82 | கணம்— | அளவறிமுறை மாத்திரைகள் ஒன்பதில் ஒன்று. |
| 7, 89 | கண்டம்— | குரல், கண்டத்தானம், மிடறு, கண்டத்திற் பிறக்கும் இசை, நெறி மூன்றுள் ஒன்று. |
| 70 | கண்டமரபு— | இந்நூல் (பஞ்சமரபு) இசைமரபு உட்பிரிவு—ரு. |
| 67 | கண்படுதல்— | குழல் செய்யுமரத்தை அறியும் வகைகளில் ஒன்று. |
| 140 | கண்விடுதூம்பு- | ஒரு தோற்கருவி, இடைக்கருவி புறமுழவு. |
| 84 | கதி— | நடை ஐந்து தொழில்களில் ஒன்று. |
| 92 | கம்பித்தல்— | கிரியைகளில் ஒன்று. அசைத்துத் தூங்கிசையாகப் பாடுவது. |
| 154 | கரடிகை— | ஒரு தோற்கருவி. சமக்கருவி உத்தமக்கருவி கனகரடிகை. பலாவாற் செய்வது. |
| 153 | கருங்காலி— | ஒருவகை மரம், முழவு செய்யும் மரம், யாழ்க்கோடு செய்யும் மரம். |
| 89 | கலன்— | கருவி, யாழ். |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 33, 60 | கவுசிகம்— | கௌசிகம், ஆறிசைப்பண்களில் ஒன்று. செய்திறம், |
| 57 | கவுடி— | கவுரி, கௌடி, தேசிகம் ஆறிசைப் பண்களில் ஒன்று. |
| 169, 170 | கவுத்துவம்— | வாச்சியப்பாக்களுள் ஒன்று |
| 121 | கவுண்டியன்— | பண் பாடுதற்குரியவர்களில், ஒருவன். சாளவத்திற்குரியன் |
| 11 | கவ்வரிமுண்டகம்— | யாழின் திவவின் கடைக்கண் முடிந்த மணிமுடி |
| 165 | கவ்வினத்தில்— | க, கி. கு. கெ. இந்த எழுத்துக்கள் முழவு வாச்சியச் சொற்கட்டு எழுத்துக்கள். |
| 58 | கல்வாணம்— | கௌவாணம், வன்மைப்பண் படுமலேக் கவ்வாணம், ஆறிசைப் பண்களில் ஒன்று, ஆருஞ்சாமத்திற் பாடப்படுவது. |
| 65 | கழை— | மூங்கிற்புல், மூங்கில் குழற்கருவி செய்வதற்கு உத்தமம். |
| 26 | களரி— | இசை |

"கா"

| | | |
|---|---|---|
| 97 | காகசுரம்— | பாடுதற்கல்லாத ஒலி, குரல் அமைப்பில், காக்கையின் குரலாவது போலும் |
| 96, 97 | காகுளி— | பாடுதற்கல்லாத ஒலி, பேய் கத்திறுற்போலப் பாடுவது. |
| 57 | காஞ்சி | மேகாஞ்சி, ஆறிசைப் பண்களில் ஒன்று, மென்மைப்பண் ஆருஞ்சாமத்திற் பாடப்படுவது, |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 152 | காடுகாள்— | கடையான கடவுள், கடைக் கருவிகட்குரிய தெய்வம். |
| 24 | காடை— | ஒரு பறவை, இதன் ஒலி தார இசையை ஒத்தது. இந்நூற் கருத்து. |
| 82 | காட்டை | அளவறிமுறை, லவம் எட்டு கொண்டது. |
| 75 | காட்சி | இருபத்தியைந்து வாதனைகளில் ஒன்று. |
| 80 | காட்டாளத்தி— | ஆளத்திவகைகளில் ஒன்று அச்சுடன் நிகழும் |
| 163, 166 | காத்திரம்— | முழவுகளில் வாசிக்கப்பெறும் அறுவகை ஓசைகளில் ஒன்று, திர, துர, தர, |
| 62 | காந்தாரம்— | தாரப்பண்டிறம் மங்கலப்பண், ஐந்திசைப்பண்களில் ஒன்று முதலிசை. |
| 35, 56 | காந்தாரபஞ்சமம்— | உறுப்பு, ஆறிசைப் பண்களில் ஒன்று, ஏழாஞ்சாமத்திற் பாடப்படுவது. |
| 74 | காந்தாரி— | பத்து நாடிகளில் ஒன்று |
| 61, 113 | காமரம்— | சீகாமரம், ஆறிசைப்பண், இரண்டாம் சாமத்தில் பாடப் படுவது. திருமாலைப்பாடப் படுவது. |
| 59 | காரவணி— | தராவணி, நாராயணி ஆறிசைப்பண்களில் ஒன்று. |
| 138 | காலம்— | அளவு, மாத்திரை முழவு வகை களின் பெயர் முறைமைகளில் ஒன்று. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 136 | காலமறிதல்— | இசை புணர்க்கும் வகைகளில் ஒன்று. |
| 148 | காலைமுழவு— | காலையில் வாசிப்பது, முழவு வேற்றுமை. துடி |
| 71 | கால்— | காற்று, ஓரிடத்தில் நிலைபெறுவது அன்று, இரண்டு குணமுடைத்து |
| 103 | காளம்— | துளைக்கருவிகளிலும் ஒன்று, கஞ்சக் கருவிகளிலும் ஒன்று. எக்காளம் |
| 61 | காளி— | தாளி, புங்காளி, ஆறிசைப் பண்களில் ஒன்று |
| | “கி” | |
| 83, 84 92 | கிரியை— | கிரிகை, கிரியைகள் பதினொன்று, தாளக்கிரியை. இசைக்கிரியைகள் |
| 90 | கிரியையாற் பெயர்பெற்றது— | பண், பெயர்பெறும் முறைகளில் ஒன்று. |
| 76 | கிருகரன்— | பத்து வாயுக்களில் ஒன்று கோபத்தை விளைவிக்கும் |
| 25 | கிளை— | கிளையிசை, நின்ற நரம்பிற்கு ஐந்தாம் நரம்பு. |
| 55 | கின்னராகம்— | கின்னரம் ஏழிசைப் பண்களில் ஒன்று பண்ணோர் பதினேழில் ஒன்று. |
| 103 | கின்னரி— | நரம்புக்கருவிகளில் ஒன்று. |
| | “கீ” | |
| 11 | கீசகப் பேரியாழ்— | யாழ்க்கருவிகளில் ஒன்று. |
| 8 | கீதம்— | பாட்டு, தேவர்கள் உவப்பனகீதம். |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 130 | கீதங்கள் ஏழு— | ஏழு தாளத்துடனும் புணர்ப்பது கீதங்கள் தாளப்பெயரானும் வழங்கும். |
| 138 | கீதாங்கம்— | கீதத்துக்கு (முழவு) வாசிப்பது. |

"கு"

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 74 | குகு— | பத்துநாடிகளில் ஒன்று. |
| 59, 36 | குச்சரி— | தமிழ்க்குச்சரி ஆறிசைப் பண்களில் ஒன்று. ஐத்தாஞ் சாமத்திற் பாடப்பெறுவறு. |
| 5 | குடக்கூத்து— | பதினொரு ஆடல்களில் ஒன்று, திருமால் ஆடியது. விநோதக்கூத்துள் ஒன்று |
| 98 | குடமுழக்கம்— | முழவின் முழக்கம் |
| 154 | குடமுழா— | குடமுழவம், வன்மைக் கருவி, உத்தமமான தோற்கருவி, தலைக்கருவி. கஞ்சத்தாற்செய்வது |
| 84 | குடிலம்— | வளைவு, இசைக்கிரியைகளில் ஒன்று. |
| 149 | குடுக்கை— | குடுப்பைக்கையாக உடைத்து. ஒரு தோற்கருவி. ஆவஞ்சி மென்மைக்கருவிகளில் ஒன்று |
| 13 | குடுப்பி— | சகோடயாழின் சிற்றுப்புக்களில் ஒன்று. |
| 160 | குடுப்பு— | இடக்கைக் குடுப்பு, கொம்பாலே குடுப்பு, எருமைக்கொம்பால் கொள்ளப்பெறுவது. |
| 5 | குடைக்கூத்து— | நின்றாடல்களில் ஒன்று. முருகப்பெருமான் ஆடியது. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 155 | குண்டளவு— | குண்டினளவு, பேரிகை, படகம் இவை போன்ற தோற்கருவிகளின் குண்டினளவு. |
| 61 | குந்தளம்— | கொண்டி, கொண்டற்கிரி ஆறிசைப் பண்களில் ஒன்று. |
| 120 | குமாரன்— | இசைபுணர்க்குமிடத்து யாவனொருத்தன் பேர் இரண்டாமெழுத்து, மொழிக்கு முதல்வரக் கொள்வது. |
| 11 | குமிழ்— | யாழ்ப்பத்தர் செய்யும் மரம். |
| 21 | கும்பம்— | பன்னிரண்டு இராசிகளில் ஒன்று கைக்கிளை இசை நிற்குமிராசி. |
| 75 | கும்பித்தல்— | காற்றின் குணம், வாதனைகளில் ஒன்று. |
| 24 | குயில்— | ஒருவகைப் பறவை, இதன் ஒலி துத்த இசையினை ஒத்தது. |
| 96 | குயில் கூவல்— | உத்தமவோசை மூன்றினுள் ஒன்று. |
| 24 | குரல்— | ஏழிசைகளில் ஒன்று. கண்டம் |
| 153 | குரவம்— | முழவு செய்யும் மரம், குராமரம். |
| 4 | குரவை— | ஒருவகைக்கூத்து. |
| 160 | குருக்கத்தி— | முழவுக்கு வளையம் கொள்ள ஏற்பது. ஒருவகைச்செடி. |
| 12 | குவடு— | யாழுறுப்புக்களில் ஒன்று. |
| 134 | குவளைவண்ணம்— | ஐந்து வகை வண்ணப் பாடல்களில் ஒரு வகை. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 56, 114 | குறண்டி— | நோதிறம், தேவகிரி ஆறிசைப் பண்களில் ஒன்று. மூன்றுஞ் சாமத்திற் பாடுதற்குரியது. |
| 81, 104 | குறில்— குற்றெழுத்து ஐந்து | குற்றெழுத்து அ, இ, உ, எ, ஒ. தேவபாணி புணர்க்குமிடத்துக் கொள்வது. |
| 35, 56 | குறிஞ்சி— | நவிர்கொல்லி, நாலாஞ்சாமத்தில் பாடுதற்குரியது. ஆறிசைப் பண்களில் ஒன்று. |
| 53 | குறிஞ்சியாழ்— | நாற்பெரும் பண்களில் ஒன்று ஒரு யாழ்க்கருவி ஏழிசைப் பண்களில் ஒன்று. செம்பாலை வன்மைக்குரிய பண். |
| 64 | குறுங்கலி— | சோமராகம், நான்கிசைப் பண்களில் ஒன்று. |
| 16 | குறும்போக்கு— | நரம்புகளைக் குற்றமின்றி இயற்றுதல். |
| 121 | குன்றுக்குழலன்— | இசைக்குரியவன் சுத்தத்திற் குரியவன். |

" கூ "

| | | |
|---|---|---|
| 93 | கூட்டிசை— | இசைப்புணர்ப்பு ஐந்தனுள் ஒன்று. |
| 37, 58 | கூதாளி— | கூதளி, கேதாளி, கேதாளிக் குறிஞ்சி, ஆறிசைப் பண்களில் ஒன்று. |
| 77 | கூர்மன்— | பத்து வாயுக்களில் ஒன்று இமைப்பு, விழிப்பு, உறக்கம், உணர்ச்சி இவற்றைப் பண்ணுவிப்பது. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 36, 60 | கூர்ந்த பஞ்சமம்— | பஞ்சமம், ஆறிசைப்பண்களில் ஒன்று. |
| 67 | கூறு— | வங்கியத்தின் கூறு. |

" கெ "

| | | |
|---|---|---|
| 99 | கெதி— | கதி, தாளச்சதி தேசாள சுத்தக்கிரியைகளில் ஒன்று. |

" கே "

| | | |
|---|---|---|
| 35, 58 | கேதாளி— | கூதாளி, கூதளி கேதாளிக் குறிஞ்சி, ஆறிசைப் பண்களில் ஒன்று. |
| 86 | கேத்திராங்கம்— | ஐந்து நிறங்களில் ஒன்று ஆதி. பூருவம், சுத்தம். |

" கை "

| | | |
|---|---|---|
| 21 | கைக்கிளை— | ஏழிசைகளில் ஒன்று கும்பராசியில் நிற்பது யானை ஓசையையும் ஒத்தது. |
| 103 | கைமணி— | கஞ்சக் கருவிகளில் ஒன்று. |

" கொ "

| | | |
|---|---|---|
| 34, 61 | கொண்டைக்கிரி— | கொண்டற்கிரி கொண்டி, குந்தளம் ஆறிசைப்பண்களில் ஒன்று |
| 103 | கொண்டி— | கொடி, கஞ்சக்கருவிகளில் ஒன்று. |
| 54 | கொடிநாகராகம்— | நாகராகம். ஏழிசைப் பண்களில் ஒன்று. |
| 5 | கொடுகொட்டி— | நின்றுடல் இறைவன் ஆடியது |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 103 | கொம்பு— | குழற்கருவிகளில் ஒன்று |
| 34, 60 | கொல்லி— | கொல்லிக்குறிஞ்சி<br>ஆறிசைப்பண்களில் ஒன்று. |
| 35, 64 | கொல்லிவராடி— | நான்கிசைப் பண்களில் ஒன்று. |

"கோ"

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 4 | கோலம்— | ஈழம், அராளம், மறம்<br>சித்து, சோனகம், முதலிய பல<br>கோலமாக ஆடப்படும்<br>ஆண்கோலம். அதாவது<br>கூத்தின் வகைகளில் ஒருவகை. |
| 36, 54 | கோடிப்பாலை— | கொடிப்பாலை, மருதயாழ்<br>மருதன்ளு. ஏம்பெரும்.<br>பாலைகளில் ஒன்று.<br>ஏழிசைப்பண் |

"கௌ"

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 5 | கௌடி— | கவுடி. ஆறிசைப்பண்களில்<br>ஒன்று.<br>கவுரி, (தேசிகம்) |

"ச"

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 9, 10 | சகோடயாழ்— | நால்வகை யாழ்களில் ஒன்று,<br>நரம்புகள் 14 கொண்டயாழ்,<br>சகோடம்—செம்முறைக்கேள்வி. |
| 74 | சங்கினி— | பத்து நாடிகளில் ஒன்று |
| 86 | சங்கீரணம்— | ஐந்து நிறங்களில் ஒன்று<br>சாளவத்துடனே சிவனும் |
| 103 | சங்கு— | துளைக்கருவிகளில் ஒன்று. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 36, 61 | சதாங்கியம்— | சாங்கிமம், சாதாங்கியம் சாதாக்கியம், ஆறிசைப்பண்களில் ஒன்று. |
| 15, 17 | சதுரப்பாலை — | நான்கு நிரல்களாக ஒத்திசைப்பது. |
| 131 | சதுராங்கி— | தேசாளப்பாக்கள் நான்கினுள் ஒன்று ஓரடிஃ எண்சீரால் நாலடியாற் புணர்ப்பது, |
| 129 | சதுராட்டி— | சுத்தப்பாக்கள் வகைகளில் ஒன்று. உக்கிரகம், துருவை, ஆபோகம் என்னும் மூன்றடியாலும் புணர்ப்பது. |
| 90, 64 | சதுர்த்தம்— | திறத்திறம், நான்கிசை கொண்டது. |
| 131 | சந்தி— | தேசாளப்பாக்கள் நான்கினுள் ஒன்று. நாற்சீர் ஓரடி, மூன்றடியாகப் புணர்ப்பது. ஒரு பண், |
| 55 | சந்தி— | சாந்தி, சிந்தி, பண்ணோர்பதினேழில் ஒன்று. ஏழிசைப்பண். |
| 119 | சந்திரன்— | மொழிக்கு முதலாகப் புணர்க்கும் சொல். |
| 140 | சந்திரவளையம்— | ஒரு தோற்கருவி. |
| 143 | சமக்கருவி— | நான்குவகைத் தோற்கருவிகள். |
| 82 | சமன்பட | வன்மைக்கும், மென்மைக்கும் இடையில், அதாவது நடுநிலை. |
| 122 | சமபாதம்— | இசைப்பா வகைகளில் ஒன்று. நான்கடியினும் சீரொத்து முற்றக் குருவே வருவது கலிவிருத்தம். |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 74 | சமானன்— | பத்து வாயுக்களில் ஒன்று. |
| 90 | சம்பூரணம்— | பண், ஏழிசைகொண்டது. |
| 149, 154 | சல்லி— | சல்லிகை, ஒரு தோற்கருவி. இதற்குத் தெய்வம் நாராயணன். செங்காலியாற் செய்வது. |

"சா"

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 90 | சாடவம்— | பண்ணியற்றிறம் ஆறிசைகள் கொண்டது. |
| 62 | சாதாளி— | சித்திரவேளர்கொல்லி, ஐந்திசைப்பண்களில் ஒன்று. |
| 122 | சாதியோசை— | சுத்தம், சாளவம், தமிழ் என மூன்று. |
| 37, 55 | சாந்தி— | சிந்தி, சந்தி, பண்ணோர்பதினேழில் ஒன்று ஏழிசைப்பண். |
| 3 | சாந்திக்கூத்து— | நாயகன் சாந்தமாக ஆடிய கூத்து தாண்டவம், நிருத்தம், நாட்டியம். |
| 132 | சாயம்— | சாளவப் பாவின் மூன்றுமடி |
| 36, 56 | சாயரி— | சானுகி, ஆறிசைப் பண்களில் ஒன்று. |
| 55 | சாயவேளர்கொல்லி— | பெரியநாட்டம், பண்ணோர் பதினேழில் ஒன்று, ஏழிசைப்பண். |
| 36, 58 | சாயை— | அரளி, ஆறிசைப்பண்களில் ஒன்று. |
| 34, 61 | சாரல்— | ஆறிசைப்பண்களில் ஒன்று. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 34, 59 | சாவகக்குறிஞ்சி— | சாவகன், சாவகன் குறிஞ்சி ஆறிசைப்பண்களில் ஒன்று. |
| 129 | சாவட்டணை— | சுத்தப்பாக்கள் வகைகளில் ஒன்று. |
| 35, 57 | சாழங்கநாட்டை— | தேசக்கிரி, தேசாக்கிரி ஆறிசைப்பண்களில் ஒன்று. |
| 33, 62 | சாளரபாணி— | ஆறிசைப்பண்களில் ஒன்று, |
| 86, 88 | சாளவம்— | ஐந்து நிறங்களில் ஒன்று. ஓசையை உச்சரித்து நாசி தட்டாமை ஆகாச கம்பிதமாக்கி ஏந்திசையாகப் பாடுவது. |
| 89 | சாளவத்திற்குரியது— | வீணை, இசை. |
| 121 | சாளவத்திற்குரியவன்— | கவுண்டியன் |

"சி"

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 34, 57 | சிகண்டி— | நனிடை, ஆறிசைப் பண்களில் ஒன்று. |
| 21 | சிங்கம்— | பன்னிரண்டு இராசிகளில் ஒன்று. அரி, தார இசை நிற்குமிடம். |
| 74 | சிங்குவை— | பத்து நாடிகளில் ஒன்று. |
| 122 | சித்து— | சிந்து, பாவினம், பாடல் வகைகளில் ஒன்று. இசைப்பா வகைகளில் ஒன்று. |
| 134 | சிந்துகள்— | மூர்த்திகளைப் பார்த்தருளிச்செய்த நாடகப்பாக்களில் ஒருவகை. |
| 134 | சித்திரவண்ணம்— | ஐந்தாய் அந்தாதி எழுவாயடியும் ஈற்றடியும் மண்டிலங்கொள்ளப் பாடிப் புணர்ப்பது. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 35, 62 | சித்திரவேளர்கொல்லி— | சாதாளி, ஐந்திசைப் பண்களில் ஒன்று. |
| 55 | சிந்தி— | சந்தி, சாந்தி, பண்ணோர் பதினேழில் ஒன்று. ஏழிசைப்பண் |
| 122 | சிறுதேவபாணி— | இசைப்பா வகைகளில் ஒன்று. தேவபாணி. |
| 146 | சிறுபறை— | ஒரு தோற்கருவி, நெழுகுபறை |
| 122 | சிறுவண்ணம்— | வண்ண வகைகளில் ஒன்று. |
| 163, 166 | சிவிறுகை— | தோற்கருவிகளில் கொட்டும் அறுவகை ஓசைகளில் ஒன்று கிற, கிற, கிறட. |

"சீ"

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 34, 66 | சீகாமரம்— | காமரம், ஆறிசைப்பண்களில் ஒன்று. |
| 33, 61 | சீவனி— | சீவணி, ஆறிசைப்பண்களில் ஒன்று. |
| 55 | சீராகம்— | சீராகமரம், நள்ளி பண்ணோர் பதினேழில் ஒன்று ஏழிசைப்பண். |
| 54 | சீர்கோடிகம்— | கோடிகம், கோடி, தோடி நிருபதுங்கராகம் பண்ணோர் பதினேழில் ஒன்று விளரிப்பாலை. |

"சு"

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 33, 43 | சுகதி— | சுகதீ, முல்லையாழ், செவ்வழியாழ் படுமலைப்பாலை. பண்ணோர் பதினேழில் ஒன்று. ஏழிசைப்பண். |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 35, 57 | சுத்தகாந்தாரம்— | சுருதிகாந்தாரம், ஆறிசைப் பண்களில் ஒன்று. |
| 88, 94 | சுத்தம்— | ஐந்து நிறங்களில் ஒன்று, ஓசையை உச்சரித்து நாசியிலே ஓட்டிச் சிரத்தையும், நாபியையும் கம்பித்துத் தூங்கிசையாகப் பாடுவது. சிந்துகள் இசை புணக்கும் இடத்து எட்டுவகை முறைமைகளில் ஒன்று மூன்றாவது. |
| 89 | சுத்தத்திற்குரியது— | வங்கிய இசை. |
| 121 | சுத்தத்திற்குரியவன்— | குழலன், குன்றுக்குழலன். |
| 84, 99 | சுருதி— | மாத்திரை, அலகு, குற்றப்படாத ஓசை ஐவகைத் தொழில் முறைமைகளில் ஒன்று. |
| 74 | சுழிமுனை— | சுழுமுனை, சுழுனை, பத்து நாடிகளில் ஒன்று. |

"சூ"

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 37, 63 | சூர்துங்கராகம்— | ஐந்திசைப் பண்களில் ஒன்று. |
| 132 | சூழ்— | (சக்கு, சூழ்) தேசி, வடுகு சிங்களம் என்னும் மூன்றுவகைக் கூத்துமாடி முற்றுப்பெறுதல். |
| 119 | சூரியன்— | மொழிக்கு முதலாகப் புணர்க்கும் சொல். |

"செ"

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 10 | செங்கோட்டியாழ்— | நால்வகை யாழ்க் கருவிகளில் ஒன்று. செங்கோடு. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 119 | செந்தாமரை— | மொழிக்கு முதலாகப் புணர்க்கும் சொல். |
| 54 | செந்து— | பண்ணோர் பதினேழில் ஒன்று பெருந்தொகை, பெருந்தகை. ஏழிசைப்பண். |
| 62 | செந்துருத்தி— | செந்திறம், இளிப்பஞ்சமம், ஐந்திசைப் பண்களில் ஒன்று. |
| 122 | செந்துறை— | இசைப்பா வகைகளில் ஒன்று. |
| 169 | செம்படை— | தாளவகைகளில் ஒருதாளத்தின் பெயர். |
| 53 | செம்பாலை— | ஏழ்பெரும்பாலைகளில் ஒன்று ஏழிசைப்பண். பண்ணோர் பதினேழில் ஒன்று குறிஞ்சியாழ். |
| 60 | செய்திறம்— | கவுசிகம், கௌசிகம் ஆறிசைப்பண்களில் ஒன்று |
| 37, 57 | செருந்தி— | செருத்தி, செந்தி, ஆறிசைப்பண்களில் ஒன்று |
| 16 | செலவு— | யாழிற்குரித்தாகிய கைகள், தொழில் எட்டனுள் ஒன்று. |
| 53 | செவ்வழிப்பாலை— | ஏழ்பெரும் பாலைகளில் ஒன்று பண்கண்டு திறனெய்தாப்பண் |
| 53 | செவ்வழியாழ்— | முல்லையாழ், பண்ணோர் பதினேழில் ஒன்று. படுமலைப்பாலை நாற்பெரும்பண்களில் ஒன்று. |

“ சே ”

| | | |
|---|---|---|
| 58 | சேறை— | பஞ்சமரபு ஆசிரியர் அறிவனாரது ஊர். திருச்சேறை. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| | | **"சொ"** |
| 4 | சொக்கம்— | சுத்த நிருத்தம், கூத்து வகைகளில் ஒன்று சொக்க தாண்டவம். |
| | | **"சோ"** |
| 36, 57 | சோகவராடி— | ஆறிசைப்பண்களில் ஒன்று. |
| 35, 64 | சோமராகம்— | குறுங்கலி, நான்கிசைப்பண்களில் ஒன்று. |
| 87 | சோனகம்— | பாவினம், பாடல் வகைகளில் ஒன்று. |
| | | **"டா"** |
| 84, 99 | டாயம்— | ஏடாயகம், தொழில் ஐந்தில் ஒன்று. மதியோர்கள் ஐந்து நிறம். தூக்கித்தாக்குதல். |
| | | **"த"** |
| 37, 59 | தக்கணாதி— | வருணம், ஆறிசைப்பண்களில் ஒன்று. |
| 34, 55 | தக்கராகம்— | அராகம், ஆறிசைப்பண்களில் ஒன்று. |
| 140 | தகுணிச்சம்— | ஒரு தோற்கருவி. |
| 36, 59 | தக்கேசி— | நவிர், ஆறிசைப்பண்களில் ஒன்று. |
| 139 | தக்கை— | ஒரு தோற்கருவி, |
| 74 | தசவாயுக்கள் தசநாடிகள்— | இடைமுதல் பத்து கூர்மன் முதல் பத்து. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 140 | தடாரி— | பைந்தொழிற்றடாறி, ஒரு தோற்கருவி. |
| 140 | தண்ணுமை— | ஒரு தோற்கருவி. |
| 60 | தத்தளம்— | அக்காழம், அக்காளம், தத்தள பஞ்சமம், ஆறிசைப்பண்களில் ஒன்று. |
| 14 | தந்திரிகரம்— | யாழில் நரம்பு துவக்க, நீளமாக அமைப்பதோர் உறுப்பு. |
| 140 | தமருகம்— | ஒரு தோற்கருவி. |
| 86 | தமிழ்— | தமிழ்களி, ஐந்து நிறங்களில் ஒன்று. |
| 59 | தமிழ்க்குச்சரி— | குச்சரி, ஆறிசைப் பண்களில் ஒன்று. |
| 89 | தமிழ்க்குரியது—யாழிசை. | |
| 121 | தமிழ்க்குரியவன்—மதங்கன். | |
| 106 | தமிழ்நிறம்— | செந்தமிழ், ஓசையை உச்சரித்து நாபியைக்கம்பித்துக் குடிலமாக்கி மயங்கிசையாகப் பாடுவது. |
| 36, 56 | தமிழ்வராடி— | வராடி, வசந்தன்கொல்லி ஆறிசைப் பண்களில் ஒன்று. |
| 33, 59 | தராவணி— | காரவணி, நாராயணி, ஆறிசைப் பண்களில் ஒன்று. |
| 129, 130 | தலைக்கண்டி— | சுத்தப்பாக்கள் வகைகளில் ஒன்று முதலடி தொடங்கி ஈற்றடி அளவுமாய்த் தூணியாக்கிப் புணர்ப்பது. |
| 144 | தலைக்கருவிகள்—ஏழுவகைத் தோற்கருவிகள். | |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
| --- | --- | --- |
| 140 | தவில்— | தாவில், ஒரு தோற்கருவி (தவுல்) |
| 77 | தனஞ்சயன்— | பத்து வாயுக்களில் ஒன்று. |
| 36, 63 | தஞ்சி— | ஐந்திசைப் பண்களில் ஒன்று. |
| 21 | தனு— | தனுசு, பன்னிரண்டு இராசி களில் ஒன்று. துத்த இசை நிற்கும் இடம். |
| 33, 61 | தனுக்காஞ்சி— | தனுக்காஞ்சி, தன்னி ஆறிசைப் பண்களில் ஒன்று. |

" தா "

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
| --- | --- | --- |
| 84 | தாக்கு— | தூக்கு, பதினொருவகைச் செய்கைகளில் ஒன்று. |
| 33, 56 | தாணு— | ஆறிசைப் பண்களில் ஒன்று. |
| 3 | தாண்டவம்— | சொக்க தாண்டவம் ஆனந்தத் தாண்டவம். |
| 122 | தாமம்— | நிறம், தாமம் என்கிற நிறம். இதில் அரசர்குச் சாளவம் பாடுவர். |
| 42 | தாரப்பணம்— | தாரம், தாரப்பண், மேற்செம்பாலை ஏழிசைப்பண்களில் ஒன்று. |
| 37, 62 | தாரப்பண்— | காந்தாரம், தாரப்பண்டிறம். ஐந்திசைப்பண்களில் ஒன்று. |
| 25 | தாரம்— | ஏழிசைகளில் முதலிசை, சிம்ம ராசியில் நிற்பது, காடையின் ஓசையை ஒத்தது. தமிழ் மரபில் முற்றோன்றியது. பண்ணின் பெயர். |
| 103 | தாரை— | துளைக்கருவிகளில் ஒன்று. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 8 | தாளநூல்— | தாளவகைகூறும் பழைய நூல் பஞ்சமரபில் ஒன்று. தாளமரபு. |
| 135 | தாளமறிதல் | இசைபுணர்க்குமிடத்து அறியப்பெறும் பத்துவகைகளில் இரண்டாவது (முறைமை) |
| 169 | தாளம்— | இசைக்கலைக்கு முதலானது. முதலாயினும் கொட்டும், கூத்தும், இசையும், முழவும், தாளமும் எனவரும், வாச்சியப்பாக்கள் எனவும் படும். வடசொல்விரவி நாலடியாய் முப்பத்திரண்டு அறிவர்த்தனைகளாலே முற்ற வருவது. கஞ்சக் கருவிகளில் ஒன்று. தாண்டவத்திற்குரியது. |
| 83, 91 | தானங்கள் எட்டு— | பெருந்தானம், நெஞ்சு, மிடறு, நாக்கு, தலை, மூக்கு, அண்ணம் பல் (அதரம்) உதடு. |
| 136 | தானமறிதல்— | இசைபுணர்க்குமிடத்து, அறியப் பெறும் முறைமைகளுள் பத்தாவது. |
| 82 | தானம்— | மத்திமகாலம். |

"தி"

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 141 | திமிலை— | ஒரு தோற்கருவி. |
| 85 | திரள்— | திறம், மதியோர்களால் அறுதி இடப்பட்ட நான்கிடங்களில் ஒன்று திறள். |
| 56 | திராடம்— | அத்தராட்டம், ஆறிசைப் பண்களில் ஒன்று. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 15, 17 | திரிகோணப்பாலை— | ஒரு பண்ணிற்குரிய நரம்புகள் மாத்திரை வேறுபட்டு மூன்று நிரல்களாக ஒத்திசைப்பது, |
| 122 | திரிபாதை-திரிபாதம்- | இசைப்பாக்களின் வகைகளில் ஒன்று. (திரிபதை) |
| 134 | திருப்பாட்டு— | மூர்த்திகளைம் பார்த்தருளிச் செய்த நாடகப்பாக்கள் வகைகளில் ஒன்று. |
| 119 | திருமகள்— | மொழிக்கு முதலாக புணர்க்கும் சொல். |
| 90 | திறத்திறம்— | சதுர்த்தம், நான்கிசைகள் முறைமை. |
| 89 | திறம்— | ஔடுவம். அடுவிகம், ஐந்திசைகள் கொண்ட முறைமை |
| 89 | திவ்வியவராடி— | ஆறிசைப் பண்களில் ஒன்று. (தீபவராடி) |
| 11 | திவவு— | விசிக்கும் வார்க்கட்டு. |

" தீ "

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 37, 58 | தீபவராடி— | திவ்வியவராடி, ஆறிசைப் பண்களில் ஒன்று, |

" து "

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 64 | துக்கராகம்— | வட்டி, நான்கிசைப்பண்களில் ஒன்று. |
| 5, 145 | துடி— | ஒரு தோற்கருவி, காலை முழவு அளவு முறையில் நிமிடம் எட்டு கொண்டது துடி. வீழ்ந்தாடல்களுள் ஒன்று முருகன் ஆடியது. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 171 | துடுக்கம்— | வாச்சியப்பகுதிகள், அதாவது வேறுபட்ட இரண்டடியாய், முதலடிவாரத்தைப்பற்றி நிகழ்ந்து பின்பில் அடித்திரளைப் பற்றி நிகழ்வது. அடுக்கம் என்றும் கூறப்பெறும். |
| 140 | துடுமை— | ஒருதோற்கருவி (துடுவை) பண்ணமை முழவு. |
| 21 | துத்தம்— | ஏழிசைகளில் ஒன்று. தனுராசியில் நிற்பது. குயிலோசையை ஒத்தது. |
| 83 | துருதம்— | அளவை முறையில் துடி இரண்டு கொண்டது. வட்ட வடிவு. |
| 129, 130 | துருவை— | சுத்தப்பாக்களில், சதுராட்டியில் இரண்டாமடி; |
| 21 | துலாம்— | பன்னிரண்டு இராசிகளில் ஒன்று குரல் எனுமிசை நிற்குமிடம். |
| 131 | துவைந்தி— | துவைந்தி-தேசாளப்பாக்கள் நான்கினில் ஒன்று, வட சொல்லாலே ஓரடி எண்சீராக, இரண்டடியாலே புணர்ப்பது; |
| 103 | துளைக்கருவி— | வங்கியம் முதல் சங்கு வரை. |

" தூ "

| | | |
|---|---|---|
| 88 | தூங்கிசை— | சுத்தம்பாடும் முறை, ஓசையை உச்சரித்து நாசியிலே ஓட்டிச் சிரத்தையும் நாபியையும் கம்பித்துப் பாடுவது. |
| 104 | தூம்பு— | கண்விடுதூம்பு, ஒருதோற்கருவி. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| | **" தெ "** | |
| 15 | தெருட்டல்— | தொழிற்கை எட்டனுள் ஒன்று. |
| 80 | தென்னதென— | ஆளத்தி செய்யுமிடத்து இவ்வசையுடன் பாடப்படும், ஆளத்திக்குக் கொள்ளப்பெறும் அசை, தென்ன, தென. |
| | **" தே "** | |
| 132 | தேசாள நிறம்— | நிறவகைகளில் ஒன்று இது தமிழ்ப்பாவினுக்கும் பொருந்தும் |
| 131 | தேசாளப்பாக்கள்— | இசைப்பாவகைகளில் நான்கு துவைந்தி, சந்தி, சதுராங்கி பெருஞ்சுரம் எனப்படும். |
| 132 | தேசாளம்— | ஒரு வகைக்கீதம் சக்கு, சூழாதியாகப் புணர்க்கப்படும் தேசாளகீதம் எனப்படும். |
| 37, 54 | தேசாளி— | தேவாழி, தேவதாளி ஏழிசைப்பண், பண்ணோர் பதினேழில் ஒன்று, தேசி, தேசாழி எனவும் படும். |
| 37, 141 | தேசி— | ஒருதோற்கருவி. ஒருபண். |
| 57 | தேசிகம்— | கவுடி, கௌடி, கவுரி ஆறிசைப்பண்களில் ஒன்று. |
| 74 | தேவதத்தன்— | தெய்வதத்தன், பத்துவாயுக்களில் ஒன்று. |
| 133 | தேவபாணி— | இசைப்பா வகைகளில் ஒன்று பெருந்தேவபாணி, சிறுதேவபாணி என இருவகைப்படும். |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| | | **"தை"** |
| 16 | தைவரல்— | யாழிற்குரித்தாகிய கைகள் எட்டனுள் ஒன்று. ஒரு செய்கை. |
| | | **"தொ"** |
| 140 | தொக்கவுபாங்கம்— | தொக்கு உபாங்கி ஒரு தோற்கருவி. |
| 92 | தொட்டுக்கோள்— | இசைப்புணர்ப்பு ஐந்தனுள் ஒன்று. |
| 14, 15 | தொழிற்கை— | இது எட்டு வகைப்படும். வார்தல் வடித்தல் உந்தல், உறழ்தல் உருட்டல் தெருட்டல், அள்ளல், பட்டடை என்ப. |
| | | **"தோ"** |
| 54 | தோடி— | கோடிகம், சீர்கோடிகம், கோடி, திருபதுங்கராகம், விளரிப்பாலை, ஏழிசைப்பண். பண்ணோர் பதினேழில் ஒன்று. |
| 140 | தோலும்— | தோலாற் செய்யப்பட்ட முழவுகள் ஆதிக்கருவிகள் |
| 139, 140 | தோற்கருவிகள்— | இவை முப்பது வகையில், பெயர் கொண்டு, வன்மை, மென்மை, சமம், தலை, இடை, கடை, வீரம் என ஏழுவகைப்படுத்தி அறிந்து பயன்படுத்தப் பெறுவன. |
| | | **"ந"** |
| 100 | நகை புகை— | நகை, புகை, எள், காடி, காமம், கள் இவை மிடற்றுக்குப் பகை, |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
| --- | --- | --- |
| 35, 51 | நட்டபாடை— | (நைவளம்) ஆறிசைப் பண்களில் ஒன்று. |
| 59 | நட்டராகம்— | ஆறிசைப்பண்களில் ஒன்று. |
| 24 | நரம்புகளின் ஓசை— | விலங்கு, பறவை ஒலி பிறத்தல் |
| 103 | நரம்புக்கருவி— | யாழ், வீணை, கின்னரி முதலியன. |
| 84 | நலிதல்— | நலிவு, பதினொரு வகைச் செய்கைகளில் ஒன்று. |
| 98 | நல்லொழுக்கப் பாரணை— | இசைபாடுவான் உரித்தாகக் கொண்டு பாடத்தக்கது. |
| 56 | நவிர்கொல்லி— | குறிஞ்சி, ஆறிசைப் பண்களில் ஒன்று. |
| 97 | நழுவல்— | பாடுதற்கல்லாத இசைகள் எட்டனுள் ஒன்று, ஒருதானத்தில் பாட ஒரு தானத்தில் நழுவுவது |
| 33, 62 | நளுத்தை— | இந்தளம், வடுகு, ஐந்திசைப் பண்களில் ஒன்று. |
| 37, 55 | நள்ளி— | சீராகம், சீராகமரம் ஏழிசைப்பண் பண்ணோர் மதினேழில் ஒன்று. |
| 57 | நனிடை— | சிகண்டி, ஆறிசைப்பண்களில் ஒன்று. |

" நா "

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
| --- | --- | --- |
| 74, 77 | நாகன்— | பத்து வாயுக்களில் ஒன்று. விக்கல் இடுவிப்பது. |
| 33, 60 | நாகதொனி— | ஆறிசைப்பண்களில் ஒன்று. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 37, 63 | நாகயாந்தி— | நாகம், ஐந்திசைப்பண்களில் ஒன்று. |
| 54 | நாகராகம்— | கொடிநாகராகம் ஏழிசைப்பண், பண்ணோர் பதினேழில் ஒன்று. |
| 33, 61 | நாட்டம்— | ஆறிசைப்பண்களில் ஒன்று. |
| 3 | நாட்டியம்— | இயலும், இசையும் தழுவிய நாடகங்கள். |
| 63 | நாட்டை— | மல்லாரி, ஐந்திசைப்பண்களில் ஒன்று. |
| 34, 60 | நாணுப்பஞ்சமம்— | பின்னபஞ்சமம், ஆறிசைப்பண்களில் ஒன்று. |
| 83 | நாதம்— | ஒலி, பதினொரு வகைச் செய்கைகளில் ஒன்று. |
| 9 | நாரதயாழ்— | யாழ்க்கருவிகளில் ஒன்று. பழையயாழ். |
| 114 | நாலாஞ்சாமத்துப்பண்— | ஈசனைப்பாடப்படுவது, அந்தாளிக் குறிஞ்சி, சாவகக் குறிஞ்சி, மேகராகக் குறிஞ்சி, காந்தாரம், துக்கராகம், செவ்வழி, குறிஞ்சி, அரும்பாலை என்ற எட்டுப்பண்கள். |
| 42 | நாற்பெரும்பண்— | பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி. (முல்லை) |
| 148 | நாழிகைப்பறை— | நாட்பறை, நாள்முழவு ஒரு தோற்கருவி. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|

"நி"

| | | |
|---|---|---|
| 140 | நிசாளம்— | ஒரு தோற்கருவி. |
| 133 | நிதே— | சாளவத்தின் பாவில் இரண்டாமடி. |
| 82, 83 | நிமிடம்— | காட்டை எட்டு கொண்டது நிமிடம். |
| 3 | நிருத்தம்— | தேசி, வடுகு, சிங்களம் என்ற மூவகைக் கூத்து. |
| 54 | நிருபதுங்கராகம்— | பண்ணோர் பதினேழில் ஒன்று ஏழிசைப்பண் விளரிப்பாலை, கோடிகம், கோடி, தோடி. |
| 134 | நிறம்— நிறமறிதல் | மூர்த்திகளைப் பார்த்தருளிச் செய்த நாடகப்பாக்கள் வகைகளில் ஒன்று. |
| 80 | நிறவாளத்தி— | பண்ணின் நிறம் குலையாமற் பாரணையுடன் நிகழும் ஆளத்தி. |
| 94 | நிறைநிலை— | சிந்துகள் இசை புணர்க்குமிடத்து கொள்ளப் பெறும் எட்டுவகை முறைமைகளில் ஒன்று ஆறுவது. |

"நு"

| | | |
|---|---|---|
| 95 | நுளைபு— நுளைதல் | இசைநுளைபு, நால்வகைப்படும், நெய்தல், முகத்தல், பாய்தல், நுளைதல் என்பவை அவை. நுளைதல் என்பது புன்மைத் தொழில். |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| | **" நெ "** | |
| 81 | நெட்டெழுத்தைந்து— | ஆ, ஈ, ஊ, ஏ, ஓ. |
| 95 | நெய்தல்— | இசைநுளைபு நால்வகைகளுள் ஒன்று, வல்வினை, செவ்வழி. |
| 146 | நெழுகுபறை— | ஒரு தோற்கருவி, சிறுபறை. |
| 94 | நெறிநிலை— | சிந்துகள் இசை புணர்க்குமிடத்து கொள்ளப் பெறும் எட்டுவகை முறைமைகளில் ஒன்று ஏழாவது |
| | **" நே "** | |
| 163, 166 | நேர்கை— | தோற்கருவிகளில், கொட்டும் அறுவகை ஓசைகளில் ஒன்று, தகத, திகிதி, டிடிடி. |
| 114 | நேரிசை— | அரும்பாலை அல்லது கொல்லி, இப்பண்ணில் பாடும் பாவினத்தில் ஒருவகை. |
| 34, 63 | நேர்திறம்— | புறநீர்மை, ஐந்திசைப்பண்களில் ஒன்று. |
| | **" நை "** | |
| 57 | நைவளம்— | நட்டபாடை, ஆறிசைப் பண்களில் ஒன்று. |
| | **" நோ "** | |
| 33, 56 | நோதிறம்— | குறண்டி, தேவகிரி ஆறிசைப்பண்களில் ஒன்று. |
| | **" ப "** | |
| 25 | பகை— | நின்ற நரம்புக்கு (ஏழ்நரம்பிற்கு) மூன்றும் நரம்பும் ஆறும் நரம்பும் பகை. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 60 | பஞ்சமம்— | கூர்ந்த பஞ்சமம், ஆறிசைப் பண்களில் ஒன்று. |
| 101 | பஞ்சமரபு— | இந்நூற்பெயர், இசையும், முழவும், தாளமும், கூத்தும், அவிநயமும்—எனவும், நற்றோல், துளை, நரம்பு கஞ்சம் மிடறு எனவும் படும். |
| 101, 102 | பஞ்சமாசத்தம்— | தோல், துளை, நரம்பு கஞ்சம், மிடறு. |
| 35, 58 | பஞ்சுரம்— | பழம்பஞ்சுரம், ஆறிசைப் பண்களில் ஒன்று. பஞ்சுரம் பழம்பஞ்சுரம், இதை இரண்டாகவும் கூறப்பெறும். |
| 139 | படகம்— | ஒருதோற்கருவி. |
| 84 | படுத்தல்— | பதினொருவகைச் செய்கைகளில் ஒன்று. இறக்கம். |
| 33, 63 | படுமலை— | ஐந்திசைப்பண்களில் ஒன்று. |
| 33, 58 | படுமலைக் கவ்வாணம்— | கவ்வாணம் ஆறிசைப்பண்களில் ஒன்று. |
| 53 | படுமலைப்பாலை— | ஏழ்பெரும்பாலைகளில் ஒன்று. செவ்வழியாழ், முல்லையாழ், சுகதி பண்ணோர் பதினேழில் ஒன்று ஏழிசைப்பண். |
| 15 | பட்டடை— | தொழிற்கை எட்டினுள் ஒன்று. இளிநரம்பு. |
| 38 | பண்— | ஏழிசைகொண்டது, சம்பூரணம். |
| 156 | பண்டியளவு— | மத்தளத்தின் சுற்றளவு. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
| --- | --- | --- |
| 148 | பண்ணமைமுழவு— | முரசு, நிசாளம், துடுமை (துடுவை) |
| 16 | பண்ணல்— | யாழிற்குரித்தாய கைகள், |
| 136 | பண்ணறிதல்— | இசை புணர்க்குமிடத்து அறியப்பெறும் முறைமைகளில் ஆறுவது, |
| 80, 81 | பண்ணுளத்தி— | பண்ணையே கருதி வைக்கப்படும், பண்மேற்றொழிலாதலாம். |
| 89 | பண்ணியற்றிறம்- | சாடவம், ஆறிசைகள், முறைமை. |
| 84 | பதின்மூன்றெழுத்து— | அ, இ, உ, எ, ஒ. ஆ, ஈ, ஊ, ஏ, ஓ. ம, ந, த என இவை. |
| 11 | பத்தர்— | யாழுறுப்புக்களில் ஒன்று, (குடம்) குமிழ், தணக்கு, முருக்கு எனும் மரங்களால் செய்யப்பெறுவது. |
| 134 | பத்தியவண்ணம்- | தலைப்பாவே இரண்டடியாலும் நாலடியாலும், முதன்மொழி, கடைமொழியுடன் மண்டிலம் கொண்டுவரப் பாடுவது. |
| 63 | பயிரவம்— | பைரவம், வயிரவம். ஐந்திசைப்பண்களில் ஒன்று. |
| 15, 16 | பரிவட்டணை— | யாழிற்குரித்தாகிய கைகள் (தொழில்கள்) எட்டினுள் இரண்டாது. |
| 35, 58 | பழந்தக்கராகம்— | ஆறிசைப்பண்களில் ஒன்று. |
| 148 | பறை— | கணப்பறை, ஒருதோற்கருவி, |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 169 | பற்று— | வாச்சியப்பாக்கள் ஆறில் ஒன்று. இதற்குப் பொருந்த இரண்டடியாக்கிக் காலத்தைப் பற்றி வேற்றுமை தோன்றப் புணர்ப்பது பற்றுப்பாடுவது. |
| 148 | பன்மைமுழவு— | முரசு, நிசாளம், துடுவை. |

“ பா ”

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 140 | பாகம்— | ஒரு தோற்கருவி, தப்பு. |
| 36, 60 | பாக்கழி— | வஞ்சி, வஞ்சிப்பாக்கழி. |
| 140 | பாங்கி— | விரலேறுபாங்கி, ஒரு தோற்கருவி, உபாங்கி |
| 37, 63 | பாடை— | ஐந்திசைப்பண்களில் ஒன்று. |
| 121 | பாணர்— | இசைபாடுந் தொழிலர், யாழிற்கு உரியர் மூத்திறத்துப்பாணர். |
| | பாண்— | குழலன், மதங்கன், கவுண்டியன். பாட்டு, பண், பாண், பாணர். |
| 5 | பாண்டரங்கம்— | பதினோரு ஆடல்வகைகளில் ஒன்று, நின்றாடல். இறைவன் ஆடியது. |
| 95 | பாய்தல்— | இசை நுளைபுவகை நான்கினுள் ஒன்று, சம நிலை. |
| 80 | பாரணை— | இதற்கு எழுவாய் நெட்டெழுத்து ஆ, ஈ, ஊ, ஏ, ஓ என ஐந்து இது கூத்துடன் நிகழும். |
| 28, 31 | பாலை— | இடமுறை, வலமுறை யாழில் நரம்புகளை அமைத்து வாசித்தற்குரிய சுர (இசை) வரிசைகள் பகுதி. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
| --- | --- | --- |
| 54 | பாலையாழ்— | நாற்பெரும் பண்களில் ஒன்று அரும்பாலை, பண்ணோர் பதினேழில் ஒன்று. |
| 135 | பாவறிதல்— | பாட்டறிதல், இசை புணர்க்குமிடத்து அறியப்பெறும் பத்துவகை முறைமைகளில் முதலாவது. |
| 5 | பாவைக்கூத்து— | திருமாள் கொல்லிப்பாவை வடிவாய் ஆடியது. |

" பி "

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
| --- | --- | --- |
| 74 | பிங்கலை— | பத்துநாடிகளில் ஒன்று. |
| 138 | பிண்டம்— | முழவுகளுடைய அளவும், நீளமும், உறுப்பும் இவற்றைச் சொல்லுவது முழவு வாச்சியத்தின் முழு உருவம். |
| 61 | பியந்தை— | ஆறிசைப்பண்களில் ஒன்று. (யாழ்பதம்) பெயர் திறம். |
| 130 | பிரகலை— | (ஆந்திரியம்) நாலுறுப்புகளும் குறைபாடில்லாதது, உருக்களில் நான்காமடி. |
| 129, 130 | பிரவந்தம்— | சுத்தப்பாக்கள் வகைகளில் ஒன்று. அடிவரையிலே பொருள்வர, ஒரு தாளத்திற் புணர்ப்பதன்றிப் பல தாளத்தாலும் புணர்ப்பது. |
| 74 | பிராணன்— | பத்து வாயுக்களில் ஒன்று. மூலாதாரத்தினின்றும் புறப்பட்டு நால்விரற் பெயர்ந்து எண்விரல் அடங்குவது. |
| 34, 60 | பின்னபஞ்சமம்- | நாணுப்பஞ்சமம், ஆறிசைப்பண்களில் ஒன்று |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| | | **" பீ "** |
| 94 | பீர்கண்டம்— | சிந்துகள் இசைபுணர்க்கும் இடத்து எட்டுவகை முறைமை உள. அவற்றுள் ஒன்று: நான்காவது. |
| | | **" பு "** |
| 34, 61 | புங்காளி— | காளி, தாளி, ஆறிசைப்பண்களில் ஒன்று. |
| 135 | புணர்ப்பறிதல்— | இசை புணர்க்குமிடத்து அறியப்பெறும் முறைமைகளில் மூன்ருவது. |
| 97 | புரைத்தல்— | பாடுதற்கல்லாத இசைகள் எட்டனுள் ஒன்று ஓரோசையான தன்மை நீங்கிப் பலவோசையாய் வருவது. |
| 83 | புலுதம்— | லகு மூன்று கொண்டது புலுதம் புலிதம் (மூன்று) |
| 42 | புறநிலை— | புறம், இயல்பான இசை நிலைகளுக்கு வேறிசைகளைக் கொண்டு விளங்குவது. |
| 63 | புறநீர்மை— | நேர்திறம், ஐந்திசைப்பண்களில் ஒன்று. |
| 148 | புறப்புறமுழவு— | பறைமுதல் அடக்கம் வரை. |
| 42 | புறம்— | ஒரு பண்ணின் முதன்மையான, இயல்பான இசையமைப்பிற்கு நின்ற இசையும் எடுத்துப் படுத்தும் ஐந்தாமிசையும் தவிர்த்து மற்ற இசைகள் வேருய் அதாவது அகத்திற்குப் புறமாயிருத்தல் (புறநிலை) |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 148 | புறமுழவு— | தண்ணுமைமுதல் அந்தரி முழவுவரை. |
| 57 | புற்கலம்— | உடம்பு, பூதங்களால் (பஞ்சபூதம்) ஆயது (பரிணமம்) |

"பூ"

| | | |
|---|---|---|
| 74 | பூடா— | நாடிகள் பத்தினுள் ஒன்று. |
| 71 | பூதகுணம்— | பூதமைந்து, குணமைந்து. |
| 86 | பூருவம்— | கேத்திராங்கம், கேத்திரார்ரங்கம் ஆதி, இது சுத்தத்துடனே சிவணும். |

"பெ"

| | | |
|---|---|---|
| 137 | பெயர்— | தோற்கருவிகளின் (முழவு) பெயர்வகையை வரையறுத்துக் கூறுவது. |
| 34, 61 | பெயர்திறம்— | யாழ்பதம், பெயர்திறப்பியந்தை பியந்தை, ஆறிசைப் பண்களில் ஒன்று. |
| 36, 56 | பெரியவராடி— | ஆறிசைப்பண்களில் ஒன்று. |
| 97 | பெருக்குரல்— | பாடுதற்கல்லாத இசைகள் எட்டனுள் ஒன்று நிறமில்லாத ஓசை. |
| 131 | பெருஞ்சுரம்— | தேசாளப்பாக்கள் நான்கனுள் ஒன்று அடிவரையறையின்றிப் புணர்ப்போன் பெரு அளவர்க பல தாளத்தாலும் புணர்ப்பது. |
| 83 | பெருந்தானம்— | (எட்டு) நெஞ்சு, மிடறு, நாக்கு, தலை, மூக்கு, அண்ணம், பல் உதடு என இவை. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 122 | பெருந்தேவபாணி— | இசைப்பா வகைகளில் ஒன்று |
| 33, 42 | பெருந்தொகை— | பெருந்தகை. செந்து ஏழிசைப் பண்களில் ஒன்று. |
| 140 | பெரும்பறை— | ஒரு வகைத் தோற்கருவி (பெரிய பறை) |
| 122 | பெருவண்ணம்— | இசைப்பா, வண்ண வகைகளில் ஒரு வகை. |
| | " பே " | |
| 5 | பேடு— | வீழ்ந்தாடல்களுள் ஒன்று, காமன் ஆடியது. |
| 154 | பேரிகை— | ஒரு வகைத் தோற்கருவி. குராமரத்தாற் செய்வது. |
| 9, 10 | பேரியாழ்— | பெரியயாழ்க் கருவி, இருபத்தியொரு நரம்புகள் கட்டப்பெறுவது. |
| 139 | பேரெழுத்து— | முழவுகளின் பெயர் வகைகளையும் முழவு முறைகளையும் ஓசை, ஊட்டா நின்ற பாடலெழுத்துக்களையும் சோடனைகளையும் மற்றும் வழங்குவன சொல்லுவதும் என்ற நான்கு வகை முறைமை. |
| | " பை " | |
| 37 | பையுள்காஞ்சி— | ஆறிசைப் பண்களில் ஒன்று. இது தனிப்பண். |
| 63 | பைரவம்— | பயிரவம், வயிரவம் ஐந்திசைப் பண்களில் ஒன்று. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| | "பொ" | |
| 136 | பொருளறிதல்— | இசைபுணர்க்குமிடத்து அறியப் பெறும் முறைமைகளில் நான்காவது. |
| | "ம" | |
| 9, 10 | மகரயாழ்— | நால்வகை யாழ்களில் ஒன்று மகரவடிவில் இருப்பது. பத்தொன்பது நரம்புகளால் கட்டப்பெறுவது. |
| 119 | மங்கலச்சொற்கள்— | மொழிக்கு முதலாகிய மங்கலச் சொற்கள், திருமகள், செந்தாமரை மலர், சந்திரன் சூரியன், எனக் கூறப்பெறும். |
| 118 | மங்கலம்— | மங்கலப்பண்கள், முன்னெட்டு பின்னெட்டு எனப் பதினறு. |
| 42, 54 | மண்டலியாழ்— | மண்டலம், இருநிறம் மண்டலயாழ் ஏழிசைப்பண் பண்ணோர் பதினேழில் ஒன்று. |
| 121 | மதங்கன்— | இசைபாடுபவர்களில் ஒரு வகையினன். தமிழ்க்குரியவன். |
| 149, 154 | மத்தளம்— | தோற்கருவிகளில் ஒன்று, முதன்மையான கருவி. வேம்பாற் செய்வது. நான்முகன் என்றும் பெயர் பெறும். இதற்கு அதிதேவதையும் நான்முகன். |
| 150 | மதியம்— | சந்திரன் தோற்கருவி முறைகளில் சந்திராங்கம். |
| 88 | மயங்கிசை— | தமிழ்பாடும் முறைமைகளில் ஒன்று. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 5 | மரக்காலாடல்— | வீழ்ந்தாடலுள் ஒன்று. மாயவள் ஆடியது. |
| 54 | மருதயாழ்— | ஒரு யாழ்க்கருவி நாற்பெரும் பண்களில் ஒன்று, ஏழிசைப் பண், கோடிப்பாலை, பண்ணோர் பதினேழில் ஒன்று. மருதன்ளு. |
| 34, 58 | மருள்— | ஆறிசைப் பண்களில் ஒன்று. |
| 35, 57 | மலகரி— | மல்லகரி, ஆறிசைப்பண்களில் ஒன்று. |
| 171 | மலைப்பு— | வாச்சியப்பகுதி. அதாவது அடிகள் முறிவது. முறித்துப் பாடினது. தாளக்கிரியைபற்றி மண்டிலமாக வருவது. |
| 35, 63 | மல்லாரி— | நாட்டை, ஐந்திசைப்பண்களில் ஒன்று. |
| 37, 55 | மவுராழி— | மவுராளி, மௌசாளி, வேளாவளி, மவுளி, ஏழிசைப்பண் பண்ணோர் பதினேழில் ஒன்று. |
| 31, 54 | மவுரி— | அரி, பவுரி, மாங்கள்ளி, யாழரி. அரியநாட்டம், ஏழிசைப்பண் பண்ணோர் பதினேழில் ஒன்று. |
| 5 | மறக்கூத்து— | பதினேரு ஆடல் வகைகளில் ஒன்று, நின்ருடல் மல்லினுடல் கண்ணன் ஆடியது. |
| 87 | மறம்— | பாவினங்களில் ஒன்று. அதாவது பாடல் வகைகளில் ஒன்று. கவிகளுடனும் சிந்துகளுடனும் பொருந்த வருவது. |
| 35, 55 | மன்றல்— | மன்றில், ஆறிசைப்பண்களில் ஒன்று. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| | | **“மா”** |
| 37, 54 | மாங்கள்ளி— | மவுரி, ஏழிசைப்பண்களில் ஒன்று. பவுரி, யாழரி. |
| 157 | மாச்சினை— | மத்தளத்தின் வலமுகமாச்சினை; இடமுகமாச்சினை. அதாவது தோல் கட்டப்படும் பகுதி. |
| 13 | மாடகம்— | யாழுறுப்புள் ஒன்று. |
| 36, 60 | மாதுங்கராகம்- | ஆறிசைப்பண்களில் ஒன்று. |
| 27 | மாத்திரை— | அலகு, சுருதி, ஒலியளவு. நரம்புகளின் மாத்திரை. |
| 82 | மாத்திரைகள்— | காலஅளவு ஒன்பதுவகை. கணம், லவம், காட்டை, நிமிடம், துடி, துருதம், லகு, குரு, புலுதம் எனப்படும். |
| 5 | மார்க்கம்— | இருவகைக்கூத்துள் ஒன்று. (மார்க்கம்-தேசிகம்) (அகம்-புறம்) |
| 40, 59 | மாளுவகிரி— | அருட்புரி, ஆறிசைப்பண்களில் ஒன்று. |
| | | **“மி”** |
| 103 | மிடறு— | குரல். (ஆண்குரல், பெண்குரல்) பண்ணும் இசையுமாகிய இவற்றைப் பயக்கும் மிடறு. மிடற்றுத்தொழில், கண்டத் தொழில், கண்டமரபு, மிடற்றுப்பாடல், கண்டப் பாடல், ஆகுபெயரான் மிடற்றுப்பாடற்குமாகும். |
| 100 | மிடற்றுக்காகாதன- | நகை, புகை, எள், காடி, காமம், கள்; |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| | **“ மீ ”** | |
| 21 | மீனம்— | பன்னிரண்டு இராசிகளில் ஒன்று, உழை நிற்குமிடம். |
| | **“ மு ”** | |
| 129, 130 | முகண்டி— | சுத்தப்பாக்கள் வகைகளில் ஒன்று மூன்றடியாய் அடிமுகங்கள் தோறும் கண்டத்தைக் கம்பித்துப் பாடிப் புணர்ப்பது. |
| 95 | முகத்தல்— | இசைநுளைபு நால்வகைகளில் ஒன்று. |
| 11 | முண்டகம்— | திவவின் கடைக்கண் முடித்த மணிமுடி. |
| 144 | முதற்கருவிகள்— | தோற்கருவிகளில் முதற்கருவிகள் மத்தளம், சல்லி, இடக்கை, கரடிகை, பேரிகை, படகம், குடமுழவம். தலைக்கருவிகள் எனவும் கூறப்பெறும். |
| 112 | முதற்சாமத்துப்பண்— | பிரமனைப் பாடப்படுவது, புறநீர்மை, சுத்தகாந்தாரம் கௌசிகம், தக்கேசி வராடி, இந்தளம் சாளரபாணி, செந்துருத்தி என்ற எட்டுப் பண்கள். |
| 150 | முதல்— | தோற்கருவிகளின் பகுப்புமுறை. |
| 70 | முதனிலை— | மதியோர்களால் நன்கு அறுதியிடப்பட்ட அமைதி நான்கிடங்களில் ஒன்று. |
| 34, 58 | முதிர்ந்த இந்தளம்— | ஆறிசைப் பண்களில் ஒன்று. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 37, 59 | முதிர்ந்த குறிஞ்சி- | குறிஞ்சி, அரற்றுக் குறிஞ்சி ஆறிசைப் பண்களில் ஒன்று. |
| 68 | முத்திரை— | குழற்கருவியில் வளையாற் சேர்ந்த துளைகளில் ஒன்று. |
| 140 | முரசு— | ஒரு தோற்கருவி. |
| 171 | முரிப்பு— | வாச்சியப்பகுதி, அதாவது ஒருவரித் தடையினை அளவிற் செய்கையாலே முரிப்பது. |
| 33, 61 | முல்லைசாதாரி— | ஆறிசைப்பண்களில் ஒன்று. முல்லையையும், சாதாரியையும் இரண்டாகவும் கூறப்பெறும் |
| 138 | முழவு— | தோற்கருவிகளுக்குப் பொதுப்பெயர், இவற்றை பெயர், முறைமை, பிண்டம் பேரெழுத்து, எனக்கொண்டும் விளக்கப்பெறும், தனித்த மத்தளத்திற்குமட்டும் முழவு என்றும் கூறப்பெறும். |
| 94 | முறைகண்டம்— | சிந்துகள் இசை புணர்க்குமிடத்து எட்டு எட்டாவது வகை முறைமைகளில் ஒன்று. |
| 137 | முறைமை— | தோற்கருவிகளின் முறைமை. |
| 23 | முற்றேன்றிய இசை— | தாரம் |
| 94 | முன்னிசை— | சிந்துகள் இசைபுணர்க்கும் இடத்து, கொள்ளப்பெறும் எட்டுவகை முறைமைகளில் ஒன்று. இரண்டாவது. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| | "மூ" | |
| 2, 3 | மூவகைக்கூத்து- | சாந்திக்கூத்து<br>விநோதக்கூத்து<br>வகைக்கூத்து. |
| 1, 2 | மூவிசை— | எழுத்து முதற் சீர்களாற்<br>சேர்க்கப்பட்ட மூவிசை<br>நரம்பு, குழல், மிடறு. |
| 114 | மூன்றுஞ்சாமத்துப்பண்— | உருத்திரனைப்<br>பாடப்படுவது, குறண்டி<br>வயிரவம், பஞ்சமம்<br>கொல்லி, தேசாளி<br>நாட்டம், தக்கராகம்<br>சிகண்டி என்ற எட்டுப் பண்கள். |
| | "மெ" | |
| 82 | மென்மை— | மெலிவுநிலை, |
| 143 | மென்மைக்கருவி- | தோற்கருவிகளில் மென்மைக்<br>கருவிகள் தக்கை முதலியன. |
| | "மே" | |
| 35, 64 | மேகராகம்— | நான்கிசைப்பண்களில் ஒன்று. |
| 34, 58 | மேகராகக்குறிஞ்சி- | ஆறிசைப்பண்களில் ஒன்று. |
| 33, 57 | மேகாஞ்சி— | காஞ்சி, ஆறிசைப் பண்களில்<br>ஒன்று. |
| 28, 54 | மேற்செம்பாலை- | தாரப்பணம், தாரப்பண்,<br>ஆசான், ஏழ்பெரும் பாலைகளில்<br>ஒன்று, ஏழிசைப்பண்,<br>பண்ணோர் பதினேழில் ஒன்று. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| | | " மொ " |
| 140 | மொந்தை— | ஒரு தோற்கருவி. |
| | | " யா " |
| 55 | யாசரி— | பண்ணேர்பதினேழில் ஒன்று. ஆகரி ஆகிரி யாசாரி, ஏழிசைப்பண். |
| 33, 62 | யாமை— | ஆறிசைப்பண்களில் ஒன்று. |
| 89, 103 | யாழ்— | நரம்புக்கருவிகளில் முதன்மை பெற்ற கருவி வகைகள். தமிழ்க்குரித்து. |
| 61 | யாழ்பதம்— | பெயர்திறம், பியந்தை பெயர்திறப் பியந்தை ஆறிசைப்பண்களில் ஒன்று. |
| | | " ல " |
| 83 | லகு— | துருதம் இரண்டுகொண்டது லகு. நான்கு எண்கள் கொண்டது. |
| 82 | லவம்— | கணம், எட்டுகொண்டது லவம். |
| | | " வ " |
| 99 | வகுணை— | இசைத்திரட்சி, தேசாள சுத்தக்கிரியைகளில் ஒன்று. |
| 4 | வகை— | பதினோராடலின் பகுதி. |
| 101 | வகையொழிபு— | இந்நூல் (பஞ்சமரபு) இசைமரபின் சிறுபிரிவில் ஒன்று. (ஐந்தாவது) |
| 65, 67 | வங்கியம்— | இசைக்குழல், குழற்கருவிகட்குப் பொதுப்பெயர். |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 40 | வஞ்சி— | வஞ்சிப்பாக்கழி, பாக்கழி ஆறிசைப்பண்களில் ஒன்று. |
| 15 | வடித்தல்— | தொழிற்கை எட்டனுள் ஒன்று. |
| 3, 46 | வடுகு— | இந்தளம், நளுத்தை, ஐந்திசைப் பண்களில் ஒன்று, கூத்து வகைகளில் ஒன்று. |
| 18, 19 | வட்டப்பாலை— | பன்னிரண்டு கோணம் செய்து ஏழு கோணத்தை உடனே கொண்டு உறழப்படும் ஓரேழ் தொடுத்த மண்டலம் வட்டமாய் முடிய வாசிக்கப்படுவது. |
| 12, 13 | வட்டணை— | யாழுறுப்பொன்றின் தோற்றம். |
| 35, 64 | வட்டி— | துக்கராகம், நான்கிசைப் பண்களில் ஒன்று. |
| 119 | வண்ணம் புணர்க்கும்வகை— | வண்ணம் புணர்க்குமிடத்து, திருமாலைக்காப்பாக வைத்துச் செய்தல். |
| 134 | வண்ணவகைப்பாடு-ஐந்துவகைப்படும் | பத்தியவண்ணம்<br>சித்திரவண்ணம்<br>ஆம்பல்வண்ணம்<br>பாத்திபவண்ணம்<br>குவளைவண்ணம், |
| 133 | வண்ணம்— | இசைப்பாவகைகளில் ஒன்று. |
| 96 | வண்டினமுரற்சி- | உத்தம மூவோசைகளில் ஒன்று |
| 33, 63 | வயிரவம்— | பயிரவம், பைரவம் ஐந்திசைப்பண்களில் ஒன்று. |
| 36 | வராடி— | தமிழ்வராடி, ஆறிசைப் பண்களில் ஒன்று. |

| | | |
|---|---|---|
| 158 | வராளம் — | வாராளம், சல்லி என்ற தோற் கருவியை இடமுகத்தைக் கட்டுகின்ற முறைமை. |
| 4 | வரி | ஒருவகைக் கூத்து. கொம்பு துருத்தி, கொடியம்மானை பத்துவில் பத்திரம், இவற்றால் ஆடப்படும் பெண்கோலம். |
| 37. 40 | வருணம் — | தக்கணாதி, தக்கணாத்தி, தக்கணம், ஆறிசைப்பண்களில் ஒன்று. |
| 84 | வருணி — | வருணை, தொழில் ஐந்தில் ஒன்று, இசைத்தொழில் |
| 96 | வலம்புரியோசை — | உத்தம மூவோசைகளில் ஒன்று. |
| 15 | வளர்தல் — | தொழிற்கை எட்டனுள் ஒன்று. |
| 160 | வளையம் — | முழவுவகைத் தோற்கருவி. பலவற்றிற்கும் இருபுறமும் பொருத்தப்படும் தோற்கட்டு வளையம். இரும்புகொண்டும் வளையம் கொள்வதாம். |
| 141 | வன்மை — | வலிவு, பண்ணறியும் முறை தோற்கருவிகளில் வன்மைக் கருவிகள் |

"வா"

| | | |
|---|---|---|
| 169 | வாச்சியம் — | வாச்சியப்பாக்கள், என்பது சொற்கட்டுவகை சந்தத்தையும் தொடுத்துத் தமிழுரையாய் ஒரு கருவியையும் தொடராதே பல கூறுகளையும் உடைத்தாய் நாலடியாலே எட்டுப் பரிவர்த்தனைப் பெற்றுச் சந்தியும் தாளமும் பொருந்தப் புணர்ப்பது. கருவிகளுக்குப் பொதுப் பெயர். |

85 வாரம் — மதியோர்களால் அறிவிக்கப்பட்ட நான்கு செய்யுளியக்க இடங்களில் ஒன்று. முதனிலை, வாரம், கூடை, திரள் என்ற பாவமைப்பு வகைகளில் ஒன்று.

"வி"

133 விகற்பநடை — தலைப்பா விகற்பநடை நாலடியாய் இரண்டு தளையாய்ப் பின் இரண்டடியும் பிரிவிலவாகி வருவனவும், அடிவிகற்பமாகி வருவனவும் எனப்படும்.

98 விட்டோசை — பாடுவான் கொண்டு பாடத்தக்க ஓசை வகைகளில் ஒன்று.

3 விநோதம் — குரவை, வரி, கோலம் என்ற கூத்து வகைகள்.

83 விந்து — பதினொருவகைச் செய்கைகளில் ஒன்று.

34, 57 விபஞ்சி — ஆறிசைப்பண்களில் ஒன்று.

45 விபஞ்சிகாந்தாரம் — குறிஞ்சியாழ்த் திறத்தில் ஒன்று.

33, 61 வியந்தம் — ஆறிசைப்பண்களில் ஒன்று.

35, 59 வியாழக்குறிஞ்சி — ஆறிசைப்பண்களில் ஒன்று.

74 வியானன் — பத்து வாயுக்களில் ஒன்று.

84, 99 வியாத்தி — வியாத்தி, வழிகாண்டல்

140 விரலேறு — ஒரு தோற்கருவி.

97 விலங்கல் — பாடுதற்கல்லாத இசைகள் எட்டனுள் ஒன்று. ஒருபண் பாட வேறொரு பண்ணிலே விலகுவது.

9 வில்யாழ் — பழையயாழ். வில்போன்ற வடிவு உடையது.

| | | |
|---|---|---|
| 21 | விளரி — | ஏழிசைகளில் ஒன்று. கடக ராசியில் நிற்பது. அன்னத்தின் ஓசையை ஒத்தது. |
| 29, 38, 32 | விளரிப்பாலை — | ஏழ்பெரும் பாலைகளில் ஒன்று. பண்ணோர் பதினேழில் ஒன்று. நிருபதுங்கராகம் சீர்கோடிகம். கோடிகம், கோடி, தோடி. |
| 15, 16 | விளையாட்டு — | யாழிற்குரித்தாகிய கைகள் எட்டனுள் ஒன்று. தொழில். |

" வீ "

| | | |
|---|---|---|
| 89, 103 | வீணை — | நரம்புக் கருவிகளில் ஒன்று. தற்காலம் தந்திக் கருவிகளில் தலையாய கருவியாய்ச் சிறந்து விளங்குவது. சாளவத்திற்குரித்து. |
| 146 | வீரக்கருவி — | தோற்கருவிகள் முரசு, நிசாளம் திமிலை, துடுமை எனப்படும். சோழ, பாண்டிய, சேரர் மூவர்க்கும் உரியது. |

" வெ "

| | | |
|---|---|---|
| 126 | வெண்டுறை — | இசைப்பா வகைகளில் ஒன்று. |

" வே "

| | | |
|---|---|---|
| 34, 59 | வேடராமக்கிரி — | இராமக்கிரி, ஆறிசைப் பண்களில் ஒன்று. |
| 87 | வேடு — | பாவினம், பாடல் வகைகளில் ஒன்று. கவிகளுடனும் இசைகளுடனும் பொருந்தி வருவன. |
| 36, 60 | வேளர்கொல்லி — | தமிழ்வேளர் கொல்லி, கொல்லி கொல்லி காந்தாரம்.... ஆறிசைப்பண்களில் ஒன்று. |
| 93 | வேறுபாடு — | இசைப்புணர்ப்பு ஐந்தனுள் ஒன்று. |

## குறிப்புரை : 95

இந்நூல் இசைமரபில் யாழ்மரபு. அத்தகைய யாழினை இசைக்கும் யாழ் ஆசிரியன் தகுதியை, சிலப்பதிகாரம், அரங்கேற்றுகாதையில் இளங்கோவடிகள் கூறியுள்ளார். ஆங்கு கூறப்பெற்ற ஆசிரியன் சகோடயாழாசிரியனுவான்' யாழும். செம்முறைக் கேள்வி எனப்படும் சகோடயாழாகும்.

" ஈரேழ் தொடுத்த செம்முறைக் கேள்வியின்
ஓரேழ் பாலை நிறுத்தல் வேண்டி
வன்மையிற் கிடந்த தார பாகமும்
மென்மையிற் கிடந்த குரலின் பாகமும்
மெய்க்கிளை நரம்பிற் கைக்கிளை கொள்ளக்
கைக்கிளை யொழிந்த பாகமும் பொற்புடைத்
தளராத் தாரம் விளரிக் கீத்துக்
கிளைவழிப் பட்டன ளாங்கே கிளையும்
தன்கிளை யழிவுகண் டவள்வயிற் சேர
ஏனை மகளிருங் கிளைவழிச் சேர (கிளைவயிற் சேர)
மேலது உழையிளி கீழது கைக்கிளை
வம்புறு மரபிற் செம்பாலை யாயது
இறுதி யாதி யாக வாங்கவை
பெறுமுறை வந்த பெற்றியி னீங்காது (பெற்றி நீங்காது)
படுமலை செவ்வழி பகரும் பாலையெனக்
குரல்குர லாகத் தற்கிழமை திரிந்தபின்
முன்னதன் வகையே முறைமையிற் றிரிந்தாங்கு
இளிமுத லாகிய வெதிர்படு கிழமையும் (ஏர்படு கிழமையும்)
கோடி விளரி மேற்செம் பாலையென
நீடிக் கிடந்த கேள்விக் கிடக்கையின்
இணை நரம் புடையன வணைவுறக் கொண்டாங்கு
யாழ்மேற் பாலை யிடமுறை மெலியக்
குழன்மேற் கோடி வலமுறை மெலிய (வலிய)
வலிவு மெலிவுஞ் சமனு மெல்லாம்
பொலியக் கோத்த புலமையோன்........."

இப்பகுதியின் விரிவுரையை அருட்டிரு விபுலாநந்த அடிகள் இயற்றிய யாழ்நூலில் பரக்கக் காணலாம்.

இந்நூலில் வங்கிய மரபு. வங்கியம் – குழல்.

குழலோனமைதியை இளங்கோவடிகள்,

“சொல்லிய வியல்பினிற் சித்திர வஞ்சனை
புல்லிய வறிந்து புணர்ப்போன் பண்பின்
வர்த்தனை நான்கு மயலறப் பெய்தாங்கு
(மயலறத் தெரிந்தாங் கெற்றிய)
ஏற்றிய குரலிளி யென்றிரு நரம்பின்
ஒப்பக் கேட்கு முணர்வின னாகிப்
பண்ணமை முழவின் கண்ணெறி யறிந்து
தண்ணுமை முதல்வன் தன்னொடும் பொருந்தி
வண்ணப் பட்டடை யாழ்மேல் வைத்தாங்கு
இசையோன் பாடிய இசையி னியற்கை
வந்தது வளர்த்து வருவ தொற்றி (தெற்றி)
இன்புற வியக்கி யிசைபட வைத்து
வார நிலத்தைக் கேடின்று வளர்த்தாங்கு
ஈர நிலத்தின் எழுத்தெழுத் தாக
வழியின் றிசைக்குங் குழலோன்...........” என்றார்.

**கண்ட மரபு:** கண்டம், என்பது குரல். இஃது மிடற்றுப் பாடல் எனப்படும். இக்காலம் வாய்ப்பாட்டு எனக் கூறப் பெறுகிறது. மிடற்றுப்பாடல் பாடுவோனை **இசையாசிரியன்** என்பது வழக்கு. இசையாசிரியன் தகுதியை இளங்கோவடிகள்,

“யாழுங் குழலும் சீரும் மிடரும்
தாழ்குரல் தண்ணுமை யாடலொ டிவற்றின்
இசைந்த பாடல் இசையுடன் படுத்து
வரிக்கு மாடற்கு முரிப்பொரு ளியக்கித்
தேசிகத் திருவி னோசை கடைப்பிடித்துத்
தேசிகத் திருவி னோசை யெல்லாம்
ஆசின் றுணர்ந்த வறிவின னாகிக்
கவியது குறிப்பு மாடற் றொகுதியும்
பகுதிப் பாடலுங் கொளுத்துங் காலை
வசையறு கேள்வி வகுத்தனன் விரிக்கும்
அசையா மரபில் இசையோன்........” என்றார்.

இசையாசிரியன் அமைதி பொழிப்புரை. அடியார்க்குநல்லார்.

"யாழ்ப்பாடலும், வங்கியப்பாடலும், இருவகைத் தாளக் கூறுபாடுகளும், மிடற்றுப்பாடலும், மந்தமாகிய சுரத்தினையுடைய தண்ணுமையும் அகக்கூத்துப் புறக்கூத்துப் பதினோராடல் என்னும் கூத்துக்களும் வல்லனாய் இவற்றுடனே சேரச்செய்த உருக்களை இசைகொள்ளும்படியும் இரதம் பொருந்தும்படியும் புணர்ச்சவும் வல்லனாய் இருவகைப்பட்ட பாடல்களுக்கும் பொருளான இயக்கம் நான்கினையுமமைத்துத் தேசாந்தரங்களிற் பாடைகளையும் அறிந்து அந்தப் பாடைகள் இசைபூணும் படியையும் அறிந்து இயற்புலவன் நினைவும், நாடகப்புலவன் ஈடு வரவுகளும் இவற்றுக்கு அடைத்த பாடல்களும் தம்மிற் சந்திப்பிக்கும் இடத்துக் குற்றந்தீர்ந்த நூல் வழக்காலே வகுக்கவும் விரிக்கவும் வல்லனாயுள்ள இசைப்புலவன்."

வாச்சிய மரபில் முழவு மரபு. அவற்றுள் மென்மைக் கருவி தண்ணுமை. அத்தண்ணுமை ஆசிரியன் தகுதியை இளங்கோவடிகள்,

"ஆடல் பாடல் இசையே தமிழே
பண்ணே பாணி தூக்கே முடமே
தேசிக மென்றிவை யாசி னுணர்ந்து
கூடை நிலத்தை குறைவின்றி மிகுத்தாங்கு
வார நிலத்தை வாங்குபு வாங்கி
வாங்கிய வாரத் தியாழுங் குழலும்
ஏங்கிய மிடறு மிசைவன கேட்பக்
கூறுகிற் கரணங் குறியறிந்து சேர்த்தி
ஆக்கலு மடக்கலு மீத்திறம் படாமைச்
சித்திரக் கரணஞ் சிதைவின்றி செலுத்தும்
அத்தகு தண்ணுமை அருந்தொழில் முதல்வன்," என்றார்.

**தண்ணுமை ஆசிரியன் அமைதி பொழிப்புரை.**

**அடியார்க்குநல்லார்,**

"எல்லாக் கூத்துக்களும் எல்லாப் பாட்டுக்களும் எல்லா இசைகளும் வடவெழுத்து ஒரீஇ வந்த எழுத்தானே கட்டப்பட்ட வாக்கியக்கட்டளைக் கூறுபாடுகளும் எல்லாப் பண்களும் இரு வகைத் தாளங்களும் எழுவகைத் தூக்குக்களும் இவற்றின் குற்றங்களும் இயற்சொல் முதலிய நால்வகைச் சொற்களுமென்று சொல்லப்பட்டனவற்றை நுண்ணிதாக உணர்ந்து ஓரோர் உருவை இரட்டிக்கிரட்டி சேர்த்த இடத்து நெகிழாதபடி நிரம்ப நிறுத்தவும் அவ்விடத்துப் பெறும் இரட்டியை (ஒப்பாக) பாக உருவான வழி நிற்குமானம் நிறுக்கிக் கழியுமானங் கழிக்கவும் வல்லனாய் இப்படி நிகழ்ந்த உருக்களில் யாழ்ப்பாடலும் குழலின் பாடலும் கண்டப்பாடலும் இயைந்து நடக்கின்றபடி கேட்போர் செவிக்கொள்ள அமைந்த காரணத்தாற் குறியறிந்து சேர வாசித்து மற்றைக் கருவிகளிற் குறை நிரப்புதலும் மிகுதி அடக்குதலும் ஆக்குமிடத்தும் அடக்குமிடத்தும் இசையில் இரந்திரம் தோன்றாதபடியே செய்தலும் செய்யுமிடத்துக் கைத் தொழில் அழகுபெறச் செய்துகாட்டலும் வல்லனாய் அழகாதக்க தண்ணுமைக் கருவியினையும் அரிய தொழிலினையுமுடைய ஆசிரியன்,"

இப்பஞ்சமரபில் நிறத்தமரபு அல்லது திருத்தமரபு என்பதில் இசைக்கலையின் ஐந்து நிறத்தைக் கூறி அவற்றில் தமிழ், செந்தமிழ், தமிழ் களி முதலான கூறப்பட்டுள்ளது. வகைபொழிபு மரபில் பாவினங்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. இளங்கோ அடிகள் முத்தமிழ்ப் பாவினமறிந்து பாப்புனையும் முத்தமிழ்க் கவிஞனமைதியை,

"இமிழ்கடல் வரைப்பில் தமிழக மறியத்
தமிழ்முழு தறிந்த தன்மைய னாகி
வேத்தியல் பொதுவியல் என்றிரு திறத்தின்
மாத்திரை யறிந்து மகிழ்தரு மரபின்
நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்து
இசையோன் வக்கிரித் திட்டத்தை யுணர்ந்தாங்கு
அசையா மரபின் அதுபட வைத்து
மாற்றோர் செய்த வசைமொழி யறிந்து
நாத்தொலை வில்லா நன்னூற் புலவன்........" என்றார்.

பண்டைத்தமிழ் ஆடலாசிரியன் தகுதியை, இளங்கோவடிகள்,

"இருவகைக் கூத்தி னிலக்கண மறிந்து
பலவகைக் கூத்தும் விலக்கினிற் புணர்த்துப்
பதினோ ராடலும் பாட்டுங் கொட்டும்
விதிமாண் கொள்கையின் விளங்க வறிந்தாங்கு
ஆடலும் பாடலும் பாணியும் தூக்கும்
கூடிய நெறியின (நெறியிற்) கொளுத்துங் காலைப்
பிண்டியும் பிணையலும் எழிற்கையும் தொழிற்கையும்
கொண்ட வகையறிந்து கூத்துவரு காலைக்
கூடை செய்தகை வாரத்துக் களைதலும்
வாரம் செய்தகை கூடையிற் களைதலும்
பிண்டி செய்தகை யாடலிற் களைதலும்
ஆடல் செய்தகை பிண்டியிற் களைதலும்
குரவையும் வரியும் விரவல செலுத்தி
ஆடற் கமைந்த ஆசான்........" என்றார்.

ஆடலாசிரியன் அமைதி பொழிப்புரை: அடியார்க்குநல்லார்.

"தேசியும் மார்க்கமுமென்று சொல்லப்படாநின்ற இரண்டு வகைப்பட்ட இருவகைத்தாகிய அக்கூத்தினது இலக்கணங்களை அறிந்து பலவகைப்பட்ட புறநடங்களையும் விலக்குறுப்புக்களைச் சேரப் புணர்க்கவும் வல்லனாகி அல்லியமுதற் கொடுகொட்டி ஈறாகக்கிடந்த பதினொரு கூத்துக்களும் அக்கூத்துக்களுக்குரிய பாட்டுக்களும் அவற்றுக்கு அமைத்த வாச்சியங்களின் கூறுகளும் நூல்களில் விதித்த வழியே தெரிந்து கூத்தும் பாட்டும் தாளங்களும் தாளங்களின் வழிவந்த தூக்குகளும் தம்மிற் கூடின நெறியை உடைய அகக்கூத்தும் புறக்கூத்து முதலாயின நிகழ்த்தும் இடத்துப் பிண்டி, பிணையல் எழிற்கை, தொழிற்கை என்று சொல்லப்பட்ட நான்கினையும் நூலினகத்துக்கொண்ட கூறுபாட்டையறிந்து அகக்கூத்து நிகழுமிடத்துக் கூடைக் கதியாகச் செய்த கை வாரக்கதியுட் புகாமலும், வாரக்கதியாகச் செய்த கை கூடைக்கதியுட் புகாமலும் புறக்கூத்தினடத்து ஆடல் நிகழுமிடத்து அவினயம் நிகழாமலும் அவினயம் நிகழுமிடத்து ஆடல் நிகழாமலும் குரவைக்கூத்தும் வரிக்கூத்தும் தம்மில் விரவாதபடியும் செலுத்தி அமைந்த ஆடலாசிரியன்."

இளங்கோவடிகளால் கூறப்பெற்ற நாடக அரங்க இலக்கணம் வருமாறு :—

“ எண்ணிய நூலோர் இயல்பினின் வழாஅது
மண்ணக மொருவழி வகுத்தனர் கொண்டு
புண்ணிய நெடுவரைப் போகிய நெடுங்கழைக்
கண்ணிடை யொருசாண் வளர்ந்தது கொண்டு
நூனெறி மரபின் அரங்க மளக்கும்
கோலள விருபத்து நால்விர லாக
எழுகோ லகலத் தெண்கோ னீளத்
தொருகோ லுயரத் துறுப்பின தாகி
உத்தரப் பலகையோ டரங்கின் பலகை
வைத்த விடைநில நாற்கோ லாக
ஏற்ற வாயி லிரண்டுடன் பொலியத்
தோற்றிய வரங்கிற் றொழுதன ரேத்தப்
பூதரை யெழுதி மேனிலை வைத்துத்
தூணிழற் புறப்பட மாண்விளக் கெடுத்தாங்கு
ஒருமுக எழினியும் பொருமுக எழினியும்
கரந்துவர லெழினியும் புரிந்துடன் வகுத்தாங்கு
ஓவிய விதானத் துரைபெறு நித்திலத்து
மாலைத் தாமம் வளையுடனாற்றி
விருந்துபடக் கிடந்த அருந்தொழி லரங்கம்.”

**சிலப்பதிகாரக் குறிப்புரை, அரங்கின் இடம்**

“ ஆடலும் பாடலும் கொட்டும் பாணியும்
நாடிய வரங்கு சமைக்குங் காலைத்
தேவர் குழாமும் செபித்த பள்ளியும்
புள்ளின் சேக்கையும் புற்றி நீங்கிப்
போர்களி யானைப் புரைசா ராது
மாவின் பந்தியொடு மயங்கல் செய்யாது
செருப்புகு மிடமுஞ் சேரியு நீங்கி,
நுண்மை யுணர்ந்த திண்மைத் தாகி
மதுரச் சுவைமிகூஉ மதுர நாறித்
தீரா மாட்சி நிலத்தொடு பொருந்திய
இத்திறத் தாகு மரங்கினுக் கிடமே ”

பழங்காலத் தமிழக நகரங்களில் இசைவல்லுநர் வாழுமிடத்தை இளங்கோவடிகள்,

" குழலினும் யாழினும் குரன்முத லேழும்
வழுவின் றிசைத்து வழித்திறங் காட்டும்
அரும்பெறன் மரபில் பெரும்பா ணிருக்கையும்"

எனக்கூற,

துளைக்கருவியானும், நரம்புக்கருவியானும் குரல் முதலாயுள்ள ஏழிசையினும் ஏழு எழுத்தினையும், மூவகை வங்கியத்தினும் நால்வகை யாழினும் பிறக்கும் பண்களுக்கு இன்றியமையாத மூவேழு திறத்தையும் குற்றம் இன்றாக இசைத்துக் காட்டவல்ல பெறுதற்கு அரிய இசைமரபையறிந்த குழலர், பாணர் முதலாய பெரிய இசைக்காரர் இருக்குமிடங்கள், என அடியார்க்குநல்லார் விளக்கியிருப்பதும் அறியத்தக்கதாகும்.

"வேத்தியல் பொதுவியல் எனவிரு திறத்து
மாத்திரை யறிந்து மயங்கா மரபின்
ஆடலும் வரியும் பாணியுந் தூக்கும்
கூடிய குயிலுவக் கருவியு முணர்ந்து
நால்வகை மரபி னவிநயக் களத்தினும்
ஏழ்வகை நிலத்தினும் எய்திய விரிக்கும்"

எனச் சிலம்பு மதுரைக் காண்டத்தில் இளங்கோ வேந்தர் கூறியிருப்பதற்கு, அடியார்க்குநல்லார்,

வேத்தியல் பொதுவியல் என்று சொல்லப்பட்ட இருவகைக் கூத்தின் தாள அறுதிகளையறிந்து அவை மயங்காத மரபானே ஆடும் ஆடலும் எனவும், அவினயக் களன் என்பது, நான்கு என்பதும் அவை,

" நிற்ற லியங்கல் இருத்தல் கிடத்தல்
நெறிமுறை நான்கு மவினயக் களனே"

எனவும், எழுவகை நிலமாவன எழுத்தடியாகிப் பிறக்கும் குரல் முதலாகிய ஏழும், எனவும் தெளிவாகக் கூறியது அறிந்து உணரத்தக்கவை,

"பண்ணியன் மடந்தையர் பயங்கெழு வீதித்
தண்ணுமை முழவந் தாழ்தரு தீங்குழல்
பண்ணுக்கிளை பயிரும் பண்ணியாழ்ப் பாணியொடு
நாடக மடந்தையர் ஆடரங்கு யாங்கணும்"

"நாடக மகளிர் ஈரைம்பத் திருவரும்
கூடிசைக் குயிலுவர் இருநூற் றெண்மரும்"

"நாடக மகளிரும் நலத்தகு மாக்களும்
கூடிசைக் குயிலுவக் கருவி யாளரும்"

"பாடு பாணியர் பல்லியத் தோளினர்
ஆடு கூத்த ராகி எங்கணும்"

"மண்கணை முழவும் வணர்கோட் டியாழும்
பண்கனி பாடலும் பரந்தன வொருசார்."

இவையும் இளங்கோவடிகள் வாக்கே.

ஆடல் பயிற்றுவித்தலும். அரங்கேற்றலும்

"பண்ணியம்வைத் தானைமுகன் பாதம் பணிந்துநாட்
புண்ணிய வோரை புகன்றனகொண் — டெண்ணியே
வண்டிருக்குங் கூந்தல் மடவரலை யையாண்டில்
தண்டியஞ்சேர் விப்பதே சால்பு."

"வட்டணையுந் தூசியும் மண்டலமும் பண்ணமைய
எட்டுட னீரிரண்டாண் டெய்தியபின் — கட்டளைய
கீதக் குறிப்பு மலங்கார முங்கிளரச்
சோதித் தரங்கேறச் சூழ்"

" நன்னர் விருப்புடையோ னற்குணமு மிக்குயர்ந்தோள்
சொன்னகுலத் தாலமைந்த தொன்மையளாய்ப் —
பன்னிரண்டாண்
டேய்ந்ததற்பின் னூடலுடன் பாடலழ கிம்மூன்றும்
வாய்ந்தவரங் கேற்றல் வழக்கு"

எனவும் கூறினர் பரத சேனபதியார். என்றார் அடியார்க்குநல்லார். முன்னிரண்டு வெண்பாக்களை நச்சரும் மேற்கோளாகக் காட்டி உள்ளார். இப்பாடல்கள் பஞ்சமரபிற்குத் தொடர்பாயிருத்தலும் கூடும்.

## குறிப்புரை: 96

பதினோராடல் வகைபற்றிய சிலப்பதிகார உரைப்பகுதி வருமாறு.

### க. கொடுகொட்டி

"தேவர் புரமெரிய வேண்டுதலால் வடவை எரியைத் தலையிலே உடைய பெரிய வப்பு ஏவல் கேட்டவளவிலே அப் புரத்தில் அவுணர் வெந்து விழுந்த வெண்பரிக்குவையாகிய பாரதி அரங்கத்திலே உமையவள் ஒரு கூற்றினளாய் நின்று, பாணி, தூக்குச்சீரென்னும் தாளங்களைச் செலுத்தத் தேவர் யாவரினும் உயர்ந்த இறைவன் சய ஆனந்தத்தால் கைகொட்டி நின்று ஆடிய கொடுகொட்டி என்னும் ஆடல்."

### உ. பாண்டரங்கம்

"வானோராகிய தேரில் நான்மறைக் கடும்பரி பூட்டி நெடும் புற மறைத்து, வார் துகில் முடித்துக் கூர்முட் பிடித்துத் தேர்முன் நின்ற திசைமுகன் காணும்படி பாரதி வடிவாய இறைவன் வெண்ணீற்றை அணிந்து ஆடிய பாண்டரங்கம் எனும் கூத்து."

### ங. அல்லியம் (அல்லிப்பேடு)

"கஞ்சன் வஞ்சத்தின் வந்த யானையின் கோட்டை ஒசித்தற்கு நின்றாடிய அல்லியத் தொகுதி என்னும் கூத்து."

இக்கூத்து, அஞ்சனவண்ணன் (திருமால்) ஆடிய ஆடல் பத்துள் ஒன்று.

தொகுதி, முகம், மார்பு, கை, கால்களின் வட்டணை முதலியன இருந்தும் தொழில் செய்யாது நிற்றலின்,

" ஆட லின்றி நிற்பவை யெல்லாம்
மாலோ னாடும் வைணவ நிலையே."

ச. மல்லினாடல் (மல்)

" வாணனாகிய அவுணனை வேறற்கு மல்லனாய்ச் சேர்ந்தாரிற் சென்று அறைகூவி உடற்கரித்தெழுந்து அவனைச் சேர்ந்த அளவிலே சடங்காகப் பிடித்து உயிர்போக நெரித்துத் தொலைத்த மல்லாடல்.

ரு. குடக்கூத்து (குடம்)

" காமன் மகன் அநிருத்தனைத் தன்மகள் உழை காரணமாக வாணன் சிறை வைத்தலின் அவனுடைய சோவென்னும் நகர வீதியிற் சென்று நிலங்கடந்த நீனிறவண்ணன் குடங்கொண்டு ஆடிய குடக்கூத்து.

" பரவிய சாந்தி யன்றியும் பரதம்
விரவிய விநோதம் விரிக்குங் காலைக்
குரவை கலிநடம் குடக்கூத் தொன்றிய
கரண நோக்குத் தோற்பா வைக்கூத்
தென்றிவை யாறு நகைத்திறச் சுவையும்
வென்றியும் விநோதக் கூத்தென விசைப்ப."

சு. துடி

" கரிய கடலின் நடுவுநின்ற சூரனது வேற்றுருவாகிய வஞ்சத்தையறிந்து அவன் போரைக் கடந்த முருகன் அக்கடல் நடுவண் திரையே அரங்கமாக நின்று துடி கொட்டி ஆடிய துடிக்கூத்து."

எ. குடை

" அவுணர் தாம் போர் செய்தற்கு எடுத்த படைக்கலங்களைப் போரிற்கு ஆற்றாது போகட்டு வருத்தமுற்ற அளவிலே முற்கூறிய முருகன் தன்குடையை முன்னே சாய்த்து அதுவே ஒருமுக எழினியாக நின்றாடிய குடைக்கூத்து."

அ. பேடி

"ஆண்மைத் தன்மையில் திரிந்த பெண்மைக் கோலத்தோடு காமன் ஆடிய பேடு என்னும் ஆடல்."

தனதுமகன் அநிருத்தனைச் சிறைமீட்டு, காமன் சோநகரத்து ஆடியது.

கூ. மரக்கால் ஆடல்

"காயும் சினத்தையுடைய அவுணர், வஞ்சகத்தாற் செய்யும் கொடுந்தொழிலைப் பொருளாய் மாயோளால் (துர்க்கை) ஆடப்பட்ட மரக்கால் என்னும் பெயரையுடைய ஆடல்."

௰. பாவை

"அவுணர் வெவ்விய போர் செய்தற்குச் சமைத்த போர்க் கோலத்தோடு மோகித்து விழும்படி, கொல்லிப்பாவை வடிவாய்ச் செய்யோளாகிய திருமகளால் (இலக்குமி) ஆடப்பட்ட பாவை என்னும் ஆடல்."

௰க. கடையம்

"வாணனுடைய முற்கூறிய பெரிய நகரின் வடக்கு வாயிற்கண் உளதாகிய வயலிடத்தே அயிராணி எனும் மடந்தை ஆடிய கடையம் எனும் ஆடல்." (கடையம் - கடைசிக்கூத்து)

(அயிராணி - இந்திராணி)

# குறிப்புரை 97

## நிருத்தம்

நிருத்தமென்பது கூத்து வகைகளுள் ஒன்று. இது நடனம், நாடகம், சதிர், தாண்டவம் எனப் பல்வேறு பிரிவு படுகிறது. கூத்தின் வகையே, தாண்டவம், நிருத்தம், நாட்டியம், குரவை, வரி, கோலம், வகை என எழு வகைப்படும். இவையே எழுவகை நிருத்தமுமாம் எனவும்படும்.

சாந்தி, விநோதம், வகை என மூவகைப்படும் கூத்தின் விளக்கங்கள் பல இறைவனாடிய பதினாறு தாண்டவம், ஆகம மார்க்கம், அகமார்க்கம். தாண்டவத்திற்கு தாளமே முதன்மை. தாளங்களின் அணுக்கள் (சதிகள்) ஆகியவை, மற்றும் இதன்கண் கூத்துக்குரிய வாச்சிய எழுத்துக்கள், கூத்து வினைகள், கூத்துக்கு உரிய கால்கள், ஐவகைப் பாதத்தொழில்கள், நான்கு வர்த்தனைகள் மற்றும் ஏனையவை. இப்பகுதியே பஞ்சமரபின் இரண்டாம் பகுதியின் தொடக்கமாகும்.

நிருத்தமரபு

அவிநயமரபு

தாளமரபு

# பஞ்சமரபு

## இரண்டாம் பகுதி

## இரண்டாம் பகுதி – வெண்பா அமைதி முறை
## பாடல்களின் முதனினைப்பு


| பாடல்கள் | பக்க எண்கள் |
|---|---|
| குன்றவில்லி | 1 |
| அரிய | 1 |
| துடிகடையம் | 4 |
| ஆதிதனக்காதியர் | 7 |
| அணுவுக்கு (அனுவுக்கு) | 8 |
| ப்ரகாசமரங் | 8 |
| பீடமே | 9 |
| புட்பாஞ்சலி | 9 |
| புயங்கந் | 10 |
| தேசிகசலீலே | 10 |
| தேசியொத்து | 11 |
| நீதியிரச்சு | 11 |
| நிழல்வீர | 12 |
| வைப்புக் | 12 |
| வகுப்பு | 13 |
| வாக்கியஞ் | 13 |
| கவுத்துவ | 14 |
| துணுக்கு | 14 |
| தெண்டபாத | 15 |
| அண்டர்பிரான் | 15 |
| ஒத்த | 16 |
| புட்பாஞ்சலிக்குப் | 16 |
| ஆதியணு | 41 |
| திருமாலயனும் | 41 |
| செகம்வா | 42 |

| பாடல்கள் | பக்க எண்கள் |
| --- | --- |
| படியால் | 42 |
| கையார் | 42 |
| இனிய | 43 |
| பிறைசேர் | 43 |
| ஆதி | 43 |
| முன்னுன் | 44 |
| பாரோர் | 44 |
| தண்ணு | 44 |
| சிரபேதம் | 45 |
| தாராகணம் | 45 |
| முடிகாணு | 45 |
| தக்கித் | 46 |
| காதார் | 46 |
| ஆதியகமார்க்க | 46 |
| அதியக | 47 |
| தவ்வென்றும் | 48 |
| ஆன்றபுகழ் | 49 |
| மன்னியசீர் | 50 |
| ஒப்பாஞ்சம | 52 |
| ஆன்றவப | 52 |
| தேசிவடுகு | 53 |
| படைத்தான் | 54 |
| மாற்றில்லா | 54 |
| முப்பதோர் | 56 |
| ஆண்பத்து | 56 |
| முட்டிசிகர | 58 |
| கடகஞ் | 61 |
| கடகஞ்சுக | 62 |
| சற்பசிரம் | 65 |

| பாடல்கள் | பக்க எண்கள் |
|---|---|
| மகரம் | 67 |
| உன்னமா | 68 |
| அஞ்சலிகபோத | 72 |
| மண்டிலமே | 83 |
| காண | 85 |
| ஆராத | 86 |
| மெய்சாய் | 90 |
| தேசியின் | 92 |
| திருமகள் | 93 |
| செய்கிளை | 93 |
| நாட்டுமுத்திரை | 93 |
| உள்ளிலங் | 94 |
| திக்கிலா | 94 |
| காலையில் | 94 |
| ஆங்கவன் | 94 |
| அமைக்கு | 95 |
| இனியதேன் | 95 |
| ஆரமாம் | 95 |
| காலம் | 95 |
| அன்பினில் | 96 |
| முன்னமே | 96 |
| முழங்குநன் | 96 |
| ஆமென | 96 |
| மூலமே | 97 |
| அஞ்சுகணு | 97 |
| அச்சமற | 97 |
| ஆதியொரு | 97 |
| எண்ணும் | 97 |
| வேத்திரத்தின் | 98 |

| பாடல்கள் | பக்க எண்கள் |
|---|---|
| தானெடுத்து | 98 |
| நட்டுவற்கு | 98 |
| மறையோன் | 99 |
| சொல்லுங்கண | 99 |
| ஒத்தமரை | 100 |
| துடியளவு | 100 |
| விந்து | 101 |
| சுழிகொம்பு | 101 |
| வாளிசர | 101 |
| வல்லதுவி | 101 |
| சீரிய | 101 |
| வட்டமதி | 103 |
| துடியே | 103 |
| வளமாகு | 104 |
| துடிவருணன் | 104 |
| புள்ளிசுழி | 104 |
| வலக்கை | 105 |
| பாணிகளின் | 105 |
| கைவிரல் | 106 |
| சுத்தமிரு | 106 |
| அகத்தியன் | 107 |
| எக்காரிகை | 107 |
| முத்தமிழும் | 107 |
| கண்டந் | 108 |
| மதிகோல் | 108 |
| முந்த | 108 |
| பகணமே | 109 |
| ஆதிலகு | 110 |
| சேருநடு | 110 |

| பாடல்கள் | பக்க எண்கள் |
|---|---|
| நடுவிலகு | 111 |
| மகணமது | 112 |
| முன்னமொழி | 113 |
| தென்றல் | 114 |
| சச்சபுடம் | 114 |
| பூமாதர் | 115 |
| மங்கையரே | 121 |
| மாசில்துதி | 128 |
| வன்னமட்டி | 134 |
| தென்பிரதாப | 140 |
| சயதாளம் | 145 |
| அப்புமேல் | 148 |
| பரவுசலமே | 148 |
| ஊர்வ | 149 |
| நாராயணனே | 149 |
| நந்திவல | 150 |
| மன்னவனே | 150 |
| பாட்டுவிக்க | 151 |
| நாதம் | 151 |
| வேங்கையுரி | 152 |
| முப்பாணி | 152 |
| நட்டுவனே | 153 |
| இந்திரனோடு | 153 |
| நாட்டியத்தை | 153 |
| கொஞ்சுகிளி | 154 |
| செய்யவிரு | 154 |
| மன்னவனை | 155 |
| நெற்றிக்கு | 155 |
| மெய்யே | 156 |

| பாடல்கள் | பக்க எண்கள் |
|---|---|
| பாதமலர் | 156 |
| தாளத்து | 156 |
| ஆதியலங்கார | 157 |
| இத்தாரணி | 157 |
| இப்புவி | 158 |
| எட்டஞ்சு | 158 |
| பாவால் | 158 |
| சச்சபுட | 159 |
| நாலுதிசையும் | 159 |
| அட்டதிசை | 160 |
| தாளமுதல் | 160 |
| ஓங்குபுகழீச | 161 |
| சாதிவருஞ் | 161 |
| காலால் | 162 |
| தூவையால் | 162 |
| சாக்கிரமே | 163 |
| கருதிய | 163 |
| துடிபடிகம் | 163 |
| ஆட்டேது | 164 |
| நட்டுவனென்றே | 164 |
| இருக்க | 164 |
| மலரவன் | 164 |
| இருசரண | 165 |
| சீராரு | 165 |
| தோன்றிய | 165 |
| துக்கராகஞ் | 165 |
| பாதபேதங்கள் | 166 |
| பேதை | 166 |
| குழல்நுதல் | 166 |

| பாடல்கள் | பக்க எண்கள் |
|---|---|
| ஒக்கெடுத்த | 167 |
| சந்திரசூரியன் | 167 |
| சார்ந்திடும் | 167 |
| நாலிரு | 167 |
| தெள்ளுநற் | 168 |
| பீடஞ் சவளக்கை | 168 |

பஞ்சமரபு இரண்டாம் பகுதி :

# முன்னுரை

**திருஞானசம்பந்தர்** *திருச்சிற்றம்பலம்* **பண் : காந்தாரம்**

பெண்ணமர் மேனியி னாரும் பிறைபுல்கு செஞ்சடை யாரும்
கண்ணமர் நெற்றியி னாரும் காதமருங்குழை யாரும்
எண்ணம ருங்குணத் தாரும் இமையவ ரேத்தநின் றாரும்
பண்ணமர் பாடலி னாரும் பாண்டிக் கொடுமுடி யாரே.

பண் : மேகராகக்குறிஞ்சி

வேந்தாகி விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும்
நெறிகாட்டும் விகிர்தனாகிப்
பூந்தாம நறுங்கொன்றை சடைக்கணிந்த
புண்ணியனார் நண்ணுங்கோயில்
காந்தாரம் இசையமைத்துக் காரிகையார்
பண்பாடக் கவினார்வீதித்
தேந்தாமென் றரங்கேறிச் சேயிழையார்
நடமாடுந் திருவையாறே.

*திருச்சிற்றம்பலம்*

ஒவ்வொரு நாட்டிலும் அந்நாட்டிற்கேயுரிய தாய் மொழி வளர்ச்சிக்கு அம்மொழியை முறையே பயின்ற ஆசிரியர்களே! இன்றியமையாதவர்கள் ஆவார்கள். அத்தகு ஆசிரியர்களில் நூலாசிரியர், உரையாசிரியர், பதிப்பாசிரியர், போதகாசிரியர் என நால்வகையாக அவ்வாசிரியர்கள், நன்கே விளங்குவர்.

*

நூலாசிரியர், தங்களால் யாக்கப்பெற்ற நூலில், நூலின் உள்ளுறுப்பாக நூலின் முதலில், நூல், நூல் செய்ததற்குக்காரணம், நூல் செய்வித்தோர் முதலிய பல செய்திகளைப் பாயிரம் என்னும் முகவுரையில் குறிப்பர்.

உரையாசிரியர், தாங்கள் உரை எழுத எடுத்துக் கொண்ட ஒரு நூலிற்கு, உரைவரலாறு, உரைச்சிறப்பு முதலிய செய்திகளை உரையின் முகத்து எழுதுவர்.

பதிப்பாசிரியர், தாங்கள் பதிப்பிக்க எடுத்துக் கொண்ட ஒரு நூலில், நூல் தேடிப்பெற்ற வரலாறு, நூலைப் படியெடுத்துப் பரிசோதித்த வரலாறு, நூல் பதிப்பிக்க உதவி செய்தோர், பிறவும் நூலின் உட்பொருள் விளக்கச் சுருக்கம் முதலிய செய்திகளையும் அச்சகப் பதிப்புச் சிறப்பும் பதிப்பிக்கும் நூன்முகத்துப் புறத்தே எழுதுவர்.

போதகாசிரியர், தாங்கள் கற்பிக்க எடுத்துக்கொண்ட ஒரு நூலினை, நன்மாணுக்கருக்கு முன்னிலையில் அவர் கேட்கும்படி நூல், நூற்பொருள் பற்றிய செய்திகள் அனைத்தையும் வாய்மொழியால் விரித்துக் கூறுவர் என்பது வழக்கு.

ஈண்டு பதிப்பாசிரியர் கூறுகின்ற முறையில் முன்னுரையாக அறிஞர்களும், கலைஞர்களும், ஆர்வலர்களும் நன்கே அறியுமாறு ஒரு சில கூறுகின்றேன்.

### ஏடு தேடலும் நூற் பதிப்பும்

நான் எனது இளமைக்காலத்தில் தமிழ் இலக்கிய இலக்கண நூல்களைக் கற்றுக் கொண்டிருக்கும் பொழுது, மாணிக்கவாசகர் செய்த குவலயாநந்தம் என்னும் இலக்கணநூல், தமிழ் உற்பத்தியில் விழைவு உடையோர் கற்றற்குரிய நூல்களுள் ஒன்று, என்று என் அன்னையைப் பெற்ற பாட்டனர் அவர்கள் சொல்லக் கேட்டேன். அவர் அவ்வாறு சொல்லக்கேட்டறிந்த யான் அந்நூலைப் பலவிடங்களில் தேடத் தொடங்கினேன்.

பின்னர் அந்நூல், அச்சாகாதது என்றும் ஏட்டுச் சுவடி வடிவிலே உள்ளது என்றும் புலவர் சிலர் சொல்லக் கேட்டறிந்தேன். அவ்வேட்டுச் சுவடி பெறவேண்டிப் பெரிதும் முயன்று அவ்வப்போது சிறுசிறுபகுதிகளாகவே கிடைக்கப்பெற்று பின்னெரு காலத்தில் முழுநூலாக அந்நூல் முழுவதையும் பெற்றுக் கற்று மகிழ்ந்தேன்.

சில ஆண்டுகளின் பின்பு ஈரோட்டிலுள்ள உயர் நிலைப் பள்ளியொன்றில் தமிழாசிரியராகப் பணிபுரிந்து கொண்டிருக்குங்கால், தற்செயலாக யாழ்ப்பாணம் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களின் குமாரரும், கொழும்பு மாநகரம் கிறிஸ்தவப் பாதிரிமார் பயிற்சிக் கல்லூரியின் முதல்வராக விளங்கியவருமாகிய மறைத்திரு கிங்ஸ்பரி அவர்களை (ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகட்கு முன்பு) சந்திக்க நேர்ந்தது. சந்தித்தேன். அவர்கள் அப்பொழுது என்னிடம்,

"நான் ஆங்கிலத்தில் தமிழிலக்கிய வரலாறு எழுதிக் கொண்டிருக்கின்றேன். அதன் பொருட்டு நான் கொழும்புவிலிருந்து வந்து, உங்கள் கொங்குவேளிர் பிறந்து வாழ்ந்த விசயமங்கலத்திற்குச் சென்று இருந்தேன்" எனக் கூறினார்கள். அவர் அவ்வாறு கூறியதைக் கேட்ட எனக்கு அவருரை முழுதும் எனது உள்ளத்தைத் தொட்டது என்பதை உணர்ந்தேன். அதன்பின் சில ஆண்டுகள் கழித்துப் பின்பு, மகா மகோபாத்தியாயர் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்களைச் சந்திக்க நேர்ந்தது. சந்தித்தேன். அவர்கள் என்னைப் பார்த்து, 'உம்மை யான் நினைத்த படியே உம் தோற்றம் இருக்கிறது. சங்க நூற்கள் பலவற்றைப் பதிப்பித்த மகிழ்ச்சியினும், கொங்குவேள் மாக்கதை, பதிப்பித்ததினால் உண்டான மகிழ்ச்சி பெரிதாயிற்று. அதன் பகுதிகள் சில கிடைக்கவில்லை. அவை உம்மிடம் இருப்பதாகச் சொன்னார்கள். இருந்தால் கொடும். இல்லாவிட்டாலும் அப்பகுதி உமக்குக் கிடைக்கும். கிடைத்த பொழுது என்னிடம் கொடும்.

நான் இல்லாவிட்டாலும் என் மகன் கலியாண சுந்தரத்திடம் கொடும். அல்லது நீரே பதிப்பித்து விடும். அது உம்மவர் செய்த நூல். உம் நாட்டு நூல்., என்று கூறினர்கள். அவருரை, மறைத்திரு கிங்ஸ்பரி அவர்கள் கூறிய உரையினும் என்னுள்ளத்தை மிகவும் அதிகமாகக் கவர்ந்தது.

அதனல் எனக்கு விசயமங்கலத்திடத்தும், கொங்கு வேள் மாக்கதையினிடத்தும் இருந்த அபிமானம் மேன் மேலும் வளரலாயிற்று. அதன் காரணமாக, ''குருகும் வெண்டாளியும் முதலிய செய்யுளிலக்கியம் ஆராய்ந்து செய்த உதயணன் கதையுள்ளும்'' என அடியார்க்கு நல்லாராற் போற்றப்பட்ட பெருங்கதையின் நூலாசிரியர் ஆகிய கொங்குவேளிரும், முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லாரும் வாழ்ந்த கொங்கு நாட்டில் இறந்தனபோக எஞ்சிய நூல்கள் சிலவேனும் எங்கேனும் கிடைக்கலாம் என்றெண்ணி 'புகை புகா வாயிலும் புகுந்தான்' எனக் கம்பநாடர் கூறியபடி கொங்குநாட்டின் பலபகுதிகளிலும் சென்று ஏடுகள் தேடத் தொடங்கினேன். அதன் பயனகக் கிடைத்த ஏட்டுச் சுவடிகள் பலவே அவற்றுள், இயல், இசை நாடகவிலக்கணம் பற்றியனவும் இலக்கியம் பற்றியனவும் பல இருந்தன. இவ்வாருக வருந்திப் பெற்ற அவற்றுள் பெரும்பகுதி என்னிடம் வந்தும் எனது நேர்முகப்பார்வை சிற்சில காலங்களில் அற்றிருந்த பொழுது கவனிப்பாரற்ற நிலையில் சில சுவடிகள் சிதைந்தழிந்தன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை, கொங்குவேள் மாக்கதையும், கவிசாகரமும், இசை நுணுக்கமும் ஆகும். இன்றும் நானே வருந்திப் பயனேதும் இலாதவாகுகின்றேன். ஆயினும் என் கண்ணுல் கண்டும் இருந்தும் அழிந்ததை என் மனம் வருந்தி இங்குக்கூற வேண்டியதாகிறது. இவற்றை இழந்த வருத்தம், நெடுநாள்வரை எனது உள்ளத்தை விட்டு மாருதிருந்தது. மேலும் மேலும் வருந்தினேன். வருந்திப்பயன்?

அதன் பின்னர் அழியாது எஞ்சிய நூல்களாகிய பல சுவடிகளைத் தாம் பதிப்பிக்க விரும்பியவர்களிடம் கொடுக்கத் தொடங்கினேன் தருமபுர மடத்தார், திருப்பனந்தாள் மடத்தார், கலைக் களஞ்சியப் பதிப்பு ஆசிரியர் முதலியவர்களிடம் கொடுத்துதவினேன். சில நூல்களை, பிறர் பொருள்கொண்டும், என் சொந்தப் பொருள் கொண்டும் யானே பதிப்பித்தேன்.

அதன் பின்பும் தேடியதாற் கிடைத்த சுவடிகளும் பல. அச் சுவடிகளில் ஒன்றே இப்பஞ்சமரபு. இதனையும் யான் விலை கொடுத்தேதான் பெற்றேன். இதுவும் தெளிவின்றியும் முறைபிறழ்ந்தும் எழுதப்பட்டிருந்ததை அறிந்தேன். இப்பஞ்சமரபுச் சுவடி என்னிடமிருப்பதை அறிந்து இதனைக் காண வந்த சீவில்லிபுத்தூர் வித்துவான் கோவிந்த மூப்பனார் அவர்கள் என்னுடன் இருந்து இந்நூலைப் பிரதி செய்வதிலும் பரிசோதித்தல் முதலானவற்றிலும், முறைப்படுத்துவதிலும் பெரிதும் உதவினார்கள். பின்பு இந்நூல் முழுவதும் படியெடுத்து விளக்கமான குறிப்புரை பல நூல்களைப் பார்த்துப் பார்த்து முடிந்த வரையிலும் எழுதிக் குறித்துவைத்தேன். பதிப்பிக்கவும் பெரிதும் முயன்றேன். பதிப்பித்தற்கு எடுத்துக்கொண்ட முயற்சியும் அதிகமே ஆயினும் நிறைவேறாதிருந்தது. அதனால் கலைப் பொருளிலும் செல்வப் பொருளே மிக்க வலிவு உடையதென்றும் பொருட்பொருளின்றிக் கலைப்பொருள் நிலைபெறாதென்றும் எண்ணியெண்ணி வருந்தினேன். அந்நிலையில் திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகச் செந்தமிழ்ச்செல்வி எனும் மாத இதழில் இரண்டு திங்கள் சிறுசிறு பகுதிகளாக வெளியிடும் வாய்ப்பினைப் பெற்றும் பின் அதுவும் நின்று தடைப் பட்டு விட்டது.

பின்பு இளமைதொட்டு எனது பேரன்பிற்கு உரியவரும், யான் பரிசோதித்து வைத்திருந்த கபில

மலைக் கோவை முதலிய நூல்கள் சிலவற்றைப் பதிப்பித்து உதவியவரும், சிறந்த வழக்கறிஞருமான உழுவலன்பர் கோவை, உயர்திரு R. செங்கோட்டுவேலன் அவர்கள் ஒரு சமயம் பஞ்சமரபு பிரதி (காகிதப்பிரதி) யை எடுத்துவரச் சொல்லி தனது இல்லத்தில் குடந்தை பண்ணாராய்ச்சி வித்தகர் திரு ப. சுந்தரேசன் அவர்களையும் அழைத்து எனக்கும் அறிமுகப்படுத்தி காகிதப்பிரதியைக் காட்டச் சொன்னார்கள். திரு. ப. சுந்தரேசனார் பார்வைக்குப் பஞ்சமரபு பட்ட நேரம் நல்ல நேரம் போலும். எனக்கு, பஞ்சமரபில் மற்ற பகுதிகளைவிட நூற்றுமூன்று பண்கள் பற்றி, பண், பண்ணியற்றிறம், திறம், திறத்திறம் எனும் பகுதியை எவ்வாற்றானும் ஒழுங்குபடுத்த முடியாமலே இருந்தது. அதனை மட்டுமே யான் பண்ணாராய்ச்சி வித்தகரிடம் தெரிவித்தேன். அப்பொழுது அவரும் நம்பிக்கை தந்தார். யானும் முயன்றேன். காலமும் கிட்டியது. திரு செங்கோட்டுவேலன் அவர்கள் மூலம் பஞ்சமரபு பற்றியறிந்த அருங்கலை விநோதரும், பெருங்கொடை வள்ளலுமாகிய பொள்ளாச்சி திரு நாச்சிமுத்து, மகாலிங்கம் அவர்கள் மனம் வைக்கும் பேறு பெற்றேன். அவர்கள், குடந்தை இராம. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் மூலம் பண்ணாராய்ச்சி வித்தகர் குடந்தை திரு ப. சுந்தரேசனாரை எனது இல்லத்திற்கு அனுப்பி வைத்து ஆவன செய்தார்கள். எல்லோரும் நல்ல கைராசிக்காரர்கள் ஆதலால் பஞ்சமரபின் பதிப்பு மிகச் சிறந்த முறையில் ஆக்கப்பெற்று வெளிவந்து எனது நெடுநாள் கவலை அனைத்தையும் நீக்கி எனக்கு நல்ல அமைதியைத் தந்துள்ளது.

இதில் எனது விருப்பத்திற்கிணங்கவே திரு நா. மகாலிங்கம் அவர்கள் பஞ்சமரபின், இசைமரபும், வாச்சிய மரபுமாகிய பகுதிகளை மட்டும் முதற்பகுதியாக வெளியிடச் செய்தார்கள். என்னையும் அழைத்து சென்னை இராஜேஸ்வரித் திருமண மண்டபத்தில்

பொன்னுடைபோர்த்தி மிகவும் பெருமை படுத்தினர்கள். எஞ்சிய நிருத்தமரபு, அவினயமரபு, தாளமரபு ஆகிய மூன்று பகுதிகளை இரண்டாம் பகுதியாக இவ்வாண்டில் வெளியிட்டுப் பெருமைபடுத்தியுள்ளார்கள். நூல்முழுதும் கோவை சக்தி அறநிலைய வெளியீடாகவே வெளிவரச் செய்துள்ளது பெருமை தருவதாகும். முதற் பகுதியின் இரண்டாம் பதிப்பும், இரண்டாம் பகுதியும் சேர்ந்த அளவிலும் ஆயிரம் படிகள் அச்சிடவும் ஆணை தந்து அவ் வேலையும் முடிவு பெற்றுளது. எல்லாம் தமிழ் அன்னையின் திருவருட் செயலேயன்றி வேறில்லை என்பதை உளமார உணருகின்றேன்.

இந்நூல் வெளியீட்டிற்குப் பெருந்தொகை முறையில் கைகொடுத்து உதவியது போன்றே என் வசமுள்ள ஏனைய சுவடிகள் நூல்கள் யாவற்றையும் நன்கே வெளியிடக் கைகொடுத்துதவும் பேருள்ளம் படைத்த திரு நா. மகாலிங்கம் அவர்களுக்கு எனது மனம், மொழி, மெய்களால் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

திரு நா. மகாலிங்கம் அவர்களிடத்து இயல்பாகவே அன்புடையவனாக இருந்த என்னைத் தம்மில்லத்தில் (ஈரோடு) நேர்முகத்தறிமுகம் செய்து வைத்து மிக்க அப்பெருந்தகையாரது நட்பினைப் பெறச்செய்த திருமான் வட்டக்கல் வலசு திரு மு. கயிலாச கவுண்டர் அவர்கள் இந்நூல் நல்ல முறையில் தாளக்குறியீட்டுடனும், கை முத்திரைகளுடனும் அச்சிட வேண்டும் எனப் பல காலம் கூறிவந்தார்கள். அவர்கள் விரும்பியவாறே நூல் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது. அவர்களும் பெருங் கொடைவள்ளல், திரு நா. மகாலிங்கம் அவர்களும் இந்நில உலகில் வாழையடி வாழையாய்த் தம் திரு மரபுடன் நீடுவாழ அருள்புரியுமாறு மாதொருபாகரையும் செங்கோட்டுவேலரையும் அன்னை துர்க்காம்பிகையையும் வேண்டி வணங்குகின்றேன். போற்றுகின்றேன். அஃதன்றி வேறியாது கைம்மாறு செய்யவல்லேன்!

**இனி நூற் (பஞ்சமரபு) பொருள் வருமாறு**

தொன்மை தொடங்கி இத் தமிழகத்தின்கண்ணே முடியுடை மன்னர்களாகிய சேர சோழ பாண்டிய வேந்தர்களாலும் நற்குறுநில மன்னர்களாகிய வேளிர்களாலும் பல்துறையிலும் வளர்த்துவரப்பெற்ற நம் செந்தமிழ் மொழியில், பொருளுணர்த்தும் வகையில் இயல், இசை, நாடகமென முப்பகுதிக்கும் அவ்வத் துறையில் வல்ல பெரும் புலவர்களால் நூல்பல பல்வேறு காலங்களில் யாக்கப் பெற்றுள்ளன. தமிழ்மொழி முத்திறப்படும் என்பது, யாவரானும் அறியப்படும். இயல்பான ஓசையால் பொருள் உணர்த்துவது **இயற்றமிழ்** எனவும், இயல் ஓசையுடன் இசையோசையும் கூடிப் பொருள் உணர்த்துவது **இசைத்தமிழ்** எனவும், அவ்விரண்டுடன் நடிப்புங் கலந்து பொருளுணர்த்துவது **நாடகத்தமிழ்** எனவுக் கூறப்படுவது வழக்காதலின் தமிழ் **முத்தமிழ்** எனப்பட்டது.

முத்தமிழ் முறை ஒன்றிற்கொன்று சிறந்தனவாக விளங்கிவரும் நீர்மையது. பொருளுணர்த்துவதிலும், சுவை செய்வதிலும் சிறந்தனவாக முத்தமிழ் உணரப் பெற்றது. இம்மூன்றினுள்ளும் **நாடகத்தமிழ்** ஒரு தனிச் சிறப்புடையதாதலின் ஆசிரியர் தொல்காப்பியனர்,

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்"

என நாடக வழக்கினையே மூவகை வழக்கினும் கிளந்து ஓதுவாராயினர் நாடகம், இசையோசையுடன் ஆடலும் உடைமையின் **கூத்து** எனப் பெயர் பெற்றதென்றும், அவ்விரண்டினுடனும் சுவை மிகுந்திருத்தலின் நாடகம் எனவும் கூறப்பெறும். நாடகம் என்பது மிகப்பழைய காலந்தொட்டே ஆடல் வகையையே குறித்து வருவது வழக்கு. பின்னர் கதைதழுவி வரும் கூத்தினை நாடகம் எனவும் குறித்த காலத்து,

"கூவி யாடல் கூத்தெனப் பெறுமே
நாடுறுஞ் சுவையின் நாடக மாமே"
(அரனரங்கத்தொகை)

எனக்கொண்டு கூறப்பெற்றது போலும். தற்காலத்தில் மிகப்பழைய இயலிசை நாடகமென்னும் மூன்றினுக்கும் இலக்கியமாய் விளங்குவது சிலப்பதிகாரக் காப்பியம் ஒன்றே என்பதும் உணரத்தக்கது. அது மேலைக் கடற்கரையின் மருங்கினதாகிய வஞ்சி மாநகரத்துச் செங்கோலோச்சிய செங்குட்டுவன் தம்பியாகிய குடக்கோச் சேரல் இளங்கோ அடிகள் என்னும் சேரமுனிவராற் செய்யப்பெற்றது. அம்முத்தமிழ்க் காப்பியத்திற்கு இலக்கணமாய் அமைந்த நூல்கள் இயற்றமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியமும் அடியார்க்கு நல்லார் என்பார் காலத்தில் சிதைந்தும் சிதையாமலுங் காணப்பட்ட இசைநாடக இலக்கண நூல்களாகிய, முறுவலும், சயந்தமும், குணநூலும், செயற்றியமும், இசைநுணுக்கமும், இந்திரகாளியமும், பஞ்சமரபும், பரதசேனபதியமும், மதிவாணர் நாடகத்தமிழ் நூலும் ஆகலாமெனத் தெரிகிறது.

இந்நூல்கள் சங்க காலத்திய இலக்கணநூல்கள். இந் நூல்களே அடியார்க்குநல்லார் சிலப்பதிகார இசை நாடகப் பகுதிகளுக்கு உரையெழுத வேண்டி மேற் கோளாகக் கொண்ட நூல்களாகும். அவற்றுள்ளும் பஞ்சமரபு என்ற இசைநூலே அவருக்கு முழுதும் கிடைத்துப் பெரும்பாலும் அதனையே மேற்கோளாக எடுத்துக் காட்ட நேர்ந்தது என்றே தெற்றென விளங்குகிறது. அடியார்க்கு நல்லார் பார்த்து அறிந்தனவாகக் கூறும் இசை நாடக நூல்களெல்லாம் நம் காலத்தே கேட்டறியும் நூல்களாகின்றன. மேற்குறித்த மறைந்தழிந்த நூல்களுள் ஒன்றாக நினைக்கப்பெற்ற அறிவனார் இயற்றிய பஞ்சமரபு எனும் இசை நாடக இலக்கணநூல் நாம் பார்த்தறியும் நூலாக இப்பொழுது வெளிவருவது நம் தமிழ்ச் செல்வர்களுக்கு

ஆராய்ச்சி அறிஞர்களுக்கு மிகவும் மகிழ்ச்சி தருவதாய் இருக்கும் என்றே எண்ணுகின்றேன்.

இயற்றமிழ் இலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்தியலாகப் பெயர் பெற்றாற் போல் இந்நூலாகிய பஞ்சமரபும் இசை, முழவு, கூத்து, வினையம், (அவிநயம்) தாளம், எனும் ஐந்து பகுதி உடையதாய், இசையைந்தியலாய், பஞ்சமரபு என்னும் பெயர் பெற்றதாகக் கருதப்படும். ஏறத்தாழ இக்காலம் நமக்குக் கிடைத்துள்ள பழமையாகிய இசைபற்றிய நூல்களில் முழு இசை நாடக இலக்கணம் ஓரளவேனும் அறியத்தக்கவாறு விளங்குவது இப்பஞ்சமரபேயாகும் என ஓரளவு கருதுதற்கிடமுளது.

இந்நூலில் இசைமரபும், வாச்சியமரபும், நிருத்த மரபும், அவினயமரபும், தாளமரபும் என ஐந்து பகுதியும் விளங்கக்கூறப் பெற்றிருப்பதால் முதற்பகுதியில் இசை மரபும், வாச்சியமரபும் வெளிவந்து, இவ்விரண்டாம் பகுதியில் நிருத்தமரபும் அவினயமரபும், தாளமரபும் என வெளிவருகிறது.

இசையும் வாச்சியமும் கூடிய நிருத்தமே முழுமையான இசைக்கலையாகும் என்பது பிற்காலத் தாரும் கண்ட உண்மையேயாம் "கீத வாச்சிய நிருத்தம் இம்மூன்றும் ஓதுப சங்கீதம்மென நூலோர்" என்பது பரதசாத்திரம் இராகவியல்.

இப் பஞ்சமரபிலும் இசை வாச்சிய மரபுகளையடுத்துத் தனித்து நிருத்தமரபு கூறியிருப்பது அறியத்தக்கது. மற்றும் பாவராகத்தாளமென்னும் மூன்றும் கூடியதே பரதமென்னும் நிருத்தம் ஆதலின் இராகத்திற்கான இசை, பண் முதலியவற்றையும் அதற்கான இசைக் கருவிகளையும் முன் மரபுகளிற் கூறிய ஆசிரியர் (அறிவனார்) பாவகமாகிய வினையத்தையும், அதற்கும் ஆடலுக்கும் அடிப்படையான தாளத்தையும், பரதம்

எனும் நாடகங் கூறும் நிருத்தமரபினையடுத்துக் கூறுகின்றார் எனவும் அறிந்து கொள்ளக் கூடும்.

இந்நூல், கடைச்சங்க காலத்துப் பாண்டியன் திருமாறன் என்பவனை முன்னிலைப் படுத்திப் பாடிய நூலாகலின் இஃது கடைச்சங்க காலத்து நூலென்பதில் எத்துணையும் ஐயமின்றாம். இந்நூலின் முதற்பகுதி வெளிவந்த பின்னர் இப்பஞ்சமரபு சங்க காலத்து நூலே என்று சிலரும், கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்கும் ஒன்பதாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தியன்ற நூலென்று ஒருவரும் எழுதி இருப்பது அறிந்தோம். நூலின் மூலத்தையே நாமறிதல் வேண்டும். உரை ஆசிரியர் பிற்காலத்தவராவார். உரை முதலான அவற்றையும் அவற்றில் விரவி வரும் வடசொற்களையும் கொள்வது முதலியன நமக்கு அளவையாகா, ஆயினும் அவ்வுரையாசிரியர் விளக்காவிடில் பொருள் நம்மனோர்க்கு எவ்வாறே விளங்கும்? அகத்தியம் பெருநாரை பெருங்குருகு முதலிய தமிழ் இலக்கண இசைநூல்கள் மறைந்தபின்னர் தமிழ் மக்கள் கி. மு. 4-ஆம் நூற்றாண்டில் பரதமுனிவர் செய்த பரதநாட்டியம் என்னும் வடமொழியிசை நாடக நூலையே இசை நாடக இலக்கண நூலாகக் கொண்டனர். ஆதலின் அந்நூல் மரபையும் ஒட்டிச் செய்யப்பெற்ற தமிழிசை நாடக இலக்கண நூல்களில் அந்நூல் கூறும் வடசொற்கள் மிகுதியும் புகுந்துவிட்டனபோலும் இது தமிழ் வரலாறு அறிந்தோர் யாவரானும் காணப்பட்ட உண்மையே என்பதாம்.

சங்க காலத்தில் இயற்றமிழ் நூல் செய்தோர் பலரும் கூடியவரையிலும் வடசொற்கள் மிகுதியும் தமிழிற் கலவாதபடி கவனத்துடனே நூல் செய்துள்ளனர். இசை நாடக நூல் செய்தோர்களும் வடசொற்கள் தமிழிற் புகாதவாறே நூல் செய்யும் கருத்தினராயினும் தாம் நூல் செய்த காலத்தில் இசை நாடகங்களில் வரும் வடசொற்களுக்கு ஏற்ற தமிழ்ப்பெயர் காண்டல் அரிதாய்

இருந்தமையின் வடமொழிச் சொற்களையே முன் நூலில் உள்ளவாறே தற்சமமாகவும் தற்பவமாகவும் எடுத்து ஆள்வாராயினர். ஆதலின் அவர்களால் வடசொற்கள் தமிழில் விரவாதபடி தவிர்க்க முடியவில்லை எனலாம். நூலில் வடமொழி மிகுதியும் கலந்துள்ளதனால் பஞ்சமரபு சங்க நூலன்றெனல் பொருந்தாது. பிறவும் காரணம் கூறும் ஆராய்ச்சியாளர்கள் மேலும் மேலும் பரந்துபட்ட உலகத்தில் அவர்கூறும் ஆராய்ச்சிகளுக்கு மறுப்புரை கூறுவதென்பது முடிவில்லாததொன்றாகும். மாணிக்க வாசகர் தாம் அருளிய திருச்சிற்றம்பலக்கோவையாரிலும் குவலயானந்தத்திலும் அந்நூல் செய்த காலத்தில் வாழ்ந்த வரகுணபாண்டியனைக் கூறியிருப்பது கொண்டும் அவன் காலமாகிய கி. பி. 9-ஆம் நூற்றாண்டினர் மாணிக்கவாசகர் எனக் கொள்ளாது அவரை வெகு காலத்தின் முன்னரும் பின்னருமாகக் கூறும் ஆராய்ச்சி உலகத்திற்கு நாம் கூறப்புகுவதியாதுளது.? ஆராய்ச்சி என்பது நிலையான முடிவுடையதன்று. ஒருவர் செய்யும் ஆராய்ச்சி மற்றொருவர் செய்யும் ஆராய்ச்சியில் நிற்பது இல்லாமல் மேலும் மேலும் போய்க் கொண்டே இருப்பது புலனாகும். மற்றும் இந்நூல் கிடைத்த அளவில் அழியாமல் நிலவவேண்டுமென்னும் கருத்துட்கொண்டு ஏட்டிலுள்ளவாறு அப்படியே வெளியிடப்பட்டதேயன்றி நூலாராய்ச்சி காலவாராய்ச்சி முதலிய ஆராய்ச்சிகளில் அதிகம் புகுந்து வெளியிடப்படவில்லை என்பதையும் அறிஞர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிலப்பதிகாரத்தில் இசை நாடகவிலக்கணம் பற்றிய பகுதிகளாக வருவன அரங்கேற்றுகாதையும் கானல் வரியும் வேனிற்காதையும் புறஞ்சேரியிறுத்த காதையும் ஆய்ச்சியர் குரவையும் ஆகும். இவற்றுள் கானல்வரி நீங்கலாக உள்ள பகுதிகளுக்கு அடியார்க்கு நல்லாருரை உள்ளது. அப்பகுதியில் அடியார்க்கு நல்லார் இசைபற்றிக் கூற நேர்ந்த பொழுதெல்லாம் சிலவிடங்களில் இப்பஞ்சமரபின் செய்யுள் மூலத்தையும்

சிலவிடங்களில் மூலம் உரை இரண்டினையும் சிலவிடங்களில் உரையின் பகுதிகளையும் அப்படியே எடுத்தாண்டிருக்கிறார். அவருரையை நோக்கும்பொழுது பஞ்சமரபு நூலிலுள்ள அவரது புலமை நமக்கு நன்கு விளங்குவதாகும். அவர் பஞ்சமரபைத் தம்முரையில் எடுத்துக்காட்டிய இடங்கள் கூறப்புகின் முன்னுரை மிக விரியுமாதலின் அவற்றைக் காண்டலில் விழைவு உடையோர் நூல் நோக்கியறிந்து கொள்ளுமாறு விடுத்து விடுகின்றேம்.

மற்றும் பிற்காலத்தார் தொகுத்த இசை நாடக இலக்கணத் தொகுப்பு நூல்களாகிய பரதசங்கிரகம், அகத்தியபரதம், அரனரங்கத்தொகை, சுத்தானந்தப் பிரகாசம், தாளத்தொகைமரபு முதலிய நூல்களில் பஞ்ச மரபின் மூலமும் உரையுமாகச் சிற்சில பகுதிகள் தொகுக்கப் பெற்றுள்ளன. தாள சமுத்திரம் இசை மரபு முதலிய நூல்களிலும் பஞ்சமரபு வெண்பாக்கள் காணப் படுகின்றன. ஏனைய தொகை நூல்களிலும் பரதசங்கிரக நூலிலேயும் பஞ்சமரபின் பெரும்பகுதிகள் தொகுக்கப் பெற்றுள்ளன. மற்றும் இசைமரபு பரத சிந்தாந்தமென வழங்கும் சுத்தானந்தப்பிரகாசம், தாளசமுத்திரமென வழங்கும் சொக்கநாதர்பரதம் முதலிய நூல்களிலும் இந்நூலின் வெண்பாக்கள் பல காணப்படுகின்றன. பஞ்சமரபு என்னும் நூல் கிடைக்கப்பெற்றதனால் தமிழில் பழைய இசை நாடகநூல் இல்லையென்னும் குறைபாடும் ஓரளவு நீங்குவதாகின்றது. நூலாசிரியர் இந்நூலைச் சுருங்கச் செய்துள்ளாரெனினும் இந்நூலில் இசை நாடகப்பழமை மரபுகள் பலவும் அடங்குமாறு செய்துள்ளமை நன்கு தெரியவருகிறது. இந் நூலில் வரும் இசை வாச்சிய மரபுகளைத் தாம் செய்த பனுவற்றொகை ஐந்தொகையென்னும் நூல்களைத் தொகுத்துச் செய்தனரெனப் பஞ்சமரபில் வரும் பாயிரச் செய்யுளாலும் நிருத்தமரபைப் பரதமுனிவர் செய்த வடமொழிப் பரத நாட்டிய நூற்பொருள்களைத்

தொகுத்துத் தமிழ்மொழியிற் செய்தனர் என நிருத்த மரபில் வரும் முதற்காப்புச் செய்யுளாலும் தெரிகின்றது. எழுத்து மரபினைப் பரதர் முதலியோர் தொகுத்த சவதப் பத்து என்னும் நூலிலிருந்து செய்தனரென அம்மரபில் வரும் காப்புச் செய்யுளால் தெரியவருகின்றது.

இனி இந்நூலுட் கூறப்படும் இசைமரபு முதலிய ஐந்து மரபுகளின் உட்பொருள் பற்றிய செய்திகள் சிலவற்றைக் கூறுவாம்.

முதற்பகுதியில் யாழ்மரபு முதலியவற்றிற் கூறும் இசை பற்றிய செய்திகள் பலவற்றைத் தொகுத்து அறிந்து கொண்டு ஒவ்வொரு மரபின் கண்ணுங் கூறும் பொருள் பற்றி மேலே குறிப்பாகச் சில கூறுவாம்.

**பண் வரலாறு பற்றிய சில செய்திகள் வருமாறு,**

இசை மரபின்கட் கூறும் இசையென்பது இயற் பாக்களுடனே நிறமென்னும் ஓசையை இசைத்தலால் இசையெனப் பெயர் பெற்றது, அவ்விசையே நெஞ்சு, மிடறு முதலிய தானங்கள் எட்டானும் எடுத்தல் முதலாகிய எண்வகைத் தொழிலானும் பண்ணப் படுவதால் பண்ணெனப் பெயர் பெற்றது, இசை என்பது குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழாம்,பண்ணென்பது பாலையாழ் முதலிய 103 பண்களாம், இசையும் பண்ணுமாகிய அவற்றின் பெயர்க்காரணத்தினை "பாவோடிணைத்தலிசை" எனவும் இவ்வாறு நிறத்த மரபிற் கூறப்படுகின்றது.

இசைமரபின் உட்பிரிவுகளாக வரும் யாழ்[1] மரபு குழல்மரபு [வங்கியமரபு], கண்டமரபு என்னும் மரபுகளில் இசைக்கு முற்பட்டதும் இசை தோன்றுவதற்குக்

1 யாழ் என்பது பண். அது ஆகுபெயராய்க் கருவிக்கு பெயர்பெற்றது.

காரணமானதுமான யாழ், குழல், கண்டம் என்னும் இசைக்கருவிகளின் இலக்கணங்கள் கூறப்பெற்றுள்ளன. யாழ் மரபினிறுதியில் யாழிலிருந்து தோன்றும் ஆயம், சதுரம், திரிகோணம், வட்டமென்னும் நால்வகைப் பாலைகள் பிறக்கும் நிலை கூறப்பட்டுள்ளது. பாலை என்பது பண்களின் பகுப்பாம். அவற்றுள் வட்டப் பாலையின் வலமுறைத்திரிபால் பாலையாழ், குறிஞ்சியாழ், மருதயாழ், செவ்வழியாழ் (முல்லையாழ்) என்னும் நான்கு பெரும் பண்கள் தோன்றும். அவற்றுள் பாலையாழில் இருந்து செம்பாலை முதலிய ஏழ் பெரும்பாலைகள் தோன்றும். இவை ஏழு இசைகளைக்கொண்ட இசையமைப்புகளாம். அவற்றுள் செம்பாலையிற் பிறக்கும் பண்கள் எட்டு; படுமலைப்பாலையில் பிறக்கும் பண்கள் 22; செவ்வழிப் பாலையிற் பிறக்கும் பண்கள் 12; அரும்பாலையிற் பிறக்கும் பண்கள் 26; கோடிப்பாலையிற் பிறக்கும் பண்கள் 12; விளரிப்பாலையில் பிறக்கும் பண்கள் 5; மேற் செம்பாலையிற் பிறக்கும் பண்கள் 18; என இவ்வாறு எழு வகைப் பாலைகளிலிருந்து 103 பண்கள் தோன்றும் எனவும் பண்ணைப் பண்ணுவதற்கு எடுத்தலாகிய ஆளத்தியிலும், படுத்தலாகிய நாளத்தியிலும் ஏழிசைகளில் இன்னின்ன இசை எவ்வெப்போது வருமென நிறுத்துவது பாலையாம் எனக் கூறப்பட்டுள்ளது. பாலைமுறை என்பது தலைச் சங்க காலத்தின் முற்பட்ட தொன்மையான இசை முறை என்பதில் ஐயமில்லை.

'பண்ணோர் பதினேழாம்' என்னும் வெண்பா உரையால், பண், பண்ணியல், திறம், திறத்திறம் எனப் பண்களை இசைகளின் அமைப்பு வேறுபாட்டால் நான்கு வகையாய்ப்பிரித்து ஏழு நரம்பு (சுரம்) ள்ள சம்பூர்ணமாகிய பெரும்பண்கள் 17; ஆறு நரம்புள்ள பண்ணியல் 70; ஐந்து நரம்புள்ள திறம் 12; நாலு நரம்புள்ள திறத்திறம் 4 ஆகவும் நூற்றுமூன்று பண்கள் எனத் தெரியவருகிறது.

மற்றும், அவ்வுரையால் முற்சொன்ன பண்களான பாலையாழ், குறிஞ்சியாழ், மருதயாழ், செவ்வழியாழ், என்னுமிவற்றுள் ஒவ்வொன்றும் அகம், புறம், அருகு, பெருகு என்னும் இனவேறுபாட்டால் ஒவ்வொன்றும் நந்நான்காகிப் பெறும் பண்கள் பதினாறும். அவற்றுடன் தாரப்பணம் சேர்க்கப் பெறும் பண்கள் பதினேழாம் என நன்குணரக்கிடக்கின்றது.

முற்சொன்ன பாலையாழ் முதலிய நாற்பெரும் பண்களில் பாலையாழுக்கு அராகம் முதலிய ஐந்து திறமும், குறிஞ்சியாழுக்கு நைவளம் முதலிய எட்டுத் திறமும், மருதயாழுக்கு நவிர் முதலிய நான்கு திறமும், செவ்வழியாழுக்கு நேர்திறம் முதலிய நான்கு திறமும் ஆகத் திறங்கள் இருபத்தொன்றும். திறங்கள் இருபத்தொன்றும் அகம், புறம், அருகு, பெருகு, என்னும் சாதி வேறுபாட்டால் எண்பத்து நான்காம். பெரும்பண்கள் பதினேழும், திறப் பண்கள் எண்பத்து நான்கும் ஆகப்பண்கள் 101 ஆகும். அவற்றுடன் தாரப்பணத்தின் திறமாகிய பையுள் காஞ்சி படுமலை என்னும் இரண்டும் சேர்க்கப் பண்கள் 103ஆம் எனக் கூறுவதும் அறியத்தக்கது.

## இசை மரபு

### யாழ்மரபில் மேலும்

இதன்கண் இசைக்குப் பிறப்பிடமாகிய பேரியாழ் முதலிய நால்வகை யாழ்கள். நால்வகை யாழுக்குமுரிய நரம்புகளின் தொகைகள், யாழுக்குரிய மரங்கள், யாழ்களுக்குரிய கோடு, திவவு, ஆணி, பத்தல், தந்திரிகரம் முதலிய உறுப்புகளின் இலக்கணங்கள் ஆகியவைகள் கூறப்பட்டுள்ளன.

யாழ்த் தொழிற்கைகள், - கைத்தொழிலால் பிறக்கும் இசைக்கு அடிப்படையான நால்வகைப் பாலைகள். அவற்றுள் வட்டப்பாலை மண்டலம் கொள்ளுதல்.

அம்மண்டலத்தில் சோதிடநூல் கூறும் பன்னிரண்டு இராசிகளில் கோள்கள் அமைந்து நிற்பதுபோல தாரம் முதலிய ஏழ் நரம்புகள் (இசைகள்) நிற்குமுறை கூறப் பட்டுள்ளது. நரம்புகளோசை, எழுத்துக்கள், அவை ஒவ்வொன்றும் கொள்ளுதற்குரிய மாத்திரைகள் (அலகுகள்) ஏழுபாலைகள் பிறக்கும் முறை, அவற்றில் இருந்து பாலையாழ் முதலிய நாற்பெரும் பண்கள் பிறக்கும் முறை, பாலையாழில் ஏழு பாலைகள் பிறத்தல், பாலை வகைகளின் பெயர் உழை குரலாய செம்பாலை, குரல் குரலாய் ஒத்த செம்பாலை யென்பவையும் இராசிப் பெயர்கள் இசைப்பெயர்கள் முதலான கூறப்பட்டுப் பின் அதன்வழித் தோன்றும் ஏழுபாலைகளின் திறவகை கூறப்பட்டுள்ளது. பண்களின் தொகை நூற்று மூன்றுகுமென இசை நுட்பங்கள் கூறப்பட்டு உள்ளன. யாழ் மரபில் உரையாசிரியரால் எடுத்துக் காட்டப்பெறும் சூத்திரங்கள் நன்கு அறியத்தக்கனவாகும். பண்களின் பெயர் வகைகள் அனைத்தையும் அட்டவணைப்படுத்திக் காட்டியுள்ளோம்.

வங்கியமரபில், வங்கியம் குழற்கருவிகள் பலவற்றிற்கும் பொதுப்பெயர் என்பதும் அவற்றுள் உத்தமம், மத்திமம், அதமம் என்பனபற்றியும் வங்கியம் செய்தற்குரிய மரங்கள், அதனிலக்கணம் பிண்டத்தின் அளவு, துளையளவு முதலியன கூறப்பட்டுள்ளன.

கண்டமரபு, இம்மரபில் பூதவகை, நிலை அவற்றின் பரிணமத்தாலாகும் உடம்பு சுவை, ஐம்பூதக் கூற்றின் நிலை, தச வாயுக்கள், தச நாடிகள், தன்மைகள் பற்றிய செய்திகள் கூறப்பட்டு, புற்கலம் என்னும் முத்திக்கு வித்தாம் உடம்பு, அதன் நடுவின் மூலாதாரம், அவ்வாதாரத்தினின்று எழும் நாதம் முதலெழுத்து. அவற்றுள் குறிலைந்து நெடிலைந்து ஆளத்தியாய்த் தோன்றும் வகை, தென்ன தெனவெனும் அசை, மாத்திரைகள் ஒன்பது, தானங்கள் எட்டு, கிரியைகள்

பதினொன்று, பதின்மூன்றெழுத்து, தொழிலைந்து யாவும் நன்கு கூறப்பட்டுள்ளன. கண்டம், மிடற்றுக்கருவி.

நிறத்த மரபு, இம்மரபு, பாடல்களிற் புணர்த்தற்கு உரியதும், இசைக்குரியதுமான தமிழ் என்னும் ஓசைகள் ஆகிய நிறங்களைப்பற்றிக் கூறுதலின் நிறத்தமரபு எனும் பெயர்பெற்றது. இவ்வோசைகள், வங்கியம், யாழ், வீணை முதலிய கருவிகளிற்றோன்றுங்கால் பெயர் முறை பெறுவதும், யாழ் தமிழுக்குரிய எனும் கருத்தும் பண்பு, கிரியை, பா, நிலம் பற்றிய இசைக் கருத்தும், இசைப்புணர்ப்பு ஐந்து, அவற்றின் விளக்கம். அன்றியும் எண்வகைப் புணர்ப்பு முதலிய அரிய செய்திகள் விளக்கத்துடனும், இன்றியமையாத இசை நுணுபு நான்கும் அரங்கத்துப் பாடப்பெறுதார், பாடப் பெறுவோர், மூவோசை, பாடுதற்கல்லாத ஓசைவகை, அவற்றின் விளக்கங்கள், பாடுவார் பாடும் பரிசு தேசாள சுத்தக்கிரியை, மிடற்றுக்கான மருந்துவகை, மிடற்றுக்கு ஆகாதனவும் ஆவனவும் எல்லாம் அறிந்துகொள்ளுமாறு கூறப்பட்டுள்ளன.

**வகையொழிபு மரபு** எனும் பகுதியில், இதன்கண், யாழ் மரபு முதலியவற்றிற் கூறப்பெறுது ஒழிந்த பல வகையான இசைக்குரிய பண்பு முதலியவான செய்திகளையெல்லாம் சிறப்பாக விவரித்துக் கூறப் பட்டுள்ளன. பஞ்சமரபின் காரணம், பஞ்சமாசத்தம், பண்களைப் பாடுவதறிந்து பாடுதல், பண்களை ஒன்பது வகைத் தன்மையிற் பலவகையாக்கிப் பாடுமாறு. காலங்கள், அவற்றிற்குரிய பொழுதுரிமைப் பண்கள், மங்கலப் பண்கள், அவற்றுள் முன்னெட்டுப் பின்னெட்டு ஆகிய பதினறு பண்கள், மங்கலச் சொற்கள், சென்று பொன் கொடுத்துப் பாடச்செய்தலின் மரபு இன்னிசைப் பாக்கள் வகை, அவற்றிற்கான செய்யுள் வகை என்பன கூறப்பட்டுள்ளன யாவும் அறிந்து உணரத்தக்கவை ஆகின்றன. ஐவகை வண்ணப்பாடல் இசைபுணர்க்கும் வகையறிதல் இன்னன பிறவும் கூறப்பட்டுள்ளன.

திரளும் தோற்கருவிகளுமே முற்றோன்றியது எனும் கருத்து சிந்திக்கத்தக்கது. அதுவே உண்மையாகும்.

வாச்சியமரபு, இம்மரபில் தோற்கருவிகள் அவற்றின் பெயர், முறை, பிண்டம், பேரெழுத்து முதலானவையும், வன்மை, மென்மை வகை பலவும், அவற்றிற்கான கடவுளர் திருப்பெயர் முதலியனவும் கூறப்பட்டுள்ளன. இவை தழுவிசைக் கருவிகள். ஆதலினால் இவற்றுள்ளும் அகவகை, புறவகை, அகப்புறவகை, புறப்புறவகை, பலவும் முழவுவாச்சியத்தின் முழுவுருவ முறைமையையும் பிண்டமரபுப் பகுதியில், கருவிகளின் அளவு, நீளம் மற்ற உறுப்புக்கள் முதலிய செய்திகளும் கூறப்பட்டு உள்ளன.

எழுத்து மரபில், வாச்சியம் புணர்த்தற்குரிய எழுத்தினியல்பு, அவை பதினான்கு, அவையும், அறுவகையோசைகளாற் புணர்க்கப்படும் என்பதும் சொற்கட்டின் பெயர் முறைகளான காத்திரம், சிவிறுகை, அடைசுகை, நேர்கை, ஏறுகை அவை கூடி வருமழகு முதலான செய்திகள் கூறப்பட்டுள்ளன. அவையாவும் பலமுறை நன்கே பயின்றுணர்ந்து உளங்கொளத் தக்கன என்பது விளங்கும். இதுகாறும் கூறியவை இப்பஞ்சமரபின் முதற்பகுதியான இசைமரபு வாச்சிய மரபு பற்றியதே என்பதை அறிந்துணர்க.

## நிருத்த மரபு

இனி இரண்டாம் பகுதி, நிருத்த மரபு என்பதில் வரும் நிருத்தமென்னும் பொதுப்பெயர், மெய் முகம் கண் கால் பண்பு தொழில் கை புருவம் குறிப்பறிதல் பண் என்னும் உறுப்புகளை உயிர்நிலைகளாகக் கொண்டு நிகழும் கூத்து என்னும் பொருளதாம். பஞ்சமரபு கூறும் மூன்றாவது பெரும்பிரிவு நிருத்த மரபு. நிருத்தமென்பது இசைவழி நிகழும் நடனத்திற்குரிய சிறப்புப் பெயர். "இசையுடன் நடனம் நிருத்தமாமே" என்பது பரத

சூத்திரம். நிருத்தமென்பது ஈண்டுத் தாண்டவம் முதலிய எல்லாக் கூத்தினுக்குமுரிய பொதுப் பெயராக வழங்குகின்றது.

மற்றும் கதை தழுவிய கூத்தினுக்குரிய சிறப்புப் பெயராகிய நாடகம் என்பது "நாடுறுஞ் சுவையின் நாடகமாமே" என்னும் அரனரங்கத்தொகை மேற்கோட் சூத்திரத்தின்படி சுவையுடைய எல்லாவகையான கூத்தினையும் குறிக்கும் பொதுப்பெயராக இயலிசை நாடகமென்னும் பழந்தமிழ்த் தொடரில் வழங்கிவருதல் போன்றதாம். மற்றும் திவாகரம் பிங்கலம் முதலாகிய நூல்களில் நாடகம் நிருத்தம் பரதம் என்னும் சொற்கள் கூத்தின் பொதுப்பெயர்களாகவே கூறப்படுதலும் காண்க. இந்நிருத்த மரபில் தாண்டவம், நிருத்தம், நாட்டியம், குரவை, வரி, கோலம், வகை என்னும் எழு வகைக் கூத்துக்கள். எழுவகைக் கூத்தும் சாந்தி, விநோதம், வகை என்னும் மூவகைக் கூத்துள் அடங்கும் முறை. அகமார்க்கப்பொருள்கள் பதினாறு தாண்டவங்களுக்குரிய தாளங்கள், தாண்டவங்களுக்கு உரிய ஜதிக்கோவைகள், பதினாறு தாண்டவச்சிந்துகள் என்னும் பலவகைப் பொருட்கள் விரித்துக் கூறப் பெற்றுள்ளன. இவற்றின் விளக்கங்களை கூறப்புகின் முன்னுரை விரியுமாகலின் அவற்றுள் இரண்டொன்று குறித்து மேற்செல்லுதும்

**தாண்டவம்:** எல்லாவற்றிற்கும் மூலகாரணனாகிய சிவபிரான் தென்னாட்டிற் புரிந்த திருக்கூத்தினுக்கே தாண்டவமென்று பெயர். "தாண்டவம் புரியவல்ல தம்பிரான்," என்பது பெரிய புராணம். தாண்டு என்னும் வேர்ச் சொல்லினடியாகப் பிறந்தது தாண்டவம். தாண்டல் என்பது கூத்தாடலுக்கும் பெயர். "அகவல் தாண்டல் ஆடுதல் நடித்தல் அசைதல் பெயர்தல் அடுதல் கூத்தாடல்" என்பது பிங்கலந்தை. தாவலும் ஆடலுஞ் செலுத்தலுந் தாண்டவம். தண்டுவ முனிவர் சிவபிரான் கட்டளைப்படி பரத முனிவருக்குக்

கற்பித்ததனுல் தாண்டவம் எனப் பெயர்பெறும் என்பது கூத்தநூல். "தண்டுவன் செய்தது தண்டுவமென்ப", "தண்டுவன் செய்த தண்டுவம் பலவே" கூத்த நூல். இது பரதமெனவும் பெயர்பெறும். "அமலன் கூத்தே அகத்தியல் பரதம்" (தொகைநூல்) பரதத்திற்குரிய பாவராக தாளமென்னும் மூன்றும் இசைந்திருப்பதே தாண்டவம் என்பர்.

நால்வகை அபிநயங்கள். (அபிநயம்,) ஆங்கிகம் வாசிகம் ஆகாரியம்மே, சாத்விகமென்னு சதுர்விதமாமே. கை முதலிய உறுப்புகளால் காட்டுவது ஆங்கிக அபிநயமாம். வாக்காற் பாடியபிநயிப்பது வாசிகாபிநயம். நாட்டியத்துக்குத் தகுந்த ஆடையாபரணம் தரித்துக் காட்டுவது ஆகாரியாபிநயம். பாவராக தாளலய முதலியவற்றுடன் கலந்து அபிநயிப்பது சாத்விகாபிநயம்

ஒன்பான் சுவையாவன. "அகச்சுவையுவகை நகையே யழுகை, வெகுளி பெருமிதம் அச்ச மிளிவரல், மருட்கை நடுநிலே யென்ருேன்பா ருகும்" சுரம்–இசை. ஜதி – தாளத்திற்கேற்ப நிகழும் கால் தட்டுகள்.

2. நிருத்தம் — நான்குவித அபிநயங்களுடனும் ஒன்பான் சுவைகளுடனும் ஜதி சுரம் முதலியவற்றுடனும் நடிப்பது. இது இசைவழிக்கூத்து எனப் பெயர்பெறும்.

3. நாட்டியம் — உள்ளத்துக் கருதிய பொருள்களே அபிநய மாத்திரத்தால் நடித்துக் காட்டுவது. இது அபிநயக்கூத்து எனப்பெறும்.

"விழிசிரங் கைகால் மெய்யுடன் லயமிசை
நளின பாவம் நாட்டிய மாமே"

என்பது பரத சூத்திரம். இதனே நாடகத்தினடிப்படை என்பர்

4. குரவை — குரவை என்பது கைகோத்தாடல்,

5. வரி — இதனைப் பெண்கோலமென்பது பஞ்ச மரபு, கூத்து வகைகளிலொன்று. உலகப் பொது நெறிகளை நாடக வழக்கில் காட்டுவது வரிக்கூத்தென்பர்.

"பொதுவிய லுலகப் பொதுநெறி யாவும்
வேத்திய லாக விரிப்பது வரியே."

என்பது வரிநூல். குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என்னும் ஐவகை நிலத்தினியல்பை அவ்வாறே அமைத்துக் காட்டல் நிலவரி யென்பர். "அந்நகர் நிலத்தை யவ்வாறே, அமைத்துக் காட்டல் நிலவரி யாமே" — இதனை ஐந்திணை வரியென்பர். மற்ருென்று நீர்வரியாம். "அருவியுஞ் சுனையும் யாருங்குளனும்...... நீர் முதலாங் கடல் நெறியுங் கூட்டித், தேர்வகை காட்டல் நீர்வரிக் கூத்தே" என்பது வரிநூல்.

"வரியெனப்படுவது வகுக்குங்காலைப் பிறந்த நிலனுஞ்
சிறந்த தொழிலும், அறியக் கூறியாற்றுழி வழங்கல்"

6. கோலம்— ஆண் கோலம் என்பது பஞ்சமரபுரை. இது பெண்கோலமாகவும் வரப்பெறும் எனக் கூறுகிறது. "குமரிக் கோலத்துக் கூத்துட் படுமே" "பிக்குணிக் கோலத்துப் பெருந் தெருவடைதலும்" — (மணிமேகலை) ஐவகை நிலத்துக்குமுரிய முருகன் முதலிய தெய்வங்களுக்குரிய வெறி முதலாகிய ஐந்து கூத்தினையும் ஐந்திணைக் கூத்தநூலார் கோலம் என்பர்.

"வேலோன் வெறியும் மாலோன் விறலும்
வேந்தன் விழவும் மீனோ னூப்பும்
கொற்றவைக் கூத்து மைந்திணைக் கோலம்"

என்பது வரிநூல். கோலம் – வேடம்.

7. வகைக்கூத்து — நின்ருடலாறும், வீழ்ந்தாடல் ஐந்துமாகிய அல்லியக்கூத்து முதலிய பதினோராடல் என்பது இப்பஞ்சமரபுரை, பல்வகைக் கூத்தாவன —

வென்றிக்கூத்து, வசைக்கூத்து, விநோதக்கூத்து முதலியன. "பல்வகையென்பது பகருங்காலை, வென்றி வசையே விநோதமாகும்." எனவிவை தாளத்தினியல்பில் வரும் என்பது சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் அரங்கேற்றுகாதை உரை.

மூவகை நிருத்தம் — தேசி, வடுகு, சிங்களம் என்பன. நின்றாடுவதுதேசி, அசைந்தாடுவது வடுகு, நடந்தாடுவது சிங்களம் என்பது பஞ்சமரபுரை. இவை யாவும் நன்கே உணரப்பெற வேண்டும்.

மூவகைக் கூத்து — சாந்திக்கூத்து, விநோதக் கூத்து, வகைக்கூத்து என்பன.

சாந்திக்கூத்து — நாயகன் சாந்தமாக ஆடிய கூத்து.

விநோதக்கூத்து — உயர்ந்தோரை மகிழ்விக்கும் பொருட்டு ஆடும் கூத்து. அவை குரவை. கலிநடம், குடக்கூத்து, கரணம், நோக்கு, தோற்பாவை, வெறியாட்டு என்னும் ஏழுமாம். என்னை ; எழுவகைக் கூத்து மிழிகுலத்தோரை ஆடவகுத்தனன் அகத்தியன் தானே" என்றாராகலின் என்பது அடியார்க்கு நல்லார் உரை.

வகைக்கூத்து — வென்றி, வசை, விநோதம் முதலிய பல்வகையாலாடப்படும் கூத்து.

துடிமுதல் கொடுகொட்டியீறான பதினொரு வகையான கூத்தும் தேவதைகள் தனித்தனியே வகை வகையால் ஆடினமையால் இவை வகைக்கூத்தென்று வழங்கப்படும் என்பது பஞ்சமரபுரை.

அகமார்க்கம் — அகம் என்பது அகத்துவழித் தோன்றும் சாத்துவிகம், இராசதம், தாமதம் (அமைதி, ஊக்கம், ஒடுக்கம்) என்னும் முக்குணங்களும் குணங்களின் வழித்தோன்றும் உவகை, நகை, அழுகை, வெகுளி, பெருமிதம், அச்சம், இளிவரல், மருட்கை;

நடுநிலை என்னும் ஒன்பான் சுவைகளுமாம், "அகவழிக் குணனே குணவழிச் சுவையே" என்பது கூத்தநூல், "குணத்தின் வழியதகக் கூத்தெனப் பெறுமே" அகக்குணம் சுவையாடுதல் அகமே என்றும், குண நூலுடையாரும் சயந்த நூலுடையாரும் முறையே கூறினர் ஆகலின் அகத்து வழித்தோன்றும் குணங்களும் சுவைகளும் தோன்ற இறைவனால் ஆடப்பெற்ற தாண்டவங்கள் அகமார்க்கமெனப் பெயர் பெற்றன. இவை உடம்பு எனும் மெய்யின் வழிநிகழும் கரணம் முதலிய மெய்த்தொழிலால் நிகழ்வதாகலின் மெய்க் கூத்தெனவும் கரணக்கூத்தெனவும் பெயர்பெறும்.

சிவபெருமானுடைய தாண்டவ வடிவங்கள் காமிகம் முதலாகிய சிவாகமங்களினகத்தே கூறப்பெறுதலின் தாண்டவம் ஆகம மார்க்கமென்றும் பெயர் பெற்றன எனக் கூறுதலுமாம். "சாத்விகந்தேசி, இராசதம் வடுகு. தாமதஞ் சிங்களமெனக் கொள்க, இவை ஆகமத்திலுள்ள குண மூன்றினலும் பெயர்பெறுதலால் அகமார்க்கமென்று பெயர்பெற்று வழங்கப்படுமெனக் கொள்க என்பது பரதசங்கிரகம்.

சதாசிவமூர்த்தியினுடைய அருவுருவத் திருமேனியில் நின்றும் தோன்றியவர் மகேஸ்வரமூர்த்தி, மகேசுவர மூர்த்தி உலகுயிர்கள் தரிசித்து உய்தி பெறுதற் பொருட்டுக் கொண்ட உருவத்திருமேனிகள் இருபத்து ஐந்து — அவை "பஞ்சவிம் சதிமகேசம்" என்பது. (மெய்மொழிச் சரிதை) சந்திரசேகரர் முதலிய இருபத்து ஐந்து திருமேனிகளில் ஒன்ருய் விளங்குபவர் நாட்டிய மூர்த்தி. அவர் முயலகன் மீது பதித்து வைத்த இடது காலையுடையவர். வலது காலைத் தூக்கிக்கொண்டு இருப்பவர். தீச்சுடர்களின் நடுவில் விளங்குபவர். ஆடுகின்ற நாகத்தின் பருத்த தலையைப் பற்றியிருப்பவர். நீறு பூசிய உடலும் சிவப்பான கைத்தலமும் பாததலமும் உடையவர். நெருப்பு, வரதம் அபயம் உடுக்கை என்னும் இவைகளைத் தரித்திருப்பவர். (ஸ்ரீதத்வநிதி);

இவர் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் என்னும் ஐந்தொழில்கள் நிகழவும் உலகுயிர்கள் தன்னைத் தரிசித்து எளிதில் இம்மை மறுமைப் பயன்களைப்பெற்று உய்தி பெறவும் தம்முள்ளத்திற் கொண்ட பெருங் கருணையினாலே தில்லையிலும் திருவாலங்காட்டிலும் நிகழ்த்தியருளிய தாண்டவங்கள் நூற்றெட்டாம். பரதமுனிவர் செய்த வடமொழி நாட்டிய நூலில் இத்தாண்டவங்கள் விரித்து கூறப்படுகின்றன, பரத முனிவர் கூறிய தாண்டவங்களில் பதினாறு தாண்டவங்கள் மிகவும் சிறப்புடையனவாகச் சோடச தாண்டவங்கள் எனப்பெறும். இபபதினாறு தாண்டவங்கள் சிற்ப நூலிலும் பரத நூலிலும் சிறப்பாகப் போற்றப்படுபவை.

"ஓதிய விரண்டு வகையுடன் றனித்த
உமையொரு பாகன் முன்னாளில்
உலகெனுங் கலைக ளீரெட் டைமேவி
யொப்பிலா வானந்த முதலா
ஏதமிற் றாண்டவம் பதினாறு மேற்கையா
யாடிடுமப் போது." ... ... ... ...

எனுஞ்சான்றுகள் பல. மகாபரத சூடாமணி.

அத்தாண்டவங்கள் பதினாறையும் ஆசிரியர் அகமார்க்கப் பொருளென இந்நூலுட் கூறுகின்றார். அவை ஆதித் தாண்டவம் முதல் தெண்டபாதத் தாண்டவம் இறுதியாக உள்ள தாண்டவங்களாம். தாண்டவத்திற்குத் தாளம், சதி, கரணம், சாரி என்னும் நான்கும் முக்கியமானவை. அவற்றுள் பதினாறு தாண்டவங்களில் ஒவ்வொன்றற்கும் உரிய தாளங்கள், ஜதிகள் ஆகியவற்றை முக்கியமாகக் கொண்டு இந்நூலுட் கூறப்பட்டுள்ளது. தாண்டவமாகிய நிருத்தத்திற்கும் தாளம் இன்றியமையாதவைகளாம். தாளத்தினடிப்படையில் தோன்றியவை தாண்டவங்கள். "நீதிசேர் நிருத்தந்தானே நிகரிலாத்தாள ரூபம்" என்பது பரத சாத்திரப் பாயிரம், தாளங்கள் சச்சபுடம் முதல் பெத்தாபரணம் இறுதியாக உள்ள நூற்றெட்டாம்,

தாளத்திற்கடுத்த படியாகக் கூறப்படுபவை ஜதிகளாம். கைத்தட்டால் நிகழும் தாளத்திற்கேற்பக் கால்தட்டால் நிகழ்பவை ஜதிகளாம். ஈண்டுக்கால் என்பது பாதம். ஜதிகள் தத்–தித்–தொம்–நம்–ஜம் என்பனவாம். இவை ஆதி ஜதிகளாம்.

"தத்தித் தொம்நம் ஜம்மென வைந்தே"

"நடுவடி தத்தே குதியடி தித்தே
அணையடி தொம்மே விரவடி நம்மே"
வீச்சடி ஜம்மே வியனடி முதலே" — தாளநூல்

மற்றும் தா – தை – தையும் – தத்தா – என்பனவும்; தாம் – தித்தா – தை – தைத்தை போல்வனவும் ஜதிகளாக வரும். ஜதிகளின் கோவையே ஜதிசுரம் எனப்படும். இந்நூலில் பதினாறு தாண்டவங்களில் ஒவ்வொன்றிற்கும் உரிய தாளங்களும் ஜதிக்கோர்வைகளும் கூறப்பட்டு உள்ளன. ஜதிகளினியல்பை விவரிப்பது நடனாதி வாச்சிய ரஞ்சனம் என்னும் நூல். தாண்டவச்சிந்து – அகமார்க்கப்பொருள்களாகிய தாண்டவங்கள் பதினாறிலும் தந்து சொல்லப்படுபவை. ஆதலின் இவை தாண்டவ, தரு எனப்படும் இவை ஒரு வகையான இசைப்பாட்டு. தாண்டவத்தில் சொல்லப்படுதலின் இவைதான் தாண்டவச்சிந்து எனப் பெயர் பெற்றது போலும். பாடல்கள் தோறும் சிவபெருமானுடைய பெருமையும் தாண்டவத்தின் பெயரும் திருவாலங்காடும் கூறப்படுகின்றன. இதுபோலப் பழைய பரத நூலிற் கூறப்பெறுவது தில்லைவனச் சிந்தாம்.

இசைவழிப் பிறந்தது கூத்து என்பதனை,

"மோனத் திருந்த முன்னோன் கூத்தில்
உடுக்கையில் பிறந்தது ஓசையின் சுழலே
ஓசையில் பிறந்தது இசையின் உயிர்ப்பே
இசையில் பிறந்தது ஆட்டத்தி னியல்பே

ஆட்டம் பிறந்தது கூத்தின தமைவே
கூத்தில் பிறந்தது நாட்டியக் கோப்பே
நாட்டியம் பிறந்தது நாடக வகையே"

"இசைவழிக் கூத்தே யென்மனுர் புலவர்"

"இசைக்கிசை யிருகால் யிருகை ஒருடல்
இணைத்திணைத் தியற்றல் இசைவழிக் கூத்தே"

எனக்கூறும் நூல்கள் பல.

## அபிநய மரபு

அபிநயமரபானது அபிநயக்கை மரபு, காற்கிரியை மரபு என்னும் இரண்டு பகுதிகளையுடையது. கையாற் செய்யும் அபிநயம், காலினுற் செய்யும் ஆட்டத்தில் நிகழ்வதாகலின் அபிநயக்கை மரபிற்குப் பின்பு காற் கிரியை மரபு கூறினர். "காலால் நடப்பதெல்லாம் கூத்தாகும்" எனவும், "ஆட்டம் கூத்தின் அடிவாரம்மே" எனவும், "ஆட்டம்பாட்டம் அவிநயமென்ன, மூவகை என்பர் கூத்தின் முறைமை" எனவும், வருவன எல்லாம் காற்றெழிலால் நிகழும் ஆட்டமே கூத்திற்கு அடிப்படையாம் என்பதை உணர்த்துவனவாம்.

கூத்து என்பது ஆட்டமும் பாட்டும் (இசையும்) அவிநயமும் சேர்ந்ததாம். இதனைக் கூத்தநூல் வழி முறை கூறும் பகுதியில் காண்க.

" ஆட்டம் பிறந்தது பாட்டம் பாட்டம்
அதனிடைப் பிறந்த தவிநயக் கூத்தே"

"ஆட்டம் தட்டாம் பாட்டம் பண்ணும்
யாப்புக் கூத்தின் அவிநய மென்பு."

" ஆட்டம் அகமாம் பாட்டம் சுவையாம்
கூத்திழை யென்னக் கொண்டனர் புலவர்."

பாட்டம் – பாட்டு. பாட்டென்பது இசையாம். எனவும் பிறநூல்கள் கூறுவனவே.

"பாவோடிணைத லிசையென்றூர்" என, இப்பஞ்ச மரபும் கூறுகிறது.

இம்மரபின் முதற்சூத்திரத்தில் (முதல் வெண்பாவில்) உரை மட்டுமுள்ளது. அதில் கூத்திலக்கணம் கூறப் படுகின்றது. அதில் வாச்சியவோசைகளாலும் பரிணமித்தது கூத்தாம் எனக் கூறப்படுகின்றது. கூத்திற்குரிய அறுவகையான வாச்சியவோசைகள், வாச்சியப்பாக்கள், வாச்சியப்பகுதிகள் ஆகியவெல்லாம் வாச்சியமரபின் உட்பிரிவாக வரும் எழுத்துமரபில் விரித்துக் கூறப்பட்டுள்ளன. இவற்றூல் கூத்தினுக்கு ஆட்டத்தைப்போல வாச்சியவோசைகளாகிய இசையும் முக்கியமானதெனத்தெரிகின்றது. இதனுல் "கூவியாடல் கூத்தெனப்படுமே" என்னும் அரனரங்கத்தொகை மேற்கோட் சூத்திரப் பொருள் தெளிவாகின்றது. "கூவலே கிணறே யோசை" என்பது அரும்பொருள் விளக்கம் ஆதலின் கூவல் ஓசையென்னும் பொருளது. கூவி என்பது இசையோசை செய்து அல்லது பாட்டு ஓசை செய்து என்னும் பொருளது. மேற்குறித்த அரனரங்கத்தொகை மேற்கோட் சூத்திரம் தொல் காப்பியப் பெயரியற் சூத்திரமாகிய "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்பதில் வரும் பொருள் என்பதற்கு இயல்பான பொருள் என்பதேயல்லாமல் காரணப்பொருளுமாம் எனக்கொண்டு செய்ததாமெனத் தெரிகின்றது. மற்றும் கூத்தில் ஆட்டம்போல் ஓசையும் முக்கியமானதென்பது இந்நூலில் வரும் ஏனைய சூத்திரங்களாலும் விளங்குவதாகும்.

"மென்றினுட ஞேசையூட்ட விதிற் பிறக்கும்
முன்றூடுங் கூத்தின் வகை"

"பாங்கான வோசையும் பற்றுமென வுரைத்தார்
பூங்காவ கத்தியனூர் போந்து"
"நாமிசை வாச்சியம் நவின்றபின் கூத்தாய்ப்
பூமிசை யொன்றிடல் பூசாரியாகும்" என்பனவாம்.

இசை வாச்சியப்பா ஓசைகளினுல் கூத்துப் பிறப்பது பற்றியே வடநூலார் சங்கீதத்தில் கீதவாத்திய நிருத்தமென்னும் முறை கொண்டனரெனத் தெரிகிறது. "இங்கித கீதம் இதமுள வாத்தியம், பொங்கியநிருத்தம்" என்பது மகாபரத சூடாமணி.

மற்றும் இம்மரபிற் கூறப்படும் பொருள்கள் :— 1. கூத்துக்குரிய வினைகள், 2. மூவகைக் காலங்கள், 3. கூத்திற்கால் வைக்கும் அறுவகை நிலைகள், 4. அறுவகை நிலைகளின் இலக்கணங்கள், 5. பரதத் தொழில்கள் ஐந்து, அவற்றினிலக்கணங்கள், 6. நான்கு வகை வருத்தனைகள், 7. தேசி வடுகு சிங்களமென்னும் மூவகைக் கூத்தினுக்குமுரிய கால்கள் அவற்றுள் ஒவ்வொன்றின் தொகைகள், 8. மூவகைக் கால்களின் இலக்கணங்கள், 9. அங்கக் கிரியைகள் பதினுறு, அவற்றின் இலக்கணங்கள் ஆகியவை விரித்துக் கூறப் படுகின்றன. நூற்பாக்கள் மிகச் சிறப்புடைன.

## அபிநயக்கை மரபு

"பாதமலர் போம் வழியே பங்கயஞ்சேர் கைசெல்ல
மேதகையி னூடே விழிசெல்லப் — பாதம்
விழித்தார் முகம்நோக்கி மெய்யழகு செல்லச்
சுழித்தாடினுள் மதியாற் சூழ்ந்து."

என்று பரதசங்கிரக வெண்பாவிற் கூறியவாறு, கால் சென்றவழியே கை செல்லுமாகலின் காற்கிரியையின் முன்பு அபிநயக்கை கூறினுர். அபிநயமென்பது உள்ளத்திற் கருதிய பொருள்களை எல்லாம் சைகைகளின் மூலம் (சாடை) காட்டுவது.

"சொற் பொருளெல்லாம் கைமெய் துலக்கி
நிற்பது பாட்டவி நயமென வோது"

என்பது கூத்தநூல். அபிநயம், பரதத்திற் கூறப்படும். பாவ ராக தாளமென்னும மூன்றனுள் பாவ வகையைச் சேர்ந்தது. பாவம் அகத்தில் நினைப்பது. அபிநயம் – வினையம் எனவும்படும்.

"பாவப் பகுதி பகருங் காலை
அகத்தி னினைத்த ததுவா மிதனை
முகத்தாற் கரத்தா லசைத்துக் காட்டலஃ
தபிநய மென்றிங் கறையப் படுமே"

என்பது மரபு. அபிநயத்நிற்குரிய உறுப்புகளாகப் பரதசாத்திரத்திற் கூறப்படுவன கரம், சிரம், பதம், கண் முதலியனவாம். ஆனல் இந்நூல் ஆசிரியர் கரவகை ஒன்றே கூறினர். சிரம், கண், பதம் என்பவற்றால் எல்லாப் பொருள்களையும் அபிநயித்துக்காட்ட முடியாது. சில பொருள்களையே அபிநயித்துக் காட்டக்கூடும். கரவகைகளினல் உலகிலுள்ள எல்லாப் பொருள்களையும் அபிநயித்துக் காட்டல் கூடும். ஆகலின் ஒற்றைக்கையும் இரட்டைக்கையுமாகிய முத்திரைகளையே விரித்துக் கூறினர்.

"கையா லவிநயமுங் காட்டுதல்காண் காரிகையாய்
பொய்யாத நூலின் பொருள்" — பஞ்சமரபு

"தனிக்கை யிரண்டுந் தனித்து மிணைந்தும்
இயங்கல் கூத்த விரயத்தி னியல்பே"

"இருகையு மிணைந்த கூத்திவ் வுலகம்"

என்பதும் மரபு. சைகை அல்லது சாடையின் அடிப்படையில்தான் ஒற்றைக்கை முத்திரைகளும் இரட்டைக்கை முத்திரைகளும் அமைந்திருக்கின்றன. அபிநயக்கைகளில் ஒற்றைக் கைகள் முப்பத்து மூன்று.

அவை ஆண்கை 10, பெண்கை 8, அலிக்கை 6, பொதுக்கை 9. ஆக முப்பத்து மூன்று. இரட்டைக் கைகள் 15. இவற்றின் இலக்கணங்கள் சூத்திரங்களால் விவரிக்கப்படுகின்றன.

## தாளமரபு

### தாளம்

தாளம், பண், பா, பாணி என்னும் இசையுறுப்பினுள் ஒன்ருகவும்; பாவம், ராகம், தாளம் என்னும் மூன்றும் கூடிய நிருத்த உறுப்பினுள் ஒன்ருகவும் வருவது. ஆதலின் தாளம், இசை, நிருத்தம், என்னும் இரண்டினுக்கும் பொதுவானதாம். ஆதலின் இதனை இறுதியில் வைத்துக் கூறினர் என அறியக்கூடும்.

இசைப்பாடலுக்கும் ஆடலாகிய கூத்தினுக்கும் அடித் தளமாயிருப்பதனல் தாளமென்று பெயருண்டாயிற்று என்பர். தாளம் கைகளிஞற் கொட்டப்படுதலின் அதற்குப் பாணி என்றும் கொட்டு என்றும் பெயர்.

இசையும் கூத்தும் வரம்பு கடந்து செல்லும் ஆறுகள் போன்றவை. தாளங்கள் அவற்றின் கரைபோன்றவை.

"தாளம் கரையே தழுவிசை யாறே
ஆற்றின் போக்கே யவனவ ளாட்டம்"

"ஆட்டமும் பாட்டமும் அளவிடும் தாளே"

தாளம் ஆட்டத்தையும் இசையையும் அளவுக்கு உட்படுத்துவதுடன் அவ்விரண்டையும் அழகுற மிடுக்குடன் விளங்கச் செய்வதுமாம். தாளம் என்னும் சொல் வழக்கில் வரவே கொட்டு பாணி என்னும் சொற்கள் வழக்கொழிந்தன போலும் தாளக்கலை மிகவும் விரிவானது. அதன் சுருக்கமே ஈண்டுக் கூறப்படுகிறது.

"தாக்கிஞற் ருளமே யாம்" என்பது பஞ்சமரபு.

"வலக்கைத் தாக்கே சம்மியமாகும், இடக்கைத் தாக்கே தாளமாகும்" "உபயத்தாக்கே சன்னியபாதம்" என்பது பஞ்சமரபுரை மேற்கோட் சூத்திரம். தாளத்தில் இடக்கை தாழ்ந்தும் வலக்கை ஓங்கியும் நிற்கும். தாளம், கொட்டு, அசை, தூக்கு, அளவு என்னும் கால மாத்திரைகளையுடையது.

"கொட்டு மசையுந் தூக்கு மளவும்
ஒட்டப் புணர்ப்பது பாணி யாகும்"

என்றாராகலின், இவை மாத்திரைப் பெயர்கள். கொட்டு அரை மாத்திரை. அசை ஒரு மாத்திரை. தூக்கு இரண்டு மாத்திரை: அளவு மூன்று மாத்திரை எனக் கொள்க என்பார் அடியார்க்கு நல்லார்.

இவற்றின் தொழில் வருமாறு:— கொட்டாவது அமுக்குதல், அசையாவது தாக்கியெழுதல், தூக்காவது தாக்கித் தூக்குதல், அளவையாவது தாக்கினவோசை நேரே மூன்று மாத்திரை பெருமளவும் வருதலெனக் கொள்க என்பதும் அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரை, இங்ஙனம் வலக்கையும் இடக்கையும் தம்மில் கூடியும் பிரிந்தும் தொழிற்பட்டு வருவது தாளமாம். தாளங்களின் உயிர்நிலைகள் ம. தாளமானது காலம், மார்க்கம், கிரியை, அங்கம், கிரகம், சாதி, கலை, லயம், யதி, பிரத்தாரம் என்னும் பத்தினையும் உயிர்நிலைகளாகக் கொண்டிலங்குவது எனக் கூறப்படும்.

இசையையும் நிருத்தத்தையும் அளவிடுவது தாளமே. இவற்றின் விரிவு பல தாளநூல்களிற் காண்க. கைகளின் தட்டுதலால் நிகழும் தாளத்தின் வழியாகக் கால்களின் தட்டால் நிகழ்வது தாளச்சதியாம். பஞ்ச மரபுப் பாயிரக்காப்புச் செய்யுளுரையில் தாளமென்ற அதனல் வடதாளமும் தமிழ்த்தாளமுமென இரண்டு வகைப்படும். அவையெல்லாஞ் சொல்லுதுமென்றவாறு எனக்கூறியுள்ளதையும் அறிந்துகொள்க.

மற்றும் தாளமரபில் "செந்தமிழுக் கெண்பலமே" எனத் தமிழ்த் தாளக் கருவியிலக்கணங் கூறுதலினாலும் ஒரு பாடலில் "தென்சொல் வட சொல்லாலிட்ட திறநான்கும்" எனக் கூறுவதினாலும், அதனுரையில் "தமிழுக்குரித்து யாழ்" எனவும் தமிழுக்கு நரம்பேழு உள. அவை குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனவிவை எனக் கூறுதலினாலும் மற்றுமொரு பாடலில் "ஆரியமு மின்றமிழுக்கு ஆவனவும்" எனக் கூறுதலினாலும் அதனுரையில் ஆரிய நெறிக்குரியனவும் தமிழ் நெறிக்குரியனவும் மேலும் இவ்விரண்டிற்குமுரிய பண்கள் எனக் கூறப் படுவதனாலும், "ஆரியந்தமிழை யறியார் கூத்தின், வீரிய மறியா வெறுமைக் கூத்தர், என்று கூத்தநூல் கூறுவதனாலும் "ஆரியந் தமிழெனுஞ் சீர்நடம் இரண்டினும்" என அடியார்க்கு நல்லார் அரங்கேற்று காதையுரையில் மேற்கோள் காட்டுவதனாலும் ஆரியத் தாளவிசை நாடகங்களின் வழக்குமுறை தமிழகத்திற் புகுந்த காலத்தில் அவற்றை ஏற்றுக்கொண்ட அக்காலத் தமிழ் மக்கள் அவற்றின் வேருகத் தமக்குரிய தமிழ்த் தாளம், தமிழிசை, தமிழ் நாடகம் என்னும் மரபுகளை விடாமல் போற்றிவந்தனரென்பது புலனாகின்றது.

தாளக்கலை, மிகவும் விரிவானது. தாளம், கண்டம் குழல் யாழ்என்னும் இசைக்கருவிகளின் ஒலியளவினைப் புலப்படுத்துவதுடன் அவற்றோடு ஒத்திசைத்தியங்குவது ஆகும். சுருங்கக்கூறின் அது கூத்து, இசை, வாச்சியம் என்னும் மூன்றையும் பொருந்தி நின்று அவற்றுள் மிகுதியும் குறைவும் தோன்ருதபடி பாதுகாத்து நிற்பதாம். இதனை வடநூலார் லயம் என்பர். தாளங்கள் தேசிய தாளம், மார்க்க தாளம் என இருவகையாகக் கூறப்பெறும். அனுத்திருதம், திருதம், லகு என்னும் மூன்றுறுப்புகளாகிய தாளங்கள் தேசீய தாளம் எனப் பெறும். அவை முப்பத்தைந்தாம். தேசிய தாளங்கள் முப்பத்தைந்துமே வழக்கில் உள்ளன. அனுத்திருதம்,

***

திருதம், லகு, குரு, புலுதம், காகபதம் என்னும் ஆறு உறுப்புக்களாலான தாளங்கள் மார்க்க தாளங்கள் எனப்பெறும். அவை நூற்றெட்டாம். தாள உறுப்புகளில் திருதசேகரம், லகுசேகரம் எனும் ஈருறுப்புக்கள் சிற்சில இடத்துப் பயின்று வரப்பெறுகின்றன, திருதசேகரம் என்பது திருதமும், அனுத்திருதமும் கொண்டதாகும். அதுபோன்றே லகுசேகரம் என்பதும் லகுவும் அனுத்திருதமும் கொண்டதாகும். தாளம் கொட்டுபவர் நன்கு தெரிந்து உணர்ந்து கொட்டுதல் வேண்டும்.

தேசியம் மார்க்கம் என்னும் இருவகைத்தாளங்களில் தேசியம் பெரும்பாலும் இசையிற் பயில்வனவாமென்றும் மார்க்கம் கூத்தில் பயில்வனவாமென்றும் கூறுவர். இவற்றுள் நூற்றெட்டுத்தாளம் வகுத்தவர் முத்தமிழ் முனிவராகிய அகத்தியனாரென்றும் அவை அகத்தியம் என்னும் தமிழிலக்கண நூலில் கூறப்பட்டன என்றும் சிற்சில பாடலடிகளால் தெரியவருகின்றது.

“பெத்தாபரணம் கோல்பின் பணிகோல்
வைத்தா ரகத்தியர் மாத்திரை யஞ்சோ”

நூற்றெட்டுத் தாளமரபு

“அகத்தியன் சொன்ன வருந்தமிழ் தன்னால்
தொகுத்தவை நூற்றெட்டுத் தாளம்” தாளமரபு

நூற்றெட்டுத்தாள விவரங்களையறிய விரும்புவோர் கீழ் வரும் தாள அங்கங்களையும் அவற்றின் உருவங்களையும் குறிகளையும் மாத்திரைகளையும் தாள சூசனைகளையும் நன்கு தெரிந்திருத்தல் வேண்டும்.

| | அங்கம் | உருவம் | குறிகள் | மாத்திரை |
|---|---|---|---|---|
| 1. | விராமம் அனுத்திருதம் | பிறைச்சந்திர வடிவம் | ◡ | கால் |
| 2. | துருதம் | வட்டம் | ○ | அரை |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | லகு | பாணம் (அம்பு) |  | ஒன்று |
| 4. | குரு | வில் |  | இரண்டு |
| 5. | புலுதம் | ஒடிந்த வில்மேல் (பாம்பு) சுழித்தல் |  | மூன்று |
| 6. | காகபதம் | புள்ளடி |  + | நான்கு |

அங்கப்பிரமாண தாளங்களுக்குச் சூசனைகள் வருமாறு:

விராமம் — இடது உள்ளங்கையில் வலக்கையின் நான்கு விரல்களையும் வைத்து ஒற்றுதல் (ஓரெண்) (அனுத்திருதம்)

துருதம் — ஒற்றின கையை மேலே நாலங்குலம் தூக்குதல். (தட்டுசேர்த்து இரண்டெண்)

லகு — வலக்கையை எட்டங்குலம் உயர மேலே தூக்கித் தட்டுதல். (தட்டுசேர்த்து நான்கெண்)

குரு — தட்டின கையை எட்டங்குலம் சுற்றி இறக்குதல். (தட்டுசேர்த்து எட்டெண்)

புலுதம் — தட்டின கையை எட்டங்குலம் சுழித்து எட்டங்குலம் இறக்குதல். (தட்டுசேர்த்து பன்னிரண்டெண்)

காகபதம் — வலக்கையை எட்டங்குலம் முறையாக இடமும் வலமும் மேலும் கீழுமாக வீசிக் காட்டுதல். (தட்டுசேர்த்து பதினாறெண்) இம்மரபில் விரல் எண்ணிப் போடக் கூடாது. நெஞ்சத்தில் சதியை நினைந்து அங்கமாகக்கொண்டு போடுதல் வேண்டும் என்பர்.

## காற்கிரியை மரபடுத்து ஆடரங்கிலக்கணம்

நட்டுவன் பயில்விக்க மகளிர் நாட்டியமாடுவது ஆடரங்கிலாதலின் ஆடரங்கிலக்கணம் கூறுகின்றார். இப்பகுதி, பிற்சேர்க்கையாக கருதப்பெற வேண்டும். பிற்சேர்க்கையாகவுள்ள இப்பகுதியில் ஆடரங்கின் அகல நீளமாகிய அளவுகளும், அரங்கிலமைத்தற்குரிய உத்தரம் மேற்கைகள் தகடு சாளரம் முதலியவைகளும் நாடகவரங்கில் நிற்றற்குரிய தெய்வங்களும், மத்தளம் முதலிய இசைச் சிறப்பும் மேற்கட்டி இளநீர்க்குலை பழம் வாழைத்தார் முதலிய அலங்காரங்களும் நிருத்தத்திற்கு உரிய மகளிரிலக்கணங்களும் தெய்வ பூசையும் வாத்திய பூசையும், நாடகவரங்கில் நாடக மகளிரை நிறுத்தி அவர் முன்பு சயந்தனல் பெற்ற மூங்கில் தண்டத்திற்கு நீராட்டி பட்டாடை மலர்மாலை முதலியவற்றுல் அலங்காரம் செய்து அதனையெடுத்துக் கொண்டு வாத்திய ஒலிகள் முழங்க ஊர்வலம் வந்து அத்தண்டத்தைக் கையில் பிடித்து நடனம் செய்வித்தலும், பின்னர் விருந்து செய்வித்தலும் அன்று தொட்டு நாடகமகள் பாவராக தாளங்களுடன் நிருத்தம் புரிந்து வாழ்தலும் ஆகிய செய்திகள் கூறப்பெற்று உள்ளன.

### பிரம்பு

நாடகவரங்கில் நாட்டியம் பயில்விக்கும் ஆடல் ஆசிரியனுக்கு நட்டுவன் என்று பெயர். அவன் கையில் பிரம்பு வைத்திருப்பது அவனுக்குரிய முக்கியமான அடையாளம். அவன் பிரம்பின் மூலமாகவே சுட்டியும் தொட்டும் காட்டி நாடகம் பயில்விப்பான். அவனுக்கு உரிய பிரம்பின் பெருமையும் அளவும் கூறுவது பிரம்பு இலக்கணப் பகுதி. இதில் நட்டுவனுக்குரிய பிரம்பின் அளவு கூறுமுகத்தானே நந்தி பஞ்சாட்சரத்தோர் ஆகிய ஏனையோருக்குமுரிய பிரம்பினளவும் உடன் கூறப்பட்டுள்ளது. இப்பிரம்பினை சிலப்பதிகார

அரங்கேற்றுகாதை, நடனாதி வாத்திய ரஞ்சனம் பரத சூடாமணி என்னும் நூல்கள் (தண்டியம்) தண்டம் என்றும் கூறுகின்றன.

## முதல் தாள மரபு

பஞ்சமரபில் கூறப்படும் தாள மரபுகள் மூன்றனுள் முதலிற் கூறப்படுவது வெண்பாவாலாகிய தாளமரபு. இதன்கண் தாளத்தைப்பற்றியறிந்துகொள்ளவேண்டிய பொதுவான செய்திகள் பல கூறப்பட்டுள்ளன. அவைகள் காலங்கள், மாத்திரை வடிவங்கள், தாளக் கிரியைகள், தாளப் பெயர்க்காரணம், சுத்தம், சாளவம், தமிழ் என்னும் மூவகைத் தாளக்கருவிகள் முதலிய பல பொருள்களாம்.

## அட்டகண மரபு

குரு லகுக்களான மூன்றுறுப்பினையுடைய சொற்கள் கணம் எனத் தாளநூலிற் கூறப்பட்டுள்ளது. அவற்றுள் ஒற்றுக்கொள்ளப்படுவதில்லை. குரு இரண்டு மாத்திரை. லகு ஒரு மாத்திரை. கணங்கள் எண்வகைப்படும். அக்கணங்கள் அட்டகணங்கள் எனப்பெறும். அவை பகணம் மகணம் யகணம் நகணம் செகணம் சகணம் ரகணம் தகணம் என்பனவாம். இவற்றுள் முதல் நான்கு அமிர்தகணம், பின்னர் நான்கும் விடகணம்.

தாள வாச்சிய கீதங்களில் அமிர்தகணம் முதற் சொல்லாக வரின் நல்ல பலன் காட்டும். விடகணம் முதற் சொல்லாக வரின் தீய பலன் காட்டும். அவ்வப் பகுதிகளைக் நன்கு ஊன்றிக் கற்றுணர்க.

## நூற்றெட்டுத் தாள மரபு

இந்நூலின்கண் சூத்திரங்களாலாகிய நூற்றெட்டுத் தாள மரபுகள் இரண்டுள்ளன. அவற்றுள் சச்சபுடம்

முதல் பெத்தாபரணம் இறுதியாகிய நூற்றெட்டு தாள இலக்கணங்கள் கூறப்பட்டுள்ளன. முதற்கூறும் தாள மரபில் சூத்திரங்கள் தோறும் முதலில் தாளத்தின் பெயரும் அவ்வத்தாளத்திற்குரிய மாத்திரை குறிக்கும் அனுத்திருதம், திருதம், லகு, குரு, புலுதம், காகபதம் என்னும் அங்கங்களின் பெயர்களும் கூறப்பட்டு உள்ளன. சூத்திரங்களின் இறுதிதோறும் அங்கங்களின் குறியீடுகளும் குறிக்கப்பெற்றுள்ளன. பிற்சேர்க்கையாக உள்ள இரண்டாவது தாளமரபில் சூத்திரங்கள்தோறும் தாளப்பெயர்களும் தாளத்திற்குரிய அங்கங்களும் கூறப் படுவதுடன் தாளத்திற்குரிய மாத்திரைத் தொகைகளும் கூறப்பெற்றுள்ளன.

இவையன்றிப் பிற்சேர்க்கையாகச் சேர்க்கப்பெற்ற பதினேழு விருத்தப்பாக்கள் உள்ளன. அவற்றுள் முதலாறு விருத்தப்பாக்களில் தாளப் பெயர்களும் மாத்திரைத் தொகைகளும் கூறப்பெற்றுள்ளன. அதனை அடுத்துச் சேர்க்கப்பெற்றுள்ள பதினொரு விருத்தப் பாக்களில் மாத்திரை வகையுள்ளடங்கும் தாளத் தொகைகள் கூறப்பெற்றுள்ளன.

தாண்டவப் பொதுவியல் ஒழிபு மரபு என்பது பிற்சேர்க்கையாகும். அதனையடுத்த இன்றியமையாத சிற்சில பாடபேதங்களும் குறிப்புக்களுமான பகுதி, இப்பஞ்சமரபு கற்பார்க்கு ஏற்றவகையில் யான் அவ்வப்போது பற்பல நூல்களில் குறித்துள்ளதைக் குறித்ததாகும். அப்பகுதி மிக்க பயனுடையது.

பிற்சேர்க்கையில், நூற்றெட்டுத்தாள மற்றொரு நூற்பாமுறை முழுவதும் சேர்த்துள்ளேன். அங்கங்களை அங்கு மீண்டும் குறித்திலேன். தாளமாத்திரை விருத்தப் பாக்களில் வரும் தாளங்களை ஆங்காங்கு குறித்து உள்ளேன்.

முந்து நூல்களில் இசை ஏழெனப்படும் எனும் குறிப்புக்கள் பலவே. ஆயினும் இசை, ஒன்று மூன்று

ஐந்து ஏழென அறியப்பெற்றது என்பதும் இசை அறிஞர்களின் கருத்தாகும்.

குழல்வழி, யாழ்வழி எழுந்ததே பழந்தமிழிசை என்ற கருத்தும், யாழ்க் கருவிகளின், நரப்படைவால் உரைக்கப்பட்ட பதினோராயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்ருகிய ஆதியிசைகள், என்ற சிலப்பதிகார உரைக் குறிப்பும் நரப்படைவால் நிறந் தோன்றப் பண்ணப்படாநின்ற பண்ணும், பண்ணியல் திறமும், திறமும், திறத்திறமும் என்பதாம், என்னும் குறிப்பும் பிறவும் நன்கு அறிந்துணர இப்பஞ்சமரபு மேலும் வழிகாட்டும் என்பதே எனது கருத்தாகும்.

ஆடல் என்ற சொல், எல்லாக் கூத்துக்களும் என்ற பொருளைத் தருவது என்பதும், அதுபோன்றே பாடல என்ற சொல், பண்ணல் முதலிய பாடல் இயல்புகளும், எனும் சிலப்பு உரைக்குறிப்பும் 'முதலிற் பாடுமிடத்து மகரவொற்றிஞலே நாதத்தை உச்சரித்து அதனைத் தொழில் செய்யுமிடத்துக் குற்றெழுத்தாலும், நெட்டு எழுத்தாலும், தென்ஞ தெஞவென்று பாடப்படும், காட்டாளத்தி, நிறவாளத்தி, பண்ஞளத்தி என்பன இப்பஞ்சமரபால் மென்மேலும் அறிந்துகொள்ளக்கூடும். ஆளத்தியினையே பிற்காலத்தார் ஆலாபனம் என்றனர் என இசைவல்லுநர் கூறுவர்.

"மூச்சு நின்றியங்குதற்குக் காரணம் ஆகிய மூலாதாரத்தில் இருந்து எழும் மூச்சினைக் காற்ருல் கிளப்பி கருத்தொடு இயங்கச் செய்து அதனுல் பிறக்கும் இசையொலிகளை இரண்டு தான நிலைகளாகப் பகுத்துக் கொண்டு பண்களின் தன்மையைத் தோற்றுவிக்கப் பெற்ற இசையிலக்கணம் வழுவாது இசைக்கப்பட்ட மிடற்றுப் பாடல்."

மெலிவொலி, வலிவொலி இவை இரண்டும் இரண்டு தானமெனப்படும். ஸ்தாய் எனவும் கூறப்படும் போன்ற

குறிப்பும் பஞ்சமரபில் வரும் மேற்கோள் நூற்பாக்களால் விளங்கும். நிற்க.

பழைய நூல்கள் யாதாயினும் ஒன்றைப் பதிப்பித்தல் என்பதுபற்றி பதிப்பாசிரியர்கள் என்பவர்க்கே அதன் இடர்ப்பாடுகளும் பிறவும் விளங்குவதாகும். அஃதும் ஏட்டுச்சுவடிகளில் இருப்பதனை முதற்பதிப்பு, இரண்டாம் பதிப்பு எனப் பதிப்பிக்குங்கால் பதிப்புக்குப் பதிப்பு திருத்தமாகிக்கொண்டு வருவதே இயல்பு. இப்பஞ்சமரபு எனக்குக் கிடைத்தது ஒரே சுவடியாகும். ஒப்புநோக்க வேறு இல்லை என்பதை அறிதல் வேண்டும். பிரதி செய்வதிலும் ஏடெழுதுவோராலும் ஏற்பட்ட பிழைகள் அச்சேறிய பின்னரே பல முறை கற்றுத் தொடர்ந்து பயின்று வந்தாலன்றி திருத்தத்திற்கு வழிமுறை விளங்காது எனவும் அறிதல் வேண்டும். அச்சுப்படி ஒப்பு நோக்குபவராலும் அவ்வப்போது நேரும் சிற்சில இடர்ப்பாடுகள் தோன்றுவது இயல்பு.

ஓரளவு இப்பஞ்சமரபு பற்றி யான் அறிந்தவற்றை சிலவே கூறி முடித்துள்ளேன். இந்நூல் இசைநூல் என்பதை யான் நன்கே தெரிந்து ஒல்லும் வகையில் குறிப்பு எழுதியுள்ளேன். இசைவல்ல புலவர்கள் நன்கு கற்று ஆராய்ந்து கொள்வன கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உளது. இத்தகைய நூல் அழிவுறாது மீண்டும் தமிழ்மக்கள் கையில் உலாவுகின்ற பெருமையே எனக்குப் பெருமை தருவதாகும். இதற்கு உதவிபுரிந்த அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றி.

வேலம்பாளையம்,<br>
எழுமாத்தூர் வழி,<br>
ஈரோடு வட்டம்.<br>
2—10—1975.

இங்ஙனம்,<br>
வித்துவான்<br>
**வே. ரா. தெய்வசிகாமணி**

# பஞ்சமரபு

## இரண்டாம் பகுதி

மரபு ௩

## நிருத்தமரபு

### நிருத்தம் ஏழாவன

123. குன்றவில்லி யேவக் குரவ னருட்பாதன்
மன்றறிய வோதும் வடநூலில் — நின்ற
நிருத்தமுத லேழினையும் நேர்தமிழாற் கூறக்
கருத்துடைய வைங்கரனே காப்பு.

என்னுதலிற்றோவெனின்? முந்து நூல்களுட்கூறப்பட்ட நிருத்தவகை ஏழினையும் நேர்ந்த தமிழாற் கூறல் நுதலிற்று. ௧

124. அரிய திருத்தாண் டவம்நிருத்த நாட்டியம்
குரவைவரி கோலம்வகை கூத்தேழ் — பரவுமிது
சாந்தி விநோதம் வகைக்கூத் தெனமூன்று
ஓர்ந்துணர்ந்தோ ராய்ந்த வுரை.

என்னுதலிற்றோவெனின்? ஏழுவகைக் கூத்தின் இயல்புணர்த்துதல் நுதலிற்று. அவை வருமாறு.

"தாண்டவ நிருத்த நாட்டியங் குரவை
வரியே கோலம் வகைக்கூத் துட்பட
வரிமலர்க் கண்ணாய் வன்றேழிற் கூத்தே"

என ஏழுவகைப்படுமெனக் கொள்க.

அவை மூன்று வகைப்படும்.

> **"சாந்தி விநோதம் வகைக்கூத் தென்ன**
> **முந்திய வெல்லா மூவகைப் படுமே"**

என்றாராகலின், அவற்றுள் தாண்டவமாவது சொக்க தாண்டவம், ஆனந்தத் தாண்டவம் என இரண்டு வகை ஆகிய நூற்றெட்டுக் கரணக்கூத்தும் எனக்கொள்க. இவை பரமேசுவரன் திருமுன்பு அல்லதாடப் பெறுவெனக் கொள்க.

நிருத்தமாவது,

தேசி வடுகு சிங்களமென்னும் மூவகைக் கூத்தும் எனக்கொள்க.

இவை நின்றது தேசி.

அசைந்தது வடுகு.

நடந்தது சிங்களமெனக் கொள்க.

நாட்டியமாவது,

இயலுமிசையுந் தழுவிய நாடகமென்றவாறு. இவை தாண்டவம் நிருத்தம் நாட்டியமென வரும். இம்மூவகைக் கூத்தும் சாந்திக்கூத்தேயெனக் கொள்க.

இனிக் குரவையாவது,*

கண்ணனை நடுநிறுத்திக் கோபிகைகள் தாம் தம்முடைய கைகளைக் கோத்துக்கொண்டு அவன் வீரமும், அழகும் பாடியாடியது என்றவாறு.

---

* இருவகை, பல்வகையென்னும் விலக்கோடரிய பதினோராட்டுக் குரவை வரி, சொக்கமவிநய நாடகமென்றிவற்றுற் றக்கவனே ஆடலாசான் குரவை. எழுவரேனும், எண்மரேனும், ஒன்பதின்மரேனும் கைகோத்தாடுங் கூத்து. வரிக்கூத்தின் ஒருறுப்பு. விநோதக்கூத்து ஆறனுள் ஒன்று.

— *சிலம்பு பதிகவுரை*

வரியாவது,

கொம்பு துருத்தி கொடியம்மானை பந்துவில் பத்திர முதலானவிவற்ருல் ஆடப்படும் பெண்கோலம் என்றவாறு.

கோலமாவது,

ஈழம், அராளம், மறம், சித்து, சோனகம் இவை முதலாயின. பல நாட்டின் சேதியைக் காட்டிப் பல கோலமாகப் பாடியாடப்படும் ஆண்கோலமென்றவாறு.

இவை,

'குரவை வரியே கோல மூன்றும்
விரவிய விநோத மாகு மென்ப'

இனி வகைக்கூத்தாவன,

க. அல்லியக்கூத்து
உ. குடைக்கூத்து
ங. குடக்கூத்து
ச. பாண்டரங்கம்
ரு. மறக்கூத்து (மற்கூத்து)
சா. கொடுகொட்டி
எ. பாவைக்கூத்து
அ. கடையம்
கூ. பேடு
ய. துடி
யக. மரக்கால் எனக்கொள்க.

'பதினே ராடலின் பகுதி யெல்லாம்
அதிரா வகைக்கூத் தாகு மென்ப'

இந்த எழுவகைக் கூத்தின்விரியும், மூன்றுவகைப்படுத்தி ஆராய்ந்த பெரியோர்களாலுரைக்கப்பட்டதென்றவாறு உ.

125. **துடிகடையம் பேடல்லி மல்லு மரக்கால்**
**குடைபாண் டரங்கங் குடமே — கொடியிடையாய்**
**பாவை கொடுகொட் டியாகப் பதினொன்றும்**
**மேவிய வாட லிவை.**

என்னுதலிற்றோவெனின்? முற்கூறிய பதினொரு ஆடல்வகையினை உணர்த்துதல் நுதலிற்று.

எனப் பதினோராடலுங் கண்டுகொள்க.

**கடையமயி ராணிமரக் கால்விந்தை கந்தன்**
**குடைதுடிமால் அல்லியமற் கும்பங் — துடியிடையீர்**
**(சுடர்விழியாய்)**
**பட்டமதன் பேடுதிருப் பாவையரன் பாண்டரங்கங்**
**கொட்டிபதி னொன்றுங் கூத்து.**

---

மூவகைக் கூத்திற்குமுரிய, முழவு இசை தாளம்,
தாண்டவத்திற்குத் தாளமே முக்கியமானது.

அகமாதிக்கமாகிய தாண்டவத்திற்கு இசையும் அபிநயமும் முக்கியமில்லை. தாளமே முக்கியமானது. தாளத்தை அடிப்படையாகக் கொண்டதே தாண்டவம். இறைவனுடைய தாண்டவத்தில் இருந்து தாளம் பிறந்ததாகப் பரத நூல் கூறுகிறது.

தாளஞ் சனித்தது தாக்கிய போதரன்ருள்தனிலே.
— சொக்கநாத பரதம்

தாண்டவத்திற்குத் தாளமே முக்கியமானது. என்பது
— சொக்கநாத பரதம்

சாதிவருஞ் சச்சபுடந் தாளமொரு நூற்றெட்டும்
பூதலமெண் புட்பபிர பாத — மீதுறவே
ஓங்கு தகாரத் துயர்தாளத் தொவ்வொன்ருய்த்
தாங்கிவரச் சொக்கர்நடித் தார்
அதிமார்க்கச் சாரியா நந்தத் தாளமுடன்
சோதிநடஞ் செய்தான் தொகுத்து. — சொக்கநாதர் பரதம்

மேல்வரும் வெண்பாக்களில் தாண்டவத்திற்குத் தாளமே முக்கியமாதலின் ஆதி முதல் தெண்டபரத மீருகிய பதினுறு தாண்டவங்களில் ஒவ்வொன்றிற்குமுரிய தாளங்கள் கூறுகின்ருர்.

பாண்டரங்கம் பாவை (பாவம்) கொடுகொட்டி இந்த மூன்று கூத்துஞ் சிவனாலாடப்பட்டன.

பாண்டரங்கம் கொடுகொட்டி என்னுமிரண்டு கூத்துஞ் சிவனாலாடப்பட்டன.

குடக்கூத்து, மற்கூத்து, அல்லியக்கூத்து இந்த மூன்றும் மாயவனாலாடப்பட்டன. (மாயவன்–கண்ணன்)

அல்லியம், மல், குடம் என்னுமூன்று கூத்தும் திருமாலாலாடப்பட்டன.

பாவைக்கூத்து இலக்குமியால் (லட்சுமி) ஆடப் பட்டது.

குடை, துடி யென்னுமிரண்டு கூத்தும் முருகனால் ஆடப்பட்டன.

---

பதினாறு தாண்டவமென்பது,

உலகெனுங் கலைகள் ஈரெட்டைமேவி
ஒப்பிலா ஆநந்தம் முதலா ஏதமில் தாண்டவம்
பதினாறும் ஏற்கையாய் ஆடிடும்.

— அபிநயத்தர்ப்பணம் 2. செய்யுள்

இப்பாடலிற் கூறிய ஆதி முதலாய பதினாறு தாண்டவங்களையும் சிவன் முன்பு தில்லைமன்றிலியற்றியதாகக் கூறுவதுண்டு.

ஆதியலங்கார ... ... ... ... ... ...
இத்தாரணிவாக் ... ... ... ... ... ...

பரிதசங்கரகம் 32, 33ஆம் பாடல்

இறைவன் செய்த அகமார்க்கச் சாதியாகி தாண்டவம் ஆதிமார்க்கச் சாதி முதலிய ஒன்பது வகையான தாளங்களுடன் கூடியதாகக் கூறுவர். (சாதி–சாரி)

ஆதிமார்க்கச்சாதி யாநந்தத் தாளமுடன் (ஆதிமார்க்கச்சாரி)
சோதிநடஞ் செய்தான் தொகுத்து.

— பரதசங்கிரகம்

துடிக்கூத்துச் சத்தமாதர்களாலாடப்பட்டது

பேடிக்கூத்து காமனலாடப்பட்டது.

மரக்காற்கூத்து துர்க்கையாலாடப்பட்டது.

கடையக்கூத்து அயிராணியாலாடப்பட்டது.

துடிக்கூத்தும் குடைக்கூத்தும் (சுப்பிரமணியரால்) முருகனல் ஆடப்பட்டன.

ஆகப் பதினெரு (பதின்மூன்று) கூத்துள் தேவதைகள் தனித்தனியே வகை வகையால் ஆடினமையால் இவை வகைக்கூத்து என்று வழங்கப் படும் என்றவாறு.

ஆதிபர தத்திலக மார்க்கந் தன்னில்
அடைந்தபொரு ளாதியனுப் பிரகாச பீடம்
சீதமரு வியபுட்பாஞ் சலிபு யங்கம்
தேசியுடன் தேசியொத்துத் தேவர் கண்ணும்
நீதிநிழல் வைப்புவகுப் புடனே வாக்கியம்
நிறைகவுத்த மொடுதுணுக்கு நேராம் தெண்ட
பாதமிவை பதினறும் அரன்கொண்ட நடத்தைப்
பரதமுனி யுலகதனில் பரப்பினனே. எ.்.து

— அரன்கொண்டநடம் தாண்டவம்

ஆதியான பரத சாத்திரத்தில் அகமார்க்கமாகிய பொருள் விரிவானது.

---

* துடி சத்தமாதராடலுமாம். எழுவகை நங்கைமாராடுந் துடியே.
— பிங்கலம் 1455.

அகமார்க்கப் பொருள் பதினறு (பொருளாதிக்கும்) விருத்தம்,
அகமார்க்கப் பொருளாதி பதினறு விருத்தம்,

க ஆதி
உ. அனு
௩. பிரகாசம்
௪. பீடம்
௫. புட்பாஞ்சலி
௬. புயங்கம்
௭. தேசி
௮. ஒத்து
௯. நீதி
௰. நிழல்
௰௧. வைப்பு
௰௨. வகுப்பு
௰௩. வாக்கியம்
௰௪. கவுத்தம் (கவுத்துவம்)
௰௫. துனுக்கு (துணுக்கு)
௰௬. தெண்டபரதம்

இவை பதினாறு விதமாக அரனார் கொள்ளப்பட்ட நிருத்தத்தைப் பரத முனியானவன் உலகு உள்ளோர் அறிய விரித்துரைத்தானென்றவாறு. ௩.

126. ஆதிதனக் காதியர் மாவன்ன பின்னமுடன்
ஓதும் லளிதை யுயர்சட்டம் — யோதத்
தனிசரப லீலை யரங்கமுட னுத்தீக்
கனமுடனே தீபகமாங் காண்.

என்னுதலிற்றோவெனின்? ஆதியென்னும் தாண்டவத்திற்குரிய தாளங்களுணர்த்திற்று.

௧. ஆதிதாளம்
௨. வன்னபின்னம்
௩. லளிதை

௪. சட்டம்
௫. சரபலீலை
௬. அரங்கம்
௭. உத்தீக்கணம்
௮. தீபகம்

என்னுமெட்டுமாம். ௪.

127. அனுவுக்குக் காருதியு மாய்தற் பனமுங்
கனமாங் கிரீடை குடுக்க — மினமாகுங்
குந்த முடனே குளிரிலகு சேகரமு
குந்தமிவை யேழுங் குறி.

என்னுதலிற்றோவெனின்? அனுவென்னும் தாண்டவத்திற்குரிய தாளங்களுணர்த்திற்று. அவை,

௧. காருகி
௨. தற்பணம்
௩. கிரீடை
௪. குடுக்கம்
௫. குந்தம்
௬. இலகுசேகரம்
௭. முகுந்தம்

என்னுமேழுமாம். ௫.

128. பிரகாசமரங் காபரணம் பின்னி ரதிதாளம்
தருமா துதியாங்கந் தன்னோ — டுகாதுவரும்
நிச்சா ருகம்பங்கம் நேருமிரு மூன்றுமென
வைச்சார் பொதியமுனி வன்.

என்னுதலிற்றோவெனின்? பிரகாசமெனும் தாண்டவத்திற்குரிய தாளங்களுணர்த்திற்று.

க. அரங்காபரணம் (அரங்கபாசம்)
உ. இரதிதாளம்
ங. துதியங்கம்
ச. துரங்கம்
ரு. நிச்சாருகம்
சா. அபங்கம்

என்னும் ஆறுதாளமெனப் பொதியமுனிவன் உரைத்தானெனக் கொள்க. சா.

129. பீடமே சச்சபுடம் பேசரிய செம்படையும்
நாடுமிடை யொத்துடனே நான்முகனுந் — தேடும்
பெரியதொரு காரிகையும் பின்ன சதுமுகனும்
கருணையதி சூதியாங் காண்.

என்னுதலிற்றோவெனின்? பீடதாண்டவத்திற்குரிய தாளங்களுணர்த்திற்று.

க. சச்சபுடம்
உ. செம்படை
ங. இடையொத்து
ச. நான்முகன்
ரு. காரிகை
சா பின்னசதுமுகன்
எ. கருணை
அ. அதிசூதி

ஆகத்தாளம் எட்டெனக் கொள்க. எ.

130. புட்பாஞ் சலிபார்ப் பதிலோ சனன்பொருந்தும்
நட்பான கோகுலமு நாடுமே — தட்ப
மணிகண்ட கங்காள மாமிராச சூடா
மணியுடன்மாத் தாண்டமென வை.

என்னுதலிற்றோவெனின்? புட்பாஞ்சலி தாண்டவத்திற்கு உரிய தாளங்களுணர்த்திற்று.

க. பார்ப்பதிலோசனம்
உ. கோகுலம்
ங. கண்டகங்காளம்
ச. இராசசூடாமணி
ரு. மாத்தாண்டன்

ஆகப் புட்பாஞ்சலிக்குத் தாளம் அஞ்செனக்கொள்க.
அ.

131. புயங்கந் தனக்குப் புகல்சமதா ளத்தோ
டியங்குசிங்க னுதனீ டெங்கி — வியன்கொடுகம்
வைத்தா னிவைநான்கும் வன்பொதிய மாமுனிவ
னித்தா ரணிமகிழ வே.

என்னுதலிற்றோவெனின்? புயங்கத் தாண்டவத்திற்கு உரிய தாளங்கள் உணர்த்திற்று.

க. சமதாளம், (சத்ததாளம்)
உ. சிங்கநாதன்
ங. டெங்கி
ச. துகதாளம்

ஆகப் புயங்கத்துக்கு நான்கு தாளமெனக் கொள்க. சூ

132. தேசிகெச லீலை திரிபின்னம் நாந்தியுடன்
மாசிலிடோம் புள்ளி மகரந்தம் — நேசந்
தருதாள மைந்தெனத் தண்பொதியந் தன்னில்
வருமா முனியுரைத்த வாறு.

என்னுதலிற்றோவெனின்? தேசி தாண்டவத்திற்குரிய தாளங்கள் உணர்த்திற்று.

க. கெசலீலை
உ. திரிபின்னம்
ங. நாந்தி
ச. டோம்புள்ளி
ரு. மகரந்தம்

ஆகத் தேசிக்குத்தாளம் ஐந்தெனக் கொள்க. ய.

133. **தேசியொத்துக் காண்பாஞ் செகச்சம்பை யும்புவியில்**
**நாசமில்லா வாழன்ன நாதமுடன் — நேசந்**
**தருசன்னி மாசனையுந் தாவுமே கத்தாளந்**
**துருதசே கரமுமெனச் சொல்.**

என்னுதலிற்றோவெனின்? தேசியொத்துத் (ஒத்து) தாண்டவத்திற்குரிய தாளங்களுணர்த்திற்று.

க. செகசம்பை
உ. அன்னநாதம்
ங. சன்னிமாசனை
ச. ஏகத்தாளம் (எக்கதாளம்)
ரு. துருதசேகரம்

ஆகத் தேசியொத்துக்குத் தாளம் ஐந்தெனக் கொள்க. யக.

134. **நீதி யிரச்சு நிபஞ்சிலக்கு மீசன்மலர்**
**மரதே பிரகாச மட்டமுடன் — ஓதுமரங்**
**கப்பிர தீபகம் விடமகங் காளத்தோ**
**டப்பணிசொற் பூரணகங் காளம்.**

என்னுதலிற்றோவெனின்? நீதித் தாண்டவத்திற்குரிய தாளங்கள் உணர்த்திற்று.

க. இரச்சுகம்
உ. இலக்குமீசன்

௩. பிரகாசமட்டம்

௪. அரங்கப்பிரதீபகம்

௫. விடமகங்காளம் (விட்டிமகங்காளம்)

௬. பூரணகங்காளம்

ஆக நீதிக்குத் தாளம் ஆறெனக் கொள்க. (ஏழெனக் கொள்க) ௰௨.

இரச்சுவென்பது ஆதிதாளமென்றறியவும்.

135. நிழல்வீர விக்கிரமம் நேயத் துடனே.
(தார்ந்துடனே)
எழில்சேர் வனமா லிகையும் — அழகா
யுளவசந்த தாள மொருமூன்று மென்றே
வளமை யுடனுரைத்தான் மால்.

என்னுதலிற்றோவெனின்? நிழலென்னுந் தாண்டவத்திற்குரிய தாளங்களுணர்த்திற்று.

௧. வீரவிக்ரமம்

௨. வனமாலிகை

௩. வசந்தம் (வசந்ததாளம்)

ஆக நிழலுக்கு மூன்று தாளமெனவறிக. ௰௩.

136. வைப்புக் கிராசதா ளத்துடனே மாமயிலே
முப்புவியெண் மல்லிகா மோதகமுந் — தப்பாமற்
கற்றலி லம்புடனே காற்கடந்த தாளமுடன்
நற்றதொரு தாளமுநான் காம்.

என்னுதலிற்றோவெனின்? வைப்புத் தாண்டவத்திற்கு உரிய தாளங்கள் உணர்த்திற்று.

௧ இராசதாளம்

௨ மல்லிகாமோதகம்

ங. இலம்பகம்
ச. அடதாளம் (அடாந்தாளம்)

ஆக வைப்புக்குத் தாளம் நான்கெனக் கொள்க. ௰ச.

137. வகுப்பு விலோகிதம்பின் வாழுஞ்சீ ரங்கந்
தகைப்புடைய தோர்மதன தாளம் — மிகப்பாவோர்
நண்ணுதிரி யச்சிரம்பின் னான்கும்வரு
மென்றுரைத்தார்
தண்ணளிசேர் கும்பமுனி தான்.

என்னுதலிற்றோவெனின்? வகுப்பென்னுந் தாண்டவத்திற்குரிய தாளங்களுணர்த்திற்று.

க. விலோகிதம்
உ. சீரங்கம்
ங. மதனதாளம்
ச. திரியச்சிரம்

ஆக வகுப்புக்குத் தாளம் நான்கெனக் கொள்க என்றவாறு. ௰ரு.

138. வாக்கியஞ்சீனந்தனஞ்சொல்வாழ்பிரிதிசிங்கனந்தன்
தாக்கியவா ரோகிமட்டந் தன்னுடனே—வாக்கினுற்
சாற்றும் பரிக்கிரமம் சட்பிதா புத்திரிகம்
ஏற்றமிரு மூன்றுமா மெண்.

என்னுதலிற்றோவெனின்? வாக்கிய தாண்டவத்திற்கு உரிய தாளங்கள் உணர்த்திற்று.

க. சீனந்தனம்
உ. பிரிதி
ங. சிங்கனந்தன்
ச. ஆரோகிமட்டம்

ரு. பரிக்கிரமம்

சு. சட்பிதாபுத்திரிகம்

ஆக வாக்கியத்திற்குத் தாளம் ஆறெனக் கொள்க.
௰சு.

139. கவுத்துவமுக் கோலோரொற்றுக் காண்செம்
படையன்
றுவைத்தா ஞடுமதை யோர்ந்து — பவித்திரமாய்
ஆடினுள் காளியிதற் காகவுளச் சூதாக
ஆடினுள் வாடியு னி.

என்னுதலிற்றோவெனின்? கவுத்துவ தாண்டவங்களுக்கு உரிய தாளங்களுணர்த்திற்று.

க. முக்கோல்

உ. ஓரொற்று

ந. செம்படை

ஆக மூன்றும் அமைந்த தாளங்கள் கவுத்துவத்திற்கு உரியனவெனக் கொள்க. ௰எ.

140. துணுக்குச்சங் காப்பிரியஞ் சொற்கமல லோசனன்
கணுக்கினிய நேர்ந்தமட்டம் கண்ண — னணிக்கம்
வருதெய்வ சிகாமணி படிமட்ட முஞ்சீர்
தருசம்பொற் கோட்டமிவை தான்.

என்னுதலிற்றோவெனின்? துணுக்கென்னுந் தாண்டவத்திற்குரிய தாளங்களுணர்த்திற்று.

க. சங்காப்பிரியம் (சங்கரப்பிரியம்)

உ. கமலலோசனன்

ந. நேர்த்தமட்டம்

ச. கண்ணான்

௫. தெய்வசிகாமணி
௬. படிமட்டம்
௭. சம்பொற்கோட்டம்

ஆகத் துனுக்குக்குத் தாளமேழெனக் கொள்க. ௰அ.

141. தெண்டபர தந்தனக்குச் சேர்சம்பை தாளமென
அண்டர்பிரா னன்பா லருள்செய்தான் — வண்டிசைகள்
நீடுமா லங்காட்டில் நித்தனுர் காளியுட
னாடிபொருள் தாளமிவை யாம்.

என்னுதலிற்ருேவெனின்? தெண்டபரதத் தாண்டவத்திற்குரிய தாளமுணர்த்திற்று. தெண்ட பரதத்திற்குச் சொந்தமான தாளம் சம்பைதாளமெனத் தேவர்களுக்கு எல்லாந் தேவனுகிய பரமேசுவரனுனவர் அன்புகூர்ந்து அருள் செய்தார். அவை யெவ்விடத்து என்னில்? அறுபதங்களானவை இசை நீட்டப்பெற்ற திருவாலங்காட்டிற் காளியுடனே நிருத்தம் புரியும்போது கொண்ட பொருளாகிய தாளமிதுவே என்ருரெனக் கொள்க. ௰கூ.

142. அண்டர்பிரா னம்பலத்தி லாடிப் பரதவிதங்
கொண்டதெல் லாம்பாவை கொண்டதற்பின் — தெண்டபதங்
கட்டினு ரண்டரென்றுங் காணுப் பதங்காணக்
கிட்டினு ரண்டத்தைக் கீண்டு.

என்னுதலிற்ருேவெனின்? அண்டங்களுக்கெல்லாம் பிராணுகிய சுவாமி அம்பலத்தில் பரதவிதத்திலுண்டாகிய நிருத்தமனைத்தும் புரிந்ததெல்லாம் காளியானவள் உடனுக்குடன் பிறிதினிருத்தங் கொண்டபடியினுலே அவள் வெட்கி நாணத்தக்கதாகத் தெண்டபரதங் காட்டினுர். அப்போது முக்காலந் தோறுந் தேவதைகள்

அனைவோரும் காணாத பாதத்தை எல்லோருங் காணத் தக்கதாக அண்டபத்தனம் கீன்று கிட்டிச் சேவித்தார்கள் என்றவாறு. உ௰.

143. *ஒத்த சமநிலையு முடற்பிரிவு மண்டலமும்
வைத்தமடிப் புக்கூப்பு வாக்கியமு — முத்தமிழ்தேர்
அத்தனுர் காளியுட னுலங்காட் டில்லாடுஞ்
சித்தனுர் சுத்தத் திறம். உக.

ஆதிலக மார்க்கவகை யம்பலத்தா னுடும்வகை
வாதினெடு காளிநட மாடுமதைச் — சோதியுன்னி
அண்டத்தைக் கண்டயன்மால் யாவருங்கண்
டேயிறைஞ்சத்
தெண்டபதஞ் சேரத்தான் சிரம்.

## புட்பாஞ்சலிக்குப் பிரதிபேதம்

144. புட்பாஞ் சலிக்குப் புகழ்வீர விக்கிரமம்
நட்பாம் வன்மா லியுநயந்து — தட்பா
முன்வசந்த தாளமொருமூன்று மென்றே
வன்மை யுடனுரைத்தான் மால், உஉ.

தாண்டவம் பதினாறு பொருளும் முடிந்து முற்றிற்று.

---

*சுத்தத்திறம் – சுத்த நிருத்தம்: தாண்டவம்.
கூத்திற்குரிய அறுவகை நிலைகள் கூறுவதிச்செய்யுள்.

## அகமார்க்கப் பொருள் பதினாறுக்குச் (ம்) சதி வரலாறு

திருவாலங் காடதனிற் றெண்ட பாதஞ்
தில்லையிலே தேசிதிகழ் புயங்கக் கூத்துத்
தருவாரும் வெண்காட்டில் வடுகக் கூத்துச்
சாருஞ்செங் காட்டிற்சீ யகழ்க்கூத் தாமாரூர்
உருவாருஞ் சபையகமார்க் கத்தீ ரெட்டு
உயர்ந்தபொருள் பகர்ந்துமையோ டுலவ நாட்டியம்
மருவாரும் பொழிற்கூடல் தன்னில் மேவி
மாறியா டும்பதத்தை மனத்தில் வைப்பாம்,

*சிவாசலபதி சகாயம்.*

---

## குறிப்புரை

சதி அல்லது தாளவொத்து அல்லது சதிக்கோவை என்பது சொற்கட்டுகள் எனப்படும். அவை வாயினால் அழகுபட இசையுடன் கூறப்பெற்று தாள உறுப்புக்களை அவ்வவற்றிற்கு அமைந்தவாறே மிக்க நினைவாற்றலோடு கையினால் அல்லது கஞ்சக்கருவியால் கொட்டுப் போடப்படும். அதற்கேற்ப ஆடுவார், சதி பிறழாது தாள அங்கம் (உறுப்பு) நினைவுகொண்டு ஒன்றிய நினைவோடு ஆடி முடிப்பர். இத்தகு சதிமுறைகள் ஏதேனும் ஒரு தாளத்திற்குள் அடங்குமாறு நல்லறிஞர் ஒருவரால் கோக்கப்படும். ஒரு கோவைக்கு எத்துணை மொத்த எண்கள் கொண்டுள்ளனவோ அவற்றிற் கேற்றவாறே உறுப்புக்கள் அமையும். அத்தகு மொத்த எண்களை, செம்பால் செம்பாலாக அதாவது பாதி பாதியாகக் கணித்து வந்தால் இறுதியாக வருகின்ற எண்கள் 3, 4, 5, 7, 9, என ஏதேனும் ஒன்றில் வந்து முடிவுபெற வேண்டும். இத்தகு முடிவுக்கு வராதவாறு சதிக் கோவை அமையுமாயின் அது பிழையாகும். எவ்வகையிலும் பொருந்தாது.

எடுத்துக்காட்டாக 192 எண்கள் கொண்ட ஒரு சதிக்கோவை, கோக்கப்படுமானால் அவ்வெண்களைப் பாதியாக்க 192, 96, 48 24, 12, 6, 3 என வருவதனை அறியலாம். அவ்வாறு வந்தால் திச்ரசாதிக்கோவை என்று கூறப்பெறும். மேலும் அதுபோன்றே நான்கில் வந்து முடிய சதுச்ர சாதிக்கோவை. ஐந்தில் முடிந்தால் கண்டசாதிக்கோவை; ஏழில் முடிந்தால் மிச்ரசாதிக்கோவை. ஒன்பதில் முடிந்தால் சங்கீரணசாதிக்கோவை எனப்படும். 192 எண்கள் 48 மாத்திரை. மாத்திரை என்பது நான்கெண்கள் கொண்டதாகும்.



இக்குறி அனுத்துருதம் ஓரெண். அதாவது கால் மாத்திரை.

விந்து விரதி விராமங் கிளர்புள்ளி
பத்த மனுக்குப் படரொற்று — முந்துதுடி
சொன்னூர்கால் மாத்திரைக்குச் சொக்கனூர் மிக்கதமிழ்
நன்னு வலர்முன் னயந்து.

விந்து. விரதி, விராமம், கிளர், புள்ளி, பந்தம், அனுக்கு, படர், ஒத்து, துடி (பிறை) இவையாவும் கால் மாத்திரையான அனுத்துருதத்திற்குப் பெயர். ஈரெழுத்தொருமொழிச் சொல்லான துடி என்பதனையே நாம் குறித்துள்ளோம். அதாவது பிறை.



இக்குறி துருதம் இரண்டெண். அதாவது அரை மாத்திரை.

சுழிகொப்பு வட்டந் துருதஞ் சுகடீரம்
விழிகண்ட சக்ரம் வியோமம் — மொழிதிங்கள்
வெஞ்சனமே விந்துகமே மிக்கவரை மாத்திரைக்கென்
றஞ்சனவேற் கண்ணு யறி.

சுழி, கொம்பு, வட்டம், துருதம், சுகடீரம், விழி, கண்டம், சக்கரம், வியோமம், திங்கள், வியஞ்சனம், விந்துகம், இவையாவும் அரை மாத்திரைக்குப் பெயர். சுழி என்பதனையே நாம் குறித்துள்ளோம்.



இக்குறி லகு நான்கெண். அதாவது ஒரு மாத்திரை.
(இஃது இசைநூல் வழக்கு)

வாளிசர மங்கோல் மாத்திரிசங் சால்செவ்வை
நீளு மிரச்சுவமே நேர்கீற்று — நாளுமகிழ்
மிக்க வியாபகமே மேவு மிரேகையெனத்
தக்க லகுப்பெயராய்ச் சாற்று.

வாளி (சரம்) என்பதனையே நாம் குறித்துள்ளோம். இதுவரை மூவ்வுறுப்பு, மூன்றங்கம் எனக் கூறப்பெறும்.





இக்குறி குரு எட்டெண்கள். அதாவது இரண்டு மாத்திரை.

வல்லதிவி மாத்திரையே வான்கலையே வச்சிரமே
நல்லபிறை தீர்க்கம் நயந்தபரம் — வில்லுக்
குடிலந் தனுச்சாபங் குருதனக்குச் சொன்னர்
சடிலமுடிச் சொக்கனர் தாம்.

நாம் வில் (தனு) என்பதனையே குறியீடாகக் கொண்டு குறித்துள்ளோம்.



இக்குறி இந்நூலிற் கொள்ளப்பெற்றதாகும். இக்குறி புலுதம். புலுதம் என்பது மூன்று என்று பொருள்படும் பன்னிரெண்டெண்கள். அதாவது மூன்று மாத்திரை.

சீரிய கோமுத் திரிகள் திரியங்கம்
பாரிய சாமோ பலநாகம் — பேரிய
செய்யதிரு மின்னுந் தீத்தமுயி ரோகாரந்
துய்யபுலு தப்பெயராய்ச் சொல்!

என்பதனையே குறியீடாகக்கொண்டு குறித்துள்ளோம்.





இக்குறி காகபதம் பதினாறு எண்கள். அதாவது நான்கு மாத்திரை.



ஓசையி லன்னபத மொண்காக பாதமுடன்
நேசமிகு புள்ளடியே நிச்சத்தம் — பேசாச்
சுவத்திகமே யென்றெண்ணிச் சொற்கா குவுக்குத்
தவத்தலைமைச் சொக்கருரைத் தார்.

காகபதம், காக்கைக்கால் போன்றே குறியீடாகக்கொண்டு நாம் குறித்துள்ளோம். இம்மூன்றங்கமும் சேர்த்து இதுவரை ஆறுறுப்பு ஆறங்கம் எனக்கூறப்பெறும்.

# 1. ஆதிக்கு

| O O | | O O ||
கிடகதெய் தா தா தெய்தா தெய்தா தெய்தெய் தெய்தா செனசென சென சென ||

O | | O O O | | O O O O ||
சென செனசென செங்கிடு தத் தக கிட தாசென செனகிட தக சென கிட கிட ||

| | O O O O | | ||
தகிசென ததா, சென தசெ னத சென தா தா தொந்,த தொந்,த தொந்,த ||

O O | | ||
தொந்தோங் குத தக குத திக் குதா, தொந்துத கிடதக தொடகதொ குத்ததோம். ||

**மாத்திரை முப்பத்திரண்டு. ஆதி முற்றிற்று.**

---

சதி – தாளவொத்து, நடை: இப்பகுதி தாளமாலை, வகுப்புமாலை எனப் பெயர்பெறும். இப்பகுதி 16 தாண்டவங்களுக்குரிய தாளச் சொற்கட்கு வரலாறு கூறுகின்றது.

## 2. அணுவுக்கு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| O | O | O | O | O | O | ơ | O | O | ↗ |
| திகு | தெக | டெகு | தித் | திகு | தொக | டெகுதி | டெகு | டெகு | தகுகுடனெ ‖ |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ↗ | | \| | ơ | \| | β | |
| செககு | டென | கிடகிட | குகுத | ததா, | குகுதத | தககுகு ‖ |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ↗ | \| | ơ | O | \| | \| | O |
| தததெய்யகு | குகதத | தகண | குகு | தததாம் | தாதத | கிட ‖ |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| β | | O | O | O | O | | β | |
| கிறிதிகிட | துதக | கிட | தொகு | தத | தோம், | தொகுத்த | தோம் | தகுத்ததோம் ‖ |

**மாத்திரை 24. அணு முற்றிற்று.**

## 3. பிரகாசத்துக்கு

கிட தகதெயதா; தெயதா ககுகுத தத ‖ தககு கதத்த ககு குதததகதிடகி தத ‖

கஙகுதி ததி கதி டடததககுதத தகதிட ‖ கிடதக ததா திததா டெனதக தகதோம் ‖

மாத்திரை 20. பிரகாசம் முற்றிற்று.

# 4. பீடத்துக்கு

கிடதகதையதா தெயதாந்தோம்தாந் தாந்தோம் தடகிண தடககி ||

| | | O O O ↗ ↗

ணதந்செக செதந்செக செகசெக செக செக தக செகசெகத ணகசெகத ||

O | | O O O

செக தககிண கிணங்கித தா ரித தா கருகுத குகுதக ராகிஞம் ||

| O | O O ● |

குகுதணகிஞம்தத் தந்திங் கிடு நன்னங் கிடு தரி கிடு தத்தோம் ||

**மாத்திரை இருபத்தெட்டு. பீடம் முற்றிற்று.**

# 5. புட்பாஞ்சலிக்கு

| O | O | \| | \| | O | O | β | |
|---|---|---|---|---|---|---|---|
| கிட | தக | தெயதா | தெயகிட | தக | தக | குததொங்,காதத் | ‖ |

| O | O | \| | β | \| | \| | |
|---|---|---|---|---|---|---|
| திகு | தொந் | தொந்தொங் | டெங்கினனங்கத் | தோதட் | டங்கிண | ‖ |

| β | | \| | \| | β | | |
|---|---|---|---|---|---|---|
| ணத்தொங்கா | டெக்கித் | தாடென | செனசென | நங்கிண | நகசென | ‖ |

| O | O | \| | O | | ஊ | | O | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நக | கிணந் | தாசென | தா | திகிதகி | ததிக்குத் | தக்குத் | ததி | ‖ |

| O | | [symbol] O ||
தீந்தாம் தா டெக்குத் தடெனசெ ணசெணசெ ணனதொங் கிண ||

| O | O O O | O O ||
தாசென சென நகசென தக திக தோ தட்டென கிண தொங் ||

O | | [symbol] O | ||
கா ததிதிகி கிடதக திக்குத் திந்தாம் தோம் தக்குத் ||

[symbol] | O [symbol] O ||
திந்தாம் தந்தோந் தத்தோந் தோம் தாம்தித்தாம் தாம்தித்தாம் தாம் ||

**மாத்திரை 48. புட்பாஞ்சலி முற்றிற்று.**

## 6. தேசிக்கு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| O | \| | \| | \| | | \| | | | |
| கிட | ததெயத | தெயசெகு | குணகட | கீகிடத | தசெசெகு | குணகணீ | \|\| | |
| | | | | \| | \| | O | | |
| செகுகு | ணகசெசெ | குகுணக | செனகிடு | கசெனகி | டுசெனகி | டுதி | ரிகிடு | \|\| |
| \| | | | \| | O | O | \| | \| | |
| தக்கிண | ணஞ்செத | கிணணந் | தாதெய | தெய | தத | தெயசெகு | குணகட | \|\| |
| | O | O | \| | \| | \| | O | | O |
| தீகிறிட | சென | கிடு | தக்கிண | கிணணந் | தாதகி | ணந் | தொந்தத்தோம் | தோம் \|\| |

மாத்திரை 28. தேசி முற்றிற்று.

# 7. புயங்கத்துக்கு

|    | O O | O    O ||

கிடதெய தகதெய தெய தா தெய்யச் செக செகஞ்ணும் தஞ்செக செக ||

|    | O O    O | O ||

செககிட செனகிச தஞ் செக கிடதக தெயதா தெய செகசெக ஞ்ணும் ||

|| 

தஞ்செக செகசென கிடதரி கிடகத தெயதா தெய்யா செகதக ||

| 

செகசெக செகிசசெ ணகிசசெ ணகிசன செனகித தரிகுத செகஞ்ணும் ||

**28 மாத்திரை.**

**புயங்கம் முற்றிற்று.**

## 8. தேசியொத்துக்கு (ஒத்துக்கு)

கிடதக தெயதா தெயதெய தகி டக திகடக தாதத தககதத தங்குகு ||

ததா தா கிட தக செனா தா கிடுதா தாகிடத செனத ககி டதகசெக ||

ணதிக்கிடு தத்திக் திகுடத தக செனா தாங் கிடதகத திகதி கிட கிடதக ||

செனதிக தகிடதக தாங்கிட தக்கிதிட தக தாங் கிடத தகசென தெனதோம் ||

**மாத்திரை 32. ஒத்து முற்றிற்று.**

# 9. நீதிக்கு

கிடத தக ததெய தாதெய செனசென தொங்க ககிடத தகதோம் திட்டக ||

தோம்தக திடகதோம் திடகதோம் தடக்கிண தோப்தோம் திடடக தோங்கத் திட்டக்கிண ||

தோங்கத் தத்தோம் தக்கிட தகதோம் கததித் தோங்க கதாதெ யதிதா ||

தாடக தோங்கிட தக சென சென தக தோங்கிட டகதோம் டகதோம் தோம்தோம் ||

**மாத்திரை 32. நீதி முற்றிற்று.**

## 10. நிழலுக்கு

கிடதக  தெயதா  தெய  குகு  டெங்கிக்  குகுடென  குகுடகு ||

கிகி  தகு  டெங்  கிடடெங்  கித்தா  கதாத  தக்கிடு  திக் ||

கிடுதோங்  கிதங்கிடு  தொங்குத்  தக்குத்  தோந்தோந்  தோந்தோந் ||

கிடு  தோ  தோடென  நங்கிடுத்  தொங்குத்  தக்குத்  தோந்தோந் ||

**மாத்திரை 24.  நிழல் முற்றிற்று.**

# 11. வைப்புக்கு

ஊ | | O O | | ||

கிடதக தெய்தா தெயதெய திந்தினங் கத்தோங் கா திந் தினனங்கந் தினனங்கத் ||

| | O O O O O | O O | O ||

திந்தின் னங்கத தொங் கத தெய தா ததுக் கிடதக தொட கதொ தொஜுதத் தோம் ||

மாத்திரை 16. வைப்பு முற்றிற்று.

## 12. வகுப்புக்கு

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| \| | ß | | O | [mark] | [mark] | | ‖ |
| கிடதக | தெயதா | தெயதெய | தா | ததரி | ததரி | | ‖ |
| | [mark] | | | ß | | | ‖ |
| குததரி | குததரி | ரரரர | திததது | தட்டென | | | ‖ |
| O | O | \| | O | \| | \| | O | ‖ |
| தத் | தத | ரிகுகுத | தரி | குததரி | குததீத் | தரி | ‖ |
| O | O | \| | \| | ß | | | ‖ |
| குத | தரி | தாததீத் | திரிகுத | தித்தித்,தாடென | | | ‖ |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| \| | \| | O | \| | ◐ | \| | | |
| தாத்தரி | குததரி | குத | தரிகுத | தீத் | தரிகுத | ‖ | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| [illegible] | | O | \| | \| | O | | |
| தரிகுத | தரிதா | தக | திரிதக | தரிகுத | தத | ‖ | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| [illegible] | | O | O | O | \| | ◐ | |
| ரிததகு | தரிகுத | தீ | தா | திக | தட்டென | தகு | ‖ |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | [illegible] | | O | O | \| | | |
| தித்தத | டெனகுத | குதித் | தத் | தீம் | தததோம் | ‖ | |

மாத்திரை 40.  வகுப்பு முற்றிற்று.

# 13. வாக்கியத்துக்கு

கிடதத் தெயதா தாதக் குததா தெயதா திக்குத் தொங்கா தா,த ||

ததா, தெய் தா திங்கிணணந் ணங்கிணணம் தகிடதி கிடதகி தோகிண தாம்தோம் ||

தித்தோம் கிணதாம் தித்தோம் கிணதாம் தோகிண தோகிணி தக் கிட தோகிண ||

தககிட தோகிண டெகிடகி தக்கிட கிணதக டெகிணும் தோம்தோம் தொங்கத் ||

தொங்கத் தொதிங்கத் தத்தா தொங்கா தததோம் தொத்தோ டெக்குந் தோம்தோம் ||

தித்தா ரிணதோம் கிடதீம் தித்தா ரிணதோம் கிடதீத் தத்தா ரித்தீம் ||

தொங்கத் தொத்திங் கததா தொங்காத் தொதொடெகுந் தாரிண தொடெகுந் ததிதத ||

| O O O O | |

தரிகண தகி ணட கிட தீத் தொடெகுந் திகுதிதி திட்டெங்குந் தித்தித்தா டெனதோம் ||

**மாத்திரை 64. வாக்கியம் முற்றிற்று.**

# 14. கவுத்தத்துக்கு

| | | | |
|---|---|---|---|
| \| | \| | ↗ | \|\| |
| தெககிட | டககிண | ணந்தொங்கத் | |

**மாத்திரை மூன்றேகால். கவுத்தம் முற்றிற்று.**



லகுவிராமம் ஐந்தெண்.

ஒன்றேகால் மாத்திரை.



துருதவிராமம் மூன்றெண் (முக்கால் மாத்திரை)

“வெய்ய விராமம் விளங்கத் தனியாது
துய்ய வினமாகத் தோன்ருது — பையக்
குருப்புலுதங் கூடாது கொம்புக் கணேமேல்
உருப்பெறுமென் ருன்மதுரை யோன்”

துடியென்னும் அனுத்துருதமான விராமம், எனும் தாளக்குறி, (½ மாத்திரை) துருத்திலும், லகுவிலும் சேரும். இந் நிலே சிற்சில இடத்தேதான் என்பதறிக.

# 15. துணுக்குக்கு

O O O O | | O O O O O O | | ||
கிட தக தெய தா தாதெய தொகணக தொக ணக தொக ணக தோம் தித் தாம்தித் தாம்தித் ||

| O O | O O ||
தித்தித் திதாம் திதாம் திதாம் தாம் தாம் தித்தித் தித்திட் டெகுதிட டெகு திட ||

| O O | ||
டெகுதி டெகுகெடெ குகுசெக டெகுகூ செகடெகு குசெகண டெகுகுசெக டெகு குசெ கடெகுகு ||

| O O | O | O | O O | | ||
செகடெகு குகு செக டெகுகுத செக செகனச சென குடெகுகு செக சென கிடடத கததத ||

நதங் கித தங் ததங் தங்கித கிடதக தொந் தொந் தொகதகதேந் ததகிட கிகிணத தாம் ||

தொந்தோம் தொங்கா கததக கதிததி ரிணகிண தாதா ரரகிண கிடகிட ராகிட ||

கிணகித கிடகுட கிட கிணங்கிக ராங்கிக தோம்தக கிட தக ணகதக தத்தோம் டக ||

தெயதத தெயதிதி கிடடக தோம்; டகடக தோம்; கிடதகதத்தத்தோம் கிடதகதத்தத்தோம் ||
கிடதகதத்தத்தோம்

**மாத்திரை 72. துணுக்கு முற்றிற்று.**

## 16. தெண்டபாதத்துக்கு (தண்டபாதம்)

கிடதக தெயதா தெயததோம்தசென செனசெனத தகி தித் தித்த தித்தண ||

தித்த தித்த ணடதக செனசென ததகித தாடென தெயத்தெய தோம் தாடென ||

தெயதெய ததோம்த செனசென தத கித தா டெனதத் தோம் தசென ததி கிணதோம் ||

**மாத்திரை 24. (தண்ட) தெண்டபாதம் முற்றிற்று.**

**அகமார்க்கப் பொருள் பதினாறுக்கும் சதி முற்றும்.**

**குரு வாழ்க. சிவாசலபதி சகாயம்.**

# அகமார்க்கப் பொருள் தரு மரபு — ௪.

(சிறு பிரிவு)

## அகமார்க்கப் பொருள் பதினாறுக்கும் தரு வரலாறு

### பதினாறு தாண்டவம்

ஆதியனுப் பிரகாசமும் பீடம் புட்பாஞ்சலி மிக்
கோதுபுயங் கமும் தேசியும் தேசியொத்துக் கருதும்
நீதினிழல் வைப்பு வகுப்பு வாக்கியஞ் சேர்கவுத்தம்
ஓதுதுணுக் குத்தண்ட பாதம் மீரட்டென் றோதினரே.

* தாண்டவ சிந்து

### ஆதிக்குத் தரு

திருமா லயனும் வானவரும்
தேவேந் திரனும் நாரதனும்
வருமா தவஞ்சேர் முனிவோரும்
வந்து வணங்கி மனம்மகிழக்
கருமா முகில்சேர் ளகமிசை
கன்னி யொருபா கத்துறையும்
அரனூ ராலங் காடதனில்
அன்பா னடித்த வாதியதே. க

---

* தாண்டவசிந்து — தாண்டவங்களைப் புலப்படுத்தும் இசைப் பாடல்கள். இவை நான்கடியாய்த் தம்மில் ஒத்துவந்த சிந்து என்க. செப்பிய சிந்து இவை மூர்த்திகளைப் பார்த்தருளிச்செய்த நாடகப் பாக்களின் வகையுள்ளடங்கும்.

தரு என்பது தாண்டவத்திற்கேற்பத் தந்துரைங்கும் இசைப் பாட்டு.

## அணுவுக்குத் தரு

செகம்வா னளவோ ரடியாகச்
செய்த திருமா லிசைகூற
நகமா னதுவேர் தனுவாக
நல்லார் புறஞ்செற் றிடவிமையோர்
முகமா மதிய முகமாக
மூதலா னதுவுங் களிகூற
வகமார்க் கத்தா லங்காட்டில்
அரனா ராடும் அணுவிதுவே. ௨

## பிரகாசத்துக்குத் தரு

படியாற் சிறந்த விருநாழி
பாடி யளந்த நெற்கொண்டு
மடியா துலகை வளர்த்தருளும்
வால கவுரி யொருபாகன்
துடியாற் சிறந்த விருகரஞ்சேர்
சோதி திருவாலங் காட்டினன்
அடியாற் கெளியா னகத்தொளியான்
ஆடும் பிரகா சமுமிதுவே. ௩

## பீடத்துக்குத் தரு

கையார் பாசங் கொடுகாலன்
கரிய வடிவைக் கண்டடியேன்
நையா வகைதந் தெனையாண்ட
நளினப் பதத்தான் மழுவெடுத்தான்
பையா டரவுங் கடுக்கையுநற்
பாகீரதியுந் தரித்த பிரான்
ஐயா னனா லங்காட்டான்
ஆடும் பீடம் இதுதானே. ௪

## புட்பாஞ்சலிக்குத் தரு

இனிய தவஞ்செய் திருநாற்பத்
தெண்ணு யிரமா மிருடிகளும்
முனிவர் குழாமும் வாசவனும்
முளரிக் கண்ணனும் வேதாவும்
அனைவோர் வந்தஞ் சலிபுரிய
வருள்சேர் திருவா லங்காட்டில்
புனிதன் தனியே நடித்தரும்
புட்பாஞ் சலியு மிதுதானே. ௫

## புயங்கத்துக்குத் தரு

பிறைசேர் குடிலச் சடமகுடப்
பெம்மான் கைமான் தரித்தபிரான்
கறைசேர் கண்டன் கங்காளன்
கால காலன்க பாலத்தான்
மறைசே ரொலியு மணவொலியு
மாறுத் திருவா லங்காட்டின்
நறைசே ரிதழித் தொடையீசன்
நடித்த புயங்கம் இதுதானே. சா

## தேசிக்குத் தரு

ஆதி நடுவீ றில்லாதான்
அகண்ட பரிபூ ரணனடியான்
கேதந் தவிர்த்தன் புடனுளுங்
கிள்ளை மொழிமா துமைபாகன்
சீத மதிசூ டியசடையன்
தேவன் திரிபுராந் தகன்விந்து
நாதன் திருவா லங்காட்டில்
நடித்த தேசி யிதுதானே. எ

## தேசியொத்துக்குத் தரு
### ( ஒத்துக்கு )

முன்னான் மறைதே டரியபிரான்
    மூவா முதலா வுமைபாகன்
கன்னா ரமுதாய் விடமதனைக்
    கருதி யயின்ற கறைக்கண்டான்
ஒன்னார் புரஞ்செற் றிடநகைத்த
    வோரா யிரநா மத்தொளிரு
மன்னுந் திருவா லங்காட்டான்
    ஆடுந் தேசியொத் திதுதானே. அ

## நீதிக்குத் தரு

பாரோர் வானோ ரந்தரர்கள்
    பரவிப் பணியும் பரப்பிரமன்
சீரா ரிரத கிரியாளன்
    செம்பொன் மேருச் சிலையாளன்
தாரா ரிதழிச் சடைமுடியான்
    தவத்தோர் தவமாந் தனிமுதலான்
ஆரார் போகத் தாலங்காட்டில்
    அரனா ராடும் நீதியதே. கூ

## நிழலுக்குத் தரு

தண்ணா ருருகோ டிதழிதும்பை
    தவளங் குவளை சாதிப்பிச்சி
நண்ணா ரரவச் சடிலத்தான்
    நாடற் கரிய நவநாதன்
பண்ணா ரிசைகேட் டரக்கனுக்குப்
    பார்வா னளித்தப் பண்பாளன்
அண்ணா மலையா லங்காட்டில்
    அரனா ராடும் நிழலிதுவே. ய

## வைப்புக்குத் தரு

சிரபே தம்பன் ஞன்குதிட்டி
பேதம் பண்ணைந் தோடங்கந்
தருமே ளகிரி யைபதினு
றுஞ்சாற் றுமறுபா ஞறுகையும்
வருகாற் றெழில்நாற் பான்மூன்று
மருவுங் கரணம் நூற்றெட்டும்
அரிதாம் பொருளுற் ருலங்காட்டில்
அரனு ராடும்வைப் பிதுதானே. ௰௧

## வகுப்புக்குத் தரு

தாரா கணஞ்சேர் மதியரவு
தங்குங் கங்கா நதிச்சடிலன்
ஓரா யிரம்பூ தப்படையோ
டுயருங் காளி மனமயரப்
பேரா ரகமார்க் கத்தொழிலைப்
பெரிதாப் பேயாப் பிரித்திலங்க
வாரா னுமதா யாலங்காட்டில்
அரனு ராடும் வகுப்பிதுவே. ௰௨

## வாக்கியத்துக்குத் தரு

முடிகா ணுதா னடிகாணு
முராரி காஅண வண்டருடன்
படிமீ துறுவோர் பற்பலரும்
பாடி வணங்கிப் பரவியிடத்
துடியூ டனலு மழுமானுந்
தோதீந் தீந்தோ மெனவதிர
அடியார்க் கெளியா னலங்காட்டில்
அரனு ராடும் வாக்யமிதே. ௰௩

## கவுத்தத்துக்குத் தரு

தக்கித் தக்கிட கிடதகிதா
தாதிர துரதா தங்கிடதா
திக்கித் திக்கிட கிறகிறடா
திகிதிகி தகதக திகதததீ
தொக்கத் திததீ தொகத்தொங்கா
தோந்தோம் தோந்தோ மென்றதிர
அக்கொக் கணியா லங்காட்டான்
ஆடுங் கவுத்தம் இதுதானே. ௰௪

## துணுக்குக்குத் தரு

காதார் குழைநெக் கிடவவனே
கடுதிற் காணு தெடுத்தணியும்
போதார் பாதன் வேதாந்தப்
பொருளா னொருநா ளறியாதான்
சாதா ரித்தே சாக்கிரிகாந்
தாரீ சீகா மரவிசைசேர்
ஆதா ரத்தா லங்காட்டில்
அரனு ராடுந் துணுக்கிதுவே. ௰௫

## தண்டபாதத்துக்குத் தரு

(தெண்டபாதம்)

ஆதி யகமார்க் கவ்வகையே
யம்பல மதனில் லாடுவிதம்
வாதி னொடுகா ளிநடனமா
டுவதை வர்த்தித் தேயுன்னச்
சோதித் தொருகால் மேல்தூக்கிச்
சிலம்பொ லிக்குஞ் சேவடியால்
தாதித் தெனவர னாடுந்
தெண்ட பாத மிதுதானே. ௰௬

## தெண்டபாதம் வெண்பா

ஆதியக மார்க்கவகை யம்பலத்தா ஞடுவிதம்
வாதிநெடு காளிநட மாடுமதைச் — சோதியுள்ளி
அண்டத்தைக் கீண்டயன்மால் யாவருங்கண்
டேயிறைஞ்சுந்
தெண்டபதஞ் சேர்த்தான் சிரம்.

**அகமார்க்கத் தாண்டவம் பதினாறுக்குந் தரு முற்றும்.**

குரு வாழ்க.

*சிவாசலபதி சகாயம்.*

---

**குறிப்பு :**

சிவபெருமான் தான்ஆடிய ஆனந்தம் முதலான பதினாறு தாண்டவங்களைப் பிரமனுக்குக் கற்பித்தார். பிரமன் பரத முனிவருக்குக் கற்பித்தான் பரதர் சிவபெருமான் முன்னிலையில் ஆடிக்காட்டினார். சிவபெருமான் அருளியபடி பரதர் தண்டு முனிவருக்குக் கற்பித்துப் பரதநாட்டியமென்னும் வடமொழி நூலையியற்றினார் என்பது பழைய வரலாறு.

ஆதியில் நாட்டியக் கலையைப் பிரமன் சிவபிரான்பால் தெரிந்து கொண்டான். பிரமனிடமிருந்து பரதமுனிவர் தெரிந்துகொண்டு சிவபிரான் முன்னிலையில் நாட்டியமாடினார். சிவபிரான் தான்ஆடிய ஆனந்த முதலிய பதினாறு தாண்டவங்களையும் பரதமுனிவருக்கு அறிவுறுத்தினார். பரதமுனிவரிடம் இருந்து தண்டுமுனிவர் தெரிந்துகொண்டார். தண்டுமுனிவர் பெயரால் தாண்டவமென்று பெயர்பெற்றது என்பது மற்றொரு வரலாறு.

சிவபெருமானிடமிருந்து பிரமதேவன் நாட்டியக் கலையை அறிந்து நாட்டிய வேதத்தைச் செய்தான். சிவபெருமான் கட்டளையின்படி நந்திதேவர் அதனையறிந்து பரதமுனிவருக்குச் சொன்னார். பரதமுனிவர் பரதம் என்னும் நாட்டிய நூலை வடமொழியிற்செய்தார் என்பதும் பழைய வரலாறு.

# கூத்திலக்கண மரபு – ரு
## (உட்பிரிவு)

### கூத்துவாச்சியம்
### கூத்துக்குரிய வாச்சியவெழுத்து

145. தவ்வென்றும் திவ்வென்றும் துவ்வென்றும் தொவ்வென்றும்
மவ்வென்றும் தோழிநீ யாயுங்காற் — கவ்வென்ற
வொற்றே டிகரத் தொடுங்கி யியங்கியதோம்
மற்றுந் தொடுத்து வரும்.

என்னுதலிற்றோவெனின்? கூத்துக்குரித்தாகிய வாச்சிய எழுத்துக்கள் வருமாறுணர்த்திற்று.

த தி தோ எனவும் இதன்மீதே கி ஏற்றி மாத்திரைக்குப் பொருத்த வேண்டித் தக்கிடகிடதிக திக்கிட கிடதிகி, துக்கிட கிடதகி எனவும் தொங்கிட கிடதகி எனவும் தொங்கிட கிடதகி நங்கிட கிடதகி துங்கிட கிடதகி டெங்கிட கிடதகி எனவும், மென்றோலாற்றழுவி உடன் படுத்து இவ்வாறு பிறந்த குற்றெழுத்தாலும் நெட்டெழுத்தாலும் ஒற்றுக்களாலும் வந்து விரிந்து விரிந்தது. கூத்துக் குரித்தாய வாச்சிய எழுத்துக்கள். அக்கூத்துக்கேற்ற சொற்கட்டுகள்.

அவை, அழகம், காத்திரம், சிவிறுகை அடைசுகை, நேர்கை, ஏறுகை என எழுத்து மரபிற் கூறியிருப்பன வற்றுள் மலைப்பு, முரிப்பு, துணுக்கு அந்தரியென்கின்ற ஓசைகளாலும் ஓத்து, கவுத்துவம், தாளவாச்சியம், ஓசை, பற்று என்கின்ற வாச்சியப்பாக்களாலும் பரிணமித்துக் கூத்தாம் என்றவாறு. க.

146. ஆன்றபுகழ் பூண்டபுட்பப் பேதமது நாடி
யேன்றபுவி யந்தரமா ளாகாயம் — தோன்றலிவைக்
கோப்பாகுங் கோத்ததற்பின் கூத்தாகும்
கூத்திடையே
யாப்பா மெதிர்செலவுக் கெண்.

என்னுதலிற்றோவெனின் ? என்பது இக்கூத்துக்கெழும் வினைகளை உணர்த்துதல் நுதலிற்று. அவை

க. அண்டபேதம்
உ. புட்பபேதம்
ந. பூசாரி
ச. ஆள்சாரி
ரு. அங்கசாரி எனவும்
சு. சென்றகாலம் (இறந்தகாலம்)
எ. நிகழ்காலம்
அ. எதிர்காலம் எனவும்

இவ்வெட்டும் பற்றி வரும். அவை வருமாறு :—

" சொல்லியக் கண்ணைச் சுளித்தா லதுவே
அல்லியங் குழலா யண்ட பேதம் "

" ஆற்றிய வெழுத்தை யகலா வண்ணம்
போற்றி வருவது புட்பபேத மாகும் "

---

இருவகைக் கூத்து. அகம், புறம், சாந்தி, விநோதம், தேசி, மார்க்கம், தமிழ், ஆரியம். 'இருவகைக் கூத்தும் மார்க்கந்தேசிகம்' சீர்நடமிரண்டு இருவகைக் கூத்தின் இலக்கணமறிந்து.

சாரி மூன்று : ஆகாச சாரி யரும்பூ சாரி
தேசி சாரி மூன்றெனச் செப்பினர்.

அந்தரத்தாடும் தேவப்பெண் நாட்டியம் ஆகாச சாரி
பூவுலகத்தாடும் பெண்களின் நாட்டியம் பூசாரி
நாகலோகத்தாடும் பெண்களின் நாட்டியம் தேசிசாரி.

" நாமிசை வாச்சியம் நவின்றபின் கூத்தாய்ப்
பூமியி லொன்றிடப் பூசாரி யாகும்"

" ... ... ... ... ... ...
... ... ... ... ஆசாரி யாகும் (ஆசாரி)

" காயத் துடனெழும் வினைக ளெல்லாம்
அங்க சாரி யாகு மெண்ப"

இறந்தகாலமாவது, (சென்றகாலம்)

தாளத்தை விதான மாக்கியிறக்க விட்டுப் பின்பு கூட்டி முடிப்பது,

நிகழ்காலமாவது,

ஆடுமிடத்துத் தாளத்துடனே அளவு மானம் பிழையாதபடி நிகழ்வது

எதிர்காலமாவது, (வருங்காலம்)

தாளத்திற்கெதிராக ஆடிய பின்பு தாளத்தே முடிப்பது. உ

**147. மன்னியசீர் வைணவம் சமநிலை வைகாசம்
மின்னிடையாய் மண்டலமென் றேதினர் —
பன்மையாய்
ஆலி பிரத்தியா லீடமென் றுடல்நிலை
மேலாய நூலைவிரித் து.**

என்னுதலிற்றோவெனின்? கால்களாலும் வருமாறு உணர்த்திற்று. கால்களாலுமென்றது கூத்திற் கால்களின் அறுவகை மண்டல நிலையை.

அவை, க. வைணவம்
உ. சமநிலை

௩. வைகாசம்

௪. மண்டலநிலை

௫. ஆலீடம்

௬. பிரத்தியாலீடம் என்பன.

"சமநிலையி னொருகால் பகிர்ந்து
நெளிவாய் நிற்பது வைணவ மாகும்,

தலத்தினிற் பாதந் தாந்தா மிசைந்து
கலக்க மின்றி நிற்பது சமநிலை,

தெளிதரு சமநிலை யறிந்து முழந்தாள்
நெளிவாய் நிற்பது வைகாச நிலையென்ப

பன்னிரு விரலிடை சமநிலை பகிர்ந்து
மன்னி யிருப்பது மண்டல மாகும்"

அதுவே, நால்விரல் பற்றி நடத்தலு முரித்தே,

"ஒருகால் பக்கம் போக்கி யொருகால்
அதின்மெய் சாய்ப்ப தாலீ டம்மே"

"அதுபின் முன்னியற்றல் பிரத்தியா லீடமே"

"சொல்லிய நிலையிற் றெல்லா விருகையு
மன்னிலைக் கேற்ற வழக்கிற் றென்ப"

என அறுவகை மண்டலமுங் கண்டுகொள்க. ௩

---

சம நிலை உற்கடிதஞ் சஞ்சாரங் காஞ்சிதம்
குஞ்சித மாகக் கொள்ளுவர் நூலோர்.

பாதங்கள் சமபாதம், மண்டலபாதம், குஞ்சிதபாதம், அஞ்சிதபாதம், வடிம்புபாதம் என்வும் ஐந்து.

148. ஒப்பாஞ் சமமண்டல நிலையுற் கட்டிதச்சந்
தப்பாத வஞ்சிதமே சாலவுய — ரிப்பான்மை
வஞ்சி மருங்குலாய் வகுத்தனர் குஞ்சிப்பும்
பஞ்சவித பாதத் தொழில்.

என்னுதலிற்றோவெனின்? பாதத்தொழிலைந்தும் வருமாறு உணர்த்திற்று.

'ஒக்க மிதித்தல் சமமா கும்மே'

'இருகுதி யெதிர்வைத் திடைவெளி மண்டலம்'

'முன்னிலை யூன்றல் உற்கட் டிதமே'

'பின்குதி யூன்றித் தூக்க லஞ்சிதம்,
முன்னடி பலகால் மிதித்த லஞ்சிதம்'

'முன்னடி மிதித்துத் தூக்கல் குஞ்சிதம்' ௬.

149. ஆன்றவப வேட்டிதமே யுபவேட்டி தத்துடனே
தோன்ற வியாவர்த்தி தத்தொழிலே — மூன்று
(யான்ற)
பரிவர்த் திதமென்றோர் பால்மொழியா யித்தை
யுரிமை பிறத்தையா னூர்.

என்னுதலிற்றோவெனின்? வர்த்தனைகள் நான்கும் உணர்த்துதல் நுதலிற்று.

வருத்தனை நான்காவன,

க. அபவேட்டிதம்

உ. உபவேட்டிதம்

---

நிருத்தம், ஒருவகைக் கூத்து. வகை, பலவகைக் கூத்து. பல்வகை யென்பது பகருங்காலை வென்றி வசையே விநோதம் ஆகும். நிருத்தம் பலவகையான கூத்தையும் குறிக்கும் பொதுப் பெயர்.

ங. வியாவர்த்தி

ச. பரிவர்த்திதம்

என்பனவால் இவை நான்குங் கண்டுகொள்க. இவை செய்யுமிடத்துப் பற்றைக் கையாற் செய்யப்படும் என்றவாறு. ரு.

150. தேசி வடுகு சிங்களமென் ரேதினர்
பேசிலவை பிஞ்ஞகன்முன் ஞடியவா — மோசையா
லொத்துடன் பாணி யுடனேங் கிசையுடனே
(லொத்துகொட்டுப்) (யோங்கு மிசையுமதன்)
வைத்த முதலாய்வந் திறும்.

என்னுதலிற்றேவெனின்? நிருத்தம் மூவகைப்படும் என்பதுணர்த்துதல் நுதலிற்று. அவைதாம்

க. தேசி

உ. வடுகு

ங. சிங்களம் எனவாம்.

இவை கொட்டுடனும், பாணியுடனும், ஓங்கிசையுடனும் பொருந்தி முதலாய் வந்திறும் என்றவாறு.

"இசையே மூன்று மெய்ப்பாற் றெழிலே
பொதுவகை சிறப்பென் றிருவகைப் படுத்நல்
மருவி வந்த மருவழக் கென்ப"

என்றாராகலின் கூ.

---

பிஞ்ஞகன் – சிவபிரான்.

வடுகு, வன்மைக் கூத்து. தேசி, சமக்கூத்து. சிங்களம், மென்மைக்கூத்து. சாத்துவிகம் தேசி இராசதம் வடுகு, தாமதம் சிங்களமெனக் கொள்க.

151. **படைத்தான் படைத்தானு மாத்திரையைப் பாங்கா
யடைத்தே யமைத்தியற்று மாலோன் —**
**மடக்கொடியாய்**
**வீடானுர் வீடாய் விரிசடையோன் மெய்ப்பொருளே
யாடினு னுதியா யன்று.**

என்னுதலிற்றேவெனின்? மாத்திரைகள் எல்லாம் படைத்தமைத்து ஆடினுர் யாவரென்பது உணர்த்துதல் நுதலிற்று.

மாத்திரைகளெல்லாம் நான்முகனுலே படைக்கப் பட்டன.

திருமால், அமையச் செய்தார்.

பரமேசுவரன், அம்மாத்திரைகளையும் தன் கைக் கங்கணமாகக் கொண்டு விதம் விதமாக ஆடினுர் என்றவாறு. எ.

152. **மாற்றில்லா மண்டிலமேல் வைகாசம் வாளுபயம்
போற்று பிறைச்சந்தன் திரிபதகை —**
**கோற்றெடியாய்**
**தேசி வடுகு சிங்களத்தின் முற்பகுதி
பேசும் பொதுக்கைகால் பேசு.**

என்னுதலிற்றேவெனின்? முன் சொன்ன கூத்து வகைக்கெல்லாமுரித்தாகிய பொதுக் கை, கால்கள் வருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

---

சாத்துவிகம், இராசதம், தாமதம் எனவிவை ஆகமத்தில் உள்ள குண மூன்றினுலும் பெயர் பெறுதலால் அகமார்க்கமென்று பெயர்பெற்று வழங்கப்படுமெனக் கொள்க. அகச்சுவை பற்றி எடுத்தலின் இவை மெய்க்கூத்து. மெய்த் தொழிற் கூத்து ஆகலின் மெய்க்கூத்தாயின. ''குணத்தின் வழியதகக் கூத்து ஏனப்படுமே.'' அகத்தெழு சுவையான் அகமெனப்படுமே.

| | | |
|---|---|---|
| க. | தேசிக்குக் கை | பிறைக்கை |
| | ,, கால் | மண்டிலம் |
| உ. | வடுகிற்குக் கை | சந்தக்கை |
| | ,, கால் | வைகாசம் |
| ங. | சிங்களத்திற்கு கை | திரிபதாகை |
| | ,, கால் | உபயம் |

அதாவது முன் கூத்துக்கு உரிய மண்டில வைகாசக் கால்கள் இரண்டும். இவ்வாறு கண்டுகொள்க.

"மூவகை யாடலு முற்றிய வதன்பொருள்
சூளென மொழிய துணிந்திசி னோரே" (சூழென) அ

---

பிண்டி, பிணையல் என வரும் கைகளை ஒற்றைக்கை இரட்டைக்கை என்பது வழக்கு. ஒற்றைக்கை என்பது இணையா வினைக்கை எனவும் இரட்டைக்கை என்பது இணைக்கை எனவும் கூறப்பெறும். இவற்றையே ஆண்கை. பெண்கை. அலிக்கை; பொதுக்கை எனவும் பிரிவுபடுத்தி அறுவகைக் கைகள் எனவும் கூறப்பெறுமாம். மேலும் இவற்றை எழிற்கை, தொழிற்கை எனவும் கூறப்பெறும்.

எழிற்கை — அழகுபெறக் காட்டுங்கை
தொழிற்கை — தொழில்பெறக் காட்டுங்கை } அன்றியும்

பொருளுறக் காட்டுங்கை வகைகளை பொருட்கை எனவும் கூறப் பெறும். பொருட்கை – பொதுக்கை.

"எழிற்கை யழகே தொழிற்கை தொழிலே
பொருட்கை கவியிற் பொருளா கும்மே"

இவற்றுள் எழிற்கையும் தொழிற்கையும் அகக்கூத்துக்குரியன. பிண்டியும் பிணையலும் புறக்கூத்திற்குரியன என்றும் அறிதல் வேண்டுமாம்.

# அவிநய மரபு

## (உட்பிரிவு) ஒற்றைக்கை மரபு—க

153. **முப்பதோர் மூன்றென்பார் ஒற்றைக்கை பத்தைந்து**
**தப்பா திரட்டைக்கை தாமென்ப — ரிப்பான்மை**
**யாண்கையே பெண்கை யலிக்கை பொதுக்கையென**
**மாண்புடையோர் சொன்னூர் மதித்து.**

154. **ஆண்பத்துப் பெண்ணெட் டலிக்கையா**
**றேபொதுக்கை**
**மாண்புறுமொன் பாறிவைமுப் பான்மூன்று —**
**காணுங்கால் (காண்கிலுறும்)**
**ஒற்றை யிரட்டை பதினைந் தெழிற்கை**
**தொழிற்கையென நாற்பத்தெட் டெண்.**

என்னுதலிற்றோவெனின்? அவிநயக்கைகள் வருமாறு உணர்த்திற்று.

அவையாவன ஒற்றைக்கை முப்பத்துமூன்று
இரட்டைக்கை பதினைந்து

ஒற்றைக்கை நான்கு வகைப்படும். அவை

க. ஆண்கை
உ. பெண்கை
ங. அலிக்கை
௪. பொதுக்கை எனவுங் கண்டுகொள்க.

இரட்டைக்கை இரண்டு வகைப்படும். அவை

க. எழிற்கை

உ. தொழிற்கை எனவுங் கண்டு கொள்க.

ஆகக்கை நாற்பத்தெட்டென்ப என்னை ?

---

அபிநயம் என்பது கூத்துள் ஒரு வகை. கை மெய் காட்டல் என்னும் பொருளில் வழங்குகிறது. நாட்டியத்தில் அபிநயம் கையால் காட்டப் பெறும்.

"மலர்க்கையால் அபிநயமும் காட்டுதல் காண்" என்பது அறியத்தக்கது.

அபிநயத்தில் கால் உடல் கண் முகம் ஆகியவற்றின் தொழிலும் உடன் நிகழும்: இப்பகுதியில் கை அபிநயத்துடன் கால் உடல்களின் செயல்களும் கூறப்படுகின்றன.

மனதில் நினைத்த பொருளை இயல்பான சொற்களால் உணர்த்துவதை இயற்றமிழ் என்றும், இசைமூலம் உணர்த்துவதை இசைத்தமிழ் என்றும், அபிநயத்தால் உணர்த்துவதை நாடகத்தமிழ் என்றும் கூறப்படும். ஆகவே அபிநயமென்பது மனதிற் கருதிய உயர்ந்த பொருளை வெளிப்படுத்தும் இயல்பினதாம் என்றே நாமறிதல் வேண்டும்.

அபிநயத்திற்குரிய கைகள் ஒற்றக்கை இரட்டைக்கை என இரண்டு வகைப்படும்.

ஒற்றைக்கை, ஆண்கை பெண்கை அலிக்கை பொதுக்கை என நான்கு வகையாகவும்

இரட்டைக்கை, எழிற்கை, தொழிற்கை என இரண்டு வகையாகவும் கூறப்படும்.

ஒற்றைக்கை முப்பத்து மூன்றும் இரட்டைக்கை பதினைந்தும் அவற்றின் இலக்கணங்களும் கூறப்படுகின்றன.

"ஆண்கை பத்தே யலிக்கை யாறே
மாண்புயர் பெண்கை மற்றிரு நாலே
பொதுக்கை யாக வகுத்தகை யொன்பா
னென்றிவை முப்பத் திரண்டின் மேலும்
ஒன்றென மொழிப வொற்றைக் கையே
பாற்படு மிரட்டை பதினைந் தென்ப" க

என்றாராகலின்,

இனி ஆண்கை வருமாறு.

155. முட்டி சிகர மலர்பதுமஞ் சந்தம்மே
விட்ட சிலந்தி மிகுசூசி — மொட்டுச் (ஒட்டும்)
சதுரம் பதாகை திரிபதா கையாண்கை
மதிவல்லோர் கண்ட வழக்கு.

என்னுதலிற்றோவெனின்? ஆண்கைகள் உணர்த்துதல் நுதலிற்று.

க. முட்டி
உ. சிகரம்
ங. அலர்பதுமம்
ச. சந்தம் (சந்தஞ்சம்)
ரு. சிலந்தி
சா. சூசி
எ. சதுரம்
அ. பதாகை (பதாகம்)
கூ. திரிபதாகை எனக் கண்டுகொள்க.

(மொட்டு, முகிழாகிய பதுமம்) முகுளம். உ

1. முட்டி, நான்கு விரல்களையும் உள்ளங்கையில் வளைத்து அதன்மேல் கட்டைவிரலை வளைத்தல்.

"அங்குலி நாலுமேவுள் ளங்கையில் வளைத்ததன்மேல்
அங்குட்டம் வளைத்தால் முட்டி அத்தமாம்"

2. சிகரம் – உச்சி. அதாவது முட்டிக்கையில் கட்டை விரலை உயர நீட்டல்,

"உதவிய முட்டி யத்தத் துயர அங்குட்டம் நீட்ட
இதமுறு சிகரமாகும்"

# ஆண்கை 10



க. முட்டி



உ. சிகரம்



ங. அலர்பதுமம்



ச. சந்தஞ்சம் (கிடுக்கி)



ரு. சிலந்தி



சா. ஊசி (சூசி)



எ. சதுரம்



அ. கொடி (பதாகை)



கூ. திரிபதாகை (முக்கொடி)



௰. மொட்டு

3. அலர்பதுமம் – மலர்ந்த தாமரை.

" விரலைந்தும் வளைத்து நீட்டி வேறு வேருய்ப் பிடித்த
கரம்அலர் பதுமக் கையாம் "

ஐந்து விரல்களையும் வளைத்து நீட்டி வேறுவேருய்ப் பிடித்தல்.

4. சந்தம் (சந்தஞ்சம்) சந்தம்சம் – கிடுக்கி. இக்கை பதுமகோசக்கையில் ஐந்து விரல்களையும் சடுதி சடுதியாகஅதாவது பிரித்துப் பரப்பிக்காட்டல்.

" விடுத்த பதும கோசத்தில் விரலைந்தும்
வெவ்வேருக அடிக்கடி பரப்பிக் கூட்டில்
அதுதான் சந்தம்ச மாகும் "

5. சிலந்தி – சிலந்திப் பூச்சி போன்று கைகவிழ்த்து விரல்களை யாட்டிக் (நடுக்கிக்) காட்டல்.

6. சூசி – ஊசி. கடகா முகக்கையில் சுட்டுவிரலை நீட்டல்,

" கடகா முகக்கை தன்னில் கருது தர்ச்சனியை நீட்டத்
திடமுறு சூசி யென்று செப்பினர் "

7. சதுரம் – கட்டை விரலை வளைத்து அணிவிரலின் அடியில் கூட்டி, அணிவிரல், நடுவிரல், சுட்டுவிரல் ஆகிய மூன்றையும் நீட்டிச் சேர்த்து சிறுவிரலைப் பின்னே நீட்டல்.

" அங்குட்டந் தனைவளைத்துஅ நாமிகை அடியிற்
கூட்டித் தங்குஅ நாமிகைமத் திமம்தர்ச் சனி
மூன்றுங் கூட்டிநீட்டி அங்கனிட்டிகையின் நீட்டில்
அந்தக்கை சதுர மாகும் "

8. பதாகை – பதாகம் – கொடி.

" அங்குலி (விரல்) நாலும் நீட்டி அங்குட்டந்தனை
வளைத்த செங்கையைப் பதாக மென்று செப்பினர் "

நான்கு விரல்களையும் நீட்டி கட்டை விரலை வளைத்தல்.

9. திரிபதாகை – திரிபதாகம். முக்கொடி. மூன்றுகொடி. பதாகக் கையில் அணிவிரலை (மோதிர விரலை) வளைத்தல்.

'' அன்னமே பதாகந் தன்னில் அநாமிகாங்
குலியா மொன்று தன்னையே வளைக்கத் திரிபதாகம் "
( அநாமிகாங்குலி — மோதிரவிரல் ) பவித்திரவிரல்

முட்டி

'' முட்டி யென்பது மொழியுங் காலைச்
சுட்டு நடுவிர லநாமிகை சிறுவிரல்
இறுக முடக்கி யிவற்றின்மிசைப் பெருவிரல்
முறுகப் பிடித்த முறைமைத் தென்ப ''

பதாகை

'' பதாகை யென்பது பகருங் காலைப்
பெருவிரல் குஞ்சித் தலாவிர ஞன்கு
மருவி நிமிரு மரபிற் றென்ப "

திரிபதாகை

'' திரிப தாகை தெரியுங் காலை
அறைப தாகையி னணிவிரல் முடக்கினஃ
தாமென மொழிய வறிந்திசி னோரே "

சூசி

"சூசி யென்பது துணியுங் காலை
நடுவிரல் பெருவிரல் என்றிவை தம்மில்
அடைவுட னெற்றிச் சுட்டுவிர நிமிர
ஒழிந்தன வழிவழி முடங்கி நிற்ப
மொழிந்தனர் மாதோ முடிபறிந் தோரே"

சதுரம்

"சதுர மென்பது சாற்றுங் காலை
மருவிய மூன்று நிமிர்ந்தகம் வளையப்
பெருவிர லகமுறப் பொறப்பச் சேர்த்திச்
சிறுவிரல் பின்பே நிமிர்ந்த செவ்வியின்
இறுமுறைத் தென்ப வியல்புணர்ந் தோரே"

"முட்டி சிகர மலர்பதுமஞ் சந்தஞ்சம்
விட்ட சிலந்தி மிகுசூசி — ஒட்டும்
சதுரம் பதாகந் தருதிரிப தாகம்
அதிகமுறு மாண்கைநவ மாம்.

பெண்கை வருமாறு

**156. கடகஞ் சுகதுண்டம் காங்கூல முன்னம்**
**வடிவா ரராளம் பிறைக்கை — தடமாரு**
**மன்னத்தின் பக்கம் மிருகசிரம் பெண்ணுக்கு**
**மென்னக்கை சொன்னு ரிசைத்து.**

என்னுதலிற்றோவெனின்? பெண்கையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

க. கடகம்

உ. சுகதுண்டம்

௩. காங்கூலம்

௪. உன்னம்

ரு: அராளம

சா. பிறைக்கை

எ. அன்னபக்கம்

அ. மிருகசிரம்

எனவிவை கண்டுகொள்க. ந

### கடகம்

" கடகஞ் சுகதுண்டங் காங்குல மன்னும்
அடைவாம் பிறைக்கை யராளம் — தடமருவு
மன்னபக்கம் தாம்பிர சூடமொடு மான்றலையே
இன்னவெட்டும் பெண்ணுகு மே"

" கடக முகமே கருதுங் காலைப்
பெருவிர னுனியுஞ் சுட்டுவிர னுனியும்
மருவ வளைந்தவ் வுகிர்நுனி கௌவி
ஒழிந்த மூன்றும் வழிவழி நிமிர
மொழிந்தன ரென்ப முடிபறிந் தோரே"

### சுகதுண்டம்

" சுகதுண்ட மென்பது தொழில்பெறக் கிளப்பிற்
சுட்டு விரலும் பெருவிரல் தானும்
ஒட்டி யுகிர்நுனே கௌவி முன்வளைந்து
அநாமிகை முடங்கப் பேட்டொடு சிறுவிரல்
தான்மிக நிமிர்ந்த தகுதித் தென்ப"

" அகமகிழ் அராளந் தன்னில்
அநாமிகை விரல் வளைத்தால்
சுகதுண்ட வத்த மாகும்"

அராளக் கையில் மோதிரவிரலை (அணிவிரலை) வளைத்தல்,

சுகதுண்டம் – கிளிமூக்கு.

# பெண்கை 8



க. கடகம்



உ. கிளிமூக்கு (சுகதுண்டம்)



ங. கர்ங்கூலம்



ச. உன்னம்



௫. அராளம்



௬. பிறைக்கை



௭. அன்னபக்கம்



௮. மான்தலை

காங்கூலம்

" காங்கூ லம்மே கருதுங் காலைச்
சுட்டும் பேடும் பெருவிரல் மூன்றும்
ஒட்டிமுன் குவிய வநாமிகை முடங்கிச்
சிறுவிர னிமிர்த்த செய்கைத் தாகும்"

" முகிழ்காங் கூல முந்துற மொழிந்த
குவிகாங் கூலங் குவிவிழந் ததுவே"

" மலர்காங் கூல மதுமலர்ந் ததுவே"

" மோது பத்தும கோசத்தின்முன் அநாமிகை
வளைத்தால் ஈது காங்கூல மாகும்"

காங்கூலம் மூன்று வகைப்படும். அவை

க. குவிகாங்கூலம்

உ. முகிழ்காங்கூலம்

ங. விரிகாங்கூலம் (மலர்காங்கூலம்)

உன்னம்

உன்னம் என்பது குறட்டிக்கும் அன்னப்புள்ளுக்கும் பெயர். உன்னமாவது சிறுவிரலும் பெருவிரலும் தம்முட் கூட ஒழிந்த மூன்று விரலும் விட்டு நிமிர்வது.

" உன்ன நிலையே உணருங் காலைப்
பெருவிரல் சிறுவிரல் என்றிவை இணைய
வருமுறை மூன்று மலர்ந்து நிமிர் வதுவே"

இக்கை திரிசூலக்கை எனவும்படும் மூவிலைவேற்கை.

அராளம் – வளைந்தது.

" தையலே பதாகந் தன்னிலத் தர்ச்சனி தனைவளைத்த
கையராள மதாம்"

பதாகைக் கையில் சுட்டுவிரலை வளைத்தல்.

" அராள மாவது தறிவரக் கிளப்பிற்
பெருவிரல் குஞ்சித்துச் சுட்டுவிரன் முடக்கி
விரல்கண் மூன்றும் நிமிர்த்தகம் வளைத்தற்
குரிய தென்ப வுணர்ந்திசி னோரே "

**பிறைக்கை** – இக்கை இளம்பிறை எனப்படும்.

" சுட்டும் பேடும் அநாமிகை சிறுவிரல்
ஒட்டி யகம் வளைய வொசித்த பெருவிரல்
விட்டு நீங்கும் விதியிற் றென்ப "

" திட்டமாம் பதாகக் கையிற் சேருமங் குட்டந்தன்னை
சட்டமாய் நீட்ட அர்த்தச் சந்த்ரனும் "

பதாகைக் கையில் கட்டைவிரலை நீட்டுதல்...

**அன்னபக்கம்**

அன்னத்தின் சிறகு. இக்கை சர்ப்ப சிரக்கையில் சிறுவிரலை நீட்டல்.

" ஓதிய சர்ப் பசிரந் தன்னில் ஒரு கனிட்டிகையை
நீட்டில் ஈதம்ச பட்சக்கையாம் "

மிருகசிரம் – மான்தலை

மான்றலையாவது, பெருவிரலும் சிறுவிரலும் ஒழிந்த மூன்றும் தம்மிலொத்து ஒன்றி முன்னே இறைஞ்சி நிற்பது.

" மான்றலை யென்பது வகுக்குங் காலை
மூன்றிடை விரலு நிமிர்ந்தக மிறைஞ்சிப்
பெருவிரல் சிறுவிரல் என்றிவை நிமிர்ந்து
வருவ தென்ப வழக்கறிந் தோரே ".

" அரிசர்ப்ப சிரக்கை தன்னில் அங்குட்டம் கனியை
நீட்ட, மிருக சிரக்கை யென்று விளம்பினர் "

157. **சற்பசிரம் வண்டு தனிமுகு ளங்கபித்தம்**
**கத்தரிகை கோச மலிக்கையென — முத்தமிழோர்**
**எல்லாருஞ் சொன்னு ரிகல்வே னெடுந்தடங்கண்**
**வில்லார் நுதலாய் விரித்து.**

என்னுதலிற்றேவெனின்? அலிக்கையாமாறு உணர்த்திற்று

க. சர்ப்பசிரம்

உ. வண்டு

ங. முகுளம்

ச. கபித்தம்

ரு. கத்தரிகை

சா. கோசம் எனக் கண்டுகொள்க.

"சர்ப்பசிரம் வண்டு தனிமுகுளங் கத்தரிகை
விற்பனஞ்சேர் கோசங்க வித்தமுடன் — அற்புதமே
ஆகு மலிக்கைக ளாறென் றுரைப்பரே
பாகனைய சொல்லாய் பரிந்து"

1. சர்ப்பசிரம் – பாம்பின் தலை

"விரைசேர் பதாகந்தன்னில் விரல்களை வளைத்தால்
சர்ப்பசிர வத்தமாம்."

2. வண்டுக்கை - வண்டாவது (பூவண்டு)

"வண்டென் பதுவே வகுக்குங் காலை
அநாமிகை பெருவிர னனிமிக வளைந்து
தாநுனி யொன்றித் தகைசால் சிறுவிரல்
வாலிதி னிமிர மற்றைய வளைந்த
பாலின தென்ப பயன்தெரிந் தோரே"

பெருவிரலும் அணிவிரலும் வளைந்து நுனியொன்றிச் சிறுவிரல் நிமிர்ந்து சுட்டுவிரலும் நடுவிரலும் நெகிழ வளைந்து நிற்பது.

மத்திமம் அங்குட்டங் கூட்டி மன்னு தர்ச்சனி வளைத்து மத்த இரண்டும் நீட்ட வரும் பிரமரக்கை யாகும்.

3. முகுளம் மொட்டு

விரல்நுனி ஐந்துங்கூட்டி மின்னுங்கை முகுளமாகும் முகுளமாவது, ஐந்து விரலும் தம்மில் தலைகுவிந்து உயர்ந்து நிற்பது. முகிழ்க்கை.

'' முகுள மென்பது மொழியுங் காலை
ஐந்து விரலுந் தலைகுவிந் தேற்ப
வந்து நிகழ மாட்சித் தாகும் ''.

4. கபித்தம்

' கபித்த மென்பது காணுங் காலைச்
சுட்டுப் பெருவிர லொட்டி நுனிகௌவி
அல்ல மூன்று மெல்லப் பிடிப்பதுவே ''

சுட்டுவிரல் நுனியும் பெருவிரல் நுனியும் உகிர் நுனைக் கௌவிப்பிடித்து ஒழிந்த மூன்று விரலும் மெல்லெனப் பிடிப்பது.

இச்சையாய்ச் சிகரந்தன்னில் இயங்கும் அங்குட்டந் தன்னைத் தர்ச்சனியுடனே சேர்த்ததாகுமே கபித்த வத்தம். கபித்தம் – விளாம்பழம்.

5. கத்தரிகை – கத்தரிக்கோல் போன்ற கை.

அர்த்த பதாகத்திற்றர்ச்சனி கனி பின்னதாக வைத்தல் கத்தரி முகக்கை. கத்தரிக்கோல்.

# அலிக்கை 6



க. பாம்பின் தலை



உ. வண்டு



ந. முகுளம்



ச. (கபித்தம்) விளாம்பழம்



ரு. கத்தரிகை



சு. கோசம்

" கத்தரிகையே காண்டக விரிப்பின்
அத்திரி பதாகையி னணியின் புறத்தைச்
சுட்டக மொட்ட விட்டு நிமிர்ப் பதுவே"

திரிபதாகையின் முடங்கிய அணிவிரற் புறத்ததாகிய நடுவிரலைச் சுட்டு விரலோடு பொருந்த நிமிர்ப்பது.

6. கோசம் – பதுமகோசம், பதுமகோசிகம்

அங்குலிகளைப் பரப்பி ஐவிரல் நுனி வளைத்த செங்கைதான் பதுமகோசம்.

" பதும கோசகம் பகருங் காலை
ஒப்பக் கைவளைத் தைந்து விரலு
மெய்ப்பட வகன்ற விதியிற் ருகும்".

இவ்வாறு, அலிக்கை ஆறுங் கண்டு கொள்க.

158. **மகரம் வலம்புரி சங்குன்னமே பிண்டி**
**நிகரிலதை போது கபோதம் — பகரத்**
**தூமம் பிரமரமுஞ் சொன்னுர் பொதுக்கையெனத்**
**தூமநிகர் மென்குழலாய்! சாற்று.**

என்னுதலிற்ருேவெனின்? பொதுக்கையாமாறு உணர்த்திற்று.

க. மகரம்
உ. வலம்புரி
ங. சங்கு
ச. உன்னம்
ரு. பிண்டி
சு. இலதை
எ. கபோதம்
அ. தூமம்
கூ. பிரமரம் (வண்டு)

"உன்னமா மண்டல மகர வலம்புரியே
மெய்நிலையாஞ் சங்கிலதை மேம்படவே – மன்னிவரு
தூமமொடு பிண்டியாய்ச் சொன்னர் பொதுக்கை
தாம முறுங்குழலாய் தான்" [யெனத்

1. மகரம் – மகரமும் மீன் வகைகளில் ஒன்று.

"மகரமுக மென்பது வகுக்குங் காலைச்
சுட்டொடு பெருவிரல் கூட வொழிந்தவை
ஒட்டி நிமிர்ந்தாங் கொன்ரு வாகும்"

பெருவிரலும் சுட்டுவிரலும் நிமிர்ந்து கூட ஒழிந்த மூன்று விரலும் தம்முளொன்றி அதற்கு வேருய் நிற்பது. மகரம் இரட்டைக்கை முறையிலும் வரும்.

இச்சையாய் வலக்கைதன்னை இடக்கையின் புறத்தின் மேலே வைச்சிரு நுனியும் நீட்டி வரு கனிட்டிகை அங்குட்டம், மிச்சமாம் விரல்கள் நாலும் வெளிப்பட வேறே நீட்டில் மச்சமாம்.

2. வலம்புரி

இக்கை வலம்புரி சங்குபோன்று காட்டப்பெறும் கை.

"வலம்புரி கையே வாய்ந்த கனிட்டன்
நலந்திகழ் பெருவிர நயமுற நிமிர்ந்து
சுட்டுவிரல் முடங்கிச் சிறுவிரல் நடுவிரல்
விட்டுநிமிர்ந் திறைஞ்சும் விதியிற்றென்று
கூறுவர் தொன்னூற் குறிப்புணர்ந் தோரே"

சிறுவிரலும் பெருவிரலும் நிமிர்ந்து சுட்டுவிரலின் அகம் வளைந்து ஒழிந்த இரண்டும் நிமிர்ந்து இறைஞ்சி நிற்பது.

## பொதுக்கை 9



க. மகரம்



உ. வலம்புரி



ங. சங்கு



ச. உன்னம்



ரு. பிண்டி



௬. இலதை



௭. கபோதம்



௮. தூமம்



௯. ஆம்பிரம் (ஆம்பிரமம்)

3. சங்கு — இக்கை இரட்டைக்கையின் பகுதியிலும் வரும்.

வலக்கையின் சிகரத்துள்ளே வரமாங்குட்டஞ் சேர்த்து நிலைத்த நால்விரலும் பின்னே நீட்டியே கூட்டிப் பின்னும் வலக்கையால் குட்டங்கூட்டி மன்னுங்கை சங்கமாகும். (சங்கம்-சங்கு)
சங்கமாவது,

"சங்கெனப் படுவது சாற்றுங் காலைச்
சிறுவிரன் முதலாச் செறிவிர னான்கும்
பெறுமுறை வளையப் பெருவிர நிமிர்ந்தாங்
கிறுமுறைத் தென்ப வியல்புணர்ந் தோரே"

பெருவிரல் நிமிர ஒழிந்த நான்கு விரலும் வளைந்து நிற்பது, ஒற்றைக்கை முறை சங்கு எனப்படுவதுமிது.

4. உன்னமானது,

"உன்ன நிலையே உணருங்காலை பெருவிரல் சிறுவிரல் என்றிவை இணைய வருமுறை மூன்று மலர்ந்து நிமிர் வதுவே"

இக்கை, பொதுக்கையாதலான் பெண்கை வகையிலும் கூறப்படும்.

5. பிண்டி

பிண்டி - என்றது ஒன்ருய் ஆகுபெயரான் ஒற்றைக் கைக்கும் பெயராகும். பிண்டிக்குக் காட்டிய முப்பத்து மூன்று வகை எனக் கூறுங்கால் பொதுக்கை வகையின் உள்ளும் தனித்துக் கூறப்படும்.

"பிண்டி யென்பது பேசுங் காலைச்
சுட்டுப் பேடி யநாமிகை சிறுவிரல்
ஒட்டி நெகிழ முடங்க வவற்றின்மிசை
விலங்குறப் பெருவிரல் விட்டுங் கட்டியும்
இலங்குவிரல் வழிமுறை யொற்றது மியல்பே"

சுட்டுவிரல் பேடிவிரல் அநாமிகை சிறுவிரல் ஒட்டி நெகிழ முடங்க அவற்றின் மேலே குறுக்கிடப் பெருவிரல் கட்டி விலங்கி விரல்வழி முறையொற்றல்.

## 6. இலதை

இலதை யென்பது கொடி கோற்கொடி. இலந்தை என்னும் பொருளில் வழங்குகின்றது.

"இலதை யென்ப தியம்புங் காலைப்
பேடியும் சுட்டும் பிணைந்துட னிமிர்ந்து
கூடிய பெருவிரல் கீழ்வரை குறுகக்
கடையிரு விரலும் பின்னர் நிமிர்த்த
நடையின தென்ப நன்னெறிப் புலவர்"

நடுவிரலும் சுட்டுவிரலும் கூடிநிமிரப் பெருவிரல் அவற்றின் கீழ்வளர சேர ஒழிந்த இரண்டு விரலும் வழிமுறை பின்னே நிமிர்ந்து நிற்பது இலதை.

## 7. கபோதம்

பதாகைக் கையில் பெருவிரல் விட்டு நிமிர்வது.

"காணுங் காலைக் கபோத மென்பது
பேணிய பதாகையிற் பெருவிர நிமிரும்"

## 8. தூமம்

இது தூபமெனவும் வழங்குகின்றது. நிமிர்ந்த நடுவிரலும் சுட்டுவிரலும் பாதிப்பட விளையநிற்பது.

9. பிரமரம்

பிரமரமென்பதும் வண்டே.

" பிரமர மென்பது பேணுங் காலை
அநாமிகை நடுவிரல் அறவுறப் பொருந்தித்
தாம் வலஞ்சாயத் தகைசால் பெருவிரல்
ஒட்டிய நடுவுட் சேரச் சிறுவிரல்
சுட்டு வளைந்துபிற் றோன்றிய நிலையே "

அநாமிகை விரலும் நடுவிரலும் தம்மிற்பொருந்தி வலஞ்சாயப் பெருவிரல் நடுவிரலினுள்ளே சேரச் சுட்டு விரலும் சிறுவிரலும் பின்பே வளைந்து நிற்பது.

இவையொன்பதும் பொதுக்கையாமென்றவாறு என ஒற்றைக்கையின் பகுதி இவ்வாறு கண்டுகொள்க.

ஒற்றைக்கை மரபு முற்றும்.

குரு வாழ்க.

சிவாசலபதி சகாயம்.

# இரட்டைக்கை மரபு உ
## ( உட்பிரிவு )

159. **அஞ்சலி கபோத நண்டோ டழகுசூழ் சுவத்திகந்தான்**
**எஞ்சலில் கடகா வருத்தம் முற்சங்க மெழில் நிடத்தம்**
**வஞ்சமில் சீர்சால் தோரம் வக்கிரம்புட் பபுடமகரம்**
**குஞ்சரம் வருத்த மான கொற்கைமுத் திரிகமாமே.**

இனி இரட்டைக்கை பதினைந்தாவன

க. அஞ்சலி
உ. புட்பாஞ்சாலி
ங. பதுமாஞ்சலி
ச. சுவத்திகம்
ரு. கடகாவருத்தனம்
சூ. உத்துங்கம்
எ. நிடதம்
அ. நீடோளம்
கூ. புடபுட்பம்
ய. மகரம்
யக. யானைக்கொம்பு
யஉ. வக்கிரத்தம்
யங. வகுத்தம்
யச. கொற்கை
யரு. புத்திரிகம்

1. அஞ்சலி

" கைகளி ரண்டும் பதாகையாயுடன் கூட்
டமையி லஞ்சலி யென்மனர் புலவர் "

# இரட்டைக்கை 15



க. அஞ்சலி



உ. புட்பாஞ்சலி



ங. பதுமாஞ்சலி



ச. குறுக்கீடு (சுவத்திகம்)



ரு. கடகாவருத்தனம்



சா. உத்துங்கம்

2. புட்பாஞ்சலி

" கையொடு கையை மேற்பிடித் தப்பெரு
விரலேமே னிறுவ லுவமைபடு கண்ணாய் "

3. பதுமாஞ்சலி

" பதும கோசக்கை யிரண்டுங் கூட்டிற்
பதுமாஞ் சலியெனப் பகர்ந்தனர் புலவர் "

4. சுவத்திகம்

" பதாகை யிரண்டு மணிக்கட்டி லொன்றி
வருவது தானே சுவத்திக மாகும் "

5. கடகாவருத்தனம்

" இருகை கடக மணிக்கட்டி லொன்றிற்
கருது கடகா வருத்தன மென்ப "

6. உத்துங்கம்

" பிறைக்கை யொன்று சுவத்தி கமாக
வைக்க வுறுப்பமை யுத்துங்க மாமே "

7. நிடதம்

" வலக்கையது முட்டிக் கைசமி யஞ்செய
நிலக்கை நிடதக் கையா கும்மே "

8. நீடோளம்

" இருகையுஞ் சர்ப்ப சிரமாய் மடிமேல்
வைக்க நிருப்பது நீடோள மென்க "

9. புடப்புட்பம் (புட்பபுடம்)

" கையிரண்டுஞ் சர்ப்ப சிரமாய்க் கூட்டில்
பொய்யில் சிறப்புப் புடப்புட்பம் போற்று "

10. மகரக்கை

"பிறைக்கை மேலே பிறைக்கை நான்கும்
வைக்க மறுவில்மா மகரக் கையாம்"

11. யானைக்கொம்பு

"இருகை யெருத்தந் தோள் முழங்கைமேல்
வைக்கப் பொருத மதயானைக் கொம்பாம்"

12. வக்கிரத்தம்

"இருகை சுகதுண்ட நெஞ்செதிர் வைக்க
வரிவளை மாதே வக்கிரத் தமாம்"

13. வகுத்தம்

"முகுளக் கைக்கீழ்க் கபித்தக் கையாக்கில்
வகிர்தரு குழலாய் வகுத்த மாமே"

14. ஒற்றைக்கை (கொற்கை)

"கபித்தக்கை சுட்டி நுனிவிரித்துங் கூட்ட
மதித்திட்ட வொற்றைக் கையாம் வந்து,

15. புத்திரிகம்

"இருகை விரலுந் தம்முளே சேர்த்து
மருவச் செயுமது புத்திரி கம்மாம்"

கபோத மிரண்டுங் கூடல் கபோத விணைக்கையே, எனவே இரட்டைக்கை பதினைந்தும் இவ்வாறு கண்டு கொள்க.

இவை பதினைந்தும் இரட்டைக்கையாகும் என்றவாறு இவையும் எழிற்கையெனவும் தொழிற்கை எனவும் இரண்டு வகையாகக் கூறப்படும்.



எ. நிடதம்



அ. நிடோளம்



கூ. புட்பபுடம்



௰. மகரம்



௰க. யானைக்கொம்பு



௰உ. வக்கிரத்தம்

எழிற்கையாவது தாளத்திற்குங் காலிற்கு மேற்ப இயற்றி அழகுபெறக் காட்டுங்கை.

தொழிற்கையாவது அபிநயத்தின் பொருட் படத் தொழிற் படுத்திக் காட்டல்.

" எழிற்கை யழகே தொழிற்கை தேசிப்
பொருட்கை யவிநயப் பொருளா கும்மே"

பொருட்கை — பொருளுறக் காட்டுங்கை.

என இரட்டைக்கை பதினைந்தும் இவ்வாறு கண்டு கொள்க.

**இரட்டைக்கை மரபு முற்றும்.**

குரு வாழ்க.

*சிவாசலபதி சகாயம்.*

---

இரட்டைக்கைகள் கபோத வினைக்கையுடன் பதினாறு ஆகின்றன. பதினைந்து என்று கூறப்பட்டிருக்கிறது. கபோதக்கை ஒற்றைக்கையிலும் வருகிறது.

**அஞ்சலி** – இரண்டும் கையும் பதாகையாய் அகமொன்றுவது

**புட்பாஞ்சலி** – இரண்டுகையும் குடங்கையாய் வந்து ஒன்றுவது.

**பதுமாஞ்சலி** – இருகையும் பதுமகோசிகமாகக் கூட்டுவது,

**சுவத்திகம்**–மணிக்கட்டிற் பொருந்திய பதாகை இரண்டையும் மணிக்கட்டிலேற்றி வைப்பது.

**கடகாவருத்தம்** – இரண்டுகையும் கடகமாய் மணிக்கட்டுக்கு ஏற இயைந்து நிற்பது:

**உத்துங்கம்** – உற்சங்கம், ஒருகை பிறைக்கையாகக் கொண்டு ஒருகை அராளமாக்கி இரண்டு கையும் மணிக்கட்டில் ஏற்றி வைப்பது.

**நிடதம்** – முட்டியாக இரண்டு கையும் சமஞ் செய்வது.

**நிடோளம்** – ஊஞ்சல் (உடோளம்—தோரம்) இரண்டுகையும் பதாகையாக்கி அகம் புறமொன்றி முன்தாழ்ந்து நிற்பது.

**புடப்புட்பம்** – (புட்பபுடம்) குடங்கை இரண்டும் தம்மிற் பக்கங் காட்டி நிற்பது.

**மகரம்** – கபோதமிரண்டுகையும் அகம் புறம் ஒற்றவைப்பது.

**யானைக்கொம்பு** – இது குஞ்சரக்கை எனவும் கூறப்பெறும்.

**வக்கிரத்தம்** – வக்கிரம். அபயவத்தம் இருகையும் சுகதுண்டமாக நெஞ்சுற நோக்கி நெகிழ்ந்து நிற்பது.

**வருத்தம்** – (வருத்தம்) முகுளக்கையில் கபோதக்கையை எதிரிட்டுச் சேர்ப்பது. கபோதம் – புறா.

"எஞ்சுத லில்லா வினைக் கையியம்பில்
அஞ்சலி தன்னொடு புட்பாஞ் சலியே
பதுமாஞ் சலியே கபோதங் கற்கடகம்
நலமாஞ் சுவத்திகங் கடகா வருத்தம்
நிடதந் தோர முற்சங்க மேம்பட
உறுபுட் பபுட மகரஞ் சயந்தம்
அந்தமில் காட்சி யபய வத்தம்
எண்ணிய வருத்த மானந் தன்னொடு
பண்ணுங் காலைப் பதினைந் தென்ப"



கங. ஊஞ்சல்



கச. கொற்கை



கரு. புத்திரிகம்



வகுத்தம்



பிரமரம்

★

இக்கை வகைகளை வரைந்து உதவியவர்

அரியலூர் அரசு உயர்நிலைப்பள்ளி ஓவிய ஆசிரியர்

**திரு. ரா. சுப்பையா அவர்கள்**

★

# அங்கக்கிரியை மர்பு — ரு

## (உட்பிரிவு)

இதன் வெண்பா இல்லை.

“சரிகை புரிகை சமகலி விதியையே
யருத்த கலிகை புராடித மென்றூர்
அருத்த புராடிதஞ் சுவத்திக மென்றூர்
உல்லோலங் குரத்தம் வேட்டன மென்றூர்
உபவேட் டனமே திக்கே பனமே
பிராவி ருத்தமோ டுக்கே பனமே
யக்கே பனமே நிகுட்ட மென்றூங்
கிவ்வெட் டென்ப வங்கத் தொழிலே”

என்பது அங்கக் கிரியைகள் பதினூறுவன என்றவாறு.

க. சரிகை
உ. புரிகை
ங. சமகலிவிதி
ச. அருத்தகலிகை
ரு. புராடிதம்
சு. அருத்தபுராடிதம்
எ. சுவத்திகம்
அ. உல்லோலம்
கூ. குரத்தம்
ய. வேட்டனம்
யக. உபவேட்டனம்
யஉ. திக்கேபனம்

௰௩. பிராவிருத்தம்
௰௪. உக்கேபனம்
௰௫. அக்கேபனம்
௰௬. நிகுட்டம்

1, சரிகையாவது

பாதங்களைப் புரிகையாக்கிப் பக்கமூர்தல்

2. புரிகையாவது

" சமமுகமாக நடந்து நிற்றல்
புரிகை யென்று புகறல் வேண்டும் "

3. சமகலிவிதி (சமகலிகை விதி)

" சரிகையும் புரிகையும் தம்மிற் கூடி
இருபாதமு மியைந்து வகையாம் மூன்றும்
பின்னும் பக்கமும் போக்கும் தன்மை
என்ப சமகலி "

4. அருத்தகலிகையாவது (ஊர்த்துவகலிகை)

" அருத்த கலிகை யமைவரக் கிளப்பின்
சரிகை புரிகையு மொருபாற் கொளலே "

5. புராடிதமாவது (பிருட்டகம்)

இது, அருத்த கலிகை இரண்டு பக்கமும் இயைவது புராடிதம் இயல்பிற் றென்ப.

6. அருத்தபுராடிதமாவது (அருத்த பிருட்டகம்)

" புராடித முலவி அருத்த புராடித மாகுமென்ப
ஆகுமென்ப "

7. சுவத்திகமாவது

(கைகட்டிக் கொள்ளுதல்) பாதம் பிணைத்துக் கொள்ளுதல்)

சுவத்திக நிலையே சுவத்திகமாகும்.

(சுவத்திகம், குறுக்கீடு கை, கால் இரண்டிற்கும்)

8. உல்லோலமாவது

"இரண்டு காலும் தம்மின் மாறி
உள்ளாளங் கொள்ளல் உல்லோல மாகும்
உள்ளாளம் புடை யொற்றியாகும்"

9. குரத்தமாவது

"சுவத்திக நெளித்தல் அத்திற னிழைத்தல்
குரத்த மென்று கூறல் வேண்டும்"

10. வேட்டனமாவது

"ஒருகால் தன்னில் ஒருகால் கூடுதல்
வேட்டன மெனவே யுணர்தல் வேண்டும்"

11. உபவேட்டனமாவது

"வேட்டன முறையிற் பின்கட் டுதலே
உபவேட் டனமென உணர்தல் வேண்டும்"

12. திக்கேபனமாவது

"முன்னொரு காலினை எடுத்து முன்னால்
நீட்டியும் வீசியும் நிகுட்டஞ் செய்தல்
திக்கே பனமெனத் திகழ்தல் மரபே"

13. பிராவிருத்தமாவது

"நிலநித வடிவிற் கடிச்சா ரித்து
வருவ தென்ப பிராவிருத் தம்மே"

14. உக்கேபனமாவது

"பாத முழந்தா ளளவும் பின்னற்
குஞ்சித் தெடுத்த லுக்கே பனமே"

15. அக்கேபனமாவது

"முன்ன ரெடுப்ப தக்கே பனமே"

நின்றதாளின் முழந்தாளளவும் குஞ்சித் தெடுப்பது.

16. நிகுட்டமாவது

"நிகுட்ட மென்ப து[illegible]ாகும்"

பாதங்களில் விரல்வந்து நிகுட்டல் (உதைத்தல்) நிகுட்ட மென்ப.

இவ்வாறு இவ்வகை அங்கக்கிரியை பதினாறுங் கண்டு கொள்க.

அங்கக்கிரியை மரபு முற்றும்.

குரு வாழ்க.

சிவாசலபதி சகாயம்.

---

"அறுவகை நிலையும் ஐவகைப் பாதமும்
ஈரெண் வகைய வங்கக் கிரியையும்
வருத்தனை நான்கும் நிருத்தக்கை முப்பதும்
அத்தகு தொழில வாகு மென்ப"

என அடியார்க்கு நல்லார் சிலப்பு அரங்கேற்று காதையிற் கூறி, இவ்வ விரிப்பிற் பெருகும் எனக் கூறுது விடுத்த அங்கக்கிரியை பதினாறையும் இந்நூல் உரை எடுத்துக்காட்டி விரிக்கின்றது.

சரிகை, புரிகை, சமகலி, திரிகை, ஊர்த்துவகலிகை, பிருட்டகம், அர்த்தபிருட்டகம், சுவத்திகம், உல்லோலம் குர்த்தனம், வேட்டனம், உபவேட்டனம், தானபதப்பிராய விருத்தம், உக்ஷேபணம், அவக்ஷேபணம். நிகுஞ்சனம் என்பன ஆங்குள்ள கீழ்க்குறிப்பு.

நாடகமென்பது நவரசத்தியல்பே என்பது கூத்திலக்கணம் ஆதலின், கூத்து ஒன்பான் சுவைகளிற் பிறப்பதாம். அவை

"அகச்சுவை யுவகை நகையே யழுகை
வெகுளி பெருமித மச்ச மிளிவரல்
மருட்கை நடுநிலை யெனவொன் பதாகும்"

என்னும் சூத்திரத்துட் கூறிய நகை முதலிய நவரசங்களாம்.

நவரசம் ஒன்பதுக்கும் கைவகை

| | |
|---|---|
| நகைச் சுவைக்கு | அலர் பல்லவக்கை |
| அவலச் சுவைக்கு | முட்டிக்கை |
| இகழ்ச்சிச் சுவைக்கு | சூசிக்கை |
| சோகச் சுவைக்குப் | பதாகைக்கை |
| பயச் சுவைக்கு | வண்டுக்கை |
| பெருமைச் சுவைக்கு | மான்றலைக்கை |
| வீரச் சுவைக்கு | தமருகக்கை |
| உவகைச் சுவைக்கு | சிகரக்கை |
| அமைதிச் சுவைக்கு | அஞ்சலிக்கை |

"நெற்றிக்கும் உந்திச் சுழிக்குமொரு நேரே நூல்
எற்றிப் பிடித்தங் கிருந்தளவும் — பற்றியுடல்
உன்னிலொரு சாண் மூவந்தறிவோர் தன்சபையில்
மன்னியிருப் பார்மண் டலம்"

ஒன்பது வகைத் தலைச்செய்கை.

எட்டுவகைப் பார்வை, (கண்களின் செய்கை)

மூவகைக் கழுத்தின் வேற்றுமைச் செய்கை.

என்பனவும் அங்கக்கிரியைகள்.

**உடலில் கால், கை, தலை**

சமம் என்பது எல்லாவற்றிற்கும் பொது.

**தலையின் செய்கை**

1. உயரத் தூக்கியது
2. கீழ் நோக்கியது
3. உருள்வது
4. வட்டமாக வளைவது
5. பக்கத்தில் அசைவது
6. மேலும் கீழும் அசைவது
7. திரும்பிப்பார்ப்பது
8. மேலே தூக்கப்பெற்றது
9. அகன்று வீசுதல்

**எண்வகைப் பார்வை (கண்) சமம்**

1. சுழற்றிப்பார்த்தல்
2. பக்கமாகப் பார்த்தல்
3. அகன்ற பார்வை
4. மூடினது
5. மேலே பார்த்தல்
6. மேலும் கீழும் பார்த்தல்
7. கீழ்நோக்கும் பார்வை

**மூவகைக் கழுத்துச் செய்கை**

கழுத்தைக் குறுக்கே (மேல்கீழாக) அழகாய் அசைத்தல்.

பாம்பு போவதுபோல் கழுத்தை இரண்டு பக்கங்களிலும் உயர்த்தி அசைத்தல்.

இடம் வலமாக பாதிச் சந்திரனைப்போல கழுத்தை அசைத்தல்.

இவை யாவும் அங்கக் கிரியையின்பாற்பட்டுச் சேர்ந்தவை ஆகும்.

# காற்றெழில் மரபு — ச

## (காற்கிரியை மரபு)

160. **மண்டிலமே வந்தனைகொள் வர்த்தனையே**
**வான்கரணம்**
**பண்டுசெயா லீடம் பகர்சித்து — மிண்டும்**
**கடிச்சாரி குஞ்சிப்புக் கட்டுப் புரியே**
**களியக்கா லுள்ளாளங் காண்.**

என்னுதலிற்றோவெனின்? காற்கிரியையாமாறுணர்த்தி, தேசி வடுகு சிங்களம் என்னும் மூன்றற்கும் உரிய காற்றெழில்கள் கூறுவதுணர்த்திற்று.

இவை, தேசிக்குரிய கால்களாவன: வறுமாறு

க. மண்டிலம் (மண்டலம்)
உ. வருத்தனை (வர்த்தனை)
ந. கரணம்
ச. ஆலீடம்
ரு. சித்து (கீற்று)
சா. கடிச்சாரி
எ. குஞ்சிப்பு
அ. கட்டுப்புரி
கூ. களியக்கால்
ய. உள்ளாளம்

என்பன கண்டுகொள்க.

---

கீற்று கடிசரி முதலாகிய தேசிக்குரிய கால்களும், சுற்றுதல் எறிதல் உடைதல் முதலாகிய வடுகிற்குரிய கால்களும், உடற்றூக்கு முதலாகிய உடலவர்த்தனையும் அகக்கூத்திற்குரியன.

1. மண்டலமாவது (மண்டிலம்)

இருகாலும் இருபக்கம் வளையநிற்குமது.

2. வர்த்தனையாவது (வருத்தனை)

சமநிலைக் காலிலே யொரு காலை
முன்னே யூன்றி யக்கால் தன்னை
வாங்கிப் பின்னூன்றி வலம்புரி வது

3. கரணமாவது

பாத முயர்த்தி உடம்பொடு சேர்த்தல்

4. ஆலீடமாவது

மண்டலமாக நின்று ஒருகாலிலே
சாய்த்துத் திரியுமது.

5. சித்தாவது

சமநிலையிலே நின்று மருங்கை அசைத்தல்

6. கடிச்சாரியாவது

அல்குலமைத்தல்

7. குஞ்சிப்பாவது

காலை எடுத்து வளைத்தல் (வளைத்துக் குஞ்சித்தல்)

8. கட்டுப்புரியாவது

ஒருகாலையுதைத்துப் பக்கத்திலே குத்தி
ஒரு காலை முன்னே யூன்றிக் காலோடு கட்டுதல்

9. களியக்காலாவது

உற்கட்டித நிற்கலாக இரண்டு காலையும்
முன்னூன்றி மாறி மாறி வருவது.

10. உள்ளாளமாவது

குஞ்சித்த காலைச் சுற்றி யொற்றி அணைய வைப்பது.

**161. காணக் கடத்தலாங் கம்பித்த லூர்தலாம்**
**நாணமுறு மாதே நடுக்கலாம் — பேணுங்கால்**
**வாங்கலே யப்புதல் மற்றனுக்கல் வாசிப்புத்**
**தேங்கமழ் தேசித் திறம்.**

க. கடத்தல் (கட்டல்)

உ. கம்பித்தல்

ந. ஊர்தல்

ச. நடுக்கல்

ரு. வாங்கல்

சு. அப்புதல்

எ. அனுக்குதல்

அ. வாசிப்பு

**என்பன** கண்டுகொள்க.

1. கட்டலாவது (கடத்தல்)

வலக்காலை இடப்பக்கத்திலே குத்தி இடக்காலை வலக்காலுதைப்ப இடக்காலை வலப்பக்கத்திலே அக்காலை வலக்காலோடு கட்டி வீசுவது.

2. கம்பித்தல்

இரண்டு காலையும் பக்கத்திலே கும்பித்தாற்போல் கூட்டுவது.

3. ஊர்தலாவது

முன்னும் பின்னும் பக்கமும் பலகால் ஊர்வது.

4. நடுக்கலாவது

காலிலே கதகிரம் வருதல்

5. வாங்குதலாவது

ஒருகாலை முன்னே குத்திப் புரிந்து வாங்குமது.

6. அப்புதலாவது

வலக்கால் உதைப்ப இடக்கால் புரட்டியும்
இடக்கால் உதைப்ப வலக்கால் புரட்டியும் வருவது

7. அனுக்கலாவது

தலத்திற் பாதம் பட்டது படாதென உதைப்பது.

8. வாசிப்பாவது (ஆச்சரிப்பாவது)

பாதத்தைத் தூக்கி இருபாலும் போக்கி உள்ளே
உதைப்பது

162. **ஆராத குந்தலே யாச்சரிப்புக் கானெளித்தல்**
**வரார் முலைமாதே மாறுகால் — சீராகு**
**மிட்டுப் புகுதல் இடஞ்சுற்றி வாங்கலே**
**யெட்டு முடற்புரியு மோர்.**

க. குந்தல ஆச்சரிப்பு (கொண்டாட்டம்)

உ. நெளித்தல்

ங. மாறுகால்

ச. இட்டுப்புகுதல்

ரு. சுற்றிவாங்கல்

சு. உடற்புரி

1. குந்தலாவது

பெருவிரல் நீக்க இணைவிரல் நான்கு
முன்னே மடித்துக் குந்தித் திரியுமது.

2. **நெளித்தலாவது**

காலை முன்னே யூன்றி நெளிக்குமது.

3. **மாறுகாலாவது**

கால்களை மாறிச் சுவத்திகமாக நின்று குத்தல்.

4. **இட்டுப்புகுதலாவது**

ஒருகால் முன்னே மற்றைக் காலை மறிக்குமது.
இது இடப்புரி எனவும் வழங்கும்.

5. **சுற்றிவாங்கலாவது**

காலை எடுத்துச் சுலாவி வாங்குவது.
இது சுரிவாங்கல் எனவும் வழங்கும்.

6. **உடற்புரியாவது**

முகமும் பாதமும் நேர்நிற்க
உடலைப் புரியுமது.

இவ்வாறு தேசிக்குரிய காற்றொழில்கள் இருபத்திநான்கினையும் கண்டுகொள்க.

**163.** **சுற்றுத லெறித லுடைத்த லொட்டுதல்**
**கட்டுதல் வெட்டுதல் போக்குதல் நீக்கல்**
**முறுக்கல் அனுக்கல் வீசுதல் குடுப்புக்**
**கால்கத் திரிகை கூட்டுதல் காற்றொழில்.**

என்பது வடுகிற்கால்கள் வருமாறுணர்த்திற்று.

அவை, க. சுற்றுதல்
உ. எறிதல்
ங. உடைதல்
ச. ஒட்டுதல்
ரு. கட்டுதல்

சு. வெட்டுதல்

எ. போக்குதல்

அ. நீக்கல்

கூ. முறுக்கல்

ய. அனுக்கல்

யக. வீசுதல்

யஉ. குடுப்புக்கால்

யங. கத்திரிகை

யச. கூட்டுதல்

எனவிவை பதினுன்கும் வடுகிற்குரிய கால்களாம் என்றவாறு.

1. சுற்றுதலாவது

பாதத்தைக் குஞ்சித்துச் சுற்றுதல்.

2. எரிதலாவது

சுற்றின காலை மோதல்.

3. உடைத்தலாவது

சுற்றின காலை இடங்கொள்வது.

4. ஒட்டுதலாவது

சுற்றின காலைப் புரிந்து உதைத்து மாறியொட்டுவது.

5. கட்டலாவது

கால்மேற் பல கால் கட்டுவது.

6. வெட்டுதலாவது

ஒரு காலைப் பின்னே குத்தி ஒரு காலைப் பின்னேயும் வைத்தல்.

7. போக்கலாவது

ஒரு காலைப் பின்னே நெளிப்ப பக்கத்திலே குத்தி முன்னே ஒருகாலை வீசுவது.

8. நீக்குதலாவது

கூட்டியதொழில் (காற்றொழில்) களை நீக்குதல்.

9. முறுக்கலாவது

காலொடு கால் பிணைந்து முறுக்கல்

10. அனுக்குதலாவது

நிலத்தினும் உடலினும் சிறிது தட்டவருவது,

11. வீசுதலாவது

காலை எடுத்து நாலு பாலும் (பக்கமும்) ஒட்டி வீசுவது.

12. குடுப்பாவது ( குடுப்புக்கால் )

காலை குடுக்கிக் (குடுக்கிக்) கூட்டுவது. (குடுப்புக் காலைக் கடுகிக் கூட்டுவது)

13. கத்தரிகையாவது

கத்தரிக்கோல் போன்று கால்களை நிலைத்துக் கூட்டுவது.

14. கூட்டுதலாவது

முன் சொன்னவாறே பல்வகையானும் கால்களைக் கூட்டுவது.

இவ்வாறு வடுகிற்குரிய கால்கள் பதினாலுங் கண்டு கொள்க.

இவற்றுடன் இரட்டுதல், குத்தல் எனும் இரண்டு கால்கள் சேர்த்து வடுகிற்கால் பதினாறெனவும் கூறலுமுண்டு.

164. மெய்சாய் விடைநெரிவு மெய்ச்சுழிவோ
டாங்கணைதல்

கைதூக் கசைத்தலே பற்றலொடு — மெய்கால்
விரித்தல் குவித்த லிவையே சிங்களமாய்த்
தெரித்தனர் வண்டமிழோர் தேர்ந்து.

என்பது என்னுதலிற்றோவெனின் ? சிங்களக் கால்கள் வருமாறுணர்த்திற்று.

அவை,

க. மெய்சாய்த்தல்
உ இடைநெரித்தல்
ங. சுழித்தல்
ச, அணைத்தல்
ரு. கைதூக்கல் – கைதூக்கசைத்தல்
சு. பற்றல்
எ. விரித்தல்
அ. குவித்தல் எனவிவை.

இவற்றுள்

1. மெய்சாய்த்தலாவது
நேர்கின்ற தொழிற்கீடாக உடலைச்சாய்த்தல்

2. இடைநெரிவாவது
முதல் தொடங்கி இடையை நெரிப்பது

3. சுழித்தலாவது
மெய்யினைச் சொல்லுக்கீடாக வளைக்குமது

4. அணைதலாவது
அணைத்தலான பாவகம்

5. கைதூக்கசைத்தலாவது

தாளத்திற்குங்கீதத்திற்குமொக்கக்கையசைத்தல்

6. பற்றலாவது

காலத்துடன் காலம் புகுமிடத்து மெய்யுறப் பற்றுதல்

7. விரித்தலாவது

சொல்லுக்கீடாக விரிக்குமது.

8. குவித்தலாவது

வேண்டும் சொல்லுக்குக் குவித்தல்.

இவை சிங்களமெனக் கொள்க.

---

அடியார்க்குநல்லார், இந்நூல் கூறும் சிங்களக்கால்களை உடலவர்த்தனை என்பர்.

ஈண்டுச் சிங்களமென்று வழங்கி வருகின்ற கூத்து சொல்லிற்றிலராலெனின்? சிங்களமிருவகை நிலையினுமெய்தும் என்னுஞ் சூத்திரத்தான் இதற்கு வேறு கால்களின்மையினென்க.

**பாதத்தொழில்**

"ஓப்பாஞ் சமநிலை யுற்கடிதஞ் சஞ்சாரம்
தப்பாத காஞ்சிதமே சாலவுய — ரிப்பான்மை
வஞ்சி மருங்குல் வகுத்தனர் குஞ்சிப்புப்
பஞ்சவித பாதத் தொழில்"

அவை, சமநிலை, உற்கட்டிதம், சஞ்சாரம் காஞ்சிதம் என்பனவாம்.

எடுத்தபாதம் குஞ்சிப்பாகும்.

காஞ்சிதம் — இதன் வரலாறு காணப்படவில்லை.

அஞ்சிதம் என்பது பரத நூலிற் காணப்படுகின்றது. அது

"அஞ்சித மென்ப தணிகுதி யூன்றி,
மிஞ்சிய படத்தை மேனேக் குதலாம்"

"முன்னிய சீர் வைணவம்"

" வைத்துக் குத்துதல் வாங்குதல் வகுத்தல்
மெத்தன வாவொடு கிளர்பதா கைமுதல்
செப்பமொ டந்த விசையுடன் புணர்த்தல்
கைத்தவை யழகுடன் வருவது தாளத்
தொத்த சிங்கள மென்றிசி னேரே" எனவும்

சிங்களத்திற்குரித்தாகிய கால்கள் எட்டும் கண்டு கொள்க.

165. தேசியின் நாலாருஞ் சிங்களத்தின் காலெட்டாம்
வீசுவடு கின்கால் மிகுபதின்ன் — கேசில்லா
(கேசிலிவை)
அங்கக் கிரியை பதினறெண வுரைத்தார்
சங்கத் தமிழோர்கள் தாம்.

தேசி, வடுகு சிங்களமென்றிந்த மூன்றிற்கும் காற்றொழில்கள் கண்டு கொள்க.

காற்கிரியை முற்றிற்று.

குரு வாழ்க.

சிவாசலபதி சகாயம்.



## அரங்கவிலக்கணம் — ரு.

திருமகள் மருவரங்கத் திலக்கணத்
தரன்செய் நிர்த்தம்
பரவவீ தமைக்க வுன்னிப்
பகர்வெகு தான்யவாண்டில்
விரவு பூரணையோ ணத்தில்
மேவுபஞ் சமிநாட்பூவில்
திரமென வீசானத்திற் சிறப்பொடு
முகுர்த்தஞ் செய்தே. க

செய்கிளை கணு(தனு)வோர் சாணுய்த்
திகழும்கோலி னிரு லாறு
பெய்விர லங்குலத்தாற் பேர்பெறு
கீழ்மேற் பன்னு
ளெய்துதற் குத்தரத்தி லிருநான்கு
முழமாய்ச் சூழ
எய்திவெள் ளியினுற்பண்பி னிசைத்துச்
சந்தனத் தூணட்டி உ

நாட்டுமுத் திரமேற்கைகள் நான்குதிக்
கினுங்கொண் டேற்றித்
தீட்டுசெம் பொற்றகட்டாற் றிருந்தமேய்ந்
தேகீழ் மேற்பால்
நீட்டுமுத் தாரத்திற்சாள ரஞ்செய்து
நிகழ்தேக் கிற்பூந்
தோட்டறி முரலும்வாய்தல் துலங்கியுண்
டாக்கி யுள்ளாய். ௩

---

நாடக அரங்கின் இலக்கணங்கூறும் ஒன்று முதற் பதினைந்து விருத்தப்பாக்களும் இடையிற் பிற நூலினின்றும் சேர்க்கப் பட்டவைபோலும். இவை பரத சங்கிரகத்திலும் தொகுக்கப் பெற்றுள்ளன.

உள்ளிலங் கங்குவட்டத் துவாரபர்
லகருங் கீழ்பால்
தெள்ளிய விரவியங்கி திக்கினி
லனலாந் தெற்கில்
உள்ளுதெட் சணமூர்த்தத் துடனிரு
தியிற்க ணேசன்
வள்ளிய வருணனிற் சேனபதி
வாயு திக்கில் ச.

திக்கிலா பத்தா ரண்ணன்
திகழ்வடக் கிற்சண்டேசன்
மிக்குறு வடகீழ்ப் பாலில்வயிரவன்
மண்ணில் வேதன்
செக்கர்வான் மாயன்ருனுந் தேவர்மற்
ரேருருஞ் சூழப்
பிக்கநா டகசாலைக்குட் புனிதநிர்த்
தனஞ்செய் காலை. ரு

காலையில் நந்திமத்த ளம்புடைத்
திடச் சங்கீத
மேலுந்தும் புரர்கள்பாட விதத்திற்
பார்ப்பதி யாள்தாள
மோலிட வொத்ததேவர் மற்றுளோ
ருவந்தி றைஞ்ச
ஆலம துண்டகண்ட னருள்நடம்
புரிந்தா னுங்கே. சு.

ஆங்கவ னடம்புரிந்த வரங்கம்போற்
சமைத்துப் பொற்பட்
டோங்குமேற் கட்டிதூக்கி யொளிருதற்
பணங்கள் கல்லி
தேங்கிள நீர்பழங்கள் திகழ்கழை
கதலித் தாறு
மாங்குழை தெர்ப்பைதோ ரணம்வயங்
கிடவ மைத்து. எ.

அமைக்கு நீடரங்கத் தின்பாலாடுதற்
குரிய பாவை
இமைக்கு தலியற்ரு மாயையியலுரு
வசியார் கச்சி
யுமைக்கு மேகம்பருக்கு முயர்நிர்த்தம்
புரியப் பாரிற்
சமைக்குமைக் கோவர்தங்கள் சாதியிற்
றளிகை யாரில். அ.

இனியதேன் கனியால்கன்ன லியலுந்தெள்
ளமுதிற் செய்த
வனேயநல் லுருவங்காம ரதியலர்த்
திருவே யென்னக்
கனேகடற் புவியிற்கா முகர்மட
லேந்தச் சித்தை
தினேயினே யெழுதினுலு மெழுதாச்சேயிழை
ஐந்தா மாண்டில். கூ.

ஆரமாம் பேதைபக்கு வத்தருங்
கீத நிர்த்தந்
தேரவிம் மயிலேயென்னத் திகழ்நெல்லிக்
காப்பு மஞ்சள்
போரமஞ் சனநீராட்டிப் பொன்னுடை
யணிபூண் சாந்து
சேரவே தரித்தேயாசான் சிறப்புடனு
வப்பாங் காலம் ய.

காலம் வேதியர்முகுர்த்தங் கருதிய
வரங்கிற் கெந்த
மாலேக ளுற்றித்தீபம் வளர்கெவ்யம்
புண்ணி யாங்கம்
கோலிமேற் கணேசன்பூசை குறைவற
வட்டத் திக்கில்
நாலு சூழுலகபாலர் கஊயுமருச்
சித்தன் பாக யக.

அன்பினிற் பூரணகும்பம் பாலிகையோ
மங்கலை யியற்றி
இன்பினிற் றூபதீபங் கொண்டியல்பாத்ய
பூசை செய்து
நன்பினெற் றண்டுலத்தில் நளினமீ
தெழுதிச் செய்ய
பொன்புனை மாதையந்தப் பூவினில்
நிறுத்தி முன்னில் ௰௨

முன்னமே சயந்தன்பெற்ற மூங்கில்நன்
னீர்தா னூட்டிப்
பொன்னின பட்டாடைமாலை புனைந்துமூர்
வலஞ்செய் தாங்கே
பன்னுமத் தண்டியத்தைப் பற்றியே
நடஞ் செய்விக்கு
மன்னிலை மேளதாள மதிரிடி
போன் முழங்க ௰௩.

முழங்குநன் னடனமீசன் முயல்விதிப்
படிசெய் வித்து
விளங்கிய கோயிலன்பாய் மேவிவீழ்ந்
திறைஞ்சிப் போற்றித்
தழங்குமங் கிலியநாணைத் தரித்தபி
னில்ல மீதில்
உளங்களித் தினிதின்மேவி யுற்றவர்
மற்றோர்க் கெல்லாம் ௰௪.

ஆமென விருந்துசெய்வித் தன்றுதொட்
டேபல் பாடை
பாமிகு ராகதாளம் பரதநன்
னடனம் பற்றித்
தேமிகு தேவர்சன்ன தியிலரங்
கேற்றி யென்றும்
பூமியில் வாழிநிர்த்தம் புரியுமிவ்
வரங்கென் றோதே. ௰௫.

**அரங்கவிலக்கணம் முற்றும்.**

குரு வாழ்க. சிவாசலபதி சகாயம்.

# பிரம்பிலக்கணம் — சா

(வெண்பா)

166. மூலமே வேதா முளைத்தண்டு மாவிட்ணு
ஓலமுன் ளான துருத்திரனும் — சால
வெழுந்தகணு மாகேச னேயா மதனிற்
கொழுந்து சதாசிவமாய்க் கூறு. க

167. அஞ்சுகணு வீசன் அதனிடு வேநெடுமால்
விஞ்சுமஞ் சக்கரத்தால் மெய்ப்பிரம்பை — யஞ்சப்
பிடித்துக் கவுத்துவமே பேசி யுலகெண்ண
வெடுத்தவனே வேதா வெண். (வென்) உ

(விஞ்சிடு மஞ்சக்கரத்தால் – விஞ்சு முச்சக்கரத்தால்)

168. அச்சமற ஆதிநின்று ஆடியதோர் தாண்டவத்தை
மெச்சுதலா மின்னைமிக வாட்டுவிக்க் — முச்சா
ணரைப்பிரம்பு மும்மூர்த்தி யாங்கவுத்து வத்தைத்
தரைக்குளெவ ரும்புகழத் தாக்கு. ௩

169. ஆதி யொருசா ணத்திருமா லோவிருசாண்
நீதிப் பிரம னிலையரைச்சாண் — ஓது
மதுவார்ந்த கூந்தல் வரிநெடுங்கண் மாதே
யிதுபிரம் பென்றே யெடு. ௪

170. எண்ணும் படிகேளாய் எண்ணஞ் சிரண்டுவிரல்
பண்ணுபர தப்பிரம்பைப் பற்றினுல்–பெண்ணமுதே
வான்றழைக்கும் பான்மதிசேர் வையகமும்
வாழ்வுண்டாம்
கோன்றழைக்கு மென்றே குறி. ரு

171. வேத்திரத்தின் பாத விதமாம் விதிபரத
சாத்திரத்தின் மட்டளவுஞ் சாணளவும்-பாத்திரத்தின்
மண்டலத்தின் காலளவும் வைத்த படியளவும்
கொண்டடிப் பார்கோலா லடி. சு

172. தானெடுத் தாட்டுவிக்குந் தக்கபர தப்பிரம்பி
லூன்படுத்தி ரண்டங்குலங் குறையில் —
மான்படுத்தும்
கண்ணியே யோரங் குலமே றினுமாகா
தண்ணிலே சாவென்று சாற்று. (தன்னிலே) எ

173. நட்டுவற்கு மூன்றரைச்சா ணந்திக் கிரட்டிப்பு
முட்டிபுகும் பார்ப்பார்க்கு மும்மூன்றே —
நிட்டையுடன்
பட்ட வரையெழுப்பும் பஞ்சாட் சரத்தோர்க்கு
எட்டிலகு லட்சணமே யெண். அ

பிரம்பிலக்கணம் முற்றிற்று.

நிருத்தமரபு முற்றிற்று.

குரு வாழ்க. சிவாசலபதி சகாயம்.

---

நாடகவரங்கில் நட்டுவனர் கையிலுள்ள பயிற்சிக்குரிய பிரம்பு.
இவ்வெண்பாக்கள் மகாபரத சூடாமணியிலும் பரதசங்கிரகத்திலும் எடுத்தாளப்பெற்றுள்ளன. பிரம்பு அளவில் குறையக்கூடாது. அளவுக்குறையக் கேடுண்டாம்.
நாடகாசிரியன் கைப்பிரம்பின் இலக்கணம்.
இதனைக் கையில் வைத்துக்கொண்டு நாட்டியம் பயிற்றுவிப்பான்.
அஞ்சக்கரம் – பஞ்சாக்கரம்.
விஞ்ச மஞ்சக்கரத்தால் (விஞ்சுமமுச்சக்கரத்தால் பி-ம்)
எடுத்தவன் – நட்டுவன். வேதா – பிரம்மன்.
ஆதி – சிவபெருமான். மின்னை – பெண்ணை.
கவுத்துவமென்றது நாட்டியக்கலையை.
வேத்திரம் – பிரம்பு – பாத்திரம் – நாடகம் பயிலும் பெண்.
மும்மூன்று – ஒன்பது சாண்.
பஞ்சாட்சரத்தோர், ஐந்தெழுத்தோதும் சைவக்குரவர்.

# தாளமரபு

## தாளமரபு வரலாறு

174. மறையோன் திருமால் *மதிமுடி யோனென்று
மிறையோரை யெல்லா மிறைஞ்சி - மறைமுதலாம்
பாடன்முத லாய்மூன்றும் பண்பா யறிந்தியற்ற
நாடினேன் தாளத்தை நன்கு.

* (மணிமுடியோன்)

**என்னுதலிற்றோவெனின்? தாளத்திலக்கணம் உணர்த்திற்று திரிமூர்த்திகளையும் பணிந்து பாரிடத்துப் பாடன் முதலாகச் சொல்லப்பட்ட இசையுமுழவுந் தாளமுமென்கிற மூன்றினையும் அளவும் மானங்களும் பிழையாதபடி இயற்றுதற்கு நாடினேன் தாளத்தின் பகுதியை என்றவாறு க.**

175. சொல்லுங் கணமிலவங் காட்டை நிமிடமுடன்
வல்ல துருதம் பின்னிலகு – மெல்லக்
குருவே புலுதமெனக் கூறினர் தாள
மருவியசீர் மாத்திரையின் வைப்பு.

**என்னுதலிற்றோவெனின்? என்பது தாளமாத்திரைகள் வருமாறுணர்த்திற்று. கணம், இலவம், காட்டை, நிமிடம், துடி, துருதம். லகு, குரு, புலிதம் இவை ஒன்பதும் தாளத்திற்குறுப்பாயொத்து முறையுடன் நின்றியல்வன வென்றவாறு. உ.**

---

**காகுவுமுடன் சேர்த்து பத்தெனக்கூறுதலுமுண்டு.
காகு நான்குமாத்திரை. காகு – காகபதம்.**

176. ஒத்த மரையிதழ்நூற் றெட்டிலோ ரூசிபோய்த்
தைத்திடுங் காலங் கணமென்ப – சுத்தமதைத்
தொட்டகண மெட்டாகச் சொன்ன முறைமுறையே
எட்டுந் துடியளவு மென்.

என்னுதலீற்றோவெனின்? முன்பு சொன்ன மாத்திரைகள் காலங்கொள்ளுமிடத்துத் தாமரை இதழிலே நூற்றெட்டுக்கு ஊசிகொண்டெறிய ஓரிதழ் தைத்திரண்டாமிதழிலே உறுத்துகின்றது கணம் கணமெட்டுக்கொண்டது இலவம். இலவம் எட்டுக் கொண்டது காட்டை. காட்டை எட்டுக்கொண்டது நிமிடம் நிமிடமெட்டுக்கொண்டது துடி துடியிரண்டுகொண்டது துரிதம் (துருதம்) துருதமிரண்டு கொண்டது லகு. லகுவிரண்டுகொண்டது குரு. லகு மூன்று கொண்டது புலுதம் (புலிதம்) எனவிவ்வாறு கண்டுகொள்க. ௩.

177. துடியளவு காலந் துருத மரையாம்
வடிவிலகு வொன்றுகு மாதே – கொடி
குருவிரண்டு கூறும் புலுதமூன் றென்றார்
பரிவுடனே நூலோர்கள் பார்த்து.

என்னுதலீற்றோவெனின் முன்சொன்ன மாத்திரைகளில் அளவு கொள்ளா மாத்திரை நாலும் நீக்கியளவு கொள்ளும் மாத்திரையைந்தையும் காலங்கொள்ளு மிடத்துத் துடி கால் மாத்திரை. துரிதம் அரை மாத்திரை. லகு ஒரு மாத்திரை. குருவிரண்டு மாத்திரை. புலிதம் மூன்று மாத்திரை என அளவுகொள்ளுமாறு கண்டு கொள்க. ௪.

உன்னல் காலே யூன்ற லசையே
முறுக்கல் முக்கால் விடுத்த லொன்றே
கண்ணிமை கைநொடி யளவே மாத்திரை
நுண்ணிதி னுணர்ந்தோர் கண்டவாறே.

எனவும் வரும்.

## கால் மாத்திரைக்குப் பெயராவன

178. விந்து விரதி விராமங் கிளர்புள்ளி
பந்த மனுக்குப் படரொற்று – முந்துதுடி
சொன்ஞர்கான் மாத்திரைக்குச் சொக்கஞர்
மிக்கதமிழ்
நன்ஞ வலர்முன் னயந்து. ௫.

## அரை மாத்திரைக்குப் பெயராவன

179. சுழிகொம்பு வட்டந் துருதஞ் சுகடீரம்
விழிகண்டஞ் சக்கரம் வியோமம் – ஒளிர்திங்கள்
வெஞ்சனமே விந்துகமே மிக்கவரை மாத்திரைக்
றஞ்சனவேற் கண்ணு யறி. [கென் ௬.

## ஒரு மாத்திரைக்குப் பெயராவன

180. வாளிசர மங்கோல் மாத்திரிகங் கால்செவ்வை
நீளு மிரச்சுவமே நேர்கீற்று – நாளுமகிழ்
மிக்க வியாபகமே மேவுதி ரேகையெனத்
தக்க லகுப்பெயராய்ச் சாற்று. ௭.

## இரண்டு மாத்திரைக்குப் பெயராவன

181. வல்லதுவி மாத்திரையே வான்கலேயே வக்கிரமே
நல்லபிறை தீர்க்கம் நயந்தபரம் – வில்லுக்
குடிலந் தனுச்சாபங் குருதனக்குச் சொன்ஞர்
சடிலமுடிச் சொக்கஞர் தாம். ௮.

## மூன்று மாத்திரைக்குப் பெயராவன

182. சீரிய கோமூத் திரிகந் திரியங்கம்
பாரிய சாமோற் பலநாகம் – பேராத
செய்யதிரு மின்னுடனே தீர்த்தமுயி ரோகாரம்
துய்யபுலு தப்பெயராய்ச் சொல். ௯.

இவற்றுள் காலமாவது ஒன்றைச் செய்ய நினைத்தல். கிரியையாவது செய்தல். மானமாவது கிரியை செய்த பின்பு அக்கிரியை செய்வதற்கு முன்னும் பின்னும் நடுவும் நின்ற அளவு என்றவாறு.

இவையளக்குமிடந்து வித்தராம்
வராத்தியம் (வராத்திகம்)
தெக்கணமென்னுமிவற்றுள்

"காலமைந்து கொண்டது கலையெனப்படுமே.
கலையதனிரட்டி காலாந்த மாகும் (கலாந்தம்)
கலாந்தத் திரட்டி வித்தாரமாகும்
வித்தாரத் திரட்டி வார்த்திக மென்ப
வார்த்திகத் திரட்டி தெக்கணமென்ப
அவையவை யிரட்டி வரவே சிறப்பொடு
முடுக தென மொழிப முன்னிசி னோரே."

மாத்திரை இயக்கம் எட்டென மொழிப

அவையாவன,
க. ஆபாவம்
உ. நிக்கிராமம்
ங. பிரவேசம்
ச. சம்மியம்
ரு. தாளம்
சு. சமம்
எ. சன்னியபாதம்
அ. துருவை என்பன.

இவ்வெட்டும் கைத்தொழில்கள் இவற்றுள்ளும்

ஆபாவக்கையாவது,

"தற்சனி முதலா வங்குலி செய்ய
வத்தக வெடுத்த லாபாவம்மே"

"ஆகக்கை யங்குலி வீழ்த்த நிற்றலின்
.... ... ... ... ... ... நிக்கிராமமே"

183. வட்ட மதிதுருதம் வானவர்செங் கோலகுவாம்
தட்டு மிளம்பிறையே தான்குருவாம் – முட்டவே
ஆடுநா கம்புலுதம் அன்னபதங் காகுவெனப்
பாடினன் வேதமுனி பார்த்து.

என்னுதலிற்ரோவெனின்? இதுவும் மாத்திரைக்கு வடிவு உணர்த்திற்று.

| | | |
|---|---|---|
| துருதத்தின் வடிவு வட்டமதி |  | சுழி |
| லகுவின் வடிவு செங்கோல் |  | கணை |
| குருவின் வடிவு இளம்பிறை |  | தனு |
| புலுதத்தின் வடிவம் படமெடுத்தாடும் நாகம் |  | ஐ |
| காகுவின் வடிவு அன்னபதம் |  | + |

என்றவாறு. ம.

184. துடியே முடுக்கந் துருதம் பரித்தல்
பிடியொடு தாக்கில் லகுவாம் – பிடியொடு
தாக்கிய தாக்கேற் குருவாகுந் தாக்கோடு
தூக்கிரண் டேற்புலுத மாம் (புலித)

என்னுதலிற்ரோவெனின் ? தாளங்கள் கிரியை செய்யும் இடத்து முடுக்கமது துடி, பதித்தல், துருதம், தாக்குதல், லகு, தாக்கித்தூக்குதல், குரு, தாக்கியிருகாற்ருக்குமது, புலிதம். எனவிவை ஆசான் கண்ணதே தாளங் கேட்டுக்கொண்டொத்தியறுத்துக் கொள்ளவும். மக.

---

இவ்வாறுயொத்தியறுத்துக் கண்டுகொள்க இது காணு மிடத்து க, ச, ட, த, ப வென்னுமைந்தெழுத்தின் வாய் பாட்டாலுச்சரித்துக் கண்டுகொள்க,

பஞ்சகுல வெழுத்தாற் பார்க்குரல் க ச ட த ப எனப்படும்,

185. வளமாகு மாடற்கும் பாடற்குந் தோற்குந்
தளமா தலிற்றுள மாகுந் – உளமகிழ்ந்து
துன்னலே காலஞ் செயல்கிரியை மானமிடைத்
துன்னங் கருவிக்குச் சூட்டு.

என்பது. ஆடற்கும் பாடற்கும் தோற் கருவிக்குத் தளமாதலிற்றுளமென்று பெயராயிற்று. இது நீட்டுவழி நீட்டத்தாளமாயிற்று. இத்தாளம் மூன்று காலத்தாலே நிகழும். அவை காலம், கிரியை, மானமென்பன. ௰உ.

## மாத்திரைக்குத் தேவதை

186. துடிவருணன் துர்க்கை துருத மெனவாம்
வடிவி லகுவாகு மாயோன் – கடியகுரு
மேகபத விந்திரன் வீரு முயர்மலரோன்
காகபத மாகாசங் காண். ௰ந.

## மாத்திரை வடிவு

187. புள்ளிசுழி கோலாகும் பொற்பார் பிறையுடனே
யொள்ளிய வோவு மெனவுரைத்தார் – கொள்ளுந்
துடியே துருதமே தொலைவில் லகுவே
வடிவார் குருபுலித மாம். ( புலுத )

என்னுதலிற்றோவெனின்? மாத்திரைகளின் வடிவு உணர்த்திற்று. இவை கொள்ளுமிடத்து நிரைநிறையே துடிக்கு வடிவு புள்ளி (பிறை) துருதத்திற்கு வடிவு சுழி. லகுவிற்கு வடிவு கோல். குருவிற்கு வடிவு தனு. (வில்) புலுதத்திற்கு வடிவு நாகம் காக்கைக்கால் வடிவு, காகபதம் எனக்கொள்க. ௰ச.

---

தர்ச்சனி – ஆட்காட்டி (சுட்டு விரல்)
அங்குலி - விரல்
உபயம் – இரண்டுகை
நிக்கிராமம் – அசைவது நிற்பது என்பது தாளசமுத்திர உரை.

“ தற்சனி முதலாத் தெக்கண பாகத்தைப்
போக்குதல் தானே பிரவே சம்மே.
ஆகக்கை யணுக்குஞ் சமபிர வேசம்
வலக்கைத் தாக்கே சம்மிய மாகும்
இடக்கைத் தாக்கே தாள மாகும்
உபயத் தாக்கே சன்னிய பாதம்
சித்திர நாகமே துருவை யாகும்.”

எனவிவை யெட்டுங் கண்டு கொள்க.

இனித்தாளம் விரியுமிடத்து நான்கு வகையாய் விரியும் அவை,

“ எச்சிரந் துதியச்சிரஞ் சதுரச்சிர மிவை
விரவி வருவன மிச்சிர மாகும்.”

“ தாக்கி யெடுத்த லதுதாள மாகும்
தூக்கு முற்பக்கந் தோன்ரு மென்ப”

188. வலக்கை திருமா லிடக்கை பிரமன்
கலக்கை கடாங்கங் கம்பித்தல் – கலப்பின்றித்
தாக்கிய நாதஞ் சிவமென் ருர் நாணரவம்
வாக்குயர்த்த மாதவத்தோர் வைப்பு.

என்னுதலிற்ருேவெனின் ? ௱௫.

189. பாணிகளின் றெய்வம் பகருங்கால் பாங்குடைய
நாணி மணிக்கட்டு நான்முகனும் – பேணிப்
பெருவிர லிந்திரன் சுட்டிலீ சானன்
நடுவிரல் மாலாகும் நன்கு.

என்னுதலிற்ருேவெனின் ? தாளத்தின் தேவதைகளை உணர்த்திற்று.

வலக்கை – நாராயணன்
இடக்கை – பிரமன்

வலக்கையிடக்கை கம்பித்து அவையிரண்டுதாள முந்தாக்கி யெழுகின்ற வோசை யீசுரன்.

தாளத்திற் கொத்தநாண் வாசுகியெனக் கொள்க.
ங்கூ.

190. கைவிரல்பத் துஞ்சகா தேவன் கதுவிய
மெய்வட்டஞ் சோம னருக்கனுந் – றுய்ய
மலர்மகள் பூமகள் குமிழுக்கு வாயுத்
துளைநாணல் வாசுகியாய் நாட்டு.

என்னுதலிற்றோவெனின்? ............ கைவிரல்பத்துஞ் சகாதேவர்கள் அருக்கனும் சோமனும் வட்டமாகும். மலர்கள், பூமகள் குமிழின்தெய்வம். துளையின்தெய்வம் வாயு. நாண்கயிற்றின்தெய்வம் வாசுகி என்பர். ஙஎ.

191. சுத்த மிருபலமாஞ் சுத்தத்துச் சாளவம்
வைத்த வகைநாற் பலமாகு – முத்தமத்துச்
செந்தமிழுக் கெண்பலமே சில்லிடமாய்ச் செய்த
வந்தமிலா வோசையே யாம். [மைக்க

என்னுதலிற்றோவெனின்? தாளம் செய்யும் இலக்கணம் உணர்த்திற்று. தாளஞ் சமைக்குமிடத்துச் சுத்தத்திற்கு இருபலம் வெண்கலம். (இது கருவி, தாளக்கருவி)

கொள்வது —

இதன்பரப்பு இருவிரல் சுழியினளவு ஒருவிரல்.
துளையின் பரப்பு பாசிப்பயறு.
(துளையின் பரப்பு அரைவில்)

சாளவத்திற்கு நாற்பல வெண்கலத்தாற் கொள்க.

---

சுளி-குமிழ், பரப்பு-வாயகலம், சணவித்து-கடலை, தமிழ்த்தாளம். சுத்தம், சாளவம் தமிழெனனும் சாதியோசைகள் மூன்றினுடனும் இவை தமிழ்த்தாளவோசை. ஒன்று எஃகு, ஒன்று வெண்கலம்,

பரப்பு இரண்டரைவிரல், சுழியினளவு ஒன்றே கால் விரல் துளையினளவு நெல்லுளுந்தளவு (உளுந்தளவு)

தமிழ்த்தாளத்துக்கு எண்பல வெண்கலத்தாற் கொள்க. பரப்பு மூன்றுவிரல், சுழியினளவு ஒன்றரை விரல் துளையினளவு சண வித்தளவெனக்கொள்க. ௰அ.

192. அகத்தியன் சொன்ன வருந்தமிழ் தன்னுற்
றெருகுத்தவை நூற்றெட்டுத் தாளம் – புகுத்தவிவை
பண்பார் பதமுகம் பஞ்சதா ளம்பரிவாய்
நண்பா லுருமுகமாய் நாட்டு.

என்னுதலிற்றோவெனின் ?...... அகத்தியனுற்றெருக்கப் பட்ட தாளம் நூற்றெட்டுள் அவை மூன்றுவகைப்படும்.

அவை பஞ்சதாளம், பதமுகம், உருமுகம் எனவிவை ௰கூ.

193. எக்கா ரிகைச்சரமே லெட்ட னிபஞ்சியே
திக்கார் திரிகண்டஞ் செப்பினுர் – மிக்கசீர்
தத்தரா டங்குடக மென்ரு ரதன்பின்னே
கொத்தலர்பூங் காஞ்சியுங் கூறு. உ௰.

194. முத்தமிழு மூன்ருகு முப்பரமு மூன்ருகு
மெத்த மரபு மிரண்டாகு – மத்தரே
ஆரணமும் நாலா மருமறையு நாலாகுங்
காரணங்காண் சொன்ஞர் கருத்து.

என்னுதலிற்றோவெனின் ? முத்தமிழாவன இசைத்தமிழ், இயற்றமிழ், நாடகத் தமிழென்பன. முப்புரமாவது திரிபுரமென்பது, மரபென்றது பெண்ணுமாணும். ஆரண மென்பது நால்வேதம். இவ்வாறு கண்டுகொள்க. உக.

---

சொன்னனித்தாளவிதியொரு நூற்றெட்டுந் தொல்புவிக்கே.

**195.** கண்டந் துடிநெருங்கல் கால்து ருதமண்ணுங்
கொண்டல்கோ லொத்தலகுங் கூன்குருவா —
மொண்டொடியா
யொத்தொடு தாக்கு முயர்புலுத மொத்தொன்றி
லத்தொ டிருதாக்கு மாக்கு உஉ.

**196.** மதிகோ லிளந்திங்கள் முக்கோணம் வாய்த்த
சதுரமிவை தாள வடிவாம் – பொதியமலைத்
தென்னன் புயல்தணித்த தீரா திருமடந்தை
மன்னு விதுதான் மதி. உங.

**197,** முந்த வெடுக்கி லதீதமா முந்தாமல்
அந்தந் தொடுக்கி லநாதமாம் – வந்த
விசைக்கொக்கத் தாக்கிற் சமமா மவிட
மசைத்தொத்து வாரா தவை. உச.

தாளமரபு முற்றும்.

குரு வாழ்க.

சிவாசலபதி சகாயம்.

# அட்டகண மரபு

198. பகணமே யாதிகுருப் பான்மதியந் தெய்வம்
புகல்பரவு நல்ல புகழாம் — மகணம்
நிலையாகு மூன்றுகுரு நீணிலமே தெய்வம்
தொலையாத செல்வமெனச் சொல்.

என்னுதலிற்றோவெனின்? வாச்சிய கீதப்பிரபந்தங்களின் ஆதியிலே நற்கணங்களை வைத்துப் புணர்க்கப் படுமாறும் அதன் தன் தெய்வமும் பயனுமாறும் உணர்த்திற்று.

என்பது பகணத்துக்கு ஒரு குரு இரண்டு லகு நேராக, நாலு மாத்திரை இதற்குத் தேவதை சந்திரன் இதன் பலன் நல்ல புகழாகிய கீர்த்தி.

| | | | | |
|---|---|---|---|---|
| பகணம் | ऽ | \| | \| | நான்கு மாத்திரை 16 எண்கள் |
| மாத்திரை | 2 | \| | \| | |
| | பூ | வ | ணம் | |

மகணத்துக்கு மூன்று குரு. ஆக ஆறு மாத்திரை. இதற்குத் தெய்வம் பூமி. இதன் பலன் மிகுதியாகிய செல்வமுண்டாம் என்றவாறு க

| | | | | |
|---|---|---|---|---|
| மகணம் | ऽ | ऽ | ऽ | ஆறு மாத்திரை 24 எண்கள் |
| மாத்திரை | 2 | 2 | 2 | |
| | வா | மாந் | தூர் | |

199. ஆதி லகுயகண மானபுனலே கடவுள்
ஏத மறத்தழைத்த லேபலமாம் — போதம்
முழுதி லகுநகண மொய்சுவர்க்கந் தெய்வம்
பழுதறு மாயுற் பலம்.

என்பது யகணத்துக்கு ஒரு நேர் (லகு) இரண்டு குருவாக ஆக மாத்திரை ஐந்து இதற்குத் தெய்வம் அப்பு (நீர்) இதன் பலன் குற்றமின்றித் தழைத்தல்.

| | | | | |
|---|---|---|---|---|
| யகணம் | \| | ∂ | ∂ | ஐந்து மாத்திரை 20 எண்கள் |
| மாத்திரை | \| | 2 | 2 | |
| | பு | கா | ரூர் | |

நகணத்துக்கு மூன்று லகு ஆக மூன்று மாத்திரை. இதற்குத் தெய்வம் சுவர்க்கம். இதன் பலன் ஆயுள், வர்த்தனையாம் (ஆயுள் வர்த்திக்கும்) என்றவாறு. உ

| | | | | |
|---|---|---|---|---|
| நகணம் | \| | \| | \| | மூன்று மாத்திரை 12 எண்கள் |
| மாத்திரை | \| | \| | \| | |
| | ம | து | ர | |

200. சேரு நடுக்குருவே செப்புஞ் சகணமொழி
கூரிரவி தெய்வம் கொடும்பிணியாம் —
காரிகையாய்
ஈற்றுக் குருச்சகண மென்னுங் கடவுளது
காற்றுப் பரதேசங் காண்.

என்பது செகணத்துக்கு ஒரு லகு ஒரு குரு ஒரு லகு ஆக நாலு மாத்திரை இதற்குத் தெய்வம் (தேவதை) சூரியன். இதன் பலன் நோய்க்கிடம் (கொடும்பிணி).

| | | | | |
|---|---|---|---|---|
| ஜெகணம் | \| | ऽ | \| | நான்கு மாத்திரை 16 எண்கள் |
| மாத்திரை | \| | 2 | \| | |
| | வி | ரா | லி | |

சகணத்துக்கு இரண்டு லகு. (நேர்) ஒரு குரு ஆக நான்கு மாத்திரை இதற்குத் தெய்வம் வாயு (காற்று) இதன் பலன் பரதேசம் போதல் என்றவாறு. ரு

| | | | | |
|---|---|---|---|---|
| சகணம் | \| | \| | ऽ | நான்கு மாத்திரை 16 எண்கள் |
| மாத்திரை | \| | \| | 2 | |
| | ம | யி | லை | |

201. நடுவிலகு வந்தால் நயக்கும் ரகணம்
கடவுள்பணி சாவுபலன் காட்டு — முடிவிலகு
எண்ணுந் தகண மெழிலம் பரங்கடவுள்
பண்ணு மிடியே பலம்.

என்பது, ரகணத்துக்கு ஒரு குரு, ஒரு லகு ஒரு குருவுமாக ஐந்து மாத்திரை. இதற்குத் தெய்வம் சேடன் இதன் பலன் மரணம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ரகணம் | ऽ | \| | ऽ | ஐந்து மாத்திரை 20 எண்கள் |
| மாத்திரை | 2 | 1 | 2 | |
| | சூ | ரி | யூர் | |

தகணத்துக்கு இரண்டு வில் (குரு) ஒரு லகு ஆக மாத்திரை ஐந்து. இதற்குத் தெய்வம் ஆகாயம் (வான்) இதன் பலன் வறுமையென்றவாறு. ச

| | | | | |
|---|---|---|---|---|
| தகணம் | ऽ | ऽ | 1 | ஐந்து மாத்திரை 20 எண்கள் |
| மாத்திரை | 2 | 2 | 1 | |
| | மா | கா | ழி | |

202. மகணமது பூமி யகணமது செல்வமாம்
பகணமதி நகணஞ் சொர்க்கஞ் — தகணம்வான்
சேர்செகண மாதித்தன் சீர்ச்சகண மேவாயு
மாரகண மேநாக மாம்.

என்பது மகணத்துக்கு மூன்று குரு ஆக (ஆறுமாத்திரை) இதற்கு பூமி. பலன் மிகுதியாகிய செல்வம்.

யகணத்துக்கு ஒரு லகு இரண்டு குரு (ஐந்து மாத்திரை) இதற்குச் செல்வம்.

பகணத்துக்கு ஒரு குரு இரண்டு லகு. (நான்கு மாத்திரை) இதற்கு மதி.

நகணத்துக்கு மூன்று லகு, (மூன்று மாத்திரை) இதற்குச் சொர்க்கம்.

தகணத்துக்கு இரண்டு குரு ஒரு லகு, (ஐந்து மாத்திரை) இதற்கு ஆகாயம் (வான்).

செகணத்துக்கு ஒரு லகு, ஒரு குரு, ஒரு லகு (நான்கு மாத்திரை) இதற்கு ஆதித்தன் (சூரியன்).

சீர்ச்சகணத்துக்கு இரண்டு லகு, ஒரு குரு (நான்கு மாத்திரை) இதற்கு வாயு.

மா, ரகணத்துக்கு ஒரு குரு, ஒரு லகு, ஒரு குரு (ஐந்து மாத்திரை) இதற்கு நாகம்.

இவையாவும் முன் கூறியவற்றைத் தொகுத்துக் கூறியவையேயாகும். ரு

203. முன்னமொழி யெண்கணமு மூன்றுபா லேயொன்று
மன்னுலகு குருவே வைப்பாகும் — மின்னிகல
வல்லபல தாளத்து வாத்யகீ தப்ரபந்தச்
சொல்லின்முதல் நற்கணமே சூட்டு.

என்னுதலிற்றோவெனின்? முன் சொல்லப்பட்ட அட்டகணங்களும், வரும்பொழுது துருதமும் புலுதமும் இன்றி லகுவும் (நேரும்) குருவுமாக (வில்லுமாக) ஒவ்வொரு கணமும் மூன்று வடிவு பெற்றுவரும் இவற்றின் செலுத்தல் (பிரயோகம்) வாச்சிய கீதப் பிரபந்தங்களின் முதலிலே (ஆதியிலே) நற்கணங்களை வைத்துப் புணர்க்கப்படவேண்டும் என்றவாறு.

(புணர்க்கப்படுமென்றவாறு) சூ.

அட்டகண மரபு முற்றும்.

குரு வாழ்க.

சிவாசலபதி சகாயம்.

## * தாள நூற்பா மரபு

### தாளத்தொகை விருத்தம் நூற்றெட்டுத் தாளம்

தென்றல் வடிவுஞ் சிவனுர் திருவடிவும்
மன்றல் வடிவும் மதன்வடிவும் — குன்ருத
வேயினிசை வடிவும் வேதவடிவுங் காணில்
ஆயதா ளங்காண லாம்.

" சச்சபுடஞ் சாசபுடஞ் சட்பிதா புத்திரஞ்சம்
† பொற்கட்டித முற்கட்டிதத் தோடாதி தர்ப்பணம்
சச்சரி சிங்கலீலை கந்தர்ப்பஞ் சாற்று
சிங்கவிக் கிரமஞ் சீரங்க தாளம்
போற்றிரத லீலையரங் கம்பரிக் கிரமம்
புகழ்பிரத் தியாங்கம் கெசலீலை நல்ல
சொற்றிரி பின்னம் வீரவிக் கிரமத்தோடு
தூய வன்னநிலை இவையிரு பதாமே" க.

| | | | |
|---|---|---|---|
| இவை, | சச்சபுடம் | — | க |
| | சாசபுடம் | — | உ |
| | சட்பிதாபுத்திரம் | — | ங |
| | சம்பொற்கட்டிதம் | — | ச |
| | உற்கட்டிதம் | — | ரு |
| | ‡ (ஒச்சதாளம்) ஆதி | — | சா |

* இதனைத் தாளவியல் எனவும் கூறப்பெறும்.
நூற்றெட்டுத் தாளங்கள், மார்க்கதாளமெனக் கூறப்படும்
† பொற்கெட்ட (பா. பே.) ‡ ஓச்சாதாளம்.

| | | |
|---|---|---|
| தற்பணம் | — | ௭ |
| சச்சரி | — | ௮ |
| சிங்கலீலை | — | ௯ |
| கந்தர்ப்பம் | — | ௰ |
| சிங்க விக்கிரமம் | — | ௰௧ |
| சீரங்கம் | — | ௰௨ |
| இரதலீலை | — | ௰௩ |
| அரங்கதாளம் | — | ௰௪ |
| பரிக்கிரமம் | — | ௰௫ |
| பிரத்தியாங்கம் | — | ௰௬ |
| கெசலீலை | — | ௰௭ |
| திரிபின்னம் | — | ௰௮ |
| வீர விக்கிரமம் | — | ௰௯ |
| அன்னலீலை | — | ௨௰ |

இனி இவற்றின் உறுப்புக்களாவன,

௧. “சச்ச புடமே வக்கிர மிரண்டும்
பொற்புறு லகுவும் புலுதமு மாமே”



= 8 மாத்திரை 32 எண்கள்

(வக்கிரம் - குரு)

“பூமாதர் சச்ச புடத்திற் கிரண்டுதனு
நாமா தியல்நேர் நறும்புலித — மேமேவ
அட்டதிக்கோர் போற்றுமறி வுக்கறிவோர்
கெட்டென மாத்திரையா மே” [தாளமிதற்

௨. "சாச புடமே நடுவிரண் டிலகு
மேவிய விருபால் வியன்குரு வருமே"

 = 6 மாத்திரை 24 எண்கள்

௩. "சட்பிதா புத்திரந் தலைக்கடை புலுத
முட்கிடை யகணத்து டனொரு கோலே"



= 12 மாத்திரை 48 எண்கள்

(யகணம், லகு, குரு, குரு) (கோல் - லகு)

௪. "சம்பொற் கட்டிதந் தலைக்கடை புலுத
மொன்றிய புரம்வில் லுட்கிடை யாமே"



= 12 மாத்திரை 48 எண்கள்

(புரம் என்பது மூன்று) (வில் - குரு - பிறை)

௫. "உற்கட் டிதமே நற்பிறை புரமே"

 = 6 மாத்திரை 24 எண்கள்

௬. "ஆதி தாள மாமொரு லகுவே
வோச்சா வென்பது மிதனது பெயரே"

| நேர் - லகு = ஒரு மாத்திரை 4 எண்கள்

---

ஆதிதாளத்திற்கு, ஓச்சாதாளம் என்றொரு பெயரும் உண்டெனத் தெரிகிறது. இக்காலத்திய ஆதிதாளம் சதுரச்ர திருபுடையாகும்.

எ. “ தற்பண மிருசுழி வக்கிரம் வருமே ”



= 3 மாத்திரை 12 எண்கள்

( சுழி – துருதம் ) ( வக்கிரம் – குரு )

அ. “ சச்சரி விந்துத் தயங்கிய விராமம்
வட்டமுங் கோலும் வருமுறை யெட்டே ”



= 18 மாத்திரை 72 எண்கள்

( வட்டம் – விந்து – திருதம் – துருதம் – சுழி )
( விராமம் – ஒரெண் )

கூ “ சிங்க லீலைகோல் இருபக் கத்தும்
தங்கிய நடுவிற் றருசுழி தமிழே ”

| O O O |

= $3\frac{1}{2}$ மாத்திரை 14 எண்கள்

( தமிழே முத்தமிழே ) ( தமிழ் – மூன்று )

ய. “ கந்தர்ப்பஞ் சுழியிணை கதிர்பெறு மொருகோல்
வந்தபின் மரபு வக்கிரம் வருமே ”



= 6 மாத்திரை 24 எண்கள்

( மரபு – இரண்டு ) ( வக்கிரம் – குரு )

---

“ சிங்க லீலை செழுங்கணை சுழிதமிழ்
நங்கணை யேக நயந்தது நவமே ”

௰௧. "சிங்கவிக் கிரமஞ் சிலைமூன் றம்புயிர்
புங்கம் வக்கிரம் புலுதமொன் றன்றே"



= 16 மாத்திரை 64 எண்கள்

(வக்கிரம் - சிலை - வில் - குரு) (உயிர் - புலுதம்)

(அம்பு - புங்கம் - லகு)

௰௨: "சீரங்கஞ் சிறு கோலிணை சிலையுட
னோரார் புங்கமு முயிருமா மென்ப"



= 8 மாத்திரை 32 எண்கள்

௰௩. "இரத லீலை யிருகோ லிருகுரு"



= 6 மாத்திரை 24 எண்கள்

(கோல் - லகு)

௧௪: "அரங்க தாள மாரணச் சுழியொடு
பரந்த பின்னரும் பரந்து வருமே"

O O O O, O O O O

= 4 மாத்திரை 16 எண்கள்

(ஆரணம் - நான்கு)

௰௫. "பரிக்கிர மஞ்சுழி கொம்புதன் பின்னே
வரிபட விருகோல் வக்கிர மாமே"



= 5 மாத்திரை 20 எண்கள்

( கொம்பு – சுழி – திருதம் )

௰௬. "பிரத்தி யாங்கம் பிறையுடன் வியாபி
உரைத்தன ரொருமூன் றேரிரண் டெனவே"



= 8 மாத்திரை 32 எண்கள்

( வியாபி – அம்பு – லகு ) ( பிறை – குரு )

௰௭. "கெசலீ லை'க்குக் கிளர்பிறை வியாபி
கடைலகு விராம முடையது வென்ப"

 = $4\frac{1}{4}$ மாத்திரை 17 எண்கள்

( கிளர்பிறை – குரு ) ( வியாபி – லகு )
( லகு விராமம் – ஐந்தெண் )

---

தாள நூற்பாக்களில் வரும் ஒரு பொருட் கிளவிகள். அதாவது ஒரே பொருளைத் தரும் பல சொற்கள் வருமாறு, இவற்றை இங்கே பொதுப்படக் குறித்தும் ஆங்காங்கும் உளங் கொளத்தக்க நினைவின் பொருட்டும் குறித்துள்ளேன்.

 விராமம், விந்து, துடி, ஒற்று எனும் இவை **அனுத்துருதம்** என்னும் ஒரு பொருட்கிளவி.

 கோல், அம்பு, புங்கம், வியாபி, கணை, ஆதி, சரம், பகழி, நேர், வாளி, தாள், கால் எனும் இவை **லகு** என்னும் ஒரு பொருட்கிளவி.

௰அ. " திரிபின்ன மொருகோல் ஒருகுரு வுடனுயிர்
ஒன்றென வுரைப்ப ருணர்ந்திசி னோரே "


= 6 மாத்திரை 24 எண்கள்

( உயிர் - புலுதம் )

௰கூ. " வீரவிக் கிரமம் வியாபி யிரண்டுட
னேரிரு சுழியு மொருவக் கிரமே "



= 5 மாத்திரை 20 எண்கள்

( வியாபி - லகு ) ( வக்கிரம் - குரு )

உ௰. " அன்ன லீலைக்கு மன்னுவ திருகோல்
பின்முன் விராமம் பெற்றுநிற் பதுவே "



= $2\frac{1}{2}$ மாத்திரை 10 எண்கள்

( விராமம் - பிறை, ஓரெண் )

ஆகத் தாளம் இருபது.

---

O சுழி, வட்டம், கொம்பு, விழி, புள்ளி, கண், மதி, கதிர், இந்து, கண்டம் எனும் இவை துருதம் என்னும் ஒருபொருட்கிளவி.

 வக்கிரம், வில், பிறை, சிலை, பரம், தனு, சாபம் எனும் இவை குரு என்னும் ஒருபொருட்கிளவி.

 புலிதம், உயிர், ஓ, ஓகாரம், எழுத்து, பணி, ( பாம்பு ) எனும் இவை புலுதம் என்னும் ஒருபொருட்கிளவி.

+ பறவை, புள்ளடி எனும் இவை காகபதம், அல்லது காக்கைக்கால் எனும் ஒருபொருட்கிளவி.

"மங்கையரே வன்னபின்ன மிராச சூடா
மணியரங் கத்தியோ தனத்தோ டிராசதாளம்
சிங்கவிக்கி ரீடிதம் வன்னமாலி சதுரந்
திரியச்சிர மிச்சிரங்கப் பிரதீப மன்னநாதம்
தங்குசிங்க நாதமல்லி காமோதக முடனே
சரபலீலை யரங்கா பரணந் தானுந்
திங்களன துரங்கலீலை சிங்க னந்தன்
செயல்விச யாநந்தம் பிரதிநாற் பதாமே" உ

| | | |
|---|---|---|
| வன்னபின்னம் | — | உக |
| இராசசூடாமணி | — | உஉ |
| அரங்கத்தியோதனம் | — | உங |
| இராசதாளம் | — | உச |
| சிங்கவிக்கிரீடதம் | — | உரு |
| வன்னமாலி | — | உசா |
| சதுரச்சிரவன்னம் | — | உஎ |
| திரியச்சிரவன்னம் | — | உஅ |
| மிச்சிரவன்னம் | — | உசா |
| அரங்கப்பிரதீபகம் | — | ஙய |
| அன்னநாதம் | — | ஙக |
| சிங்கநாதம் | — | ஙஉ |
| மல்லிகாமோதகம் | — | ஙங |
| சரபலீலை | — | ஙச |
| அரங்காபரணம் | — | ஙரு |
| துரங்கலீலை | — | ஙசா |
| சிங்கநந்தன் | — | ஙஎ |
| செயத்திரு | — | ஙஅ |
| விசயாநந்தன் | — | ஙகூ |
| பிரதிதாளம் | — | சய |

இனி இவற்றின் உறுப்புக்களாவன,

௨௧. "வன்ன பின்னம் வக்கிரம் வியாபி
துன்னிய விருசுழி தொடர்ந்தெதிர் வருமே"



= 4 மாத்திரை 16 எண்கள்

(வியாபி - லகு)

௨௨. "இராசசூ டாமணி யிருசுழி கோல்முன்
றிணைந்த கொம்பு கோல்சிலை யொன்றே"



= 8 மாத்திரை 32 எண்கள்

(கொம்பு - துருதம்)

௨௩. "அரங்கத் தியோதன மறிதரக் கிளப்பிற்
புரங்குரு வொருகோல் புலுத மென்ப"



= 10 மாத்திரை 40 எண்கள்

(புரம் - மூன்று) (கோல் - லகு)

---

இவையன்றியும்,

சமம், இரண்டு, இணை, துணை, இரு என்பவை ஒருபொருட்கிளவி.

புரம், மூன்று, தமிழ் என்பவை ஒருபொருட்கிளவி.

மறை, நான்கு, ஆரணம், தொல், வேதம் என்பவை ஒருபொருட்கிளவி.

இராசி, பன்னிரண்டு - என்பவை ஒருபொருட்கிளவி.

கிளவி என்பது சொல்.

உச. "இராச தாளத் தியல்குரு வோகாரம்
விரவிய விருசுழி பரங்கோல் புலுதம்"



= 12 மாத்திரை 48 எண்கள்

(பரம் - குரு) (ஒகாரம் - புலுதம்)

உரு. "சிங்கவிக் கிரீடிதஞ் செழுங்கணை யிரண்டுயிர்
தங்கிய சிலைகோல் தனுவுடன் வருமுயிர்
புங்கம் புலுத மென்றனர் புலவோர்"



= 17 மாத்திரை 68 எண்கள்

(உயிர் - புலுதம்) (புங்கம் - லகு - கணை - கோல்)
(சிலை - குரு - தனு)

உசு. "வன்ன மாலி மறைசுழி யிருகோல்
கொம்பி ரண்டு குருவொன் றுமே"



= 7 மாத்திரை 28 எண்கள்

(மறை - நான்கு) (கொப்பு - துருதம்)

உஎ. "சதுரச் சிரவன்னஞ் சாபங் கோலிணை
யிணைதரு வட்டம் புலுதமு மொன்றே"



= 8 மாத்திரை 32 எண்கள்

(கோல் - லகு) (சாபும் - வில்)

உஅ. “திரியச் சிரவன்னம் செங்கோ லிருசுழி
யிணை தரு கோலுட னுருவக் கிரமே”



= 6 மாத்திரை 24 எண்கள்

( செங்கோல் – லகு )

உகூ. “மிச்சிர வன்னவி ராமமுச் சுழிப்பின்
முச்செய லாகுமுறை மையிரு புலுதம்
கச்சிலை விழியிரு கார்முகங் கணைசிலை
யுச்சம் நிறைபத் தொன்பதே முக்கால்”



= $19\frac{3}{4}$ மாத்திரை 79 எண்கள்

( கூர்முகக் கணை இரண்டு ) ( கச் – வில், குரு )

௩௦. “அரங்கப் பிரதீபக மாதி தகணம்
இரங்குசா பத்துட னெழுத்து மொன்றே”



= 10 மாத்திரை 40 எண்கள்

( தகணம் – குரு குரு லகு ) ( சாபம் – வில் )
(எழுத்து – புலுதம்)

௫௧ "அன்ன நாத மாதியி லாதி
பின்னுயி ரிணைசுழி பேசு மெழுத்தே"



= 8 மாத்திரை 32 எண்கள்

( உயிர் – புலுதம் ) ( ஆதி – லகு )
( எழுத்து – புலுதம் – ஓகாரம் )

௫௨. "சிங்க நாதஞ் சிறுகோ லிருகுருப்
புங்கம் வக்கிரம் போதுமென் றனரே"



= 8 மாத்திரை 32 எண்கள்

( சிறுகோல் – புங்கம் – லகு ) ( வக்கிரம் – குரு )

௫௩. "மல்லிகா மோதக மாமறை சுழியுடன்
வருசர மிரண்டும் வருவ தாமே"

O O O O | |

= 4 மாத்திரை 16 எண்கள்

(மறை – நான்கு) (சரம் – லகு)

---

அன்ன நாத மம்புட னிருசுழி
பின்னுறு புலுத பேசு மெழுத்தே.



௩௪. "சரப லீலை சமகணை நாற்சுழி
சரமிணை யுடனுய்த் தான்வரு மன்றே"

| | O O O O | |

= 6 மாத்திரை 24 எண்கள்

( கணை, சரம் - லகு ) ( சமம் - இரண்டு )

௩௫. "அரங்கா பரண மரிய குருவிணை
சரங்கோ லோவுடன் ருனுற் பவமே"



= 9 மாத்திரை 36 எண்கள்

( ஓவென்பது - புலுதம் )

௩௬. "துரங்க லீலை துணைசுழி யங்கோல்"

O O |

= 2 மாத்திரை 8 எண்கள்

௩௭. "சிங்க னந்தஞ் சிலையிணை லகுவுயிர்
புங்கந் தனுவிரு புள்ளிவக் கிரமிணை
தங்கு மம்புயிர் சரமுயிர் வக்கிரம்
பங்காம் பகழியி ணைபற வையாமே"





= 32 மாத்திரை 128 எண்கள்

(வக்கிரம்-குரு) (புள்ளி-சுழி) (உயிர்-புலுதம்)
(பகழி-புங்கம்-லகு) (பறவை-காகபதம்)

௩௮. "செயத்திரு தாளம் செழுஞ்சிலே செகணம்
நயத்தவில் லளவையும் நாலிரண் டாமே"



= 8 மாத்திரை **32 எண்கள்**

( செகணம் - லகு குரு லகு )

௩௯. "விசையா நந்தம் வியாபி யிரண்டோ
டிசையா மகண மிலக்கத் தடைவே



= 8 மாத்திரை **32 எண்கள்**

( வியாபி - லகு ) ( மகணம் - மூன்று குரு )

௪௰. "பிரதி தாள பெறுசர மிரண்டுட
னிருசுழி யளவும் ஆறில் அரையே"

| | O O

= 3 மாத்திரை **12 எண்கள்**

( ஆறிலரை-மூன்று)

இக்காலம் இத்தாளம் **சதுரச்சர அடதாளம் எனப்படும்.**

ஆகத்தாளம் நாற்பது.

"மாசில்துதி யகம்மகர நந்தம் சீர்த்தி (காருதி)
மருவிசயஞ் செயமங் கலத்தி னோடும்
இராசவித்தி யாதாள மாரோ கிமட்டங்
கண்பிர காசமட் டஞ்செயங் குடுக்கங்
கூசுநிச்சா ரூபகங் கிரீடை திரிபங்கி
கோகிலந் திருகீர்த்தி விந்துமா லியோடு
மாசில்சம மபிநந் தனமுத்திக் கணமு
மதிடெங்கி யுடன்தாள மறுப தாமே" ௩

---

| | | |
|---|---|---|
| துதியகம் | — | சக |
| மகரந்தம் | — | சஉ |
| காருதி (சீர்த்தி) | — | சங |
| விசயம் | — | சச |
| செயமங்கலம் | — | சரு |
| இராசவித்தியாதாளம் | — | சசா |
| ஆரோகிமட்டம் | — | சஎ |
| கண்மட்டம் (நேத்திரமட்டம்) | — | சஅ |
| பிரகாசமட்டம் | — | சகூ |
| செயதாளம் | — | ருய |
| குடுக்கதாளம் | — | ருக |
| கூசுநிச்சாரூபகம் | — | ருஉ |
| கிரீடைதாளம் | — | ருங |
| திரிபங்கி | — | ருச |
| கோகிலப்பிரியம் (கோகிலம்) | — | ருரு |
| திருகீர்த்தி | — | ருசா |
| விந்துமாலி | — | ருஎ |
| மாசில்சமம் | — | ருஅ |
| (அபி) நந்தனம் | — | ருகூ |
| மதிடெங்கி (மதியிடங்கி) | — | சாய |

இனி இவற்றின் உறுப்புக்களாவன,

சக. "துதியக மொருகோல் துணைசுழி யாமே"

| O O = 2 மாத்திரை 8 எண்கள்

(இத்தாளமே வழக்கில் ஆதிதாளமாக வழங்கிவருகிறது)

சஉ. "மகரந்த மிருசுழி மரபுகோல் மூன்று
நிகரி லொருபிறை நிறைந்துநின் றதுவே"



= 6 மாத்திரை 24 எண்கள்

(மகரநந்தம்) (பிறை-வில்-குரு)

சங. "காருதி தாளங் கருதுகோல் வக்கிர
மாருயிர் வக்கிர மம்புட னுயிரே"



= 12 மாத்திரை 48 எண்கள்

(கோல்-லகு) (வக்கிரம்-குரு) (அம்பு-லகு)
(கீர்த்தி தாளம்) (உயிர்-புலுதம்)

சச. "விசயம் புலிதம் வில்லுயிர் வக்கிரம்"



= 10 மாத்திரை 40 எண்கள்

(மருவிசயம்)

௪௫. "செயமங் கலமே யிருசர மொருபிறை
தயவுட னிருகோல் தன்னுடன் பிறையே"



= 8 மாத்திரை 32 எண்கள்

(கோல்-சரம்-லகு) (பிறை-குரு)

௪௬. "இராசவித் தியாதரம் லகுகுரு விணைசுழி"



= 4 மாத்திரை 16 எண்கள்

(இராசவித்யாதாளம்)

௪௭. "ஆரோகி மட்டஞ் சகணங் கண்ணுல்
சீரார் அளவையுஞ் செப்பிய தாறே"



= 6 மாத்திரை 24 எண்கள்

(சகணம் இரண்டு லகு ஒரு குரு)
(கண்ணுல் என்பது நான்கு கண்) (கண்-திருதம்)

௪௮. "நேத்திர மட்டம்வில் விணைசர மிருகுரு
சேர்த்த புள்ளடி சிக்கின விராசி"



= 12 மாத்திரை 48 எண்கள்

(நேத்தமட்டியம்) (கண்மட்டம்) (இராசி பன்னிரண்டு)
(வில்-குரு) (சரம்-லகு) (புள்ளடி-காகபாதம்)

சகூ. "பிரகாச மட்டம் முன்னிரு கோல்கணை
இரவாப் பகணம் வருமுறை யேழே"



= 7 மாத்திரை 28 எண்கள்

( பகணம் ஒரு குரு இரண்டு லகு )
(கோல்-கணை-லகு)

ருய. "செயதா ளங்கோல் சிலைகணை யிரண்டுடன்*
நயந்த சுழியிணை நல்லுயி ரொன்றே"



= 9 மாத்திரை 36 எண்கள்

*(ச்ச்சபுட வெண்பா தவிர மற்ற நூல்களில் 10 மாத்திரை)
(சிலை-வில்-குரு) (சுழி-திருதம்) உயிர்-புலுதம்)

ருக. "குடுக்க தாளம் கோலிணை குருவே
யடுத்து வருசுழி யாரண மென்ப"



= 6 மாத்திரை 24 எண்கள்

( மற்ற நூல்களில் மாத்திரை வேறுபட்டுளது )
(கோல்-லகு) (ஆரணம்-மறை-நான்கு)

ருஉ. "நிச்சா ருகம் நிகழுங் கோலிணை
மெச்சிய பின்னும் விராமம் வருமே"

 = $2\frac{1}{4}$ மாத்திரை 9 எண்கள்

( கூசு நிச்சா ருபகம் )

௫௩. "கிரீடை தாளங் கிளர்சுழி யிரண்டும்பின்
வீறுடன் விராமம் விளங்கிநிற் பதுவே"



= $1\frac{1}{4}$ மாத்திரை 5 எண்கள்

(இத்தாளம் வழக்கில் சம்பை என்றும் வழங்கும்)

௫௪. "திரிபங்கி தாளஞ் சிலைகணை சிலைகோல்"



= 6 மாத்திரை 24 எண்கள்

(சிலை-குரு) (கணை-லகு-கோல்)

௫௫. "கோகிலப் பிரியங் குருகோல் புலிதம்" (புளுதம்)



= 6 மாத்திரை 24 எண்கள்

௫௬. "திருகீர்த்தி தாளஞ் சிலையிணை லகுவிணை"



= 6 மாத்திரை 24 எண்கள்

௫௭. "விந்து மாலியி னுட்சுழி மறையா
மந்தமு மாதியு மடையுங் குருவே"



= 6 மாத்திரை 24 எண்கள்

(மறை-நான்கு)

ருஅ. "சமமிரு வியாபி தயங்கிய விருசுழி
கடையது விராமங் கதித்துநிற் பதுவே"

| | O O ◡

= $3\frac{1}{4}$ மாத்திரை 13 எண்கள்

(வியாபி - லகு)

ருசு. "நந்தனங் கோலிணை நற்சுழி யிரண்டென
வந்த புலித மருவுமென் றனரே"

| | ⊙ O ß

= 6 மாத்திரை 24 எண்கள்

சுய. "மதிகுரு விருசுழி வக்கிர முன்பின்"

ß O O ß

= 5 மாத்திரை 20 எண்கள்

(உதியத்தாளம்) (இடங்கி) (மதியிடங்கி)

ஆகத்தாளம் அறுபது.

---

நந்தனத்திற்கும் மதிக்குமிடையே உத்திக்கணம்
என்ற தாளமுளது.

| | ß = 4 மாத்திரை 16 எண்கள்

"இடங்கி தாள மிருசிலை நடுகோல்"

ß | ß = 5 மாத்திரை 20 எண்கள்

“ வன்னமட்டி யபிநந்தன் மந்தரக் கிரீடை
மல்லதாளந் தீபகத்தோ டனங்க தாளம்
தன்னவிட மம்நாந்தி *குந்தமுகுந்த னேக
தாளம்பூ ரணகங்கா ளத்தி னூடு
மன்னுகண்ட கங்காளஞ் சமகங் காள
மருவிடம கங்காளஞ் சதுர்தா ளத்தோ
டன்னடோம் புளியோ டபங்கம் ராச
வங்காள மிலகுசே கரமெண் பானே ”

| | | |
|---|---|---|
| வன்னமட்டி | — | ௱௧ |
| அபிநந்தன் | — | ௱௨ |
| அந்தரக்கிரீடை | — | ௱௩ |
| மல்லதாளம் | — | ௱௪ |
| தீபகம் | — | ௱௫ |
| அனங்கம் | — | ௱௬ |
| விடமம் | — | ௱௭ |
| நாந்தி | — | ௱௮ |
| *குந்தம் | — | ௱௯ |
| முகுந்தன் | — | ௭௰ |
| ஏகதாளம் | — | ௭௧ |

---

“ அருத்தி மட்டிகை யிரலகுட னிருசுழி
வகுத்த விராம வாளி யிரண்டே ”

| | O O | | = 5 மாத்திரை 20 எண்கள்

(ஏட்டிலுள்ள வேறு பாடம் | | O O | O O 5 மாத்திரை)

(அலகு – லகு)

“ அருத்தி மட்டிகை யிரலகுட னிருசுழி
கடையினு ளொருசிலை கருதிநிற் பதுவே ”

| | O O ꞵ = மாத்திரை 5

பாடபேதமாகவுமுளது.

| | | |
|---|---|---|
| பூரணகங்காளம் | — | எஉ |
| கண்டகங்காளம் | — | எங |
| சமகங்காளம் | — | எச |
| விடமகங்காளம் | — | எரு |
| சதுர்தாளம் | — | எசு |
| டோம்புளி | — | எஎ |
| அபங்கதாளம் | — | எஅ |
| இராசவங்காளம் | — | எகூ |
| இலகுசேகரம் | — | அ௰ |

இனி இவற்றின் உறுப்புக்களாவன,

சுக. "வன்னமட் டிகைசரங் கோல்மதி கதிர்நேர்
சொன்னவட் டந்துணை யாகு மதுவே"

| | O O | O O

= 5 மாத்திரை 20 எண்கள்

(சரம்-கோல்-லகு) (மதி-துருதம்-கதிர்) (நேர்-லகு)

சுஉ. "அபிநந் தனமே யம்பிரண் டிருசுழி
கடையினி லொருசிலை கருதிநிற் பதுவே."

| | O O 

= 5 மாத்திரை 20 எண்கள்

சுங. "அந்தரக் கிரீடை யிந்துமுன் றிறுவாய்
வந்த விராம மெழுகா லாகும்"

O O O ☾ = $1\frac{3}{4}$ மாத்திரை 7 எண்கள்

---

மூன்றும் பாட்டில் குறிப்பிட்ட உத்தீக்கணம் சுக ஆகவும் குறிக்கப்பட்டுள்ளது.

"உத்தீக் கணமிரண் டம்பொரு சிலையே"

௬௪. "மல்லதாள மாமறை லகுவே
சொல்லிரு சுழியுந் தொடர்பின் விராமம்"

| | | | O O ☾

= $5\frac{1}{4}$ மாத்திரை 21 எண்கள்

(மறை - நான்கு)

௬௫: "தீபக மிணைசுழி செங்கோ விரண்டே
யாவதொ ரிருசிலை யடுத்துநிற் பதுவே"



= 7 மாத்திரை 28 எண்கள்

௬௬. "அனங்க தாள மம்புயி ரம்பிணை
வனங்கொள் வக்கிரம் வருவதோ ருயிரே."



= 11 மாத்திரை 44 எண்கள்

(அம்பு - லகு) (உயிர் - புலுதப்) (வக்கிரம் - குரு)

௬௭. "விடமஞ் சுழியிரு வேதம் விந்து
நடுவுங் கடையு நயந்துநிற் பதுவே"

O O O O ◡ O O O O ☾

= $4\frac{1}{2}$ மாத்திரை 18 எண்கள்

( விந்து - அனுத்திருதம் )

௬௮. “நாந்தி கோலிணை நற்சுழி யிரண்டுவாய்
வாய்ந்த கோலிணை வக்கிர மிரண்டே”



= 9 மாத்திரை 36 எண்கள்

(கோல் - லகு)

௬௯. “குந்த தாளங் கோல்நான் குடனே
யந்தம் பிறைவரு மிருமூன் றுமே”



= 6 மாத்திரை 24 எண்கள்

(பிறை - குரு) (இருமூன்று - ஆறு)

௭௰. “முகுந்த நேரிணை விழிநேர் வக்கிரம்”



= 5 மாத்திரை 20 எண்கள்

௭௧. “எக்க தாள மியற்சுழி யொன்றும்”

O = $\frac{1}{2}$ மாத்திரை 2 எண்கள்

(ஏக தாள மேக துருதம்)

---

முகுந்த தாளம் - அன்னிய முகுந்த மாரணம் வலஞ்சுழி
பின்முன் வருவ பிறையென மொழிப.



= 6 மாத்திரை 24 எண்கள்

௭௨. "பூரண கங்காளம் பொருந்து சுழிநாலுங்
காரணச் சிலைகணை கருதிநிற் பதுவே"

O O O O ϐ |

= 5 மாத்திரை 20 எண்கள்

௭௩. "கண்டகங் காளம் கண்ட மிரண்டுடன்
வேண்டிரு வக்கிரம் விறைந்துநிற் பதுவே"

O O ϐ ϐ = 5 மாத்திரை 20 எண்கள்

(கண்டம் - துருதம்) (வக்கிரம் - குரு)

௭௪. "சமகங் காளந் தனுவிரண் டொருகோல்"

ϐ ϐ | = 5 மாத்திரை 20 எண்கள்

(தனு - குரு)

௭௫. "விடமகங் காளம் வியன்கோல் குருவிணை"

| ϐ ϐ = 5 மாத்திரை 20 எண்கள்

௭௬. "சதுர்தா ளஞ்சிலை சுழிமூன் றுமே"

ϐ O O O = $3\frac{1}{2}$ மாத்திரை 14 எண்கள்

௭௭. "டோம்புளி லகுமூன் றெழுங்குட னின்ற
வழியின் விராமம் வந்துநிற் பதுவே"

| | | ◡ = $3\frac{1}{4}$ மாத்திரை 13 எண்கள்

(அன்னடோம்புளி) (தோம்புளி)

௭௮. "அபங்க மொருகோ லாருயி ரொன்றே"



= 4 மாத்திரை 16 எண்கள்

(உயிர் - புலுதம்)

௭௯. "இராசகங் காள மிருசிலே யிடைநேர்
பாராதி யிருசுழி பண்புடன் வருமே"



= 6 மாத்திரை 24 எண்கள்

(இராசவங்காளம்)

௮௦. "இலகுசே கரமே *லகுவின் விராமம்"



= $1\frac{1}{4}$ மாத்திரை 5 எண்கள்

* (கோவின் விராமம்)

ஆகத் தாளம் எண்பது.

---

கந்துக நாற்கோல் கடையாம் பிறையே



= 6 மாத்திரை 24 எண்கள்

தென்பிரதாப சேகரமுஞ் செசற்செம் பைதுருத
சேகரமுஞ் சதுர்முகனும் பின்னசது முகமோ
டென்னிலமெண் சம்பைமட்டம் பிரதி மட்டம்
எய்திறுதி யம்வசந்தன் லளித்த மோடு
மன்னிரதி கருணையதி சட்ட தாளம்
வர்த்தனமும் வன்னமதி ராசநா ராயணன்
வின்மதனன் பார்வதி லோசனமுங் காருகியும்
மேவுசீ னந்தன தாளநூ றதாமே ௫

| | | |
|---|---|---|
| பிரதாபசேகரம் | — | அக |
| செகற்சம்பை | — | அஉ |
| துருதசேகரம் | — | அங |
| சதுர்முகன் | — | அச |
| பின்னசதுமுகன் | — | அரு |
| சம்பைமட்டம் | — | அசா |
| பிரதிமட்டம் | — | அஎ |
| இறுதியம் | — | அஅ |
| வயந்தம் | — | அகூ |
| இலளித்தம் | — | கூ௰ |
| இரதிதாளம் | — | கூக |
| கருணையதி | — | கூஉ |
| சட்டதாளம் | — | கூங |
| வர்த்தனம் | — | கூச |
| வன்னமதி | — | கூரு |
| இராசநாராயணம் | — | கூசா |
| மதனதாளம் | — | கூஎ |
| பார்வதிலோசனம் | — | கூஅ |
| வீரதாளம் (காருதி) | — | கூகூ |
| சிந்தைதாளம் (சீநந்தனம்) | — | ௱ |

இனி இவற்றின் உறுப்புக்களாவன,

அக. "பிரதாப சேகரம் பேசு முயிருடன்
அறிவுட னிருகண் ணதன்பின் துடியே"



= 4¼ மாத்திரை 17 எண்கள்

(துடி - அனுத்திருதம்)

அஉ. "செகற்சம் பையே சிலைவிழி யிரண்டு
மிகவுந் துடிதா னீற்றினி பதுவே"



= 3¼ மாத்திரை 13 எண்கள்

அந. "துருத சேகரந் துருதத்தில் விராமம்"



= ¾ மாத்திரை 3 எண்கள்

(விராமம் - அனுத்ருதம்)

அச. "சதுர்முகன் கணைசிலை கோலு முயிரே"

 = 7 மாத்திரை 28 எண்கள்

(கணை - கோல் - லகு) (உயிர் - புலுதம்) (சிலை - குரு)
(குரு லகு குரு புலுதம் - 8 மாத்திரை பாடபேதம்)

அரு. "பின்ன சதுர்முகன் *பெறுமுயிர் கோலே"

 = 4 மாத்திரை 16 எண்கள்

* (பெறுமின் கோலே) (மின் - புலுதம்)

அசு. "சம்பை மட்டம் இருசுழி விராமம்
தாளென வமைந்து நிற்கு மதுவே"

O O ◡ | = 2¼ மாத்திரை 9 எண்கள்

(கோலென) (தாள் - லகு)

அஎ. "பிரதிமட் டங்கோல் பிறைநேர் குருவே
யிறுதி இணையாய் கணைநிற் பதுவே"

| β | β | |

= 8 மாத்திரை 32 எண்கள்

(நேர் - லகு)

அஅ. "இறுதியந் தாளஞ் செப்பிடில் முச்சுழி
இறுதி யிரண்டு துடியா கும்மே"

O O O ◡ ◡

= 2 மாத்திரை 8 எண்கள்

(துடி - அனுத்திருதம்)

அகூ. "வயந்த தாளம் வாளி மூன்றுடன்
நயந்த வக்கிரம் நண்ணிய தமிழே"

| | | β β β

= 9 மாத்திரை 36 எண்கள்

(வாளி - லகு) (வக்கிரம் - குரு)

கூ௰. "இலளித மிருசுழி வக்கிரங் கணையே"

O O β | = 4 மாத்திரை 16 எண்கள்

(வக்கிரம் - குரு)

௧௧. "இரதி தாள மிலகுவக் கிரமே"

(அம்புவக் கிரமே)

|  = 3 மாத்திரை **12 எண்கள்**

௧௨. "கருணை யதியே கண்ணொரு நான்கே"

O O O O = 2 மாத்திரை **8 எண்கள்**

**(கண் – துருதம்)**

௧௩. சட்டதா ளஞ்சுழி தமிழிரண் டாமே"

O O O, O O O

= 3 மாத்திரை **12 எண்கள்**

(தமிழிரண் டாறே)

(தமிழ் மூன்று. அதனிரண்டு ஆறு)

௧௪. "வர்த்தன தாள மரபிரு கொம்புகோல்

உயிரோ டுயர்ந்துநிற் பதுவே"

O O |  = 5 மாத்திரை **20 எண்கள்**

(மரபு – தாளமரபு)

(கொம்பு – துருதம்) (**கோல் – லகு**)

௧௫. "வன்ன மதியே வாளியீ ரண்டுடன்

அன்ன உயிரிரண் டடுத்துநிற் பதுவே"

| |  

= 8 மாத்திரை **32 எண்கள்**

**(வாளி – லகு) (வருணபதி) (உயிர் – புலுதம்)**

௧௬ "இராசநா ராயண னிருசுழி சரமே
பரவிய பிறைகணை பரண்தனு வருமே"



= 7 மாத்திரை 28 எண்கள்

(சரம்-கணை-லகு)

௧௭ "மதனன் சுழியிணை வக்கிர முன்னே"

 = 3 மாத்திரை 12 எண்கள்

(வின்மதனன்) (மதங்கம் எனவும் வழங்கும்)

௧௮ "பார்ப்பதி லோசனம் பாரிரு விழிகோல்
ஏற்பது கண்ணிணை வக்கிர மெனவே
சேர்ப்பது மறைகோல் சிலையொன் றிணைகோல்"



= 16 மாத்திரை 64 எண்கள்

(விழி-கண்-துருதம்)

௧௯ "காருதி (வீர) தாளம் வின்மூன் றொருகணை
யார வொருவிழி யம்பிணை யிருசுழி"



= $10\frac{1}{2}$ மாத்திரை 42 எண்கள்

௨௰ "சிந்தை தாளஞ் (சீநந்தனம்) சிலையொன் றிரு
முந்தை வுயிரொன் றடுத்துநிற் பதுவே" [கணை

 = 7 மாத்திரை 28 எண்கள்

முந்தையுயிர் ஒகாரம் புலுதம்.

---

வீரதாளம் வின்மூன் றிருகணை
யான வொருவிழி யம்பிணை யிருகோல்



பிறநூல்களில் பாடபேதங்கள் உள்ளன.

சயதாளம் லயதாளம் விலோகி தாளம்
சார்தலளி தப்பிரியந் தகண னோடு
வயசேவு மிலக்குமீசன் பின்னி ராச
வர்த்தனம் பெத்தாபரணம் நூற்றெட் டாகும்.

எனத் தாளப்பெயர் கருத்து முடிவுற்ற இப்பாடல், ஆறு பாடல்களின் தலைப்பினை மட்டும் கூறுகின்ற அளவிற்கு பின்னிரண்டடி, முதனிலைப்புக் கூறி முடிகிறது.

இயல்கவியின் அடுக்குக் கூறிற் சச்ச
புடமங்கை யாமாசில் வன்ன மட்டி
தயவுபுரி தென்பிர தாப மேவு
சயதாளத் தோடுமிவை யாற தாமே. சு.

ஆறு பாடல்களின் தலைப்பு (தாளப்பெயர் கூறும் பாடல்கள்)

1. சச்சபுடம்
2. மங்கையரே
3. மாசில்துதி
4. வன்னமட்டி
5. தென்பிரதாப
6. சயதாளம்

| | | |
|---|---|---|
| சயதாளம் | — | ௱க. |
| இலயதாளம் | — | ௱உ. |
| விலோகிதம் | — | ௱ங. |
| இலளிதப்பிரியம் | — | ௱ச. |
| தகணதாளம் | — | ௱ரு. |
| இலக்குமீசன் | — | ௱சா. |
| இராசவர்த்தனம் | — | ௱எ. |
| பெத்தாபரணம் | — | ௱அ. |

இனி இவற்றின் உறுப்புக்களாவன :

௱௧. "சயதா ளங்கோல் சிலைகணை யிரண்டுட
வயமதி யிணைசே ராருயி ரொன்றே"

| ʃ | | O O ϡ

= 9 மாத்திரை 36 எண்கள்

(மதி – திருதம்) (உயிர் – புலுதம்)

௱௨. "இலய தாளம் இருசுழி கோலுயிர்"

O O | ϡ

= 5 மாத்திரை 20 எண்கள்

௱௩. "விலோகிதங் கோல்சிலை விளங்கிரு சுழியுயிர்
உலகம் புகழ்வார் உள்ளதே யளவை"

| ʃ O O ϡ

= 7 மாத்திரை 28 எண்கள்

௱௪. "இலளிதப் பிரியம் இணைகோல் வில்லும்
வருகணை சிலையுடன் வந்துநிற் பதுவே"

| | ʃ | ʃ

= 7 மாத்திரை 28 எண்கள்

---

சயதாளம், சயன் எனவும் செகதமெனவும் வழங்கும். லயதாளம் லீலை எனவும் வழங்கும். இத்தாளம் கைதாரி லீலை எனவும் வழங்கும்.

௱௫. "தகண தாளம் செழுங்கணே மறையே
யணேயு மிணேவில் லம்பிணே யென்ன
முணேயும் பிறைதான் முத்தமி ழாமே"



= 16 மாத்திரை 64 எண்கள்

௱௬. "இலக்குமீ சன்கண் சுழியொற் றிருகணே
அலக்க மில்பணி அளவை யாறேகால்



= $6\frac{1}{4}$ மாத்திரை 25 எண்கள்

(கண்-துருதம்) (ஒற்று-அனுத்துருதம்)
(பணி-புலுதம்)

௱௭. "இராச வர்த்தன மிருசுழி பின்றுடி
பராவி யொருகோல் பரந்துயிர் வருமே"



= $5\frac{1}{4}$ மாத்திரை 21 எண்கள்

(துடி-அனுத்திருதம்) (உயிர்-புலுதம்)

௱௮. "பெத்தா பரணம் பெருங்கணே யிரண்டும்
ஒத்த நடுவில் லுயிர்நிற் பதுவே"

 = 5 மாத்திரை 20 எண்கள்

தாளநூற்பா முற்றும்.
குரு வாழ்க.
சிவாசலபதி சகாயம்.

# தாண்டவப் பொதுவியல்

## ஒழிபு மரபு

**நிலம் (பூமிக்காதாரம்)**

"அப்புமேற் கூர்மன் அதன்மேலே யட்டகசஞ்
செப்பரிய பஞ்சமுகச் சேடனுமாய் — அப்பொழுது
முன்னூல்தேர் மாலயனும் மூவர்முதற் சங்கரனும்
பன்னக மீதுவைத்தான் பார்."

என்னுதலிற்றோவெனின்? நிலத்திற்கு (பூமிக்கு) ஆதாரமானவை உணர்த்துதல் நுதலிற்று. சமுத்திரம் ஆகிய நீரின் (சலத்தின்) மேலே கூர்மன். கூர்மன் ஆதாரமாக அட்டகெசமும், ஐந்து தலையினை உடைய அட்டநாகமும், இவற்றின் நடுவே ஆயிரம் பணமுடியை உடைய சேடன். இதன்மேலே பூமியென்றவாறு. க.

**நிலத்தின் வடிவு**

"பரவு சலமே பனிகூரு மத்தின்மேல்
விரவு கரியெட்டின் மீதே — கிரிமானும்
அட்டநா கஞ்சுமக்கு மாதரவா யாவர்க்கு
மிட்டமாம் பூமியது தான்"

என்னுதலிற்றோவெனின்? பூமியின்வடிவு உணர்த்துதல் நுதலிற்று. பரவும் நீரே ஆதி கூர்மத்தின் மேலும், என்பது. மலை, யானை, ஆதிசேடன், ஆதாரசத்தி. ஆதிகூர்மம் இவை ஒவ்வொன்றுந் தாங்கச் சிவம் தாங்கும் என்றவாறும், இப்படியெல்லாமிருக்கும் பூமி என்றவாறுமாம். உ.

(ஆதிகூரு மத்தின்)

## உயிர்த்தோற்றம்

"ஊர்வ பதினொன்று[1] மொன்பது மானிடவர்
நீர்பறவை *நாற்காலாம் நேர்பத்துச் — சீரிய
பந்தமார் தேவர் பதினு லயன்படைத்த
அந்தமில்சீர்த் தாவரநா லைந்து"

என்னுதலிற்றோவெனின்? உயிர்த் தோற்றவகை உணர்த்துதல் நுதலிற்று.

1. தாவரம் இருபது நூறுயிர பேதம்
2. ஊருகிற சீவன் பதினொரு நூறுயிரம் பேதம்
3. நீர்வாழ் சீவன் (சாதி) பத்து நூறுயிரம் பேதம்
4. பறக்கின்ற பறவை பத்து நூறுயிரம் பேதம்
5. நாற்கால் விலங்கு பத்து நூறுயிரம் பேதம்
6. மனிதர் ஒன்பது நூறுயிரம் பேதம்
7. தேவர்கள் பதினான்கு நூறுயிரம் பேதம்.

ஆக எண்பத்து நான்கு நூறுயிரம் (லட்சம்) பேதமான வர்க்கச் சீவாத்துமாவையும் அயன் படைத்தான் என்றவாறு. கூ.

## தெய்வ அவை (சபை)

"நாரா யணனே நடுவா யிரண்டருகும்
பாரோரா வானோ ரிருடிகளும் — சீராக
மன்று ளினிதிடமாய் வாதாடிக் காளியுடன்
அன்றுநடஞ் செய்தவவை யாம்"

என்னுதலிற்றோவெனின்? தெய்வ சபையின் இயல்பு உணர்த்துதல் நுதலிற்று. நாராயணன் முதலானபேர் நடுவாகவும், முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்தி எண்ணாயிர முனிவர்களும், இரண்டு புறமும் சூழ்ந்து

* நாற்காலோர் பப்பத்துச்

இறைஞ்சத் தில்லையிலே பத்திரகாளியுடன் வாதாகப் பரமேசுவரன் தாண்டவஞ்செய்தது தெய்வசபை என்றவாறு. சு.

## தெய்வ மேளத்தால் நின்றவர்

"நந்திவல மத்தளமாம் நான்முகன் கையிடக்கை
இந்திர னுடுக்கை யெமன்குடுக்கை — சந்திரநீள்
சூரியனே நற்சுருதி தும்புரர்தொல் கீதமாய்ப்
பாரினடிப் பித்தான் பறை" (சங்கீதமாய்)

என்னுதலிற்ருேவெனின்? தெய்வ மேளத்தில் நின்ற பேர்களை உணர்த்துதல் நுதலிற்று. பரமேசுவரனை ஆட்டுவித்தவள் பார்வதி. மத்தளம் கொட்டினவன் நந்தீசுவரன். இடக்கை கொட்டினவன் பிரமன். உடுக்கை கொட்டினவன் இந்திரன். குடுக்கை கொட்டினவன் இயமன். சுருதிக்காரர் சூரியர், சந்திரர், இசைபாடினவர் தும்புருவர், நாரதர் என்றவாறு. ரு.

## இராச சபை

"மன்னவனே யிந்திரனு மந்திரியே மாதவியாய்த்
துன்னுமியற் சங்கீதர் தும்புரராய் — இந்நிலத்தில்
மங்கையரே யுருவசியாய் வண்டமிழோர்
சங்கமுடன் பார்க்குஞ் சபை" [தேவர்களாய்ச்

என்னுதலிற்ருேவெனின்? இராச சபையின் பாவனை உணர்த்துதல் நுதலிற்று. சபைக்கு நடுவேயிருந்த இராசன் தேவேந்திரனாகவும், மந்திரி மாதவியாகவும், மேனகை, அரம்பை, ஊர்வசி, திலோத்தமை, சங்கேசி, (சனவபதி) சனபதி, சித்திரசேனை முதலான தெய்வப் பெண்கள், அடப்பை, குஞ்சம், காளாஞ்சி வெண்சாமரை இவை முதலான தொழில் செய்கின்ற பேர்களாகவும், கின்னரி, உருத்திரவீணை, நாகவீணை, கைலாசவிணை,

சுரமண்டலம், இராவணுத்திரம், இவை முதலான கருவிகளுடன் இசை பாடுகிறவர்கள், கின்னரர்கள், கிம்புருடர்கள், சித்தர், வித்யாதரர் கந்தர்வராகவும், இராசாவைச் சூழ்ந்து இரண்டு புறமும் நின்று காண்கின்ற பேர்கள் தேவர்களாகவும் இப்படி இருப்பது இராச சபை என்றவாறு. சு.

## நட்டுவன் (நட்டுவன் இலக்கணம்)
## ஆடலாசிரியன்

"பாட்டுவிக்கப் பாடப் பரதவிதத் தாற்கூத்தை
ஆட்டுவிக்க வாட வருங்கரணம் — பூட்டுவிக்கத்
திட்டமுடன் பாடைபல தேர்ந்துகற்றுப் பேசுவிக்க
வட்டதிக்கெண் ணட்டுவனே யாம்."

என்னுதலிற்றோவெனின்? நட்டுவன் இயல்பு உணர்த்துதல் நுதலிற்று. இயலும் இசையும் தேர்ந்தும் பண் முதலமையப் பல பாக்களையும் பாட்டுவிக்க நாடகம், முதலானவும் பரத சாத்திர விதிமுறையறிந்து அதன் பிரகாரம் ஆட்டுவிக்க அரிதாகிய காரணங்களைத் (கரணங்களைத்) தான் செய்து பிறர் மெய்யிலும்பூட்டுவிக்கப் பதினெண்பாடை முதலானவெல்லாம் தான் கற்றுப் பிறரை வருத்துவிக்க, இப்படித் திக்குகள் தோறும் மதிக்கவல்லனாகிய இவன் நட்டுவனும் என்றவாறு. (திக்கெண் – எட்டுத்திக்கு) (பிறர் – ஆடற்கணிகை) எ.

## பாவாடை

"நாதம் பகர்விந்து வேராகி நன்முளையாய்
வேதம் கவர்காயாய் வீறுபஞ்சாய்ப் — போதநூற்
பூவாடை பாவாய்ப் புனைந்தார்நம் வள்ளுவனார்
பாவாடை யென்றே பகர்"

என்னுதலிற்றோவெனின்? பாவாடையின் இயல்பு உணர்த்துதல் நுதலிற்று. பருத்தி விதையும், வேரும்,

மூளையும் நாதவிந்துவாகவும் இதனுடைய கொம்பு வேதங்களாகவும், இதன் காய், *பிஞ்சு திருமால், பிரமன் இவர்களுடைய மேனியாகவும் இதன்னூல் பரமேசுவரன் உடைய *ஒலியாகவும் பாவோடி நெய்த வள்ளுவனார் பாவாடை என்றவாறு. அ.

உடைக்கச்சு

"வேங்கையுரித் தோலுடையாய் மென்னுக மேகயிருய்
ஈங்குமுய லகனுதிர மெண்ணேயாய்ப் — பாங்குடனே
மன்றினடித் தார்செயலாய் மானிலத்தில் நிர்த்தகர்க்கு
வென்றியுள்ள பாவனையா மென்"

என்னுதலிற்றோவெனின்? ஆடுவார்க்குரிய பாவாடை உடைக்கச்சு உணர்த்துதல் நுதலிற்று. வேங்கையதள் உடையாகவும், நாகம் சுற்றுக்கச்சாகவும், முயலகனுதிரம் எண்ணேயாகவும், பரமேசுவரனருளால் பூலோகத்தில் திருத்தகர்க்குப் பாவனையாம் உடைக்கச்சு என்றவாறு. கூ.

கச்சையெடுத்த கைக்கு......

"முப்பாணி மூன்று முதல்வரென்று சொல்லலாம்
உட்புறம்பு திங்க ளுதயனும் — எப்போதும்
அங்குட்ட தர்ச்சனிமத் திமையனு மிகைகனிட்டை
அங்குலிநற் றேவரென லாம்."

என்னுதலிற்றோவெனின்? கச்சையெடுத்த கைக்குப் பாவனையுணர்த்துதல் நுதலிற்று. தோள் பிரமாவாகவும், முழங்கை விட்டுணுவாகவும், மணிக்கட்டு உருத்திரன் ஆகவும், உள்ளங்கை சந்திரனாகவும், புறங்கை சூரியன் ஆகவும் ஐந்து விரல்களும் தேவர்களாகவும் பாவிப்பது என்றவாறு. ம.

---

* பிஞ்சு – பஞ்சு. ஒளியாகவும்.
(துய்யாச் சேலை) (பாவனை – உடைக்கச்சு)
முப்பாணி – தோள், முழங்கை, மணிக்கட்டு.

**நட்டுவன் மேளத்தில் நின்றபேர்**

" நட்டுவனே நாதனும் நந்திமலர் வேதனடு
திட்டமுடன் தேவர்கோன் சேரவே — கொட்டியமன்
சுந்தரனேர் சந்திரனும் சூரியனும் தும்புரரும்
விந்தையுள சங்கீத மென் "

என்னுதலிற்றோவெனின்? நட்டுவ மேளத்தில் நின்ற பேராவன உணர்த்துதல் நுதலிற்று. கச்சை கட்டின நட்டுவன் சிவனாகவும், மத்தளக்காரன் நந்தீசுவரனாகவும் இடக்கை கொட்டினவன் பிரமாவாகவும், உடுக்கை கொட்டினவன் தேவேந்திரனாகவும், குடுக்கை கொட்டினவன் இயமனாகவும், சுருதிக்காரர்கள் சந்திர சூரியராகவும், பாடுகின்றவர் தும்புரு, நாரதராகவும் பாவனையாம் என்றவாறு. ௰௧.

**திக்குப்பாலகர்**

" இந்திரனோ டக்கினி யியமனிரு திவருணன்
வந்தவா யுவ்வோ டளகையான் — முந்தமரர்
அக்கணியு மீசனுட னட்டதிக்குப் பாலகர்பார்
மிக்கவயன் மேலாத மேல்" (அக்கணி - ஈசானன்)

என்னுதலிற்றோவெனின்? திக்குப்பாலகராவன உணர்த்துதல் நுதலிற்று. கிழக்கு – இந்திரன், தென் கிழக்கு – அக்கினி, தெற்கு – இயமன், தென்மேற்கு – நிருதி, மேற்கு – வருணன், வடமேற்கு – வாயு, வடக்கு – குபேரன், வடகிழக்கு – ஈசானன், பூமிக்குப் பிரமன், ஆகாயத்திற்கு விட்டுணுவாம் என்றவாறு. ௰௨.

**பூமியை வணங்கி நடம்புரிதல்**

" நாட்டியத்தை நின்மேல் நயந்து நடம்புரியுங்
கோட்டி தனைப்பொறுத்துக் கொள்வாயே—காட்டுநிறம்
பொன்னே பிரமனக வன்னமே நாற்கோணந்
தன்னேரி லாதவனே தான் " (பிரமனக வந்தமே)

என்னுதலிற்றோவெனின்? பூமியை வணங்கி நடம் புரிதல் உணர்த்திற்று. யான் நின்மேல் நின்று நடனஞ் செய்கின்ற கோட்டிகளெல்லாம் பொறுத்துக்கொள்ளுக என்று பூமியை வணங்கித் தோத்திரஞ் செய்க என்றவாறு. ௰௩.

## நிருத்தத்துக்கு வந்தவள் இலக்கணம்
(நிருத்தகி லட்சணம்)

**"கொஞ்சு கிளிமொழிபோற் கூவுங் குயிலிசைபோற்**
**செஞ்சொலியல் வல்லவுருச் சித்திரம்போல்—வஞ்சியரில்**
**மேலாய்க் குடிப்பிறப்புச் செல்வமே லாமேலோர்**
**மாலாமின் னுட்டுவிக்க லாம்"**

என்னுதலிற்றோவெனின்? நிருத்தகி இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று. வசனிக்கிறது சாந்தமுடன் கிள்ளையைப்போல் விசித்திரமாக வசனிக்க, இசை பயிற்றலில் ஏழிசைகொண்டு வடநூல் முதல் இயற்றமிழ் வல்லமையாய்க் குயிலைப்போலப் பாட, அன்றியும் ஓவியம் போல மாதர் குழுவில் எவர்க்கும் மேன்மையே பெற்றுக் குடிப்பிறப்புஞ் செல்வமும்மிக்காளாய்க் கண்ட உடனே இச்சிக்கத்தக்க (வணங்கத்தக்க) பெண்ணே நாட்டியத்திற்கு உரியள் என்றவாறு. ௰௪.

## நிருத்தகி நிற்குநிலை

**"செய்யவிரு காலகூட்டிச் சேர்ந்தமுக மசையாமல்**
**ஐயமென் றேசபையி லஞ்சாதே — துய்யபரு**
**வத்துருப் போல்நின்று வடிபலவும் பேராமல்**
**சித்திரம்போல் நின்றாள் திரு"**

என்னுதலிற்றோவெனின்? நடனத்தில் பெண் நிற்கிற நிலை உணர்த்துதல் நுதலிற்று. இரண்டு காலையுங்கூட்டி முகமசையாமல், சபையில் பயப்படாமல், பலவடிக்

கொள்ளாமல் சித்திரமென்னத் திருவைப் போன்று நடனப்பெண் நிற்பளென்றவாறு. ருரு.

### மன்னனைப் பார்த்து நடிக்க

"மன்னவனை யேநின் வலக்கண்ணா லேபார்த்துத்
தன்னுடம்பு *வாச்சியமே தானாக — நன்னெறிசேர்
பிள்ளையார் பிரபந்த முதலானுஞ் சாதித்தே
விள்ளமுதல் நிருத்தமதா மென்"

* வாத்தியமே

(நிர்த்தமதா)

என்னுதலிற்றோவெனின்? ஆடுகிற பெண் இராசாவைப் பார்த்து நிருத்தஞ் செய்வாளியல்பும் உணர்த்துதல் நுதலிற்று. நடிக்க வேண்டுமென்பது உணர்த்துதல் நுதலிற்று. ஆடுகிற பெண், இராசாவை வலக்கண்ணாலே பார்த்து மேளத்தைத் தன்னிடமாக வைத்துப் பிள்ளையார் பிரபந்தம், புட்ப பிரபந்தம், சக்கரபதம் (சவனிக்காபதம்) சாலி இவை நான்கு பொருளும் நிருத்தஞ் செய்வாள் என்பதென்றவாறு. ருசா.

### மண்டலமிடுதல்

"நெற்றிக்கு முந்திச் சுழிக்குமொரு நேரே நூல்
எற்றிப் பிடித்திங் கிருந்தளவும் — பற்றியுடல்
உன்னியொரு சாணா முவந்தறிவோர் தன்சபையில்
மன்னியிருப் பார்மண் டலம்"

என்னுதலிற்றோவெனின்? மண்டலமிடுதல், கூறுதல் நுதலிற்று. (மண்டலமிருத்தல்) நெற்றிக்கும் உந்திக்கும் ஒருநூல் பிடித்தும் அந்நூலளவும் பன்னிரண்டங்குலம் பகிர்ந்தது மண்டலமாம் என்றவாறு. ருஎ.

## நாட்டிய தசப்பிராணன்

"மெய்யே முகங்கண்கள் காலுடனே பண்புதொழிற்
கையே புருவங் குறிப்பறிதல் — * செய்யபண்
ணிவைவிகாரம் பத்தி னுலாட லென்றூர்
அவைசிறந்த நூல்பலவல் லார்"

* (செயலென் றூர்)

என்னுதலிற்றோவெனின்? நாட்டிய தசப்பிராணன் உணர்த்துதல் நுதலிற்று. மெய் முகம் கண் கால் பண்பு தொழில் கை புருவம் குறிப்பறிதல் பண் இவை பத்து விகாரத்தாலும் ஆடப்படுமென்றவாறு. (விகாரமென்பது விகற்பம்) யஅ.

## தொழில் மெய்ப்பிரிவு

"பாதமலர் போம்வழியே பங்கயஞ்சேர் கைசெல்ல
மேதகையி னூடே விழிசெல்லப் — பாதமுதல் (பாதம்)
விழித்தார் முகநோக்கி மெய்யழுத செல்லச்
சுழித்தாடி னூர்மதியிற் சூழ்ந்து"

என்னுதலிற்றோவெனின்? நாட்டியத் தொழில் மெய்ப்பிரிவு உணர்த்துதல் நுதலிற்று. நிருத்தம் பண்ணுகையில் பாதம் போன வழியே கைசெல்ல, அந்தக் கை சென்ற வழியே விழி செல்ல, ஆடுகிற பெண்ணினுடைய பாதாதி கேசத்தை நோக்கி இருக்கிற மன்னனை (இராசாவை) வலக்கண்ணாலே பார்த்துத் தன் மெய்யினுடைய அழகு செல்லச் சுழித்து ஆடினுள் புத்தியினுற் சூழ்ந்து என்றவாறு. யக.

## மேளக்கூட்டரவு

"தாளத்து வட்டந் தவறுமற் றூனடிக்கும்
மேளத்தைப் பாட்டுக்குள் மீருமல் — தாளத்தை
யொக்கடிக்கில் மாத்திரைவிட் டோடாம லேயதனை
யொக்கறுத்து நன்று யுரை"

என்னுதலிற்றோவெனின்? மேளக் கூட்டரவு அடங்கி இருத்தல் நுதலிற்று. ஆடுகிற பெண்ணின் காற்சிலம்பு ஓசைக்கு உள்ளடங்கிப் பாடுதலும், இவைகொண்டு பண், சிந்து, பாடலிற்றாளம் மத்தளச் சுருதியும் பாங்குற அதற்குமுள்ளுற அடங்கியிருத்தலும் இப்படி அகமார்க்க நிருத்தம் புரிவித்தல் வேண்டுமென்றவாறு. அவ்வாறு புரிவிக்கையில் மேளக் கூட்டரவு மிக்காமென்றவாறு. உ௰.

**அகமார்க்கம்**

" ஆதி யலங்கார மனுக்குப் பதமடவாய்
ஓதிய தேசி யெனுமொத்து — நீதியதாம்
புட்பாஞ் சலிவதுப்புப் புனிதர்தில்லை மன்றுளினில்
வைப்பாய் நடித்தார் மகிழ்ந்து"

என்னுதலிற்றோவெனின்? அகமார்க்கப்பொருள் உணர்த்துதல் நுதலிற்று. ஆதிபீடம் அலங்காரபீடம் அனுக்குப்பதம் தேசியொத்து புட்பாஞ்சலி அலாரி இந்த ஆறு பொருளும் சிவன் வைப்பினுற் கொண்டார் என்றவாறு. உக.

**இதுவுமது**

" இத்தா ரணிவாக் கியந்தாண் டவம்புரிய
ஒத்தோசை நாற்கர ணத்தோடே — யத்தர்முன்
நீதி நிழலொரு * கால்வைப்புப் பாதமடிப்
பாதி யகமார்க்கத் தடைவு."

* (கால் நிகழ்வைப்)

வாக்கியம், தாண்டவம், ஒத்து, ஓசை, கரணம், நீதி, நிழல், ஒருகால், கவுத்துவம், (கருத்தம்) வைப்பு, மடிப்பு இவற்றாலும் கொண்டாரெனக் கொள்க என்றவாறு. உஉ.

---

கூட்டரவு, ஆடற்சிலம்போசை, பாடலோசை, தாளவோசை, மத்தளவோசை என்பனவாம். (அரவு, அரவம், ஓசை.)

## அகமார்க்கச்சாரி

"இப்புவியெண் தில்லையிலே யெண்டாளந் தன்னிலுயிர்
வைப்பு வழுவா வகைதெரிந்து — தப்பாமல்
ஆதிமார்க் கச்சாரி யாநந்தத் தாளமுடன்
சோதிநடஞ் செய்தான் தொகுத்து."

என்னுதலிற்றோவெனின்? அகமார்க்கச்சாரி உணர்த்துதல் நுதலிற்று. அகமார்க்கச்சாரி, அனங்க தாளம், துதியங்கதாளம், அன்னநாதம், இரதிதாளம், சகணம், தற்பணம், சந்நிதானம், துரங்கலீலை, ஆநந்தம் இவை ஒன்பது தாளத்தால் வைப்பினுற் சிவன் நிருத்தம் செய்தாரென்றவாறு. உங.

## ஆழாப்புச்சாரி

"எட்டஞ்சு பத்துவட்ட மிக்காறு மவ்வட்டம்
நட்டணை கொள்நாற்பத் தாறுவட்டம் — முட்டவே
ஏற்றிக் கழிக்க வீராறு டாறுமெனச்
சாற்றிலொரு மூன்றுஞ்சா லி."

என்னுதலிற்றோவெனின்? ஆழாப்புச்சாரி உணர்த்துதல் நுதலிற்று. ஆழாப்புச்சாரிக்கு ஆதிதாளத்தில் நாற்பத்து ஆறு வட்டத்தில் இரண்டு மெய்க்கும் எடுத்துப் பன்னிரண்டு வட்டத்தில் இறுக்கிக் கொண்டு ஆறு வட்டத்திலிறுக்கி மூன்று வட்டத்தில் சிவன் நிருத்தஞ் செய்தாரென்றவாறு. உச.

## பிரபந்தசாரி

"பாவாற் பதின்மூன்று தாளம் பகிர்ந்துமுறை
தாவாப் பிரபந்த சாரியாம் — ஓவா
மறைதேடி யுங்காணு வள்ளல் நடித்தார்
முறையோது வியாக்கிரமுனி முன்."

என்னுதலிற்ருேவெனின்? பிரபந்தாசாரி உணர்த்துதல் நுதலிற்று. பிரபந்தசாரியை சிங்கவிக்கிரீடிகம், திரியச்சிரவன்னம், அபிநந்தனம், மல்லிகாமோதம், சரபலீலை, மதங்கம், ஆதியட்சணம், பிரீதிதாளம், பெத்தாபரணம், திரிமாத்திரிகை, இடங்கிதாளம், பின்ன சதுமுகன், ஆதிதாளம் ஆகப் பதின்மூன்று தாளமுடன், பதஞ்சலி வியாக்கிர முனிவர் காணத் தில்லையில் சிவன் வைப்பினுல் நடித்தாரென்றவாறு. உரு.

## தோடையம்

"சச்ச புடமுதலா யைம்பத்து நான்குதன்னிற்
செச்சை யுடன்சவுத சிங்காரம் — நிச்சயமாய்
மன்றுள் நடித்தார் மடிப்பால் வகைதெரிந்து
நன்றிபத்த தோடையத்தி னுல்."

என்னுதலிற்ருேவெனின்? தோடையம் உணர்த்துதல் நுதலிற்று. அகத்திய பிரத்தாரத்தில் ஐம்பத்துநான்கு தாளத்தில், சச்சபுடமுதல் சவுத சிங்கார மூன்றும், பத மூன்றும், தோடையமும் மடிப்பினுல் சிவன் நிருத்தஞ் செய்தார் என்றவாறு. உசு.

## வெற்றிமாலை சூடியது

"நாலு திசையும் நடத்தின கரம்பிடித்துச்
சால மலருமிகச் சாற்றியே — கோலநறு
மென்மலரோன் காணு விமலனைத் தேர்காணத்
தன்முடியிற் சாத்தினுன் தார்."

என்னுதலிற்ருேவெனின்? சிவன் வெற்றிமாலை சூடியது உணர்த்திற்று. நான்கு திக்கிலும் நடந்து மண்டலம் இருந்து நடுவே நின்று பிரமாவானவன் அன்னமாகப் பறந்து தேடியும் காணுமலிருக்கிற முடியைச் சமத்தமாய் இருக்கிற தேவாதிகள் அனைவோருங் காணத் தாமரை,

அருகு, கொன்றை, தும்பை, எருக்கு எனும் மலர்களால் சுவாமி சிவன் தன் திருமுடியில் வெற்றி மாலையாகச் சூடிக்கொண்டார் என்றவாறு. உஎ.

## முகசாலேயம்

"அட்டதிசை நோக்கி யடிவைத்து மண்டலமுன்
னிட்டேயீ ரெண்கை யியல்பாக — முட்டத்
தகையாம லேநடுவே தானுடி நிற்றல்
முகசா லேயமா மொழி."

என்னுதலிற்றோவெனின்? முகசாலேயமென்பது உணர்த்திற்று. எட்டுத் திக்கிலும் நடந்து, திக்குக்கொரு மண்டலமிருந்து பதினறுகை பிடித்து நடுவில் வந்து தீர்ந்தது முகசாலேயமென்றவாறு. உஅ.

## ஆனந்த நிருத்தம்

"தாளமுதல் மானக் கிரியைநிகழ் மாத்திரை
நாளு முழவிசை பாணியால் — வாள்விழியாய்
முக்கண்ணன் முன்னொருநாள் மூவகைக்கூத்
தக்கண்ணு மென்றே யியம்பு." [தாக்கினன்

என்னுதலிற்றோவெனின்? மூவகைக் கூத்தாடியது உணர்த்திற்று. முன்சொன்ன மாத்திரைகளானும், நடைகளானும், காலக்கிரியை மானங்களானும், உறுப்புகளானும் மிக்கும் குறைந்தும் இயற்றும் இயந்திரங்களானும், முழவினுக்கும், இசைக்கும் தாளத்தினுக்கும் பொருந்த முக்கண்ணன் மூவகைக் கூத்தும் ஆடியமைத்தான் என்றவாறு.

(சாத்துவிகம்) சாத்திகம் தேசி சமக்கூத்து
இராசதம் வடுகு வன்மைக்கூத்து
தாமதம் சிங்களம் மென்மைக்கூத்து

இவை ஆகமத்தினுள்ள குணமூன்றினலும் பெயர் பெறுதலான் அகமார்க்கம் என்று பெயர்பெற்று வழங்கப் படுமெனக் கொள்க என்றவாறு. உக.

**இதுவுமது**

" ஓங்கு புகழீச னுயர்விதமாய்க் கொண்டாடப்
பாங்குடைய நாரதனர் பாடினர் — பூங்குழலாள்
பாணி யியற்றின ளென்ருன் பனிவகையில்
வீணை யியற்றியதே வேந்து"

என்னுதலிற்ருேவெனின்? பாடியதும், பாணி இயற்றியதும் உணர்த்திற்று. இக்கூத்துமாடினன் பரமேசுவரன். நாரதனர் பாடினர். பாணிகொண்டாள் கௌரி. பொதியமலை அகத்தியன் யாழ் பணித்தான் என்றவாறு. கூ0

**மாறியாடியது**

" சாதிவருஞ் சச்சபுடந் தாளமொரு நூற்றெட்டும்
பூதலமெண் புட்பப் பிரபந்த — மீதுறவே
ஓங்கு தகாரத் துயர்தாளத் தொவ்வொன்ருய்த்
தாங்கிவரச் சொக்கர்நடித் தார்."

என்னுதலிற்ருேவெனின்? மாறியாடியது உணர்த்துதல் நுதலிற்று சச்சபுடமுதற் பெத்தாபரணமீருக நூற்றெட்டுத் தாளமும் பூதலமீதிற் புட்பபுடப் பிரபந்த முதலாகிய பொருள்கள் இலங்கவும், ஒவ்வொரு தாளமாகத் தனித்தனியே வெள்ளியம்பலத்தில் (இரசத சபையில்) சொக்கர் மாறியாடினர் என்றவாறு கூக.

( புட்பவிடம் )

**கூத்து முதலியன**

"காலால் நடப்பதெல்லாங் கூத்தாகுங் கைகளின்
பாலாகச் செய்யின் முழவமா — மேலாய
வாக்கினுற் பேசுவன வெல்லா மிசையாகுந்
தாக்கினுற் ருளமே யாம்."

என்னுதலிற்றோவெனின் கூத்து, முழவம், இசை, தாளம் இயல்புணர்த்திற்று. கால்களால் நடக்கும் வினைகளெல்லாம் கூத்தாகவும், கைகளாற் செய்வன (தொழில்) முழவமாகவும், வாக்கினுற் பேசுவனவெல்லாம் இசையாகவும் தாக்கியதெல்லாம் தாளமாகவும் எடுத்து உரைக்கப்படுமென்றவாறு.

இந்நடை நான்கு வகைப்படும் :- அவையாவன,

"நடையே முடுக்க மொடு நாளுதை
குற்றேட் டடைவே யிசை யெழுதலால்"

என்பது சொன்ன அளவைகளிலே செய்திகள் பிழையாதபடி நடைமுதலாக இயற்றப்படும் இந் நடைதான் க, நடை
உ. முடுக்கம்
ங. குற்றேட்டு
ச. இசை எழுதல்

எனவிவை. நான்கு மாத்திரையுடன் வருமாறு சொல்லுதும் என்றவாறு. ஙஉ.

**நடை நான்கு தாளத்துடனிகழும்**

"தூவையால் வந்து நடக்குமாந் தோல்விரவிச்
சாவியால் வாங்கு முடுக்கமாம் — பாவைகேள்
எக்கதா ளத்துடனே குற்றேட்டா மேல்விசைபு
ஒக்கப்பார்க் கில்விந்து வாம்."

என்னுதலிற்ரேவெனின்? நடை நான்கு தாளத்துடன் நிகழுமாறுணர்த்திற்று. தூவையாலே நடையும், ஆச்சாவாலே முடுக்கும் எக்கதாளத்தாலே குற்ரேட்டாம் விந்துவாலே இசையெழுதலாம் எனக்கொள்க என்றவாறு.

(நான்கு தாளம்–நான்குவகை மாத்திரை)

இத்தாளங்களுக்கு மாத்திரை. க. ஞ. இ. வ. எனக் கொள்க.

| | | | | |
|---|---|---|---|---|
| அதாவது, | நடைக்கு | மாத்திரை | க. | 1 |
| | முடுக்குக்கு | ,, | ஞ. | $\frac{3}{4}$ |
| | குற்ரேட்டுக்கு | ,, | இ. | $\frac{1}{2}$ |
| | விந்துவுக்கு | ,, | வ. | $\frac{1}{4}$ |

---

சாக்கிர மேதுடி கோலினிச் சத்தந் தயங்குகண்டத்
தாக்குந் துரித மதுசொற் பனமித யஞ்சுழுத்தி
நீக்கிடுங் கோலுந்தி தான்குரு வேதுரி யம்புலிதம்
மாக்கி டதீதமா ருதாரத் தின்விதிக் காமறியே.

சுருதிய நிலையா றைந்துங் காலங்க ளைன்கு மெய்யிற்
கிரிகையீ ரெட்டுங் காலிற் கிளர்தொழில்
நாற்பான் மூன்றங்
குரியகை நாற்பத் தெட்டென் றுரைவல்லோ
ரகமார்க் கத்தை
வருவகை தொகுத்தல் கண்டு வளம்பட
விரித்துச் சொல்வாம்.

துடிபடிகம் பொன்துரிதஞ் சொற்கமுமை யேகோலம்
நெடியகுருச் செம்மைபனி நேர்பால் — வடிவிறந்த
காகப்பத முஞ்சிவனுக் கானனமைந் தின்னிறமே
யாகுமித னைத்தேர்ந் தறி.

ஆட்டேது பாட்டேது முழக்கங் கொட்டே
தனந்தகர மிரண்டேது தாளமேது
ஓட்டேது கயறேது உன்ன லேது
ஒத்தேது உயிரேது ஓசையேது
காட்டேது நிமிடதுடி துரித மேது
கண்டலகுக் குருபுலிதங் காகுவேது
வாட்டேது சபையேது காண்ப தேது
வகையீதென் றுரைத்தாட வருவீர் நீரே.

நட்டுவனென் றேயுரைத்த சொல்லங் கேது
நலஞ்சிறந்த கையேது தாள மேது
கொட்டுகின்ற மத்தளத்தின் குறிப்பங் கேது
கூறுகின்ற ராகத்துக் குணர்வங் கேது
திட்டமுடன் வந்துநின்ற பாத்ர மேது
திருப்பேது கைகள்தெண்ட னிட்டபோது
அட்டதிக்கெண் பரதவித நடன மேழு
மறிந்தாடும் வகையிப்போ தறைகு வீரே.

இருக்க தனிற்ருேன்று மிசைய தனிற்பாட்டு
முருக்கு மதர்வணத்தி ஞேதுங் — திருக்கூத்துஞ்
சாமவே தந்தனிலுந் தாளமதாம் நால்வேதத்
தாமெனமுன் ஞேது மறிந்து.

சந்தி நிருத்தம் (நவதாளம்)

நவசந்திதாளம்

மலரவன் செம்பைநட மகவான் மட்டிய மக்கினி
பெலிதாளந் தான்சண்டன் (செம்படை)
குலவுசச்ச புடம்நிருதி சாசபுடம் வருணன்
பிரத்தியாங் கங்கூறும்

கலருமனி லன்புயங்கத் திராசித மாம்வன்னமட்
டிகையே கும்பம்
திலகமதி நுதலணங்கே யீசனவ தாளமெனச்
செப்புந் தானே.

புட்பாஞ்சலி நிருத்தம்

இருசரண மதுகுவித்து மிடைநேரே பிரித்து
மிலங்குமரு மந்தோளு மருங்கொசியக் குனித்துத்
தருமிருகை மலர்விதித்தே தாழ்வாய் கழுத்துந்
தயங்கவுள்ளாய் வளைத்து விழிதட்ட மகிழிறையினை
உருமருவு மனுமனப்போல் உறுதிபெற வேநின்று
உருவமது தனைக்காட்டி யோங்கியிட வினிதாய்
வருவதுபுட் பாஞ்சலி யாகுநிர்த்தந் தனையே
மாதொருபா கன்றனக்கு மகிழ்ந்தியற்று தினமே.

சீராரு மங்கம தேழொன்ப தச்சிர பேதமைந்தாம்
பேராருந்திட்டியெட் டேழுடன்சுத்தப் ராணன்பன்றெண்
டேராரு மொற்றைக்கை தானிருபத் தேழி ரட்டைக்கைதா
னேராய்ப்பன்னுறி ருபான்மூன்று நிர்த்தக்கையுற்
றிடிலே.

தோன்றிய தாளமுத லோசையா மோசை
யான்ற தொழிற்கண் முழவமாம் — என்று
நடத்தை நிருத்தமாய் நாட்டினுர் செய்ய
மடக்கொடியாய் * நூலின் மரபு. * (இந்தமரபு)

இராகம் பன்னிரண்டாவன

துக்கரா கஞ்சூர் துங்கரா கஞ்சோம ராகம்பழந்
தக்கரா கம்நட்ட ராகஞ் சீராகந் தருகின்னரம்
மிக்கமா துங்க ராகமே கராகம் நிருபதுங்கம்
தக்கரா கம்நாகம் பன்னிரண் டேயென்று சாற்றினரே.

### நான்கு பேதங்கள்

பாதபே தங்க ளிருபத்திரண்டாம் பார்க்கிலத்த
பேதமுப்ப தேழென்றே பேசுங்கால் — ஓதும்
நயனபே தங்களெட்டாம் நாடு சிரோபேதம்
அயர்விலா வொன்பதே யாம்.

### ஏழுவகைப் பருவங்களாவன

பேதை வயதேழு பெதும்பைபன் னொன் ருமங்கை
மாதுபன் மூன் ருமடந்தை பத்தொன்பா — ஞதலரே,
யாரரிவை யையைந் தவைதெரிவை முப்பதெனும்
பேரிளம்பெண் ணுற்பதெனப் பேசு.

### முப்பத்திரண்டுறுப்பாவன

குழல்நுதல் புருவம் விலோசனங் காது
நாசிவாய் நகைமுகங் கண்டம்
அழகுதோள் முன்கை அங்கைமெல் விரல்கள்
ஆருகிர்க் கொங்கை கண்ணழகு
விழைதருமுந்தி வனப்பிடை யுரோமம்
விரும்புமல் குற்றெடை முழந்தாள்
வழைதரு கணைக்கால் புறவடி பரடு
வரால்குதி விரணகந் தானே.

---

### இராகம் ஏழென்பது சேந்தன் திவாகரம்

தக்கராகந் துக்கராகம் பழந்தக்கராகம் தட்டராகம்
கின்னராகஞ்சங் கீர்ணராகம் நிருபதுங்கராக மென்னும்
பெயர் வருபவை யிராகப் பெயரென வழங்கும்.

ஒக்கெடுத்த மூன்று முவந்த சதியேழும்
அக்கணிந்தார் கொண்டவித மாருறுந் — தொக்கலகு
நாலெட்டு மீரிரண்டு நான்மூன்று மிவ்விரண்டும்
பாலனனு கப்பாகப் பண்பு.

*
சந்திர சூரியன் தானுமிருகையிற் றுளந்தன்னை
யிந்திடு நாணது வுங்கேது விராகு வெனவறைவீர்
இந்துவினை விடந்தீண்டி டிலக்கண மேயகலுந்
தந்திடுந் தாளத்தை விட்டகலா தென்றும் சாற்றினரே.

*
சார்ந்திடுந் தாளத்திற் கேசத்தி தான்சிவன் றுனெனவே
யார்ந்திடு வாரத னுலவர் கண்ணிந்து வார்பகுதி
கூர்ந்த சினவிடங் கூட்டரவானது கொண்டிருகை
சேர்ந்திடு தாளத்தி னுற்றேன்றின தென்று செப்புவரே.

நாரிரு கணங்கள் தன்னில் நலம்பெற யகணமாகுஞ்
சீலநற் கணமே பார்க்கில் திகழுமாத் திரைக ளைந்தாங்
கோலமாம் பேத மெட்டாங் கூறிய வகமார்க் கத்தை
வேலமர் கண்ணாய் கேளாய் விநாயகர் தாளந்தானே.

---

* பாடல்கள் பரதசங்கிரகத்தில் 241, 242 ஆம் பாடல்களாகத் தொகுக்கப் பெற்றுள்ளன.

தாளத்தினுனென்றின தென்று.

ஆதிலகு யகணமான புனலே கடவுள்,

ஏதமறத்தழைத்தலே பலமாம் — அட்டகண மரபு.

மூன்று — வலிவு, மெலிவு, சமன் என்னும் மூவகை இலக்கத்திற்குரிய இடம். வான்முறை வந்த மூவகைத்தானத்து. (சிலம்பு புறஞ்)

மூவகைத் தானத்தாலும் சதிபாய்ந்து செல்லும்.

தெள்ளுநற் சவுதந் தன்னைத் தேசியுட் சவுதமாக்கி
யுள்ளுறு தாளந்தன்னை யுரைக்கி லத்தாளமாக்கி
விள்ளுறு கமலபாத மிருபுற மடித்து வூடில்
பிள்ளையார் கவுத்த மென்றே பேசினர் பரத நூலோர்

பீடஞ் சவளக்கைப் பிள்ளையா ரைப்புகழ்ந்தே
யாடும் பிரபந்த வகையாய்த்தம் — நீடுங்
கவுத்தம் பொருளடைவே கண்டொக் கடுக்கி
லிவர்தம் பரதவித மென்.

சவளக்கை – அசைதலையுடைய துதிக்கை.
கவுத்தம் - அபிநய வகைகளில் ஒன்று.
இவிர்த்தம் - நடைபெரும் / மேற்பெருகும்.

சிவாசலபதி சகாயம்.

# இன்றியமையாத
# சிற்சில பாடபேதங்களும் குறிப்புக்களும்

---

இரண்டாம் பகுதி — பக்கம் 50

"காயத் துடனெழு வினைக ளெலாமா
காசத் திடைசொலி ஞகாச சாரி."

"சங்கேத நடங்கள் தாளத்தோ டோடுங்கால்
அங்கத் தாற்செய்த லங்க சாரி."

(அங்க சாரி யாகு மென்ப)

பக்கம் 49

"ஆன்றபுக ழண்டபுடப் பேத மதுநாடி
யேன்றபுவி யந்தர மாகாயம் — தோன்றிலிவை
கோப்பாகுந் கோத்ததற்பின் கூத்தாகுங்
கூத்திடையே
யாப்பா மெதிர்செலவுக் கெண்."

**வருத்தனைக்கை வரலாறு** பக்கம் 52

"அபவேட் டிதமே சொல்லுங் காலை
சுபமார் பருகே தோன்றித் தர்ச்சனி
முதலாய் விளங்கிய விரல்க ளெல்லாம்
பொற்புட னங்கை பொருந்தவுள் வளைத்தல்."

"அபவேட் டிதமே யறையுங் காலை
உபவேட் டிதஞ்சுட் டுதலா யுவமையில்
விரல்கள் யாவு மொன்றுட னிணைந்து
வளைத்து விடுத லெனப்புகன் றனரே."

பக்கம் 53

"வியாவர்த் தனையே விளம்புங் காலை
யுயர்வில் கனிட்டன் முதலாம் விரல்கள்
பொருணுலு மகங்கை பொருந்தவுள் வளைத்தல்."

"பரிவர்த் திகமே பகருறில் கனிட்டன்
முதலாம் விரல்கள் மூலப் புறத்தில்
இதமுடன் விடுத்த லென்றறைந் தனரே"

## ஆண்கை ஒன்பது

பக்கம் 58

"முட்டி சிகரம் மலர்பதுமஞ் சந்தஞ்சம்
விட்ட சிலந்தி மிகுசூசி — ஒட்டும்
சதுரம்ப தாகம் தகுதிரிப தாகம்
அதிகமுறு மாண்கைநவ மாம்,"

## பெண்கை எட்டு

பக்கம் 62

"கடகஞ் சுகதுண்டங் காங்கூலம் மன்னு
மடைவாம் பிறைக்கை யராளம் — தடமருவு
மன்னபக்கந் தாம்பிர சூடமொடு மான்றலையே
பின்னவெட்டும் பெண்ணுகு மே."

## பொதுக்கை

பக்கம் 67

"மகரம் வலம்புரி சங்குன்னமே பிண்டி
நிகரிலதை யோது கபோதம் — பகர்ந்திடத்
தூமமோ டாம்பிரமஞ் சொன்ஞர் பொதுக்கை
தாமநிகர் மென்குழலாய்! சாற்று." [யெனத்

## ஒற்றைக்கைத் தொகை நூற்பா

ஒற்றைக்கை, இணையாவினைக்கை எனவும் படும்.

"இணையா வினைக்கை யியம்புங் காலை
யணைவுறு பதாகை திரிபதா கையே
கத்தரிகை தூப மராள மிளம்பிறை
சுகதுண் டம்மே முட்டி கடகஞ்
சூசி பதும கோசிகந் துணிந்த
மாசில் காங்கூலம் வழுவறு கபித்தம்
விற்பிடி குடங்கை யலாபத் திரமே
பிரமரந் தன்னொடு தாம்பிர சூடம்
பிசாச முகுளம் பிண்டி தெரிநிலை
பேசிய மெய்ந்நிலை யுன்ன மண்டலஞ்
சதுர மான்றலை சங்கே வண்டே
யதிர்வி லிலபி கபோத மகரமுகம்
வலம்புரி தன்னொடு முப்பத்து மூன்றென்
றிலங்கு மொழிப்புல வரிசைத் தனரென்ப."

## பாடபேதம்

"பெருவிரல் வளைத்து மறுவிரல் நான்கும்
நேருற நிமிர்த்திற் பதாகை யென்பர்."

"பெருவிரல் குஞ்சித்து நால்விரல் நீட்டில்
பதாகை யெனவே பகர்தல் வேண்டும்"

"பெருவிர லணிவிரல் குஞ்சித் தொழிந்தன
உருகெழ நிற்பது திரிபதா கையே."

"சீரார் திரிபதா கைக்கை தன்னில்
சுட்டுவிரல் வளைதல் சுகதுண்ட மென்ப."

"நாலு விரலு முடக்கிப் பெருவிரல்
மேலுறி லதனை முட்டியென் றேரது."

"முட்டிக் கையிற் பெருவிர லிணைநேர்
நிமிர்க்க வொட்டுஞ் சிகரமென் றோது."

"சுட்டுவிரல் முடக்கிப் பெருவிரல் மேலுறக்
கிட்ட மூன்றும் வளையக் கபித்தமாம்."

"கடகக்கை சுட்டு விரல்நேர் நிமிர்த்துக்
காட்ட மடவரல் சூசி யாகும்."

"கபித்தச் சுட்டு நடுவிரல் நுனியுடன்
கட்டையங் குட்டக் கவின்பெறு நுனியை
கட்டுறப் புணர்த்தல் கடக மாகும்."

(கட்டுற - ஒட்டுற)

"விரலைந்துங் கூட்டிச் சிறிதே விரித்தால்
அலர்விரி குழலாய் கோசக் கையாம்."

"பதாகைக்கை யுள்வளையப் பாம்பின் தலையென்று
போதத் தான் சொன்னார் பொருள்."

(பாம்பின் தலை - சர்ப்பசிரம்)

(கோப்பிடை நால்விரல் கைவழிக் குனிதல்
உரகபட மென்று ரைத்தனர் புலவர்)

"தொடிக்கை நடுவிரல் மூன்று முன்வளையப்
பண்ணுறு மொழியே மிருக சிரமாம்"

(மான் தலை - மிருகசிரம்)

"அணிவிரல் நடுவிரல் அங்குட் டம்மாம்
விரல்நுனி குவிய மேவுறு மிருவிரல்
நிமிர நிற்பது நேர்காங் கூலம்."

(குவிமுகுள் மலரெனக் கொள்காங்கூலம்)

(காங்கூலம் - சிங்கமுகம்)

"கோசக் கைதன்னை மறிக்கவலர் பத்மமென
வாசக் குழலாய் மதி."

(மறிக்க – விரிக்க)

"மான்றலை தன்னிற் பெருவிரல் கீழுறச்
சான்ஞேர் சதுர மாங்கை யென்பர்."

"பெருவிறற் சுட்டு விரற்பெரு நுனிகள்
மருவக் கூட்டி மற்றைமூ விரலும்
வானுற விரிதல் மருவுசந் தமிசம்,"

"நாகக் கைதன்னை நனிகூட்ட நல்லாய்
முகுளக் கையென்றே மொழி."

(சந்தமிசம் – சந்தஞ்சம்)

"விரல்க ளணைந்து வேருய்ச் சிறிது
வளைக்கத் திருவே! சிலந்திக் கையாம்."

"நடுவிர லோடங் குட்டங் கூட்டிச்
சுட்டுவிரல் முடக்கத் தாம்பிர சூளம்."

(தாமிரசூடம் – கோழியின் சிவப்புக்கொண்டை)

"அங்குட்டன் காட்டிப் பிறக்கைமாக் கையாம்."

(மாக்கை – யானைக்கை)

"பெருவிர லோங்க வொழிந்தன நான்கும்
ஒன்ருய் நீட்டி ஞெள்ளிளம் பிறையே."

"சிகரிக் கையினிற் சிறுவிரல் நேர்நிற்பின்
மருவும் வலம்புரி யேயா கும்மே."

"பெருவிரல் நிமிர்த்து மற்றை நால்விரலும்
வளைய நிற்பது சங்க மாகும்."

"மான்றலை தன்னிற் சிறுவிர லோடங்
குட்ட மொன்று கீழ்முட்டிட லுன்னமாம்."

"ஐவிர லடிக்கணைய கன்றுபின்......
மறுகணை யவைமேல் வரிவரி விடைக்க
ஒட்டுளட் டுறுவது ன்னமா மென்ப."

(சிறுவிரலுடன் பெருவிரலும் கூட ஏனைய மூன்று விரலும் விட்டு நிமிர்வது என்பர்.) (உன்னம் - அன்னப்புள்)

"நாகக் கைதனிற் பெருவிரல் மேல்வைத்துப்
போகப் புகழ்சேர் பிண்டி யென்பார்."

"மத்திம மங்குட்டங் கூட்டிச் சுட்டு
முடக்கத் தொத்து மலர்ப்பூ வண்டே."

(பூவண்டு - பிரமரம்)

"கொடிக் கையிற் கட்டை முடக்கில்
நற்கோதாய்! அடுத்த வராளக் கையா கும்மே."

(கொடி - பதாகம்) (அராளக்கை - வளைவு)

"தாம்பிர சூளக் கையோ டணிவிரல்
கூட்டவரம் பீர மென்றறி வாயே."

(ஆம்பீரம் - மாம்பழம், மாமரம்)

"தற்சனி யோடங் குட்டங் கூட்டி
மற்றைமூ விரல்மே னேக்குற நீட்டில்
மதித்தவன் னத்தின் வாயல காகும்."

(அன்னவாயலகு - ஹம்ஸாஸ்யம்)

"பேடுஞ் சுட்டும் பிணைந்துற நிமிர்ந்து
கடகக் கீழ்வரை பெருவிர லணையக்
கடைவிர லிரண்டு முயர்ந்துமே னேக்குவ
திலதை யாகு மென்மனர் புலவர்."

(இலதை - கொடி)

" கத்தரி யாலகுகள் கணைமுறுக் கிட்டு
விட்டடி யொட்ட விளைவது கொடியே
கொடியே பிணையே கயிறே குணையே."

( கொடி – இலந்தைக்கொடி )

" திறனர் விரலிற் பேடுஞ் சுட்டும்
என்றிவை பேட்டின் டறஞ்சுட் டுன்னி
யொத்தொவ் வாமை கத்தரி கையே."

" ஊசியிற் சுட்டுடன் நெட்டுமே யோங்கி
கண்ணிறை விரியக் காட்டல் கத்தரி"

" பகுப்புறு கத்தரி பறவையி னலகே."

" இருதலைப் புள்ளே யிடுக்கியே முதலை
வாயே மகரிகை வாலிணை யரவே
கீழுறக் கத்தரிக் கீக்குதல் நடையே."

" விளைந்தகத் தரிக்கையை மெய்யுற வகப்பாற்
றுளங்கி நிற்பது தூம மாகும்."

( தூமம் – தூபம் )

" தூப மென்பது துணியுங் காலை
விளங்கு கத்தரிகை விரலகம் வளைந்து
துளங்கு மென்பது துணிந்தறிந் தோரே."

" கத்தரி யலகுகள் கவிந்துட் குழிய
விட்டது சுட்டடி யொட்ட மற்றவை
அடிக்கணை யமர்த லதுவே தூபம்-"

" கொண்ட பதாகையிற் பெருவிரல் குஞ்சனை
கண்ட வில்லது கபோல மாகும்."

( கபோலம் – கபோதம் )

"கத்தரி யலகுகள் கடைக்கடை கவ்வி
எதிரெதிர் மறிதல் மீனே யென்ப"

"மீனது கண்ணே புள்ளடி மீனே."

(மீன் - மகரம்)

**அணுதாண்டவம் (அனுதாண்டவம்)** பக்கம் 8

இறைவன் உலகங்களையெல்லாம் அணுவாக்கித் தானும் அணுவுருவாய் நின்றாடுவது. இது நுணுக்கத் தாண்டவம் எனவும் கூறப்படும்.

**ஆதித்தாண்டவம்** பக்கம் 7

ஆதியாகிய இறைவன் முதன்முதலில் ஐந்தொழில் நிமித்தம் ஆடிய ஆநந்தத் தாண்டவம். தோற்றம் ஒடுக்கம் பற்றியாடியது.

**கவுத்தம்** பக்கம் 14

இறைவன் கவுத்துப முத்திரை (கை) பிடித்தாடியது.

---

**தாளக்கிரியைகள்**

"ஆன வலக்கை யகற்றியுடன் ருக்குமது
மீனவிழி மானனையாய் விட்சேபம் — போன
வலக்கை யிடக்கையில் வந்துற வேதாக்கிற்
சலப்பிர வேசமென்றே சாற்று."

"இடக்கை விரலசைத லெண்ணு மாபாவம்
மடக்கொடியே யவ்விரல்கள் வந்து — துடக்கறவே
நேர்ந்தவகை யில்லாமை நிட்கிராம மென்றுரைத்தார்
ஆய்ந்த வியனுடு வார்." ஷியம் - சம்மியம் - செம்மை

'ஆட்டங் கூத்தி னடிவா ரம்மே'

கூத்தினே, தாண்டவம், நிருத்தம், நாட்டியம் என மூவகைப்படுத்திக் கூறப்படும்.

கூத்து விகற்பத்தினைத் தாண்டவம் முதல், வகைக் கூத்து இறுதியாக ஏழெனக் கூறுதல்.

கூத்தினே, நடனம், நாட்டியம், தாண்டவம் நிருத்தியம் நிருத்தமென ஐவகைப்படுத்திக் கூறுதல்.

தாண்டவம், அகமார்க்கப்பொருள்.

நிருத்தியம், அகச்சுவை.

கலவாத சுத்தம் நிருத்தம், நாட்டியம், புறநடம்.

கலவாத சுத்தம் நிருத்தம், அகச்சுவை தழுவியது

நாட்டியம் பல, சதிர், சதிர் வகை.

## பாடபேதம்

பக்கம் 71

ஆம்பீரம் - மாம்பழக்கை. (ஆம்பீரம், ஆம்பிர மரம் எனப்பட்டது.

பஞ்சமரபில், ஒற்றைக்கைக் குறைச்சூத்திரம் உளது.

"அங்குட்டங் கூட்டில் பிறைக்கை மாக்கையாம்" எனக்கூறும் இக்கையே மாக்கையெனும் ஆம்பீரக்கை போலும்.

"நட்டு விட்டொட்டி யொட்டுதல் மாவே."

ஆம்பீரம் என்பதை ஆம்பிரமம் எனக் குறித்தலானும் இக்கை பிரமக்கை எனவும் பட்டது.

பிரமம் என்பது பாடபேதமாய் பிரமரம் எனப்பட்டது

இலதை – படர்கொடி.

பக்கம் 70

" கத்தரி யலகுகள் களைய முறுக்கிட்டு
விட்டடி யொட்ட வளைவது கொடியே."

" தற்சனி நடுவண் குட்டஞ்சேர்த்து மற்றிரு விரற்ருன்
வற்கிதமாய் வளைக்க வளரிலதைக் கையாகும்."

பக்கம் 65

உரகப்படம், சர்ப்பசிரம், சர்ப்பசீரஷம், பாம்பின் தலை.

" கோப்பிடை நால்விரல் கைவழிக் குவிதல்
உரகப் படமென் றுரைத்தனர் முன்னோர்."

பக்கம் 67, 68

உள்னம், உன்னதம் எனவும் பொருள்படும் போலும்.

" உன்னதக் கையே உரைதரு கனிட்டன்
மன்னிய பெருவிரல் வந்து கூடிக்கூடி
யொழிந்த விரல்கள் வளையா நிமிர்வ.
உன்னம் – அன்னப்பறவை எனவும் படும்.

பக்கம் 56

ஒற்றைக்கை, தனிக்கை, வலக்கை, இடக்கை, பிண்டி. இவை ஒருபொருட்கிளவி. இவை 33.

" வலக்கை காப்பே இடக்கை வரமே,"

வினையம், அவினயம், அபிநயம் என்பன கைக்குறி எனப்படும்.

" தனிக்கை யிரண்டும் தனித்தும் இணைந்தும்
இயங்கக் கூத்தினவினயத்தி னியல்பே."

கை, உட்கை, புறங்கை எனவும் பெறும்.

பக்கம் 61, 62

**கடகம், கடகமுகம், வளையின்வாய், வளை.**

சுண்டுவிரலை நிமிர்த்தி உள்ளங்கைக்குள் நடுவிரலை மடக்கி ஆட்காட்டிவிரலைக் கட்டைவிரல் நுனியில் வளைத்துப் பொருந்தும்படிச் செய்தல் கடகாமுகம்.

**கபோதம்** பக்கம் 67, 68

" கருதுங் காலை கபோத விணைக்கை
இருகையும் கபோத மிசைந்துநிற் பதுவே."

இரண்டு கையும் கபோதமாகவும் காட்டப் பெறுவதாம். கபோதம் – கபோலம்'

**கரணம்** பக்கம் 2

உடலுறுப்புக்களின் அசைவுகளுக்கும் அவற்றின் கோவைகளுக்கும் கரணம் என்று பெயர். கரணங்களை முதன்மையாக உடையன கரணக்கூத்து.

கரணவகையாய்த் தாண்டவம், தலபுட்ப புடமுதல். கங்காவதரணம் ஈருகவே நூற்றெட்டாகக் கூறப்படுமாம்.

இவை நாயகன் சாந்தமாக ஆடுங்கூத்து வகை. ஒருவரே பலவேறு, பல்வேறு பாத்திரங்களின் இயல்பை நடித்துக் காட்டுவது நாடகம்.

குரவை கைகோத்தாடல்.

சதிர் வேறு. வரிக்கூத்து. வரிச்சாத்திக் கூத்து வேறு

" குரவையும் வரியும் விரவல செலுத்தி."

**குடம்** பக்கம் 5

குடங்கள் எடுத்தேறவிட்டு கூத்தாடவல்ல
எம்கோவே என்பதுமது.

மாயோன் (திருமால்) ஆடியது. இக்கூத்து விநோதக் கூத்து ஆறனுள் ஒன்று.

'வாணன் தன்மகள் உழை காரணமாகக் காமன் மகன் அநிருத்தனைச் சிறை வைத்தபோது அவனை மீட்பதன் பொருட்டு, உலோகம், மண் ஆகியவற்றாலான குடங்களைக்கொண்டு மாயோன் ஆடியது.

**கொடுகொட்டி** இறைவனாடியது பக்கம் 5

இது திரிபுரத் தாண்டவம். திரிபுரம் தீமடுத்து எரியக்கண்டு இரங்காது கைகொட்டியாடியது. கொடுமையுடைத்தாதலிற் கொடுகொட்டி எனவும் பெயராம்.

"அகத்துட் டுணர்வுதோன்ற ஆடுவது அகமார்க்கம்."

**கோலக்கூத்து** இக்கூத்தும் பலவகைய பக்கம் 3

"வேலோன் வெறியும் மாயோன் விறலும்
வேந்தன் விழவும் மீனோன் நூப்பும்
கொற்றவைக் கூத்தும் ஐந்திணைக் கோலம்."

கொற்றவைக்கூத்து இக்காலம் பலமுறையில் திரிபுபட்டும் தமிழகம் முழுதும் காளிகோயில் விழாவின் **காளியாட்டம்** எனப்பட்டு நடைபெற்றுக்கொண்டு இருப்பதும் அறியலாம்.

## 108 தாளம் பக்கம் 114 முதல்

" சச்சபுடத் தாளமுதற் சாற்றுபெத் தாபரணத்
துச்சமறு தாளவரை சொற்றலொடு — உச்சிதமாம்
நூற்றெட்டுப் பேதமுள தென்றுரைக்குந் தாளத்தை
ஆற்றபெரு நூலதனு ளாய்."

நூற்றெட்டுத் தாளங்கள் பதமுகம் பஞ்சதாளம் உருமுகம் என மூவகைப்படும். இவற்றுட் பஞ்சதாளம் என்பன.

" சச்சபுட மாதி சாற்றுமோ ரைந்தினுமே."

1. சச்சபுடம் 2. சாசபுடம் 3. சட்பிதாபுத்திரம் 4. சம்பத்துவேட்டம் 5. உத்கடிதம்.

## பாடபேதம்

பக்கம் 65

" சர்ப்ப சிரம்வண்டு தனிமுகுளங் கபித்தம்
கத்தரிகை கோச மலிக்கையென — முத்தமிழோர்
எல்லாருஞ் சொன்னு ரிகல்வே னெடுந்தடங்கண்
வில்லார் நுதலாய் விரித்து."

பக்கம் 102

" சாற்று மிருகரமுந் தம்மிலுடன் பகிர்ந்தால்
ஏற்ற வலக்கையே ரெழிற்செம்மை — போற்றிய
வாமக்கை தாளமாம் வாய்த்தமலர்க் கையிரண்டுந்
தாமொத்திற் சன்னிபா தம்."

( இலக்கக் கைமுறை )

பக்கம் 59

" காப்பினிற் சுட்டது கணைத்து மேல்நிற்க
கோப்பது மற்றவை குவிந்துவிட் டொடுங்க
காட்டுத லூசிக் கையென் மனோரே."

(ஊசி – சூசி)

**பஞ்ச தாளங்கள்**

"தத்தந்தீந் தொந்தமெனத் தாண்டவஞ்செய்
கின்றசபை
அத்தர்முக மைந்தினிடை மாமுறையே—உற்கடிதம்
சம்பத்து வேட்டமுடன் சட்பிதா புத்திரிகம்
சச்சபுட சாசபுட மாம்."

**தாண்டவம்** பக்கம் 2

தாவலும், ஆடலும், செலுத்தலும் தாண்டவம். தாண்டவம் நூற்றெட்டென்றும், பதினாறென்றும் கூறப் படும். பதினாறு தாண்டவங்கள், அகமார்க்கப் பொருள் எனப்பெறும். அவை ஆதிமுதல் தெண்டபாதமீருகப் பதினாறு.

தாளங்களேயே அடிப்படையாகக் கொண்டது தாண்டவம்.

**தாளம்** பக்கம் 114 முதல்

காலம், கிரியை (செய்கை), மானம் எனும் மூன்றுங் கூடித் தாளமாயிற்று.

"வாய்ந்தகா லங்கிரியை மான மிவைகூடி
யாய்ந்துவரிற் றாளமா மென்றார் — பூங்கொடிகேள்
கட்டு பெருங்காலங் கணதூயொத்துக் கைக்கிரியை
நட்டநடு மானமென நாடு."

கணமாதியாய் வருங் காலங்கள். ஒத்துதல் ஒத்தித் தூக்குதலால் வரும் கிரியை ஒத்திச் சுழித்துத் தூக்குதல். இடவலமேல் கீழ் கையசைத்தல் முதலியவற்றிற்கு நடுநடுவே வருகின்ற சூனியகாலமான மானம் என்பன.

தாளங்களையும் தேசியம், மார்க்கமெனப் பிரிவு படுத்தப்பட்டுள்ளது. தேசிய தாளங்கள் 35 தாள வகையும் பிறவும், மார்க்க தாளங்கள் 108 தாளவகையும் பிறவும் எழுபத்திரண்டு, எழுபத்தியைந்து தாளங்கள் என்பனவும் இவற்றுள் அடங்கும்.

தாளங்களுக்கும் பத்துவகை உயிர் நிலைகள் உள.

1. காலம் 2. மார்க்கம் 3. கிரியை 4. அங்கம் 5. கிரகம் 6. சாதி 7. களை 8. லயம் 9. யதி 10. பிரத்தாரம்.

**தாள மாத்திரை** தாள் – அம், தாளம்

“துன்னுந் துடிகால் துருத மறையாகும்
ஒன்றுலகுத்தான் குருவே யோதிரண்டாம் — நின்றுவளர்
மூன்ருகு மேபுலுத மொய்காகு நான்கெனவே
சாள்ருகுஞ் சொக்கருரைத் தார்.”

**தட்டல் எண்ணல் விசுறுதல்**

35 தாளங்கள், 72 தாளங்கள் 108 தாளங்கள் என இன்னும் பலவகைய.

**தாளச் செய்கைகள்** பக்கம் 102

| | | |
|---|---|---|
| (ஆபாவம்) ஆவாபம் | — | இடக்கையசைத்தல். |
| நிட்கிராமம் | — | அசைவது, நிற்பது. |
| விட்க்ஷேபம் | — | வலக்கையகற்றித் தூக்குவது. |
| பிரவேசம் | — | வலது கையும் இடது கையும் தாக்குவது. |
| (சம்பியம்) செம்மை | — | வலக்கையைச் சிறிதே தூக்கித் தட்டுதல். |

தாளம் — இடக்கையைத் தூக்கித் தட்டுதல்.

சன்னிபாதம் — இரண்டு கையையும் ஒத்தல்.
துருவை ..... (ஒற்றல்)

(செம்மை – சம்மியம்)

இவையன்றி, சமப்பிரவேசம் என்பதுமொன்றுபோலும். துருவையென்பது தூக்கிய கையை பாம்பின் தலைபோற் காட்டி கால அளவிற்கு அசைப்பது.

## பாடபேதம்

பக்கம் 99, 103

" துடிவரு ணன்துருதம் துர்க்கை துழாய்சூடும்
நெடியோன் குருவிரிஞ்சன் நேராம் — படிமீ
தொருமூவ ராம்புலித மோசையா லீசன்
வருதே வதையெனவே வாழ்த்து "

துடிக்கு வருணனும், துருதத்திற்கு துர்க்கையும், குருவிற்கு மாலும், லகுவிற்குப் பிரமனும், புலுதத்திற்கு மும்மூர்த்திகளும் இவற்றின் ஓசைகளுக்குத் தெய்வம் சிவபெருமானுமாம் என்றவாறு.

பக்கம் 67, 70

**தூமம், தூவம், தூபம்** இது ஒற்றைக்கை.

" தூப மென்பது துணியுங் காலை
விளங்கு கத்திரிகை விரலகம் வளைந்து
துளங்கு மென்ப துணிந்திசி னோரே."

" கத்தரி யலகுகள் கவிந்துட் குழிய
விட்டது சுட்டடி யொட்டமற் றவை
அடிக்கணை யமர்த லதுவே தூபம் "

" தூமம் பரமம் (பிரமக்கை) தோன்றிய பிண்டி."

### தாளக்கிரியை மாத்திரை

பக்கம் 102

"தெக்கண மெட்டுத்திகழ் வார்த்திகம் நாலு
வைக்கரிய சித்திர வழியிரண்டு — தக்கபடி
ஒன்றுரியதுஞ் சித்திரதர மோரறையாஞ் சித்ரதமம்
கன்றுமதி சித்திரிதம் கால்."

| | |
|---|---|
| தெக்கண மார்க்கத்திற்கு | எட்டு மாத்திரை |
| வார்த்திக மார்க்கத்திற்கு | நான்கு மாத்திரை |
| சித்திர மார்க்கத்திற்கு | இரண்டு மாத்திரை |
| சித்ரதர மார்க்கத்திற்கு | ஒரு மாத்திரை |
| சித்ரதம மார்க்கத்திற்கு | அரை மாத்திரை |

சித்திரிதம் அதாவது அனுசித்திர மார்க்கத்திற்கு கால் மாத்திரை எனக் கூறப்படுகிறது.

### தெண்டபாதம்

பக்கம் 7, 15

தடிபோலே ஒரு காலை நெற்றிவரையிலும் தூக்கி ஆடியது. (ஊர்த்துவத் தாண்டவம்) ஒருகால் தாண்டவம் எனவும் கூறப்படும்.

தன்னுடன் ஆடிய காளிதேவி நாணும்படி இறைவன் ஒரு காலை மேல் தூக்கியாடியது.

### தேசிக் கூத்து

பக்கம் 2

இக்கூத்து, முன்பின்னாக நின்று செய்யும் தாண்டவம் நின்றது தேசி. மூவகைக் கூத்தில் முதற் கூத்து.

பக்கம் 2

"நடனம் நாட்டியம் தாண்டவம் நிருத்தியம்
நிருத்த மைவகைச் சத்தியி னிமித்தம்
ஆதியின் முனைவ னாடி யருளினான்."

ஆண், பெண் வேடமிட்டு நடிப்பது நடனம்.
பெண், ஆண் வேடங்கொண்டு நடிப்பது நாட்டியம்.
ஆண், ஆணாகவே நடிப்பது நிருத்தியம்.
பெண், பெண்ணாகவே நடிப்பது நிருத்தம்.
எல்லாவற்றிற்கும் பரமசிவனே **தாண்டவாதிபதி.**

**ஆடலரங்கின் அளவு முறைமை** **பக்கம் 93**

"நன்னா லறுபத்து நான்குமுழ முள்ளதாய்
குன்றாது தென்வடக்குப் பாதியாய் — நன்றாய்க்
குணவாயி னற்கதவங் கொண்டு பெருவாயின்
மணிச்சா ரளமுளதே யாம்."

"தேடுதற் கரிய சிவனரங் கம்போல்
நாடிய பாரின் நலம்பெறச் சமைத்துக்
கூடிய சித்திரக் குண்டலி செலுத்தி
ஆடிய பூமி யரங்கந் தானே."

**தாளவகை** (சாதி) தேசித்தாளம்

"நாட்டு சதுரச்சரமே நாற்கூறு செய்தலால்
மூட்டு திரியச்சிரமே முக்கூறுங் — கூடியிவை
முற்கூறு நாற்கூறு முந்துவது மிச்சிரமே
எக்கூறு மின்மைகண்ட மெண்."

யாதொரு எண்ணுடைய தாளம் நாற்கூறு செய்தற்குப் பொருந்தின் அது **சதுரச்சரம்.**

யாதொரு எண்ணுடைய தாளம் முக்கூறு செய்தற்குப் பொருந்தின் அது **திரியச்சரம்** (திச்ரம்)

யாதொரு எண்ணுடைய தாளம் நாற்கூறும் முக்கூறும் செய்தற்குப் பொருந்துவதாய் நிற்பது **மிச்சிரம்.**

எக்கூறும் செய்தற்குப் பொருந்தாது நிற்பது **கண்டம்.** எல்லாம் கலக்கப்பெறின் அதுவே **சங்கீரணம்** **எனப்படும்.**

**பக்கம் 93**

**அரங்கமமைக்கும் பூமியின் இலக்கணம்**

" நாற்கோணம் பொன்வடிவா நல்லகா ரம்பீசம்
தேக்கும் பிரமனதி தெய்வமாம் — ஏற்கும்
அரங்கத் தலபூமிக் களமிலக் கணந்தான்
குறையறவே நூலாய்ந்த கூத்து."

**நிழற்றுண்டவம்** **பக்கம் 7, 12**

இறைவன், உயிர்களுக்கு அருளும் பொருட்டு இறைவி ஆட்டுவிக்க ஆடிய கூத்துள் ஒன்று. இக் கூத்து அருட்கூத்து. இதனைக் குஞ்சித நடனமென்பர்.

" அடுத்த இன்னுயிர்கட்கு அளவில் பேரின்பம்
கொடுப்பது ! நின்குஞ்சித பதமே."

**தாளமாத்திரை இயக்கம்** **பக்கம் 102**

" நீக்கரிய வாபாவம் நிட்கிராமம் விட்சேபம்
தாக்கு பிரவேசஞ் சம்மியமுடன் — வாக்குடைய
தாளமே சன்னிபதந் தக்கவியம் ஏழென்றூர்
மாளிகைசூழ் கூடலார் மன்."

**துருவை ஒன்றுசேர எட்டாம்.**

**பாண்டரங்கம்** பக்கம் 5

இறைவனாடிய கூத்துள் ஒன்று திரிபுரம் எரித்த காலத்தில் தேர்முன் நின்ற திசைமுகன் காண வெண்ணீற்றையணிந்து ஆடியது. இதுவும் ஆநந்தத் தாண்டவமாம்.

**பாண்டரங்கம், பாண்டரம், வெண்மைநிறம்.**

பக்கம் 5

**பாவைக் கூத்து** திருமகளாடியது. (இலக்குமி)

போர்க்கோலங் கொண்ட அவுணர் மோகித்து வீழும்படி கொல்லிப்பாவை வடிவாய்த் திருமகளாடியது.

**பீடதாண்டவம்** இறைவனாடியது. பக்கம் 7, 9

முயலகன் எனும் அசுரனது செருக்கடங்கும்படி அவனைப் பீடமாகக் கொண்டு அவன் மேலே நின்று ஆடியது.

**புயங்கம்** புயங்கம் - பாம்பு

பாம்பு போன்றுச் சுழன்ருடுவது புயங்கத்தாண்டவம் புயங்கலளிதம், நச்சம், பித்தம் எனவும் கூறப்படும். பாம்பின் தோற்றங்கள் அதாவது அதன் எழுச்சி ஆடல் முதலியன எல்லாம் எவ்வெவ்வாறே? அவையாவும் இப்புயங்க நடன வகைகளாகும்.

**மகரம்** (இரட்டைக்கையில்) பக்கம் 67, 68

"மகர மென்பது வாய்மையி னுரைப்பிற்
கபோத மிரண்டு கையு மகம்புற
மொன்ற வைப்பரென் றுரைத்தனர் புலவர்."

<u>பொது</u>

## மத்தளம் கொட்டும் வகை

சுத்தம், சாலி நியமம் தாக்கு தகாரிப்பு குறவனே நறவனே என எழுவகைப்படுமாம்.

பக்சம் 65

வண்டுக்கை, இதுவே பிரமரக்கையாகும்.

"அணிவிரல் பெருவிர னுகிர்நனி வளையச்
சிறுவிரல் நிமிர மறுவிரல் குனிப்பப்
பெறுவது வண்டின் பெட்சியென் மனுரே."

## கூத்து வகைகள்

வரிக்கூத்து, இக்கூத்து வகைகளும் பலவே.

வரிக்கூத்தினை, நிலவரி நீர்வரி பயிர்வரி எனக் (கூத்துவகை) கூறலும் உண்டு.

"அந்நகர் நிலத்தை யவ்வந் நிலேயே
அமைத்துக் காட்டல் நிலவரி யாமே."

"நீர்முத லாங்கடல் நெறியுங் கூட்டித்
தேர்வகை காட்டல் நீர்வரிக் கூத்தே."

"உழவர்க் குரித்தாப் பயிரிடு வரியே
உழவர்க் குரியது வணிகர்க்கு முளவே."

## சதிகள்

**வாச்சியம்** வாத்தியம் எனவும் படும்.

ஈண்டு வாச்சியக்கொட்டு, வாச்சியக்கூறு கூத்திற்கு உரிய சொற்கட்டுகள், சதிகள்.

கூத்திற்குரிய வாச்சிய எழுத்துக்கள், வாச்சிய ஓசை, வாச்சியப்பாக்கள் எனப் பலவகைய.

## தாளங்களின் மாத்திரை வழிமுறை

இசைக் கலையில் அலகு, சுருதி மாத்திரை என்பன ஒரு பொருட்கிளவி கால அளவை பற்றிய முறையில் கண்ணடிப் பொழுதும், கைநொடிப் பொழுதுமெனக் கூறப்படும்.

இசையில் (சுரத்தில்) மாத்திரையென்பது அலகு, 'அலகெனப் படுவ தளந்து துணிதல்' ஒலியின் ஏற்றத்தையும் அதனளவையும் குறிக்கும்.

தாளத்தில் தட்டுக்குத்தட்டு அதாவது கொட்டு முதலாக நிகழ்கின்ற காலத்தின் (மானத்தின்) அளவையைக் குறிக்கும். தாளத்தினைப் பாணியெனவும் கூறப்படும்.

"கொட்டு மசையும் தூக்கு மளவும்
ஒட்டப் புணர்ப்பது பாணி யாகும்"

| | | |
|---|---|---|
| கொட்டு, | அரை மாத்திரை | க |
| அசை, | ஒரு மாத்திரை | எ |
| தூக்கு, | இரண்டு மாத்திரை | உ |
| அளவு | மூன்று மாத்திரை | ஃ |

| | |
|---|---|
| கொட்டாவது | அமுக்குதல். |
| அசையாவது | தாக்கியெழுதல். |
| தூக்காவது | தாக்கித் தூக்குதல் |
| அளவாவது | தாக்கினவோசை நேரே மூன்று மாத்திரை பெறுமளவும் வருதல் எனக் கொள்க. |

முடுக்கம், பரித்தல், தாக்குதல், தாக்கித்தாக்குதல், தாக்கியிருகாற்ருக்குதல் எனக் கிரியைகளைக் கூறலும் மரபு. தாளத்தினைப் போடுமுறையும் பாணி எனப்படும். ' தாளமும் பாணியும் ஒன்ருயினுற்போல் ' எனக் கூறப்படும். ஈண்டு தாளத்தில் மாத்திரை என்பது எண்ணிக்கையைக் குறிக்கும். அதாவது ஒரெண் முதலாகக் கொள்ளப் படும்.

| | | | | |
|---|---|---|---|---|
|  | துடி | $\frac{1}{4}$ மாத்திரை | ஒரெண் | அனுத்திருதம் |
|  | சுழி | $\frac{1}{2}$ மாத்திரை | ஈரெண் | துருதம் |
|  | சுழிப்பிறை | $\frac{3}{4}$ மாத்திரை | மூவெண் | துருதசேகரம் |
|  | கணை | 1 மாத்திரை | நான்கெண் | லகு |

" துடிசுழி கணை முதைந் தமூன் றுருப்பே "
துடிகால் மாத்திரை

" சுழியரை மாத்திரை கணையொரு மாத்திரை "

" துடிசுழி கணையில் நாகங் காகு
படிதனி லாறுறுப் பாகு மென்ப "

அரை மாத்திரையுடைய ஏகதாளம் முதலாகப் பதினுறு மாத்திரை உடைய பார்வதிலோசன மீருகச் சொன்ன நாற்பத்தியொரு தாளங்கள், புறத்திற்கு உரியன.

" ஆறன் மட்டமென்பனவும்
எட்டன் மட்டமென்பனவும்
தாள ஒரிய லென்பனவும்
தனிநிலை ஒரிய லென்பனவும் "

" ஒன்றன் பாணி முதலாக எண்கூத்துப்
பாணி ஈருகக்கிடந்த பதினொரு பாணி
விகற்பங்களும் முதனடை வாரம்
முதலாயினவும் அகக்கூத்திற் குரியனவென்க."

" அகத்தியன் சொன்ன அருந்தமிழ்"

" நூற்றெட்டுத் தாளங்கூறும் முதநூல் அகத்தியம்"

என்பன போன்ற குறிப்புக்கள் ஓர்ந்து உணரத்தக்கவை ஆகின்றன.

முற்கூறப்பெற்ற நூற்றெட்டுத் தாளங்களை மாத்திரையெண்வழி, முறையே அரை மாத்திரை முதலாகக் கூறுவது இக்குறிப்பு. நூற்றெட்டுத் தாள மாத்திரை விருத்தம் (பத்து விருத்தப்பாக்கள்) இம் முறையைக் கூறுகிறது. நாம் அரை மாத்திரை முதலாக இங்குக் குறித்துள்ளோம். இதனைத் தொடர்ந்து அவ்விருத்தப்பாக்களையும் அதன்வழி மாத்திரையும் குறித்துள்ளோம்.

| | தாளப்பெயர் | மாத்திரை | எண்கள் |
|---|---|---|---|
| 1. | ஏகதாளம் | அரை | 2 |
| 2, | துருதசேகரம் | முக்கால் | 3 |
| 3. | ஆதிதாளம் | ஒன்று | 4 |
| 4. | கிரீடை | ஒன்றேகால் | 5 |
| 5. | இலகுசேகரம் | ஒன்றேகால் | 5 |
| 6. | அந்தரக்கீரீடை | ஒன்றேமுக்கால் | 7 |
| 7. | இறுதியம் | இரண்டு | 8 |
| 8. | கருணை | ,, | 8 |
| 9. | துதியகம் | ,, | 8 |
| 10. | துரங்கலீலை | ,, | 8 |

| | | | |
|---|---|---|---|
| 11. | நிச்சாருகம் | இரண்டேகால் | 9 |
| 12. | சம்பைமட்டம் | ,, | 9 |
| 13. | அன்னலீலை | இரண்டரை | 10 |
| 14. | தற்பணம் | மூன்று | 12 |
| 15. | பிறிதி (பிரிதி) | ,, | 12 |
| 16. | இரதி | ,, | 12 |
| 17. | சட்டதாளம் | ,, | 12 |
| 18. | மதனன் | ,, | 12 |
| 19. | செகற்சம்பை | மூன்றேகால் | 13 |
| 20. | தோம்புளி | ,, | 13 |
| 21. | சமம் (சமதாளம்) | ,, | 13 |
| 22. | சிங்கலீலை | மூன்றரை | 14 |
| 23. | சதுரத்தாளம் | ,, | 14 |
| 24. | அபங்கம் | நான்கு | 16 |
| 25. | அரங்கம் | ,, | 16 |
| 26. | வன்னபின்னம் | ,, | 16 |
| 27. | மல்லிகாமோதகம் | ,, | 16 |
| 28. | இராசவித்யாதரம் | ,, | 16 |
| 29. | பின்னசதுமுகன் | ,, | 16 |
| 30. | இலளிதம் | ,, | 16 |
| 31. | உத்தீக்கணம் | ,, | 16 |
| 32. | பிரதாபசேகரம் | நாலேகால் | 17 |
| 33. | கசலீலை | ,, | 17 |
| 34. | விடமம் | நாலரை | 18 |
| 35. | பரிக்கிரமம் | ஐந்து | 20 |
| 36. | வீரவிக்கிரமம் | ,, | 20 |
| 37. | மதிதாளம் | ,, | 20 |
| 38. | இடங்கி தாளம் | ,, | 20 |
| 39. | அருத்திமட்டிகை | ,, | 20 |
| 40. | வன்னமட்டிகை | ,, | 20 |

| | | | |
|---|---|---|---|
| 41. | அபிநந்தனம் | ஐந்து | 20 |
| 42. | முகுந்தம் | ,, | 20 |
| 43. | பூரணகங்காளம் | ,, | 20 |
| 44. | கண்டகங்காளம் | ,, | 20 |
| 45. | சமகங்காளம் | ,, | 20 |
| 46. | விடமகங்காளம் | ,, | 20 |
| 47. | வருத்தனம் | ,, | 20 |
| 48. | இலயதாளம் (லீலை) (இலயம் $3\frac{1}{2}$ மாத்திரை 14 பாடபேதம்) | ,, | 20 |
| 49. | மல்லதாளம் | ,, | 20 |
| 50. | பெத்தாபரணம் | ,, | 20 |
| 51. | இராசவருத்தனம் | ஐந்தேகால் | 21 |
| 52. | சாசபுடம் | ஆறு | 24 |
| 53. | உற்கட்டிதம் | ,, | 24 |
| 54. | கந்தர்ப்பம் | ,, | 24 |
| 55. | இரதலீலை | ,, | 24 |
| 56. | திரிபின்னம் | ,, | 24 |
| 57. | திரியச்சிர வன்னம் | ,, | 24 |
| 58. | சரபலீலை | ,, | 24 |
| 59. | மகரந்தம் | ,, | 24 |
| 60. | ஆரோகிமட்டம் | ,, | 24 |
| 61. | குடுக்கதாளம் (மூன்று மாத்திரை பாடபேதம்) | ,, | 24 |
| 62. | திரிபங்கி | ,, | 24 |
| 63. | கோகிலப்பிரிய | ,, | 24 |
| 64. | திருகீர்த்தி | ,, | 24 |
| 65, | விந்துமாலி | ,, | 24 |
| 66. | நந்தனம் | ,, | 24 |
| 67, | குந்ததாளம் | ,, | 24 |

| | | | |
|---|---|---|---|
| 68. | இராசகங்காளம் (வங்காளம்) | ஆறு | 24 |
| 69. | கந்துகம் | ,, | 24 |
| 70. | அன்னிய முகுந்தம் | ,, | 24 |
| 71. | இலக்குமீசன் (பாடபேதம் ஆறு மாத்திரை) | ஆறேகால் | 25 |
| 72. | சயதாளம் | ஆறரை | 26 |
| 73. | இலளிதப்பிரியம் | ஏழு | 28 |
| 74. | விலோகிதம் | ,, | 28 |
| 75. | சிந்தை (சீனந்தனம்) | ,, | 28 |
| 76. | இராசநாராயணன் | ,, | 28 |
| 77. | சதுர்முகன் | ,, | 28 |
| 78. | தீபகம் | ,, | 28 |
| 79. | பிரகாசமட்டம் | ,, | 28 |
| 80. | வன்னமாலி | ,, | 28 |
| 81. | சச்சபுடம் | எட்டு | 32 |
| 82. | சீரங்கம் | ,, | 32 |
| 83. | பிரத்தியாங்கம் | ,, | 32 |
| 84. | இராசசூடாமணி | ,, | 32 |
| 85. | சதுரச்சிரவன்னம் (சதுரந்தசணம்) | ,, | 32 |
| 86. | அன்னநாதம் | ,, | 32 |
| 87. | சிங்கநாதம் (சங்கநாதம்) (பாடபேதம்) | ,, | 32 |
| 88. | சதுமுகன் | ,, | 32 |
| 89. | செயத்திருதாளம் | ,, | 32 |
| 90. | விசயாநந்தம் | ,, | 32 |
| 91. | சயமங்கலம் | ,, | 32 |
| 92. | பிரதிமட்டம் (பிறிதிமட்டம்) | ,, | 32 |
| 93. | வன்னமதி (வருணயதி) | ,, | 32 |

| | | | |
|---|---|---|---|
| 94. | சகதாளம் | ஒன்பது | 36 |
| 95. | வயந்ததாளம் (வசந்தன்) | ,, | 36 |
| 96. | நாந்தி | ,, | 36 |
| 97, | செயதாளம் (பாடபேதம் பத்து மாத்திரை) | ,, | 36 |
| 98. | அரங்காபரணம் | ,, | 36 |
| 99. | அரங்கத்தியோதனம் | பத்து | 40 |
| 100. | அரங்கப்பிரதீபகம் | ,, | 40 |
| 101. | விசயம் | ,, | 40 |
| 102. | காருதி (வீரம்) (காருகி $2\frac{1}{4}$ மாத்திரை பாடபேதம்) | பத்தரை | 42 |
| 103. | அனங்கதாளம் | பதினொரு | 44 |
| 104. | சட்பிதாபுத்திரிகம் | பன்னிரண்டு | 48 |
| 105. | சம்பொற்கட்டிதம் | ,, | 48 |
| 106. | இராசதாளம் | ,, | 48 |
| 107. | கீர்த்தி (காருதி) | ,, | 48 |
| 108. | நேத்திரமட்டம் | ,, | 48 |
| 109. | தகணதாளம் | பதினாறு | 64 |
| 110. | பார்ப்பதிலோசனம் | ,, | 64 |
| 111. | சிங்கவிக்ரமம் (ஜெனகதாளம்) | ,, | 64 |
| 112. | சிங்கவிக்கிரீடிதம் | பதினேழு | 68 |
| 113. | சச்சரி | பதினெட்டு | 72 |
| 114. | மிச்சிரவன்னம் (மிச்சிரம்) | பத்தொன்பதேமுக்கால் | 79 |
| 115. | சிங்கனந்தன் | முப்பத்திரண்டு | 128 |

பாடபேதம் சிங்கவிக்கிரிடிகம் 18 மாத்திரை

மிச்சிரவன்னம், அநங்கமிச்சிரம்.

அங்கவேறுபாட்டால் அன்னியதாளம் எனக் குறிக்கப்படுகிறது, ஒரு தாளத்திற்கே வேறு பெயர் உளதால் எண்ணிக்கையில் கூடுதல் ஆகவும் குறிக்கப்படுகிறது.

## நூற்றெட்டுத்தாளம். மற்ருெரு நூற்பா

1. சச்ச புடமே தனுவிரண் டொருகணை
மெச்சிய புலுதமெட்டா மாத்திரை.

2. சாச புடமே தனுவிரண் டிருகணை
யாசறு மாத்திரை யாறே யாகும்.

3. சற்பிதா மின்கால் தகணமோ ரணியே
நற்புலித மாத்திரை நான்மூன்ருமே.

4. சம்பொற் கேட்டஞ் சர்ப்ப மகணமின்
இன்புகழ் மாத்திரை யீராருமே.

5. உற்கட்டிதமே யொருவில் லிருபிறை
சொற்புல வோரே சொல்லறுமாத்திரை.

6. ஆதி தாளமாகு மொருலகு
ஓதிய புலவீரொன்றே மாத்திரை

7. தற்பணம் நயன சக்கரந் தனுவே
மைப்பொரு குழலாய் மாத்திரைமூன்றே.

8. சச்சரி கண்துடி கண்கோ லெனமுறை
வைச்சிவை பதினெண் மாத்திரையாமே.

9. சிங்க லீலைகோல் வட்ட மூன்றுநேர்
மங்கள மானே மாத்திரை மூன்றரை.

10. கந்தர்ப் பங்கதிர் மதிகா லிருபிறை
வந்தபா தத்தின்மாத்திரை யாறே.

11. சிங்கவிக் கிரமஞ் சிலைபுர நேர்மின்கால்
பங்கமில் சாபமின் பதினுறு மாத்திரை.

புரம் — மூன்று

---

இதனைத் தாளவியல் எனக் கூறுவது அரன் அரங்கத்தொகை

12. சீரங்கஞ் செவ்வே செகணமுயிராகு
மேரங்கொள்மானே யெட்டேமாத்திரை.

13. இரத லீலை யிருநேர் சிலையிணை
சரத மொழியாய் சண்முகமாத்திரை

14. ஆரங்கங் கதிர்மறை யருகிற் சிலையே
வார்தங்கு முலையாய் மாத்திரை நான்கே.
ஆரங்கம் — அரங்கதாளம் மறை — நான்கு.

15. பரிக்கிர மிருகண் பகரிரு நேர்சிலை
யரிக்குழல் மானே யஞ்சே மாத்திரை.
பரிக்கிரம் — பரிவிக்கிரமம்

16. பிறத்தி யாங்கம் பிணைசிலையகண
மறத்துணை விழியாய் மாத்திரையெட்டே

17. கெசலீலை மூன்றுநேர் கீற்றுக்காலொற்று
இசையு நாலேகால் மாத்திரையாகும்.
ஒன்று — துருதம்.

18. திரிபின்னங் கால் சிலை சேர்பணியாகும்
அரிமின் குழலாய் ஆறே மாத்திரை.

19. வீரவிக் கிரம மிருகா லிருசுழி
வாரமிக்க சிலைமாத்திரை யஞ்சே.

20. அன்ன லீலைகா லம்பொற் றிரண்டினும்
இன்னிலம் புகழு மிரண்டரை மாத்திரை.

21. வன்ன பின்னம் மதிகதிர் கணைசிலை
நன்னிலம் புகழு நாலே மாத்திரை.

22. இராசசூ டாமணி யிணைக்கண் நகணம்
இருமதி கோல்பிறை யெட்டே மாத்திரை.

23. அரங்கத்தி யோதன மொருசிலை தகணி
மறந்தரு சேடன் மாத்திரை பத்தே.

24. இராச தாளங் குருமின் னிணைமதி
யீராறு மாத்திரை யேற்று வில்லம்பே.

25. சிங்கவிக் கிரீடித மிணைநேர் பணிசிலை
புங்கவன் கணைசிலை புலிதம் பிறையுயிர்
பங்கமில் மாத்திரை பதினெட் டாகும்.
உயிர் - புலுதம்.

26. வன்ன மாலி மறைசுழி யிருகோல்
இன்னகொம் பிணைகுரு வேழமாத்திரை,
மறை – நான்கு, கொம்பு – துருதம்.

27. சதுரந் தகணஞ் சந்திர னிணையுயிர்
மதுர மொழிமின்னே மாத்திரை யெட்டே.

28. திரியச் சிரங்கால் திகிரிகண் சகணம்
அரிமொய் குழலா யாறேமாத்திரை.

29. மிச்சிர மும்மதி விழிமேற் றுடியும்
அச்சமில் மும்முறை யாருயிர் சிலைகண்
மெச்சிரு சிலையிணை நேர்பிறை யுடனே
வச்சிரு பதுதான் மாத்திரை கால்குறை.

30. அரங்கப் பிரதீபக மரிய தகணம்
பரஞ்சிலை கணையுயிர் பத்தே மாத்திரை.
கணையுயிர் – ஒரு புலுதம்.

31. அன்ன நாத மம்பொன் றிருசிலை
பின்னும் கணைசிலை பேரெட் டாமே.

32. சிங்கநாதஞ் சிறுகோ லிருகுருத்,
தங்கு நேர்தனு மாத்திரை யெட்டே.

33. மல்லிகா மோதகம் வருமிரு காலுடன்
நல்ல மறைசுழி நாலே மாத்திரை.
மறை – நான்கு

34. சரபலீலை சமகணை நாற்சுழி தன்னுடன்
வருமிரு கணையுடன் மாத்திரை யாறே.
சமம் – இரண்டு

35. அரங்கா பரண மொருகணை யகணமின்
உரங்கொள் விழியா யொன்பது மாத்திரை.
மின் – புலுதம்.

36. துரங்க லீலை துணைதுரு தங்கோல்
இணங்கிட வருமாத் திரைதா னிரண்டே,

37. சிங்க னந்தன் செழுஞ்சொற் றகணமின்
துங்கங் கால்சிலை சுழிவிழி தகணமின்
புங்க நேர்மின் பகணம் புட்பதம்
இங்கித முடனு லெட்டே மாத்திரை.

38. செயத்திரி தாளஞ் சிலைபுர மூன்றுஞ்
செயக்கணை யிரண்டுட னெட்டே மாத்திரை.

39. விசையா னந்த மிணைகோல் மகணமோ
டிசையார் புலவீ ரெட்டே மாத்திரை.

40. பிரிதிதா ளங்கோல் பின்கால் மதிகதிர்
திரிதிகை மாத்திரை செப்பினர் புலவர்.
பிரிதி – பிரதிதாளம்.

41. துதிய கங்கோல் துலங்கிய கதிர்பின்
மதிவரு மிரண்டு மாத்திரை யாமே.

42. மகரந் தந்துணை வட்டம்நேர் புரஞ்சிலை
தகரமென் குழலாய் சண்முக மாத்திரை.

43. சீர்த்தி கால்சிலை பணிவில் கோல்மின்
நாற்றிசை புகழு நான்மூன்று மாத்திரை.
சீர்த்தி – கீர்த்துதாளம்.

44. விசையதாளம் விடம்வில் லுயிர்பிறை
இசைதரு புலவீ ரிதுபத்து மாத்திரை.

45. செயமங் கலஞ்சரங் கோல்சிலை யிருசரம்
நயமுடன் பிறையாம் நாலிரு மாத்திரை.

46. இராசவித்தி யாதரங் கோல்சிலை யிருசுழி
தராதலம் புகழுஞ் சதுமறை மாத்திரை.

47. ஆரோகி மட்டஞ் சகணஞ் சுழிமறை
வாரார் குழலாய் மாத்திரை யாறே.

48. பிரகாச மட்டம் பின்னிரு கோல்கணை
இறவாப் பகண மேழே மாத்திரை.

49. செயதாளம் விற்கோல் சிலைகணை யிருசுழி
பயமாம் பாம்புடன் பத்தே மாத்திரை.

50. குடுக்கஞ் சுழியிணை கோலிணை யாகும்
வடுப்படும் விழியாய் மாத்திரை மூன்றே.

51. நிச்சா ரூபகங் கோல்சரம் விராமம்
கச்சார் முலையா யிரண்டேகால் மாத்திரை.

52. கிரீடை திகிரி கிளர்விழி விராமம்
உறுதியா மாத்திரை யொன்றே காலே.

53. திரிபங்கி தாளஞ் செகணஞ் சிலைதான்
அறியும் புலவீர் ஆறே மாத்திரை.

54. கோகிலப் பிரியங் குருகோல் புலிதம்
ஆகிடு மாத்திரை யாறென லாமே.

55. சிரீகீர்த்தி தாளஞ் சேர்தக ணங்களை
வருங்கீர்த்தி பெற்ற மாத்திரை யாறே.

56. விந்து மாலி வேள்சிலை நாற்சுழி
வந்தபின் குருவுடன் மாத்திரை யாறே.

57. சமதா ளம்வர லிருகோ லிருசுழிக்
கமைவி ராமமுன் றேகால் மாத்திரை.

58. நந்த னிருநேர் நற்சுழி யிணையுயிர்
அந்தமில் மாத்திரை யாறே யாகும்.

59. உத்தீக் கணமே யுயரிரு கணைபிறை
வைத்திடல் நாலு மாத்திரை யாமே.

60. இடங்கி தாள மிருசிலை நடுநேர்
அடங்க லாகு மாத்திரை யைந்தே.

61. வன்னமட் டிகைசரங் கோல்மதி கதிர்நேர்
சொன்னவட் டந்துணை யஞ்சே மாத்திரை.

62. அபிநந் தனங்கால் கதிர்மதி நேர்சிலை
கபிலர்சொல் மாத்திரை கற்ப தருவே.
கற்பதரு – ஐந்து.

63. அந்தரக் கிரீடை யமர்திரி மதிகளொற்
றிந்திரன் மாத்திரை யேழுகா லாமே.

64. மல்ல தாள மறைலகு சுழிகளொற்
றல்லணி குழலா யஞ்சேகால் மாத்திரை.

65. தீபக மிருசுழி சேரிணை கோல்சிலை
மேவிய மாத்திரை யேழது வாமே.

66. அனங்க தாள மம்புயிர் சகணமின்
இனஞ்செறி குழல்பன் னொன்றே மாத்திரை.

67. விடம மறைசுழி விராமம் நடுக்கடை
நடமிடு மப்படி நாலரை மாத்திரை.

68. நாந்தி யிருகோல் நயன மிணைலகு
வாய்ந்த யகண மாத்திரை நவமே.

69. குந்த தாள மிருகோ லிருகணை
யந்தம் பிறைவரு மாறே மாத்திரை.

70. முகுந்தன் கோலிரு மதிநேர் பிறையொடு
பகர்ந்தசொற் புலவீர் பஞ்சமி மாத்திரை.

71. எக்க தாள மியற்சுழி யொன்றும்
மிக்கரை மாத்திரை மேவிடு மதுவே,

72. பூரண கங்காளம் பொற்சுழி மறைநேர்
மாரணம் பொருசிலை மாத்திரை யைந்தே.

73. கண்டகங் காளங் கணைசுழி யிருபிறை
யண்டர் தவமா கஞ்சே மாத்திரை.

74. சமகங் காளந் தனுவிரண் டொருகணை
யமர ரறிவது மஞ்சே மாத்திரை.

75. விடமகங் காளம் விண்புகழ் யகணம்
மடமயில் மானே மாத்திரை யஞ்சே.

76. சதுர்தாள மோர்சிலை சந்திரன் முச்சுழி
மதுச்சேர் குழலாய் மாத்திரை மூன்றரை.

77. டோம்புளி யிருகோ லுடன்கணை விராமமோ
டாம்புகழ் மாத்திரை மூன்றே காலே.

78. அபங்க தாள மம்புயி ரெனவே
இபங்கொள் மாத்திரைநா லென்றனர் புலவர்,

79. இராசவங் காள மிருசிலைக் குட்கணை
தராதலத் திருக்கண் சண்முக மாத்திரை.

80. இலகு சேகர மியற்கோல் விராமம்
யுலகின் மாத்திரை யொன்றே காலே.

81. பிறதாப சேகரம் பணிகண் சுழிதுடி
நறவார் மாத்திரை நாலே காலே.

82. செகற்சம்பை தாளஞ் சிலைசுழி கண்கிளர்
முகத்திரு மயிலே மூன்றேகால் மாத்திரை.
கிளர் - விராமம் $\frac{1}{4}$ மாத்திரை.

83. துருத சேகரந் தொல்சுழி விராமம்
வருவது முக்கால் மாத்திரை தானே.

84. சதுமுகன் பிறைகால் தனுவுயி ராகும்.
மதுவணி குழலாய் மாத்திரை யெட்டே.

85. பின்ன சதுமுகன் பெரும்பணி யொருகால்
மன்னறி புலவீர் மாத்திரை நாலே.

86. சம்பை மட்டஞ் சசிகண் துடிகோல்
இம்பர்சொல் மாத்திரை யிரண்டே காலே.

87. பிறிதி மட்டஞ் செகணம் பிறையுடன்
இறுதி யிருநே ரெட்டே மாத்திரை.

88. திறுதிய தாளஞ் செப்பிடின் முச்சுழி
இறுதி யிரண்டுமொற் றிரண்டே மாத்திரை.

89. வசந்த முக்கோல் வக்கிர மிருபிறை
யிசைந்த மாத்திரை யிருநான் கொன்றே.

90. லளிதஞ் சுழிவிழி யிந்திரன் விற்கணை
நளினப் புலவீர் நாலே மாத்திரை.

91. இரதி தாளம் லகுவொடு சிலையே
வரத ருரைத்தது மாத்திரை மூன்றே.

92. கருணை யதியே கண்ணொரு நான்கே
வருணன் புகழ்ந்த மாத்திரை யிரண்டே.

93. சட்ட தாளஞ் சட்சுழி யாகும்
மட்டவிழ் குழலாய் மாத்திரை மூன்றே.

94. வர்த்தனந் துருத மதிகோ லுயிரே
அத்த ருரைத்தது வஞ்சே மாத்திரை.

95. வன்ன மதிநேர் வாளி யீருயிர்
இன்னசம் புகழு மெட்டே மாத்திரை.
வன்னம் - வருணயதி.

96. இராசநா ராயணன் இருமதி செகணம்
இராமன் சிலையுட னேழு மாத்திரை.

97. மதனதா ளஞ்சிலை மதிகதி ராகும்
வதனத் திருவே மாத்திரை மூன்றே,

98. பார்வதி லோசன மிருசுழி யிருகோல்
வீறிரு கண்ணிணை வில்லொடு மறைகோல்
கூறிடு வக்கிரங் கோலிணை யாக
வேறிடு மாத்திரை யீரெட் டாகும்.

99. காருகி முச்சுழி கண்மேல் விராமம்
ஏருள மாத்திரை யிரண்டே காலே.

100. சீனந் தனமே சீர்பக ணம்பணி
யீனந் தாரா தேழே மாத்திரை.

101. சயமிரு நேர்சிலை தானிணை கால்சுழி
யயுன்மொழி மாத்திரை யாறரை யாமே.

102. லயதா ளஞ்சிலே கோல்சுழி யெனவே
மயல்சேர் முலேயாய் மாத்திரை மூன்றரை.

103. விலோகிதங் கோல்சிலே விளங்கிரு சுழியுயிர்
உலோகிதம் புகழ்வாரி யுள்ளது மாத்திரை.
வாரி – கடய் ஏழு.

104. லளிதப் பிரியஞ் சசணங் கோல்சிலே
எழுதிச் சொன்னே மேழே மாத்திரை.

105. தகண நகணம் பகண மிருபிறை
யிகமுள மாத்திரை யீரெட் டாகும்.
தகணம் – தகணதாளம்.

106. இலக்குமீ சன்கண் சுழியொற் றிருகணே
அலக்க மில்பணி யாறேகால் மாத்திரை.

107. இராச வர்த்தன முச்சுழி துடிகடை
யிரோகையொ டிரண்டே முக்கால் மாத்திரை.

108. பெத்தா பரணங் கோல்பின் பணிகோல்
வைத்தா ரகத்தியர் மாத்திரை யஞ்சே.

சிவாசலபதி சகாயம்.

**பிற்சேர்க்கை குறிப்பு**

கணம்,— குருலகுக்கள் மூன்று சேர்ந்த கோவை. இவற்றின் மாறுதலான் வரும் கோவைகள் எட்டனையும் அட்டகணம் என்பர். குரு இரண்டு மாத்திரை. லகு ஒரு மாத்திரை. இவற்றுள் நற்கணங்களும் தீக்கணங்களும் உண்டு நற்கணங்களைக் (தாளம்) கீத வாத்தியப் பிரபந்தங்களின் முதலில் வைத்துப் புணர்க்க வேண்டும்.

முன்னமொழி யெண்கணமும் மூன்றுறுப்பா
லொவ்வொன்றும்
மன்னுலகுக் குருவே வைப்பாகும் — இந்நிலத்தில்
வல்லபல தாளத்து வாத்தியகீ தப்பிரபந்தஞ்
சொல்லு முதற்கணமே சூட்டு.

பகணம், மகணம், யகணம், நகணம். இவை தாளச் சொற்கட்டு சாகித்தியம். வாத்திய கீதப்பிரபந்தம் ஆகிய வற்றின் முதலில் அமையின் நல்ல பலனைத் தரும். ஜகணம், ஸகணம், ரகணம், தகணம் இவைகளை முன்னே பிரயோகித்தால் தீயபலனைத் தருமென்பர்.

மாத்திரைகளறியும் பொழுதும் ஏகமாத்திரை விதி கொண்டறிய வேணுமாதலால் அந்தயேக மாத்திரை வருமாறு: க ச ட த ப வென்கின்ற பஞ்சகுல அக்கரங்களை உச்சரிக்கின்ற காலம் ஏகமாத்திரை காலமாம். இந்த மாத்திரைகள் தன்னைக் கொண்ட தெக்கணாதி மார்க்கங்களை அளந்தறிய வென்றவாறு.

## நூற்றெட்டுத் தாள மாத்திரை

**விருத்தம் — க**

"சச்ச புடம்பிரத்தி யாங்கமன்ன நாதஞ்
சதுரம்விச யானந்தஞ் சங்கநாதம்
வச்ச புகட்சீரங்கம் பிரதி மட்டம்
வன்னமதி ராசசூடாமணி தாளந்தா
னிச்சை பெறுசதுர் முகன்சேர் திரிதாளத்தோ
டிசைந்த சயமங்கலத்தி னிவைபன்மூன்ரும்
அச்ச மற்றதாளங்க ளிவைக்கே மாத்திரையு
மெட்டாமென்ப பொதியமலே யமர்ந்தார்தாமே"

இவ்விருத்தப்பா முறையில் பதின்மூன்று தாளங்களும், ஒவ்வொன்றும் எட்டு மாத்திரைகளே உடையன.

க. சச்சபுடம்
உ. பிரத்தியாங்கம்
ங. அன்னநாதம்
ச. சதுரம்
ரு. விசயாநந்தம்
சா. சங்கநாதம்
எ. சீரங்கம்
அ. பிரதிமட்டம்
கூ. வன்னமதி
ய. இராசசூடாமணி
யக. சதுர்முகன்
யஉ. திரிதாளம்
யங. சயமங்கலம்

இவை எட்டு மாத்திரைகளே உடையவைகளாயினும் ஒவ்வொன்றிற்கும் அங்க (உறுப்பு) முறைமைகள் வெவ்வேருக வருவது உணரப்பெற வேண்டும்.

**விருத்தம் உ**

"சாசபுடம் திரிபின்னம் விந்து மாலி
சயமிரத லீலையா ரோகிமட்டம்
ஓசைபெறு திரிபங்கி சரப லீலை
உற்கட்டி தம்மிலக்கு மீசன்குந்தம்
மாசில்திரி யச்சிரமம் நந்தனங்கோ கிலமும்
வங்காளஞ் சிரீகீர்த்தி மகரந்தந்தான்
ஆசறுகந் தர்ப்பமிவை பதினெட் டாகு
மிவைதனக்கு மாத்திரையு மாறுதானே."

இப்பதினெட்டுத் தாளங்களும் ஒவ்வொன்றும் ஆறு மாத்திரைகளை உடையன.

க சாசபுடம்
உ. திரிபின்னம்
ரு. விந்துமாலி
ச சயம்
ரு. இரதலீலை
சு. ஆரோகிமட்டம்
எ. திரிபங்கி
அ. சரபலீலை
கூ. உற்கட்டிதம்
ய. இலக்குமீசன்
யக. குந்தம்
யஉ. திரியச்சிரமம்
யங. நந்தனம்
யச. கோகிலம்
யரு. வங்காளம்
யசு. சிரீகீர்த்தி
யஎ. மகரந்தம்
யஅ. கந்தர்ப்பம்

மாத்திரைகள் ஆருயினும் அங்க வேறுபாடு கொண்டுள.

**விருத்தம் ௩**

"சட்பிதா புத்திர மிராச தாளஞ்
சம்பொற்கட் டங்கீர்த்தி தாளந்தானும்
நட்புடைய தாளமிவை நாலும் பாரில்
தான்மூன்று மாத்திரையை நாடுமாதி
தட்பமுள கிரீடைலகு சேகரஞ் சேர்
தாளமொடு மூன்றுமந் தரக்கிரீடை
கொட்புறுமொன் றென்றேகால் ஒன்றே முக்காற்
கூடுமென்றே குறுமுனிவன் கூறினனே."

இப்பாவின் முறையில்,

௧. சட்பிதாபுத்திரம்
௨. இராசதாளம்
௩. சம்பொற்கட்டம்
௪. கீர்த்தி

இந்நான்கு தாளங்களும் ஒவ்வொன்றும் பன்னிரண்டு மாத்திரைகளைக் கொண்டவையாகும்.

௫. ஆதி
௬. கிரீடை
௭. லகுசேகரம்
௮. அந்தரக்கிரீடை

இம்மூன்று தாளங்களில் ஆதிதாளம் ஒரு மாத்திரையும், கிரீடையும் லகுசேகரமும் ஒவ்வொன்றும் ஒன்றேகால் மாத்திரையும், அந்தரக்கிரீடை ஒன்றேமுக்கால் மாத்திரையும் கொண்டவையாகும்.

**விருத்தம் ௪**

" கருணையதி துதியகமே திறிதி தாளங்
கருதுரங்க லீலையுடன் காணில்நாலுந்
தருணமுள காஞ்சியுட னிச்சா ரூகந்
தான்சம்பை மட்டமிவை மூன்றுந்தானும்
வருணர்புக ழன்னலீ லையுமி ராச
வர்த்தனமு மித்தாள வகையேபின்னுக்
கிருமைபுனை மாத்திரைரெண் டிரண்டே காலு
மிரண்டரையு மிரண்டேமுக்கா லென்றிடீரே.

இப்பாவின் முறையில்,

க. கருணையதி (கருணை)

உ. துதியகம்

ங. திறிதிதாளம் (இறுதியம்)

௪. துரங்கலீலை

இந்நான்கு தாளங்களும் ஒவ்வொன்றும் இரண்டு மாத்திரைகள் கொண்டவை.

ரு. காஞ்சி

௬. நிச்சாரூகம்

எ. சம்பைமட்டம்

இவை மூன்றும் ஒவ்வொன்றும் இரண்டேகால் மாத்திரை கொண்டவை.

அ. அன்னலீலை, இரண்டரை மாத்திரை.

௯. இராசவர்த்தனம், இரண்டேமுக்கால் மாத்திரை கொண்டவையாகும்.

**விருத்தம் ரு**

" தற்பணதா ளம்பிறிதி தாளஞ் சட்ட
தாளமுடன் குடுக்கமுமன் மதன்தாளமும்
மற்புயஞ்சேர் செகற்சம்பை சமடோம் புள்ளி
வருமிரதி யொன்பான்மாத் திரையேகாணில்
முற்பெறுதா ளங்களிரு மூன்று மூன்ரு
மொழிந்திடுபின் னவைமூன்று மூன்றேகாலாங்
கற்புடைய சச்சரிக்குப் பதினெட் டாகக்
கருதுகுறு முனிவன்முன்பு கழறினனே.

இப்பாவின் முறையில்,

க. தற்பணம்
உ. பிறிதிதாளம்
ங. சட்டதாளம்
ச. குடுக்கம்
ரு. மதன்தாளம்
சா. செகற்சம்பை
எ. சமம்
அ. தோம்புளி (டோம்புளி)
கூ. இரதிதாளம்

இவ்வொன்பது தாளங்களில் இருமூன்று அதாவது ஆறு தாளங்கள். தற்பணம், பிறிதி, சட்டம், *குடுக்கம், மதன், இரதி இவை ஒவ்வொன்றும் மும்மூன்று மாத்திரைகளை உடையன. செகற்சம்பை, சமம், தோம்புளி இம்மூன்றும் ஒவ்வொன்றும் மூன்றேகால் மாத்திரைகளை உடையன.

ம. சச்சரிக்குப் பதினெட்டு மாத்திரை என அமைகின்றது.

---

* குடுக்கதாளம் ஆறு மாத்திரை. பாடபேதம்,

**விருத்தம் ௬**

"பின்னசதுர் முகனுத்தீக் கணமேயும் லளிதம்
பேசின்மல்லி காமோத மரங்கந்தானும்
வன்னபின்ன மிராச வித்யாதர மபங்கம்
வருதாள மெட்டுமாத்ரை நான்கென்றூர்
இன்னிலமெண் கெசலீலை பிரதாப சேகரம்
இருதாள மாத்திரைதான் நாலேகாலாம்
நன்னெறிசேர் விடமதா ளந்தான் பேசில்
நாலரைமாத் திரையெனவே நவில்கின்றூரே.

இப்பாவின் முறையில்

க. பின்னசதுர்முகன்

உ. உத்தீக்கணம்

ந. இலளிதம்

ச. மல்லிகாமோதகம்

ரு. அரங்கம்

௬. வன்னபின்னம்

எ. இராசவித்யாதரம்

அ. அபங்கம்

ஆகிய எட்டுத் தாளங்கள் ஒவ்வொன்றும் நான்கு மாத்திரைகள் உடையன.

௯. கசலீலை

௰. பிரதாபசேகரம்

ஆகிய இரண்டும், ஒவ்வொன்றும் நாலேகால் மாத்திரைகள் உடையன.

௰க. விடமதாளம், நாலரை மாத்திரை.

**விருத்தம் எ**

"வீரவிக் கிரமுகுந்தம் டெங்கி ததாளம்
விடமகங் காளம்பரிக் கிரமங்கொண்டாடும்
பாரிலன்ன மட்டிகை வர்த்தனமே பெத்தா
பரணமல்ல தாளமபி னந்தந்தானும்
காருலவு பூரணகங் காளங் கண்ட
கங்காள முடன்சமகங் காளமாகும்
ஆருமகிழ் பன்மூன்று தாளந் தானும்
அஞ்சுமாத் திரையெனவே யறைகின்றுரே.

இப்பாவின் முறையில்

க. வீரவிக்கிரமம்

உ. முகுந்தம்

ங. இடெங்கி

ச. விடமகங்காளம்

ரு. பரிக்கிரமம்

சு. அன்னமட்டிகை

எ. வருத்தனம்

அ. பெத்தாபரணம்

கூ. மல்லதாளம்

ய. அபிநந்தன்

யக. பூரணகங்காளம்

யஉ. கண்டகங்காளம்

யங. சமகங்காளம்

இப்பதின்மூன்று தாளங்கள், ஒவ்வொன்றும் ஐந்து மாத்திரைகளை உடையன.

**விருத்தம் அ**

" சிங்கலீலே சதுர்த்தாள லயஞ்சேர் மூன்று
திகழ்தாள மூன்றரைமாத் திரையேயாகும்.
சிங்கவிக் கிரமந்த கணமும் பார்வ
திலோசனமு மிவைமூன்று மீரெட்டாகும்
தங்குமரங் கப்பிரதீ பகஞ்செ யந்தான்
சாரரங்கத் தியோதனமும் விசயதாளம்
பங்கமில விவைதனக்கு வந்த மாத்ரை
பத்தென்றே குறுமுனிவன் பகர்ந்துளானே."

இப்பாவின் முறையில்

க. சிங்கலீலே
உ. சதுரத்தாளம்
ந. இலயம்

இம்மூன்று தாளங்கள் ஒவ்வொன்றும் மூன்றரை மாத்திரைகள் உடையன.

ச. சிங்கவிக்கிரம்
ரு. அந்,தகணம்
சு. பார்வதிலோசனம்

இம்மூன்று தாளங்கள் ஒவ்வொன்றும் பதினாறு மாத்திரைகள் உடையன.

எ. அரங்கப்பிரதீபகம்
அ. செயதாளம்
கூ. அரங்கத்தியோதனம்
ம. விசயம்

இந்நான்கு தாளங்கள் ஒவ்வொன்றும் பத்து மாத்திரைகளை உடையன.

---

இலையம் (லீலே) ஐந்து மாத்திரை பாடபேதம்.

**விருத்தம் கூ**

"வசத்தனரங் காபரணம் நாந்தி நாளம்
வருமூன்று தாளமுமாத் திரையொன்பானும்
இசைந்தவன்ன மாலிபிர காச மட்ட
மிராசநா ராயணன்தீ பகமெல்லோரும்
விசைந்தலளி தப்பிரியஞ் சீனந்த னிந்தின்
விலோகிதா ளதமேதாடும் வாழ்வேயேழுக்
குசந்தபுகழ் மாத்திரையு மேழ தாக
வுயர்பொதிய மாமுனிவ னுரைசெய்தானே.

**இப்பாவின் முறையில்**

க. வசந்தன் (வயந்தம்)

உ. அரங்காபரணம்

ங. நந்தி (நாந்தி)

**இம்மூன்று தாளங்கள் ஒவ்வொன்றும் ஒன்பது மாத்திரைகளை உடையன.**

ச. வன்னமாலி

ரு. பிரகாசமட்டம்

சு. இராசநாராயணன்

எ. தீபகம்

அ. லளிதப்பிரியம்

கூ. சீனந்தன்

ம. விலோகிதம்

**இவ்வேழு தாளங்கள் ஒவ்வொன்றும் ஏழு மாத்திரைகளை உடையன.**

**விருத்தம் ம**

"சிங்கவிக்கி ரீடித மனங்க மிச்ரந்
திகழ்துருத சேகரத்தோ டெக்கதாளம்
பங்கமிலா விவைதனக் குயர்ந்த மாத்ரை
பதினெட்டுப் பன்னொன்றுபத் தொன்பான் முக்கால்
துங்கமுள்ள முக்கா லரைய தாகுஞ்
சொற்புலவீர் சிங்கனந்தன்முப் பதிரு டிரண்டாந்
தங்குபுகழ் நூற்றெட்டுத் தொகையில் வந்த
தாளமுமாத் திரையுமிவை சாற்றினரே."

**இப்பாவின் முறையில்,**

க. சிங்கவீக்கிரீடிதம்

பதினெட்டு மாத்திரை கொண்டது.

உ. அனங்கம்

பதினொரு மாத்திரை கொண்டது.

ங. மிச்சிரம் (மிச்சிரவன்னம்)

பத்தொன்பதே முக்கால் மாத்திரை கொண்டது.

ச. துருதசேகரம்

முக்கால் மாத்திரை கொண்டது.

ரு. எக்கதாளம்

அரை மாத்திரை கொண்டது.

சா. சிங்கநந்தன்

முப்பத்தி இரண்டு மாத்திரை கொண்டது.

முதனிணைப்பு

"சச்சபுடஞ் சாசபுடஞ் சட்பிதா வுங்கருணை
மெச்சுதர்ப்ப ணம்பின்னம் வீரவிக்ரம் — வச்சசிங்க
லீலைவசந்த னரங்க சிங்கவிக்கி ரீடிதம்
மாலைதங்கு பூங்குழலாய் வைப்பு."

தாளமாத்திரை விருத்தம் முற்றும்.

சிவாசலபதி சகாயம்.

சிங்கவிக்கிரீடிதம் பதினேழு மாத்திரை பாடபேதம்.

---

பாடபேதம் பக்கம் 83

"மண்டலமே வர்த்தனையே வந்தனைகொள்
வான்கரணம்
பண்டுசெய்யா லீடம் பகர்கீற்று — மிண்டும்
கடிச்சாரி குஞ்சிப்புக் கட்டுப் புரியும்
களியக்கா லுள்ளாளங் காண்.

பக்கம் 85

காணக் கடத்தலாங் கம்பித்த லூர்தலாம்
நாண நடுக்கலே நாளும் — பேணியக்கால்
வாங்கலே யப்புதல் மற்றனுக்க லாச்சரிப்பு
தேங்கமழ் தேசித் திறம்.

பக்கம் 86

ஆராத குந்தலே யழகிய கானெளித்தல்
வாரார் முலைமாதே மாறுகால் — சீராரு
மிட்டுப் புகுதல் சுழிவாங்கல் என்றிவற்றே
டொட்டு முடற்புரியு மாம்."

இந்த மூன்று வெண்பாவினனும் தேசியின் பாற்பட்ட கால்களை உணர்த்துதல் நுதலிற்று.

அவை,

க. மண்டலம்
உ. வருத்தனை
ங. கரணம்
ச. ஆரீடம் (ஆலீடம்)
ரு. சித்து (கீற்று)
சு. கடிச்சாரி
எ. குஞ்சிப்பு
அ. கட்டுப்புரி
கூ. களியக்கால்
௰. உள்ளாளம்
௰க. கடத்தல் (கட்டல்)
கஉ. கம்பித்தல்
கங. ஊர்தல்
கச. நடுக்கல்
கரு. போக்கல்
கசு. வாங்கல்
கஎ. அப்புதல்
கஅ. அனுக்குதல்
ககூ. ஆச்சரிப்பு (ஆச்சிப்பு – வாசிப்பு)
உ௰. குந்தல்
உக. நெளித்தல்
உஉ. மாறுகால்
உங. இட்டுப்புகுத்தல் (இடம்புரி)
உச. சுரிவாங்கல்
உரு. உடற்புரி

எனவிவை தேசியின் தொழில்கள் என்றவாறு.

க. மண்டலமாவது

இரண்டு குதிகால்களையும் எதிர்முகமாகச் சேர்த்துக் கால்களின் நடுவே இடைவெளி பெற வளைத்து நிற்குமது.

அ. கட்டுப்புரியாவது

ஒருகாலை உதைத்துப் பக்கத்தில் குத்தி ஒரு காலை முன்னே ஊன்றி மாறுவது.

௰உ. கம்பித்தல்

இரண்டு காலையும் பக்கத்திற் கம்பித்தாற்போலே கூட்டுவது. (கம்பித்துப் பலகாலூருமது)

௰௧. ஆச்சரிப்பாவது (வாசிப்பு)
பாதத்தைத் தூக்கி இருபாலும் போக்கி முன்னே உதைக்குமது.

௨௩. இட்டுப்புகுதல் (இடம்புரி)
ஒருகால் முன்னே மற்றைக்காலை மாறிக் கூட்டி வைக்குமது.

## வடுகிற்குரிய கால்கள்

போக்கல் – போக்குதல். வீசுதல் – வீசல்.
நீக்கல் – நீக்குதல். குடுப்பு – குடுப்புக்கால்,
உடைதல் – உடைத்தல். குத்தல் என்ற தொழிலுமுளது.
எரிதல் – எறிதல்.
கத்தரிகை – கால்புற்றிக் கடுக முடுகுவது.
கூட்டுதல் – குடுப்புக்காலைக் கடுகிக் கூட்டுவது.

## சிங்களத்திற்குரிய கால்கள்

மெய்சாய் விடைநெரிவு மெய்ச்சுழிவே டாங்கணைதல்
கைதூக் கிசைத்தல் கலைபற்றல் — கைகள்
விரித்தல் குவித்தல் சிங்கள மாமென்று
தெரித்தனர் வண்டமிழோர் தேர்ந்து.

சிங்களக்கால்கள் வரலாறு உணர்த்துதல் நுதலிற்று.
* கைதூக்கிசைத்தல். * செய்கின்ற தொழிற்கீடாக.

இடைநெரிவாவது,

செய்கிற தொழிற்கு முதல் தொடங்கி இடையை நெரிப்பது.

அணைத்தலாவது

மெய்யும் கையும் முகமும் சொல்லுக்கு ஈடாய் அணைக்குமது. (விரிக்குமது)

**பாடபேதம்** **பக்கம் 87**

**சுற்றுத லெறித லுடைத்த லிரட்டுதல்**
**ஒட்டுதல் கட்டுதல் வெட்டுதல் போக்கல்**
**நீக்கல் முறுக்க லனுக்கல் வீசுதல்**
**குடுப்புக் குத்தல் கூட்டுதல் கத்தரி**
**கையீ ரெட்டுங் காற்ரெழி லாகும்.**

க. சுற்றுதல்
உ. எறிதல்
ங. உடைத்தல்
ச. இரட்டுதல்
ரு. ஒட்டுதல்
சு. கட்டுதல்
எ. வெட்டுதல்
அ. போக்குதல்
கூ. நீக்குதல்
ய. முறுக்கல்
யக. அனுக்கல்
கஉ. வீசுதல்
கங. குடுப்பு
கச. குத்தல்
கரு. கூட்டுதல்
கசு. கத்தரிகை **எனவிவை.**

# சிவபெருமான் ஆடிய தாண்டவங்கள் பதினாறு

## ஒவ்வொரு தாண்டவத்திற்குமுரிய தாளங்கள் அவற்றிற்குரிய உறுப்புக்கள்

---

பக்கம் 21

## 1. ஆதித்தாண்டவம்

32 மாத்திரையளவில் இத்தாண்டவத்திற்குச் சதி முறை கூறப்படுகிறது. இச்சதி முறையை எட்டுத் தாளங்களில் பயன்படுத்துவது வழக்கு போலும். அத்தாளங்கள் வருமாறு.

(ஆதியான சிவன் ஆடிய ஆதித்தாண்டவம் ஆதியில் ஆதி தாளத்தையே ஆதியாக உடையது அறியத்தக்கது.)

### க. ஆதி தாளம்

மாத்திரை க. | லகு. ஒன்று மட்டும் (நான்கு எண்கள்). இவ்வுறுப்பு ஒரு மாத்திரை ஆனதால் 32 மாத்திரையில் இவ்வங்கம் 32 தடவை வந்து நிறைவுறும். ஆகவே ஆதித்தாண்டவத்திற்குச் சதி 32 மாத்திரையில் அமைந்துளது. ஆதி தாளத்திற்கு ஒச்ச, அல்லது ஒச்சாதாளம் என்ற பரியாயப் பெயரும் உண்டெனத் தெரியவருகிறது. இக்காலம் சதுரச்சர திருபுடைத் தாளத்தை ஆதி தாளமென வழங்குவது வழக்கு.

---

108 தாளங்களில் ஆதிதாளம் 6ஆவது தாளம்,

## உ. வன்னபின்னம்

மாத்திரை - ச. 16 எண்கள்.

உறுப்பு : O O | 8

திருதம் திருதம் லகு குரு

இத்தாளம் எட்டு மண்டிலம் (ஆவர்த்தம்) நிகழுமாயின் 32 மாத்திரைக்குரிய சதி முறை அடங்குவது அறியலாம். பொதுவான சதி முறைமைகளை அவ்வத்தாளங்களின் எண் முறைக்கேற்பக் கொள்ளப்படும் என்பர்.

---

108 தாளங்களில் வன்னபின்னம் 21 ஆவது தாளம்.

## ங. இலளிதை

(லளிதை) (இலளித்தம்) (இலளிதம்) (லலிதா)

மாத்திரை ச. 16 எண்கள்.

உறுப்பு : O O 8 |

திருதம் திருதம் குரு லகு

இத்தாளமும் எட்டு மண்டிலம் நிகழ 32 மாத்திரைக்குரிய சதிமுறை அடங்கும்.

---

108 தாளங்களில் இலளிதம் 90 ஆவது தாளம்.

## ச. சட்டம் (சட்டதாளம்)

மாத்திரை ங. 12 எண்கள்.

உறுப்பு : O O O, O O O

ஆறு திருதம்

அங்கங்கள் திருதமாகவே இருப்பதால் ஏக தாள முறையில், நிகழ வாய்ப்பு நேரும். 32 மாத்திரைக்குரிய எண்கள் 128 ஆதலின் பத்து மண்டிலம் இத்தாளம் 120 எண்களில் நிகழ்ந்து எட்டு எண்களுக்குரிய தீர்வு கொண்டு முடியும். (இரண்டு மாத்திரைத் தீர்வு)

---

108 தாளங்களில் சட்டதாளம் 93 ஆவது தாளம்.

## ரு. சரபலீலை

மாத்திரை கூ. 24 எண்கள்.

உறுப்பு : | | O O O O | |

லகு லகு நான்கு திருதம் லகு லகு

முன் தாளமான சட்டதாளத்தின் எண்கள் இத் தாளத்தில் இரட்டித்து இருத்தலான் இருபது மண்டிலம் நிகழ்ந்து 16 எண்களுக்குத் தீர்வுகொண்டு முடியும். (நான்கு மாத்திரைத் தீர்வு)

---

108 தாளங்களில் சரபலீலை 34 ஆவது தாளம்.

## கூ. அரங்கம்

மாத்திரை ச. 16 எண்கள்

உறுப்பு : O O O O O O O O

எட்டுத் திருதம்

இத்தாளத்தின் அங்கங்களும் திருதமாகவே இருப்பதாலும் 16 எண்களானமையாலும் 8 மண்டிலம் நிகழ 32 மாத்திரைக்கு உரிய சதிமுறை அடங்கும்.

---

108 தாளங்களில் அரங்கம் 14 ஆவது தாளம்.

## எ. உத்தீக்கணம்

மாத்திரை ௪. 16 எண்கள்.

உறுப்பு : | | 8

லகு லகு குரு

இத்தாளமும் 8 மண்டிலம் நிகழ 32 மாத்திரைக்கு உரிய சதிமுறை அடங்கும்.

இந்நூலில் நந்தனத்திற்கும் மதிக்குமிடையே உத்தீக்கணம் என்ற இத்தாளம் குறிப்பிடப்பட்டுளது. இத்தாளத்தினை பரத சங்கிரகம் 59 ஆவது தாளமாகக் குறித்துளது. தாளசமுத்திரம் என்ற நூலில் 60ஆவது தாளமாக கொள்ளப்பட்டுளது. உத்யட்சணம், உதீட்சணம், உத்வீட்சணம் என்றெல்லாம் இதன் பெயர் கூறலும் வழக்கு. பரியாயப் பெயர்களாகவும் கொள்ளலாம்.

## அ. தீபகம்

மாத்திரை எ. 28 எண்கள்

உறுப்பு : O O | | 8 8

இரண்டு திருதம் இரண்டு லகு இரண்டு குரு

இத்தாளம் நான்கு மண்டிலம் நிகழ்ந்து நான்கு மாத்திரைக்குத் தீர்வு கொண்டு முடியும். அவ்வாறு முடியவே 32 மாத்திரை நிறைவு எய்தும்.

---

108 தாளங்களில் 65 ஆவது தாளம் தீபகம்.

# 2. அணுத்தாண்டவம்

பக்கம் 22

24 மாத்திரையளவில் இத்தாண்டவத்திற்குச் சதி முறை கூறப்படுகிறது. இச்சதி முறையை 7 தாளங்களில் பயன்படுத்துவது வழக்கு போலும். அத்தாளங்கள் வருமாறு.

## க. காருகி, காருதி

இத்தாளம் வீரதாளம் எனவும் கூறப்படும். கீர்த்தி என்பதும் இத்தாளத்தின் பெயராகும் எனத் தெரிகிறது.

மாத்திரை ௰உ. 48 எண்கள்.

உறுப்பு: 

லகு குரு புலுதம் குரு லகு புலுதம்

இத்தாளம் இரண்டு மண்டிலம் நிகழ, 24 மாத்திரைச் சதிமுறை அடங்கும்.

---

108 தாளங்களில் காருகி, கீர்த்தி இருவேறு தாளங்கள் எனவும் படும். இங்கு கூறும் காருகியாகிய சீர்த்தி 43 ஆவது தாளம்.

## உ. தற்பணம்

மாத்திரை ௩. 12 எண்கள்

உறுப்பு: 

திருதம் திருதம் குரு

இத்தாளம் எட்டு மண்டிலம் நிகழ 24 மாத்திரைக்கு உரிய சதிமுறை அடங்கும்.

---

108 தாளங்களில் தற்பணம் 7 ஆவது தாளம்.

## ௩. கிரீடை

மாத்திரை $1\frac{1}{4}$. 5 எண்கள்

உறுப்பு : O O ◡

திருதம் திருதம் அனுத்திருதம்

இத்தாளம் ஒரு மாத்திரை முன்கூட்டி எடுத்துப் பின் 20 மண்டிலம் நிகழ சதிமுறை அடங்கும்.

---

108 தாளங்களில் கிரீடை 53 ஆவது தாளம்.

## ௪. குடுக்கம்

மாத்திரை ௬. 24 எண்கள்

உறுப்பு : | | 8 O O O O

லகு லகு குரு நான்கு திருதம்

இத்தாளம் நான்கு மண்டிலம் நிகழ 24 மாத்திரைக்கு உரிய சதிமுறை அடங்கும்.

---

108 தாளங்களில் குடுக்கம் 51 ஆவது தாளம்.

## ௫. குந்தம்

மாத்திரை ௬. 24 எண்கள்.

உறுப்பு : | | | | 8

நான்கு லகு குரு

இத்தாளமும் நான்கு மண்டிலம் நிகழ சதிமுறை அடங்கும்.

---

108 தாளங்களில் குந்தம் 69 ஆவது தாளம்.

## ௬. இலகுசேகரம்

மாத்திரை $1\frac{1}{4}$ 5 எண்கள்.

உறுப்பு : | ◡

லகு அனுத்திருதம்

இத்தாளமும் கிரீடை தாளம் போன்று ஒரு மாத்திரை முன்கூட்டி எடுத்துப் பின் இருபது மண்டிலம் நிகழ சதி முறை அடங்கும்.

---

108 தாளங்களில் லகுசேகரம் 80 ஆவது தாளம்.

## ௭. முகுந்தம்

மாத்திரை 5 20 எண்கள்

உறுப்பு : | O O | 8

லகு இரண்டு திருதம் லகு குரு

இத்தாளமும் ஒரு மாத்திரை முன்கூட்டியெடுத்து ஐந்து மண்டிலம் நிகழ சதிமுறை அடங்கும்.

---

108 தாளங்களில் முகுந்தம் 70 ஆவது தாளம்.

---

# 3. ப்ரகாசம் (ஒளித்தாண்டவம்)

பக்கம் 23

இத்தாண்டவத்திற்குச் சதிமுறை 20 மாத்திரை கூறப்படுகிறது. இச் சதிமுறையை ஆறு தாளங்களில் பயன் படுத்துவது வழக்கு எனத் தெரியவருகிறது.

அவை, வருமாறு :

## க. அரங்காபரணம்

மாத்திரை 9 36 எண்கள்

உறுப்பு : | |

இரண்டு குரு இரண்டு லகு புலுதம்

இத்தாளம் இரண்டு மண்டிலம் நிகழ்ந்து இரண்டு மாத்திரைத் தீர்வுடன் 20 மாத்திரை சதிமுறை அடங்கும்.

---

108 தாளங்களில் அரங்காபரணம் 35ஆவது தாளம்.

## உ. இரதி தாளம்

மாத்திரை 3 12 எண்கள்

உறுப்பு : |

லகு குரு

இத்தாளம் ஒரு மாத்திரை முன்கூட்டியெடுத்து ஏழு மண்டிலம் நிகழச் சதிமுறை அடங்கும்.

---

108 தாளங்களில் இரதி 91 ஆவது தாளம்.

## ங. துதியங்கம் (துதியகம்)

மாத்திரை 2 8 எண்கள்

உறுப்பு : | O O

லகு இரண்டு திருதம்

இத்தாளம் 35 தாளமுறையில் சதுரச்சரத்திருபுடை எனப்படும். தற்காலம் ஆதிதாளம் என்பது இத்தாளமே.

இத்தாளம் பத்து மண்டிலம் நிகழ, 20 மாத்திரைச் சதிமுறை அடங்கும்.

---

108 தாளங்களில் துதியகம் 41 ஆவது தாளம்.

## ௪. துரங்கம் (துரங்கலீலை)

மாத்திரை 2     8 எண்கள்

உறுப்பு :   O   O   |

இரண்டு திருதம்   லகு

இத்தாளம் முன்னைய துதியகத்தின் முதல் திருத முதலாக எடுப்பதாகும். இத்தாளமும் பத்து மண்டிலம் நிகழவே சதிமுறையடங்கும். அங்கப் பிரத்தார முறையில் முதல் திருதப் பிரத்தாரம்.

---

108 தாளங்களில் துரங்கம் 36 ஆவது தாளம்.

## ௫. நிச்சாருகம்

மாத்திரை $2\frac{1}{4}$     9 எண்கள்

உறுப்பு :   |   |   ◡

லகு   லகு   அனுத்திருதம்

இத்தாளம் கால்மாத்திரை முன்கூட்டியெடுக்க ஒன்பது மண்டிலம் நிகழச் சதிமுறை அடங்கும்.

---

108 தாளங்களில் நிச்சாருகம் 52 ஆவது தாளம்.

## ௬. அபங்கம்

மாத்திரை 4.     16 எண்கள்.

உறுப்பு ;   |   

லகு   புலுதம்

இத்தாளம் ஐந்து மண்டிலம் நிகழச் சதிமுறை அடங்கும்.

---

108 தாளங்களில் அபங்கம் 78 ஆவது தாளம்,

# 4. பீடதாண்டவம்

**பக்கம் 24**

இருபத்தெட்டு மாத்திரைக்கு, இத்தாண்டவச் சதிமுறை கூறப்பட்டுளது. இச்சதிமுறை எட்டுத் தாளங்களில் பயன்படுத்தப் பெறுவது வழக்கு போலும். அத்தாளங்கள் வருமாறு,

## க. சச்சபுடம்

மாத்திரை 8 32 எண்கள்

உறுப்பு : 

குரு குரு லகு புலுதம்

108 தாளங்களில் இத்தாளமே முதற்றுளம். மூன்று மண்டிலம் நிகழ 24 மாத்திரையாகும். எஞ்சிய நான்கு மாத்திரைக்குத்தீர்வுடன் இத்தாளச் சதிமுறை அடங்கும்.

## உ. செம்படை

செஞ்சேனை : இத்தாளம் 108 தாளங்களில் இல்லாதது.

மாத்திரை $3\frac{1}{2}$ எண்கள் 14

உறுப்பு : ◡ O | | O ◡

அனுத்திருதம் திருதம் லகு லகு திருதம் அனுத்திருதம்

இத்தாளம் எட்டு மண்டிலம் நிகழ 28 மாத்திரை தாளச் சதிமுறை அடங்கும். செம்பட்டை எனவும் கூறப்படும்.

---

"செம்படை தன்னில் சிறப்புட னுரைக்கிற்
சொம்புட னம்பாய்த் தொகுத்துவைத் திடலே
கொம்புடன் சுழியும் கோலது ஒன்றுடன்
இன்புட மாத்திரை யிரண்டெனு வியம்புவர்"

இத்தாளம் மங்களா தாளமெனவும் கூறப்படும்.

உறுப்பு : O O | மாத்திரை 2 8 எண்கள்

இரு திருதம் லகு

துரங்கலீலைக்கும் இதே உறுப்புகள் உள. 14 மண்டிலம் நிகழும்.

## ௩. இடையொத்து

இத்தாளமும் 108 தாள வகைகளில் இல்லை ஆயினும் திவ்யப்ரபந்தப் பண் முறையில் தாளவொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆங்கு இடையொத்து எனும் தாளப் பெயர்ச் சொற்கள் காணப்பெறுகின்றன.

மாத்திரை $1\frac{3}{4}$ 7 எண்கள்

உறுப்பு : | O ◡

லகு திருதம் அனுத்திருதம்

இத்தாளம் 16 மண்டிலம் நிகழ 28 மாத்திரைச் சதிமுறை அடங்கும்.

## ௪. நான்முகன்

இத்தாளம் சதுர்முகன் எனப்படும். பிரமதாளம் எனவும்படும்.

மாத்திரை 7. 28 எண்கள்.

உறுப்பு :



லகு குரு லகு புலுதம்

நான்கு மண்டிலம் நிகழச் சதிமுறை அடங்கும்.

---

சதுர்முகன் 108 தாளங்களில் 84 ஆவது தாளம்.

---

நாலடிச் செம்படை எனுந் தாளம் ஒன்றும் உளது.

"நாலடிச் செம்படை யாய்புரர் தனுவுங்
கோலொரு மூன்றிரு கொம்பிரு ரண்டோர்கணை
சீலம ிருகிளர் சிலையது ஒன்றுடன்
ஏலமர் பதிமூன் றரைமாத் திரையே"

மாத்திரை $13\frac{1}{2}$ 54 எண்கள்



மூன்று குரு மூன்று லகு இரு திருதம் லகு இரு துடி குரு

## ரு. காரிகை

இத்தாளமும் 108 தாளங்களில் இல்லாதது.

“காரிகை தன்னைக் காசினி மீதிற்
சீருட னன்பாய்ச் சிறப்புட னுரைக்கில்
பாரியில் முச்சுழி பகழியு மொன்றுடன்
சீரியல் மாத்திரை செப்பிடில் ரண்டரையே”.

மாத்திரை $2\frac{1}{2}$     10 எண்கள்

உறுப்பு : O O O |

மூன்று திருதம்    லகு

நாலடிக்காரிகை எனும் தாளமொன்றுளது.

“நாலடிக் காரிகை நாலு வில்லுடன்
காலது நாலுகண் மூன்றொரு கோலுடன்
சாலமுவ் விரதியும் தனுவது ஒன்றுடன்
நாலாம் மாத்திரை பதினேழே கால்.”

மாத்திரை $17\frac{1}{4}$.     69 எண்கள்.



நான்கு குரு    நான்கு லகு    மூன்று திருதம் லகு



மூன்று துடி    குரு

$2\frac{1}{2}$ மாத்திரைக் காரிகை, இரண்டு மாத்திரை முன்கூட்டி எடுத்து 12 மண்டிலம் நிகழச் சதி முறை அடங்கும்.

---

பஞ்சகாரிகை என்ற தாளமும் இருவேறு பாடபேதமாகவுளது.

## ௬. பின்னசதுமுகன்

மாத்திரை 4 16 எண்கள்

உறுப்பு : 

புலுதம் லகு

ஏழு மண்டிலம் நிகழ 28 மாத்திரை, சதிமுறை அடங்கும்.

---

108 தாளங்களில் பின்ன சதுமுகன் 85 ஆவது தாளம்

## ௭. கருணை

இத்தாளம் கருணையதி எனவும் படும்.

மாத்திரை 2 8 எண்கள்

உறுப்பு : O O O O

நான்கு திருதம்

பதினான்கு மண்டிலம் நிகழ 28 மாத்திரை சதிமுறை அடங்கும்.

---

108 தாளங்களில் கருணையதி 92 ஆவது தாளம்

## ௮. அதிகூதி

இத்தாளமும் 108 தாளங்களில் இல்லை.

மாத்திரை 14 56 எண்கள்



லகு திருதம் குரு புலுதம் லகு புலுதம் குரு திருதம் லகு

இரண்டு மண்டிலம் நிகழச் சதிமுறை அடங்கும்.

பக்கம் 25, 26

## 5. புட்பாஞ்சலித்தாண்டவம்

நாற்பத்தெட்டு மாத்திரைக்கு இத்தாண்டவச் சதிமுறை கூறப்பட்டுளது. இதனை ஐந்து தாளங்களில் பயன் படுத்துவது வழக்கு போலும். அத்தாளங்கள் வருமாறு,

### க. பார்ப்பதிலோசனம்

பார்வதிலோசனம், இத்தாளத்திற்குரிய

மாத்திரை 16 64 எண்கள்

| உறுப்பு : | O | O | \| | \| | O | O | 8 | 8 |
|---|---|---|---|---|---|---|---|---|
| | திருதம் | திருதம் | லகு | லகு | திருதம் | திருதம் | குரு | குரு |

| \| | \| | \| | \| | 8 | \| | \| |
|---|---|---|---|---|---|---|
| | நான்கு லகு | | | குரு | இரண்கு லகு | |

இத்தாளம் மூன்று மண்டிலம் நிகழ 48 மாத்திரை சதிமுறை அடங்கும்.

---

108 தாளங்களில் பார்ப்பதிலோசனம் 98 ஆவது தாளம்

### உ. கோகுலம்

இத்தாளம், கோகிலம் எனவும் திரிந்து கோகிலப் பிரியம் எனவும் வழங்கியது போலும். கோகுலப்பிரியம் எனவும் இருத்தல் கூடும்.

மாத்திரை 6 24 எண்கள்

| உறுப்பு : | 8 | \| | ஊ |
|---|---|---|---|
| | குரு | லகு | புலுதம் |

இத்தாளம் எட்டு மண்டிலம் நிகழ 48 மாத்திரைச் சதிமுறை அடங்கும்.

---

108 தாளங்களில் கோகுலம் (கோகிலம்) 55 ஆவது தாளம்.

## ௩. கண்டகங்காளம்

மாத்திரை 5 20 எண்கள்

| உறுப்பு : | O | O | 8 | 8 |
|---|---|---|---|---|
| | இரண்டு திருதம் | | குரு | குரு |

இத்தாளம் ஒன்பது மண்டிலம் நிகழ்ந்து மூன்று மாத்திரைத் தீர்வுடன் சதிமுறை அடங்கும்.

108 தாளங்களில் கண்டகங்காளம் 73 ஆவது தாளம்.

## ௪. இராசசூடாமணி

மாத்திரை 8 32 எண்கள்

| O | O | \| | \| | \| | O | O | \| | 8 |
|---|---|---|---|---|---|---|---|---|
| இரண்டு திருதம் | | மூன்று லகு | | | இரண்டு திருதம் | | லகு | குரு |

ஆறு மண்டிலம் இத்தாளம் நிகழ 48 மாத்திரைச் சதிமுறை அடங்கும்.

108 தாளங்களில் இராசசூடாமணி 22 ஆவது தாளம்.

## ௫. மாத்தாண்டத்தாளம்

108 தாளங்களில் இத்தாளம் இல்லை.

மாத்திரை 12 48 எண்கள்

| \| | 8 | O | O | 8̆ | \| | 8 | O | O | \| |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| லகு | குரு | இரு திருதம் | | புலுதம் | லகு | குரு | இரு திருதம் | | லகு |

இத்தாளம் நான்கு மண்டிலம் நிகழ 48 மாத்திரைச் சதிமுறை அடங்கும்.

108 தாளங்களில் இல்லாதனவற்றை அன்னிய தாளம் எனக் கூறுவதும் வழக்கு.

பக்கம் 28

# 6. புயங்கத்தாண்டவம்

இருபத்தியெட்டு மாத்திரைக்கு இத்தாண்டவச் சதிமுறை கூறப்பட்டுளது. நான்கு தாளங்களில் இச் சதிமுறையைப் பயன்படுத்துவது வழக்கு போலும். அத்தாளங்கள் வருமாறு:-

## க. சமதாளம்

இத்தாளம் சத்ததாளம் எனவும், செய்யுள் எதுகை நோக்கி மாசில் சமம் எனவும் கூறப்படும்,

மாத்திரை $3\frac{1}{4}$ 13 எண்கள்

உறுப்பு: | | O O ◡

இரண்டு லகு இரண்டு துருதம் அனுத்திருதம்

எட்டு மண்டிலம் இத்தாளம் 26 மாத்திரை முடிந்து இரண்டு மாத்திரைத் தீர்வுடன் இத்தாளச் சதிமுறை அடங்கும்.

108 தாளங்களில் சமதாளம் 58 ஆவது தாளம்.

## உ. சிங்கநாதன்

இத்தாளம் சிங்கநாதம் எனவும் படும்.

மாத்திரை 8 32 எண்கள்

உறுப்பு: 

லகு குரு குரு லகு குரு

மூன்று மண்டிலம் இத்தாளம் நிகழ்ந்து நான்கு மாத்திரைத் தீர்வுடன் தாளச்சதிமுறை அடங்கும்.

108 தாளங்களில் சிங்கநாதன் 32 ஆவது தாளம்.

(சிம்மநந்தன் வேறு)

## உ. இடங்கி

டெங்கி தாளம் எனவும், மதியிடங்கி எனவும் இத்தாளம் கூறப்பட்டுள்ளது. மதி எனவும் வாளா கூறப்படுவதும் அறியலாம். உதியத்தாளம் எனவும் கூறப்படும்.

மாத்திரை 5      20 எண்கள்

உறுப்பு :  O O 

குரு இரண்டு திருதம் குரு

இடங்கி தாளம் இருசிலை நடு கோல்.

அதாவது  |  எனவும் பாடபேதம்.

குரு லகு குரு

உளவாயினும் மாத்திரை ஐந்தே.

இத்தாளம், ஐந்து மண்டிலம் நிகழ்ந்து மூன்று மாத்திரைத் தீர்வுடன் சதிமுறை அடங்கும். மதி தாளத்தின் மற்றொரு பெயரே இடங்கி.

---

108 தாளங்களில் இடங்கி 60 ஆவது தாளம்.

## ச. துக தாளம்

இத்தாளம் துகம் எனவும் படும். (துகம், துவம், திருவம்)

> "துகத்தினில் தாளந் தன்னில் சொல்லிடில்
> சகதா ளத்தில் அன்புடன் திறமா கவே
> மிகுத்த வாளிபோர் வில்லது ஒன்றுடன்
> பகுத்த மாத்திரை மூன்றெனப் பகருவார்"

108 தாளங்களில் இல்லாதது.

மாத்திரை 3 12 எண்கள்

உறுப்பு : 

லகு குரு

இறுதி தாளத்திற்கும் இவ்வுறுப்பே உளது. ஒன்பது மண்டிலம் நிகழ்ந்து ஒரு மாத்திரைத் தீர்வுடன் சதிமுறை அடங்கும்.

---

'துகமது லகுவும் தோன்றிய குருவும்
முகமது மாத்திரை மூன்றள வாமிது'

---

பக்கம் 27

## 7. தேசித்தாண்டவம்

இத்தாண்டவச் சதிமுறையும் இருபத்தியெட்டு மாத்திரைக்கே கூறப்பெற்றுளது. இச்சதிமுறை ஐந்து தாளங்களில் பயன்படுத்துவது வழக்கு போலும். அத் தாளங்கள் வருமாறு, —

### க. கசலீலை (கஜலீலை)

மாத்திரை $4\frac{1}{4}$ 17 எண்கள்

உறுப்பு : 

குரு லகு லகு அனுத்திருதம்

இத்தாளம் ஆறு மண்டிலம் நிகழ்ந்து இரண்டரை மாத்திரைத் தீர்வுடன் சதிமுறை அடங்கும்,

---

108 தாளங்களில் கசலீலை 17ஆவது தாளம்.

## ௨. திரிபின்னம்

மாத்திரை 6.  24 எண்கள்

உறுப்பு:  |  8  ஜ

லகு  குரு  புலுதம்

நான்கு மண்டிலம் நிகழ்ந்து நான்கு மாத்திரைத் தீர்வுடன் சதிமுறை அடங்கும்.

108 தாளங்களில் திரிபின்னம் 18 ஆவது தாளம்.

## ௩. நாந்தி

மாத்திரை 9  36 எண்கள்

உறுப்பு:  | |  O O  | |  8 8

இரு லகு  இரு திருதம்  இரு லகு  இருகுரு

இத்தாளம் மூன்று மண்டிலம் நிகழ்ந்து ஒரு மாத்திரைத் தீர்வுடன் சதிமுறை அடங்கும்.

108 தாளங்களில் நாந்தி 68 ஆவது தாளம்.

## ௪. தோம்புளி (டோம்புளி)

இத்தாளம் அன்னதோம்புளி எனவும் கூறப்பெறும்.

மாத்திரை $3\frac{1}{4}$  13 எண்கள்

உறுப்பு;  | | |  ◡

மூன்று லகு  அனுத்திருதம்

இத்தாளம் எட்டு மண்டிலம் நிகழ்ந்து இரண்டு மாத்திரைத் தீர்வுடன் சதிமுறை அடங்கும்.

108 தாளங்களில் தோம்புளி 77 ஆவது தாளம்.

---

தோம்புளித்தாளம், டோம்பலி எனவும் செகமுகதாளம் எனவும், ஜோம்படத்தாளம் எனவும் வழங்குமென்பர்.

### ரு. மகரந்தம்

மாத்திரை 6 24 எண்கள்

உறுப்பு; O O | | |

இரு துருதம் மூன்று லகு குரு

இத்தாளம் நான்கு மண்டிலம் நிகழ்ந்து நான்கு மாத்திரைத் தீர்வுடன் சதிமுறை அடங்கும்.

---

108 தாளங்களில் மகரந்தம் 42ஆவது தாளம்.

---

பக்கம் 29

# 8. தேசியொத்துத் தாண்டவம்

இத்தாண்டவம் முப்பத்திரண்டு மாத்திரைச் சதிமுறையை உடையது. இவற்றை ஐந்து தாளங்களில் பயன்படுத்துவது வழக்கு போலும். அத்தாளங்கள் வருமாறு:

### க. செகச்சம்பை

மாத்திரை $3\frac{1}{4}$ 13 எண்கள்

உறுப்பு: | | ◡

குரு இரண்டு துருதம் அனுத்திருதம்

இத்தாளம் அரை மாத்திரை முன்கூட்டி எடுத்துப் பத்து மண்டிலம் நிகழச் சதிமுறை அடங்கும்.

---

108 தாளங்களில் சகச்சம்பை 82ஆவது தாளம்.

## ௨. அன்னநாதம்

மாத்திரை 8 32 எண்கள்

உறுப்பு: | ஐ O O ஐ

லகு புலுதம் இரண்டு திருதம் புலுதம்

இத்தாளம் நான்கு மண்டிலம் நிகழச் சதிமுறையடங்கும்.

---

108 தாளங்களில் அன்னநாதம் 31 ஆவது தாளம்.

## ௩. சன்னிமாசனீ

இத்தாளம் சன்னி வாசினீ எனவும் கூறப்படும். 108 தாளங்களில் இல்லாதது.

" சன்னி வாசினீ தன்னை இயம்பிடில்
முன்னி லம்புவி மூன்றொரு கோலுடன்
தன்னி லோரிரு சக்கர மிருகணே
அன்னி மாத்திரை அஞ்சரை யாகும்."

மாத்திரை $5\frac{1}{2}$ 22 எண்கள்

உறுப்பு: O O O | O O | |

மூன்று திருதம் லகு இரு திருதம் இரு லகு

ஒரு மாத்திரை முன்னதாகக் கொள்ள ஆறு மண்டிலம் நிகழச் சதிமுறை அடங்கும்.

## ௪. ஏகத்தாளம்

இத்தாளம் எக்கதாளம் எனவும் கூறப்படும்.

மாத்திரை $\frac{1}{2}$ 2 எண்கள்

உறுப்பு: O

திருதம்

அறுபத்தி நான்கு மண்டிலம் நிகழச் சதிமுறையடங்கும்.

---

108 தாளங்களில் எக்கதாளம் 71 ஆவது தாளம்.

### ரு. துருதசேகரம்

மாத்திரை $\frac{3}{4}$ 3 எண்கள்

உறுப்பு: O ◡

திருதம் அனுத்திருதம்

இத்தாளம் நாற்பத்தி இரண்டு மண்டிலம் நிகழ்ந்து அரை மாத்திரைத் தீர்வுடன் சதிமுறை அடங்கும்.

---

108 தாளங்களில் துருதசேகரம் 83ஆவது தாளம்.

---

பக்கம் 30

## 9. நீதித் தாண்டவம்

முப்பத்திரண்டு மாத்திரைக்கே இத்தாண்டவச் சதிமுறையும் கூறப்பட்டுள்ளது. ஆறு தாளங்களில இச் சதிமுறை பயன்படுத்தப்பெறும்போலும். அத்தாளங்கள் வருமாறு,

### க. இரச்சுகம்

108 தாளங்களில் இல்லாதது.

மாத்திரை 4 16 எண்கள்

உறுப்பு: |  |

லகு குரு லகு

இத்தாளம் எட்டு மண்டிலம் நிகழ 32 மாத்திரைச் சதிமுறையடங்கும்,

## ௨. இலக்குமீசன்

மாத்திரை $6\frac{1}{4}$ 25 எண்கள்

உறுப்பு : 

இரு துருதம் துடி இரு லகு புலுதம்

இத்தாளம் ஐந்து மண்டிலம் நிகழ்ந்து முக்கால் மாத்திரைத் தீர்வுடன் சதிமுறை அடங்கும்.

---

108 தாளங்களில் இலக்குமீசன் 106ஆவது தாளம்.

## ௩. பிரகாசமட்டம்

மாத்திரை 7 28 எண்கள்

உறுப்பு : 

மூன்று லகு குரு இரண்டு லகு

இத்தாளம் நான்கு மண்டிலம் நிகழ்ந்து நான்கு மாத்திரைத் தீர்வுடன் சதிமுறை அடங்கும்.

---

108 தாளங்களில் பிரகாசமட்டம் 49ஆவது தாளம்.

## ௪. அரங்கப்ரதீபகம்

மாத்திரை 10 40 எண்கள்

உறுப்பு : 

இரண்டு குரு லகு குரு புலுதம்

இத்தாளம் மூன்று மண்டிலம் நிகழ்ந்து இரண்டு மாத்திரைத் தீர்வுடன் சதிமுறை அடங்கும்.

---

108 தாளங்களில் அரங்கப்ரதீபகம் 30ஆவது தாளம்.

## ௫. விடமகங்காளம்

இத்தாளம் விட்டிமகங்காளம் எனவும் கூறப்படும்.

மாத்திரை 5 20 எண்கள்

உறுப்பு : | 8 8

லகு இரண்டு குரு

ஆறு மண்டிலம் நிகழ்ந்து இரண்டு மாத்திரைத் தீர்வுடன் சதிமுறை அடங்கும்.

---

108 தாளங்களில் விடமகங்காளம் 75ஆவது தாளம்.

## ௬. பூரணகங்காளம்

மாத்திரை 5 20 எண்கள்

உறுப்பு : O O O O 8 |

நான்கு திருதம் குரு லகு

இத்தாளம், ஆறு மண்டிலம் நிகழ்ந்து இரண்டு மாத்திரைத் தீர்வுடன் சதிமுறை அடங்கும்.

---

108 தாளங்களில் பூரணகங்காளம் 72ஆவது தாளம்.

---

பக்கம் 31

# 10. நிழற்றுண்டவம்

இருபத்திநான்கு மாத்திரைக்கு இத்தாண்டவச் சதிமுறை கூறப்பட்டுள்ளது. இச்சதிமுறை மூன்று தாளங்களில் பயன்படுத்துவது வழக்கு போலும். அத் தாளங்கள் வருமாறு.

## ௧. வீரவிக்ரமம்

மாத்திரை 5 20 எண்கள்

உறுப்பு : | | O O 8

இரு லகு இரு திருதம் குரு

இத்தாளம் நான்கு மண்டிலம் நிகழ்ந்து நான்கு மாத்திரைத் தீர்வுடன் சதிமுறை அடங்கும்.

---

108 தாளங்களில் வீரவிக்ரமம் 19ஆவது தாளம்.

## ௨. வனமாலிகை

இத்தாளம் வன்னமாலி எனவும் கூறப்படும்.

மாத்திரை 7 28 எண்கள்

உறுப்பு : O O O O | | O O 8

நான்கு திருதம் இரு லகு இரு திருதம் குரு

மூன்று மண்டிலம் இத்தாளம் நிகழ்ந்து மூன்று மாத்திரைத் தீர்வுடன் சதிமுறை அடங்கும்.

---

108 தாளங்களில் வன்னமாலி 24 ஆவது தாளம்.

## ௩. வசந்தம்

இத்தாளம் வசந்ததாளம் எனவும்படும். வயந்தம் எனவும் கூறப்படும்.

மாத்திரை 9 36 எண்கள்

உறுப்பு : | | | 8 8 8

மூன்று லகு மூன்று குரு

இரண்டு மண்டிலம் இத்தாளம் நிகழ்ந்து ஆறு மாத்திரைத் தீர்வுடன் சதிமுறை அடங்கும்.

---

108 தாளங்களில் வசந்தம் 89 ஆவது தாளம்

# 11. வைப்புத்தாண்டவம் பக்கம் 32

பதினாறு மாத்திரைக்கு இத்தாண்டவச் சதிமுறை கூறப்படுகிறது. இச்சதிமுறை நான்கு தாளத்தில் பயன்படுத்துவது வழக்கு போலும், அத்தாளங்கள் வருமாறு.

## க. இராசதாளம்

மாத்திரை 12 48 எண்கள்

உறுப்பு:   O O  | 

குரு புலுதம் இரு திருதம் குரு லகு புலுதம்

இத்தாளம் ஒரு மண்டிலம் நிகழ்ந்து நான்கு மாத்திரைத் தீர்வுடன் சதிமுறை அடங்கும்

108 தாளங்களில் இராசதாளம் 24 ஆவது தாளம்

## உ. மல்லிகாமோதம்

மாத்திரை 4 16 எண்கள்

உறுப்பு: O O O O | |

நான்கு திருதம் இரண்டு லகு

இத்தாளம் நான்கு மண்டிலம் நிகழச் சதிமுறையடங்கும்.

108 தாளங்களில் மல்லிகாமோதகம் 33 ஆவது தாளம்

## ங. இலம்பகம்

108 தாளங்களில் இல்லாதது.

மாத்திரை $5\frac{1}{2}$ 22 எண்கள்

உறுப்பு: | O O  | O

லகு இருதிருதம் குரு லகு திருதம்

இத்தாளம், அரை மாத்திரை முன்னெடுத்து மூன்று மண்டிலம் நிகழச் சதிமுறை அடங்கும்.

### ச. அடதாளம்

இது அடாந்தாளம் எனவும் படும். பிரதிதாளம் எனவும் கூறப்படும்.

மாத்திரை 3 12 எண்கள்

| உறுப்பு: | \| | \| | O | O |
|---|---|---|---|---|
| | லகு | லகு | திருதம் | திருதம் |

இத்தாளம் 35 தாளங்களில் சதுரச்சர அடதாளம் எனக் கூறப்படும். ஐத்து மண்டிலம் நிகழ்ந்து ஒரு மாத்திரைத் தீர்வுடன் சதிமுறை அடங்கும்.

---

108 தாளங்களில் பிரதிதாளம் 40 ஆவது தாளம்

---

பக்கம் 33

## 12. வகுப்புத் தாண்டவம்

நாற்பது மாத்திரைக்கு இத்தாண்டவச் சதிமுறை கூறப்பட்டுள்ளது. இச்சதிமுறை நான்கு தாளங்களில் பயன்படுத்துவது வழக்கு போலும். அத்தாளங்கள் வருமாறு.

### க. விலோகிதம்

மாத்திரை 7 28 எண்கள்

| உறுப்பு: | \| | 8 | O O | [illegible] |
|---|---|---|---|---|
| | லகு | குரு | இருதிருதம் | புலுதம் |

இத்தாளம் ஐந்து மண்டிலம் நிகழ்ந்து ஐந்து மாத்திரைத் தீர்வுடன் சதிமுறையடங்கும்.

---

108 தாளங்களில் விலோகிதம் 103 ஆவது தாளம்

## உ. சீரங்கம்

மாத்திரை 8 32 எண்கள்

உறுப்பு ; | | | 

லகு லகு குரு லகு புலுதம்

இத்தாளம் ஐந்து மண்டிலம் நிகழ, நாற்பது மாத்திரைச் சதிமுறையடங்கும்.

108 தாளங்களில் சீரங்கதாளம் 12 ஆவது தாளம்

## ங. மதனதாளம்

இத்தாளம் மதங்கம் எனவும் கூறப்படும்.

மாத்திரை 3 12 எண்கள்

உறுப்பு : O O

குரு இருதிருதம்

பதின்மூன்று மண்டிலம் இத்தாளம் நிகழ்ந்து ஒரு மாத்திரைத் தீர்வுடன் சதிமுறை அடங்கும்.

108 தாளங்களில் மதனதாளம் 97 ஆவது தாளம்

## ச. திரியச்சரம்

இத்தாளம் திரியச்சிரவன்னம் எனவும் கூறப்படும்.

மாத்திரை 6 24 எண்கள்

உறுப்பு : | O O | |

லகு இரு துருதம் இரு லகு குரு

ஆறு மண்டிலம் இத்தாளம் நிகழ்ந்து நான்கு மாத்திரைத் தீர்வுடன் சதிமுறை அடங்கும்.

108 தாளங்களில் திரியச்சிரம் 28 ஆவது தாளம்

பக்கம் 35, 36

# 13. வாக்கியத் தாண்டவம்

இத்தாண்டவத்திற்குச் சதிமுறை அறுபத்துநான்கு மாத்திரைக்குக் கூறப்பட்டுள்ளது. அச்சதிமுறையை ஆறு தாளங்களில் பயன் படுத்துவது வழக்கு போலும். அத்தாளங்கள் வருமாறு.

## க. சீனந்தனம்

மாத்திரை 7 28 எண்கள்

உறுப்பு :  | | 

குரு இரண்டு லகு புலுதம்

இத்தாளம் சீனந்தன் எனக் கூறப்படும். சிந்தைத் தாளம் எனவும் கூறப்படும்.

இத்தாளம் ஒன்பது மண்டிலம் நிகழ்ந்து ஒரு மாத்திரைத் தீர்வுடன் சதிமுறை அடங்கும்.

---

108 தாளங்களில் சீநந்தனம் 100ஆவது தாளம்.

## உ. பிரிதிதாளம்

இது பிரீதி எனப்படும். பிறிதி தாளம் எனவும் கூறப்படும். பிரதி என்பதும் இத்தாளமே.

மாத்திரை 3 12 எண்கள்

உறுப்பு : | | O O

இரண்டு லகு இரண்டு துருதம்

இத்தாளம் 11 வைப்புத்தாண்டவத்திற்கும் உரியது. இக்காலம் 35 தாளமுறையில் சதுரச்சர அடதாளம் எனவும் கூறப்படும். இருபத்தியொரு மண்டிலம் இத்தாளம் நிகழ்ந்து ஒரு மாத்திரைத் தீர்வுடன் சதிமுறை அடங்கும்.

---

108 தாளங்களில் பிரதி 4)ஆவது தாளம் அடதாளம்.

## ௩. சிங்கனந்தன்

சிம்மநந்தனம் எனக் கூறப்பெறும் இத்தாளத்திற்கு

மாத்திரை 32 128 எண்கள்

உறுப்பு:

8 8 | உ | 8 O O 8 8

இரு குரு லகு புலுதம் லகு குரு இரு துருதம் இரு குரு

| உ | உ 8 | | +

லகு புலுதம் லகு புலுதம் குரு இரு லகு காகபதம்

இத்தாளம் இரண்டு மண்டிலம் (ஆவர்த்தம்) நிகழ 64 மாத்திரைச் சதிமுறை அடங்கும்.

---

108 தாளங்களில் சிங்கனந்தம் 37ஆவது தாளம்.

## ௪. ஆரோகிமட்டம்

மாத்திரை 6 24 எண்கள்

உறுப்பு: | | 8 O O O O

இரு லகு குரு நான்கு திருதம்

இத்தாளம் பத்து மண்டிலம் நிகழ்ந்து நான்கு மாத்திரைத் தீர்வுடன் சதிமுறை அடங்கும்.

---

108 தாளங்களில் ஆரோகிமட்டம் 47ஆவது தாளம்.

## ௫. பரிக்கிரமம்

மாத்திரை 5 20 எண்கள்

உறுப்பு: O O | | 8

இரு திருதம் இரு லகு குரு

இத்தாளம் பன்னிரண்டு மண்டிலம் நிகழ்ந்து நான்கு மாத்திரைத் தீர்வுடன் சதிமுறை அடங்கும்.

---

108 தாளங்களில் பரிக்கிரமம் 15ஆவது தாளம்.

### சூ. சட்பிதாபுத்திரிகம்

இத்தாளம் சட்வீதாபுத்திரம் எனவும் படும். சற்பிதா எனவும் கூறப்படும். (சட்பிதாபுத்திரம்)

மாத்திரை 12          48 எண்கள்

உறுப்பு : 

புலுதம் லகு இரு குரு லகு புலுதம்

ஐந்து மண்டிலம் இத்தாளம் நிகழ்ந்து நான்கு மாத்திரைத் தீர்வுடன் சதிமுறை அடங்கும்.

108 தாளங்களில் சட்பிதாபுத்திரம் 3 ஆவது தாளம்.

பக்கம் 37

## 14. கவுத்துவத்தாண்டவம்

(கவுத்தம்)

மூன்றேகால் மாத்திரைக்கு இத்தாண்டவச் சதிமுறை கூறப்பட்டுள்ளது. மூன்று தாளத்தில் அச்சதிமுறை பயன்படுத்துவது வழக்கு போலும். அத்தாளங்கள் வருமாறு,

### க. முக்கோல்

இத்தாளம் மூன்று கோல், அதாவது மூன்று லகுக்களை உடையது எனப் பொருள்படும். மூன்று லகுவினை உறுப்பாகக் கொண்ட மூன்று மாத்திரை உடைய தாளம் 108 தாளமுறையில் இல்லை,

மாத்திரை 3          12 எண்கள்

உறுப்பு : | | |

மூன்று லகு

இத்தாளம் கால் மாத்திரை முன்கூட்டி எடுத்து ஒரு மண்டிலம் நிகழச் சதிமுறை அடங்கும்.

## உ. ஓரொற்று

"ஓரொத்துடைய ஏகதாளத்திலே, ஓரொற்று வாரம், அவை தாளத்து ஒரு மாத்திரை பெற்றுவரும்" இதனையும் ஏகதாளமென்று கூறுவது வழக்குபோலும். ஒரு மாத்திரையுடைய தாளத்தினை ஆதிதாளம் என்பது 108 தாள வழக்கேயாம்.

மாத்திரை 1 4 எண்கள்

உறுப்பு : |
லகு

இத்தாளமும் கால் மாத்திரை முன்கூட்டி யெடுத்து மூன்று மண்டிலம் நிகழச் சதிமுறை யடங்கும்,

---

108 தாளங்களில் ஆதிதாளம் 6 ஆவது தாளம்.
இதன் பரியாயப் பெயரே ஓரொற்று எனலாம்.

## ங. செம்படை

இத்தாளம் நான்காவது பீட தாண்டவத்திற்கும் உரியது. ஆங்குக் கண்டுகொள்க. பக்கம் 231

---

பக்கம் 38, 39

# 15. துணுக்குத் தாண்டவம்

எழுபத்திரண்டு மாத்திரைக்குச் சதிமுறை இத் தாண்டவத்திற்குக் கூறப்பட்டுள்ளது. முப்பத்தியாறு மாத்திரை முறைகளை இரு மடங்காகக் கொள்ளினும் கொள்ளலாம். ஏழு தாளங்களில் இச்சதிமுறை பயன்படுத்துவது வழக்குபோலும். அத்தாளங்கள் வருமாறு.

## க. சங்கரப்பிரியம்

இத்தாளம் சங்காப்பிரியம் எனவும் படும். 108 தாளத்தில் இல்லாதது. கலப்புவகை. அதாவது சங்கீரண முறைமைக்குரியது. சங்கீரணப்பிரியம் எனவும் கூறப் படும். சங்கீரணம் என்றால் ஒன்பது என்பதே.

மாத்திரை 9 36 எண்கள்

உறுப்பு: 

திருதம் திருதசேகரம் லகு லகு திருதசேகரம்



திருதம் லகு லகுசேகரம் லகுசேகரம் லகு

எட்டு மண்டிலம் இத்தாளம் நிகழச் சதிமுறை அடங்கும்,

## உ. கமலலோசனன்

கமலலோசன் எனவும் கூறப்படும். 108 தாளங்களில் இல்லாதது.

மாத்திரை 8 32 எண்கள்

உறுப்பு: 

மூன்று லகு குரு லகு குரு

ஒன்பது மண்டிலம் நிகழச் சதிமுறை அடங்கும்.

## ங. நேர்த்தமட்டம்

இத்தாளம் நேத்திர மட்டம் எனவும் அதாவது கண்மட்டம் எனவும் கூறப்படும். நேத்திரமட்டியம் ஏனவும் வழங்கும்.

மாத்திரை 12 48 எண்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| உறுப்பு : | β | \| | \| | β | β | + |
| | குரு | இரு லகு | | இரு குரு | | காகபதம் |

6 மண்டிலம் இத்தாளம் நிகழச் சதிமுறை அடங்கும்.

---

108 தாளங்களில் நேத்திரமட்டம் (பஞ்சமரபு) 48ஆவது தாளம்,

## ௪. கண்ணன்

இத்தாளம் 108 தாளங்களில் இல்லை.

மாத்திரை $4\frac{1}{2}$ 18 எண்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உறுப்பு : | \| | \| | O | \| | \| |
| | லகு | லகு | திருதம் | லகு | லகு |

16 மண்டிலம் இத்தாளம் நிகழச் சதிமுறை அடங்கும்.

## ௫. தெய்வசிகாமணி

இத்தாளமும் 108 தாளங்களில் இல்லை.

மாத்திரை $2\frac{1}{4}$ 9 எண்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| உறுப்பு : | \| | ◡ | O | O |
| | லகு | அனுத்திருதம் | திருதம் | திருதம் |

32 மண்டிலம் இத்தாளம் நிகழச் சதிமுறை அடங்கும்.

## ௬. படிமட்டம்

இத்தாளம் பிரதிமட்டம் எனப்படும். பிறிதிமட்டம் எனவும் கூறப்படும்.

மாத்திரை 8 32 எண்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| உறுப்பு : | \| | β | \| | β | \| | \| |
| | லகு | குரு | லகு | குரு | லகு | லகு |

9 மண்டிலம் இத்தாளம் நிகழச் சதிமுறை அடங்கும்.

---

108 தாளங்களில் பிரதிமட்டம் 87ஆவது தாளம்,

## எ. சம்பொற்கோட்டம்

இத்தாளம் சம்பொற்கட்டிதம் எனவும் சம்பொற் கெட்டம் எனவும் சம்பத்வேட்டம் எனவும் கூறப் பெறும்.

மாத்திரை 12 48 எண்கள்

உறுப்பு : 

புலுதம் மூன்று குரு புலுதம்

ஆறு மண்டிலம் இத்தாளம் நிகழச் சதிமுறை அடங்கும்.

---

108 தாளங்களில் சம்பொறகட்டிதம் 4ஆவது தாளம்.

பக்கம் 40

# 16. தண்டபாதம்

இத்தாண்டவத்திற்குச் சதிமுறை இருபத்திநான்கு மாத்திரை கூறப்பட்டுள்ளது. இத்தாண்டவத்திற்குரிய தாளமும் ஒன்றே அத்தாளம் பொதுவாகச் சம்பை எனக் கூறப்படுகிறது. சம்பை சேர்சம்பை எனவும் சகத்சம்பை எனவும் வழங்கும்,

மாத்திரை $3\frac{1}{4}$ 13 எண்கள்

உறுப்பு : 

குரு துருதம் துருதம் அனுத்திருதம்

ஏழு மண்டிலம் இத்தாளம் நிகழ்ந்து $22\frac{3}{4}$ மாத்திரை முடிந்து, எஞ்சிய ஒன்றேகால் மாத்திரை அதாவது ஐந்து எண்கள் ததிகிணதோம் எனத் தீர்வுகொண்டு சதிமுறை அடங்கும்.

---

108 தாளங்களில் சகற்சம்பை 82ஆவது தாளம்,

# அரும்பதப் பொருள்

## அகர நிரல்

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| | **"அ"** | |
| 16, 17 | அகமார்க்கம் — | ஆதியகமார்க்கம் இறைவனாடிய தாண்டவங்கள் பதினாறின் சதி முறைமைகள் |
| 41 | அகமார்க்கப் பொருள் தகு — | தாண்டவத்திற்குரிய இசைப்பாடல்கள் 16 |
| 78, 80 | அக்கேபனம் — | அங்கக் கிரியைகளில் ஒன்று. |
| 77, 78 | அங்கக்கிரியைகள் — | சரிகை முதல் நிகுட்டம் வரை பதினாறு. |
| 49, 50 | அங்கசாரி — | காயத்துடன் எழும் வினைகளுள் ஒன்று. கூத்துக்கெழும் வினைகளுள் ஒன்று. |
| 60 | அங்குலி — | கை விரல்கள் |
| 52 | அஞ்சிதம் — | பாதத்தொழில் ஐந்தனுள் ஒன்று. |
| 72 | அஞ்சலி — | இரட்டைக்கை வகையில் முதற்கை. வணங்கற்கை. |
| 3 | அடதாளம் — | வைப்புத் தாண்டவத்திற்குரிய நான்காவது தாளம் |
| 7 | அணு (அனு) — | பதினாறு தாண்டவங்களில் இரண்டாவது |
| 22 | அணுக்கூத்துக்குச் சதிக்கோவை — | திகு, தெக. டெகு எனத் தொடங்குகிறது. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 8 | அணுக்கூத்திற்குத் தாளங்கள் — | 7<br>க. காருகி உ. தற்பணம்<br>ந. கிரீடை ச. குடுக்கம்<br>ரு. குந்தம் சு. லகுசேகரம்<br>எ. முகுந்தம். |
| 90 | அணைத்தல் — | சிங்களக் கால்களுள் ஒன்று. |
| 16 | அண்டபத்தனம் — | ஆகாயம் |
| 49 | அண்டபேதம் — | கூத்துக்கெழும் வினைகளுள் ஒன்று |
| 9 | அதிருதி — | பீடதாண்டவத்திற்குரிய தாளங்களில் ஒன்று. |
| 48 | அந்தரி — | ஒருவகை ஓசை முழவு வகைகளில் ஒன்று. |
| 135, 139 | அபங்கம் — | பிரகாச தாண்டவத்திற்கு உரிய தாளங்களில் ஒன்று, 108 தாளங்களில் ஒன்று. |
| 57 | அபவேட்டிதம் — | உடலவர்த்தனை நான்கனுள் ஒன்று. |
| 135 | அபிநந்தனம் — | 108 தாளங்களுள் ஒன்று. |
| 57 | அபிநயம் (வினையம்) — | கை, மெய், கண் அசைத்துக் காட்டல். |
| 85 | அப்புதல் — | தேசித் திறக்கால்களுள் ஒன்று. |
| 115, 118 | அரங்க தாளம் — | ஆதித்தாண்டவத்திற்குரிய தாளங்களில் ஒன்று. |
| 121, 122 | அரங்கத்தியோதனம் — | 108 தாளங்களுள் ஒன்று. |
| 12, 124 | அரங்கப்பிரதீபகம் — | 108 தாளங்களில் ஒன்று. நீதித் தாண்டவத்திற்குரிய தாளங்களில் ஒன்று. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 9, 126 | அரங்காபரணம் —<br>(அரங்கபாசம்) | பிரகாசத் தாண்டவத்திற்குரிய 108 தாளங்களில் ஒன்று. |
| 3, 62, 68 | அராளம் — | முத்திரைக் கைகளில் ஒன்று, வளைந்தது பெண்கை வகையில் ஒன்று. |
| 1 | அரிய திருத்தாண்டவம் — | இறைவனாடி தாண்டவங்கள் |
| 77, 78 | அருத்த புராடிதம் — | அங்சக் கிரியையுள் ஒன்று. |
| 58, 59 | அலர்பதுமம் — | ஆண்கை பத்தினுள் ஒன்று. |
| 56, 65 | அலிக்கை — | சர்ப்பசிரம் முதல் கோசம் வரையான ஆறு கை வகை. |
| 3 | அல்லியம் — | பதினொரு வகைக் கூத்தினுள் ஒன்று. திருமால் ஆடியது. |
| 50, 51 | அறுவகை —<br>(மண்டல நிலை) | வைணவம் முதல் பிரத்தியாலீடம் வரை |
| 89 | அளவும் மானமும் — | இசையும், முழவு வாச்சிய சொற்கட்டுக் கால அளவும் இடைநிகழ் மானம்.<br>இடைவெளிக் காலப்ரமாணம். |
| 136 | அனங்கதாளம் — | 108 தாளங்களுள் ஒன்று. |
| 11, 125 | அன்னநாதம் — | 108 தாளங்களுள் ஒன்று.<br>ஒத்து, தேசியொத்துத் தாண்டவத் தாளங்களில் ஒன்று. |
| 62. 64 | அன்னபக்கம் — | பெண் கை வகைகளில் ஒன்று. |
| 85, 89 | அனுக்கல் — | வடுகிற்குரிய கால்களில் ஒன்று. |
| 85, 86 | அனுக்குதல் — | தேசித்திறக்கால்களில் ஒன்று. |
| 115, 120 | அன்னலீலை — | 108 தாளங்களுள் ஒன்று. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| | " ஆ " | |
| 49 | ஆகாசசாரி — (ஆள்சாரி) | கூத்துக்கெழும் வினைகளுள் ஒன்று அந்தரத்தாடும் தேவப் பெண்கள் நாட்டியம் |
| 58 | ஆண்கை — | முட்டிக்கை முதல் மொட்டுக்கை வரை பத்து. |
| 7 | ஆதி — | சிவபெருமான் பதினொறு தாண்டவங்களில் முதல் தாண்டவம். ஆதித்தாண்டவம் அதற்குரிய தாளங்களில் ஒன்று. 108 தாளங்களிலும் ஒன்று. |
| 7, 8 | ஆதிக்கூத்தின் தாளம் — | ௧. ஆதிதாளம்<br>௨. வன்னபின்னம்<br>௩. இலளிதை<br>௪. சட்டம்<br>௫. சரபலீலை<br>௬. அரங்கம்<br>௭. உத்தீக்கணம்<br>௮. தீபகம் என எட்டாம் |
| 21 | ஆதிக்குச் சதிக்கோவை — | கிடதக தெய் எனத் தொடங்குவது |
| 102 | ஆபாவம் — | தாளம் போடும் கைத்தொழில்களுள் ஒன்று. |
| 13, 126, 130 | ஆரோகிமட்டம் — | வாக்கிய தாண்டவத்திற்குரிய நான்காந் தாளம். 108 தாளங்களுள் ஒன்று. |
| 51 | ஆலீடம் — | கூத்திற்குரிய கால் நிற்கும் அறுவகை மண்டல நிலைகளுள் ஒன்று. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| | **" இ "** | |
| 105 | இடக்கை — | பிரமன் தாளந் தாக்குங் கை. இடது கை. ஓர் தோற்கருவி. |
| 10 | இடெங்கி (டெங்கி) — | புயங்கத் தாண்டவத்திற்கு உரிய தாளங்களில் ஒன்று. 108 தாளங்களில் ஒன்று. |
| 90 | இடை நெரித்தல் — | காற்றொழில் மரபினுள் ஒன்று. |
| 9 | இடையொத்து — | பீடதாண்டவத்திற்கு உரிய தாளங்களில் ஒன்று. |
| 86 | இட்டுப்புகுதல் — | காற்றொழிலில் ஒன்று. |
| 11 | இரச்சுகம் — | நீதித் தாண்டவத்திற்குரிய தாளங்களில் ஒன்று. |
| 89 | இரட்டுதல் — | வடுகிற் கால்களில் ஒன்று. |
| 72 | இரட்டைக்கை — | இருகை முத்திரை அஞ்சலி முதல் புத்திரிகம் வரை பதினைந்து. |
| 115 | இரதலீலை — | 108 தாளங்களில் ஒன்று. |
| 9 | இரதிதாளம் — | 108 தாளங்களில் ஒன்று. பிரகாச தாண்டவத்திற்குரிய தாளங்களில் ஒன்று. |
| 12 | இராசதாளம் — | வைப்புத்தாண்டவத்திற்குரிய தாளங்களில் ஒன்று. 108 தாளங்களில் ஒன்று. |
| 10 | இராசசூடாமணி — | புட்பாஞ்சலித் தாண்டவத்திற்கு உரிய தாளங்களில் ஒன்று. 108 தாளங்களில் ஒன்று. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 140 | இராசநாராயணம் — | 108 தாளங்களில் ஒன்று. |
| 145 | இராசவகுத்தனம் — | 108 தாளங்களில் ஒன்று. |
| 128 | இராசவித்தியாதாளம் — | 108 தாளங்களில் ஒன்று. |
| 8 | இலகுசேகரம் — | அணுத்தாண்டவத்திற்கு உரிய தாளங்களில் ஒன்று. |
| 11 | இலக்குமீசன் — | நீதித்தாண்டவத்திற்குரிய தாளங்களில் ஒன்று. |
| 67, 70 | இலதை — | பொதுக் கை வகைகளில் ஒன்று. |
| 13 | இலம்பகம் — | வைப்புத்தாண்டவத்திற்கு உரிய தாளங்களில் ஒன்று. |
| 145 | இலயதாளம் — | 108 தாளங்களில் ஒன்று. |
| 99 | இலவம் — | தாள மாத்திரை அறியும் முறைமைகளில் ஒன்று. |
| 7 | இலளிதை — | 108 தாளங்களில் ஒன்று. ஆதித்தாண்டவத்திற்குரிய தாளங்களில் ஒன்று. |
| 49, 50 | இறந்தகாலம் — | தாளத்தை விதானமாக்கி இறக்கிவிட்டுப் பின்பு கூட்டி முடிப்பது. சென்றகாலம். |
| 140 | இறுதியம் — | 108 தாளங்களில் ஒன்று. |

"உ"

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 78, 80 | உக்கேபனம் — | அங்கக்கிரியைகளில் ஒன்று. |
| 16 | உடற்பிரிவு — | இறைவன் ஆலங்காட்டில் காளியுடனாடும் சுத்தத் திறக்கூத்து நிலையில் ஒன்று. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 86, 87 | உடற்புரி — | காற்கிரியைகளில் ஒன்று. |
| 87 | உடைத்தல் — | காற்கிரியைகளில் ஒன்று. |
| 8 | உத்தீக்கணம் — | ஆதித்தாண்டவத்திற்குரிய தாளங்களில் ஒன்று. |
| 72 | உத்துங்கம் — | இரட்டைக்கைகளில் ஒன்று. |
| 55 | உபயம் (இரண்டும்) — | சிங்களக் கூத்திற்குரிய மண்டிலக் காலும், வைகாசக் காலும். |
| 77, 79 | உபவேட்டனம் — | அங்கக்கிரியைகளுள் ஒன்று. |
| 52 | உபவேட்டிதம் — | உடலவர்த்தனை நான்கனுள் ஒன்று. |
| 77 | உல்லோலம் — | அங்கக்கிரியைகளில் ஒன்று. |
| 100 | உறுப்பு — | தாள அங்கங்கள் |
| 52 | உற்கட்டிதம் — | கால்தொழில் ஐந்தனுள் ஒன்று. 108 தாளங்களில் ஒன்று. |
| 83, 85 | உள்ளாளம் — | காற்கிரியைகளில் ஒன்று. |
| 61 | உன்னம் — | பெண்கை எட்டனுள் ஒன்று. |
| 100 | உன்னல் — | துடி, கால் மாத்திரை. |

" ஊ "

| | | |
|---|---|---|
| 85 | ஊர்தல் — | காற்கிரியைமரபினுள் ஒன்று. |
| 78 | ஊர்த்துவகலிகை — | அங்கக்கிரியை மரபில் நான்காவது. அருத்தகலிகை. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| | "எ" | |
| 105 | எச்சிரம் — | தாள விரிவுகளில் ஒன்று. |
| 49, 50 | எதிர்காலம் — | ஆடும் வகை தாளத்திற்கு எதிராக ஆடியபின்பு தாளத்தே முடிப்பது. |
| 87 | எறிதல் — | காற்கிரியைகளில் ஒன்று. |
| | "ஏ" | |
| 11 | ஏகதாளம் — | 108 தாளங்களில் ஒன்று. தேசியொத்துத் தாண்டவத்திற்கு உரிய தாளங்களில் ஒன்று. எக்கதாளம். |
| | "ஒ" | |
| 87, 88 | ஒட்டுதல் — | காற்கிரியைகளில் ஒன்று. |
| 16 | ஒத்த சமநிலை — | சுத்தத் திறக்கூத்து நிலைகளில் ஒன்று. |
| | "ஓ" | |
| 114 | ஓச்சாதாளம் — | ஆதிதாளம் |
| 48 | ஓசைகள் நான்கு— | மலைப்பு, முரிப்பு, துணுக்கு, அந்தரி. |
| 14 | ஓரொற்று — | கவுத்துவத் தாண்டவத்திற்குரிய தாளங்களில் ஒன்று. |
| | "க" | |
| 6 | கடையம் — | அயிராணியால் ஆடப்பட்ட கடைசிக் கூத்து |
| 10 | கண்டகங்காளம்— | புட்பாஞ்சலி தாண்டவத்திற்கு உரிய தாளங்களில் ஒன்று. 108 தாளங்களில் ஒன்று. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 14 | கண்ணன் — | திருமாலின் ஒரு பெயர். துணுக்குத் தாண்டவத்திற்கு உரிய தாளங்களில் ஒன்று, |
| 14 | கமலலோசனன் — | துணுக்குத் தாண்டவத்திற்குரிய தாளங்களில் ஒன்று. |
| 9 | கருணை — | பீடதாண்டவத்திற்குரிய தாளங்களில் ஒன்று. |
| 7 | கவுத்தம் — | இறைவனுடைய பதினாறு தாண்டவங்களில் ஒன்று. |
| 37 | கவுத்தத்திற்குச் சதிக்கோவை — | |
| 14 | கவுத்துவக் கூத்திற்குத் தாளம் - ௩ — | க. முக்கோல் உ. ஒன்றொற்று ௩. செம்படை |

"கா"

| | | |
|---|---|---|
| 9 | காரிகை — | பீடதாண்டவத்திற்கு உரிய தாளங்களில் ஒன்று. |
| 8 | காருகி — | அணுத்தாண்டவத்திற்குரிய தாளங்கள் ஏழினுள் ஒன்று. |

"கி"

| | | |
|---|---|---|
| 8 | கிரீடை — | அணுத்தாண்டவத்திற்குரிய தாளங்களில் ஒன்று. |

"கு"

| | | |
|---|---|---|
| 52 | குஞ்சிப்பு (குஞ்சிதம்) — | பாதத்தொழில் ஐந்தனுள் ஒன்று. |
| 8 | குடுக்கம் — | அணுத்தாண்டவத்திற்குரிய தாளங்களில் ஒன்று. |
| 8 | குந்தம் — | அணுத்தாண்டவத்திற்குரிய தாளங்களில் ஒன்று. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 1 | குரவை — | கூத்து வகைகளில் ஒன்று; எழுவர், எண்மர், ஒன்பதின்மர் கைகோத்தாடுங் கூத்து. |
| 1 | குன்றவில்லி — | சிவபெருமான். |
| | "கூ" | |
| 49 | கூத்துக்கெழும் வினைகள் — | எண்வகை அண்டபேதம் முதல் எதிர்காலம் வரை. |
| 16 | கூப்பு — | ஆலங்காட்டில் காளியுடன் ஆடும் அத்தனுர் சுத்தத்திறக் கூத்தின் நிலைகளில் ஒன்று. |
| | "கெ" | |
| 17 | கெசலீலை — | தேசித்தாண்டவத்திற்குரிய தாளங்களில் ஒன்று. |
| | "கோ" | |
| 10 | கோகுலம் — | புட்பாஞ்சலித் தாண்டவத்திற்கு உரிய தாளங்களில் ஒன்று. |
| 1 | கோலம் — | ஈழம், அராளம், மறம், சித்து, சோனகம் முதலாயின பாடி ஆடப்படும் ஆண் கோலம். |
| | "ச" | |
| 111 | சகணம் — | இரண்டு லகு ஒரு குரு. |
| 111 | சகணத்தெய்வம் — | வாயு (காற்று) |
| 14 | சங்கரப்பிரியம் — | அனுக்கு என்னும் தாண்டவத்திற்கு உரிய தாளங்களில் ஒன்று. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
| --- | --- | --- |
| 9 | சச்சபுடம் — | 108 தாளங்களில் முதற்றாளம். பீடதாண்டவத்திற்குரிய முதற்றாளம். |
| 8 | சட்டம் — | ஆதித்தாண்டவத்திற்கு உரிய தாளங்களில் ஒன்று. |
| 14 | சட்பிதாபுத்திரிகம் — | வாக்கிய தாண்டவத்திற்கு உரிய தாளங்களில் ஒன்று. |
| 10 | சமதாளம் — | புயங்கத்தாண்டவத்திற்கு உரிய முதற்றாலம் |
| 15 | சம்பொற்கோட்டம் — | துணுக்குத் தாண்டவத் தாளங்களில் ஒன்று. |
| 52 | சமம் — | காற்றெழில் ஐந்தனுள் ஒன்று. |
| 55 | சந்தக்கை — | வடுகுக் கூத்திற்குரிய கைகளில் ஒன்று. |
| 8 | சரபலீலை — | ஆதித்தாண்டவத்திற்கு உரிய தாளங்களில் ஒன்று. |
| 11 | சன்னிமாசனை — | தேசியொத்துத் தாண்டவத்திற்கு உரிய தாளங்களில் ஒன்று. |

"சா"

| | | |
| --- | --- | --- |
| 2 | சாந்தி — | கூத்து வகைகளுள் ஒன்று. |

"சி"

| | | |
| --- | --- | --- |
| 53, 2 | சிங்களக்கூத்து — | நடந்தது சிங்களம். நிருத்த வகைகளில் ஒன்று. தாமதம், மென்மைக்கூத்து. |
| 90, 55 | சிங்களத்திற்குரிய கால்கள் 8 — (கை – திரிபதாகை) | மெய் சாய்த்தல் முதல் குவித்தல் வரை. (மண்டிலம் வைகாசம்) |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 10 | சிங்கநாதன் — | புயங்கத்தாண்டவத்திற்குரிய தாளங்களில் ஒன்று. |
| 13 | சிங்கனந்தன் — | வாக்கியத்தாண்டவத்திற்குரிய தாளங்களில் ஒன்று. |
| 5 | சிவனால் ஆடப்பட்ட கூத்து — | பாண்டரங்கம் கொடுகொட்டி பாவம் என்னும் கூத்தும். |
| | "சீ" | |
| 13 | சீரங்கம் — | வகுப்புத் தாண்டவத்திற்குரிய தாளங்களில் ஒன்று. |
| 13 | சீனந்தனம் — | வாக்கிய தாண்டவத்திற்குரிய தாளங்களில் ஒன்று. |
| | "சு" | |
| 16 | சுத்தத்திறம் — | சுத்த நிருத்தம், சமநிலை உடற்பிரிவு, மண்டலம், மடிப்பு, கூப்பு, வாக்கியம். |
| | "சூ" | |
| 111 | சூரியூர் — | ரகண மாத்திரை வாய்பாடு. |
| 55 | சூள் — | மூவகை யாடலும் முற்றிய அதன் பொருளும். |
| | "செ" | |
| 11 | செகச்சம்பை — | (தேசியொத்து) ஒத்துத் தாண்டவத்திற்கு உரிய தாளங்களில் ஒன்று. |
| 110 | செகணம் — | ஒரு லகு, ஒரு குரு, ஒரு லகு, தெய்வம் சூரியன். |
| 110 | செகணப்பயன் — | நோய்க்கிடம், கொடும்பிணி. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 9, 14 | செம்படை — | தாள வகைகளில் ஒன்று.<br>பீட தாண்டவத்திற்கும்,<br>கவுத்துவ தாண்டவத்திற்கும்<br>உரியது. |

"சே"

| | | |
|---|---|---|
| 15 | சேர்சம்பை | ஆதி, திருவாலங்காட்டில்<br>ஆடப்பெற்ற தாண்டவத் தாளம்<br>தெண்டபாதம் என்ற<br>ஊர்த்துவத் தாண்டவத்திற்குரிய<br>ஓரே தாளம். |

'த'

| | | |
|---|---|---|
| 111 | தகணம் — | |
| | மாத்திரை — | இரண்டு குரு, ஒரு லகு; |
| | தெய்வம் — | ஆகாயம் |
| 111 | தகணப்பலன் — | வறுமை |
| 8 | தற்பணம் — | அணுத்தாண்டவத்திற்கு உரிய<br>தாளங்களில் ஒன்று. |

'தா'

| | | |
|---|---|---|
| 2 | தாண்டவம் — | சொக்கதாண்டவம்<br>ஆனந்தத்தாண்டவம்<br>தாளத்தை மட்டுமே சிறப்பு<br>பொருந்தக் கொண்டது. |
| 99 | தாளமாத்திரை — | கணம் முதல் புலுதம் வரை. |
| | உறுப்புக்கள் 9 | காகபதம் சேர்க்கப் பத்து. |

'தி'

| | | |
|---|---|---|
| 55 | திரிபதாகை — | கை வகைகளில் ஒன்று.<br>சிங்களக் கூத்திற்குரிய கை. |
| 11 | திரிபின்னம் — | தேசித்தாண்டவத்திற்கு உரிய<br>தாளங்களில் ஒன்று, |

| பக்க எண்கள் | அருஞ்சொல் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 13 | திரியச்சிரம் — | வகுப்புத் தாண்டவத்திற்கு உரிய தாளங்களில் ஒன்று. |
| 54 | திருமால் — | நான்முகனாலே படைக்கப்பட்ட தாளமாத்திரைகளை அமையச் செய்தவர். |

'தீ'

| | | |
|---|---|---|
| 8 | தீபகம் — | ஆதித்தாண்டவத்திற்குரிய தாளங்களில் ஒன்று. |

'து'

| | | |
|---|---|---|
| 10 | துகதாளம் — | புயங்கத்தாண்டவத்திற்கு உரிய தாளங்களில் ஒன்று. |
| 6 | துடிக்கூத்து — | முருகனால் ஆடப்பட்ட கூத்து. ( சத்த மாதர்களாலும் ஆடப்பட்டது ) |
| 7 | துணுக்கு — | இறைவனுடைய பதினாறு தாண்டவங்களுள் ஒன்று; |
| 9 | துதியங்கம் — | ப்ரகாசத் தாண்டவத்திற்கு உரிய தாளங்களில் ஒன்று. |
| 9 | துரங்கம் — | ,, |
| 113 | துருதம், புலுதம்— | அட்டகணத்துக்கு வாராத தாள உறுப்புக்கள். |
| 11 | துருதசேகரம் — | தேசியொத்துத் தாண்டவத்திற்கு உரிய தாளங்களில் ஒன்று. |

'தெ'

| | | |
|---|---|---|
| 7 | தெண்டபாதம் — (தண்டபாதம்) | இறைவன் ஆடிய பதினாறு தாண்டவங்களுள் ஒன்று. ஊர்த்துவத் தாண்டவம். |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 15 | தெய்வசிகாமணி— | தாளவகைகளுள் ஒன்று. துணுக்குத் தாண்டவத்திற்குரிய தாளங்களில் ஒன்று. |
| | **'தே'** | |
| 2, 53 | தேசி — | நிருத்த வகைகளில் ஒன்று. நின்றது, தேசி, சமக்கூத்து, சாத்துவிகம். இறைவனுடிய தாண்டவங்களில் ஒன்று. |
| 83 | தேசிக்குரிய கால்கள் 24 — | மண்டலம் முதல் உடற்புரி வரை. |
| 49 | தேசிசாரி — | கூத்துக்கெழும் வினைகளுள் ஒன்று. நாகலோகத்தாடும் பெண்களின் நாட்டியம். |
| 85, 86 | தேசித்திறம் — | காற்றெழில் வகைகள் கட்டல் முதல் வாசிப்பு வரை, குந்தல் முதல் உடற்புரி வரை. |
| | **'தோ'** | |
| 11 | தோம்புளி — (உடோம்புளி) | தேசித்தாண்டவத்திற்கு உரிய தாளங்களில் ஒன்று. |
| | **'ந'** | |
| 110 | நகணப்பலன் — | ஆயுள் வளரும் |
| 110 | நகணமாத்திரை— | மூன்றுலகு |
| 110 | நகணத்தெய்வம்— | சுவர்க்கம் |
| 113 | நற்கணம் — | அட்டகணம் வரும் போழ்து, துருதம் புலுதமின்றி லகுவும் குருவுமாக ஒவ்வொரு கணமும் மூன்று வடிவு பெற்று வரும், |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| | **'நா'** | |
| 2 | நாட்டியம் — | (நாடு – இயம்) இயலும் இசையும் தழுவிய நாடக வகை. |
| 11 | நாந்தி — | தேசித்தாண்டவத்திற்கு உரிய தாளங்களில் ஒன்று. |
| 9 | நான்முகன் — | பீட தாண்டவத்திற்குரிய தாளங்களில் ஒன்று. |
| | **'நி'** | |
| 49, 50 | நிகழ்காலம் — | ஆடும்போது தாளத்துடனே மானம் பிழையாதபடி நிகழ்வது. அதாவது தாள இடை நிகழ்காலம் தவறாது அதாவது ஓடாது இழுக்காது நிகழ்வது நிகழ்த்துவது. |
| 9 | நிச்சாருகம் — | பிரகாச தாண்டவத்திற்கு உரிய தாளங்களில் ஒன்று. |
| 2 | நிருத்தம் — | தேசி, வடுகு, சிங்களம் எனும் மூவகைக் கூத்து. |
| 1 | நிருத்தவகை ஏழு — | 1. தாண்டவம்<br>2. நிருத்தம்<br>3. நட்டம் (நாட்டியம்)<br>4. குரவை<br>5. வரி<br>6. கோலம்<br>7. வகை |
| 7 | நிழல் — | இறைவனுடிய பதினாறு தாண்டவங்களில் ஒன்று. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| | **'நீ'** | |
| 7 | நீதி — | இறைவனுடிய பதினறு தாண்டவங்களில் ஒன்று: |
| | **'நே'** | |
| 14 | நேர்த்தமட்டம் — | துணுக்குத்தாண்டவம் ஆடும் தாளங்களில் ஒன்று. |
| | **'ப'** | |
| 109, 112 | பகணப்பலன் — | மதியுடைய நல்ல புகழாகிய கீர்த்தி. |
| 109 | பகணமாத்திரை— | ஒரு குரு, இரண்டு லகு. |
| 109 | பகணத்தெய்வம் - | சந்திரன் |
| 15 | படிமட்டம் — | துணுக்குத் தாண்டவத்திற்குரிய தாளங்களில் ஒன்று. |
| 7 | பதினறு தாண்டவங்கள் — | அகமார்க்கத் தாண்டவங்கள் ஆதி முதல் தண்டபாதம் ஈருக. |
| 54 | பரமேசுவரன் — | தாளமாத்திரைகளைக் கைக் கங்கணமாகக் கொண்டு விதம்விதமாக ஆடின இறைவன். |
| 14 | பரிக்கிரமம் — | வாக்கிய தாண்டவத்திற்கு உரிய தாளங்களில் ஒன்று. |
| 53 | பரிவர்த்திதம் — | உடலவர்த்தனை நான்கனுள் ஒன்று. |
| 53 | பற்று — | வர்த்தனை நான்கையும் செய்து காட்டுமிடத்துக் கையாற் காட்டப்பெறும் செய்கைகளில் ஒன்று. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் கக்கம் |
|---|---|---|
| | **'பா'** | |
| 51 | பாதங்கள் ஐந்து— | சமபாதம்<br>மண்டலபாதம்<br>குஞ்சிதபாதம்<br>அஞ்சிதபாதம்<br>வடிம்புபாதம். |
| 10 | பார்ப்பதிலோசனம் — | புட்பாஞ்சலித் தாண்டவத்திற்கு தாளங்களில் ஒன்று, |
| 5 | பாவைக்கூத்து — | இலக்குமியால், கொல்லிப் பாவை வடிவு கொண்டு ஆடப்பட்ட கூத்து. |
| | **'பி'** | |
| 7 | பிரகாசம் — | இறைவனுடிய ஒளித்தாண்டவம். |
| 12 | பிரகாச மட்டம் — | நிதித்தாண்டவத்திற்குரிய தாளங்களில் ஒன்று. |
| 51 | பிரத்தியாலீடம்— | கூத்திற்குரிய கால்களின் அறுவகை மண்டல நிலைகளுள் ஒன்று. |
| 13 | பிரிதி — | வாக்கியத் தாண்டவத்திற்குரிய உரிய தாளங்களில் ஒன்று. |
| 55 | பிறைக்கை — | தேசிக் கூத்திற்குரிய கை. |
| 9 | பின்னசதுமுகன்— | பீடதாண்டவத்திற்கு உரிய தாளங்களில் ஒன்று. |
| | **'பீ'** | |
| 7 | பீடம் | பதினுறு தாண்டவ வகைகளில் ஆசனத் (இருக்கைத்) தாண்டவம் முயலகனைப் பீடமாகக் கொண்டு ஆடியது. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|

‘ பு ’

| | | |
|---|---|---|
| 49 | புடபேதம் — | கூத்துக்கெழும் வினைகளுள் ஒன்று |
| 49 | புட்பாஞ்சலி — | இரட்டைக் கை வகைகளில் ஒன்று. இறைவனுடிய தாண்டவங்களில் ஒன்று. |
| 7 | புயங்கம் — (புஜங்கம்) | பாம்பு. இறைவனுடிய பதினறு தாண்டவங்களில் ஒன்று. |

‘ பூ ’

| | | |
|---|---|---|
| 49 | பூசாரி — | கூத்துக்கெழும் வினைகளுள் ஒன்று. பூவுலகத்தர்டும் பெண்களின் நாட்டியம். |
| 12 | பூரணகங்காளம்— | நிதித்தாண்டவத்திற்கு உரிய தாளங்களில் ஒன்று. |
| 61, 62 | பெண் கை 8 — | கடகம் முதல் மிருகசிரம் வரை. |

‘ பே ’

| | | |
|---|---|---|
| 6 | பேடிக்கூத்து — | காமனல் ஆடப்பட்டது. |

‘ பொ ’

| | | |
|---|---|---|
| 9 | பொதுக்கை — | மகரம் முதல் ஆம்பீரம் வரை: |

“ ம ”

| | | |
|---|---|---|
| 109, 112 | மகணப்பலன் – தெய்வம் — | மிகுதியான செல்வம். பூமி |
| 109 | மகணமாத்திரை — | மூன்று குரு |
| 11 | மகரந்தம் — | தேசித்தாண்டவத்திற்கு உரிய தாளங்களில் ஒன்று. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 13 | மதனதாளம் — | வகுப்புத்தாண்டவத்திற்கு உரிய தாளங்களில் ஒன்று. |
| 52, 55 | மண்டிலம் — | தேசிக்கூத்திற்குரிய கால்களில் ஒன்று. பாதத்தொழில் ஐந்தனுள் ஒன்று. |
| 16 | ,, | அத்தனார் ஆலங்காட்டில் காளியுடனாடும் சுத்தத் திறக்கூத்து நிலையுள் ஒன்று. |
| 51 | மண்டலநிலை — | அறுவகை நிலைகளுள் ஒன்று. கூத்திற்குரிய கால்களின் நிலையுள் ஒன்று. பன்னிரு விரல் இடை சமநிலை பகிர்ந்து மன்னி இருப்பது. |
| 6 | மரக்காற்கூத்து — | கொற்றவையால் ஆடப்பட்ட கூத்து. |
| 12 | மல்லிகாமோதகம்— | வைப்புத் தாண்டவத்திற்கு உரிய தாளங்சளில் ஒன்று. |
| | " மா " | |
| 10 | மாத்தாண்டன் — | புட்பாஞ்சலித் தாண்டவத்திற்கு உரிய தாளங்களில் ஒன்று. |
| 54 | மாத்திரைகள் — | தாள மாத்திரைகள் நான்முகனால் படைக்கப்பட்டவை. |
| 102 | மாத்திரை இயக்கம் 8 — | ஆபாவம் முதல் துருவை வரை. |
| 102 | மானம் — | தாளத்தில், கிரியை செய்தபின் அக்கிரியை செய்வதற்கு முன்னும் பின்னும் நடுவும் நின்ற அளவு முறைமை. இவை அளக்குமிடத்து கலை, கலாந்தம், வித்தாரம், வார்த்திகம், தெக்கணம், முடுகு எனவும்வரும், |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 5 | மாயவனால் ஆடப்பட்ட கூத்துக்கள் — | குடக்கூத்து மற்கூத்து அல்லியக்கூத்து. |

"மு"

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 8 | முகுந்தம் — | அணுத்தாண்டவத்திற்கு உரிய தாளங்களில் ஒன்று. |
| 14 | முக்கோல் — | கவுத்துவத் தாண்டவத்திற்கு உரிய தாளங்களில் ஒன்று. |
| 5 | முருகனால் ஆடப்பட்ட கூத்து — | குடைக்கூத்து. துடிக்கூத்து. |

"ய"

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 110 | யகண மாத்திரை— | ஒரு லகு, இரண்டு குரு. |
| 110 | யகணத் தெய்வம்— | நீர் |
| 110 | யகணப்பயன் — | குற்றமின்றித் தழைத்தல் |

"ர"

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 111 | ரகண மாத்திரை — | ஒரு குரு, ஒரு லகு, ஒரு குரு. |
| 111 | ரகணத் தெய்வம்— | சேடன் |
| 111 | ரகணப் பயன் — | மரணம். |

"வ"

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 7 | வகுப்பு — | இறைவனால் ஆடப்பெற்ற பதினாறு தாண்டவங்களில் ஒன்று |
| 2 | வகைக்கூத்து — | தேவர்களால் தனித்தனியே வகைவகையாக ஆடப்பட்ட கூத்துக்கள். அல்லியம் முதல் மரக்கால் வரை பதினொன்று. |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 12 | வசந்தம் — | நிழல் எனும் தாண்டவத்திற்குரிய தாளங்களில் ஒன்று. |
| 2, 53 | வடுகு — | நிருத்த வகைகளில் ஒன்று வன்மைக்கூத்து. இராசதம் அசைந்தது வடுகு. |
| 87, 88 | வடுகிற்குரிய கால்கள் 14 — | சுற்றுதல் முதல் கூட்டுதல் வரை. இரட்டுதல், குத்தல். |
| 55 | வடுகின் கால் — | வைகாசம். |
| 3 | வரி — | ஆடப்படும் பெண்கோலம்; |
| 52, 53 | வருத்தனை நான்கு — (உடலவருத்தனை) | அபவேட்டிதம், உபவேட்டிதம், வியாவிர்த்தி, பரிவர்த்திதம். |
| 12 | வனமாலிகை — | நிழல் என்னும் தாண்டவத்திற்கு உரிய தாளங்களில் ஒன்று. |
| 7 | வன்னபின்னம் — | தாளங்களில் ஒன்று. ஆதித்தாண்டவத் தாளங்களில் ஒன்று. |

'வா'

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
|---|---|---|
| 7, 16 | வாக்கியம் — | இறைவனுடிய தாண்டவங்களில் ஒன்று. சுத்தத் திறக்கூத்து நிலைகளுள் ஒன்று. |
| 48 | வாச்சியப்பாக்கள் — | ஐவகைப்படும் க. ஒத்து உ. கவுத்துவம் ௩. தாளவாச்சியம் ௪. ஓசை ௫. பற்று; |

| பக்க எண்கள் | அரும்பதம் | பொருள் சுருக்கம் |
| --- | --- | --- |
| | **‘ வி ’** | |
| 12 | விடமகங்காளம் — | நீதித்தாண்டவத்திற்கு உரிய தாளங்களில் ஒன்று. |
| 2 | விநோதம் — | கூத்து வகைகளில் ஒரு வகை. |
| 13 | விலோகிதம் — | வகுப்பு என்னும் தாண்டவத்திற்குரிய தாளங்களில் ஒன்று. |
| | **‘ வீ ’** | |
| 12 | வீரவிக்ரமம் — | நிழல் என்னும் தாண்டவத்திற்கு உரிய தாளங்களில் ஒன்று. |
| | **‘ வை ’** | |
| 50 | வைணவம் — | கூத்துக்குரிய கால்களின் அறுவகை மண்டல நிலையில் ஒன்று. |
| 16 | வைத்தமடிப்பு — | அத்தனுர் ஆடும் சுத்தத் திறக்கூத்துள் நிலை ஆறனுள் ஒன்று. |
| 7 | வைப்பு — | இறைவனுடிய தாண்டவங்கள் பதினுறில் ஒரு தாண்டவம். |

ஜெமினி அச்சகம், மடத்துத் தெரு, கும்பகோணம்.